இலங்கையில் முஸ்லிம் கல்வி

ஷாபிமரிக்கார்
சிந்தனையும் பங்களிப்பும்



ஏ.எம். நஹியா



இலங்கையில் முஸ்லிம் கல்வி
ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்

இலங்கையில் முஸ்லிம் கல்வி

ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்

ஏ.எம். நஹியா

B.A. (Cey.), P.G.D.E. (Jaffna),
M.Phil.in Ed. (Jaffna), C.G.Mgt.(SLIDA)

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு
கொழும்பு

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி ஆளுநர்சபையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் **எம்.ரி.ஏ. புர்கான்,** றோஷான் அஷ்ரப் அஸீஸ் ட்றஸ்ற் தலைவர் **அஷ்ரப் அஸீஸ்,** அப்துல்லா இன்டஸ்றீஸ் உரிமையாளர்களான **ஏ. ஆரிப் ரிபாய்தீன், ஏ. ஹசன் முபாரக், ஏ. நிலாம்தீன், ஏ. இமாம்தீன்,** ஏ.எம்.எம்.சகாப்தீன் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் **றிஸ்வான் சகாப்தீன்,** இப்றாஹிம் என்ட பிறைசஸ் பிரைவேட் லிமிட்டட் பணிப்பாளர் **சல்மான் பாறூக்** ஆகியோரின் அனுசரணையில் இந்நூல் வெளிவருகிறது. இவர்கள் நன்றிக்குரியவர்கள்.

இலங்கையில் முஸ்லிம் கல்வி
ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்

பதிப்புரிமை	:	ஏ.எம். நஹியா
முதற்பதிப்பு	:	2018
பதிப்பகம்	:	குமரன் அச்சகம் 39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06
அட்டை அமைப்பு	:	மு. றூகா
வெளியீடு	:	அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு கொழும்பு
ஐ.எஸ்.பி.என்.	:	978-955-38131-0-7
விலை	:	ரூபா. 950/=

Ilankayil Muslim Kalvi

Shafie Marikar Sinthanayum Pangkalippum

(Muslim Education in Sri Lanka – Thoughts and Contribution of Shafie Marikar)

Copyright	:	A.M. Nahiya
First Edition	:	2018
Printed at	:	Kumaran Press (Pvt) Ltd. 39, 36th Lane, Colombo - 06
Cover Designed by	:	Mu. Ruka
Published by	:	All Ceylon Muslim Educational Conference - Colombo
ISBN	:	978-955-38131-0-7
Price	:	Rs. 950/=

சமர்ப்பணம்

என்னை நெறிப்படுத்தி என் கல்விப் பயணத்தைத் தொடக்கிவிட்ட
என் பற்றுக்கும் பாசத்துக்குமுரிய மூத்த சகோதரன்,
முழு இலங்கைத் தீவுக்குமான சமாதான நீதவான்,
முன்னைநாள் தொலைக்கல்விப் போதனாசிரியர்
ஆதம்லெவ்வை முகம்மது சம்சுதீன் B.A.(Cey.), T.T., D.H.M.S.
அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

Preface

Our Sri Lankan nation of this day and age requires an intense nation building effort. It is in the process of recovery from foreign domination that ended about six-decades ago and a civil war that took its toll from all the communities it comprises. Nation building is an unending effort. In the contemporary world the development of a nation has many facets and these are comprehensively encapsulated for the Sri Lankan context by the National Goals that have been declared in the First Report of the National Education Commission.

The Zahira College at Aluthgama appears to have predated these National Goals by about 13½ years under the leadership of Shafie Marikar. What he helped to build up was in the tradition of Muslim Education based on the idea "...that education was essential for the community's progress if not its very survival. Thus did Zahira make its first faltering steps – not through state patronage, not through ministrations of foreign missionaries but through the vision of a few leaders whose enthusiasm by and by warmed an entire community to action."

In this day and age when there is a dire need to develop our Sri Lankan nation we see the relevance of telling the story of Shafie Marikar in all three national languages for the benefit of all Sri Lankans. It is clearly about the finest and the best human-spirit that can propel all the communities that comprise our Nation beyond the enslaving bonds of crass selfishness, petty-mindedness and parochialism shown by some of our national leaders in certain spheres. While it true that the focus of Shafie Marikar's efforts in the education of children of the Muslim Community we can discern educational principles and strategies that are valid for the children and youth of all communities and irrespective of their location in the country.

Firstly, we note his education up to degree level that would have made him thorough and rigorous in an academic discipline. This was followed by teaching practice that would have deeply sensitized him to the nature and needs of learners. He also came under the influence of outstanding principals who were institution builders and men of integrity. He was able to observe at close hand the conduct of his colleagues and how they had their own specific development needs to enable them to perform and to enrich their lives. Although he did not spend much of his working life as a practicing teacher he seems to have absorbed every aspect of the workings of a school as a total education service provider to its community as a result of his passion for education.

His intimate knowledge of the characteristics and aspirations of the Muslim Community enabled him to think holistically and strategically about how best every child could be educated to find his or her unique place in an equitable manner relative to those of other communities. Towards this end the school had to have facilities of comparable scope and quality of a Madya Maha Vidyalaya. However, he clearly went beyond this concept as demonstrated by his interest in the total character formation of the child and the importance of paying attention to the spiritual domain of human behaviour.

Shafie Marikar was a man of integrity and was guided by the highest principles of conduct. He was not enticed by material wealth and thus engendered the trust of those who could provide financial resources for creating the school for the all-round development of the children entrusted to it. Evidence of this is the condition of the Zahira College in Aluthgama at the time he left it. By that time he had amply demonstrated his ability and potential as an educational leader *par excellence*.

The imperatives of excellent school operation are teamwork and teacher competence. For both these to be realized the essential ingredient is the leadership provided by the Principal. He would be bringing out the best in each member of his team and also facilitate their ongoing development. He will not be complacent of his state of development he has reached. Through processes of consultation and cooperation as a group the teachers would find ways and means to improve the school and its operation through untiring effort and innovation. The principal and his team would harness the

contributions of stake holders and beneficiaries for improvement of the school.

An aspect that received his attention is the education and training of teachers. This is a very important aspect that is often neglected and given over to other institutions that may or may not conform to the ethos of a community that values the proper upbringing of its children. Even if every school in the region cannot undertake teacher education and training schools those in excess of a certain size could form centres where teachers in service could gather conveniently to share their experience and also get the service of specialists to fill in gaps in theory and practical know-how in relation to both content and pedagogy. We see much value in this concept because the centres for teacher development are woefully inadequate.

Noteworthy is the unstinted cooperation and contribution of persons of affluence who contributed financially and materially to build up the school. They saw it as an investment in improvement of the potential and future of their community. Education was the identified vehicle of improvement, and its impact accepted as significant and tangible. Zahira College of Colombo and the other Colleges set an example for the other communities in terms of quality, equity and inclusivity. The farsighted vision of educational leaders and the magnanimity of the affluence of the Muslim Community put their counterparts of the other communities, especially of the Sinhala community, to shame.

The Sri Lankan Government with the large majority of policy makers drawn from the Sinhalese has failed to see education of the children and youth as an investment and as a boot-strap activity. It seems to depend on loans and hand-outs which do not result in the kind of organic and sustainable growth that is an essential feature of national education system. The foreign lenders and donors have their own business interests and agendas. As a result our national education system has remained more or less stifled in growth and even fallen back relative to other nations that were less developed than us at the time of our gaining independence.

The affluent and moneyed members of the Sinhala Community should take the cue from the way Zahira Colleges were supported to become outstanding institutions. While these persons swell the numbers in their bank accounts mostly by trading, speculating and money lending, they have no

interest in investing in the national education effort. Rather they should see such an investment as a way of ensuring a peaceful country that is truly productive in creating 'real' wealth and good living for the many.

The curriculum as developed by the centralized and government operated institutions does not pay sufficient attention to the all-round development of the individual– mental, physical, practical, cultural and spiritual. These aspects are clearly the robust basis of developing a progressive community. Shafie Marikar was fully alive to this idea and created arrangements within the school to enable the all-round development of both the learners and teachers. The current national education policy allows a school to conform to the national segment of the curriculum and also to have a 'local' segment. This local segment is open to interpretation. What was done in the Zahira Colleges of Aluthgama and Colombo before this practice was accepted was very proper and done in the best interests of the community and quite praiseworthy.

A school spreads its effect on at least three segments, namely: local, provincial and national. It is not an isolated entity but actually thrives on goodwill with openness and mutual trust of these segments. In this respect there is much evidence that the so-called 'big' schools are failures. On the other hand a school must necessarily engender in its children an increasingly broadening sense of collectivity that culminates in the idea of nationhood and a spirit of patriotism.

Shafie Marikar's readiness to get the support and expertise from those with the capabilities and selected without any bias was very evident to us from our very first encounter. The basis for this was mutual trust and respect. The readiness also went with the idea that there was in him a robust belief system that was continually reinforced by valid experience that provided the touchstone for testing the acumen of such offered expertise.

Every Sri Lankan individual and constituent community share a common destiny without exception. This principle goes beyond the constitutional right of being equal in the eyes of the law of the land. Rather it is the law of nature that humbles us all. The concepts of environmental conservation, anti-pollution measures, waste disposal, law enforcement, crime prevention, all emanate from this principle. General Education has a role in inculcating these ideals into the thinking children appropriately.

Even though the General Education System has been in operation for almost seven decades there are disadvantaged schools and educationally backward areas. This backwardness is a self-perpetuating condition. If there is also a population increase in that locality there could be the onset of a vicious cycle. The arrangement of having boarding schools helped to educate children whose homes were spread thinly or in small pockets, but needed an education that could be given best in a school of optimum size. This is valid for all communities irrespective of ethnicity or culture.

The educational contribution of Shafie Marikar is given comprehensively and due sensitivity in the pages to follow. What has been attempted in this preface is to highlight the significant aspects of his educational philosophy that has relevance and validity in contemporary times. We can without doubt benefit from reading into his life and work. Being a son of Sri Lanka he always placed emphasis on bringing up generations of Muslim children through a system of education that was both 'Sri Lankan' and 'Muslim' a combination that truly goes to enrich the totality of our national culture.

Mr. Nahiya joined the tutorial staff of Zahira College, Colombo when Mr. Shafie Marikar was the principal. He was very closely associated with Mr. Marikar, both as a tutorial staff and as an Assistant Secretary of All Ceylon Muslim Educational Conference to which Mr. Marikar was the Chairman of the Executive Committee. He has been keenly interested in Muslim Education, as seen by many contributions he has made to several publications on the subject. His services were well recognized as a senior educationist at the time he took to serve in the public sector where he had a distinguished career. Mr. Nahiya has authored this book which contains 21 chapters giving details of Mr. Shafie Marikar's outstanding educational contribution. Certainly this book will be a lasting tribute to a genius in Muslim education.

Professor Lakshman Jayatilleke
Ex Chairman, National Education Commission

என்னுரை

ஷாபிமரிக்காருடனான என்னுடைய உறவுகள் 15.05.1972இல் ஆரம்பமானது. எனது உறவினர், முன்னாள் நிதியமைச்சர் எம்.எம். முஸ்தபா என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்று கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் ஷாபிமரிக்காரிடம் ஒப்படைத்த தினம் அது. அன்றிலிருந்து தொடங்கிய ஷாபிமரிக்காருடனான என்னுடைய நெருங்கிய தொடர்புகள் அவரின் ஜனாஸா நல்லடக்கம் தெஹிவலைப் பள்ளிவாசல் வளாகத்தில் 17.02.2007இல் நிகழ்ந்தபோது என்னிரு கண்களும் துளிர்த்த கண்ணீர்த் துளிகளுடன் நின்று போனது. ஆயினும் என் உணர்வுகள் இன்றும் அவருடன் வாழ்கின்றன. அவரின் மேதைமை தொடர்ந்தும் என்னை ஊக்குவிக்கிறது. அவரின் முன்மாதிரி இன்றும் என்னை வழிநடத்துகிறது.

ஷாபியின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டில் தன்னையும் இணைத்துக் கொண்டிருந்தவர் எம்.எம். முஸ்தபா. அவர் அதன் தாபக அங்கத்தவரும் கூட. அக்கால அரசியலில் மிகவும் கீர்த்தியுடன் விளங்கிய திறமைசாலி அவர். அவரின் திறமையிலும் ஆளுமையிலும் ஷாபிக்குப் பெருவிருப்பு. அவ்விருப்பு என்மீதும் சுரந்து நின்றது.

இலங்கை வங்கியில் ஆளணி உதவியாளர் (Staff Assistant) பதவியில் என்னைச் சேர்த்துவிட அப்போதைய நிதி அமைச்சர் கலாநிதி என். எம். பெரேராவுடன் கதைத்து அவர்கள் தீர்மானித்துக் கொண்ட ஒரு தினத்தில் யோர்க் வீதி இலங்கை வங்கித் தலைமையகத்துக்கு வருமாறு முஸ்தபா என்னை அழைத்தபோது ஷாபிமரிக்கார் எனக்குக் கூறிய புத்திமதி என்னை அங்கு செல்லாமற்றடுத்தது. வங்கித் தொழில் என்னுடைய துறைசார் தொழிலல்ல என்று கூறி ஸாஹிறாவில் என் பணியைத் தொடருமாறு செய்தவர் அவர். எனக்கு முன்பே ஸாஹிறாக் கல்லூரியில் ஆசிரியப் பணியைத் தொடங்கியிருந்த மன்னாரைச் சேர்ந்த எம்.எஸ். அல்லாப்பிச்சையும் நானும் அரசாங்க பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்குத் தெரிவானபோது அதையும் எம்மை ஏற்காமற் செய்து ஸாஹிறாவிலேயே

எம் பணியைத் தொடரச் செய்தவரும் ஷாபிமரிக்கார்தான். பேராசிரியர் எம்.எம். உவைஸுக்குப் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப்பாடமாகப் பயின்று பட்டம் பெற்றவர் அல்லாப் பிச்சை. அவரும் நானும் ஷாபிமரிக்காரின் சகல கல்விப் பணிகளிலும் முன்னின்றுழைத்தோம். கல்வியில் தத்துவ முதுமாணிப் பட்டம் பெறுமளவுக்கு ஷாபியின் கல்விச் செயற்பாடுகள் என்னை ஊக்குவித்தன.



The Principal, Zahira College, Colombo-10.

June 14, 1972

M.M. A.L.M. Nahiya.

You are appointed with effect from 15.6.1972 in place of Mr Subramaniam, Pl. Come into residence in the College Hostel during this week-end (or earlier if you like). The late change from all Sinhalese Masters, Class-I from Mr. Subramaniam along with other Readers - Pl. apply for Supernumerary/Senior. 14/6

ஷாபிமரிக்காரினால் எனக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதம்

கொழும்பு ஸாஹிறாவில் நான் பணி செய்து கொண்டிருந்த போது கொழும்புப் பல்கலைக் கழகம் நடத்திய வெளிவாரி சட்ட முதற் பரீட்சைக்கு என்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தேன். எம்.எச்.எம். அஷ்ர்.ப், ஏ. எச். கௌசுல் அமீன் ஆகியோரும் நானும் ஸாஹிறாக் கல்லூரி விடுதியில் என்னுடைய அறையிலும், சிலபோது, பம்பலப்பிட்டியிலிருந்த கௌசுல் அமீனின் வீட்டிலும் சேர்ந்து படிப்பதுண்டு. ஷாபிக்கும் இது நன்கு தெரியும். சட்ட முதற் பரீட்சை (1974) முடிவுகள் 'ஒப்சேர்வர்' பத்திரிகையில் 05.06.1975இல் வெளிவந்த போது ஷாபி அதைப் பார்த்து சித்தியடைந்த எம் மூவரின் பெயர்களின் கீழும் சிவப்பினால் அடையாளமிட்டு எனக்கு அனுப்பி வைத்ததும் என்னை வாழ்த்தியதும் இன்றும் என் நினைவிலிருக்கிறது. வேலைப்பழு என்னுடைய சட்டக்கல்வியைத் தொடரமுடியாமற் செய்துவிட்டது. ஷாபிமரிக்காரின் சட்டக்கல்விக்கு நேர்ந்த அதேகதி எனக்கும் நடந்து விட்டதாக நான் என்னைச் சமாதானப்படுத்திக் கொள்வதுண்டு.

ஸாஹிறாக் கல்லூரியில் எனக்கும் அல்லாப்பிச்சைக்கும் 01.01.1980 இலிருந்து முதலாம் தர விசேட பதவிகள் (Special Post Grade -1) வழங்கப் பட்டன. கல்லூரித் தமிழ்ச் சங்கப் பொறுப்பாளராக, றக்கர், நீச்சல் விளையாட்டுக்களின் பொறுப்பாளராக, விடுதியின் போதனா பொறுப்பாசிரியராக (Tutor in-charge), விடுதி மாணவ மன்றத்தின் பொறுப்பாளராக, கல்லூரி ஆசிரியர் சங்கப் பொருளாளராக, அதன் தலைவராக (1979/80), ஆசிரியர் நலன்புரிச் சங்கச் செயற்குழு உறுப்பினராக, பெற்றார்-ஆசிரியர் சங்க உதவிச் செயலாளராக, ஒறாபி பாஷா நினைவுதின ஏற்பாட்டுக் குழு உறுப்பினராகவெல்லாம் ஷாபிமரிக்கார் காலத்தில் என்னை ஈடுபடுத்திச் செயற்பட்டேன். ஷாபியின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின்

செயற்குழு உறுப்பினராகவும், ஜாவித் யூசுபுடன் அம்மாநாட்டின் உதவிச் செயலாளர்களில் ஒருவராகவும் நான் பணி செய்திருக்கிறேன். இவையெல்லாம் ஷாபியின் நிழலில் பார்க்கப்பட வேண்டியன. முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பணியில் இவை என்னை ஊக்குவித்தன.

பட்டப் பின்படிப்பு கல்வியியல் டிப்ளோமாக் கற்கை நெறியை மேற்கொள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நான் தெரிவானபோது (1982/83) சம்பளத்துடன் அக்கற்கையை மேற்கொள்ள ஷாபி எனக்கு அனுமதி வழங்கினார். அக்கற்கை நெறியை நான் மேற்கொண்டிருந்த போது 09.02. 1982இல் ஷாபிமரிக்கார் எனக்கு அனுப்பிய கடிதம் ஒன்றை அறிகைக்காகப் பதிவு செய்திருக்கிறேன். அக்கற்கை நெறியை முடித்துக் கொண்டு நான் கொழும்பு ஸாஹிறாவுக்கு மீண்டபோது அங்கு ஷாபி மரிக்கார் அதிபராக இருக்கவில்லை. அவர் தன் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு ஓய்வு நிலையிலிருந்தார். ஏ.ஸி.எம். அமீரின் தலைமையிலான ஆளுநர் சபையின் நிருவாகத்தில் கல்லூரி இயங்கிக் கொண்டிருந்தது. இந்த நிலைமாறுகாலம் எனக்கு மட்டுமல்ல முழு ஸாஹிறாக் கல்லூரிக்குமே ஒரு சோதனைக் காலமாக அமைந்திருந்தது.



ZAHIRA COLLEGE

Phone: 91063 (Gen. Office)
91914 (Principal)

P. O. Box 861,
COLOMBO-10.

Assistant.

February 9, 1982.

Mr. A. M. Nahiya,
330, Sawular Road,
Wahiny,
Jaffna.

Dear Mr. Nahiya,

Thanks for your letter of February 1, 1982.

I am happy to learn that you are in good health and proceeding well with your studies. May Allah Almighty bless you with success in all your efforts.

I am sending herewith the salary cheque. I am sorry for the delay as one of the officers was on leave for a few days.

Please let me know when you would be in Colombo and do meet me when you come over.

Salaams !

Yours Sincerely,

Principal.

ஷாபி 9.2.1982இல் எனக்கு அனுப்பி வைத்த கடிதம்

ஆளுநர்சபை நிருவாகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக, சிரேட்ட இடைநிலைக் கல்வித்துறைத் தலைவராக, உதவி அதிபராக, கல்விப் பணிப்பாளர் ஆர்.ஐ.ரி. அலஸின் புறப்பாட்டுடன் தற்காலிக அதிபராகவெல்லாம் ஸாஹிறாவின் உயர் பதவிகளில், ஜாயா, அஸீஸ், ஷாபிமரிக்கார் ஆகியோரெல்லாம் அமர்ந்து பணி செய்த அத் தலைக்கல்வி நிலையத்தில் நானும் பணி செய்திருக்கிறேன். ஆயினும், ஷாபிமரிக்கார் கல்லூரியை விட்டு நீங்கி அலஸ் ஸாஹிறாவின் கல்விப்பணிப்பாளர் பதவியை ஏற்ற போது அங்கு அமைதி இருக்கவில்லை. சந்தேகமும், பிரிவினைகளும் தலைதூக்கி நின்றன. ஆளுநர் சபைத் தலைவர்களாகவிருந்த ஏ.ஸி. எம். அமீர், எம்.ஏ. பாக்கீர் மாக்கார் போன்ற பெருந்தகைகள் என்னுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணினராயினும், அங்கு சிலரினால் திணிக்கப்பட்டிருந்த அன்னியமும், அந்த அன்னியத்தைச் சூழ்ந்து நின்ற

நெறிகெட்ட கும்பலொன்றும் கல்லூரியின் நிம்மதியைச் சதா குலைத்து நின்றன. சமூக எழுச்சியின் சின்னமாக, முஸ்லிம் கல்வி வரலாற்றின் அகரமாக எழுந்து நின்ற ஸாஹிறாக் கல்லூரியின் சமூகம் பிளவுண்டு, சிதறுண்டு அல்லோலகல்லோலப்பட்டது. அறியாமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தத்தளித்தது. நாசகாரம், காடைத்தனத்தின் அட்டகாசத்துக்கு ஸாஹிறா தலைகுனிந்து நின்றது. கல்லூரி ஆசிரியர்கள் தாக்கப்பட்டனர். பழைய மாணவர்கள், ஆளுநர் சபை உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டனர். ஒரு பழைய மாணவனின் வீட்டுக்கு கல்லூரியில் குடிகொண்டிருந்த அன்னியத்தின் அடிவருடிகளால் சவப்பெட்டி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு அவரின் வீட்டு நுழைவாயிலில் வைக்கப்பட்டது. சிங்களத் துறையில் சிங்களப் பாடத்தைப் போதித்துக் கொண்டு முஸ்லிம் பெயரில் நடமாடித்திரிந்த ஒருவர் தனது சிங்களப் பாடநேரத்தில் இஸ்லாத்தை முஸ்லிம் மாணவர் களிடை விமரிசனம் செய்யுமளவுக்கு அவருக்கும் எங்கிருந்தோ துணிவும் தைரியமும் கிடைத்தது. துரதிஷ்டவசமாக உதவி அதிபராகவிருந்த நானே அந்த ஆசிரியரை இடைநிறுத்த நேர்ந்தது. அதனால் தொழில் நீதிமன்றத்தில் அடிக்கடி ஏறி இறங்க வேண்டிய நிலையும் எனக்கேற்பட்டது. சமயக் கருத்துக்களைக் கூறி பணிப்பாளருடன் முரண்பட்ட மௌலவி நெய்னா முகம்மது அனுபவித்த துயரங்களையும் நானறிவேன். இவையெல்லாம் இஸ்லாமிய சிந்தனை, கலாசாரத்தின் மத்திய நிலையம் என்று ஜாயாவும் அஸீஸும் ஷாபிமரிக்காரும் போற்றி நின்ற அக் கலாநிலையத்தில் ஷாபிமரிக்கார் நீங்கிச் சென்றபின் நிகழ்ந்து முடிந்தவை.

ஆளுநர்சபை கல்லூரியில் அமர்வுகளைக் கூட நடத்த முடியாத அளவுக்கு காட்டு மிராண்டித்தனம் அங்கு நிலை கொண்டிருந்தது. ஆளுநர் சபையில் நம்பிக்கையிழந்தமையால் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால சபை (Interim Board) கூட காடையர்களின் அட்டகாசத்துக்குப் பயந்து தலையாட்டிக் கொண்டிருந்தது. இதனிடை, பெற்றார் - ஆசிரியர் சங்கக் கூட்டங்களுக்கு அதிபர் பதவி வகிக்காத கல்விப் பணிப்பாளர் (ஆர்.ஜ.ரி. அலஸ்) தலைமைதாங்குவதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றும் பதிவாகியிருந்தது. நீதிமன்றத்தின் தடையுத்தரவையும் மீறி பெற்றார்-ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றதற்கெதிராக நீதிமன்றத்தை அவமானப்படுத்திய குற்றச் சாட்டில் பெற்றார்-ஆசிரியர் சங்கச் செயற்குழுவினருக்கெதிராகவும் வழக்கொன்று நடைபெற்றது. இந்த நிலையில் கல்விப் பணிப்பாளருக்கு சேவை நீடிப்பு வழங்குவதில் ஆளுநர்சபை தயக்கம் காட்டியது. அதனால் பணிப்பாளர் அலஸ் தனது பொறுப்புகளை என்னிடம் ஒப்படைத்து ஆளுநர்சபைக்கும் தனது முடிவை

அறிவித்து விட்டு கல்லூரிக்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டபோது, ஏற்கனவே திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்ட காடைத்தனத்தின் உச்சக் கட்ட நிகழ்வுகளை நான் எதிர்கொள்ள நேர்ந்தது. பொலிஸார்கூட எமக்கு உதவ மறுத்தனர். இந்த நிலையில் ஆளுநர்சபையின் நெறிவுறுத்தலின் பேரில் கல்லூரியை இரண்டரை மாதங்கள் மூடிவைக்கும் துணிவான முடிவையும் எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். ஆளுநர்சபை அங்கத்தவர்கள் கல்லூரிக்கு வரமுடியாத நிலையில் அவர்களுக்காகவும் துன்பங்களை அனுபவிக்கும் நிலை கல்லூரிக்குள் இருந்த எனக்கு ஏற்பட்டது. இந்த நாசகாரச் சக்திகளிடமிருந்து ஸாஹிறாவைப் பாதுகாத்து முஸ்லிம் சமூகத்திடம் அதைப் பத்திரமாகக் கையளிக்கும் பணியைத் துணிவாக நாம் முன்னெடுத்தோம். வீரமிக்க, சமூக உணர்வுள்ள சில ஆசிரியர்களினதும் பழைய மாணவர்களினதும் உதவியுடன் இக்குறிக்கோளை எம்மால் அடைய முடிந்தது.



بسم الله الرحمن الرحيم

ZAHIRA COLLEGE

P. O. Box 661,
COLOMBO 10.

Phone:
91814 (Director of Studies)
[illegible] (Gen. Office)

9th September, 1985.

The Chairman,
Board of Governors,
Zahira College,
Colombo 10.

Dear Mr.Farkhan,

Reference my letter dated 6th September, 1985 and the discussion I had with you on Saturday, the 7th September, May I thank you for granting me 'vacation' leave with effect from 9th September, 1985. I have asked the Vice Principal to 'act' for me till my return. I tried to contact you and the the Secretary, Board of Governors Mr.Macky Hashim early morning but the two of you were not available.

Yours sincerely,

(R.I.T.Alles)
Director of Studies.

C.C.- Vice Principal.

தம் பொறுப்புகளை உதவி அதிபர் நஹியாவிடம் ஒப்படைத்துவிட்டு 09.11.1985இல் கல்லூரியை விட்டு நிரந்தரமாக நீங்கிச் சென்ற ஆர்.ஐ.ரி. அலஸ் ஆளுநர் சபைத் தலைவருக்கு எழுதிய கடிதம்

எம்.ஏ. பாக்கீர் மாக்கார், பேராசிரியர் எம்.ரி.ஏ. புர்கான், மக்கி ஹாஷிம், ஏ.ஜே.எம். முஸம்மில், எஸ்.ரி.எம். அபீப்தீன் போன்றவர்கள் அப்போதைய ஆளுநர் சபையின் துணிவுமிக்க அங்கத்தவர்கள். சட்டத்தரணி எம்.எம்.ஏ. றீஸா, மௌலவி ஏ.எல். நெய்னா முஹம்மத், அல்ஆலிம் ஏ.ஆர்.எம். ஸரூக், எஸ்.எச்.எம். நௌபல், இஸட்.ஏ. சன்ஹிர், எம்.எப்.எம். சக்கீம், எம்.ஐ.எம். சலீம் (பின்னர் சுங்கப் பணிப்பாளர்), அஹமட் றியாஸ் (பின்னர் தலைவர் - ஹாக்கோட்ஸ்), ஐ.எல்.ஏ. ஜப்பார், ஏ.ஜே.எம். இர்பான், எம்.ஏ.சீ.எம். றஹுமத்துல்லா ஆகிய சமூக உணர்வு படைத்த ஆசிரியப் போராளிகளையும் இச்சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்கிறேன். ஏ.எச். கௌசுல் அமீன், ஏ.ஸி.எம். சாலி, ஏ.எம்.ஓ. முஹ்லார், எம்.ஏ. நவாஸ், எம்.எச். அபூ உபைதா, எம். றிஸ்வி றஷாட் போன்ற கல்லூரியின் பழைய மாணவர்களும் ஸாஹிறாவைக் காப்பாற்றும் முயற்சிக்கு எம்முடன் துணை நின்றனர். அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ தன்னைக் காணுமாறு மீண்டும் மீண்டும் சொல்லி அனுப்பிய செய்திகளை உதாசீனம் செய்துவிட்டு நண்பன் அபீப்தீனின் பம்பலப்பிட்டி லோறிஸ் வீதி வீட்டில் 2½ மாதங்கள் நான் மறைந்து வாழ்ந்ததையும் இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

இவைகளெல்லாம் கெட்ட கனவுகளாக என் மனத்திரையில் நிழலாடுகின்றன. இந்நிலையைப் பயன்படுத்தி ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியிலமர்ந்த முஸ்லிம் ஒருவரையும் ஸாஹிறாவை விட்டு அனுப்பி வைப்பது சமூகத்தின் கடமை என்று உணரப்பட்டபோது அதையும் செய்வதற்கு துணிந்து செயற்பட்டோம். அவரின் காரியாலயக் கதவுகளைத் தாழிட்டு அவரின் பிழைபாடுகளை சற்றுப் பலத்த தொனியில் அவருக்கு எத்திவைத்தேன். தன்னுடைய தவறுகளை ஏற்றுக் கொண்டு 60,000/- ரூபாவை ஸாஹிறாவுக்கு தன் மருகர் மூலம் மீளச் செலுத்தி அதிபர் பதவியையும் இராஜினாமாச் செய்துவிட்டு அகௌரவமாக அவரும் வெளியேறிச் சென்றார். ஸாஹிறாவின் வரலாறு தெரிந்தவர்கள் எம்.ஸி. சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஒறாபி பாஷா, ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் போன்ற ஸாஹிறாவின் தாபகர் களையும் ஜாயா, அஸீஸ், ஷாபிமரிக்கார் போன்ற அதிபர் பெருமக்களையும் நினைத்து ஒரு சொட்டுக் கண்ணீராவது அப்போது விட்டிருப்பர்.

ஷாபிமரிக்காருக்குப் பின் குறுகிய காலத்தில் எத்தனையோ அதிபர்களைக் கண்ட ஸாஹிறாக் கல்லூரியின் துயரப் பயணம் இன்று ஏதோ ஓரிடத்தில் தரித்து நிற்பது தெம்பு தருகிறது. ஷாபிமரிக்கார் காலத்தில் ஸாஹிறாவில் கற்றவர்களின் அரவணைப்பில் ஸாஹிறா இன்று பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. ஏ.ஜே.எம். முஸம்மில், எம்.வை. பாயிஸ், எம்.எம்.ஏ. றிஸா, எம்.எம். சுஹைர் முதலான ஷாபிமரிக்கார் கால மாணவர்கள் ஆளுநர் சபையில் இருந்திருக்கின்றனர். எம். பௌசுல் ஹமீத், எம். அஷ்ரப் றூமி, எம். அலவி முக்தார், எம். ஹிலால் சனூன், ஏ.எஸ். எம். முஸம்மில், எம். றிஸ்வி நியாஸ், எம்.எச்.எம். மாசூன், எம். றிஸா ஆப்தீன் முதலான ஷாபிமரிக்கார் கால மாணவர்கள் இன்றைய ஆளுநர் சபையிலும் அங்கம் வகிக்கின்றனர். ஷாபிமரிக்கார் கால மாணவர்கள் என்று கூறும் போது என்னுடைய காலத்தில் (1972-1988) ஸாஹிறாக் கல்லூரியில் கற்ற மாணவர்கள் என்ற அர்த்தமும் அதற்கிருக்கிறது. ஷாபிமரிக்காரின் கல்விப் பணியினால் உயர்ந்த, அவரின் பணியின் மகிமையை உணர்ந்த ஒரு கூட்டத்திடம், தன் வாழ்நாட்களையெல்லாம் முஸ்லிம் கல்வி, சமூகப் பணிகளுக்காக அர்ப்பணித்த அப்பெருந்தகைக்கு தங்குவதற்கு வீடு கொடுத்து, ஆறுதலும் மன நிம்மதியும் கொடுத்த மாணவர்களின் வழிநடத்துகையில் ஸாஹிறா இன்று பயணிக்கிறது. ஷாபிமரிக்காரின் நாமம் ஸாஹிறாவில் உரத்து உச்சரிக்கப்படாவிட்டாலும் மறந்துவிடாமல் பாதுகாக்கப்பட இப்போது சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. ஷாபி இன்று உயிர்வாழ்ந்திருந்தால் ஸாஹிறாவின் இன்றைய நன்னிலை கண்டு திருப்தியடைந்திருப்பார்.

சித்திலெவ்வை தொடக்கம் ஷாபிமரிக்கார் வரை ஸாஹிறாவில் ஒரு முஸ்லிம் கல்விப் பாரம்பரியம் நிலை கொண்டிருந்தது. அது போற்றப்படுவதும் பேணப்படுவதும் அவசியம். அந்த நீண்ட பாரம்பரியத்தின் இறுதி வாரிசாக விளங்கியவர் ஷாபிமரிக்கார். அரை நூற்றாண்டுகளுக்கு மேல் முஸ்லிம் சமூகத்தின் கல்வி, சமூக மேம்பாட்டுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த அப்பெருந்தகையின் மேதைமையில் முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேன்மையுற்றது. நாட்டின் கல்வியும் மிக்க பயனடைந்தது. 'ஸாஹிறாக் கல்லூரியில் என்னுடைய நாட்கள்' என்ற என்னுடைய மற்றுமொரு நூல் வெளிவரும்போது ஸாஹிறா தொடர்பான பல விடயங்கள் தெளிவு பெறும். ஷாபிமரிக்கார் ஸாஹிறாவில் எதிர்கொண்ட சோதனைகள், வேதனைகள் பற்றிய பல தகவல்கள் அதில் அடங்கியிருக்கும்.

இந்நூல் கூறும் விடயங்களில் தெளிவுபெற பின்வரும் தகவல்கள் பெரிதும் உதவும். அந்த வகையில் அவை இந்நூலின் நுழைவாயிலாக அமைகின்றன.

- ஷாபிமரிக்கார் தென்னிலங்கை வாசி; சிங்கள சார்புடையவர். அவரின் ஒன்றுவிட்ட சகோதரர் எம்.ஏ. பாக்கீர் மாக்காரும், மைத்துனர் ஏ. டபிள்யூ.எம். நாசிக் மரைக்காரும் சிங்கள மக்களின் வாக்குப்பலத்தில் தம் அரசியலைத் தக்க வைத்துக்கொண்டவர்கள்.
- ஷாபிமரிக்கார் 'ஹக்கீம் விலா'வில் பிறந்தவர். யூனானி வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவர். அவரின் குடும்பம் பேருவலையின் மிகத் தொன்மையான குடும்பம். 'மரைக்கார்' 'மாக்கார்' மரிக்கார் மகுடம் தரித்து நிற்பது. ஷாபி தன்னுடைய பெயரை 'மரைக்கார்' என்று எழுதியதில்லை; மரிக்கார் என்றே எழுதுவார்.
- ஷாபிம்ரிக்கார், பாக்கீர் மாக்கார், நாசிக் மரைக்கார் அனைவருமே கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் கற்றவர்கள். ரி.பி. ஜாயாகால மாணவர்கள், அவர் மீது மிக்க அபிமானமுள்ளவர்கள். ஜாயாவும், எம்.ஸி.எம். கலீலும் வளர்த்தெடுத்த யு.என்.பி. சார் முஸ்லிம் லீக்கின் அரசியல் பாசறையில் வளர்ந்தவர்கள்.
- கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் அன்றைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூதுக்கு அப்போதைய ஸாஹிறாக்கல்லூரியின் அதிபர் எ.எம்.எ. அஸீஸ் உடந்தையாக இருந்தமை பகிரங்க இரகசியம். மருதானைப் பள்ளிவாசல் நிருவாகத்தின் அனுசரணையில் ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஏ.ஸி. எம். அமீர் முன்னெடுத்த ஸாஹிறாவை மீளப்பெறும் செயலணியில்

தம்மையும் அடையாளப்படுத்திக் கொண்டவர் ஷாபிமரிக்கார். பாக்கீர் மாக்காரும் நாசிக் மரைக்காரும் கூட அச்செயலணியின் முக்கியஸ்தர் களாக விருந்தனர். அதனால், பதியுத்தீனின் ஆதரவாளர்களும் அஸீஸின் அபிமானிகளும் எப்போதும் ஷாபியின் கல்விச் செயற்பாடுகளுடன் உடன்பாடற்றவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். பாக்கீர் மாக்கார், நாஸிக் மரைக்கார் ஆகியோரின் களுத்துறை மாவட்ட அரசியல் எதிரணியினரும் ஷாபிக்கெதிரான மனோபாவத் துடனிருந்தமை அரசியல் பகைப்புலத்தில் நின்று பார்க்கும்போது தெளிவாகத் தெரியும்.

- பேருவலையில் சீனன்கோட்டைக்கும் மருதானைக்குமிடை புரையோடிக் கிடந்த குரோத உணர்வுகளும் ஷாபியின் செயற்பாடுகளுக்குச் சாதகமாக இருக்கவில்லை.
- கொழும்பு ஸாஹிறாவின் கிளைப் பாடசாலையாக ஜாயா ஆரம்பித்த அளுத்கம ஸாஹிறாவிலும், பின்னர், கொழும்பு ஸாஹிறாவிலும் ஏறக்குறைய 29 வருடங்கள் (28 வரு. 7 மாத. 20 நாள்) அதிபராகப் பணிசெய்தவர் ஷாபி. கொழும்பு ஸாஹிறாவின் அதிபராக ஜாயா செயற்பட்ட காலம் ஏறக்குறைய 27 வருடங்கள் (26 வரு. 11 மாத. 20 நாள்). அந்த வகையில் ஸாஹிறாக் கல்லூரிகளின் அதிபர் சேவையில், தாய்க் கல்லூரியிலும் சேய்க் கல்லூரி ஒன்றிலும் அதிகூடிய காலம் பணிசெய்த பெருமை ஷாபிக்குரியது.
- யு.என்.பி. அரசியலில் நிகழ்ந்த உட்கட்சி முஸ்லிம் தலைமைப் போராட்டமும், பாக்கீர் மாக்காரின் அதீத சமூகப்பற்றும், கொழும்பு அரசியலில் ஸாஹிறாக் கல்லூரி அதிபர்கள் நிலைகொண்டிருந்த முஸ்லிம் லீக் சார் நிலைப்பாடும் அதிபர் ஷாபியின் கல்விப் பணிகளுக்கும் இடையூறு விளைவித்தன. ஷாபி மீதான யு.என்.பி. தலைமைகளின் கரிசனையும் அதிகரித்தது.
- முஸ்லிம் சமூகத்தைச் சில விடயங்களில் தெளிவுபடுத்தும் தேவை ஷாபிக்கு ஏற்பட்டபோது அவர் ஸாஹிறாவில் வெளிக்கொணர்ந்த 'த கிறசன்ட்' பத்திரிகையும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் சார்பில் அவர் பதிப்பித்த 'ACMEC Journal' உம் ஷாபியின் குரலாகவே ஒலித்தன. அப்பத்திரிகைகளின் முன்பக்கத் தலைப்புச் செய்திகள், ஆசிரியர் பக்கச் செய்திகள், பெயர் குறிப்பிடப் படாத கட்டுரைகள், செய்திகள் என்பனவெல்லாம் ஷாபிமரிக்காரின் படைப்புகளாகவே அமைந்தன. தன்னை அடையாளப் படுத்தாமல்

செய்திகளை வெளியிட வேண்டிய தேவை ஷாபிக்கு அப்போது இருந்தது.

- அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு முற்று முழுதாக ஷாபிமரிக்காரின் மாநாடாகவே செயற்பட்டது. அவரின் சிந்தனையும் செயற்பாடுகளுமே மாநாட்டை நெறிப்படுத்தின. இம்மாநாடும் முஸ்லிம் லீக் பெற்றெடுத்த குழந்தைதான்.
- ஷாபிமரிக்கார் முன்னெடுத்த ஜாயா, ஒறாபி பாஷா நினைவுப் பரவல்களும், ஜாயா நினைவு நிதியமும் முஸ்லிம்லீக்குடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தன.
- பேருவலை ஜாமிஆ நளீமிய்யாவின் உருவாக்கத்தில் நளீம் ஹாஜியாருக்கு உறுதுணையாகவிருந்த ஸாஹிறாவின் முன்னாள் அதிபர் எ.எம்.எ. அஸீஸும், பின்னாளில் மௌலவி தாஸிமுக்குப் பின் அதன் பணிப்பாளரான, எ.எம்.எ. அஸீஸின் ஸாஹிறாக் கல்லூரி மாணவன் எம்.ஏ.எம். சுக்ரியும், அதற்கிருந்த பதியுத்தீன் மஹ்மூதின் ஆசியும், ஜாமிஆவுக்கும் ஷாபிமரிக்கார், பாக்கீர் மாக்கார், றாசிக் மரைக்கார் ஆகியோருக்குமிடையிலான தொடர்புகளைத் தூரப்படுத்தின. துல்லிய பார்வையில் இம்முரண்பாடு தெளிவாகத் தெரிந்தது. எகிப்தின் அல்-அஸ்ஹர் சர்வகலாசாலைக்கு இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியின் ஆதரவில் நான்கு மௌலவிகளை அனுப்பி இலங்கையின் சமய, அரபு மொழிக் கல்விக்கு புதுப்பாதை காட்டியவர் அஸீஸ். முஸ்லிம் மித்திரனில், 'மத அறிவைப் புகட்டக்கூடிய ஒரு மத்திய முஸ்லிம் கலாசாலை' என்ற தலைப்பில் 1941 டிசம்பரில் கட்டுரை எழுதி, அக்கட்டுரையைத் தன்னுடைய 'இலங்கையில் இஸ்லாம்' நூலில், 1963இல், 'எமக்கு ஒரு ஜாமியாஹ்' என்ற தலைப்பில் மீள்பிரசுரம் செய்து, 1973இல் தாபிக்கப்பட்ட 'ஜாமிஆ நளீமிய்யா'வுக்கான எண்ணக்கருவை நளீம் ஹாஜியாரின் மனத்தில் தூவிவிட்டவர் அவர். அக் கலாநிலையத்தை 19.08.1973இல் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தவர் அன்றைய அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத்.

இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளும் போதுதான் ஷாபிமரிக்காரின் கல்விப் பணிகள் பற்றி இந்நூலில் நான் எத்திவைக்க விரும்பும் செய்திகளை சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ளும்; இந்நாடு பெற்றெடுத்த தலை சிறந்த கல்விமான்களுள் ஒருவரான ஷாபிமரிக்கார் தன் சமூகத்துக்குச் செய்ய விழைந்தனவற்றின் முழுப்பயனையும் சமூகம் அடைய முடியாமற் போனமையின் இரகசியமும் விளங்கும்.

ஷாபிமரிக்காரின் கல்விப்பணிகளை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ள இந்நூல் அதற்கும் அப்பால் இன்னுமொரு முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் ஷாபியின் கல்விப்பணியை முன்வைத்து என்னுடைய ஆய்வுத் தேடலையும் அதனடிப்படையில் இந்நூலையும் அமைத்த போதிலும் இறுதிக் கட்டத்தை நெருங்கிய போது ஷாபியின் பூர்வீகம், முஸ்லிம் கல்வி வரலாற்றுடனான அவரின் சம்பந்தம் என்பன பற்றியும் ஆய்வுகள் செய்யப்படவேண்டி ஏற்பட்டது. அவ்வாய்வில் ஷாபியின் கல்விப் பங்களிப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் இலங்கை வாழ் முஸ்லிம்களுடைய கல்வி வரலாற்றுடன் பின்னிப்பிணைந்து செல்வதைக் காணமுடிந்தது. ஸாஹிறாக்கல்லூரிகள், அ.இ.மு.க. மாநாடு என்பவற்றினூடாக அவரின் கல்விப்பணிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் எதிர்கொண்ட சகல கல்விப் பிரச்சினைகளிலும் அவர் தன்னை ஈடுபடுத்தி முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புக்களைச் செய்திருக்கிறார். தேசிய கல்விக்கும் இவரின் பணி விதந்துரைக்கத்தக்கது. ஒரு தனிப்பட்ட பெருந்தகையின் கல்விப் பணியினூடாக அவர் சார்ந்த சமூகத்தின் வரலாற்றை எவ்வாறு கட்டமைக்கலாம் என்பதற்கு இந்நூலை உதாரணமாக்கியிருக்கிறேன். அந்தவகையில் இந்நூல் ஷாபிமரிக்காரின் கல்விப் பங்களிப்பை மட்டுமன்றி இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றை அறிய விரும்பும் கல்வியியல் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயனுள்ள உசாத்துணையாக அமையுமென நம்புகிறேன்

ஏ.எம். நஹியா
198, கிட்டங்கி வீதி
நிந்தவூர்

உள்ளுறை

	Preface	vi
	என்னுரை	xi
1.	ஷாபியைப் புரிந்து கொள்ளல்	1
	1.1 பூர்வீகம்	1
	1.2 ஸாஹிறா மாணவன்	9
	1.3 இலங்கைப் பல்கலைக்கழகத்தில்	13
	1.3.1 பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் தாபகத் தலைவர்	14
	1.4 முஸ்லிம் லீக்கின் முக்கிய செயற்பாட்டாளர்	16
	1.5 சமூகப் பணியும் உதார பண்புகளும்	19
2.	அளுத்கம ஸாஹிறாவின் சிற்பி	27
	2.1 ஸாஹிறா வளர்ந்த கதை	29
	2.2 ஷாபிகால துரித வளர்ச்சி	31
3.	கொழும்பு ஸாஹிறாவின் மீள் நிர்மாணம்	40
	3.1 மீண்டும் தனியார் பாடசாலை	40
	3.2 கல்வி நிருவாகக் கட்டமைப்பு	52
	3.3 மாணவர் மேன்மை	54
	3.4 விடுதி நிருவாகம்	58
	3.5 விளையாட்டுத்துறையில் முதன்மை	60
	3.6 கல்லூரியின் குரல்	63
	3.7 முஸ்லிம் கலாசார மையம்	67
	3.8 பிரமுகர்களின் வருகை	70
	3.9 நலன்பேண் முயற்சிகள்	73
	3.10 தமிழ்ப் பாரம்பரியம்	74
	3.11 நிருவாக மாற்றம்	77

4.	கொழும்பு ஸாஹிறாவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி	82
	4.1 ஷாபிமரிக்காருக்கு முந்திய நிலை	82
	4.2 ஷாபிமரிக்கார் கால அபிவிருத்தி	83
	4.3 ஆளுநர்சபை நிருவாகத்தில்	89
5.	கொழும்பு ஸாஹிறாவின் இரு வரலாற்றுப் பதிவுகள்	91
	5.1 75ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு	91
	5.2 85ஆவது ஆண்டு பூர்த்தி விழா	96
6.	ஒறாபிபாஷா ஞாபகார்த்தம்	106
7	ஜாயா நினைவும் நிதியமும்	121
8.	முஸ்லிம் கல்வி மாநாட்டின் உயிர்நாடி	135
	8.1 வரலாற்றுப் பின்புலம்	135
	8.2 கல்விச் செயற்பாடுகள்	149
	8.3 இருபது ஆண்டுகள் நிறைவு	152
	8.4 வெள்ளி விழா நிகழ்வுகள்	155
	8.5 மாநாட்டின் முப்பது ஆண்டுகள் நிறைவு	157
	8.6 மாநாட்டின் நாற்பதாவது அகவை	158
	8.7 ஷாபி கால சிறப்பு வெளியீடுகள்	159
	8.8 மாநாட்டுத் தலைவரின் கடிதங்களும் மகஜர்களும்	161
	8.9 ஷாபிமரிக்காரின் பின் அ.இ.மு.க. மாநாடு	162
9.	முஸ்லிம் கல்வி	166
	9.1 'முஸ்லிம் பாடசாலைகள்' எண்ணக்கரு	169
	9.2 கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு	171
	9.3 பாடசாலைக் கொத்தணி முறைமை	174
	9.4 உத்தேச கல்விச்சீர்திருத்தம் - 1997	176
	9.5 சிங்கள மொழிமூல முஸ்லிம் மாணவர் பிரச்சினைகள்	179
	9.6 முஸ்லிம் முன்பள்ளிகள்	182
	9.7 கொழும்பு முஸ்லிம் பாடசாலைகள்	182

10. சமயக் கல்வியின் காவலன் 183

10.1 பாடசாலைகளில் சமயக் கல்வி 184

10.2 சமயக் கல்விக்குப் பதில் ஒழுக்கக் கல்வி 188

10.3 முஸ்லிம் பாடசாலைகளில் நடனம் 190

10.4 கல்வி அமைச்சின் சமயக் கல்விப் பிரிவு 190

10.5 சமயக் கல்வி ஆலோசனைச் சபைகள் 191

11. அரபு மொழி மேம்பாடு 192

11.1 பாடசாலைகளில் அரபு மொழிக்கற்கை 192

11.2 பல்கலைக்கழகத்தில் அரபுமொழிக் கற்கை 195

11.3 மத்ரஸாக் கல்வி 196

12. பல்கலைக்கழகக் கல்வியில் அக்கறை 200

12.1 அனுமதிக் கொள்கை 200

12.2 யுத்தகாலக் கரிசனை 207

12.3 கிழக்குப் பல்கலைக்கழகம் 210

12.4 முஸ்லிம் கலாசாரப் பல்கலைக்கழகம் 216

12.5 தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 216

13. யூனானி வைத்தியத்துறையில் கரிசனை 219

14. கல்விக் கருத்தும் சிந்தனையும் 236

14.1 கல்வி 236

14.2 ஆசிரியர் திருப்தியும் பொறுப்பும் 238

14.3 சிறுவர் கரிசனை 241

14.4 ஒழுக்கக் கட்டுப்பாடு 243

14.5 பெற்றோர் பொறுப்பு 245

15. தொழிற்கல்வி 248

16. எல்லோருக்கும் கல்வி 253

16.1 ஏழை மாணவரின் கல்வி 253

16.1.1 ஸாஹிறாக் கல்லூரிக் கல்விச்சகாய நிதி 253

16.1.2 ஸாஹிறாக் கல்லூரிச் சமூகசேவை நிதியம் 254

16.1.3 அநாதை மாணவரின் கல்வி 256
16.1.4 மாலைநேரப் பாடசாலை 256
16.2 யுத்தத்தால் இடம் பெயர்ந்தோர் கல்வி 257
16.3 சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களின் கல்வி 264
16.4 முஸ்லிம் பெண் கல்வி 265

17. சுயாதீன தனியார் பாடசாலைகள் 269

18. மொழிக் கொள்கை 279
18.1 அரச கரும மொழி பற்றி முஸ்லிம் தலைவர்களின் நிலைப்பாடு 279
18.2 தாய் மொழி 282
18.3 கல்வி மொழி 283
18.4 ஸாஹிறாவில் கல்வி மொழியும் மொழிப் போதனையும் 291

19. தேசிய கல்விப் பணி 297

20. ஷாபியின் அரசியலும் முஸ்லிம் கல்வியும் 305

21. நிறைவுரை 319

உசாத்துணை 328

1 ஷாபியைப் புரிந்து கொள்ளல்

1.1 பூர்வீகம்

பேருவலை அரப் வீதியில் 27.09.1923இல் பிறந்தவர் ஷாபிமரிக்கார். இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்களிலொன்று பேருவலை, பர்பரி, (Barberi), பர்பரீன் (Berberyn), பார்பெர்ரி (Barberry) என்றெல்லாம் அழைக்கப்படும் பேருவலைத் துறைமுகம் இப் பழம்பதியின் அரபுச் சம்பந்தத்தைக் காட்டுகின்றது.

வட இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம்கள் அராபிய இனத்தைச் சேர்ந்தவர்களல்லர். ஆனால், தென்னிந்தியாவில் குடியேறியவர்களில் அரேபியரல்லாதோர் எவருமில்லை. சங்கத் தமிழிலக்கியங்களில் குறிப்பிடப் படும் 'யவனர்' என்ற சொல்கூட கிரேக்கரையன்றி அரேபியரையே குறிப்பதாக பெரும்பான்மையான அண்மைக்கால தென்னிந்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் கவனிக்க வேண்டிய இருவிடயங்கள் இருக்கின்றன. ஒன்று, இஸ்லாத்துக்கு முந்திய அரேபியரின் சம்பந்தம். மற்றது, இஸ்லாத்துக்குப் பிந்திய அரேபிய முஸ்லிம்களின் குடியேற்றம். இலங்கையில் குடியேறிய அராபியரின் வழித்தோன்றல்கள் 'சோனகர்' என அழைக்கப்பட்டனர். 'யவனர்' என்ற சொல்லினடியாகப் பிறந்தது இச்சொல். போத்துக்கீசர் சோனகரை 'மூஅர்' என அழைத்தனர்.

> "முதன் முதலில் இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள் ஹாஷிம் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 8ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் காலத்தில் அவரின் கொடுங்கோலாட்சியில் அரபு நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு துரத்தப்பட்டவர்களுட்சிலர் தென்னிந்திய கொங்கணத்திலும் சிலர் இலங்கையிலும் இன்னும் சிலர் மலாக்காவிலும் குடியமர்ந்தனர். இலங்கையை வந்தடைந்தோர் இலங்கையின் வடகிழக்கு, வடக்கு, மேற்குப் பகுதிகளில் 8 இடங்களில் குடியேறினர். திருகோணமலை, யாழ்ப்பாணம், மாதோட்டம், மன்னார், குதிரைமலை,

> புத்தளம், கொழும்பு, பேருவலை, காலி ஆகிய இடங்களில் இவர்கள் குடியேறினர்." (Alexander Johnston Sir - 1827)

என்பார் சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன். அவரின்படி 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே அரபு மக்கள் இலங்கையில் குடியேறிவிட்டனர். அவர்களில் ஒரு குழுவினர் பேருவலையிலும் குடியமர்ந்தனர். சேர் பொன். இராமநாதன் தனது வாதத்துக்கு ஆதாரமாகக் கொண்ட,

> "இலங்கை முஸ்லிம்களின் முன்னோர்கள் ஆரம்பத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் காயல் பட்டணத்தில் குடியேறினர். கி.பி. 1024ஆம் ஆண்டளவில் அவர்களில் ஒரு பிரிவினர் வந்து பேருவலையில் குடியேறினர்"

என்ற சைமன் காசிச்செட்டியின் கூற்றை ஏற்றால் கூட காயல்பட்டினம், கீழக்கரை முதலான தென்னிந்தியப் பட்டினங்களிலிருந்து பேருவலைக்கு வந்து குடியேறியவர்கள் அராபியர்களின் சந்ததியினரே என்பதையும் ஏற்றாக வேண்டும். பேருவலை முஸ்லிம் குடியேற்றம் சைமன் காசிச்செட்டி கூறும் காலத்திற்கு முற்பட்டதென்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. 'ஹிஜ்ரி 22ஆம் ஆண்டில் (கி.பி. 643) நான்கு கப்பல்களைக் கொண்ட ஒரு கூட்டம் மூன்று சுல்தான்களை ஏற்றிக் கொண்டு எமனிலிருந்து உமர் கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சியின்போது புறப்பட்டது. இவர்களில் ஒருவரான சுல்தான் முஹம்மதின் மகன் சதுருத்தீன் என்பவர் பேருவலையில் வந்திறங்கியதாக பேருவலையில் ஒரு பாரம்பரிய முஸ்லிம் குடும்பத்திடம் காணப்படும் ஆவணத்தை ஆதாரமாகக் கொண்டு 'சோனகர்' (Sonahar) என்ற நூலில் (1926) ஜே.ஸீ. வான் சன்டென் (J.C. Van Sanden) எழுதிவைத்திருக்கிறார். 'ஹிஜ்ரி 331' என்று பொறிக்கப்பட்ட மீஸான் கல் லொன்று பேருவலையில் பண்டைய மையவாடியொன்றில் கண்டெடுக்கப் பட்டதாக 'டைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகை 15.10.1906இல் செய்தி வெளியிட்டிருந்தது. தென்னிந்திய சாலிய பட்டினத்திலிருந்து 7 நெசவாளர் களை அழைத்து வந்தமை, பேருவலைத் துறைமுகத்தைக் கண்காணித்தமை களுக்காக பேருவலை கொறகாதுவ எனும் இடத்தைச் சேர்ந்த பெரிய முதலிமரைக்காருக்கு அப்போதைய சிங்கள மன்னன் (5ஆவது மஹிந்தனாக இருக்கலாம்) செப்புப்பட்டயமொன்றை (சன்னஸ) கி.பி. 1010இல் வழங்கியதாக ஸேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் தெரிவிக்கிறார். 5ஆம் விஜயபாகு மன்னனின் (1335-1341) 2ஆவது மனைவியான பேருவலை முஸ்லிம் மனைவிக்குப் பிறந்த 'வத்திமி பண்டார' (வத்திமி குமாரயா) குருநாகலையில் ஆட்சிபீடமேறியமையும் ஷாபி பிறந்த பேருவலையின் முஸ்லிம் வரலாற்றுத் தொன்மையைச் சுட்டுகிறது. 'கலே பண்டார அவுலியா' என்று முஸ்லிம் களாலும் 'கலே பண்டார தெய்யோ' என்று சிங்கள பௌத்தர்களாலும்

'வத்திமி பண்டார' அழைக்கப்படுகிறார். 5ஆம் விஜயபாகுவின் முஸ்லிம் மனைவி தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவரென்று பாக்கீர் மாக்கார் அடிக்கடி கூற நான் கேட்டிருக்கிறேன். அந்த வகையில் 5ஆம் விஜயபாகு மன்னனின் முஸ்லிம் மனைவி ஷாபிமரிக்காரின் பரம்பரையுடன் தொடர்புபடுகிறார்.

ஷாபியின் குடும்பம் 'மரைக்கார்' என்ற மகுடத்தைத் தரித்து நிற்கும் பாரம்பரியக் குடும்பங்களிலொன்று. பேருவலை, புத்தளம், காலி, மன்னார் முதலான துறைமுக நகரங்களில் வாழும் சில தொல் குடும்பங்கள் மரைக்கார், மாக்கார், மரிக்கார் என்ற பெயர்களைச் சுமந்து நிற்கின்றன. தமிழகத் துறைமுகப் பட்டினங்களில் வசித்து வெளிநாடுகளுடன் கடல் வாணிகம் செய்து வாழ்ந்த தென்னிந்திய முஸ்லிம்களின் ஒருபிரிவினரே 'மரைக்கார்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். மரக்கலத்தைக் குறிக்கும் 'மர்க்கப்' என்ற அரபுச் சொல்லிலிருந்து 'மரைக்கார்' என்ற தமிழ்ச் சொல் பிறந்தது என்று ஈ. தேஸ்டன், பேராசிரியர் முகம்மது ஹுசைன் நயினார் முதலான அறிஞர் கருதுவர்.

> "In Ceylon we have the Coast Moors and the Ceylon Moors. The Ceylon Moors are called 'Shonagars' by the Tamils in their ancient literature, but the Coast Moors are all Marikkars, Lebbes or Sambankarayas. They have their own meanings. The meaning of the word 'Marikkar' - it is a combination of two words 'maram' meaning wood and 'kalam' meaning boat. 'Sambankaraya' is precisely the same." (Sanmuganathan S, 1944 : 128)

என்று தொல்பொருள் ஆராய்ச்சி உதவி ஆணையாளர் எஸ். சண்முகநாதன் 'The Moors' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மொரொக்கோ நாட்டிலிருந்து வந்து தென்னிந்தியாவில் குடியேறியதால் 'மொராக்காயர்' என்று அழைக்கப்பட்டு பின்னர் அதன் மருவிய வடிவமாக 'மரக்காயர்' என்றாயிற்று என்றும் சிலர் கருதுவர். மரக்கலங்களின் தலைவன் என்ற பொருளில் வழங்கும் 'மரக்கலராயர்' என்ற தமிழ்ச் சொல்லின் திரிபாக 'மரைக்கார்''மரைக்காயர்' என்ற பதப் பிரயோகங்களைக் கொள்வது கூடிய பொருத்தமுடையதென்று தமிழக அறிஞர் பலர் கருதுவர். 'மரக்கல மினிசு' என்று சிங்களவர் இலங்கை முஸ்லிம்களை அழைப்பதும் இதனாற்றான். அந்தவகையில் ஷாபிமரிக்காரின் குடும்பம் சூடிநிற்கும் 'மரைக்கார்' என்ற மகுடம் வரலாற்று முக்கியத்துவமும் வணிக மேன்மையுமுடையது.

> "மரக்கல மினிஸ்ஸு" என்பது 'மார்க்கர் மினிஸ்ஸு' என்பதன் சிதைவு போலத் தோன்றுகிறது. அதுதான் மூலவார்த்தை எனக் கருதுகிறேன்.

ஏனெனில், பிரபல்யமான சோனகரை மலபாரிகள் 'மார்க்கர்' என்றே அழைத்தனர். அதிலிருந்துதான் இப்போதைய 'மரிக்கார்' எனும் சொல் பிறந்தது. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வர்த்தகத்திலீடுபட்டிருந்த அறபு வர்த்தகர்கள் மத்தியில் பிரதானமானவர்கள் கப்பற் சொந்தக்காரர்களாகவும் தளபதிகளாகவும் இருந்தனர். அவர்கள் அவற்றில் இடைவிடாது பிரயாணம் செய்ததால் 'மர்கபி' (மர்க்கப் - கப்பல் என்பதிலிருந்து) என அவர்களுக்குள்ளே மற்றவர்களினின்று பிரித்துக் காட்டப்படுவதற்காக அழைக்கப்பட்டனர். 'மர்க்கபி' எனும் சொல் 'மர்க்க' என அறபிகளால் சுருக்கப்பட்டிருக்கலாம். 16ஆம் நூற்றாண்டில் 'மர்க்க' அல்லது 'மார்க்க' என்பது பிரசித்தி பெற்ற எல்லாச் சோனகர்களின் இறுதியிலும் சேர்க்கப்பட்ட ஒரு கௌரவக் குறிப்பாகும். ஏனெனில் போர்த்துக்கேயரை எதிர்க்க சமொரினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட மலபார்ப் படையின் தளபதியான அலி இப்றாஹிம் மார்க்கவாக இருந்தார். காலம் போகப்போக தமிழர் 'மார்க்க' என்பதை 'மார்க்கன்' என்று ஒருமைப் படுத்தியும், 'மார்க்கர்' என்று பன்மைப்படுத்தியும் வழங்கினர். 'மார்க்கர்' என்பது 'மரிக்கார்' என மேலும் மாறியது" (அப்துல் அஸீஸ் ஐ.எல்.எம்., 1907:18)

என்று 'மார்க்கன்', மார்க்கர்', 'மரிக்கார்' என்ற சொற்கள் 'மர்க்கப்' (கப்பல்) என்ற அரபுச் சொல்லினடியாகப் பிறந்தது என்று ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் கருதுவார்.

> "போர்த்துக்கேயர் இங்கு வந்திறங்கியதை எதிர்க்குமுகமாக வரவழைக்கப்பட்ட மலபார்ப் படையில் சோனகத்தளபதியான அலீஇப்றாஹீம் மார்க்கர் என்பார் இங்கு வந்திறங்கியதன் பின்னரே அவ்வார்த்தையானது (மார்க்கர்) இங்கு உபயோகிக்கப்பட்டதெனக் கொள்ள இடமுண்டு" (வங்ஸா அஹ்மத் எம். கே., த டைம்ஸ் ஒப் சிலோன் - 22.01.1937)

என்று வங்ஸா அஹ்மத், 'த டைம்ஸ் ஒப் சிலோன்' (22.01.1937) பத்திரிகையில் 'சோனகர்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப் பிட்டிருக்கிறார். மாயாதுன்னையின் கோரிக்கையின் பேரில் அலி இப்றாஹிம் தலைமையில் அனுப்பப்பட்ட படைக்கு முன்னதாக குஞ்சலி மரைக்கார், பச்சி மரைக்கார் ஆகிய இரு கொச்சின் முஸ்லிம்களையும் அவசரமாக மாயாதுன்னையைச் சந்திக்க சமொரின் அனுப்பியிருந்தார். அவர்களும் மரைக்கார்களாக விருந்தனர். எப்படி நோக்கினும் மரைக்கார், மார்க்கர் என்போர் கலப்பற்ற அரபிகளின் சந்ததியினராக அல்லது அறாபியர் களுக்கும் சுதேச தாய்மார்களுக்கும் பிறந்த அராபியரின் வம்சாவழியினராகவே அறியப்படுகின்றனர்.

பேருவலை மருதானையில் அமைந்துள்ள 'அரப் வீதி'யும் 'மஸ்ஜிதுல் அப்றார்' பள்ளிவாசலும் கூட இப்பிரதேசத்தின் தொன்மைக்கான

அடையாளங்களாக நிலைத்திருக்கின்றன. இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது பள்ளிவாசலாக மஸ்ஜிதுல் அப்றார் கருதப்படுகிறது. பேருவலையில் குடியேறிய ஆரம்பகால முஸ்லிம்கள் பள்ளிவாசல் ஒன்றை அங்கு நிர்மாணித்து அதற்கு 'மஸ்ஜிதுல் அப்றார்' என்று பெயரிட்டனர். பள்ளிவாசல்களின் தந்தை என்பது அதன் பொருள். பேருவலை மருதானையில் அமைந்துள்ள இப்பள்ளிவாசலே மிகத்தொன்மைவாய்ந்த பள்ளிவாசலாகக் கருதப்படுகின்றது. இப்பள்ளிவாசல் அமைந்துள்ள மருதானைப் பகுதியில்தான் ஷாபிமரிக்காரின் குடும்பத்தினர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்பள்ளிவாசலை அண்டி இவர்கள் வாழ்வது இவர்களின் தொன்மையையும் பாரம்பரியப் பெருமையையும் காட்டுகிறது. 'ஹக்கீம் விலா' அமைந்திருக்கும் 'அரப் வீதி'யும் இக்குடும்பத்தினதும் பேருவலையினதும் தொன்மை பற்றி பலவிடயங்களை எம்மை ஊகிக்கச் செய்கிறது.

இத் தொல்பிரதேசத்தில் வாழ்ந்து மடிந்தவர்கள்தான் ஷாபிமரிக்காரின் மூதாதையர்கள். பாக்கீர் மாக்கார், றாஸிக் மரைக்கார் உள்ளிட்ட ஷாபியின் குடும்பத்தினர் மஸ்ஜிதுல் அப்றார் பள்ளிவாசல் வளாகத்தில்தான் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இப் பள்ளிவாசலின் தொன்மை முதல் அராபியர் குடியேற்றம் என்பனவற்றை நினைகூர்ந்து இலங்கை அரசாங்கம் 8.6.2003இல் இரு முத்திரைகளை வெளியிட்டது. ரூபா 4.30, ரூபா 23.00 முத்திரைகள் அன்று வெளியிடப்பட்டன. மஸ்ஜிதுல் அப்றார் பள்ளிவாசல் வளாகத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முத்திரை வெளியீட்டு வைபவத்தில் அப்போதைய மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு முதல்நாள் கடித உறையை ஷாபிமரிக்காரிடமே கையளித்து வெளியிட்டு வைத்தார். அப்பெருமை மிகு நிகழ்ச்சியில் பிடிக்கப்பட்ட புகைப்படத்தை தனது மரண பரியந்தம் ஷாபிமரிக்கார் தனது அறையில் வைத்துப் பாதுகாத்தார்.



தபால் திணைக்கள முத்திரைப் பணியகம் 8.6.2003இல் வெளியிட்ட இலங்கையின் முதல் அராபிய குடியமர்வு நினைவு முத்திரைகள்


அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு முதல்நாள் முத்திரை, கடித உறைகளை ஷாபிமரிக்காரிடம் வழங்கி வெளியிட்டுவைக்கிறார்

ஷாபிமரிக்கார் பிறந்த வீட்டின் பெயர் 'ஹக்கீம் விலா' என்பது. இது அவரின் யூனானி வைத்தியப் பரம்பரையைச் சுட்டுகிறது. இக்

குடும்பத்தினரிடமுள்ள கத்தீப் முகம்மது அப்துல் ஜப்பார் என்பவரின் சான்றிதழும் இதனை ஊர்ஜிதம் செய்கிறது.



ஷாபிமரிக்கார் பிறந்த இல்லம் ஹக்கீம் வீடா

> "சோனகர்கள் என்று வழங்கிவரும் எமது சாதிகளில் வைத்தியமென்ற உடை அநேகர் அணிந்திருந்தாலும் இதன் கீழ்க் காணப்படுகிறவர் இலங்கா புரியில் பேருவலையில் பூர்வீக வைத்தியர்களின் புத்திர வழியாளியாவார். இவரின் பெயர் அலியா மரைக்கார் ஹக்கீம். இவர் மிகவும் கெட்டியான பண்டிதர். இவரின் தகப்பனார் அபூபக்கர் லெப்பை மரைக்கார் மேஸ்திரியார்."

என்று கத்தீப் முகம்மது அப்துல் ஜப்பார் அவர்கள் ஷாபியின் தகப்பனாரின் தகப்பன் ஹக்கீம் அலியா மரைக்காரின் வைத்திய வித்துவத்தைப் பற்றியும் ஷாபிமரிக்காரின் யூனானி வைத்தியப் பரம்பரை பற்றியும் சான்றுரைக்கிறார். (பர்பரீன், 1979:32)

ஸராயில் லெப்பை மரைக்கார் (ஷாபிமரிக்காரின் தந்தை), முஹம்மத் மரைக்கார் (பாக்கீர் மாக்காரின் தந்தை), உபைதா உம்மா (நாசிக் மரைக்காரின் தாய்) ஆகியோர் ஹக்கீம் அலியா மரைக்காரின் பிள்ளைகள். அவரின் தந்தை அபூபக்கர்லெப்பை மரைக்கார் மேஸ்திரியார். அவருடைய தந்தை காசீம் லெப்பை மரைக்கார் மேஸ்திரியார், அவரின் தந்தை முஹம்மதுக் கண்டு மேஸ்திரியார். இவர்களெல்லாம் புகழ்பெற்ற யூனானி வைத்தியர்கள்.

> "It is widely believed that Unani Medicine of the original kind was introduced by Sultan Jamaldeen, who was reputed to have practiced at Beruwala… The original Unani Medicine, among the glories of Islamic civilization, was practiced in the Middle East and other lands of Islamic influence" (Mahroof M.M.M., 1990:xx)

என்று 'பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார்' என்ற நூலின் தகைமைச் சான்றிதழில் ஆய்வாளர் எம்.எம்.எம். மஹ்ரூப் குறிப்பிட்டிருப்பது கவனத்திற் குரியது. ஷேக் ஜமாலுத்தீன் அல் மஹ்தூமியை இப்பரம்பரையினர் தம்முன்னோடியாகக் கொள்வர்.

> "எஸ்.எல்.எம் ஷாபிமரிக்கார் குடும்பத்தினர் பரம்பரையாக வைத்தியர்களாவர்" (பர்பரீன், 1979:31)

என்று 'பர்பரீன்' நூலில் எஸ்.எம். கமால்தீனும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். 'ரஜகம நெத்தங் வெதகம' என்று சிங்களத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. அரச பதவி அல்லது வைத்தியத் தொழில் என்பது அதன் அர்த்தம்.

முஹம்மது மரைக்காரும் ஸராயில் லெப்பை மரைக்காரும் கொழும்பு வின்சன்ட் வீதியில் (இப்போது அப்துல் ஹமீத் வீதி) யூனானி வைத்திய சாலையொன்றை நடாத்தினர். இரு சகோதரர்களும் மருந்துக்கடையொன்றையும் அவ் வைத்தியசாலையுடன் இணைத்து நடத்தினர்.

ஷாபிமரிக்காரின் தாயார் சுலைஹா உம்மா காலியைச் சேர்ந்தவர். ஷாபிக்கு ஐந்து சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருந்தனர். ஷாபியின் மூத்தப்பா (தகப்பனாரின் தகப்பன்) அ.லெ.ம. ஹக்கீம் அலியா மரைக்கார் பிரபல யூனானி வைத்தியராக மட்டுமல்லாமல் சிறந்த புலவராகவும் திகழ்ந்தார். 'மஸ்ஜிதுல் அப்றார்' பள்ளிவாசல் பற்றி அவர் பாடிய பதங்கள் ஹிஜ்ரி 1323 றஜபு பிறை 27இல் வெளிவந்தது. முனாஜாத் பாடுவதில் ஹக்கீம் அலியா மரைக்கார் சிறந்து விளங்கினார்.

"ஆயிரம் வருடத்துக்கப்பால் அறிவாளர்கள்
ஆய்ந்தோர் வணங்கும் சிறுபள்ளி அதைத் திருத்தித்
தேர்ந்தோர் தெளிந்தோர் முறைசொல்லி உடைத்துண்டாக
உண்மை நபியிரசூல் செம்மை மறை தெளிந்தோர்
உற்றோர் கிபுலாவையும் மெட்டாய்த்திருத்திவைத்தார்
பள்ளி அலங்காரமே பாடும் பரம்பொருள்
சேரும் பாவவினைகள் தீரும் ஜெயப்பேராகும்... பள்ளி...
தெள்ளு மறையோர்களெங்கும் கொள்ளும் புகழா ரிலங்கைச்
சீரான வேர்வலையிற் பேரணியாய்த்துலங்கும்... பள்ளி..."

என்று 'மஸ்ஜிதுல் அப்றார்' பள்ளிவாசலில் செய்யப்பட்ட புனரமைப்பு வேலைகளைப் பாடுபொருளாகக் கொண்டு இவ்வாறு பாடியிருக்கிறார் ஹக்கீம் அலியா மரைக்கார்.

பேருவலையில் கெச்சிமலை, புஹாரி தக்கியாக்கள் இஸ்லாத்தையும் முகம்மது நபி (ஸல்) அவர்களின் சுன்னாவையும் பேணிப்பரப்புவதில் முன்னின்றன. அதனால் கெச்சிமலையில் அடங்கியுள்ள ஷெய்கு அஷ்ரப் வலியுல்லா பற்றியும், புஹாரித்தக்கியா நாயகரும் மக்கமாநகரில் அடங்கி யுள்ளவருமான ஆத்மஞானி ஷெய்கு முஸ்தபா வலி அவர்கள் பற்றியும் பல இலக்கியப்படைப்புகள் எழுந்துள்ளன. 'ஸஹீஹுல் புஹாரி' என்ற ஹதீஸ் கிரந்தத்தை, நபிகளாரின் சொல், செயல், அங்கீகாரம் என்பனவற்றை, மக்களுக்கு விளக்கிச் சொல்லி அவர்களை இஸ்லாத்தின்பால் ஆற்றுப்

படுத்தியவர் ஷெய்கு முஸ்தபாவலி அவர்கள். இக்கிரந்தத்தில் 7275 ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

"ஆதியிறசூல் புகழையோதிப் புகழ்ந்த திரு
வானந்த வறி வாளரில்
அவா வென்ற அம்மாறை விட்டுப் பிரிந்திட்ட
அண்ண லென வந்த வொலியே
பேதக மனத்துடைய பித்துப் பிடித்த நாய்
பீறிக்கடிக்க வதனாற்
பித்துப் பிடித்துழல லுற்ற வொருவன் றனுயிர்
பிரிகின்ற காலை தன்னில்
கோதகலு ஞானகலை யான கலிமாவினைக்
கூறிக் கொடுக்க வோதிக்
கோமானருட் கிருபை யீமானுறச் செய்த
கொண்டலென வந்த வொலியே
ஆதமரைக் காரீன்ற செல்வரெனு நாதரே
அலியா மரைக்காரென்ற
அடியனெனை நித்தமுஞ் சித்தம் வைத்தாளுவீர்
ஆரிபொலி முஸ்தபாவே"

என்று ஷெய்கு முஸ்தபாவலி யவர்களின் புகழ்பாடினார் ஷாபிமரிக்காரின் மூத்தப்பா ஹக்கீம் அலியா மரைக்கார். அந்த வகையில், ஷாபிமரிக்காரின் பின்புலம் புலமைமிக்க இஸ்லாமிய இலக்கியப் பாரம்பரியமொன்றையும் கொண்டிருப்பது அறிதற்குரியது.

ஷாபிமரிக்காரின் தகப்பனார் ஸராயில்லெப்பை மரிக்கார் பேருவலை -மருதானைப் பிரதேசத்தின் முக்கிய சமூகச் செயற்பாட்டாளராக விளங்கினார். எம்.எஸ்.எம். யூசுப் என்பவரின் தலைமையில் அப்போது பேருவலை - மருதானையில் இயங்கிக்கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர் இயக்கத்தின் (வை.எம்.எம்.ஏ.) செயலாளராகவும் அவர் சீரிய பணிசெய்தார். அவ்வியக்கத்தின் துணைச்செயலாளராக ஓ.எல்.எம். அப்துல்வதூத் என்பவரும் பொருளாளராக ஓ.எல்.எம். ஷரீப் ஹாஜியாரும், உறுப்பினர்களாக ஏ.எல்.எம்.பீ. முஹம்மத், செய்னுலாப்தீன் மரிக்கார், எம்.எஸ்.எம்.ஏ. சமத், ஹிளுறு முகம்மத் ஆகியோர் செயற்பட்டனர். இவ்வியக்கமே முஸ்லிம் பெண் பாடசாலை யொன்றை 1924இல் பேருவலை - மருதானையில் ஏற்படுத்தியது. ஓலைக்கொட்டிலாக அமைக்கப்பட்ட இப்பாடசாலைதான் இப்பிரதேசத்தில் எற்படுத்தப்பட்ட முதலாவது முஸ்லிம் மகளிர் பாடசாலை. இப்பாடசாலையில் 1929இல் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது நிரந்தரக் கட்டிடத்தை களுத்துறை

மாவட்ட உதவி அரசாங்க அதிபராகவிருந்த ஜீ.எல்.டபிள்யு. விக்கிரமசிங்க (பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அவர்களின் பாட்டனார்) திறந்துவைத்தார். அந்நிகழ்வுக்கு கௌரவ டபிள்யு.எம். அப்துர் ரஹ்மான், கொழும்பு ஸாஹிறாக்கல்லூரி அதிபர் ரி.பி. ஜாயா, என்.எச்.எம். அப்துல்காதர் (சட்டத்தரணி), மஹ்தூம் இஸ்மாயில் (சட்டத்தரணி), எம்.ஐ.எம். ஹனிபா (சட்டத்தரணி) முதலான முஸ்லிம் சமூகத்தின் அன்றைய முக்கியஸ்தர்களும் பிரதேசப் பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர். இப்பாடசாலையின் தாபிதத்தில் செயலாளர் ஸராயில்லெப்பை மரிக்காரின் வகிபாகம் பற்றி அப்போது வெகுவாகப் பாராட்டிப்பேசப்பட்டதாக அறியப்படுகிறது. 'பாஸியத்துல் நஸ்ரியா' என்ற பெயரில் இன்று அப்பாடசாலை அழைக்கப் படுகிறது. ஷாபிமரிக்கார் தனது தொடக்கக் கல்வியை இப்பெண்கள் பாடசாலையில்தான் ஆரம்பித்தார். அதன்பின் கொழும்பு ஹல்ஸ்டோப் சென். செபஸ்தியன் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்தார். தனது ஒன்றுவிட்ட சகோதரர் எம்.ஏ. பாக்கீர் மாக்காரும் மைத்துனர் ஏ.டபிள்யூ.எம். றாஸிக் மரைக்காரும் இப் பாடசாலையிலேயே கற்றனர். ஏ.எம். நஸீர் (கொழும்பு மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர்), எஸ். பி.ஏ. ஹமீத் (முன்னாள் மாநகரசபை அங்கத்தவர்) ஆகியோரெல்லாம் ஷாபிமரிக்கார் சென். செபஸ்தியனில் கற்ற காலத்தில் அவருடன் கற்றுக் கொண்டிருந்தவர்கள். ஜூனியர் பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்ததும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் ஷாபி அனுமதிபெற்றார். பாக்கீரும், றாஸிக் மரைக்காரும் அவ்வாறே கொழும்பு ஸாஹிறாவில் சேர்ந்து கொண்டனர். பேருவலை மருதானையில் பிறந்த ஷாபிமரிக்கார் கொழும்பு மருதானை ஸாஹிறாக் கல்லூரியில் அனுமதி பெற்றார். கல்விமான் ரி.பி. ஜாயாவின் வழிநடத்துகை ஷாபிக்கு இங்குதான் கிடைத்தது. ஜாயா இவ்வுலகை விட்டு 1960இல் நீத்தும் வரை அவ்வழி நடத்துகை ஷாபிக்கிருந்தது. பாக்கீர், றாசிக், ஷாபி ஆகிய மூவரும் தம் ஆதர்ஷ புருஷராக ஜாயாவைக் கொண்டனர்.

1.2 ஸாஹிறா மாணவன்

ஷாபி 1941களில் ஸாஹிறாக் கல்லூரியின் மாணவத் தலைவர் களுள் ஒருவராக (Prefect) விருந்தார். ஏ.டபிள்யூ.எம். றாஸிக் மரைக்கார், ஏ.ஆர்.எம்.ஹமீம், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், ரி.எஸ். காசிம்,



மாணவத் தலைவர்கள் - 1941

ஏ.ஏ.எம். நஸீர், எம்.எஸ்.எம். அஸ்ஹர், எஸ்.எம்.எம். பரீத், ஏ.எம். முஹ்லார், எச்.எம்.ஹம்தூன், ரி.எஸ்.பள்ளி, எம்.எஸ்.ஏ.றஸ்ஸாக், எம்.எச்.எம்.நிஸாம், ஏ.எம்.எம். பளீல், ஜே.எம். லாபிர் ஆகியோர் 1941களில் ஸாஹிறாக் கல்லூரியின் மாணவத் தலைவர்களாக இருந்தனர். ஷாபிமரிக்காரின் மைத்துனர் ஏ.டபிள்யூ.எம். றாஸிக் மரைக்கார் 1941இல் சிரேட்ட மாணவத் தலைவனாக இருந்தார். பின்னாளில் சட்டத்தரணியாகவும் பேருவலை நகரசபைத் தலைவராகவு மிருந்தவர் இவர். ஏ.ஆர்.எம். ஹமீம் பின்னாளில் செனட்சபை உறுப்பினராக விருந்தவர் என்பதும் கவனத்திற்குரியது. யுத்தகால சூழ்நிலை ஷாபியை எவ்வாறு சிரேட்ட மாணவத்தலைவராக்கிற்று என்பதை அறிவதும் சுவாரசியமானது.

"இரண்டாவது உலக மகாயுத்தம் மானிலத்து மக்களைக் கலங்க வைத்துக் கொண்டிருந்த காலம். ஜப்பானியர்கள் கொழும்புத் துறைமுகத்தைக் குண்டெறிந்து தாக்கிவிட்டார்கள். பீதியடைந்த பெற்றோர் தமது பிள்ளைகளை ஸாஹிறாவில் இருந்து தற்காலிகமாக வீட்டுக்கு அழைத்துக் கொண்டார்கள். அதிபர் ஜாயாவுக்குப் பாடசாலையை நடத்த முடியவில்லை. ஆசிரியர்களோ உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கொழும்பை விட்டு ஓடிவிட்டார்கள். அதிபர் உட்பட சில ஆசிரியர்களும் சில மாணவர்களுமே எஞ்சியிருந்தனர். கல்வியை தனது கண்ணாக மதித்த டாக்டர் ஜாயா எப்படியும் பாடசாலையையும் விடுதியையும் நடத்தத் தீர்மானித்தார். தலைவர்களையாவது (Prefects) வைத்துச் சமாளிப்போம் என்ற முடிவுடன் எல்லா மாணவத் தலைவர்களும் உடனடியாகக் காரியாலயத்திற்கு வரும்படி சுற்றறிக்கை அனுப்பினார். ஒரு மாணவத் தலைவர் மட்டும் பட்டியலுடன் வந்து நின்றார்.

ஜாயா : என்ன நீங்கள் மட்டுமா வந்திருக்கிறீர்கள்?

மாணவன் : சர், யுத்த பயத்தினால் எல்லா மாணவத் தலைவர்களும் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

ஜாயா : அப்படியானால் நீங்கள் போகவில்லையா?

மாணவன் : இல்லை சர்.

ஜாயா : மாணவத் தலைவர்களின் பட்டியல் வைத்திருக்கிறீர்களா?

மாணவன் : இருக்குது சர். (அதிபர் பட்டியலை வாங்கி பெயர்களை உரத்த குரலில் படிக்கிறார். வந்து நின்ற மாணவனைத் தவிர மற்றவர்களின் பெயர்கள் வெட்டப்படுகின்றன.)

ஜாயா : உங்களுடைய பெயர் மட்டும்தான் வெட்டப்படாமல் மிச்சமாக இருக்கிறது.

மாணவன் : (சிரித்துக் கொண்டு) இயஸ் சர்.

ஜாயா : அதனால் இன்றுமுதல் நீங்கள்தான் சிரேஷ்ட மாணவத் தலைவன் (Senior Prefect)

மாணவன் : தங் யூ சர்.

இப்படித்தான் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் அன்று சிரேஷ்ட மாணவத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்."

என்று ஷாபிமரிக்கார் சிரேட்ட மாணவத் தலைவராக உயர்ந்த கதையை மன்னார் ஷரீப் 'ஒரு மாணவத் தலைவர் உருவாகிறார்' என்ற தலைப்பில் 'உதயம்' பத்திரிகையில் பதிவு செய்திருக்கிறார். (உதயம், 29.05.1981:11). ஷரீப், ஷாபிமரிக்காருடன் நெருங்கிப் பழகியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஷாபிமரிக்கார் இந்நிகழ்வை தன்னிடம் அடிக்கடி கூறி மகிழ்ந்ததாக அவரின் மனைவி சொன்னதும் என் ஞாபகத்திலிருக்கிறது.

ஈ.சி. ஆலிப் கல்லூரியின் நூலகத்துக்குப் பொறுப்பாகவிருந்த போது அதன் மாணவ நூலகராக ஷாபிமரிக்கார் செயற்பட்டார். ஸாஹிறாக் கல்லூரியில் 'அரபுச் சங்கம்' ஒன்று 1939இல் ஆரம்பிக்கப்பட்டு அதிபர் ஜாயாவைக் காப்பாளராகவும் ரஊப்பாஷாவைத் தலைவராகவும் கொண்டு இயங்கிக் கொண்டிருந்தது. அச்சங்கம் 1941இல் மீலாத் விழா ஒன்றை கல்லூரி மட்டத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. அவ்விழாவில் எஸ். எம். கமால்தீன் தமிழில் உரை நிகழ்த்தினர். ஏ.டபிள்யூ.எம். றாஸிக் மரைக்காரும் ஷாபிமரிக்காரும் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினர்.

குர்ஆன் ஓதல்	–	ஹுசைன் ஷரீப்
தமிழ்ப் பாடல்	–	எல்.எஸ். இப்றாஹிம், முஹம்மது அலி
ஹிந்துஸ்தானிப்பாடல்	–	ஹுசைன் ஷரீப்
ஆங்கிலப் பேச்சு	–	எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார்
குர்ஆன் ஓதல்	–	எச்.எம்.ஐ. ஷம்சுதீன்
அரபுக் கீதம்	–	கல்லூரிக் கீதமிசைப்பவர்கள்
தமிழ்ப்பாட்டு	–	எல்.எஸ். இப்றாஹிம், முஹம்மது அலி
ஆங்கிலப் பேச்சு	–	ஏ.டபிள்யூ.எம். றாஸிக் மரைக்கார்
தமிழ்ப் பேச்சு	–	எஸ்.எம். கமால்தீன்
உறுதுப் பேச்சு	–	எச்.ஏ.எச். ஈஸா

என்பன அன்று நிகழ்ந்த மீலாத்விழாவின் நிகழ்ச்சி நிரலில் அடங்கியிருந்தன. பின்னாளில் மூதூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த எம்.ஈ.எச். முஹம்மது அலி, பிரபல தமிழறிஞனாகத் திகழ்ந்த எஸ்.

எம். கமால்தீன் ஆகியோருடன் ஷாபிமரிக்காரும் அவரின் மைத்துனர் றாசிக் மரைக்காரும் இவ்விழாவில் பங்கு கொண்டமை கவனத்துக்குரியது.

பாராளுமன்றத்தை ஒத்த அமைப்பில் அப்போது இயங்கிக் கொண்டிருந்த ஸாஹிறாக் கல்லூரி மஜ்லிஸில் பல அறிவு பூர்வமான நிகழ்வுகள் அரங்கேறின. சபாநாயகரின் அல்லது சிலவேளைகளில் பிரதி சபாநாயகரின் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அரச தரப்பு, எதிர்த்தரப்பு என்ற வகையில் மாணவர் பங்கு கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர். அவ்வாறான நிகழ்வுகள் பலவற்றில் ஷாபிமரிக்காரும் பங்குகொண்டமை 'கிறசண்ட் - 1941' மலரில் பதிவாகியிருக்கிறது. 'The University of Ceylon is not an immediate necessity' என்ற தலைப்பில் 25.03.1941இல் நிகழ்ந்த கருத்து மோதலில், சார்பாக ஏ.எம். ஹமீமும், எதிராக ஹனான் இஸ்மாயிலும் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும் பங்கு கொண்டனர்.

Prosperity of Ceylon depends more on Industrial than Agricultural development என்ற தலைப்பில் 01.04.1941இல் இடம்பெற்ற விவாதத்திலும், சார்பாக ஏ.எம். ஹமீமும், எதிராக ஹனான் இஸ்மாயில், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் ஆகியோரும் கருத்துக்களை முன்வைத்தனர். Science has more aided than impeded the progress of mankind என்ற மகுடத்தில் 17.06.1941இல் நிகழ்ந்த விசேட விவாதத்தில், சார்பாக ஏ.ஸி.எம். உவைஸ் (தலைவர்), எம்.ஜே.எம். லாபிர், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும், எதிராக றாஸிக்மரைக்காருடன் எம்.எஸ்.எம். யூசுபும் வாதிட்டனர்.

'Co-education should be encouraged in schools' என்ற தலைப்பில் 08.07.1941இல் நிகழ்ந்த விவாதத்தில் ரி.எஸ்.எஸ். லக்ஷானா, எம். எல். ஜெய்னுதீன், ஹுசைன் ஷரீப் ஆகியோர் சார்பாகவும், றாஸிக் மரைக்கார், எம்.எஸ்.எம். யூசுப், எம்.ஜே.எம். முஹ்ஸின், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் ஆகியோர் எதிராகவும் கருத்துரைத்தனர். Farewell address to the House என்ற தலைப்பில் 15.07.1941இல் நடைபெற்ற நிகழ்வில் எம்.எஸ்.ஏ. றாசிக், எம்.எஸ்.எம். அஸ்ஹர் ஆகியோர் சார்பாகவும் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் எதிராகவும் கருத்துரைத்தனர். Mr. Jinnah's Pakistan Policy is detrimental to the Muslim World' என்ற தலைப்பில் 16.07.1941இல் நடைபெற்ற விவாதத்தில் சுல்தான் அஹமத், குர்பான் ஹுசைன், எம்.ஜே.எம். லாபிர், யூசுப், ஹுசைன் ஷரீப் ஆகியோர் ஆதரித்தும், றாசிக் மரைக்கார், எம்.எஸ். எம். அஸ்ஹர், எம்.எஸ்.ஏ. றஸ்ஸாக், ரி.எஸ்.எஸ். லக்ஷானா ஆகியோரும் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும் எதிர்த்தும் வாதிட்டனர். மஜ்லிஸ் நிகழ்வுகளில் ஷாபிமரிக்காருடன் பங்குகொண்ட எம்.ஜே.எம். முஹ்ஸின் பிற்காலத்தில்

இலங்கை சிவில் சேவை அதிகாரியாகப் புகழ்பெற்றவர் என்பது அறிதற்குரியது.

ஷாபிமரிக்கார் 1941 டிசம்பரில் நடைபெற்ற லண்டன் மெற்றிகுலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். ஸி.எம். மத்தியு, எம்.எஸ்.எம். அமீர், எம். எல்.எம். இஸ்ஸதீன், எம்.எஸ்.எம். அஸ்ஹர், எஸ்.எம். தாஜுதீன், எம்.எஸ். எம். நஸீம் ஆகியோரும் அவ்வருடம் ஸாஹிறாக்கல்லூரியில் அப்பரீட்சையில் சித்திபெற்றனர். எம்.எல்.எம். இஸ்ஸதீன் பின்னர் வைத்திய கலாநிதியாக விளங்கினார். இவர் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த எம்.எல்.எம். அபூசாலியின் சகோதரர்.

1.3 இலங்கைப் பல்கலைக்கழகத்தில்

1942 மார்ச்சில் நடைபெற்ற பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் சித்திபெற்ற ஷாபிமரிக்கார் கொழும்பில் இயங்கிய இலங்கைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார். 1921இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 1942இல் இலங்கைப் பல்கலைக்கழகமான போது அதற்குத் தெரிவான முதலாவது குழுவில் ஷாபியும் இடம்பெற்றிருந்தார். ஆங்கிலம், லத்தின், வரலாறு, பொருளாதாரம் ஆகிய பாடங்களை கலைத்துறை முதலாவதாண்டுப் பரீட்சைக்கான பாடங்களாகக் கற்று 1943இல் சித்திபெற்ற ஷாபிமரிக்கார், பொருளாதாரப் பாடத்தில் கலைத்துறைப் படிப்பை நிறைவு செய்து 1945இல் பீ.ஏ. பட்டதாரியானார். பட்டப்பின்படிப்பு கல்வியியல் டிப்ளோமாப் பாடநெறியை 1954/55களில் இலங்கைப் பல்கலைக் கழகம் - கொழும்பில் மேற்கொண்டு 1955 மேயில் அதிலும் சித்திபெற்ற ஷாபி, பகுதிநேர கல்வி முதுமாணிக் கற்கைக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் 1958இல் பதிவு செய்திருந்தார். ஆயினும், அளுத்கம ஸாஹிறாவில் அவர் முகம் கொடுக்க வேண்டியிருந்த பாரிய வேலைப்பழு அக்கற்கையை நிறைவு செய்ய அவரை முடியாமற் செய்தது. அக் கல்லூரியை அரசாங்கம் சுவீகரித்ததால் அதிபர் பதவியை 31.12.1961இல் இராஜினாமாச் செய்துவிட்ட ஷாபி சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்றார். 1962இல் அட்வகேட் தொடக்கப் பரீட்சையிலும் (Advocates Preliminary) 1963இல் இடைநிலைப் பரீட்சையிலும் (Intermediate Exam.) சித்திபெற்று சட்ட இறுதிப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது, அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைமைப் பதவியை 25.10.1964 இலிருந்தும், கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியை 01.01.1967இலிருந்தும் ஏற்றுச் செயற்பட வேண்டியிருந்ததால் சட்டக் கற்கையை அவரினால் பூர்த்தி செய்யமுடியவில்லை. சமூகத்தின் கல்வி

மேம்பாட்டுப் பணிகளுக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுத்த ஷாபி மரிக்காரினால் தனது சொந்த உயர்கல்விக் கற்கைகளை நிறைவு செய்ய முடியவில்லை.

1.3.1 பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் தாபகத் தலைவர்

1942 - 45வரை அவர் பட்டதாரி மாணவனாக இருந்தபோது சகாயநிதி பெற்று பல்கலைக்கழகத்தில் கற்றார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் அப்போது இயங்கிக் கொண்டிருந்த இரவுப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் பதவியை அவருக்கு வழங்கி அவரின் பல்கலைக்கழகப் படிப்புக்கு ஜாயாவும் உதவினார். இவ்வுதவிகள் இல்லாது போயிருப்பின் ஷாபிமரிக்கார் தனது படிப்பைத் தொடர முடியாது போயிருக்கும் என்பதை அவரே ஏற்றுக் கொண்டிருந்தார். ஷாபிமரிக்கார் பல்கலைக்கழகத்தில் கற்றபோது இலவசக் கல்வி அமுலில் இருக்கவில்லை என்பது கவனத்திற்குரியது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மஜ்லிஸ் ஒன்றை முதன்முதலில் ஏற்படுத்தி அதன் முதல் தலைவராக இருந்தவரும் ஷாபிமரிக்காரே. அவர் தலைவராகச் செயற்பட்டபோது 23.02.1945இல் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் அவரின் தலைமையில் மீலாத் விழாவைக் கொண்டாடியது. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்பட்ட முதலாவது மீலாத்விழாவாக அது அமைந்திருந்தது. உபவேந்தர் டாக்டர் ஜெனிங்ஸ், சரித்திரப் பேராசிரியர் எச்.ஸி. ராய், அரபு மொழிப் பேராசிரியர் எஸ்.ஏ. இமாம், தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் ஆகியோரும் டாக்டர் எம்.ஸி.எம். கலீலும் அவ்விழாவில் கலந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். (தினகரன், 26.02.1945)

ஷாபிமரிக்காரின் தலைமையில் நிகழ்ந்த அம்மீலாத் விழா அறிவு பூர்வமானதாக, பிற, மத, இன அறிஞர்களின் பங்குபற்றுதலுடன், இஸ்லாம் பற்றிய பிற இன அறிஞர்களின் துல்லிய கண்ணோட்டத்துடன் நிகழ்ந்து முடிந்தது. இங்கு உரையாற்றிய டாக்டர் ஜெனிங்ஸ் இலங்கை முஸ்லிம்களின் கல்வி பற்றி வலியுறுத்திப் பேசினார். ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு பல்கலைக்கழக அனுமதியில் விசேட சலுகை காட்டமுடியாத தன் இயலாமையை எடுத்துச் சொன்ன அவர் முஸ்லிம் பெண் கல்வியின் அவசியத்தையும் வலியுறுத்திக் கூறினார்.

> "முஸ்லிம்கள் தங்கள் பிள்ளைகளைச் சிறுவயதில் குர்ஆன் ஓத விடுவதனால் தகுந்த பிரயோசனம் கிடைப்பதில்லை. எனவே, தற்போதுள்ள முறையை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகிறது" (தினகரன் - 26.02.1945)

என்று தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் 'மக்தப்' கல்வியின் குறைபாட்டைச் சுட்டிக் காட்டினார்.

> "நபிகள் நாயகம் சுமார் 10 வருடங்களுக்குள் ஒரு நிகரற்ற காரியத்தைச் சாதித்து விட்டார். அவரின் பெரும் வெற்றிக்குக் காரணம் என்ன என்பதை முஸ்லிம்கள் ஆராய வேண்டும். மிகவும் உன்னத நிலையிலிருந்த முஸ்லிம்கள் கீழான நிலையை அடைவதற்கான காரணங்களையும் அறிய வேண்டும். இந்த ஆராய்ச்சியின் மூலம் நாம் மிகுந்த பிரயோசனம் அடைய முடியும்" (தினகரன் - 26.02.1945)

என்று வரலாற்றுப் பேராசிரியர் எச்.எஸ். ராய் முஸ்லிம்கள் தம் வரலாற்றிலிருந்து படிக்க வேண்டிய பாடங்களை நினைவூட்டிப் பேசினார்.

> "இஸ்லாத்தின் வீழ்ச்சிக்கு பிற்காலத்தில் ஏற்பட்ட மதக்குழுக்களே பெரிதும் காரணமாயிருந்தன." (தினகரன் - 26.02.1945)

என்று பேராசிரியர் ராயின் கருத்துக்கு விடைகூறுமாற்போல் டாக்டர் எம். ஸி.எம். கலீல் தனது கருத்தைக் கூறினார். அரபுத்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.ஏ. இமாம் தனதுரையில் முஸ்லிம்களடைந்த வெற்றியின் காரணங்கள், முகம்மது நபியின் எளிய வாழ்க்கை என்பன பற்றி விவரித்துக் கூறினார். அந்த வகையில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது முஸ்லிம் மஜ்லிஸ் நடத்திய முதலாவது மீலாத்விழா குறித்துச் சொல்லக்கூடியதாக, மிக்க பயனுள்ளதாக நடந்து முடிந்தது. முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் ஷாபிமரிக்காரின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாக அவ்விழா நிறைவெய்தியது. பிற்கால பிரபல முஸ்லிம் தமிழறிஞராகத் திகழ்ந்த எஸ்.எம். கமால்தீனும் அக்காலத்தில் (1944 - 48) பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்தார். முஸ்லிம் மஜ்லிஸ் நடவடிக்கைகளில் தன்னையும் இணைத்துச் செயற்பட்டார்.

ஆரம்பகால முஸ்லிம் கல்வி நிலையங்கள் இரு வகையின. 'மக்தப்கள்' தொடக்கப் பள்ளிகள்; 'மத்ரஸாக்கள்' உயர் கல்வி நிலையங்கள். இங்கு சுவாமி விபுலாநந்தர் தெரிவித்த கருத்து 'மக்தப்' பாடசாலைகள் பற்றியதாகவிருந்தது. அனேக மக்தப்கள் பள்ளிவாசல்களுடன் இணைந்ததாக இயங்கின. சில வேளைகளில் செல்வந்தர்களின் அல்லது ஓதிக் கொடுப்போரின் வீடுகளிலும் இயங்கின. குர்ஆனை ஓதவும், தொழுகைக்குத் தேவையான குர்ஆனின் பகுதிகளை பிள்ளைகள் மனனம் செய்யப் பண்ணுவதுமே இந்த மக்தப்களின் செயற்பாடுகளாகவிருந்தன. சில மக்தப்களில் எழுத, வாசிக்கவும், சிலபோது கணிதமும் கற்பிக்கப்பட்டன. கற்பித்தல் முறை நெட்டுருச் செய்வதாக அமைந்திருந்தது. வயதில் மூத்த மாணவர்கள் ஆசிரியர்களுக்குத் துணையாகவிருந்து கற்பிப்பது மக்தப்களில்

வழக்கமாக இருந்தது. தனக்குத் தெரிந்ததை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதாகவே கற்பித்தல் அமைந்திருந்தது. மக்தப்களுக்குச் செல்லும் மாணவர்கள் மிகச் சிறிய வயதினராகவிருந்தனர். அதனாற்றான் மக்தப்களின் கற்றல் கற்பித்தல் முறை மாற்றப்பட வேண்டும்; அம்முறையின் பயனை அடைவதற்கு அங்கு கற்கும் மாணவர்களின் வயதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்தை விபுலாநந்தர் அங்கு வலியுறுத்திச் சொன்னார். மிக முக்கியமான கருத்தாக அது அமைந்திருந்தது. முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி, முஸ்லிம் பெண்கல்வி, மக்தப் கல்வி உள்ளிட்ட அவ்விழாவில் தெரிவிக்கப்பட்ட முக்கிய கருத்துக்கள் நிச்சயம் ஷாபிமரிக்காரின் சிந்தனையைக் கிளறிவிட்டிருக்கும்; அவரின் பிற்காலக் கல்வி முயற்சிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கும்.

தனது பட்டப்படிப்பை 1945இல் முடித்துக் கொண்ட ஷாபிமரிக்கார் 1947இல் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டக்கற்கையை ஆரம்பித்தார். அப்போதுதான் தர்காநகர் ஸாஹிறாக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்குமாறு அவருடைய ஆசான் ரி.பி. ஜாயாவிடமிருந்து அவருக்கு அழைப்புக்கிடைத்தது. உதாசீனம் செய்ய முடியாத அந்த அழைப்பை ஏற்று சட்டப் படிப்பை இடைநிறுத்தி விட்டு தர்காநகர் ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்கச் சம்மதித்தார். சமுதாயத்துக்கான அவரின் கல்விப் பயணத்தின் ஆரம்பமாக ஜாயாவின் அவ்வழைப்பு அமைந்திருந்தது. ஜாயாவை உதார புருஷராக, வழிகாட்டியாகக் கொண்ட ஷாபிமரிக்காரின் கல்விப் பயணம் பல கரடுமுரடான பாதைகளைக் கடந்து அவரின் மரணபரியந்தம் ஜாயாகாட்டிய வழியில் தொடர்ந்தது.

1.4 முஸ்லிம் லீக்கின் முக்கிய செயற்பாட்டாளர்

ஷாபிமரிக்கார் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் மேல் வகுப்புகளில் கற்றுக் கொண்டிருந்த போதும், பல்கலைக்கழக மாணவனாக இருந்த போதும், பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய பின்னரும் அக்காலத்தில் மிகு கீர்த்தியுடன் விளங்கிய அகில இலங்கை முஸ்லிம் லீக்குடன் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார். அவரின் மரண பரியந்தம் இத்தொடர்பு நின்று நிலைத்தது. ரி.பி. ஜாயா, டாக்டர் எம்.ஸி.எம்.கலீல், அட்வகேட் ஏ.எம். அமீன், ஏ.எல்.எம். ஹாஷிம் ஆகியோருடனான அவரின் தொடர்புகளும் இதனால் நெருக்கமடைந்தன.

'யங் முஸ்லிம் லீக்' 1924இல் எஸ்.ஏ. மரிக்காரைத் தாபகத்தலைவராகக் கொண்டு உருவானது. 'யங் முஸ்லிம் லீக்'கின் 'படிப்பு வட்டத்'திலிருந்து (Stydy Circle) 'முஸ்லிம் லீக் சென்ட்' 1935இல் தொடக்கம் பெற்றதாக

அறியப்படுகிறது. அப்போது ரி.பி. ஜாயா 'யங் முஸ்லிம் லீக்'கின் தலைவராகவிருந்தார். 'யங் முஸ்லிம் லீக்', பின்னர் 24.07.1938இல் 'இலங்கை முஸ்லிம் லீக்' என மறுநாமம் பூண்டது. பல்கலைக்கழகம், சட்டக்கல்லூரி, மருத்துவக் கல்லூரி, சுதேச வைத்தியக் கல்லூரி, தொழினுட்பக் கல்லூரி, அரசினர் பயிற்சிக் கல்லூரிகளில் பயின்று கொண்டிருந்தோரும் பிரபல பாடசாலைகளில் உயர் வகுப்புகளில் கற்றுக் கொண்டிருந்தோரும் ஒன்றுகூடும் மத்திய நிலையமாகவும், நகர மாணவர்களும் பிரதேச மாணவர்களும் சங்கமிக்கும் நிலையமாகவும் 'முஸ்லிம் லீக் சௌட்' அப்போது விளங்கியது. விவாதங்கள், சொற்பொழிவுகள், ஒன்று கூடல்கள், சுற்றுலாக்கள், பாராட்டு வைபவங்கள், பிரிவுபசார நிகழ்வுகள், நினைவு கூரல்கள் என்பன சௌட்டின் முக்கிய நிகழ்வுகளாகவிருந்தன. இலங்கை முஸ்லிம் வாலிபர்களின் முதன்மையான விவாத, கலாசார, இலக்கிய மன்றமாக அது செயற்பட்டது. அது அரசியல் இயக்கமாக இல்லாவிட்டாலும் அரசியல் பிரச்சினைகளும் கலந்துரையாடப்பட்டன. முஸ்லிம் லீக் சௌட்டின் முதலாவது தலைவராக (1935) எம்.ஏ.சி.ஏ. சாலி விளங்கினார்.



இலங்கை முஸ்லிம் லீக் சௌட் புதிய டாக்டர்கள், சட்டத்தரணிகளுக்குப் பாராட்டும், லண்டன் செல்லவிருந்த செயலாளருக்குப் பிரிவுபசாரமும் வழங்கியது. ஷாபிமரிக்கார் இடமிருந்து வலம் 13ஆவதாக அமர்ந்திருக்கிறார்

பிரித்தானிய பாராளுமன்ற முறையில் முஸ்லிம் லீக் சௌட் செயற்பட்டது. எம்.பி. நூர்தீன், எம்.எச்.எம். நெய்னா மரைக்கார், ஓ.எல். எம். இஸ்மாயில், எச்.எல்.ஏ. சலீம், எம். மஹ்ரூப், எ.எம்.எ. அஸீஸ், எம். ஆர். அபூபக்கர், பழீல் ஏ. கபூர், எம்.எம். அப்துல் காதர், டாக்டர் எம்.ஐ.எம். நிலார், எம்.ஏ. கரீம், எம்.எச். சூபி இஸ்மாயில், எம்.எச். ஆமித், டாக்டர் எம்.எச்.எம்.இல்யாஸ், டாக்டர் எம்.எஸ்.எம். றம்ஸீன், ஏ.எல்.எம்.ஹாஷிம், எஸ்.எஸ். இஸ்ஸதீன் போன்றோர் முஸ்லிம் லீக் சௌட்டின் முக்கிய செயற்பாட்டாளர்களாக இருந்திருக்கின்றனர்.

முஸ்லிம் லீக் சௌட் பாராளுமன்றத்தின் ஒக். 1945 – மார்ச் 1946 வரையிலான காலப்பகுதிக்கு எம்.ஏ. பாக்கீர் மாக்கார் பிரதமராகவிருந்தபோது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் செயற்பட்டார். அதே அமைச்சரவையில் எம்.எம். முஸ்தபா, அட்வகேட் ஏ. எம். அமீன் ஆகியோரெல்லாம் அமைச்சர்களாகவும், எம்.எச். ஆமித் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கின்றனர். இவர்களெல்லாம் பிற்காலத்தில் மிகவும் பிரக்கியாதி பெற்றவர்களாக விளங்கினர். எம்.



இலங்கை முஸ்லிம் லீக் சென்ட் செயற்குழு - 1946/47

எம். முஸ்தபா 1946 செப். – 1947 மே காலத்தில் முஸ்லிம் லீக் சென்ட்டின் அமைச்சராக இருந்திருக்கிறார். இந்த வரலாற்றுப் பயணத்தில் தடம்பதித்த இன்னுமொரு முக்கிய வருடம் 1946/47. இவ்வருடத்திற்கான முஸ்லிம் லீக் சென்ட்டின் தலைவராக அட்வகேட் ஏ.எம். அமீனும் செயலாளராக எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும் செயற்பட்டனர். பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு இளம் பட்டதாரியாக வெளியேறிய ஷாபிமரிக்காரின் திறமையான செயற்பாடுகள் முஸ்லிம் லீக் சென்ட்டை உயிர்த்துடிப்புள்ள தாக்கிற்று.

ஷாபியின் முயற்சியில் 23.02.1947இல் மீள்-ஐக்கிய இராப்போசன வைபவமொன்று கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முஸ்லிம் லீக் சென்ட் தலைவர் அட்வகேட் ஏ.எம். அமீனின் தலைமையில் நடைபெற்ற அவ்வைபவத்திற்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் ரி.பி. ஜாயா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இலங்கைப் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏ.எம்.கே. குமாரசுவாமி, கொழும்பு அரசினர் பயிற்சிக்கல்லூரி அதிபர் ஈ.சி.ரி. ஹொல்சிங்கர், கலாநிதி எஸ்.ஏ. இமாம், எஸ்.எச். மூஸாஜி முதலானோரும் அவ்வைபவத்தில் பங்கேற்றனர். 'Ceylon Muslim League Senate' என்ற மகுடத்தில் நூலொன்றும் வெளியிடப்பட்டது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, சேர் முஹம்மட் மாக்கான் மாக்கார், ரி.பி. ஜாயா, டாக்டர் எம்.ஸி.எம். கலீல், ஜீ.ஜீ. பொன்னம்பலம், அட்வகேட் ஏ.எம். அமீன், அட்வகேட் எம்.எம். அப்துல் காதர், எ.எம்.எ. அஸீஸ், பழீல் ஏ. கபூர், எம்.ஏ.ஸி.எம். சாலி ஆகியோரின் முஸ்லிம் லீக் சென்ட் பற்றிய செய்திகளுடனும் வாழ்த்துக்களுடனும் இந்நூல் வெளிவந்தது. முஸ்லிம் லீக் சென்ட் நிகழ்ச்சிகளின் பதிவேடாக வெளிவந்த அந்த நூலின் வெளியீட்டிற்காக 1946/47 வருடத்திற்கான 'சிலோன் முஸ்லிம் லீக் சென்ட் ஹவுஸ் கொமிட்டி' பாராட்டுக்குரியது. அதன் செயலாளர் ஷாபிமரிக்காரும் பாராட்டப்பட வேண்டியவர். மருதானை 96, தெமட்டகொட வீதியிலிருந்த 'லோகோ' அச்சகத்தில் இந்நூலை ஷாபிமரிக்கார் பதிப்பித்து வெளியிட்டிருந்தார். முஸ்லிம் லீக்கின் நிருவாகச் செயலாளராக, அதன்



முஸ்லிம் லீக் சென்ட் வெளியிட்ட நூல்

கல்வி விவகாரத்துக்குப் பொறுப்பான செயற்குழுவின் தலைவராக, அதன் உபதலைவராக, அனைத்துக் கட்சிகள் மாநாட்டின் முஸ்லிம் லீக்கின் பிரதிநிதியாகவெல்லாம் ஷாபிமரிக்கார் முஸ்லிம் லீக்கின் செயற்பாட்டில் பங்கு கொண்டவரென்பதும் கவனத்திற்குரியது.

1.5 சமூகப் பணியும் உதார பண்புகளும்

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்ட ஷாபி சமூகப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பேருவலையில் முஸ்லிம் மாணவர் இயக்கம் ஒன்றைத் தொடங்கினார். அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 'முஸ்லிம் மாணவர் கடமை' என்ற தலைப்பில் அவர் முக்கிய உரையொன்றை ஆற்றினார். பாக்கீர் மாக்காரும் அங்கு உரை நிகழ்த்தினார். அம்மாணவர் இயக்கத்தின் முதலாவது தலைவராகவும் ஷாபிமரிக்காரே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (தினகரன் - 01.05.1947)

> "பேருவலை முஸ்லிம் மாணவர் இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற ஈதுல் பித்ர் பெருநாள் விருந்துபசாரத்தில் ஏராளமான முஸ்லிம்களும் பல்வேறு வகுப்பினரும் கலந்து கொண்டனர். அச்சமயம் நடைபெற்ற கூட்டத்தில் பேருவலை மாணவர் இயக்கத்தின் தலைவர் ஜனாப் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், அர்பன் சபைத்தலைவர் ஜனாப் எஸ்.எம். ஜாபிர், ஸாஹிறாக் கல்லூரியைச் சேர்ந்த ஜனாப் ஏ.ஸி.ஏ. வதூத், அர்பன் சபை உப தலைவர் திரு. ஐ. மைக்கேல் பெர்னாண்டோ, திரு. வி. செல்லையா போன்ற பிரமுகர்கள் பலர் பேசினர்" (தினகரன் - 03.09.1947: 05)

என்ற தினகரன் செய்தி அம்மாணவர் இயக்கம் ஏற்பாடு செய்த 'ஈதுல் பித்ர்' பெருநாள் விருந்து வைபவத்தையும் அதில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களையும் அடையாளமிட்டுக் காட்டியது. கல்வியை சமூகமயப்படுத்த ஷாபிமரிக்கார் செய்த பிரயத்தனத்தையும் இச்செய்தி ஊகிக்கச் செய்கிறது.

பேருவலை முஸ்லிம் மாணவர் இயக்கத்தின் 2ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் ஷாபிமரிக்காரின் தலைமையில் 24.04.1949இல் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது, ஷாபிமரிக்கார், பாக்கீர் மாக்கார், எம்.எஸ். எம். சலீம், எம்.எஸ்.எம். வபா, ஜே.எம்.எம். ராஜி, ஏ.ஸி.எம். மஸூத், றாசிக் மரைக்கார் முதலானோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். உத்தியோகத்தர் தெரிவில் பாக்கீர் மாக்கார் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். (தினகரன் - 27.04.1949)

பேருவலை மருதானை 'பர்பலி முஸ்லிம் கல்வி முன்னணி'யின் (Barbaly Muslim Education Front) தலைவராகவும் ஷாபிமரிக்கார் 1975களில்

செயற்பட்டார். பேருவலைப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து கல்வியில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற நோக்கில் இம்முன்னணியை ஷாபிமரிக்கார் 1975இல் எற்படுத்தினார். (ப.மு.க.மு. வெளியீடு 4/76). ஷாபிமரிக்காரின் தலைமையில் ஏ.ஜீ.எச். இஸ்மாயில் (உப தலைவர்), ஏ.டபிள்யு.எம். அஜ்வாத் (செயலாளர்), ஏ.ஏ.எம். சம்சுதீன் (பொருளாளர்), ஏ.ஸி.எம். நாசிக் (உப செயலாளர்), ஏ.எம். முஹம்மத் அலி, ஏ.எச். அப்துல்லா, எம்.எஸ்.எம். அன்வர், ஏ.எஸ்.எம். ஒமர், முஸம்மில் முஹம்மத், எம்.ஜே.எம். ஷம்ஸ்ல்மக்கி முதலானோர் இம்முன்னணியின் செயற்குழு உறுப்பினர்களாகச் செயற்பட்டனர். இல. 40 ஹேனவத்த வீதியை முகவரியாகக் கொண்டு இயங்கிய இம்முன்னணி பேருவலைப் பிரதேசத்தின் சகல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் உதவியிருக்கிறது. மாளிகாஹேன முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கும் மஹாகொட முஸ்லிம் வித்தியாலயத்திற்கும் இம்முன்னணி கிணறுகளை அமைத்துக்கொடுத்தது. வறிய மாணவர்களுக்கு 1976களில் இலவச பாட நூல்களையும் விநியோகித்தது.

> "1970ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரால் ஆரம்பிக்கப்பட்ட 'பர்பலி கல்விச் சங்கம்' இப்பாடசாலைக்கென (பேருவலை மாளிகாஹேன முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கென) பல முன்னேற்றமான வேலைத்திட்டங்களை முன்வைத்தது" (இஸ்மாயில் ஏ.ஜீ.எச்., தினகரன் - 26.07.2001)

என்று பேருவலை மாளிகாஹேன முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் பவளவிழாவை ஒட்டி, 'கல்வியின் ஒளிவிளக்காய்ப் பிரகாசிக்கும் மாளிகாஹேன முஸ்லிம் மகா வித்தியாலயம்' என்ற தலைப்பில் தினகரனில் 26.07.2001இல் எழுதிய கட்டுரையில் கலாநிதி ஏ.ஜீ.எச். இஸ்மாயில் குறித்து வைத்திருப்பது ஷாபிமரிக்காரின் 'பர்பலி முஸ்லிம் கல்வி முன்னணி'யின் கல்விச் செயற்பாடுகள் பற்றி எம்மை ஊகிக்கச் செய்கின்றது. ஷாபிமரிக்காரின் மறைவுடன் இம் முன்னணியும் செயலற்றுப்போனது.

ஜாயா காலத்தில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆங்கில இலவச இரவுப் பாடசாலையின் ஆசிரியராக, அதன் தலைமை ஆசிரியராக (02.05.1943 - 30.10.1945), கொழும்பு - 12 ஹமீதியா ஆங்கில ஆண்கள் பாடசாலையின் ஆசிரியராக (1946/47) வெல்லாம் ஷாபிமரிக்கார் கல்விப் பணி செய்திருக்கிறார். அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் நிருவாகச் செயலாளராக (1945 - 1946), அதன் கல்வி விவகாரத்துக்குப் பொறுப்பான நிருவாக சபையின் தலைவராக (01.01.1962இலிருந்து), ரி.பி. ஜாயா ஞாபகார்த்த நிதியத்தின் பொதுச் செயலாளராக (1962 - 1984),

சர்வகட்சி மாநாட்டின் முஸ்லிம் லீக் பிரதிநிதியாக (1983 / 84), முஸ்லிம் லீக் உபதலைவராக (1992இலிருந்து), பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை அங்கத்தவராக (1970இலிருந்து), கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் ஏற்பாட்டில் நிகழ்ந்த சர்வதேச மாநாட்டு ஏற்பாட்டுக் குழுத்தலைவராக (1977), கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி நலன்புரிச் சங்கத்தின் நிருவாகக்குழு அங்கத்தவராக, அதன் உப தலைவராக (1983இலிருந்து), கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க உப காப்பாளராக (1990இலிருந்து), கொழும்பு-3 றண்முத்து ஹோட்டலில் இயங்கிய சர்வதேச இஸ்லாமிய நிலையத்தின் (இலங்கை) உப தலைவராக, இலங்கை-பாக்கிஸ்தான் நட்புறவுச் சங்கத்தின் உப தலைவராக (1981-1992) வெல்லாம் முஸ்லிம் கல்வி, சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி இயங்கியவர் ஷாபிமரிக்கார். அளுத்கம ஸாஹிறாக் கல்லூரி அதிபராக (01.07.1948-31.12.1961), கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி அதிபராக (01.01.1967-30.06.1982), அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவராக (25.09.1964-24.09.2005) வெல்லாம் அவர் செய்த கல்வி சமூகப் பெரும் பணிகளின் கனதியையும் முஸ்லிம் சமூகம் நன்கறியும். அவரின் அப்பாரிய பணிகள் முஸ்லிம் சமூக, கல்வி வரலாற்றின் பதிவுகளாகிவிட்டன.

ஜாயா அதிபராகவிருந்தபோது கொழும்பு ஸாஹிறாவில் கற்று, ஜாயா ஆரம்பித்த அளுத்கம ஸாஹிறாவில் ஜாயாவின் வேண்டுகோளின் பேரில் அதிபராகி, ஜாயா அதிபராகவிருந்து கட்டியெழுப்பிய கொழும்பு ஸாஹிறாவின் அதிபருமாகி, ஜாயா தலைமைவகித்த முஸ்லிம் லீக்கிலும், அவர் கரிசனை காட்டி வளர்த்தெடுத்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டிலும் தன்னை ஈடுபடுத்தி, ஜாயா வழிநின்று முஸ்லிம் கல்வி சமூகப்பணி செய்தவர் ஷாபிமரிக்கார். 60 வருடங்களாகத் தொடர்ந்த அவரின் கல்வி சமூகப் பணிகளை பேருவலை மட்டுமன்றி முஸ்லிம் சமூகமும் நாடும் பெற்றுப் பயனடைந்தது.

எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், எம்.ஏ. பாக்கீர் மாக்கார் இருவரும் இரு சகோதரர்களின் புதல்வர்கள்; ஏ.டபிள்யூ.எம்.றாசிக் மரைக்கார் அவர்களின் சகோதரியின் மகன். மூவரும் சென். செபஸ்தியன் பாடசாலையிலும் கொழும்பு ஸாஹிறாவிலும் ஏறக்குறைய சமகாலத்தில் படித்தவர்கள். இருவர் சட்டத்தரணிகளாகி அரசியல்வாதிகளாகப் பிரகாசித்தனர். ஷாபிமரிக்கார் கல்விமானாகி பிரக்கியாதி பெற்றார்.

ஷாபி பண்பின் இலக்கணமாக, நேர்மையின் இருப்பிடமாக சமூக உணர்வின் உறைவிடமாகத் திகழ்ந்தவர். முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாடொன்றையே தன் இலட்சியமாகக் கொண்டவர். சமூகத்தின் கல்வி

மேம்பாட்டுக்காக கட்சி பேதங்களுக்கப்பால் சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும், கல்வி நிருவாகிகளையும் ஒன்று திரட்டி சாதனைகள் புரிந்த அவர் தனக்காக எந்த ஓர் அரசியல்வாதியையும் நாடியது கிடையாது. திருமணம் செய்வதைக்கூட காலம் தாழ்த்திவிட்டு தேசத்தினதும் முஸ்லிம் சமூகத்தினதும் கல்விக்கு தன்னை முற்றாகவே அர்ப்பணித்து வாழ்ந்தவர் அவர். தனக்கென ஒருகார்கூட அவரிடமிருக்கவில்லை. பஸ்ஸில் அல்லது புகையிரதத்தில் தான் அவர் பயணம் செய்வார். வெளிநாடொன்றுக்கும் அவர் பயணம் செய்தது கிடையாது.

உறவுகளையும் நட்புகளையும் சிறப்பாகப் பேணியவர் அவர். அல்லாப்பிச்சையின் திருமணத்துக்கு மன்னாருக்குச் சென்றார். மௌலவி காசிமைக் காண பொத்துவிலுக்கும் என்னையும் என் குடும்பத்தையும் காண நிந்தவூருக்கும் தன் மனைவி சகிதம் வருகை தந்து மகிழ்வித்தவர் அவர். என்னுடைய 'அஸீஸும் தமிழும்' நூல் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிக் கபூர் மண்டபத்தில் 20.07.1991இல் வெளியிடப்பட்டபோது அதிலும் கலந்து நிகழ்வுக்குப் பெருமைசேர்த்தார். நான் என்னுடைய ஸாஹிறாக் கல்லூரிக் காலத்தில் அவருடன் பணிசெய்த போதும், அவர் நீங்கிச்சென்றபின் தன்னந்தனியனாக ஸாஹிறாவில் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தபோதும், அரசாங்க சேவையில் இணைந்து கொண்டபோதும், தொழிலில் சிறப்புற்றபோதும், பதவி உயர்வுகளைப் பெற்றபோதும் அவரின் ஆறுதல் வார்த்தைகளும் வாழ்த்துரைகளும் எனக்குத் தெம்பு தந்தன; உற்சாக மூட்டின. என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவரின் கரிசனை வியாபித்து நின்றது. பாக்கீர்மாக்காரில் அவருக்கு அதீத அக்கறை. அவரின் மரணச் செய்தியை எனக்கு எத்திவைத்தவரும் அவர்தான்.



'அஸீஸும் தமிழும்' நூல் வெளியீட்டையொட்டி 2.7.1991இல் நிகழ்ந்த விருந்துபசார நிகழ்வில் ஷாபிமரிக்கார்

கப்பல் துறை, துறை முகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் புனர்வாழ்வுப் பணிப்பாளராக நான் பணிசெய்தபோது பண்டரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 12.12.1996இல் என்னால் எற்பாடு செய்யப்பட்ட இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான 'கல்விச் சுபீட்ச சகாயநிதி'த்திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட ஷாபி மரிக்கார் மறுதினமே, 13.12.1996இல் எனக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் வாசகங்கள் இதற்குச் சான்றாதாரமாகும். அவ்விழா ஏற்பாடு பற்றி, அங்கு



S, L. M. Shafie Marikar, F G 2 Galkissa Housing Scheme, Kaldemulla Road, Mt Lavinia.

ACMEC Office,
30, Hospital Street,
Colombo-1.

Phone : 433439

December 13, 1996

A. M. Nahiya Esq.
Director, Rehabilitation
Ministry of Plan, Port, Rec. &
Co. - 89 York Street,
Colombo - 1

Dear Mr. Nahiya

Congratulations on Rehabilitation of Borbeldeniya!
Hearty congratulations and all good wishes on the successful function so ably arranged by you last evening. It was really dignified function and thoughtful - in that you were able to get the influential and thoughtful - in terms of publicity, the displaced Muslim persons to the community of publicity, the displaced Muslim persons to the community of fellowship, I am sure the Muslim officials see the point and they will shelter. I am sure the Muslim officials see the point and they will shelter. Thank you for the honour you have by asking me to give away one of the awards to the successful students.

We are having an unpaid meeting on Sunday, 15th at 9.30 at Zahira College. Hope you have received the notice. Your presence is very important.

Thanks also for so kindly granting a rebate to Longrice Lane. Alegan and I travelled first and in one week to discuss some matters. We are deeply concerned about your planning ahead. So please do make up your mind and don't delay. Life is not perfect always, decide and act quickly. Life is not perfect always.

They always believe those who make you effort for them.

Have the Evening and the movie.

Yours sincerely,

P.S. Please also congratulate on the beautiful job well done. Someone should see the photos. This young dynamic Engineer deserves this opportunity.

(S.L.M. Shafie Marikar)

என்னால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் பற்றி, என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றியெல்லாம் ஷாபி அக்கடிதத்தில் எழுதியிருந்தார்.

ஷாபிமரிக்கார் அதிபராக விருந்த போது தனக்கென வசதிகளுடன் கூடிய ஒரு வீட்டைக் கல்லூரி நிருவாகத்திடம் கேட்டுப் பெற்றிருக்கலாம். அவ்வாறு எதையும் தனக்காகக் கேட்கும் துணிவும், பண்பும் ஷாபிமரிக்காருக்கு இல்லை என்பதை பள்ளிவாசல் நிருவாகம் அறியும் திராணியற்றிருந்தது. கல்லூரி வளாகத்தில் சிறுவர் விடுதியுடன் இணைந்திருந்த எவ்வித வசதிகளுமற்ற ஓர் அறையில் மிக்க சிரமத்துடன் அவர் வாழ்ந்து கொண்டிருந்தார். அதைக்கூட பள்ளிவாசல் நிருவாகம் அப்போது கண்டு கொள்ளவில்லை. அவருடைய சம்பளம் நானறிந்தவரை தொடர்ச்சியாக 1750/= ரூபாவாகவே இருந்தது. அதையும்கூட பள்ளிவாசல் நிருவாகம் உணரத் தவறியிருந்தது. ஷாபியும் அதைப் பள்ளிவாசல் நிருவாகத்தினருக்கு நினைவூட்டவோ அதிகரித்துக் கொள்ளவோ எவ்வித முயற்சிகளையும் செய்யவில்லை. ஸாஹிறாவின் சொத்துக்களைக் கையாள்வதில் ஷாபிமரிக்கார் மிக்க கண்ணியத்துடன் நடந்து கொண்டமைக்கு உயிர்வாழும் சாட்சியாக நானிருக்கிறேன்.

அதிபருக்குரிய இலட்சணங்களின் முழு வடிவமாக ஷாபி வாழ்ந்தார். பாடசாலை வேளைகளில் அவரை சாதாரண உடையில் நான் கண்டதே இல்லை. வெள்ளை சூட்டுடன் தொப்பியும் அணிந்து அவர் தினமும் கடமையில் இருப்பார். அவரின் கல்விச் செயற்பாடுகளில் கல்வி உளவியல் அம்சங்கள் புதைந்து கிடந்தன. அரசியல் பேதங்களுக்கப்பால் சகல அரசியல் தலைவர்களையும், கல்வி நிருவாகிகளையும் ஒன்று திரட்டி சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கு அவர் கொடுத்த சமூகத் தலைமையை இன்று நான் நினைத்துப் பார்க்கிறேன். அத்தகைய தலைவரொருவர் இன்றில்லை. ஷாபிமரிக்கார் வாழ்ந்த காலத்தில் ஷாபிமரிக்கார் இல்லா

திருந்திருந்தால் முஸ்லிம் சமூகம் கல்வித்துறையில் பலவற்றை இழந்திருக்கும். முஸ்லிம் கல்வி என்றால் அது ஷாபிமரிக்கார்தான் என்ற நிலையில் தன் வாழ்வை அமைத்துக் கொண்ட பெரும் கல்விமான், சமூகத் தியாகி அவர்.

ஹஜ் யாத்திரை மேற்கொள்ள இலவச பயணச்சீட்டொன்றை ஷாபிமரிக்காருக்கு வழங்கிவிட பெரும்பிரயத்தனம் செய்த அன்றைய முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரின் முயற்சி தோல்வியில் முடிந்ததை யானறிவேன். தான் தேடிய பணத்தில்தான் தனது முதலாவது ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தவர் ஷாபி. அதேபோல், 'தேசமான்ய' என்ற அரச உயர் விருதுக்காக ஷாபிமரிக்காரின் பெயரையும் ஆனந்தாக் கல்லூரி அதிபராகவிருந்த கேணல் ராஜபக்ஷவின் பெயரையும் அமைச்சராகவிருந்த இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் சிபாரிசு செய்து ஜனாதிபதியின் அங்கீகாரமும் கிடைத்த பின்பு அதை ஏற்க மறுத்துவிட்ட பெருமைக்குரிய பெருமனிதரும் அவர்தான். இம்தியாஸின் சிபாரிசின் பேரில் தனக்கு தேசமான்ய கிடைத்ததால் அதை கேணல் ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டார். அதையிட்டு அவர் இம்தியாஸுக்கு ஒரு கடிதமும் அனுப்பியிருந்தார். ஷாபிமரிக்கார் வெறும் புகழை விரும்பாதவர். நாடும் சமூகமும் தனக்காக வாழ்வதாக எண்ணாமல் நாட்டுக்காகவும் சமூகத்துக்காகவும் வாழ்ந்து காட்டிய கனவான் அவர்.

ஸாஹிறாக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றபின் தனக்கென்று சொந்த வீடொன்றில்லாமல் தன்னுடைய நண்பன் மௌலவி ஏ.எல்.எம். காசிமின் கல்கிஸ்ஸை பீரிஸ் றோட்டில் (இல. 10) அமைந்திருந்த வீட்டில் சிலகாலம் வாழ்ந்தார் ஷாபி. பின்னர் இரத்மலானை கல்தமுல்ல வீதியில் அமைந்துள்ள கல்கிஸ்ஸை அரசாங்க மாடிமனைத் தொகுதி வீடொன்றில் (இல. F G.2) சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தார். அந்த வீட்டை அவர் பெற்றதும் ஒருகதை. தனது ஒன்று விட்ட சகோதரன் பாக்கீர் மாக்காரும் அவரின் மகன் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் அரசாங்கத்தில் செல்வாக்குட னிருந்த காலம் அது. இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வீடமைப்பு இராஜாங்க அமைச்சராகவிருந்த காலமும் அதுதான். தனக்கு ஒரு வீட்டைப் பெற்றுத் தருமாறு பாக்கீரையோ, இம்தியாசையோ ஷாபி கேட்டது கிடையாது. ஷாபிக்கு வீடொன்றைப் பெற்றுக் கொடுக்க இம்தியாசை நினைவூட்டு மாறு ஒரு தடவை என்னிடம் பாக்கீர் சொன்னதுண்டு. நான் அதை இம்தியாஸுக்கு அப்போதே எத்திவைத்திருந்தேன். ஏற்கனவே ஏற்பட்டிருந்த பிரேமதாஸ-ஷாபி மனக்கசப்பு ஷாபியின் வீடுபற்றி பிரேமதாஸாவிடம்

பிரஸ்தாபிக்க முடியாமல் இம்தியாஸைத் தடுத்தது. ஆயினும் தனது ஒன்று விட்ட சகோதரனின் நிலையை உணர்ந்த பாக்கீரின் முயற்சியில் ஷாபி ஒரு வீட்டைப் பெற முடிந்தது. பாக்கீர் மாக்காரின் கடிதத்துடன் பிரேமதாஸவை நேரடியாக அணுகி கல்தமுல்ல அரசாங்க வீடமைப்புத் திட்டத்தில் வீடொன்றை ஷாபிக்கென ஒதுக்கிக் கொடுப்பதில் அப்போதைய பாக்கீர்மாக்காரின் பிரத்தியேகச் செயலாளர் ஏ.எச்.எம். அஸ்வரின் சிரத்தைக்கும் பங்குண்டு. இந்த ஹல்தமுல்ல வீடு கூட பிரதான பாதையிலிருந்து நீண்டதூரம் உள்ளே அமைந்திருந்தது. இடவசதியற்ற வீடாகவுமிருந்தது. ஆயினும் அங்கும் சில வருடங்களை ஷாபி கழிக்க வேண்டியிருந்தது. அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடும் இதனால் அவதியுற்றது.

ஸாஹிறாக் கல்லூரியில் ஷாபியின் அதிபர் மகுடத்தில் கல்வி கற்ற தாராளமனம் படைத்த பழைய மாணவர் குழுவொன்று இதைத் தாங்கமாட்டாது இச்சங்கடத்திலிருந்து தம் அதிபர் ஷாபிமரிக்காரை மீட்டெடுக்கப்புறப்பட்டது. இம் முயற்சியில் ஷாபியின் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மாணவனும் 'ஹமீதியாஸ்' நிறுவன உரிமையாளருமான பௌசுல் ஹமீதின் முயற்சி குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது. பௌசுல் ஹமீதின் தாய் ஷாபிமரிக்கார் அதிபராகவிருந்த போது அளுத்கம ஸாஹிறாவில் கற்றவர். ஷாபிமீது அன்பும் பாசமும் கொண்டவர். அவரை நினைத்து சில அன்பளிப்புகளை தன்மகன் பௌசுல் ஹமீதினூடு அவருக்கு அடிக்கடி அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்தது. இரத்மலானை கல்துமுல்லை வீதி வீடமைப்புத் திட்டத்தில் ஷாபி வாழ்ந்து கொண்டிருந்தபோது பௌசுல் ஹமீத் தன் தாய் ஷாபிமரிக்காருக்காகக் கொடுத்துவிட்ட அன்பளிப்புப் பொருள்களுடன் ஷாபியைச் சந்திக்க நேரடியாகச் சென்றபோது தன்னை அறியாமலே தன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்ததாக அவர் என்னிடம் தெரிவித்தார். அன்றே ஷாபிக்கு தகுதியான வீடொன்றை அன்பளிப்புச் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தைத் தன்னுள்ளே எடுத்து அதற்காகச் செயற்படத் தொடங்கியதாகவும் அவர் எனக்குக் கூறினார். தன் மாமியாருக்கென அன்டர்சன் வீதியில் ஏற்கனவே கொள்வனவு செய்த 12 பர்சர்ஸ் காணியில் 6 பர்சர்ஸ் காணியை ஷாபியின் வீட்டு நிர்மாணத்துக்காக ஒதுக்கினார். எம்.எஸ்.எம். நியாஸ் போன்ற நல்லெண்ணம் கொண்ட நண்பர்கள் பலரையும் இணைத்துக் கொண்டு செயற்படத் தொடங்கிய பௌசுல் ஹமீத், வீட்டை நிர்மாணித்து ஷாபியையும் அவரின் குடும்பத்தினரையும் அவ்வீட்டில் குடியமர்த்தி மகிழ்ச்சியடைந்தார். இந் நன்முயற்சியில்

சம்பந்தப்பட்ட அனைவரையும் இந்நாட்டு முஸ்லிம் சமூகம் என்றென்றும் நினைகூரும்.

இம்முயற்சியில் தற்காலிகத் தடங்கலும் தாமதமும் ஏற்பட்ட போது சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நிதி சேகரிப்பை நிறுத்துமாறும் சேகரிக்கப்பட்ட நிதியை வறிய மாணவர்களின் கல்வி போதனைகளுக்காகப் பயன்படுத்துமாறும் ஷாபி கூறியதாக எம்.எஸ்.எம். நியாஸ் என்னிடம் தெரிவித்தபோது என் கண்களும் என்னையறியாமலே கண்ணீரைத் துளிர்த்தன. இத்தகைய மானிடனை இவ்வுலகில் காண்பது அரிது. அது என் துணிபு. ஆயினும், அக்குழுவினர் தடங்கல்களையெல்லாம் கடந்து, தம் பணியை முன்னெடுத்து, அக் கல்விமானுக்குச் செய்ய வேண்டிய தம் கடமையைச் செய்து முடித்தனர். இப்பெருமனம் கொண்ட பௌசுல் ஹமீத் அவர்களே கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் இன்றைய ஆளுநர் சபைத் தலைவராகவிருக்கிறார். ஷாபியிடம் கற்றவர்களே இன்றைய ஆளுநர் சபையில் பெரும்பான்மையினராக விருந்து கொழும்பு ஸாஹிறாவின் நிருவாகத்தைச் செய்கின்றனர். தலைசிறந்த கல்லூரியொன்றின் முகாமை யாளர்களாக அவர்கள் விளங்குகின்றனர். அவர்களில் அநேகர் என்னுடைய மாணவர்களே என்பது எனக்கும் திருப்தி தருகிறது.

ஷாபி கரம்பிடித்த கைறுன்னிஸா சல்தீன் ஸாஹிறாவில் கற்பித்துக் கொண்டிருந்தபோதே ஷாபியைத் திருமணம் செய்து கொண்டார். அவர் ஒரு சட்டப்பட்டதாரி; சட்டத்தரணியும் கூட. கணவனின் வழியில் கல்வி, தொழிற்சங்க நடவடிக்கைகளில் இன்றுவரை தன்னை ஈடுபடுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அவர்களின் ஒரேயொரு மகன் அப்துல் அஹத் சென். தோமஸ் தொடக்கப்பள்ளியிலும் (கொள்ளுப்பிட்டி), பின்னர், கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியிலும் கற்று மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டத்தைப் பெற்றவர். ஷாபிமரிக்காரின் உயர் பண்புகளின் உயிர்வாழும் சின்னமாக அப்துல் அஹத் விளங்குகிறார். கொள்ளுப்பிட்டி சென். தோமஸ் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த அப்துல் அஹதை தான் கற்ற கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில், அதிபராகவிருந்து கல்விப் பணி செய்த அதே ஸாஹிறாவில், உயர் வகுப்பில் சேர்த்துப் படிக்க வைத்து, தான் ஸாஹிறாவில் தொடக்கிவைத்த சிங்கள மொழி மூலக் கற்கை நெறியில் அவரையும் கற்க வைத்து, பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கும் அனுப்பிக் காட்டியவர் ஷாபி. ஷாபியைப் புரிந்துகொள்வதில் இவையெல்லாம் முக்கிய பதிவுகள். ஷாபியின் மேதைமையை, முஸ்லிம் கல்வி மேம்பாட்டுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அறிந்து கொள்வதற்கு முன்னோடியாக அவரைப் புரிந்து கொள்வதற்கான சில தகவல்களாக இவை அமைகின்றன.

2 அளுத்கம ஸாஹிறாவின் சிற்பி

முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சியாளர்களால் 1892இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி 1921இல் ஜாயா அதிபரான பின்னரே துரிதமாக வளர்ச்சியடைந்ததைப் போல, கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் கிளைப் பாடசாலையாக 1942இல் ரி.பி. ஜாயாவினால் ஆரம்பிக்கப்பட்ட அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியும் 01.07.1948இல் ஷாபிமரிக்கார் அதிபரான பின்னரே அபிவிருத்தியை நோக்கிய தனது அவசரப் பயணத்தை ஆரம்பித்தது.

இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகி 1942இல் இலங்கையும் ஜப்பானியரின் குண்டு வீச்சுக்கு இலக்காகிய போது யுத்தபீதியினால் கொழும்பு செயலிழந்து கிடந்தது. அரசாங்கசபையின் தீர்மானத்தின்படி கொழும்பு நகரப் பாடசாலைகள் மூடப்பட்டன. ஸாஹிறாக் கல்லூரியும் 27.02.1942 - 05.04.1942வரை மூடப்பட்டது. இக்காலத்தில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்த ரி.பி. ஜாயா கொழும்பில் மையப்பட்டிருந்த முஸ்லிம் கல்வியை முஸ்லிம்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை நோக்கி நகர்த்தும் திட்டமொன்றை வகுத்து முன்னெடுத்தார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் பெற்றார்கள், பழைய மாணவர்கள், ஊர்ப் பிரமுகர்கள், செல்வந்தர்களின் உதவியுடன் அத்திட்டத்தை பிரதேசங்களில் ஜாயா செயற்படுத்தினார். அளுத்கம (7.5.1942), கம்பளை (15.5.1942), மாத்தளை (1944), புத்தளம் (21.02.1945), வேகந்தை (01.03.1945) முதலான இடங்களில் கொழும்பு ஸாஹிறாவின் கிளைப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. யாழ்ப்பாணத்தில் கிளைப் பாடசாலை அமைக்கும் ஜாயாவின் திட்டம் அந்நகர மக்களின் ஒற்றுமையின்மையினால் கைவிடப்பட்டது. கிளைப் பாடசாலைகளை அமைக்கும் ஜாயாவின் திட்டத்தின் கீழ் அமைவுற்ற முதலாவது பாடசாலை அளுத்கம தர்ஹா நகரில் ஆரம்பிக்கப் பட்டது. அப்பாடசாலை 01.06.1947இல் சுயாதீன பாடசாலையாகும் வரை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் என்ற வகையில் ரி.பி. ஜாயா

அதன் அதிபராகவிருந்தார். எம்.பி. நூர்தீன், எம்.எஸ்.எம். ஹத்தாத், திருமதி. எஸ். ஈபேர்ட், ரி.பி. லக்ஷானா ஆகியோர் முறையே உப அதிபர்களாகச் சேவை புரிந்தனர். அளுத்கம ஸாஹிறா, கிளைப் பாடசாலை என்ற நிலையிலிருந்து விடுபட்டு சுயாதீன பாடசாலை என்ற அந்தஸ்தைப் பெற்றபோது அதன் முதலாவது அதிபராக ரி.பி. லக்ஷானா அவர்கள் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் 01.07.1948இல் கல்லூரியைப் பொறுப்பேற்கும் வரை பணிசெய்தார். அக்கல்லூரி 21.08.1961இல் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும் வரை ஷாபியின் தலைமையில் அபாரவளர்ச்சி கண்டது. அக்கல்லூரியின் பொற்காலமாக அவரின் காலம் விளங்கியது.

ஜாயா இக்கிளைப் பாடசாலையை ஏற்படுத்திய போது ஏற்கனவே அங்கு சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்த அல்-ஹம்றா பாடசாலையின் வளர்ச்சி தடைப்பட்டுவிடுமோ என்ற அச்சம் அப்பிரதேச மக்களிடை இருந்தது.

> "அளுத்கமையில் ஸாஹிறாக் கல்லூரி உருவாவதை எ.எம்.எ. அஸீஸ் (சி.சி.எஸ்.) கடுமையாக எதிர்த்து நின்றார். அவ்வாறே அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் எந்த விதமான வைபவங்களிலும் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொண்டார்... அக்கால கட்டத்தில் அளுத்கமையில் அமைந்திருந்த முதல்தரமான முஸ்லிம் பாடசாலையாக அல்-ஹம்றா அரசினர் பாடசாலை விளங்கியது. எனவே, இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு ஸாஹிறாக் கல்லூரி முட்டுக்கட்டையாக மாறும் என நியாயம் கூறி, பின்தங்கிய பிரதேசமாகிய களுத்துறை அல்லது மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உருவாக்குமாறு ஜனாப் எ.எம்.எ. அஸீஸ் வாதிட்டார். ஆனால் அவரின் வாதம் அங்கு செல்லுபடியாகவில்லை. பின்னர் அவர் எடுத்தியம்பியதுபோல் அல்ஹம்றாவின் வளர்ச்சியும் தரமும் படிப்படியாகக் குறைய ஆரம்பித்ததை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஒரு கசப்பான உண்மையாக மாறிவிட்டது" (அமீன் முஹம்மத் எம்., தினகரன் - 09.08.1991).

என்று அமீன் முஹம்மத், 'அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் வரலாறு பற்றிய ஓர் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் தினகரனில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருப்பதும் அளுத்கம ஸாஹிறா பற்றிச் சிந்திக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு கருத்தாக அமைகிறது. இவற்றையெல்லாம மேவி அளுத்கம ஸாஹிறாக் கல்லூரி வளர வேண்டியிருந்தது.

2.1 ஸாஹிறா வளர்ந்த கதை

கிளைப்பாடசாலைகள் அமைக்கும் தனது திட்டத்தின் முதற்பாடசாலையை ஜாயா 7.5.1942இல் தர்ஹா நகரில் ஆரம்பித்தார். அளுத்கம வீதியில் அமைந்திருந்த அன்றைய அரசினர் இரு மொழிப் பாடசாலை வளாகத்தில் (இன்றைய அல்-ஹம்றா பாடசாலை வளாகத்தில்) 50 பிள்ளைகளுடன் பின்னேரப் பாடசாலையாக அப்பாடசாலை ஏற்படுத்தப்பட்டது. எம்.பி. நூர்தீன் பீ.ஏ. (லண்டன்) இப்பாடசாலையின் நிருவாகத்துக்குப் பொறுப்பான உதவி அதிபராக நியமிக்கப்பட்டார். கொழும்பு ஸாஹிறாவின் அதிபரென்ற வகையில் ஜாயா அவர்களே இப்பாடசாலைக்கும் அதிபராகவிருந்தார்.

> "Opened Aluthgama branch of Zahira College with a fully organised Kindergarten and working up to London Matriculation. Mr. M.B. Noordeen, B.A. (London) being directly responsible to me" (T.B. Jayah – A National Hero of Sri Lanka, 1996:38)

என்று ஜாயா தனது தினக்குறிப்பேட்டில் (07.05.1942) இது பற்றி எழுதி வைத்திருப்பது கவனத்திற்குரியது. ஏ.ஏ. ஹமீத் என்பவர் தனது வீடொன்றை இப்பாடசாலைக்கென வாடகைக்கு விட்டிருந்தார். அவரின் வளவில் எச். எம். காலித் என்பவரும் வேறு சில முஸ்லிம் பிரமுகர்களும் பண உதவி செய்து அமைத்துக் கொடுத்த இரு தற்காலிக கிடுகுக் கொட்டில்களுக்கு இப்பாடசாலை பின்னர் இடம்மாறியது. நூர்தீன் பாடசாலைப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதும், எம்.எஸ்.எம். ஹத்தாத் பீ.ஏ. (லண்டன்) 1943இல் இப்பாடசாலையின் உதவி அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் கொழும்பு ஸாஹிறாவின் பழைய மாணவர் என்பதும் ஜாயா காலத்தில் அக்கல்லூரியில் கற்பித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் பாடசாலைப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றபோது திருமதி. எஸ். ஈபேர்ட் (Mrs. S. Ebert) சிறிது காலம் கல்லூரியைப் பொறுப்பேற்று நடத்தினார்.

ரி.பி.எஸ். லக்ஷானா, 01.06.1944இல் இப் பாடசாலையின் உதவி அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் பயிற்றப்பட்ட ஆசிரியர். கொழும்பு ஸாஹிறாவின் மாணவனாகவும் ஆசிரியராகவும் இருந்தவர். 39 மாணவர்களே அப்போது அளுத்கம ஸாஹிறாவில் கற்றுக் கொண்டிருந்தனர். 5ஆம் வகுப்பு வரையே வகுப்புகள் நடைபெற்றன. நிரந்தர கட்டிடங்களை அமைத்தாலன்றி அப்பாடசாலையின் நிலையை உயர்த்த முடியாதென அவர் கருதினார். ஏ.எல்.ஏ. ஹமீத் மரைக்கார் நன்கொடை செய்த காணியில் 15.02.1945இல் புதிய கட்டிடத்துக்கான அத்திவாரக்கல் நடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் பாடசாலை 12.09.1945இல் அந்த வளவுக்கு இடம்

மாறியது. ஒக்டோபர் 1945இல் கல்வி அமைச்சர் சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா இப்புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார். ஐ.எல்.எம். மஹ்மூத் அவர்கள் இக்கட்டிட நிர்மாணத்துக்குக் கணிசமான பண உதவிகளைச் செய்தார். ஏ.ஆர். முஹம்மத், ஐ.எல்.எம். மஷ்ஹர், எச்.எம். காலித் போன்றோரும் இக்கட்டிடத்துக்கு அதிக உதவிகள் கிடைப்பதற்குப் பெரிதும் உதவினர். இதுவரை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் கிளைக் கல்லூரியாக இயங்கிய இப்பாடசாலை 01.06.1947இல் சுயாதீன பாடசாலையாக அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டபோதும் லக்ஷானா அவர்களே அச்சுயாதீன அளுத்கம ஸாஹிறாவின் முதலாவது அதிபராக விருந்தார். இப்பாடசாலை மீது ஜாயா கொண்டிருந்த அக்கறை இக் கல்லூரி சுயாதீனமாகியதும் மேலும் அதிகரித்தது. தகுதியும் சமூகத்தின் கல்வியில் அக்கறையுமுள்ள ஒருவரை அக்கல்லூரியின் தலைமைப் பதவிக்கு ஜாயா தேடத் தொடங்கினார். முஸ்லிம்களிடை பட்டதாரிகள் குறைவாகவிருந்த காலம் அது. சட்டம் பயின்று கொண்டிருந்த பீ.ஏ. பட்டதாரி ஒருவரை, எதிர்காலத்தில் மிகச் சிறந்த கல்விமானாகத் திகழப் போகும் ஒருவரை, கொழும்பு ஸாஹிறாவில் தன்னிடம் கற்று ஸாஹிறாவின் பாரம்பரியத்தைத் தெரிந்து வைத்திருந்த ஒருவரை, அப்பதவியை ஏற்கத் தகுந்தவரென ஜாயா இனம் கண்டார். அவர்தான் ஷாபிமரிக்கார். ஜாயா அவரை அளுத்கம ஸாஹிறாவின் அதிபர் பதவியை ஏற்குமாறு உரிமையுடன் அழைத்தபோது தனது சட்டக்கல்விக்கு முழுக்குப் போட்டுவிட்டு ஜாயாவின் விருப்பை நிறைவேற்ற அக்கல்லூரியின் அதிபர் பதவியை 01.07.1948இல் ஷாபிமரிக்கார் பொறுப்பேற்றார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் இயங்கிக் கொண்டிருந்த இலவச இரவுப் பாடசாலையின் ஆசிரியராக, அதன் தலைமை ஆசிரியராக, உயர் கல்விக்கான தேசிய நிறுவகத்தின் விரிவுரையாளராக, கொழும்பு ஹமீதிய்யா ஆங்கில ஆண்கள் பாடசாலையின் ஆசிரியராகவெல்லாம் ஏற்கனவே கற்பித்தல் அனுபவம் பெற்றிருந்த ஷாபிமரிக்கார் ஜாயா விடுத்த அழைப்பைத் துணிவுடன் ஏற்றுச் செயற்படத் தொடங்கினார். பாக்கிஸ்தானின் இலங்கைத் தூதுவராகச் செல்லவிருந்த ரி.பி. ஜாயா கொழும்பு ஸாஹிறாவின் அதிபர் பதவிக்குத் தகுதியானவராகத் தேர்ந்தெடுத்த எ.எம்.எ. அஸீஸ் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்த (21.08.1948-21.08.1961) சமகாலத்தில், அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியில் 01.07.1948 - 31.12.1961வரை அதிபராகவிருந்தவர் ஷாபிமரிக்கார். இவ்விருவரையும் இவ்விரு ஸாஹிறாக் கல்லூரிகளினதும் அதிபர்களாக்கியவர் ஜாயா அவர்களே.

2.2 ஷாபிகால துரித வளர்ச்சி

ஜாயா 01.09.1921இல் கொழும்பு ஸாஹிறாக்கல்லூரியைப் பொறுப்பேற்ற போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் போன்று அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியை ஷாபிமரிக்கார் பொறுப்பேற்றபோது, அவரும் பல பிரச்சினை களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. அக்கல்லூரியை விஸ்தரிப்பதற்கு இடவசதி இருக்கவில்லை. கட்டிடங்கள், தளபாடங்கள், வளங்கள் பற்றாக் குறையாகவிருந்தன. ஆயினும், பிரச்சினைகளையெல்லாம் எதிர்கொண்டு அளுத்கம ஸாஹிறா ஷாபிமரிக்காரின் தலைமையில் வளர்ச்சி நோக்கிய தனது துரித பயணத்தைத் தொடங்கியது. இரவு பகலாக அக்கல்லூரியின் முன்னேற்றத்துக்காக ஷாபிமரிக்கார் உழைக்கத் தொடங்கினார். அப் பிரதேசத்தில் வாழ்ந்த கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளை ஒன்றிணைத்து அளுத்கம ஸாஹிறாவின் வளர்ச்சி நோக்கி அவர்களை ஆற்றுப்படுத்தினார். 1949இல் விடுதி ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரிச் சீருடை, விளையாட்டுத்துறை, இல்லங்கள், சிரேஷ்ட விடுதி, கனிட்ட விடுதி (1953), நூலகம், தளபாடங்கள் என்பன வெல்லாம் கல்லூரியில் முன்னேற்றம் கண்டன. அதிக எண்ணிக் கையான மாணவர்கள் வருடாந்தம் கல்லூரிக்கு அனுமதி கோரினர். இடவசதியின்மையைப் போக்க நடவடிக்கை எடுக்கும் பாரிய பொறுப்பும் அதிபர் ஷாபிமரிக்கார் மீதே சுமத்தப்பட்டிருந்தது. களுத்துறை முஸ்லிம்களின் பொருளாதாரம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக அன்றிருக்கவில்லை. பேருவலை, தர்ஹாநகர் முஸ்லிம்களிடை பணம்படைத்த பரோபகாரிகளும் இருக்கவில்லை. அதனால், படக்காட்சிகள், கொடி தினங்கள், சீட்டிழுப்புகள் மூலம் கட்டிடத்துக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கட்டிடத்தேவையைப் பூர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 'கட்டிடநிதிக் குழு' ஒன்று 19.11.1950இல் ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவராக ஏ.ஆர். முஹம்மத், பொருளாளராக யு.எல்.எம். மஹ்தூம் ஆகியோரும் செயலாளராக அதிபர் ஷாபிமரிக்காரும் செயற்பட்டு அந்நோக்கில் அரும்பணியாற்றினர்.

புதிய கட்டிடத்தை அமைக்க துந்துவை வாசியான எம்.எல்.ஏ. ஜப்பார் மீனச்சிக்கந்தை என்ற இடத்தில் இருந்த தனது 2 ஏக்கர் காணியைக் கொடுத்துதவினார். முஸ்லிம்கள் வசிக்கும் பகுதியில் அக்காணி அமைந்திராததால் அதில் புதிய கட்டிடத்தை அமைப்பது சாத்தியமற்றதாயிற்று. ஏ.ஏ. ஹமீத், ஐ.எல்.எம். மஹ்மூத், எம்.எல்.ஏ. ஜப்பார் ஆகியோர் தமக்குச் சொந்தமான, இன்று அளுத்கம ஸாஹிறா அமைந்திருக்கும் காணியைக் கொடுத்துதவினர். இக்காணியிலேயே அன்றைய பிரதமர் டீ.எஸ். சேனநாயக்க 09.12.1951இல் புதிய பிரதான கட்டிடத்துக்கான அத்திவாரக்கல்லை

நாட்டினார். ஏம்.எம். ஷாபி, ஓ.எல்.எம். இஸ்மாயில் சகோதரர்கள், யூ.எல். எம். மஹ்தூம் ஆகியோர் இக்காணிக்கு அருகாமையிலிருந்த தம்முடைய காணிகளையும் இதற்கெனக் கொடுத்துதவினர். பேருவலை நகரசபைத் தலைவர் எம்.ஏ. பாக்கீர் மரைக்காரின் தலைமையில் பேருவலை பிரசவ விடுதிக்கு அத்திவாரக்கல்லை 09.12.1951 காலையில் நாட்டிய பிரதமர் டீ.எஸ். சேனநாயக்க மதிய போசனத்துக்குப் பின் ஷாபிமரிக்கார் அதிபராக விருந்த அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் பிரதான கட்டிடத்துக்கும் அத்திவாரக்கல்லை நாட்டியதானது அப்போது மிக்க கவனஈர்ப்புக் குரியதாயமைந்தது. அன்றைய தினம் அளுத்கம முஸ்லிம்கள் எம்.ஏ. பத்தாஹ் தலைமையில் பிரதமருக்குப் பெரு வரவேற்பொன்றை அளித்தனர். பேருவலையில் பாக்கீரும் அளுத்கமையில் பத்தாஹ்வும் பிரதமர் முன்னிலை யில் அன்று ஆற்றிய சிங்கள உரைகள் அப்போது வெகுவாகப் பாராட்டிப் பேசப்பட்டன. 'தேசிய தோட்டங்கள் சுவீப்' நடத்தப்பட்டு கட்டிடத்துக்குத் தேவையான பணமும் பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட நிதியும், ஏ. ஆர். முகம்மது, யூ.எல்.எம். மஹ்தூம் ஆகியோரின் உதவியும், உங்கள் முயற்சியும் சேர்ந்து தக்கதொரு கட்டிடத்தை ஸாஹிறாவுக்குப் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்று ஜாயாவும் நம்பிக்கை தெரிவித்தார்.

> "This acquisition money should go a long way to help you in the building programme.With the active support of Mr. A.R. Mohamed and Mr. U.L.M. Magdoom… and with your earnest endeavours, you should be in a position to be the benefactors of Zahira"

என்று பாக்கிஸ்தானில் இலங்கைத் தூதுவராக அப்போதிருந்த ஜாயா ஷாபிமரிக்காருக்கு எழுதிய கடிதம், இக்கட்டிட நிர்மாணத்தில் ஜாயா காட்டிய கூடிய கரிசனையைக் காட்டியது. இக்கட்டிடம் இஸ்லாமியக் கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்ட கலைக் கோபுரமாக நின்றிலங்குவது ஷாபிக்குப் பெருமை சேர்க்கிறது. 05.02.1950இல் தொடங்கிய இக்கட்டிட நிர்மாண வேலைகள் முடிவுற்ற போது 05.09.1954இல் சமயசார்பான திறப்பு விழாவும், 23.09.1954இல் உத்தியோகபூர்வ திறப்பு விழாவும் நிகழ்ந்தன. அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையின் சார்பில் சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா இக்கட்டிடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். பாக்கிஸ்தானில் இலங்கைத்



ஷாபிமரிக்காரின் முயற்சியில் நிர்மாணிக்கப்பட்ட அளுத்கம ஸாஹிறாவின் பிரதான கட்டிடம்

தூதுவராக அப்போதிருந்த ரி.பி. ஜாயாவும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள பாக்கிஸ்தானிலிருந்து அளுத்கமைக்கு வருகை தந்திருந்தார்.

> "1954ஆம் ஆண்டு செப்டம்பர் 23ஆந் திகதி புதிய பிரதான கட்டிடத்தை கௌரவ கன்னங்கரா அவர்கள் திறந்து வைத்தார். அன்று ஜாயா அவர்கள் முகத்தில் பிரதிபலித்த உணர்ச்சிகளை எவ்வாறு வர்ணிக்க முடியும்! அதிபரின் (ஷாபிமரிக்காரின்) ஆற்றலில் அவர் கொண்ட நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை அறிந்த ஜாயா அவர்கள் பெருமிதம் கொண்டார்கள். அன்று ஜாயா அவர்களைச் சந்தித்த போது அதிபரின் கண்கள் கலங்கின. ஆம்; அதிபரின் கண்களில் சுரந்தது ஆனந்தக் கண்ணீராகத்தான் இருக்க வேண்டும்" (The Architect of Zahira, 1962: 14, 15)

என்று ஷாபிமரிக்கார் அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதை ஆற்றாத அளுத்கமை வாழ் நன்றி உணர்வுள்ள மக்கள் எடுத்த நினைவுப் பெருவிழாவில் வெளியிடப்பட்ட நினைவு மலர்க் கட்டுரை தெரிவிக்கிறது.

> "The present imposing structure of this main block of this college is a lasting monument of the untiring effort of Mr. S.L.M. Shafie Marikar, the founder of the new Zahira. The solid foundation of Zahira's future was laid by Shafie Marikar who built up and nursed the college all round from 1948 – 1961"

என்று ஒன்றுகூடல் மண்டபத்திறப்பு விழா மலரில் (02.12.1977),'Zahira – It's brief History & Development' என்ற கட்டுரை அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் பிரதான கட்டிடம் ஷாபிமரிக்காரின் அயராத உழைப்பின் நினைவுச் சின்னம் என்று கூறுகின்றது.

புதிய ஒன்றுகூடல் மண்டபம் (Assembly Hall) ஒன்றும் நளீம் ஹாஜியாரின் பிரதான நிதியுதவியில் அளுத்கம ஸாஹிறாவில் நிர்மாணிக்கப்பட்டு 1977இல் திறந்து வைக்கப்பட்டது. அதன் ஆரம்பத்தையும் ஷாபிமரிக்காரின் காலத்திலேயே தேடவேண்டியிருக்கிறது. யூ.எல்.எம். மஹ்தூம், எம்.எம். ஷாபி, ஓ.எல்.எம். இஸ்மாயில், ஓ.எல்.எம்.ஏ. அப்துல்லா, ஓ.எல்.எம். தாஹிர், ஓ.எல்.எம்.ஏ. வாஹிட் ஆகியோர் ஒன்று கூடல் மண்டபமொன்றை அமைப்பதற்காக காணியொன்றை வாங்கி செப்டம்பர் 1954இல் ஷாபிமரிக்கார் அதிபராக விருந்தபோது ஸாஹிறாவுக்கு



ஒன்றுகூடல் மண்டபத்திற்கான அத்திவாரக்கல் நடும் நிகழ்வு 13.10.1970 இல் நிகழ்ந்தபோது அதிபர் ஜ.எல்.எம். சுஜப், ஜ.ஏ. காதர், எம்.ஏ. பாக்கீர்மாக்கார், எம்.ஹ. நளீம் ஹாஜியார் ஆகியோருடன் முன்னாள் அதிபர் ஷாபிமரிக்காரும் கலந்துகொண்டார்

அன்பளிப்புச் செய்திருந்தனர். அக்காணியில்தான் இப்புதிய ஒன்றுகூடல் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு 02.12.1977இல் திறந்து வைக்கப்பட்டது. அளுத்கம ஸாஹிறாவின் ஆரம்பத்துக்கும் வளர்ச்சிக்குப் பூரண ஒத்துழைப்பும் உதவியும் புரிந்த ஏ.ஏ. ஹமீத், யூ.எல்.எம். மஹ்தூம், எச்.எம். காலித் ஆகியோர் கொழும்பு ஸாஹிறாவின் பழைய மாணவர்கள் என்பது அவதானத்திற்குரியது.

> "Zahira College is one of the most important institutions in my area. It is, I think, the most important Muslim Maha Vidyalaya in the entire Kalutara District. That institution has quite a large number of buildings donated by the parents when it was a private school. It is a very well maintained Muslim school, but it has neither a playground nor an assembly hall... Therefore, may I, on behalf of the Muslims of the area, ask the Hon. Minister to take steps immediately to see that this college is provided with a hall, a two storeyed building. I remember one of the officials who visited the place telling me that the building was good enough for a University"

என்று அளுத்கம ஸாஹிறாவின் அபிவிருத்திக்கான தேவைகள் பற்றி, குறிப்பாக, ஒன்றுகூடல் மண்டபம், விளையாட்டு மைதானம் இல்லாமை பற்றி, 14.09.1969இல் பாக்கீர் மாக்கார் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்தார். அக்கல்லூரி தனியார் பாடசாலையாகவிருந்தபோது பெற்றார், நலன்விரும்பிகள், புரவலர்களின் அனுசரணையுடன் ஷாபிமரிக்கார் முன்னெடுத்த அபிவிருத்திப் பணிகளை அக்கல்லூரி அரசாங்கப் பாடசாலையானதும் ஷாபிமரிக்காரின் ஒன்றுவிட்ட சகோதரர் பாக்கீர் மாக்கார் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் முன்னெடுக்க வேண்டியிருந்தது.

> "Although the land for this Hall was obtained by the management in the assisted school days in 1954, the commencement of this project was started only in 1969. The P.T.A. of this college undertook the construction of this Assembly Hall estimated at Rs. 80,895.50 in 1969 with the benevolence of Al – Haj M.I.M. Naleem and with the state subsidy of Rs. 30,000/= , steadily made available to us in 1969 by the Ministry of Education on the representation made by Mr. M.A. Bakeer Markar (M.P. for Beruwala 1965 – 1970). We thank Mr. M.A. Bakeer Markar, the present Deputy Speaker and the First M.P. for Beruwala, for the initiative taken to obtain this subsidy. A further allocation of Rs. 15,000/= was granted by the Ministry of Education in 1973, on the representation made by the P.T.A. through Al-Haj M.A. Fatha, our vice President... we are grateful to Mr. I.A. Cader for having obtained a grant of Rs. 19,545/= from decentralised budget of 1976 for the installation of electricity for the Assembly Hall" (Shuaib I.L.M., 02.12.1977)

என்ற கல்லூரி அதிபர் ஐ.எல்.எம். சுஜபின் செய்தி இதைத் தெளிவுபடுத்துகிறது. ஒன்றுகூடல் மண்டபத்துக்கான இட ஒதுக்கீடு ஷாபிமரிக்கார் அதிபராகவிருந்த காலத்தில் செய்யப்பட்டதையும் அதன் நிர்மாணத்துக்கு எம்.ஏ. பாக்கீர் மாக்கார், எம்.ஏ. பத்தாஹ், நளீம் ஹாஜியார், ஐ.ஏ. காதர் ஆகியோரின் உதவிகளையும் இச்செய்தி அடையாளப்படுத்திக் காட்டுகிறது.

ஒன்றுகூடும் மண்டபம் மட்டுமன்றி விஞ்ஞானகூடம், நூல்நிலையம், நீச்சல்தடாகம் என்பனவற்றையெல்லாம் அமைத்து அளுத்கம ஸாஹிறாவை இந்நாட்டின் தலைசிறந்த கல்லூரிகளுள் ஒன்றாக்கும் திட்டமும் ஷாபிமரிக் காரிடமிருந்தது. விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான அத்திவாரக்கல் அவரின் காலத்திலேயே கல்லூரியில் நடப்பட்டது. பாடசாலையை அரசாங்கம் சுவீகரித்ததால் அவரின் பல திட்டங்கள் இடைநிறுத்தப் பட்டன. ஆயினும், அவரின் சிந்தனை, செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்னின்று உழைக்கும் ஒரு கூட்டம் அங்கிருப்பது நம்பிக்கை தருகிறது. அவரின் ஆத்மாவுக்கும் அம்முயற்சிகள் திருப்தி தரும்.



அளுத்கம ஸாஹிறாவில் நடைபெற்ற முக்கிய நிகழ்வொன்றில் ஒரு புறம் எ.எம்.எ. அஸீஸும் மறுபுறம் ஷாபிமரிக்காரும் அமர்ந்திருக்கின்றனர். (1959)

ஷாபிமரிக்காரின் காலத்தில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் அளுத்கம ஸாஹிறா பலமாக அடிபதித்தது. எச்.எஸ்.ஸி. கலை வகுப்புகள் 1957இலும் விஞ்ஞான வகுப்புகள் 1958இலும் ஆரம்பிக்கப் பட்டன. 'த ஸஹிரியன்' மலரின் முதல் வெளியீடு 1957இல் நிகழ்ந்தது. விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், விளையாட்டு மைதானம் என்பனவெல்லாம் ஏற்படுத்தப்பட்டன. கிரிக்கட், கால்பந்தாட்டம், கைப்பந்தாட்டம், மேசைப் பந்தாட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டன. களுத்துறை மாவட்ட உதைபந்தாட்டச் சம்பியன்விருதையும் 1956இல் ஸாஹிறா வென்றது.

அளுத்கம ஸாஹிறாவின் ஆளுமை விருத்திக்கும் அறிவு வியாபகத் துக்கும் கூட ஷாபிமரிக்கார் தன்னாலானவற்றைச் செய்திருந்தார். 'அளுத்கம ஸாஹிறாக் கல்லூரி மாணவர் கோஷ்டி 800 மைல்கள் தூரம் பிரயாணம் செய்தனர்' என்ற தினகரன் செய்தியொன்று இவ்விடயமாக எம் கவனத்தை ஈர்க்கிறது.

> "ஸாஹிறாக் கல்லூரியைச் சேர்ந்த 50 மாணவர்களும் ஆசிரியர்களுமாக கல்வி சம்பந்தமாக சுமார் 800 மைல் தூரம் பிரயாணம் செய்தனர். கல்லூரித் தலைவர் ஜனாப் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் இக்கோஷ்டிக்குத் தலைமை வகித்தார். கண்டி, பதுளை, பண்டாரவளை, மெடகம, பிபிலே,

கல்லோயா, கல்முனை, அட்டாளைச்சேனை, ஹம்பாந்தோட்டை, தங்காலை, மாத்தறை, காலி ஆகிய இடங்களுக்குச் சென்று ஸ்தலக் காட்சிகளைச் சுற்றிப் பார்வையிட்டனர். அங்கெல்லாம் ஸ்தலப் பிரமுகர்கள் இக்கோஷ்டிக்கு தங்குவதற்கு வசதிசெய்து கொடுத்தது மட்டுமல்லாமல் விருந்தளித்து உபசரித்தனர்.

கல்லோயா புனருத்தாரண வேலைகளை மாணவர் கோஷ்டிக்கு நேரில் விவரித்துக் காட்டுவதற்கு கல்முனைப் பிரதிநிதி கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் பெரும் பிரயாசை எடுத்துக் கொண்டார். மாத்தறையில் ஜனாப் எம்.ஜே.எம். மூசின் (சி.சி.எஸ்.) அவர்களும், காலியில் மேயர் ஜனாப் ஏ. ஆர்.எம். தாஸிம் அவர்களும் மாணவர் கோஷ்டிக்கு விருந்தளித்து உபசரித்தனர். சென்றவிடமெல்லாம் மாணவர் கோஷ்டியினரை வரவேற்று உபசரித்தவர்களுக்கு கோஷ்டித் தலைவர் ஜனாப் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் நன்றி தெரிவித்துப் பாராட்டிப் பேசினார்" (தினகரன் - 16.03.1950:7)

என்று அத் தினகரன் செய்தி ஷாபிமரிக்கார் தலைமையில் அளுத்கம ஸாஹிறா மாணவர் மேற்கொண்ட அகில இலங்கை சுற்றுப் பயணத்தை விவரித்துச் சொன்னது. சமூகத்தலைவர்களும், உயர் அரச உத்தியோகத்தர் களும் ஷாபியின் முயற்சிக்கு எம்மட்டு ஆதரவளித்தனர் என்பதையும் இச்செய்தி உணர்த்துகிறது.

அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியைக் கட்டி எழுப்பும் சமூகத்தின் கல்விப் பணியில் பலதுன்பங்களையும் துயரங்களையும் ஷாபிமரிக்கார் அனுபவிக்க வேண்டியிருந்தது. அந்த வகையில் ஜாயாவின் சிந்தனையில் உருவாகி பிரசவம் பெற்ற அளுத்கம ஸாஹிறா என்ற குழந்தையை மிக்க சிரமத்துடன் வளர்த்தெடுத்து புகழ்பெறச் செய்த பெருமையில் கூடிய பங்கு ஷாபிமரிக்காருக்குரியது. இக்கலாலயத்தைக் கட்டியெழுப்பிய பெரும் பணிக்காக முஸ்லிம் சமூகம் அவருக்குப் பெரிதும் கடப்பாடுடையது. அரும்பாடுபட்டுக் கட்டியெழுப்பிய அக்கல்லூரி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட போது ஷாபிமரிக்காரும் தனது பணியை 31.12.1961இலிருந்து விலக்கிக் கொண்டார்.

"அளுத்கம ஸாஹிறாவுக்குரிய புகழ் யாவும் ஜனாப் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் அவர்களுக்கே உரியது. இலங்கையில் இன்றுகூட இந்த அமைப்பில் ஒரு கல்வி நிலையம் இல்லை. இஸ்லாமியக் கட்டிடக்கலை நுணுக்கத்துடன் மிகக் கஷ்டப்பட்டுக் கட்டிய கல்வி நிலையம் இது... இக்கட்டிடம் தோற்றம் பெற்ற காலத்தில் மாணிக்க வியாபாரப் பரம்பல் ஏற்படவில்லை. சீனன் கோட்டை மிக ஏழ்மையில் ஆழ்ந்த காலம். அக்காலத்தே பல்கலைக்கழக வளாகத்தோற்றத்துடன் கம்பீரமாக நிற்கும் தர்காநகர் ஸாஹிறாவை உருவாக்க ஷாபிமரிக்கார் பட்ட கஷ்டங்களை ஸாஹிறாவின்

> உப அதிபராகவிருந்த திரு. எஸ்.ஜி. ஸமுவேல் என்னிடம் விவரிப்பார்" (இக்பால். ஏ., 1990:58,59)

என்று ஏ. இக்பால் 'பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார்' என்ற தன்னுடைய நூலில் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது கவனத்துக்குரியது. அளுத்கம ஸாஹிறாவை அரசாங்கம் பொறுப்பேற்றதும் ஷாபிமரிக்கார் இடமாற்ற உத்தரவைப் பெற்றார். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காத்தான்குடி மகாவித்தியாலயத்துக்கு அவர் இடமாற்றப்பட்டார். ஷாபியும் பதிலடியாக தன்னுடைய ஓய்வுக்கான விண்ணப்பத்தை அனுப்பிவைத்தார். அவரின் இடமாற்ற உத்தரவு இரத்துச் செய்யப்பட்டதாக பின்னர் அவருக்கு தினைக்களம் அறிவித்தபோதும் தனது நிலைப்பாட்டிலிருந்து அவர் மாறவில்லை. ஓய்வுக்கான விண்ணப்பத்தை அவர் மீளப் பெறவுமில்லை. அளுத்கம ஸாஹிறாவின் அதிபர் பதவியை ஏற்குமாறு ரி.பி. ஜாயா அழைத்தபோது இடைநிறுத்திய சட்டக் கற்கையை மீண்டும் தொடரச் சித்தம் கொண்டு மீண்டும் சட்டக்கல்லூரியில் 1962இல் இணைந்து கற்கத்தொடங்கி 1963இல் சட்ட முதற் பரீட்சையிலும் சித்திபெற்றார். ஷாபிமரிக்கார் அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் அளுத்கம ஸாஹிறா அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டது. ஆசிரியர்கள் இன்னொரு பாடசாலைக்கு இடமாற்றப்பட்டனர். அதன் அபிவிருத்தி புறந்தள்ளப்பட்டது. ஏ.இஸட். ஓமர்தீன் 01.02.1962இல் அதன் அதிபராக நியமனம் செய்யப்பட்டார். ஒழுங்குபடுத்தல் என்ற போர்வையில் ஆரம்ப வகுப்புகளை ஸாஹிறாக்கல்லூரியும் அதன் அருகாமையிலிருந்த அல்ஹம்றா வித்தியாலயம் உயர் வகுப்புகளையும் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஒழுங்குபடுத்தலில் தெளிவாக அடையாளம் காணக்கூடிய ஓர் அரசியல் பின்புலமிருந்தது.

> "On the order of the Minister Mr. Badiuddin Mahmud, at the request of some politicians Zahira College - Aluthgama, which had almost come up to all island school level, was destroyed. Vandalism was committed; teachers were transferred to another school. It became a primary school. I am very happy to state that when the next Minister of Education, Mr. Kalugalla went to Aluthgama area he found out the manner in which that institution had been destroyed and he ordered that the former Zahira College be restored. I only hope that the present Minister will appoint a commission to go into that matter and find out what actually was the damage caused at that time to Muslim education there" (Parliamentary Hansard : 16.09.1965)

என்று அக்கல்லூரிக்கு நிகழ்ந்த பழிவாங்கல் பற்றி 16.09.1965இல் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொணர்ந்திருந்தார் பாக்கீர் மாக்கார். ஒரு விசாரணைக் குழுவை அமைத்து அவ்விடயம்பற்றி ஆராய்ந்து முஸ்லிம்

கல்விக்கு அக்காலத்தில் நேர்ந்த கதிபற்றி ஆராயுமாறும் அப்போதைய கல்வி அமைச்சரை பாக்கீர்மாக்கார் கேட்டுக்கொண்டார்.

> "எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் அரசியல்வாதியை உருவாக்குபவர் என்பதை நுணுக்க அறிவுத்திறனுடையோர் ஆய்ந்தறிவர். ஷாபிமரிக்காரின் கல்வி அபிவிருத்திப் பணிக்கு பாக்கீர மாக்கார் எவ்விதம் உறுதுணையாகவிருந்தாரோ அவ்விதம் பாக்கீர் மாக்காரின் அரசியல் எழுச்சிக்கு ஷாபிமரிக்கார் உறுதுணையாகவிருந்தார்... ஷாபிமரிக்காரில் கொண்ட அரசியல் குரோதம் ஸாஹிறாவின் கல்வியில் கைவைத்து நின்றது. சாண் ஏறி முழம் சறுக்கி நின்ற காலம். பாக்கீர் மாக்கார் பேருவலைத் தொகுதியின் பிரதிநிதியாக வந்துவிட்டார். தர்காநகர் ஸாஹிறா அவருடன் இணைந்த கல்விக் கூடமல்லவா? அதன் மறுமலர்ச்சியில் அதிக அக்கறை காட்டினார்" (இக்பால் ஏ., 1990: 58, 59)

என்று அளுத்கம ஸாஹிறா அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட அதன் மீளெழுச்சிக்கு ஷாபிமரிக்காரின் ஒன்றுவிட்ட சகோதரர் பாக்கீர் மாக்கார் செய்த ஒத்தாசைகளை ஏ. இக்பாலின் இக்குறிப்புக் காட்டுகிறது. அதன் மூலம் அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் வளர்ச்சிக் கான புகழனைத்தும் ஷாபிமரிக்காருக்கே உரியதென்ற தனது வாதத்தை நிலைநாட்டவும் இக்பால் முயற்சிக்கிறார்.

> "Mr. Shafie Marikar, the Architect of Zahira, Aluthgama has retired at so young an age. In him was found a rare combination of youth and wisdom. He planned and built Zahira, Aluthgama. Zahira Aluthgama will remain forever a standing monument to Shafie Marikar's breadth of vision, foresight, maturity and wisdom. The parents, old boys and well wishers of Zahira College are grateful to Shafie Marikar for the good job done." (The Architect of Zahira, 1962:8)

ஷாபிமரிக்கார் திட்டமிட்டுக் கட்டியெழுப்பிய அளுத்கம ஸாஹிறா என்ற கல்விக் கலாலயம் அவரின் நினைவுச் சின்னமாக என்றும் விளங்கும். அளுத்கம ஸாஹிறாவின் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அவரின் நற்பணிக்கு என்றுமே நன்றியுடையவர்களாக இருப்பர் என்றெல்லாம் ஷாபி அக்கல்லூரியிலிருந்து ஒய்வுபெற்றதை ஒட்டி வெளியிடப்பட்ட பாராட்டுவிழா மலர் 'The Architect of Zahira' அவரின் சேவையைப் பாராட்டிப் பேசியது. ஷாபியின் இளமைக்காலத்தை நன்றாகப் பயன்படுத்தி சிறப்பாக வளர்ச்சி கண்ட அப்பாடசாலை ஷாபியை என்றும் புகழ்ந்தோதிக் கொண்டிருக்கும். இச்சேவையில் ஷாபி பெற்ற சமூக



அளுத்கம ஸாஹிறாவில் ஷாபிமரிக்காரின் நற்பணியை நினைகூர்ந்து 28.1.1962இல் வெளியிடப்பட்ட 'The Architect of Zahira' நூல்

அங்கீகாரம் அவரின் எதிர்காலக் கல்விப் பணிக்குத் தளமமைத்துக் கொடுத்தது. அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிருவாக சபைத்தலைவர் பதவியை ஏற்று நடத்தும் திராணியையும், மீண்டும் 1967இல் தனியார் பாடசாலையான கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்று நிருவகிக்கும் திடத்தையும், அளுத்கம ஸாஹிறாவை நடத்திப்பெற்ற அனுபவம் அவருக்குக் கொடுத்தது.

ஜாயாவின் எண்ணத்தில் உருவான இக்கல்லூரியில் லக்ஷானா அதிபராகவிருந்தபோது முன்னாள் அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் இங்கு கற்றார். களுத்துறை மகாவித்தியாலய அதிபராக, அளுத்கம ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி விரிவுரையாளராகவெல்லாம் பணிசெய்த 'அரும்பு' சஞ்சிகையின் ஆசிரியர் வை.எம். ஹாபிஸ், அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்த முஜீப்தீன், டாக்டர் ஏ.எம்.எம். இக்பால் ஆகியோர் அளுத்கம ஸாஹிறாவின் ஷாபிமரிக்கார் கால மாணவர்களுட் சிலர். கலாநிதி எம்.இஸட்.எம். மல்ஹர்தீன் (கணிதம்), பேராசிரியர் மௌஜூத் (விவசாயம்), ரி.எம்.ஸபர் (இந்தியாவில் இலங்கை வங்கி முகாமையாளராக இருந்தவர்) டாக்டர்.ஏ.எல்.எம். ஹப்றத், பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, எம்.எஸ்.எம். அஸ்லம் ஆகியோரெல்லாம் ஷாபிமரிக்கார் உருவாக்கிவிட்டுச்சென்ற புதிய ஸாஹிறாவில் கற்றுயர்ந்தவர்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்துறைப் பட்டதாரிகள், தொழிலதிபர்களையெல்லாம் இக்கல்லூரி உருவாக்கிக்கொண்டிருப்பது ஷாபிமரிக்காருக்கு மட்டுமல்ல ஜாயாவுக்கும் பெருமைதருவது; சமூகத்தின் கல்விக்கு மேன்மை தருவது.

3

கொழும்பு ஸாஹிறாவின் மீள் நிர்மாணம்

3.1 மீண்டும் தனியார் பாடசாலை

'அல்-மத்ரஸத்துஸ் ஸாஹிறா' என்ற பெயரில் எம்.ஸி சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் ஆகியோரினால் 1892இல் உருவாக்கப்பட்ட கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி 1892 - 1921வரை மெதுவாக வளர்ச்சியடைந்தது. 1921 - 1948வரை அக் கல்லூரி ரி.பி. ஜாயாவின் அதிபர் மகுடத்தில் கல்வி, விளையாட்டு, உட்கட்டமைப்புத் துறைகளில் துரித வளர்ச்சி கண்டது. இலங்கையின் பிரபல பாடசாலைகளுள் ஒன்றாக ஜாயா அதை வளர்த்தெடுத்தார். கொழும்பு ஆனந்தாக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி என்பனவற்றுக்குச் சற்றும் சளைக்காத பாடசாலையாக ஸாஹிறாவும் ஓங்கி வளர்ந்தது. ஜாயா தேர்ந்தெடுத்து அதிபராக்கிய எ.எம்.எ. அஸீஸ் காலத்திலும் (1948 – 1961) கல்லூரி தொடர்ந்தும் அபிவிருத்தி நோக்கிப் பயணித்தது. 21.08.1961இல் ஸாஹிறா அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டபோது மருதானைப் பள்ளிவாசல் நிருவாகம் அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்தது. முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் ஏ.ஸி.எம். அமீர் தலைமையில் இயங்கிய பழைய மாணவர் சங்கம் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியது.

ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் கொழும்பு ஸாஹிறாவை அரசாங்கம் சுவீகரிப்பதில் முடிந்தது. ஆசிரியர்களின் சம்பளத்தை 18.08.1961ஆம் திகதி வழங்குவதாக ஸாஹிறாக்கல்லூரியின் முகாமையாளர் கல்வி அத்தியட்சகர் எஸ்.எப்.டி. சில்வாவுக்கு வழங்கிய உறுதி மொழி அன்றையத் தினம் பி.ப. 4 மணி வரை நிறைவேற்றப்படாமை, அதற்கு கல்லூரி முகாமையாளர் அளித்த விளக்கம் திருப்தி தராமை என்பன கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை அரசாங்கம் சுவீகரிப்பதற்குக் காரணங்களாயின.

உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரிப்பதை அகில இலங்கை முஸ்லிம் லீக் எதிர்த்தது. டாக்டர் எம்.ஸி.எம். கலீலின் தலைமையில் 07.10.1960இல் நிகழ்ந்த முஸ்லிம் லீக்கின் மத்தியகுழுக் கூட்டம் அதனை எதிர்த்துத் தீர்மானமொன்றை நிறைவேற்றி இருந்தது."நாட்டிலுள்ள பல்வேறு மதத்தினரும் தங்கள் தங்கள் மதச் சூழ்நிலையில் கல்வி கற்கும் உரிமைகளை உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது பாதிக்குமாதலால் அகில இலங்கை முஸ்லிம் லீக் அதற்குக் கவலை தெரிவிக்கிறது"என்பது அத்தீர்மானம். முஸ்லிம் லீக்கின் செயலாளர் ஏ.எல்.எம். ஹாஷிம், ஏ.டபிள்யு.எம். நாஸிக் மரைக்கார்,எம்.ஏ.பாக்கீர் மாக்கார் ஆகியோரும் அக்கூட்டத்தில் சுவீகரிப்புக் கெதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தனர். முஸ்லிம் லீக்கின் அத்தீர்மானம் பற்றி அப்போதைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்முத் அவ்வளவாக அலட்டிக்கொள்ளாவிட்டாலும் அதுபற்றி கருத்துத் தெரிவித்தார்.

> "முஸ்லிம் லீக்கின் குரல் இப்பொழுது முஸ்லிம்களின் குரலாக இல்லை. அது இப்பொழுது யு.என்.பி.யின் குரலாக இருக்கிறது. யு.என்.பி. எதனைக் கொண்டு வருகின்றதோ அதற்கு'ஆமாம்சாமி' போடுவதும் யு.என்.பி எதனைப் பிழை என்கிறதோ அதற்கு'ஆமாம்சாமி'போடுவதும் தான் இப்பொழுது முஸ்லிம் லீக்கின் வேலையாக இருக்கிறது. இந்தஅடிமைத்தனத்தை நான் மிகவும் கேவலமாகக் காண்கிறேன். பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தபின் அதனைக் கொண்டு முஸ்லிம்களுக்கு எவ்வளவு நயம் உண்டாகப் போகின்றது என்பதை அவர்கள் காணத்தான் போகின்றனர். இம் மசோதாவினால் முஸ்லிம்களுக்கு எள்ளளவேனும் தீமை ஏற்படுமென்றிருந்தால் இவ்வளவு துணிச்சலுடன் அதை நான் சமர்ப்பிக்க மாட்டேன். இதன் பலனை எமது சமுதாயம் வருங்காலத்தில் காணத்தான் போகின்றது" (ஹன்ஸீர் ஏ.டபிள்யு. எம்., 1989:518-519)

என்று முஸ்லிம் லீக்கின் தீர்மானம் பற்றி பதியுத்தீன் மஹ்முத் கூறியதாக ஹன்ஸீர், 'எங்கள் தலைவர் பதியுத்தீன்' என்ற தனது நூலில் பதிவு செய்திருக்கிறார். ஹன்ஸீர் இன்னுமொரு விடயத்தையும் அந்த நூலில் பதிவு செய்திருப்பது அவதானத்திற்குரியது.

> "கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி அதிபர் சென்ட்ரர் எ.எம்.எ. அஸீஸ் அவர்கள் கல்வி அமைச்சரைக் கண்டு கண்ணீர் வடித்துக்கொண்டு உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். கல்லூரி முகாமைக்குழு மிகவும் மோசமாக இருப்பதாகவும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கமுடியாத நிலை இருப்பதாகவும், ஆசிரியர்கள் விடயத்தில் மிகவும் பொடுபோக்காக இருக்கிறதென்றும் கூறி, அக்கல்லூரியை அரசாங்கம் ஏற்று நடத்தும் படியும் கேட்டுக் கொண்டார்." (ஹன்ஸீர் ஏ.டபிள்யு.எம்., 1989 : 571)

என்பதே அப்பதிவு. கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியைச் சுவீகரிப்பதில் அக் கல்லூரியின் அதிபராகவிருந்த அஸீஸின் ஆதரவு அமைச்சர் பதியுத்தீனுக்கிருந்ததை ஹன்ஸீரின் இக்கூற்று தெளிவாகக் காட்டுகிறது.

அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை மீட்டெடுத்து சமூக உடைமையாக்கும் நோக்கில் செயற்றிட்டம் வகுக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போது டாக்டர் எம்.ஸி.எம். கலீலின் தலைமையிலான முஸ்லிம் லீக்கும் முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் ஏ.ஸி.எம். அமீர் தலைமையிலான கல்லூரிப் பழைய மாணவர் சங்கமும் அந் நோக்கச் சித்திக்கு முன்னின்றுழைத்தன. கல்வி அமைச்சர் எதைச் சொன்னாலும், அஸீஸ் எதைச் செய்தாலும் ஸாஹிறாக் கல்லூரியை மீண்டும் பெற்றே தீருவோம் என்று மருதானையில் 08.11.1961இல் நிகழ்ந்த கல்லூரிப் பழையமாணவர் சங்கக் கூட்டத்தில் ஸாஹிறாவை மீளப்பெறும் செயலணித்தலைவர் ஏ.ஸி.எம். அமீர் சூளுரைத்தார். அஸீஸுக்கும் கல்வி அமைச்சருக்கும் கடப்பாடுடைய சிலரே சுவீகரிப்புக்கு ஆதரவாக இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். முஸ்லிம் சமூகத்தின் இன்றையத் தேவை கலாசாரப் பல்கலைக்கழகமல்ல; அரபு - இஸ்லாமிய நாகரிகத்தை மட்டும் படிப்பதில் முஸ்லிம் சமூகம் திருப்தியடையாது என்றும் அங்கு அமீர் குறிப்பிட்டார்.

ஸாஹிறாவை அரசாங்கம் சுவீகரிக்கும் விடயத்தில் முஸ்லிம்களின் முதலாவது எதிரி அஸீஸ் என்றும், இரண்டாவது எதிரி பதியுத்தீன் மஹ்மூத் என்றும் அக் கூட்டத்தில் உரையாற்றிய எம்.எஸ். அபூபக்கர் குறிப்பிட்டார். ஸாஹிறாவை மீண்டும் பெறும் முயற்சியில் சிறைசெல்லத் தயாராக இருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார். செயலணியின் செயற்பாட்டுக்கு முஸ்லிம் சமூகம் நிதியுதவி செய்யவேண்டும் என்றும் பழைய மாணவர் சங்கம் அன்றையத் தினம் வேண்டுகோள் விடுத்தது. கல்லூரியை மீளப் பெறும் செயலணியின் முதலாவது பொதுக் கூட்டம் பேருவலை கெச்சிமலைப்பள்ளிவாசல் முன்றலில் 11.11.1961இல் நிகழ்ந்தது. அங்கு உரையாற்றிய செயலணித் தலைவர் ஏ.ஸி.எம். அமீர்,

> "Zahira college which was the first – ever school for the Muslim community founded in this country, built on the Maradana mosque premises, intended by its founders and builders as an educational institution for Muslim children in an Islamic atmosphere for all times was by the order of the Minister of Education, who keeps proclaiming that he is following the footsteps of the Holy Phophet taken over as from the 21 st August, and the only reason given for this drastic action was that the management had defaulted by not paying the salaries of the teachers for July.

How came it that 700,000 Muslims could not run one single school. How come it that when for seven months the salaries had been paid without any murmur from any quarter we were faced with this situation in July. The OBA felt there was something wrong and we began to look into the matter. We then decided to place all the facts before the Muslim Community so that they could judge what happened and what the real truth is." (Sunday Times - 12.11.1961)

என்று குரலெழுப்பினார். சுவீகரிப்பின் திரைமறைவில் நிகழ்ந்த சூழ்ச்சி பற்றியும் அமீர் சமூகத்திற்கு எத்திவைத்தார். செயலணியின் அடுத்த பொதுக்கூட்டம் கம்பளையில் நிகழ்ந்தது. செயலணியின் கூட்டமொன்று 20.01.1963இல் மருதானைப் பள்ளிவாசல் முன்றலில் நிகழ்ந்த போது தலைமைவகித்துப் பேசிய ஏ.ஸி.எம். அமீர் முஸ்லிம் சமூகத்திற்கு பதியுத்தீன் துரோகம் இழைத்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார். அக்கூட்டத்தில் நான்கு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன:

1. தனது பதவியில் இருந்து உடனடியாக இராஜினாமாச் செய்யும்படி பதியுத்தீனைக் கேட்பது. அவர் அவ்வாறு செய்யாதவிடத்து அவரைப் பதவி நீக்கும்படி பிரதமரைக் கோருவது.
2. மந்திரியின் செயலை எதிர்ப்பதுடன் அவர் செய்துள்ள பிழைகளைத் திருத்துவதற்கு பிரதமரைத் தலையிடுமாறு கோருவது.
3. கண்டியிலும் காலியிலும் மூடப்பட்ட முஸ்லிம் ஆசிரியர் கலாசாலைகளை உடனடியாகத் திறக்கும்படி கேட்பது.
4. ஏனைய முஸ்லிம் நிறுவனங்களையும் மூடிவிடப்போவதாகப் பயமுறுத்தும் மந்திரியின் செயலை நிறுத்திக் கொள்ளும்படி வேண்டிக் கொள்வது

என்பன அப்பிரேரணைகள். டாக்டர் எம்.ஸி.எம். கலீல், இஸ்ஸதீன் முகம்மத் முதலானோரும் அங்கு உரையாற்றி கொழும்பு ஸாஹிறாவை அரசாங்கம் சுவீகரித்ததற்குத் தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். (டைம்ஸ் ஒப் சிலோன், மாலை வெளியீடு : 23.01.1963) இந்த எதிர்ப்பியக்கம் சமூகத்தில் பலமிக்க இயக்கமாக வளர்ந்தது. மாவனல்லை, குருநாகலை போன்ற இடங்களிலும் எதிர்ப்புக் கூட்டங்கள் நடைபெற்றன.'முஸ்லிம்கள் ஏன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிக்க வேண்டும்' என்ற தலைப்பில் பதியுத்தீன் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றுக்கும் 'முஸ்லிம் அரசியல் மாநாடு' என்ற மகுடத்தில் இதே செயலணியினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். 'டெய்லி நியூஸ்' பத்திரிகை 18.03.1965இலும், அக்காலை வெளிவந்த வேறு சிங்கள, தமிழ், ஆங்கில தினசரிகளிலும் இந்த எதிர்ப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அதில் பதியுத்தீன் மிக மோசமாக விமரிசனம் செய்யப் பட்டிருந்தார். டாக்டர் எம்.ஸி.எம். கலீல், ஏ.ஸி.எம். அமீர், ஏ. செய்யது

அஹமத், ஏ.எல்.எம். ஹாஷிம், ஜாபிர் ஏ. காதர், எம்.டீ. கிச்சிலான், மொஹமட் செய்ன், ஏ.எம். நஸீர் (செயலாளர்), ரி.ஏ.ஜாயா, எம்.எச். ஆமித் ஆகியோர் முஸ்லிம் அரசியல் மாநாட்டின் சார்பில் ஒப்பமிட்டிருந்தனர். ஸாஹிறாக் கல்லூரியை மீளப்பெறும் இயக்கத்தில் பெறுமதி மிக்க சமூகத்தின் உயர் மட்டத்தினரெல்லாம் பங்கு கொண்டு போராட்டம் நடத்தினர். ஏ.எச்.எம். இஸ்மாயில் (பரிஸ்டர்), இஸ்ஸதீன் முகம்மத், சென்ட்டர் ஏ.ஆர்.எம். ஹமீம், எம்.ஏ. பாக்கீர் மாக்கார்,ஏ.டபிள்யு.எம்.றாஸிக் மரைக்கார், டாக்டர் சுலைமான், எம்.ஏ.காதர், பளீல் ஏ.கபூர், றஹ்மான் ஏ. ஹாதி, எம்.எச்.எம். நெய்னா மரைக்கார், ஏ.ஸி.எம். றஊப், ஏ.எச்.எம். அஸ்வர், மஷுர் மௌலானா, சலீம் அபூபக்கர் (பிரதி மேயர்), எம். பத்ரி ஹாஷிம், எம்.எம்.பஹாவுதீன், ஏ.றஹீம் (மன்னார்), எஸ்.பி.எம். ஹுசைன் (அஷ்ரப் ஹுசைனின் தந்தை), எஸ்.பி.எம். இப்றாம்ஷா, எம்.ஏ.ஸி.எம்.சாலி ஆகியோரெல்லாம் இப் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தனர். எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும் பின்புலத்தில் அமர்ந்திருந்து தன் பங்களிப்பை நல்கினார்.

"1962ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்; ஒரு நாள் அதிகாலையில் அறிஞர் அஸீஸ், வாழைத்தோட்டத்திலுள்ள என் வீட்டுக்கு வந்தார். அன்று அவரின் முகம் வாடிப்போய், பதட்டத்துடன் காணப்பட்டது. "கடிதம் போட்டால் வந்திருப்பேனே, ஏன் நீங்கள் வரவேண்டும்? அவ்வளவு அவசரமான காரியம் என்ன?" என்று கேட்டேன். அவர் சற்றுப் பதட்டத்துடனேயே, "சாஹிரா விவகாரம் கொஞ்சம் முற்றிப் போய்விட்டது. என் சார்பில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நாளை கூட்டம் நடக்கவிருக்கிறது. ஆனால், அதைக் குழப்பி, கூட்டத்தை நடத்த விடாமல் செய்யச் சிலர் திட்டம் தீட்டித் தீவிரமாகச் சதி செய்து வருவதாக எனக்கு நேற்று நம்பகமான செய்தி கிடைத்தது. அதனால்தான் இங்கு அதிகாலையில் வந்தேன்" என்றார். அஸீஸ் விஷயத்தைச் சொல்லவே சங்கடப்பட்டார். அவரது பதட்டத்தையும், அவர் வந்த நோக்கத்தையும் நான் யூகித்துணர்ந்து கொண்டேன்.

"நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை. கூட்டத்தைக் குழப்ப விடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். எங்களது கட்டுப்பாட்டையும் மீறி குழப்பம் விளைவிக்க வந்தால், அடி, தடி விழத்தான் செய்யும். ஆனால், கூட்டம் எந்தக் காரணத்தைக் கொண்டும் நடுவழியில் நிறுத்தப்படக்கூடாது. என்ன நடந்தாலும் கூட்டம் தொடர்ந்து நடந்து முடியவேண்டும். மற்றது, நான் அனுப்பும் பையன்களுக்கு ஏதாவது அசம்பாவிதங்கள் நேர்ந்தால், நீங்களே அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று ஒளிவு மறைவின்றி விஷயத்தை அவர் முன்வைத்தேன். நன்றியறிதல் முகத்தில் படர அவர் சம்மதித்தார்.

> கூட்டத்தன்று, மண்டபத்தின் ஒவ்வொரு வாயிலிலும் நிறுத்தப்பட்டிருந்த வாலிபர்கள் எதற்குமே தயாராக நின்றார்கள். அதோடு, எதையும் சமாளித்து, முறியடிக்கத் தம்மைத் 'தகுதி' படுத்திக் கொண்டே வந்திருந்தார்கள். கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது. எவ்விதக் குழப்பமோ ஒரு சிறு எதிர்ப்போ கூட இல்லாமல் கூட்டம் வெற்றியுடன் நடந்து முடிந்தது. மண்டபம் நிறைந்து, மக்கள் வெளியேயும் நின்றார்கள். கூட்டத்தின் வெற்றி அஸீஸுக்கு ஒரு புதுத்தெம்பையும், துணிவையும் தந்திருந்தது. அந்தப் பெரிய மனிதருக்கு, எனது நீண்டகாலத் தொடர்பில் நான் செய்த, அவர் கருத்தில் அதி முக்கிய உதவி இதுவேயாகும்." (முஹிதீன் எச்.எம்.பி., 1974 : 89 - 91)

என்று 'அறிஞர் அஸீஸ் - சில நினைவுகள்' என்ற தன்னுடைய நூலில் ஸாஹிறாவை மீளப்பெறும் போராட்டத்தின் அகோரத்தை எச்.எம்.பி. முஹிதீன் குறித்து வைத்திருக்கிறார்.

> "ஈழத்து முஸ்லிம் நவயுக நாயகர்களில் எவருக்குமில்லாத எல்லாத் தகுதிமிக்க பேராற்றல்களையும் பெற்றிருந்த அவர் (எ.எம்.எ. அஸீஸ்), முன்னேற்றப் பாதையிலே லட்சியக் கோட்டையை அடையு முன்னர் வீழ்ந்து பட்டார் எனின், எதிலுமே லட்சிய உறுதியற்ற சந்தர்ப்பவாதப் போக்கு அவரை ஆட்கொண்டு ஆட்டிப் படைத்தமையே அதிமுக்கிய காரணமாகும். இந்தச் சந்தர்ப்பவாதத்தை அவர் வெற்றிகண்டிருந்தால், இன்று நம் தாயகத்தில் அவருக்கு நிகராக ஒப்புக் காட்டும் விதத்தில் யாருமே இருந்திருக்க மாட்டார்கள்" (முஹிதீன் எச்.எம்.பி., 1974 : 60 - 61)

என்று ஸாஹிறாக் கல்லூரிச் சுவீகரிப்பு சம்பந்தமாக அஸீஸ் அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் சாதகமாக நடந்து கொண்டதை உள்ளடக்கியதாக எச்.எம்.பி. முஹிதீன் தன்னுடைய அதே நூலில் எழுதி வைத்திருப்பதும் கவனத்திற்குரியது. ஸாஹிறாக் கல்லூரிச் சுவீகரிப்புக்கு ஏறக்குறைய ஒருவருடத்துக்கு முன்னர் கல்வி மந்திரியாக பதியுத்தீன் மஹ்மூத் நியமிக்கப்பட்டபோது, அஸீஸ் தலைமையில் ஸாஹிறாக் கல்லூரி 28.07.1960இல் அமைச்சருக்கு அளித்த பெரு வரவேற்பும், விசேட அசெம்பிளி, சிறப்பு மலர் வெளியீடுகளும் இதனுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கப்பட வேண்டியன.

உயர் நீதிமன்றத்தில் ஸாஹிறாச் சுவீகரிப்புக்கெதிராகத் தாக்கல் செய்த வழக்கு தோல்வியடைந்த போதும் பிரிவி கவுன்சில் வரை வழக்கைக் கொண்டு சென்று வெற்றியடையச் செய்த செயல்வீரர்களாக இச் செயலணியினர் விளங்கினர். அதன் விளைவாக கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மீண்டும் தனியார் பாடசாலையாகி மருதானைப் பள்ளிவாசல் நிருவாகத்தின் கீழ் திரும்பவும் இயங்கத் தொடங்கியது. பழைய மாணவர்

சங்கம், பெற்றார்-ஆசிரியர் சங்கம், மருதானைப் பள்ளிவாசல் நிருவாகம் என்பன கூட்டாக விடுத்த அழைப்பை ஏற்று ஷாபிமரிக்கார் 01.01.1967இலிருந்து கொழும்பு ஸாஹிறாவின் அதிபரானார். அவர் தொடர்ந்த சட்டக் கற்கைக்கு மீண்டும் முழுக்குப்போட்டுவிட்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியை சமூகத்தின் நலனுக்காக ஏற்று தன் கல்விப் பணியை மீளத் தொடங்கினார். "பதவி மோகம் கொண்டு அவர் (ஷாபிமரிக்கார்) வரவில்லை. அளுத்கமையில் பணிபுரிந்து கொண்டிருந்த அவருக்கு மட்டக்களப்பிற்கு இடமாற்றம் கிடைத்தது. இதனை விரும்பாத அவர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு சட்டக் கல்வியை மேற்கொண்டார். அவ்வேளை நாம் அவரிடம் சென்று ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராக நீங்கள் வரவேண்டும் என்று கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். பின்னர் பல நியாயங்களை நாம் கூறி அவரைச் சம்மதிக்கச் செய்தோம். எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அவர் சட்டப்படிப்பைக் கூட நிறுத்திவிட்டு இக்கல்லூரியின் அதிபராகக் கடமையை ஏற்றார்." என்று கல்லூரியின் பழையமாணவனும், அக் கல்லூரியின் ஆசிரியராகவிருந்தவரும், மரணபரியந்தம் ஸாஹிறாவுடன் தொடர்புகளைப் பேணியவருமான எம்.வை.எம். பளீல் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். (தினகரன் - 01.02.1982)

பிரிவிகவுன்சில் தீர்ப்பு 19.01.1966இல் கிடைக்கும் வரை ஸாஹிறாவில் ஸ்திரமான நிலை இருக்கவில்லை. இரண்டும் கெட்டான நிலை 02.12.1961 – 01.01.1967வரை காணப்பட்டது. கட்டிடங்கள் சிதைவடைந்து, கல்வி, விளையாட்டுத் துறைகள் கீழ் நிலையடைந்து காணப்பட்டன. ஏறக்குறைய 6 வருடங்கள் அரசாங்கப் பாடசாலையாகவிருந்து 01.01.1967இல் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையானபோது நிதியைத் தேடிக் கொள்வது, தகுதியான ஆசிரியர்களைச் சேவைக்க மர்த்துவது, கட்டிடங்களைப் புனர்நிர்மாணம் செய்வது, கல்லூரியின் கல்வித் தரத்தை தனியார் காலத்தில் இருந்த தரத்திற்கு மீளக் கொணர்வது, மாணவரின் ஒழுக்கக் கட்டுப்பாட்டை மீள நிலைநிறுத்துவதென்பன வெல்லாம் மருதானைப் பள்ளிவாசல் நிருவாகத்திடமும் கல்லூரி அதிபர் மீதும் சுமத்தப்பட்ட பெரும் பொறுப்புகளாயின. ஒரே ஒரு ஆசிரியருடனும் 1400 மாணவர் களுடனும் இப் பெரும் கல்விக் கூடத்தை



மீண்டும் தனியார் பாடசாலையான கொழும்பு ஸாஹிறாவின் செயற்பாடுகள் கல்லூரிக் கொடி ஏற்றப்பட்டு துஆப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகின. டாக்டர் எம்.ஸி.எம். கலீலும் அதிபர் ஷாபிமரிக்காரும் துஆப் பிரார்த்தனையில்.

ஷாபிமரிக்கார் பொறுப்பேற்றார். 6-12 வகுப்புகள் ஸாஹிறாக் கல்லூரி நிருவாகத்தின்கீழ் வந்தன. அரசாங்கத்தின் பொறுப்பில் இயங்கிய ஆரம்பப் பிரிவை (1-5 வகுப்புகள்) வருடத்திற்கு ஒரு வகுப்பு என்றவாறு 1972வரை ஸாஹிறாக் கல்லூரி நிருவாகத்திற்குக் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி முதலாம் வகுப்பு 01.01.1968இல் ஸாஹிறாக் கல்லூரி நிருவாகத்திற்குக் கையளிக்கப்பட்டது. ஸாஹிறாவை மீளக் கட்டியெழுப்பி பிற பிரபல பாடசாலைகளின் தரத்திற்கு அதை இட்டுச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பை ஷாபிமரிக்கார் ஏற்று தனது பணியை ஆரம்பித்தார். முஸ்லிம் சமூகத்தின் தலைப் பாடசாலையை, தான் கற்ற கல்லூரியை, ரி.பி. ஜாயா அதிபராகவிருந்து பெரும்பணி செய்த அக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுச் செயற்படத் தொடங்கினார். அத் திருப்பணிக்காக தன் வாழ்நாட்களையெல்லாம் அர்ப்பணிக்கத் திடசங்கர்ப்பம் பூண்டார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியைச் சுவீகரித்து தான் கற்ற அக்கல்லூரிக்கு உட்கட்டமைப்பு வசதிகளையும் சகல அரச வளங்களையும் வழங்கி நாட்டின் பிரபல பாடசாலைகளுக்குச் சளைக்காத பாடசாலையாகவும், பின்னர், கலாசாரப் பல்கலைக்கழகமாகவும் அதை ஆக்கவேண்டும் என்ற நோக்கில் ஊக்கத்துடன் செயற்பட்ட கல்வி அமைச்சர் பதியுத்தீன் அவர்களும், சுவீகரிப்பிற்கு ஆதரவாகச் செயற்பட்ட அஸீஸின் அபிமானிகளும், அரசாங்கம் கல்லூரியைப் பொறுப்பேற்ற காலத்தில் ஸாஹிறாவில் நிலைகொண்டிருந்த சிலரும், ஷாபிமரிக்காரின் நிருவாகத்தை அவதானிப்பவர் களாக, விமரிசனம் செய்பவர்களாக, சிலவேளை தடை செய்பவர்களாகச் செயற்பட்டதால் அத்தடைகளையும் மேவி ஸாஹிறாவின் கல்வி மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்க வேண்டிய சிரமத்திற்கும் ஷாபிமரிக்கார் தள்ளப் பட்டார். ஷாபிமரிக்காரின் வீழ்ச்சியில் மகிழ்வடையும் ஒரு கூட்டமும் இருக்கவே செய்தது. இத்தடைகளுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் சிலரின் ஒத்துழைப்பு, ஒத்தாசையுடன் ஷாபிமரிக்கார் தனது பணியைத் தொடர்ந்தார்.

> "When I took charge of the college as principal on 1st January 1967, I was confronted with a heart – breaking task. All round I saw neglect, disorder and indiscipline; I had no organization only one teacher on the staff and not one rupee in the school funds; I had instead, a heavy liability, 1500 students to be sorted out into classes and work provided for them on a time table. Against all this, on the other hand, I had one great heartening asset - the solid golden goodwill of the Muslim community, our well-wishers and old boys. With their support within the short period of three weeks, we had the staff, the money, and the school running smoothly" (Shafie Marikar S.L.M.,1968: 3, 4)

என்று தன் மீது சுமத்தப்பட்ட சிரமமான பணியையும் அச்சிரமத்தைத் தணிக்க உதவிக்கரம் நீட்டிய சக்திகளையும் ஷாபிமரிக்கார் 1968ஆம் ஆண்டைய பரிசளிப்புவிழா அறிக்கையில் இனம் காட்டினார்.

> "The outlook was dismal – six teachers and 59 boys, hardly any furniture worth the name with a building just enough for a primary school, used at night by loafers and other undesirables, with unattractive surroundings and about 20 or 30 yards from the building thickets and shrubs regarded by the public as the rendezvous of the denizens of the underworld, relieved only by the majesty of the mosque"

என்று 1921இல் ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்ற ஜாயா தான் பொறுப்பேற்றபோது இருந்த கல்லூரியின் சூழல் பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். ஸாஹிறாக் கல்லூரியை ஷாபிமரிக்கார் பொறுப்பேற்ற போது இருந்த சூழலும் ஏறக்குறைய ஜாயா பொறுப்பேற்ற ஸாஹிறாவின் சூழலை ஒத்திருந்தது. ஸாஹிறாவை தான் பொறுப்பேற்ற போதிருந்த கல்விநிலை பற்றியும் ஷாபிமரிக்கார் 05.08.1968இல் நிகழ்த்திய பரிசளிப்பு விழா அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

> "We had 7% of passes in the G.C.E (O/L) results in December 1967. These are poor results and we are reaping the harvest of neglect, indifference and indiscipline of the years under government control, particularly in the immediately previous years but they are certainly better than the results of the preceding years which were 5% in December 1966, 6% in 1965, 4% in 1964, 5% in 1963 and 6% in 1962" (Principal's Prize day report - 05.08.1968 : 5)

என்று கல்லூரியைத் தான் பொறுப்பேற்க முந்தியகால ஜீ.எஸ்.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை சமூகத்தின் அறிகைக்குப் பதிவு செய்திருந்தார் ஷாபிமரிக்கார். ஸாஹிறாவைப் பொறுப்பேற்ற ஷாபிமரிக்கார் 01.01.1967இல் 'சிலோன் ஒப்சேவர்' பத்திரிகைக்கு விடுத்த செய்தியில்,

> "Zahira College has to play a more notable role than it has done since Mr. Jayah left. If one only seeks the inspiration from his life and work one need not be afraid of failure. He blazed a trail and lightened our path. With the help of the Almighty, the inspiration of the late Dr.T.B.Jayah and the co-operation of the Muslim public I am confident that Zahira College will play the role the Muslim Community expects of its premier Educational Institution"(ShafieMarikar S.L.M., Ceylon Observer- 01.01.1967)

என்று நம்பிக்கை வெளியிட்டார். கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 'சிலோன் ஒப்சேவர்' பத்திரிகையில் ஸாஹிறாக் கல்லூரி நலன்புரிச் சங்கம் வெளியிட்ட அநுபந்தத்திலேயே ஷாபிமரிக்கார்

இவ்வாறு தெரிவித்திருந்தார். ஜாயா ஸாஹிறாக் கல்லூரியை விட்டு விலகிச் சென்றபோது அஸீஸ் செய்யவேண்டியிருந்ததை விட ஸாஹிறாவை அரசாங்கத்திடமிருந்து மீட்டெடுத்தபோது ஷாபிமரிக்கார் செய்ய வேண்டி யிருந்தவை கூடுதலாகவும் கடினமானதாகவும் இருந்தன. ஜாயாவின் வாழ்விலும் செயலிலும் இருந்து ஊக்கம் பெற்றவர்கள் தோல்விக்குப் பயப்படமாட்டார்கள். ஜாயா வகுத்த பாதை இருக்கிறது. இறைவனின் உதவி, ஜாயா தந்த ஊக்கம், முஸ்லிம் பொது மக்களின் ஒத்துழைப்புடன் தங்கள் தலைக்கல்வி நிலையம் எதைச் செய்யவேண்டுமென முஸ்லிம் சமூகம் விரும்புகிறதோ அதை ஸாஹிறாக் கல்லூரி செய்யும் என்று ஷாபியின் செய்தி அமைந்திருந்தது. அவர் கடக்கவேண்டியிருந்த கடினமான பாதையை அவரின் இச் செய்தி தூலாம்பரமாகக் காட்டியது. தனது பயணத்திற்கான பாதையை தானே வெட்டி தானே பயணமும் செய்யவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருந்தார். இதே அநுபந்தத்தில் ஸாஹிறாக் கல்லூரி அதிபர் பதவிக்கு ஷாபிமரிக்காரின் பொருத்தப்பாட்டினை அக் கல்லூரியின் முகாமையாளர் ஏ.எச்.எம். இஸ்மாயில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

> "We are happy that Mr.S.L.M Shafie Marikar has kindly consented to accept the office of principal. He has already shown his ability by the success he made of Zahira College, Aluthgama. A man devoted to his calling is essential at this time. There is tremendous task ahead of him. We are sure, however, that he will prove equal to the task and with the help of all sectors provide the Muslims with an educational Institution which will enable the Muslims to play their destined high role in the affairs of this Nation" (Ismail A.H.M., Ceylon Observer – 01.01.1967)

என்பது இஸ்மாயிலின் எதிர்பார்ப்பு. முஸ்லிம் கல்வி மேம்பாட்டிற்கு தனது உயர் பங்களிப்பை ஷாபிமரிக்கார் செய்வார் என்ற நம்பிக்கையை இச் செய்தியில் இஸ்மாயில் வெளிப்படுத்தியிருந்தார்.

கல்லூரியைப் பொறுப்பேற்று மூன்று கிழமைகளுக்குள் தகுதிவாய்ந்த 66 ஆசிரியர்களை, தேவையான நிதியை, பாடசாலையை ஒழுங்காக நடத்தும் நம்பிக்கையின் ஒளியைத் தான் பெற்றுவிட்டதாக ஷாபியும் அவ்வறிக்கையில் குறித்துச் சொன்னார்.

> "It will also be the task of the future historian to assess impartially the unusual difficulties experienced by the administration in re – commencing a large educational institution like ours with over 1500 pupils all in the post primary classes and with only a single teacher on the staff left behind by the previous administration" (Shafie Marikar S.L.M., 1967: 2)

என்று தன்மீது சுமத்தப்பட்ட பணியின் சுமையை மதிப்பீடு செய்யும் பொறுப்பை வரலாற்று ஆசிரியர்களிடம் விட்டுவிடுகிறார் ஷாபிமரிக்கார். ஸாஹிறாக் கல்லூரி மீளக் கட்டியெழுப்பப்பட்ட காலமாக ஷாபிமரிக்கார் அதிபராக இருந்த 01.01.1967 - 30.06.1982 வரையான காலப்பகுதியைக் கொள்ளலாம். கட்டணம் அறவிறாடத தனியார் பாடசாலையான போது அதை 6 மாதங்கள் கூட நடத்த முடியாமல் போன அனுபவம் ஷாபிமரிக்கார் பொறுப்பேற்கமுன் ஸாஹிறாக் கல்லூரிக்கு இருந்தது.



மீண்டும் தனியார் பாடசாலையான கொழும்பு ஸாஹிறாவின் முதலாவது பழைய மாணவர் சங்கம் (1967)

ஷாபிமரிக்கார் தனியார் பாடசாலையாகப் பொறுப்பேற்ற கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் முதலாவது பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக, கொழும்பு ஸாஹிறாவை அரசாங்கத்திடமிருந்து மீளப் பெறுவதற்கு பிரிவிகவுன்சில் வரை வழக்கை கொண்டு சென்று வெற்றியீட்டிப் புகழ்பெற்ற முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் ஏ.ஸி.எம். அமீர் தெரிவு செய்யப்பட்டார். அட்வகேட் ஏ. செய்யது அஹமத், டாக்டர் எம். மொஹிதீன் ஹசன், ஏ.எச்.எல்.ஏ. சலீம், செனட்டர் ஏ.ஆர்.எம். ஹமீம், டாக்டர் எம்.எல்.எம். இஸ்ஸதீன், எம்.ஏ. பாக்கீர் மாக்கார், ஏ.எல்.எம். ஹாஷிம், எஸ்.பி.எம். ஹுசைன் ஆகியோர் உப தலைவர்களாகவும், எம்.ரி.ஏ. புர்கான் செயலாளராகவும் செயற்பட்டனர். மக்கி ஹாஷிம் உப செயலாளரானார். பொருளாளராக எம்.எம்.ஷெரீபும், உதவிப் பொருளாளராக ஏ.ஸீ.எம். ஹுசைனும் தெரிவாகினர். நிருவாக சபையில், கல்லூரி அதிபர் (உத்தியோகவழி), எம்.எச்.எம். ஹம்ஸா, ஏ.ஏ.எம். மர்லீன், பி.எம். ஜமால்தீன், ஏ.எச்.ஏ. சமத், எம்.எஸ்.ஏ. றஸ்ஸாக், எம்.யு. சூபி இஸ்மாயில், ஏ.ஸி.எம். றவூப், கே.எஸ். மொஹமட், எம்.பி.எம். கௌஸ், ஏ.எச்.எம். பாறுக், எம்.எம். பஹாவுதீன், எம். பத்றி ஹாஷிம், ஏ.டபிள்யு.எம். றாஸிக் மரைக்கார், ரி.ஏ. ஜாயா, ஏ.எம்.எம். ஜலீல், எம்.வை.எம். பளீல், ஏ.ஜே.எம். லாபிர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். காத்திரமானவர்களைக் கொண்ட பழைய மாணவர் சங்கமாக இது அமைந்தது.

அதிபர் ஷாபிமரிக்காரின் தலைமையில் பஷீர் அஹமத் (உப அதிபர்), எம்.எச். ஆமித் எம்.எச்.எஸ். மரைக்கார், ஓ.எம்.எம். ஹுசைன், எம்.ஐ,.எம். எச். பாக்கீர் ஆகியோரை உப தலைவர்களாகவும், எம்.எல்.எம். பாறூக்கைச் செயலாளராகவும் கொண்டு பெற்றார்-ஆசிரியர் சங்கம் இயக்கம் பெற்றது.

டாக்டர் எம்.ஸி.எம். கலீல் தலைமையில் ஸாஹிறாக் கல்லூரி நலனோம்பு சங்கமும் செயலாற்றத் தொடங்கியது. ஏ. செய்யித் அஹமத் பின்னர் பழைய மாணவர் சங்கத் தலைவராகி கல்லூரிக்காக உழைத்தார். மருதானைப் பள்ளிவாசல் நிருவாகக் குழு ஷாபிமரிக்காருக்கு உறுதுணையாகவிருந்தது. ஏ.எச்.எம். இஸ்மாயில் கல்லூரியின் முகாமையாளராக தனது பணியை மீளத்தொடங்கினார்.



பெற்றார் ஆசிரியர் சங்கம் - 1967 / 1968



கல்லூரியின் நலன் புரிச்சங்கம் -1967

அஸீஸ் அதிபராகவிருந்த போது ஸாஹிறாக் கல்லூரியை அரசாங்கம் சுவீகரித்தமைக்கான காரணத்தைப் புரிந்து கொள்வது ஷாபிமரைக்கார் இக் கல்லூரியை நடாத்துவதற்கு எவ்வளவு சிரமங்களை எதிர்நோக்கியிருப்பார் என்பதை ஊகிக்கச் செய்யும்.

> "Under a new act of Parliament which enabled the state to take over old privately managed schools, Zahira opted in December 1960 to become a private non fee-levying school. It meant that Mr.Azeez had to find the money to run the school almost entirely from private contributions and the Maradana Mosque Committee. After a period of six months of successful management the principal found it difficult to make ends meet and on a particular month the mosque committee allegedly defaulted payment of teachers' salaries. The education department took over the school as a Director Managed School. This event took the Muslim community by surprise and the Mosque committee was compelled to take legal action. The Mosque Committee lost the case in Ceylon, but on appealing to the Privy Council, the latter ordered the return of the school to the Mosque Committee" (Kaleel Dr. M.C.M., Zahira College 85th Anniversary Souvenir – 1977)

என்று கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்கக் காரணமாக அமைந்த நிலைபரத்தை டாக்டர் எம்.ஸி.எம். கலீல் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஸாஹிறாக் கல்லூரி 85ஆவது ஆண்டு நிறைவு மலருக்கு (1977) கலீல் அனுப்பிவைத்த செய்தியில் இது காணப்படுகிறது. ஸாஹிறாக் கல்லூரி 1960இல் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையானபோது, தனியார் நன்கொடைகளிலும் மருதானைப் பள்ளிவாசல் நிருவாகத்திலும் தங்கியிருக்கும் நிலை அதற்கு ஏற்பட்ட போது, 6 மாதங்களே ஸாஹிறாவை பள்ளிவாசல்

குழுவினாலும், அஸீஸினாலும் பரிபாலிக்க முடிந்தது. ஒரு குறிப்பிட்ட மாதம் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டபோது ஸாஹிறாவை அரசாங்கம் பொறுப்பேற்றது என்று டாக்டர் கலீல் இதைப் பதிவு செய்திருக்கிறார். மருதானைப் பள்ளிவாசல் நிருவாகமும் அஸீஸும் 6 மாதங்கள் கூடச் செய்யமுடியாததை ஷாபிமரிக்கார் 15½ வருடங்கள் செய்தார். ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிலவேளைகளில் சிக்கல் ஏற்படும் பொழுது இரவோடிரவாக பேருவலைக்குச் சென்று நளீம் ஹாஜியார் போன்றோரிடமும், கொழும்பில் எஸ்.பி.எம். ஹுஸைர் போன்றோரிடமும் கடனுக்குப் பணம் பெற்று வந்து மறுநாள் காலையில் சம்பளம் வழங்கிய நிகழ்வுகளும் பல இருந்திருக்கின்றன. அதனை நானும் நன்கறிவேன். பள்ளிவாசல் நிருவாகத்தின் கனதியை நன்கு தெரிந்து வைத்திருந்தவர் ஷாபிமரிக்கார். அந்த நிருவாகத்தின் பொறுப்பில் கல்லூரியை முற்றுமுழுதாக விட்டுவிட்டால் 6 மாதங்களுக்கு மேல் ஸாஹிறாவை ஷாபிமரிக்காரினாலும் நடத்த முடியாமல் போயிருக்கும். தனி மனிதனாக ஸாஹிறாவை 15½வருடங்கள் உயிர்வாழச் செய்தவர் அவர். இந்த உண்மையை ஒருசிலரே அறிந்திருந்தனர். ஷாபிமரிக்கார் போன்றோரின் அயராத போராட்டத்தின் விளைவாகவே ஸாஹிறாக் கல்லூரி உள்ளிட்ட பல தனியார் பாடசாலைகள் 01.01.1980இல் கட்டணம் அறவிடாத அரச உதவிபெறும் பாடசாலைகளாகி தகுதியான ஆசிரியர்களின் சம்பளத்தையும் அரசாங்கத்திடம் இருந்து பெறமுடிந்தது. தனியார் பாடசாலை ஆசிரியர்களும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொணரப்பட்டனர். அது ஷாபிமரிக்காருக்குப் பின் ஸாஹிறாக் கல்லூரியை நடத்தியோருக்கு வாய்ப்பான நிலையை ஏற்படுத்தியது.

3.2 கல்வி நிருவாகக் கட்டமைப்பு

ஏ.எச்.எம். ராஸிக் என்ற ஒரேயொரு ஆங்கில ஆசிரியருடனேயே ஷாபிமரைக்கார் ஸாஹிறாவைப் பொறுப்பேற்றார். அதனால் கல்லூரியில் கல்வி நிருவாகக் கட்டமைப் பொன்றைப் புதிதாக ஏற்படுத்த வேண்டியிருந்து. பஷீர் அஹமத் உதவி அதிபராக 17.01.1967இல் நியமிக்கப்பட்டார். ஏ. ஸி.பி.எம். மொனராகல சிரேட்ட மேற் பார்வையாளராகவும் (18.02.1967), டி.ஆர். தோமஸ் கனிட்ட மேற்பார்வை யாளராகவும் (சிங்கள, ஆங்கிலத் துறைகள்), என். இராஜசிங்கம்



ஷாபி 1967 இல் ஏற்படுத்திக் கொண்ட ஆசிரியர் குழாம்

தமிழ்த்துறை மேற்பார்வையாளராகவும் (26.02.1967) நியமிக்கப்பட்டனர். பழைய மாணவர் சங்கத் தலைவர் அட்டோர்ணி ஜெனரல் ஏ.எல்.எம். அமீர் கியு.எல். 19.01.1967இலும், அதன் உபதலைவர் அட்வகேட் ஏ. செய்யிது அஹமத் 18.02.1967இலும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உரை நிகழ்த்தினர். பஷீர் அஹமதைத் தொடர்ந்து ஏ.எல்.பி.எம். மொனராகலையும், அவர் 10.12.1975இல் ஓய்வு பெற்றபோது அவரின் இடத்திற்கு ஆர்.எம். அபேவர்த்தனவும், அவரின் பின் அபேகுணவர்த்தனவும் உப அதிபர்களாகி ஷாபியின் கல்வி நிருவாகத்தை முன்னெடுத்தனர். இராஜசிங்கத்தின் பின் எம்.எஸ். அல்லாப்பிச்சை தமிழ்த்துறைக்கும், தோமஸுக்குப் பின் அபேகுணவர்த்தன கனிட்ட சிங்களத் துறைக்கும் மேற்பார்வையாளர்களாயினர். மொனராகல உதவி அதிபரானதும் ஏ. ஜி.ஓ. பெரேரா, அபேவர்த்தன, எஸ்.ஜே.ஏ. றொட்றிக்கோ, ஜே.ஏ. கஜநாயக்க ஆகியோர் முறையே சிரேட்ட மேற்பார்வையாளர்களாகிப் பணி செய்தனர். மட்டக்களப்பு மத்திய கல்லூரி அதிபராகவிருந்த பி.ரி. சின்னையா சிரேட்ட ஆங்கிலத்துறை மேற்பார்வையாளராகவும், டி.ஜி. வீரமந்திரி விஞ்ஞானத்துறை மேற்பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டனர். வீரமந்திரி நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஈ.ஸி. பொன்னுத்துரையின் மேற்பார்வையில் விஞ்ஞானத்துறை இயங்கியது.

திருமதி ஸி.டி. ஜேகப், டி.ஆர். தோமஸின் மேற்பார்வையின் கீழ் 1968/69களில் முதலாம் வகுப்பிற்குப் பொறுப்பாசிரியையாகவிருந்தார். திருமதி எச்.என்.ஹாஷிம் ஆரம்பப் பிரிவு மேற்பார்வையாளராக 1968 – 1969 செப்டம்பர் வரை கடமையாற்றினார். 1969 செப்டம்பரில் இருந்து திருமதி எம். ஜாயா ஆரம்பப்பிரிவு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். ரி.பி. ஜாயாவின் மகன் ரி.ஏ. ஜாயாவின் மனைவியே இவர். ஷாபிமரிக்கார் ஓய்வு பெறும் வரை ஆரம்பப்பிரிவு மேற்பார்வையாளராக இவர் சிறப்புப் பணியாற்றினார்.

ஸாஹிறாவின் அஸீஸ்கால நூலகரான எம்.எல்.ஏ. பாறூக், ஷாபிமரிக்கார் காலத்திலும் தொடர்ந்து நூலகராகப்பணி செய்தார்.

முதலாவது உதவி அதிபர் பஷீர் அஹமதைத் தவிர அவரைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட உதவி அதிபர்கள் அனைவருமே பெரும்பான்மை இனத்தவர்களாகவிருந்தனர். துறைத் தலைவர்களும், திருமதி ஜாயா, அல்லாப்பிச்சை தவிர ஏனையோர் சிங்கள, தமிழ் இனத்தவர்களாகவிருந்தனர். தன்னுடைய காலத்தில் ஸாஹிறாக் கல்லூரியில் பணிபுரிந்த பிற இனத்தவர்களை ஷாபிமரிக்கார் கண்ணியமாக நடாத்தி அவர்களின் சிறப்புச் சேவைகளைத் தன்னுடைய சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்தார்.

அந்த வகையில் ஷாபிமரிக்கார் கால ஸாஹிறாக் கல்லூரி இன ஐக்கியத்தின் களமாக விளங்கியது.

ஜீ.ஸீ.ஈ. (உயர்) வகுப்புகளில் ஆற்றல் வாய்ந்த ஆசிரியர்கள் பலர் ஷாபிமரைக்காரின் காலத்தில் கற்பித்துக் கொண்டிருந்தனர். தமிழ்த்துறையில் எம்.எஸ். அல்லாப்பிச்சை தமிழ் கற்பித்தார். பேராசிரியர் எம். எம். உவைஸுக்குப் பின் தமிழைச் சிறப்புப் பாடமாக பல்கலைக்கழகத்தில் பயின்றவர் அல்லாப்பிச்சை. மன்னாரைச்சேர்ந்த இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழையமாணவரும் கூட. 'சாந்தி மார்க்கம்' நூல் எழுதிப்புகழ்பெற்ற மௌலவி ஏ.எம்.எல்.எம். பழீல் இஸ்லாமிய நாகரிகம் கற்பித்தார். பொருளியலை நானும், புவியியலை எஸ்.எம்.ரி.எம். நிஸாரும், ஸீ.எம்.ஏ. அமீனும் தமிழ்த் துறையில் கற்பித்தோம். எம்.எம்.ஏ.றீஸா, எம்.எச். அபூ உபைதா, என்.யு.எம். ஹுசைன், அல்-ஆலிம், ஏ.ஆர்.எம்.ஸறூக் ஆகியோர் ஆங்கில மொழிமூல உயர் வர்த்தகக் கல்வித்துறையில் கற்பித்தனர். அத்துறையில் புவியியலை நான் கற்பித்தேன். ஈ.ஸி.பொன்னுத்துரை, செல்வி ரட்ணம் ஆகியோர் உயர் விஞ்ஞானத் துறையில் கற்பித்தனர்.

3.3 மாணவர் மேன்மை



கல்லூரி மாணவத் தலைவர்கள் - 1967

ஷாபிமரிக்கார் கல்லூரியைப் பொறுப் பேற்றதும் கல்லூரியின் மாணவத் தலைவர் குழாம் சீரமைக்கப்பட்டது. சிரேட்ட மாணவத் தலைவனாக எம். நு.'மான் ஹுசைன் நியமிக்கப்பட்டார். ஆர். பரமேஸ்வரன், எம். அன்சாரி, பி.ஆமித், எம்.இஸட்.எம்.ஆர். ஹஸன், ஏ.எஸ்.எம். முஸம்மில், ஜே.கே. கனகராயர், எம்.பஸால் றஸீன், ஏ.எச். கனி, எம்.வை.எம். சபறுல்லா, ஏ.எஸ்.எம்.ஆர். பாறூக், ரி.எம்.என். ஹமீத், எம்.வை.எம்.நிஸாம், எம். வை.எம். பாயிஸ் ஆகியோர் மாணவத் தலைவர்களாகத் தம் பணிகளைத் தொடங்கினர். இவர்களிற் பலர் இப்போது பிரக்கியாதி பெற்று விளங்குகின்றனர். கல்லூரி வெளிக்கொணர்ந்த 'த கிறசன்ட் -1968' ஆண்டு மலரும் மாணவத் தலைவர்களின் முயற்சியில் தான் வெளிவந்தது.

ஷாபிமரிக்கார் 01.01.1967இல் கல்லூரியைப் பொறுப்பேற்றபின் முதலாவது தொகுதி மாணவர்கள் 1967/68இல் பல்கலைக்கழகம் சென்றனர். ஹுசைன் இஸ்மாயில், எஸ். சுபைதீன், எஸ்.எம்.பி.எம். ஸறூக் ஆகியோர் இதில் அடங்கினர். இவர்கள் கலைத்துறைக்கு அனுமதி பெற்றனர்.

ஷாம்ஹாஸ்ட் ஷரீப் விஞ்ஞானத்துறைக்கு அனுமதிபெற்றார் (1967/68), கல்லூரி றக்கர் அணிக் கப்டனாக (1967), மல்யுத்த வீரனாக, விஞ்ஞானக்கழகத் தலைவராக (1967) வெல்லாம் செயற்பட்டவர் அவர். இரண்டாவது தொகுதி மாணவர்கள் 1968/69இல் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர். எம்.எஸ்.எம். அனஸ், எம். நிஸ்தார், எஸ்.எம்.எம். தௌபீக், ஏ.ஏ. அஸீஸ், ஆர். பரமேஸ்வரன், ராமநாதன் ஆகியோர் கலைத்துறைக்கும், ஜே.கே.கனகராயர் சட்டத்துறைக்கும் அனுமதி பெற்றனர். கனகராயர் மாணவத் தலைவர்களுள் ஒருவராகவிருந்தவர். 1967இல் கல்லூரியின் சிறந்த மாணவருக்குரிய தங்கப்பதக்கத்தை பெற்றவர் இவர். எஸ்.எம். எம். ஷாபிமரிக்கார் (1968), கே. திருஞானசம்பந்தன், எஸ். நேபுகாத் நேச்சர், எம்எஸ்.எம். சாதிக், ஐ.எல்.ஏ. ஜப்பார் (1974) ஏ.ஏ.ஏ. நூர்தீன் (1976) ஆகியோர் விஞ்ஞானத்துறைக்குத் தெரிவாகினர். கல்லூரியின் சிரேட்ட மாணவத் தலைவனாகவிருந்த (1968) ஏ.எஸ்.எம். முஸம்மில் விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவாகியும் அவர் செல்லவில்லை. இப்போது அவர் பிரபல கணக்காளராக விளங்குகிறார். எம்.வை.எம். சபருல்லா பல்வைத்தியத் துறைக்குத் தெரிவானார். இவர் விடுதி மாணவ மன்றத் (Hostel Forum) தலைவராகவும், கல்லூரி இயற்கை விஞ்ஞான மன்றத்தின் தாபகத் தலைவராகவும் (1969) இருந்தவர். எம்.எச்.ஏ. நிஸார் வர்த்தகத்துறைக்கு அனுமதி பெற்றார்(1977). யூ.எல்.எம். நிஸாஹிர் (1973), எம்.எம். நூன் (1973), ஏ.எம். ஜிப்றி (1974), ஏ.எச். அப்துல் பரீத் (1977) ஏ.எல். சம்சுதீன் (1977) எஸ்.ஏ.அப்துல் காதர் (1979), எம்.வை.எம். நியாஸ் (1979), ஏ.எஸ். அப்துல் ஸலாம் (1980) ஆகியோர் வர்த்தகத்துறைக்கு அனுமதி பெற்றனர். ஏ.டபிள்யு.ஏ. சத்தார் (1975), எம்.பி. இப்திகார் முகம்மத் (1975) ஆகியோர் சட்டத்துறைக்கு அனுமதி பெற்றனர். 1970களுக்குப் பின்னர் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் பல்கலைக்கழக அனுமதியை வெகுவாகப் பாதித்தது.

ஸாஹிறாக்கல்லூரியின் மாணவத் தலைவர்களுள் ஒருவராகவிருந்த (1967, 1968) எம்.வை.எம். நிஸாம் இப்போது கணக்காளராக விருக்கிறார். எம்.யு.எம். தாரிக் பொஸ்வானாவில் பட்டயக்கணக்காளராக விருக்கிறார். அம்ஜாடீன், அம்ஜா போன்ற ஸாஹிறா மாணவர்கள் பட்டயக்கணக்காளர்களாக விளங்குகின்றனர். ஷாபிமரைக்கார் காலத்தில் ஸாஹிறாக் கல்லூரியில் கற்று 03.06.1982இல் அவர் ஸாஹிறாவை விட்டு நீங்கிய பின் 1983 ஆகஸ்டில் நடைபெற்ற ஜீ.ஸீ.ஈ.(உயர்) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்த 20 மாணவர்கள் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும். அவர்களில் 16 பேர் ஆங்கில மொழிமூல வர்த்தகத்துறையில் கற்றவர்கள்.

இருவர் சிங்களமொழிமூல வர்த்தகத் துறையிலும் ஒருவர் தமிழ் மொழிமூல வர்த்தகத்துறையிலும் கற்றவர்கள். இன்னொருவர் சிங்களமொழிமூல விஞ்ஞானத்துறையில் கற்றவர். ஆங்கில மொழிமூல வர்த்தகத்துறையில் கற்ற எம்.எம்.எம். அமீன், எம்.இஸட்.மற்சூக், எம்.ஐ.தாஹிர் ஆகியோர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வர்த்தகத்துறைக்கும், எம்.எஸ். பக்கீர் மொஸ்கோ பல்கலைக்கழக வைத்தியத்துறைக்கும் அனுமதி பெற்றனர். ஷாபிமரிக்கார் காலத்தில் தனது கற்கையைத் தொடங்கிய எம்.ஏ.நிலாம்டீன் 1986இல் கொழும்புப் பல்கலைக்கழக வர்த்தகத் துறைக்குத் தெரிவானார்.

ஷாபிமரிக்கார் கால மாணவர்கள் பலர் சட்டத்தரணிகளாக விளங்குகின்றனர். எம்.எம்.ஏ. றீஸா, எம்.வை.எம். பாயிஸ், எம்.எம். ஸுஹைர், ஏ.எச்.ஜி. அமீன், எம்.சீ.எம். ரஹ்மத்துல்லா, பிரதி அமைச்சர் எம்.எஸ். அமீர் அலி, ஏ.எம். ஜிப்றி, ஏ.எம். சமீர், கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரி அஷ்ரப் றூமி போன்றவர்கள் அவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சிலர். எம்.வை.எம்.பாயிஸ் ஸாஹிறாக்கல்லூரியில் 1967, 1968களில் மாணவத் தலைவர்களுள் ஒருவராகவும் பின்னர் சிரேஷ்ட மாணவத் தலைவராகவும் இருந்தவர். அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான மக்கள் பிரதிநிதித்துவக்குழுவின் உறுப்பினராக (2016-2017), இலங்கை பைத்துல்மால் நிதியத்தின் தலைவராக (2007-2016) வெல்லாம் பணிசெய்தவர். எம். எம். ஸுஹைர் ஜனாதிபதி சட்டத்தரணியாக, பாராளுமன்ற உறுப்பினராக, ஈரானின் இலங்கைக்கான தூதுவராக, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத் தலைவராகவெல்லாம் பணி செய்திருக்கிறார். இப்போது அமைச் சொன்றில் இராஜாங்கச் செயலாளராகவிருக்கிறார். ஏ.எச். கௌசுல் அமீன் பல சட்ட நூல்களை எழுதியவர். திறந்த பல்கலைக்கழகச் சட்டத்துறையிலும் சட்டக்கல்லூரியிலும் விரிவுரையாளராக இருந்தவர். ஸாஹிறாக் கல்லூரி யில் 1972களில் சிறிது காலம் கற்ற சல்மானும் சட்டத்தரணியாகியிருக்கிறார். அஹ்சன் மரைக்கார் இப்போது நீதிபதியாக இருக்கிறார். விஞ்ஞானத்துறையில் ஸாஹிறாவில் கற்ற எஸ்.எல்.ஏ. அஸீஸ் சிலான் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளராக உயர்வு பெற்றார்.

கல்லூரியின் பிரபல குத்துச் சண்டை வீரராகவிருந்து பிரதி பொலிஸ் மாஅதிபரான ரி.பி. சம்சுதீன், கல்லூரியின் மாணவத் தலைவர்களுள் ஒருவராகவிருந்து (1967/68) உதவிப் பொலிஸ் சுப்ரின்டனான (A.S.P.) ரி.எம்.என். ஹமீட் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். விஞ்ஞானத்துறையில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்திபெற்ற எம்.ஆர்.நஸீர், எம்.எஸ்.எம். பைறூஸ் ஆகிய இருவரும் 1978ஆம் ஆண்டுக்கான ஒறாபிபாஷா நினைவு புலைமைப்பரிசில் பெற்றனர். அதே ஆண்டில் ஜோர்தான் வக்ப், இஸ்லாமிய

விவகார அமைச்சர் கமால் எல். ஷரீப் இரு புலமைப்பரிசில்களை ஸாஹிறாக் கல்லூரிக்கு வழங்கினார். அவற்றுள் ஒன்று ஜோர்தான் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய ஷரீயா கற்கைக்கும், மற்றது,ஜோர்தான் ஷரீயா நிறுவகத்தில் ஷரீயா கற்பதற்குமாக வழங்கப்பட்டன. குர்ஆன் ஓதுவதில் திறமை காட்டிய ஸாஹிறாக் கல்லூரி மாணவன் எம்.எல்.எம். அஸ்மி கெய்றோ அல்-அஸ்ஹர் ஓதல் நிறுவகத்தில் (Al-Azhar Recitation Institute) கற்பதற்கு 1982இல் புலமைப்பரிசில் பெற்றார். ரஷ்யாவின் உக்ரேன் ஸப்ஸ்ரோக் மருத்துவக் கல்லூரியில் கற்று டாக்டரான சரிபுத்தீன் அல்லாப்பிச்சை, இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் தத்துவ முதுமாணிப் பட்டம் பெற்ற அவரின் சகோதரன் ஏ.எம். மிஹ்ழார் ஆகியோரெல்லாம் ஷாபிமரிக்கார் காலத்தில் ஸாஹிறாக் கல்லூரியில் கற்றவர்களே.

ஷாபி கால மாணவர்களான எம்.எஸ். அமீர்அலி, எம்.எச்.எம். சல்மான், முஜீபுர்ரஹ்மான் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களாகி சமூகத்தலைமை ஏற்றனர். இவர்களுள் அமீர் அலி அமைச்சராகவும் இருந்திருக்கிறார். 1967-68களில் கல்லூரி மாணவத் தலைவர்களுள் ஒருவராக, விடுதி சிரேட்ட மாணவத் தலைவராக, விடுதி மாணவ மன்றத்தலைவராக, கல்லூரி றக்கர், உதைபந்தாட்ட அணிகளில் விளையாடிய ஏ.ஜே.எம். முஸம்மில் கொழும்பு மாநகர சபை மேயராக விளங்கினார். மேல்மாகாண சபை அங்கத்தவராகவும் அவர் இருந்திருக்கிறார். எம்.என்.எம். ஷாம் நவாஸ், எப்.எம். அரூஸ் ஆகியோர் கொழும்பு மாநகரசபை அங்கத்தவர்களாக விருந்தனர். ஷாபி கால மாணவர்களுள் ஒருவரான பௌஸான் அன்வர் இப்போது பாலஸ்தீனத்தில் இலங்கைக்கான தூதுவராக இருக்கிறார்.

பொலநறுவை மாவட்டத்தில் திவுலான அல்-அக்ஸா மகாவித்தியாலயம், தம்பாளை அல்-ஹிலால் மத்திய கல்லூரி, பொலநறுவை முஸ்லிம் மத்திய கல்லூரிகளின் அதிபராகவிருந்து, தம்மன்கடவை கோட்டக் கல்விப் பணிப்பாளராகவிருக்கும் எஸ்.எச்.எம். முஸ்தபா, பொலநறுவை முஸ்லிம் மத்திய கல்லூரி, கல்எல்ல அல்-அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பனவற்றின் அதிபராகவும், சமூகக்கல்விப் பாட உதவிப் பணிப்பாளராகவுமிருந்த எம்.வை. அஹமத்லெப்பை, பொலநறுவைக் கல்வி வலய தமிழ்மொழிப் பாட ஆசிரிய ஆலோசகராகவிருந்த எம்.ஐ. ஈசாலெப்பை, தம்பாளை அல்-றிபாய் முஸ்லிம் மகா வித்தியாலயம், பொலநறுவை முஸ்லிம் மத்திய கல்லூரிகளின் அதிபராகவிருந்த எம்.எப்.எம். முபாறக், சுங்காவில முஸ்லிம் மகா வித்தியாலயம், தம்பாளை அல்-ஹிலால் மத்திய கல்லூரிகளின் அதிபராகவிருந்த எஸ்.எல். புஹார்தீன் ஆகியோரெல்லாம்

ஷாபிமரிக்கார் காலத்தில் கொழும்பு ஸாஹிறாவில் உயர் வகுப்புகளில் கற்றவர்களே. கல்முனைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவிருந்த எம். ரி.ஏ. தௌபீக், அக்கரைப்பற்று கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) பீ.எம். அப்துல்ஹசன், கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் உப அதிபராகவிருந்த எம்.எஸ்.எம். ஹம்ஸா ஆகியோரும் ஷாபிமரிக்கார்கால ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களே. கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராகவிருந்த கே. முஹம்மதுத் தம்பியும் ஷாபிமரிக்கார் காலத்தில் சில காலம், 1967களில் ஸாஹிறாவில் கற்றவரே.

ஹமீடியாஸ் உரிமையாளர் பௌசுல் ஹமீத், அப்துல்லா இன்டஸ்ரீஸ் உரிமையாளர்களான ஏ. ஆரிப் ரிபாய்தீன், ஏ. ஹசன் முபாரக், ஏ. நிலாம்தீன், ஏ. இமாம்தீன், பிக்சர்பலஸ் எம்.எச்.எம். தஹ்லான், தொழிலதிபர் இப்றாஹீம் பாறூக், சிங்கப்பூர் தாஹா அன்ட் கம்பனி மனேஜிங் டிரக்டர் நிஸாம் தாஹா ஆகியோரெல்லாம் ஷாபிமரிக்கார் கால ஸாஹிறாக் கல்லூரி மாணவர்கள். பேருவலையைச் சேர்ந்த பிரபல மாணிக்கக்கல் வியாபாரிகள் பலர் ஸாஹிறாவில் ஷாபிமரிக்கார் காலத்தில் கற்றவர்களே.

3.4 விடுதி நிருவாகம்

ஷாபிமரிக்கார் அதிபரானதும் புதிய நிருவாகத்தின் கீழ் விடுதி 19.01.1967இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. எஸ்.எம்.அம்ஜதீன் 17.01.1967இல் விடுதி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். நூர்ஹமீத் 01.08.1967இல் இருந்து விடுதியாசிரியரானார். அப்போது கனிட்ட மாணவர்கள் அஸீஸ் காலத்தில் அமைக்கப்பட்ட பூரணத்துவப்படுத்தப்படாத விடுதிக் கட்டிடத்தின் தள மாடியிலும், சிரேட்ட மாணவர்கள் சின்னப்பள்ளி வளாகத்தில் இருந்த றொட்றிகோ பங்களாவிலும் தங்கிக் கற்றனர். ஷாபிமரிக்காரின் முயற்சியில் விடுதிக் கட்டிடம் பூரணப் படுத்தப்பட்டபோது றொட்றிகோ பங்களாவில் தங்கிப் படித்த சிரேட்ட மாணவர்கள் புதிய கட்டிடத்தின் முதலாம் மாடிக்கும் (பல்லாக்லெப்பை மண்டபம்), தளமாடியில் தங்கியிருந்த கனிட்ட மாணவர்கள் 2ஆம் மாடிக்கும் (நளீம் ஹாஜியார் மண்டபம்), 29.06.1969இல் மாற்றப் பட்டனர். புதிய விடுதிக் கட்டிடமும் அதனோடிணைந்த பார்வையாளர் கூடமும் (Pavilion) அன்றைய பிரதமரினால் உத்தியோகபூர்வமாக 11.07.1969இல் திறந்து வைக்கப்பட்டது.

சமய அடிப்படையில் மாணவர்களின் விடுதி வாழ்வு அமைந்திருந்தது. ஐவேளைத் தொழுகையையும் மருதானை ஜும்ஆப் பள்ளிவாசலில் நிறைவேற்றும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஞாயிற்றுக் கிழமைகளில் மௌலவிகளால் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

எப்போதுமே விடுதியில் மௌலவிகள் மூவர் தங்கியிருந்து மாணவர்களின் சமயத் தேவைகளை நிறைவேற்றினர். சிறுவர் விடுதியில் குர்ஆன் ஓதிக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மௌலவி ஹஸன் லெப்பை, மௌலவி ஐ.எம். பளீல், மௌலவி நெய்னா முஹம்மத் ஆகியோர் விடுதியில் தங்கியிருந்து மாணவர்களின் சமய நலன்களைக் கவனித்தனர்.



விடுதி மாணவர் மன்றம் - 1972

எஸ். றட்ணேசன், ஏ.ஜி.ஒ. பெரேரா. எம்.எஸ். அல்லாப்பிச்சை ஆகியோர் முறையே விடுதி மேற்பார்வையாளர் களாகச் செயற்பட்டனர். 'விடுதி மாணவர் மன்றம்' ஒன்றும் சிறப்பாக இயங்கியது. அதன் பொறுப்பாசிரியர் களாக நானும் (Tutor in-charge), எம்.எஸ். அல்லாப்பிச்சை (தமிழ்), எஸ்.எம்.ரி.எம். நிஸார் (ஆங்கிலம்) ஆகியோரும் செயற்பட்டு விடுதி மாணவர்களின் ஆளுமை விருத்திக்குப் பங்களிப்புச் செய்தோம். மும்மொழி களிலும் செயற்பட்ட அம்மன்றம் Angora என்ற மகுடத்தில் மலர் ஒன்றையும் 1972இல் வெளியிட்டது.

ஜாயா காலத்தில் இருந்தவாறு இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் விடுதி மாணவர்கள் அனைவரும் ஒரே இல்ல மாணவர்களாகவே (அங்கோரா) ஷாபிமரிக்கார் காலத்திலும் வகைப்படுத்தப்பட்டனர். ஆரம்பத்தில் எம்.எஸ். அல்லாப்பிச்சையும் பின்னர் நீண்ட காலமாக நானும் அவ்வில்லத்தின் பொறுப்பாசிரியர்களாக விருந்தோம். அங்கோராஇல்ல மாணவர்களே அனேகமாக சம்பியன் விருதை வெல்வது வழக்கமாக இருந்தது. றக்கர், ஹொக்கி, நீச்சல், கிரிக்கெட் விளையாட்டுக்களிலும் இவ்வில்ல மாணவர்களே முன்னிலையில் இருந்தனர். ஆர்.ஐ.ரி. அலஸ் 'கல்விப் பணிப்பாளர்' மகுடத்தில் ஸாஹிறாவின் நிருவாகத்துள் நுழைந்தபோது விடுதி மாணவர் கள் சகல இல்லங்களுக்கும் சமமாகப் பகிரப்பட்டனர். ஸாஹிறாக் கல்லூரியின் வரலாறு, பாரம்பரியம் தெரியாதவர்களின் செயலாக அச் செயல் அமைந்திருந்தது. ஒரு குடும்பமாக வாழ்ந்த விடுதி மாணவர்களின் ஒற்றுமைக்கு அது சவாலாக அமைந்தது.

இதைவிட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான சிறுவர் விடுதியொன்றும் இயங்கியது. திருமதி ஹமீத், திருமதி மர்ளியா, திருமதி நூர்தீன் ஆகியோர் அதன் பொறுப்பாளர்களாக இருந்திருக்கின்றனர்.

3.5 விளையாட்டுத்துறையில் முதன்மை



கல்லூரி 'றக்கர்' அணி (1st XV) - 1967



கல்லூரி 'றக்கர்' அணி (1st XV) - 1972. அதிபர், உபஅதிபர், பொறுப்பாசிரியர் (நுஹ்யா), பயிற்றுனர் (மல்கம்றைட்) ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

ஜாயா காலத்தில், 1924இல் ஸாஹிறாவில் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட றக்கர் விளையாட்டில் ஸாஹிறா புகழ்பெற்று விளங்கியது. ஆரம்பத்தில் றக்கர் விளையாடிய முதல் மூன்று பாடசாலைகளுள் ஸாஹிறாவும் ஒன்று. ஏ.எச்.ஏ.சமத், ஏ.எம்.ஓ. முஹ்லார், எம்.ரி.ஆர்.புஆத், மல்கம் றைட், இப்றாஹிம் ஹமீத் ஆகியோர் மாணவர்களைப் பயிற்றுவித்தனர். இலங்கை அணியில் விளையாடிய ஹிஷாம் ஆப்தீன் ஸாஹிறாவில் உருவானவரே. கப்டன் பாஸியும் பின்னர் நானும் ஷாபிமரிக்கார் காலத்தில் றக்கர் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களாக விருந்தோம்.

ஸாஹிறாவின் கிரிக்கட் பயிற்றுவிப்பாளர்களாக எம். தேவராஜா, குலாம் நாஸிக் ஆகியோர் பணியாற்றினர். ஆரம்பத்தில் ஈ.ஸி. பொன்னுத்துரையும் பின்னர் ஆனந்தபறணகேயும் பொறுப்பாசிரியர்களாக விருந்தனர். கொழும்பு வடக்கு கிரிக்கட் அணிக்கு 1967இல் தலைமை தாங்கியவர் ஸாஹிறாவின் கிரிக்கட் அணியில் விளையாடிய பி.ஆமித் என்பது கவனத்திற்குரியது.

ஹொக்கி விளையாட்டு ஷாபிமரிக்கார் காலத்திலேயே, 1968இல், ஸாஹிறாக் கல்லூரியில் முதன் முதல் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. ஸாஹிறாக் கல்லூரியில் ஹொக்கிக் கழகம், ஹொக்கி ஏற்பாட்டுக் குழு, ஹொக்கி சுற்றுப் போட்டிக் குழு என்பனவெல்லம் இயங்கின. முதலிரண்டும் கல்லூரி அதிபர் தலைமையிலும் மற்றையது உப அதிபரின் தலைமையிலும் இயங்கின. அதிபர் ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கிய 'ஹொக்கிக் கழகம்' உப அதிபர் (உப தலைவர்), ரி.ஜி. ஹமீத் (பயிற்றுனர்), எச். விஜயகோன் (செயலாளர்) ஆகியோரையும், நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக ஆர்.எம். அபேவர்த்தன, எம்.எஸ். அல்லாப்பிச்சை, ஏ.பறணகே ஆகியோரையும் கொண்டிருந்தது. இக் கழகத்தின் நிருவாகக் குழுவில் 1974,1975களில் நானும் இடம்பெற்றிருந்தேன். இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் ரி. பி. ஜாயா ஞாபகார்த்தக் கேடயத்துக்கான எழுவர் அணி (Seven a side)

சுற்றுப் போட்டிகளை 'ஹொக்கிக் கழகம்' நடாத்தியது. இச்சுற்றுப் போட்டிகள் 1972இல் இருந்து ஒவ்வொரு வருடமும் நடைபெற்றன. கொழும்பு, கண்டி, மாத்தளையைச் சேர்ந்த பிரபல பாடசாலைகள் இதில் பங்கு கொண்டன. எஸ்.எம்.ரி.எம். நிஸார் சில காலம் ஹொக்கிப் பொறுப்பாசிரியராக விருந்தார். எம்.ரி.எம். நஸீர் முதலான பிரபல ஹொக்கி விளையாட்டு வீரர்களை ஸாஹிறா ஷாபிகாலத்தில் உருவாக்கித் தந்தது.



கல்லூரி மல்யுத்த வீரர்கள் - 1967

குத்துச் சண்டையிலும் ஸாஹிறா பிரபல்யம் பெற்றிருந்தது. பாடசாலைகளுக்கிடையிலான குத்துச் சண்டை சம்பியன் விருதுக்கான (Stubb's Shield) இறுதிப் போட்டிக்கு ஸாஹிறாக் கல்லூரி 1968இல் தகுதி பெற்றது. அதன்பின், மூன்று வருடங்கள் 1969, 1970, 1971களில், சம்பியன் விருதை (Stubb's Shield) தொடர்ச்சியாக ஸாஹிறா வென்றது. 1970இல் இளையோர் குத்துச் சண்டைக்கான சம்பியன் விருது ஸாஹிறாவுக்குக் கிடைத்தது. வயது வந்தோருக்கான (Adult) இலங்கைக் குத்துச் சண்டை விருதும் (Sir Hugh Clifford Cup) 1970, 1971களில் ஸாஹிறாவுக்குக் கிடைத்தது. தொடர்ச்சியாக இரு முறைகள் Juvenile Adult Champion விருதை வென்ற கல்லூரி, கழகம், நிறுவகம் என்ற வகையில் ஸாஹிறாவே விளங்கியது. முத்தையா சேவியர் வெற்றிக் கேடயத்தை (Muttiah Xavier Challenge Trophy)யும் ஸாஹிறா 1970,1971களில் வென்றது. அல்பேட் பெரேரா ஞாபகார்த்த வெற்றி விருதை (Albert Perera Memorial Trophy) 1971இல் ஸாஹிறாவென்றது. பம்பாய் குத்துச் சண்டை அணியை எதிர்த்துப் போட்டியிட ஸாஹிறாவின் குத்துச் சண்டை வீரர்கள் மூவர் 1971இல் தெரிவாகினர். இரு தேசிய விருதுகளை ஸாஹிறா 1972இல் வென்றது. அல்பேட் பெரேரா ஞாபகார்த்தப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு 1973இல் ஸாஹிறா தகுதி பெற்றது. பாடசாலைச் சம்பியன் விருதிற்கான (Stubb's Shield) இறுதிப் போட்டிக்கும் 1974இல் ஸாஹிறா தகுதி பெற்றது. 1975,1976களில் முப்படைகளின் குத்துச் சண்டை அணிகளின் தலைவர்கள் ஸாஹிறாக் கல்லூரியில் குத்துச் சண்டை வீரர்களாக இருந்தவர்களே என்பதும் கவனத்திற்குரியது. பிரதிப் பொலிஸ் மாஅதிபராகவிருந்த ரி.பி. சம்சுதீனும் ஸாஹிறாவின் அர்ப்பணிப்புள்ள பயிற்றுனராக இருந்த எம்.டி. பொன்சேகாவினால் ஷாபிமரிக்காரின் காலத்தில் பயிற்றப்பட்ட குத்துச் சண்டை வீரரே என்பது குறிப்பிடத்தக்கது.



கல்லூரி உதைபந்தாட்ட அணி (1st xi) - 1967

ஷாபிமரிக்கார் அதிபராகிய முதல் வருடமே 1967இல் ஸாஹிறாக் கல்லூரி பிறஸில் கிண்ணத்தை (Brazil Cup) வென்று பாடசாலைகளுக் கிடையிலான உதைப்பந்தாட்டச் சம்பியன் மகுடத்தைச் சுவீகரித்தது. 5வருடங்கள் தொடர்ச்சியாக 1967-1971வரை 20 வயதிற்குக் கீழ்ப்பட்ட மாணவர் பிரிவுக்கான உதைபந்தாட்டச் சம்பியன் விருதை (Brazil Cup) ஸாஹிறா வென்று புகழீட்டியது. 17வயதிற்குட்பட்ட பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் முதல் தடவையாக 1972இல் ஸாஹிறா மாணவர்கள் பங்கு கொண்டு சம்பியனாகி கே.பி.ஈ.டி. சில்வா விருதைச் சுவீகரித்தனர். 15வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான போட்டிகளில் முதல் தடவையாக 1973இல் பங்கு கொண்ட ஸாஹிறா, விளையாட்டுத்துறை அமைச்சின் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்தது. ஸாஹிறாவின் இரு உதைபந்தாட்ட வீரர்கள் ரி.எப். சமட் 1967இலும் எம். அமீர் முக்தார் 1969இலும் பங்கொக்கில் நடைபெற்ற ஆசிய இளைஞர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். இந்தியாவில் 1969இல் உதைபந்தாட்டச் சுற்றுப் பயணம் செய்த இலங்கை அணியில் எம்.ஜே. பாவா, எம். அமீர் முக்தார் ஆகிய இரு ஸாஹிறா வீரர்களும் பங்குகொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். ஸாஹிறா மாணவன் எம். நஸீர் 1973இல் இலங்கைப் பாடசாலைகள் அணியில் விளையாடினார். இவை ஷாபிமரிக்கார்கால ஸாஹிறாக்கல்லூரி மாணவர்கள் விளையாட்டுத் துறையில் கல்லூரிக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பெற்றுக்கொடுத்த புகழ்தரு சாதனைகள். கே. சச்சிதானந்தன், எஸ்.எம்.எம். நாமிஸ் ஆகியோர் ஷாபிமரிக்கார் காலத்தில் பயிற்றுவிப்பாளர்களாகவும், ரி.எம்.இஸட். ஹாஷிம், ஆரிப் ஆகியோர் முறையே பொறுப்பாசிரியர்களாகவும் பணிசெய்தனர்.

ஜாயா காலத்தைப் போல் அங்கோரா, பக்தாத், ஸ்தம்பூல், கொர்டோவா இல்லங்களே ஷாபி காலத்திலும் இருந்தன. அங்கோரா இல்லத்தின் பொறுப்பாசிரியராக நீண்டகாலம் (1976-1981) நான் இருந்திருக்கிறேன். ஏனைய இல்லங்களுக்கு எம்.எல்.எம். ஹஸன், எம்.எம்.ஏ. றீஸா



சம்பியன் விருதுபெற்ற அங்கோரா இல்ல மாணவர்கள் - 1967

(பக்தாத்), டபிள்யூ.ஏ. பண்டிதரத்ன, எம்.ரி.ஏ. ஆரிப், றிஸ்வி றஷாட் (ஸ்தாம்புல்), ஐ.ஸி. இஸ்மாயில், ரி. கனகரெத்தினம், அபூஉபைதா (கொர்டோவா) ஆகியோரெல்லாம் பொறுப்பாசிரியர்களாக இருந்திருக்கின்றனர். செல்வி ரி.கே. மஷுட் (அங்கோரா), செல்வி ஈ.ஸி. குவைஸிஸ் (பக்தாத்), செல்வி என்.எப். சௌஜா (கொர்டோவா), திருமதி டபிள்யூ. எச். சந்திரரத்ன (இஸ்தான்புல்) ஆகியோர் ஆரம்பப் பிரிவின் இல்லப் பொறுப்பாசிரியர்களாகவிருந்தனர்.





சம்பியன் விருதுபெற்ற அங்கோரா இல்லமாணவர்கள்

கல்லூரி உடற்பயிற்சிப் போதனாசிரியராக (PTI) கே. சச்சிதானந்தன் சிறப்புப் பணி செய்தார். அவர் பணியை கல்லூரி என்றும் நினைகூரும். திருமதி எம்.பி. சிற்றம்பலம் ஆரம்பப் பிரிவின் உடற்பயிற்சிப் போதனாசிரியராக விருந்தார். ஏ.எச்.எம். நாஸிக் கனிட்ட கிரிக்கட் பொறுப்பாசிரியராகவும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டார்.

பாராளுமன்ற விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல். டபிள்யு. மடுகல்ல (1975), பாக்கிஸ்தான் தூதுவர் அப்துல் றஊப் கான் (1976), பழைய மாணவர் சங்கத்தலைவர் எம்.ஏ.எம். ஹுசைன் (1977), பாராளுமன்ற விவகார விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சர் டி. எட்வின் திலகரட்ண (1978), நீதிபதி எம்.எம். அப்துல் காதர் (1979), கல்விப்பணிப்பாளர் ஆர்.பி. நாரம்பனாவ (1980), பாராளுமன்ற விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எம். வின்சன் பெரேரா (1981) ஆகியோரெல்லாம் ஷாபிமரிக்கார் கால இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போது பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

ஸாஹிறாக் கல்லூரி பழையமாணவர் விளையாட்டுக் கழகமும் ஷாபிமரிக்காரின் காலத்திலேயே 1968இல் ஆரம்பிக்கப்பட்டது. ஏ.எச்.ஏ. சமத் அக்கழகத்தின் தலைவராகவும் எஸ்.எம்.எம்.நாமிஸ் செயலாளராவும் செயற்பட்டனர்.

3.6 கல்லூரியின் குரல்

ரி.பி. ஜாயா 1921இல் ஸாஹிறாவின் அதிபரானதும் 1922-1926வரை மாதம் தோறும் 'த கிறசன்ட்' வெளிவந்தது. 1926இன் பின் அது காலாண்டு

மலராகவும் அதன் பின் வருடாந்த மலராகவும் வெளிவந்தது. 1946இல் 'த கிறசன்ட்' கடைசியாக வெளிவந்தது. சமூகத்தையும் ஸாஹிறாவையும் இணைக்கும் பணியை அது சிறப்பாகச் செய்தது. அஸீஸ் காலத்தில் (1948-1961), 1949இலிருந்து ஆண்டு தோறும் 'அஸ்ஸாஹிறா' என்று மறுநாமம் பூண்டு அம்மலர் வெளிவந்தது. ஆயினும், ஷாபிமரிக்கார் அதிபராகவிருந்த காலத்தில், 21 வருடங்களுக்குப் பின், 1967இல், மீண்டும் ஜாயா காலத்தை அடியொற்றி 'த கிறசன்ட்' வெளிவந்தது. ஸாஹிறாவின் வரலாற்றுப் பதிவேடாக, பல்துறை ஆய்வுக் கட்டுரைகள், கல்வி விடயங்களைத் தாங்கி ஜாயா காலத்தில் வெளிவந்ததைப் போல் வெளியிட ஷாபிமரிக்கார் திட்டமிட்டிருந்தார்.

> "We make no apology to our readers for our failure to appear during the last two decades.The first issue of the 'Crescent' was published in June 1922 and for four years we never failed to come out every month. It may perhaps be said that the support received for Zahira College and the giant strides made by the institution during the period 1922 to 1926 was in a large measure due to the 'Crescent' keeping the Muslim community informed of the work done in the college as well as their obligation towards the institution. After 1926 we came out for some time quarterly and later once a year. Our last issue was in 1946 when we commemorated the Golden Jubilee of Zahira College and the Silver Jubilee of Mr.T.B.Jayah as Principal.
>
> In the year 1949 we were submerged in 'Az- Zahira', a yearly record and review of the activities of Zahira College, Colombo including contributions on Muslim Culture and Education with which is incorporated the 'Crescent'
>
> It is heartening to note that with the College going back into the hands of its rightful owners – the Muslim Community, the opportunity for the 'Crescent' to make its appearance once again has come.
>
> It is indeed a happy coincidence that the 'Crescent' re - appers during the 75th Anniversary year of the founding of Zahira. And we hope, that from now onwards 'The Crescent' would continue forever" (The Crescent 1967: 05)

என்று ரி.பி. ஜாயா காலத்தில் 'The Crescent'என்ற மகுடத்தில் வெளிவந்த ஸாஹிறாக் கல்லூரியின் சஞ்சிகை தனது வரலாற்றைக் கூறுமாற்போல் 'The Crescent- 1967'(பக்.5)இல் ஒரு செய்தி காணப்படுகிறது. உண்மையில் இதுவே அதன் வரலாறு.

> "It is happy coincidence indeed that 'The Crescent', the official organ of Zahira College which made its appearance regularly from June 1922 till 1946 has been revived this year. May the 'Crescent' by Allah's Grace, continue to shed its light in the years to come"

என்று 'The Crescent' இன் மீள்வருகையினால் சமூகம் பயன்பெறப் போவதை ஷாபிமரிக்கார் எதிர்வு கூறினார்.

> "I am very proud and happy to herald the re-appearance of our old School Magazine, 'The Crescent', specially on this happy occasion which concludes our 75thAnniversary celebrations. 'The Crescent' had in 1949 been superseded by the 'Az-Zahira' an annual record of the School's activities for a period of over 16 years. Now 'The Crescent', first produced under Dr. T.B. Jayah's regime in 1922, takes its rightful place as the link between Zahira College and the Mulim Community"(The Crescent-1968: 12)

என்று ரி.பி. ஜாயா காலத்தில் 1922இலிருந்து ஸாஹிறாவின் குரலாக ஒலித்த 'The Crescent', 1949இலிருந்து 16 வருடங்களுக்கு மேலாக 'Az-Zahira' என்ற பெயரில் அஸீஸ் காலத்தில் வெளிவந்ததை நினை கூர்ந்த ஷாபிமரிக்கார், இனிமேல் ஜாயா காலத்தில் வெளிவந்ததைப் போல 'The Crescent' என்ற அதே பெயரில் வெளிவந்து கல்லூரிக்கும் சமூகத்துக்குமிடை இணைப்பை ஏற்படுத்தும் பணியைச் செய்யும் என்று மீண்டும் தனியார் பாடசாலையான ஸாஹிறாக் கல்லூரி யின் முதலாவது பரிசளிப்பு விழாவின் அதிபர் அறிக்கையில் குறிப்பிட்டுச் சொன்னார். ஷாபி மரிக்கார், ஜாயா கால ஸாஹிறா மாணவன் என்பதும், ஜாயா கால பாரம்பரியப் பேணுகையில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டவர் என்பதும் கவனத்திற்குரியது. 1967, 1968களில் ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக 'The Crescent' வெளிவந்தது. எம்.எச்.எம்.ஜமீல், ஏ.எச்.எம். றாஸிக் ஆகிய கல்லூரி ஆசிரியர்கள் இருவரும் 'The Crescent-1967'இன் இணை ஆசிரியர்களாக இருந்தனர். ஏ.எஸ்.எம். முஸம்மில் (பிரதம ஆசிரியர்), எம்.வை.எம்.பாயிஸ் (ஆங்கிலம்), எப்.ஏ. மரிக்கார் (சிங்களம்), எம்.வை.எம். ஸபறுல்லா (தமிழ்), ஆகியோர் 'The Crescent-1968' இன் ஆசிரியர் குழுவின் அங்கத்தவர்கள். எம்.ஏ. மரிக்காரைத் தவிர ஏனைய மூவரும் அப்போது



மீண்டும் வெளிவரத் தொடங்கிய 'த கிறசன்ட்'













பத்திரிகை உருவில் வெளிவந்த
'த கிறசன்ட்' சஞ்சிகைகள்

கல்லூரியின் மாணவத் தலைவர்களாக இருந்தவர்கள். 'த கிறசன்ட்' தொடர்ந்து வெளிவரமுடியாமற் போனமை துரதிஷ்ட வசமானது. இருப்பினும், ஸாஹிறாக் கல்லூரி தனக்கென ஓர் அச்சகத்தை 03.05.1972இல் ஏற்படுத்திக் கொண்டதும், 1978 ஜூலையிலிருந்து மீண்டும் மாதந்தோறும் பத்திரிகை உருவில் வெளிவர ஆரம்பித்தது.

85ஆவது ஆண்டு நிறைவையொட்டி Zahira College 85th Anniversary Souvenir (1892-1977), ஒக்டோபர் 1977இல் வெளிவந்தது. எம்.கே.எம். அபூபக்கர், ஈ.ஸி. ஆலிப், கலாநிதி எம்.எம். உவைஸ், எஸ்.எம். கமால்தீன், மௌலவி ஏ.எல்.எம். காசிம், ஏ.எச்.எம். அஸ்வர், எம்.எம். மக்கீன் ஆகியோர் இம் மலரின் ஆசிரியர் குழாம் அங்கத்தவர்கள். கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவையொட்டி கல்லூரித் தமிழ்ச் சங்க வெளியீடாக தமிழில் 'வளர்பிறை' வெளிவந்தது. அதன் ஆசிரியராக அப்போதைய தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாசிரியர் என்ற வகையில் நான் செயற்பட்டேன்.



'கிறசன்ட் லைட் - 69' சிறப்பு மலர்

விடுதிக் கட்டிடத் திறப்புவிழாவை யொட்டியும் ஒரு மலர் 11.07.1969இல் வெளியிடப்பட்டது. 1969 செப்டம்பர் 22-25 வரை நடைபெற்ற 'கிறசன்ட் லைட்' நிகழ்வையொட்டி 'Crescent Lights - 69' என்ற மகுடத்திலும் ஒரு சிறப்பு மலர் வெளிவந்தது. Angora என்ற மகுடத்தில் ஸாஹிறாக் கல்லூரி விடுதி மாணவர்களும் 1972இல் மலர் ஒன்றை வெளியிட்டனர். ஸாஹிறாக் கல்லூரி விடுதி மாணவர் மன்றத்தின் வெளியீடான இம்மலரின் பிரதம ஆசிரியர் அம்மாணவமன்றத்தின் தலைவர் எம்.ஐ.எம். நபீல். எம்.வை.எம். சுல்பிகார் (ஆங்கிலம்), அம்ஜாத் ஆர். மரைக்கார் (சிங்களம்), ஏ.எம். மதனி (தமிழ்) ஆகியோர் அம்மலரின் ஏனைய ஆசிரியர்கள். 1978 ஜூலையில் இருந்து மாதம் தோறும் பத்திரிகை உருவில் வெளிவந்த 'த கிறசன்ட்' 1979இல் தனது வெளியீட்டை நிறுத்திக் கொண்ட போது 13 இதழ்கள் வெளிவந்திருந்தன. இப் பத்திரிகையின் அதிபர் பக்கம் ஷாபிமரிக்காரின் கல்விச் சிந்தனைகளைத் தாங்கி வெளிவந்தது. பெற்றோருக்கான செய்திகளும், ஷாபி மரிக்கார் எழுதிய கட்டுரைகளும் பத்திரி கையை அலங்கரித்தன. அதிபர் பக்கக் கட்டுரைகளும் பெற்றோருக்கான செய்தி களும் மும்மொழிகளிலும் இடம்பெற்றன. மாணவர் படைப்புகளுக்கும் இடமொதுக்கப்



விடுதிக் கட்டிடத் திறப்புவிழா நினைவு மலர்



விடுதி மாணவர் 1972இல் வெளியிட்ட 'அங்கோரா' மலர்

பட்டிருந்தது. கல்லூரியின் நிகழ்வுகள், கல்விப் பெறுபேறுகள் பற்றியெல்லாம் செய்திகள் அதில் இடம்பெற்றன. பி.ரி.சின்னையா இதன் ஆசிரியராக இருந்தார்.

> "கல்லூரியினதும், அதனுடன் தொடர்பான நிறுவனங்களினதும் செயற்பாடுகள் நிகழ்வுகளின் பதிவேடாக 'த கிறசன்ட்' அமையும். எமது வாசகர்கள் விரும்பும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் எனவும் எதிர்பார்க்கிறோம். கல்லூரி மாணவர்களுக்கு அவர்கள் கற்கும் பாடங்களுடன் தொடர்புள்ள விளக்கங்கள், தகவல்களை அளிக்கும். மாணவர்களின் படைப்பாற்றல்களைப் பயிற்றுவிக்கவும் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் உதவுவதுடன் அவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட போட்டிகளில் அவர்களைப் பங்குகொள்ளச் செய்யவும் உதவும். தமது கருத்துக்களையும் விமரிசனங் களையும் வாசகர்கள் முன்வைக்கவும் வசதியளிக்கும். சுருங்கக்கூறின், 'த கிறசன்ட்' கல்லூரிக்கும் அது சேவைசெய்யும் சமுதாயத்திற்குமிடை தொடர்பு ஊடகமாகச் செயற்படுவதுடன், கல்லூரியின் சாதனைகள் தேவைகள் பற்றியும் கவனயீர்ப்புச் செய்யும்" (Shafie Marikar S.L.M, The Crescent - July 1978)

என்று 'த கிறசன்ட்' பத்திரிகையின் வெளியீட்டுக்கான நோக்கத்தை ஷாபிமரிக்கார் தெளிவுபடுத்தினார். புதுயுகம், சமயக் கல்வி, தொழிலுக்கான கல்வி, ஒழுக்கக்கட்டுப்பாடு, சர்வதேச சிறுவர் வருடம் போன்ற தலைப்புகளில் அதிபரின் முன் பக்கக் கட்டுரைகள் இடம் பெற்றன. கல்விச் சீர்திருத்தம், ஸாஹிறாக் கல்லூரியில் தொழிற் கல்வி போன்ற விடயங்கள் பற்றியும் ஷாபிமரிக்கார் இப்பத்திரிகையில் எழுதினார். 'இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜ்றா'என்ற தலைப்பிலான என்னுடைய கட்டுரையொன்றும் நவம்பர்-டிசம்பர் 1979 இதழில் இடம்பெற்றது.

> "வளர்பிறை (த கிறசன்ட்) வெளியீட்டுக்கு அவ்வப்போது ஏற்பட்டு வந்த தடைகள், கல்லூரியின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களின் பிரதிபலிப்பாக ஓரளவுக்கு அமைந்தன. அத்துடன் தேசத்தில் அவ்வப்போது ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் தாக்கம் அதுவென்றும் கூறலாம். அரசியல் மாற்றங்கள் அனேகமாக கல்லூரிக்குச் சாதகமானவைகளாக அமையவில்லை" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., த கிறசன்ட் - ஜூலை 1978:7)

என்று 'த கிறசன்ட்' வெளியீடு அடிக்கடி தடைப்பட்டமைக்கு ஷாபிமரிக்கார் காரணம் கூறினார்.

3.7 முஸ்லிம் கலாசார மையம்

இலங்கை முஸ்லிம் கலாசார நிலையம் ஒன்றின் தேவையை உணர்ந்து அதை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் அமைப்பதில் கூடிய கவனம்

செலுத்தியவர் அக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எ.எம்.எ. அஸீஸ் அவர்கள். அந்நிலையத்திற்கான அத்திவாரக்கல்லை அன்றையப் பாராளுமன்ற சபாநாயகர் எச்.எஸ்.இஸ்மாயில் 18.03.1958இல் நாட்டிவைத்தார். நூலகம், இஸ்லாமிய ஆராய்ச்சி நிலையம், சுவடிக் கூடம், வெளியீட்டகம், கலாபவனம், விரிவுரை மண்டபம் என்பனவற்றை உள்ளடக்கியதாக அது அமையவிருந்தது. இதன் நிர்மாணத்திற்கு ஏசியா பவுண்டேசன் (ரூபா 75,000/=), பாக்கிஸ்தான் அரசாங்கம் (ரூபா 25,000/=), இலங்கை அரசாங்கம் (ரூபா 11,000/=), மாலைதீவு அரசாங்கம் என்பன உதவின. துங்கு அப்துல் றஹ்மான், போறாசமூகத்தின் தலைவர் டாக்டர் தாஹிர் சைபுதீன் ஆகியோரும், உள்ளூர்த் தனவந்தர்களும் பண உதவி செய்தனர். ரூபா 133,000/= நிதி குறுகிய காலத்தில் சேகரிக்கப்பட்டு நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆயினும், 1961இல் கல்லூரியை அரசாங்கம் சுவீகரித்தமையால் நிர்மாண வேலைகள் முற்றுப் பெறாமற் போயின. அஸீஸின் எண்ணமும் நிறைவேறாமற் போயிற்று. கொழும்பு ஸாஹிறா மீண்டும் 1967இல் தனியார் பாடசாலையானதும் அரைகுறையாகக் காட்சி தந்த அக்கட்டிடத்தை அதிபர் ஷாபிமரைக்கார் 1977இல் பூரணப்படுத்தி கலாசார நிலையத்தின் செயற்பாட்டை மீளவும் தொடக்கிவைத்தார். அந்நிலையத்தின் தலைவராக அதிபர் ஷாபிமரிக்காரும் அதன் செயலாளராக நானும் செயற்பட்டோம்.

> "நீண்ட இடைவெளியின் பின்னர் இக் கட்டிடத்தின் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டு 'அஸீஸ் ஞாபகார்த்தக் கட்டிடம்' எனும் பெயருடன் 10.10.1977 இல் தென் இந்திய ஓய்வுபெற்ற நீதியரசர் பஷீர் அஹமத் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் நூல் நிலையம் அதில் ஒரு பகுதியில் இயங்கிவருகின்றது. 1980இல் இருந்து முஸ்லிம் கலாசார நிலையம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. ஸாஹிறாவின் இன்றைய அதிபர் எஸ்.எல்.எம்.ஷாபிமரிக்கார் அவர்களைத் தலைவராகவும் ஏ.எம். நஹியா அவர்களைச் செயலாளராகவும் கொண்டுள்ளது" (ஜெமீல் எஸ்.எச்.எம்,1980:47-48)

என்று எஸ்.எச்.எம். ஜெமீல் தனது 'எ.எம்.எ. அஸீஸ் அவர்களின் கல்விச் சிந்தனைகளும் பங்களிப்பும்' என்ற நூலில் இந் நிலையத்தின் ஷாபிமரிக்கார் காலச் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

> "அஸீஸ் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக 13 ஆண்டுகள் உழைத்துள்ளார். அரபு மொழியை வளர்ப்பதில் நாம் முதலில் அக்கறை செலுத்துவோம். இத்துறையிலும், இன்னும் பல்வேறு துறைகளிலும் இக்கலாசார நிலையம் செயலாற்றும். அறிஞர் அஸீஸின் நாமம் நிலைத்திருக்க இக் கட்டிடம் வழிவகுக்கும்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன்-12.10.1977: 3)

என்று ஸாஹிறாக் கல்லூரியின் 85 வது நிறைவு விழாவில் ஓர் அங்கமாக நிகழ்ந்த முஸ்லிம் கலாசார நிலையக் கட்டிடத் திறப்பு விழாவில் உரையாற்றிய ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொன்னார். அஸீஸின் நாமம் நிலைக்க இந்த நிலையம் பணி செய்ய வேண்டும் என்பது ஷாபிமரிக்காரின் விருப்பமாக இருந்தது.



மும்தாஜ் மஹாலில் நிகழ்ந்த தப்ஸீர் வெளியீட்டு வைபவம்

இந்நிலையத்தின் ஷாபிமரிக்கார் கால முதல் நிகழ்வாக துபாய் நீதிஅமைச்சில் பணி செய்த மௌலவி ஏ.எல்.எம்.காசிம் ஆக்கிய 'சூறத்துல் பாத்திஹா தப்ஸீர்' வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. சபாநாயகரின் வாசஸ்தலமான மும்தாஜ்மஹாலில் சபாநாயகர் பாக்கீர் மாக்காரின் தலைமையில் 2.12.1980இல் நடைபெற்ற இந்த நிகழ்வு நல்ல ஆரம்பமாகவும் சிறப்பாகவும் நடந்தேறியது. "முஸ்லிம் சமுதாயத்தில் அபிப்பிராய பேதம் இருப்பதில் தவறில்லை. ஆனால், பிரிவினை ஏற்படுவது கூடாது" என்று இவ்வைபவத்தில் உரையாற்றிய மஸ்ஊத் ஆலிம் குறிப்பிட்ட போது (உதயம் - 05.12.1980) இவ்வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டதன் நோக்கம் தெளிவாகத் தெரிந்தது. "முஸ்லிம் சமூகத்துக்கு அரும் பெரும் பணி புரிவதே தமது கடமை என்று செயல்படும் அமைச்சர் முஹம்மத் அவர்களுக்கு முஸ்லிம்கள் சார்பாக வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்... முஸ்லிம்களை மத, கலாசாரத் துறைகளில் தட்டியெழுப்ப வேண்டும் என்று பாடுபடும் அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தப் பொறுப்பை வெற்றியுடன் நிறைவேற்ற நாம் எல்லோரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" (பாக்கீர் மாக்கார் எம்.ஏ., தினகரன் - 03.12.1980) என்று சபாநாயகர் பாக்கீர் மாக்கார் தனது தலைமை உரையில் மனம் திறந்து பேசினார். "முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளதும், இது ஓர் அனுபவம் வாய்ந்த அமைச்சர் முஹம்மத் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதும் பாராட்டத்தக்கது" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 03.12.1980) என்று ஷாபிமரிக்கார் தனது வரவேற்புரையில் சொன்னார். போக்குவரத்து முஸ்லிம்விவகார அமைச்சர் எம்.எச். முஹம்மத், டாக்டர் எம்.ஸி.எம். கலீல் ஆகியோரும் அங்கு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். மன்னார் மாவட்ட அமைச்சர் எம்.ஈ.எச். மஹ்ரூப், பொத்துவில் முதல்வர் டாக்டர் எம்.ஏ.எம். ஜலால்டீன், இரத்தினபுரி மாவட்ட அமைச்சர் எம்.எல்.எம். அபூசாலி, மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் பரீத் மீராலெவ்வை, முன்னாள் பாராளுமன்ற

உறுப்பினர் ஏ. அஸீஸ், உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எம். அப்துல்காதர் ஆகியோரெல்லாம் மிகக் குறுகியகால அழைப்பை ஏற்று அங்கு வருகை தந்திருந்தனர். என்.கே.இ. அபுல்ஹஸன் துஆப் பிரார்த்தனை செய்தார். என்.ஏ. பாறூக் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். ஸாஹிறாக் கல்லூரி முஸ்லிம் கலாசார நிலையத்தின் தலைவர் ஷாபிமரிக்கார் வரவேற்புரையையும், செயலாளர் என்ற வகையில் நன்றியுரையை நானும் நிகழ்த்தினோம்.

இந்நிகழ்வை ஷாபிமரிக்கார் மிகவும் ஆழ்ந்த நோக்குடனும் பாரிய எதிர்பார்ப்புகளுடனும் ஏற்பாடு செய்திருந்தார். தனியே மௌலவி காசிமின் தப்ஸீர் வெளியீட்டு விழாவாக இவ் வைபவம் அமையவில்லை. அதன் நிழலில் பலவற்றைச் சாதிக்கும் நோக்கை இவ் வைபவம் கொண்டிருந்தது.

- மௌலவி காசிமின் சூறத்துல் பாத்திஹா தப்ஸீர் வெளியீடு
- ஆரம்பத்தில் எம்.எச்.முஹம்மத்துடனும் பின்னர் பாக்கீர்மாக்காருடனும் தனது உறவுகளை வளர்த்துக் கொண்ட மௌலவி காசிம் தனது உறவுகளை மீண்டும் சமநிலையில் வைத்துக் கொள்ளவிரும்பியமை.
- சமுதாயத்தின் நன்மைக்காக,எம்.ஏ. பாக்கீர்மாக்கார் - எம்.எச்.முஹம்மத் இருவர்களுக்கிடையிலும் நிலவிய மனக்கசப்பை இல்லாமற் செய்வது.
- ஸாஹிறாவில் செயற்படத் தொடங்கிய முஸ்லிம் கலாசார நிலையத்தின் செயற்பாடுகளை நாடறியச் செய்வது.
- ஸாஹிறாவின் செயற்பாடுகளுக்கு முஸ்லிம் சமய கலாசார அலுவல் களுக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது.

என்றெல்லாம் பல முகங்களை இவ் வைபவம் கொண்டிருந்தது. பாக்கீர் மாக்காருக்கு அரசியல் சிக்கல்கள் ஏற்பட்டுவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்ட ஷாபிமரிக்காருடைய புத்திசாதுரியத்தின் வெளிப்பாடாகவும் இவ் வைபவத்தைக் கொள்ளலாம்.

3.8 பிரமுகர்களின் வருகை

ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக 05.08.1968 இல் பிரதமர் டட்லி சேனநாயக்க வருகை தந்தார். கிறசன்ட் லைட் - 69 இன் முதல்நாள் நிகழ்வைத் தொடக்கிவைக்க 22.09.1969இல் கவர்ணர் ஜெனரல் வில்லியம் கோபல்லாவ கல்லூரிக்கு வருகை தந்தார். இரண்டாம் நாள் நிகழ்வை தேசிய சேவைகள் விளையாட்டுத்துறை அமைச்சர் வீ.ஏ. சுகததாஸவும், மூன்றாம் நாள் நிகழ்வை பாரளுமன்ற உறுப்பினர் பழீல்



'கிறசன்ட் லைட் - 69' இன் முதல்நாள் நிகழ்வுக்கு கவர்ணர் ஜெனரல் வில்லியம் கோபல்லாவ வருகை தருதலும் தொடக்கிவைத்தலும்

ஏ.கபூரும், நான்காம் நாள் நிகழ்வை கொழும்பு மேயர் ஜாபீர் ஏ. காதரும் திறந்து வைத்தனர். பாக்கிஸ்தான நீதி அமைச்சர் செய்யத் முஹம்மத் ஸபர் ஒக்டோபர் 1968இல் வருகை தந்தார். கல்லூரியின் 85ஆவது வருட நிறைவுவிழா பரிசளிப்பு நிகழ்வின் பிரதம அதிதியாக ஒக்டோபர் 1977இல் பிரதமர் ஜேஆர். ஜயவர்த்தன வருகை தந்தார். ஆர். பிரேமதாஸ ஸாஹிறாவிற்கு இருமுறைகள் விஜயம் செய்தார். உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சராக இருந்த போது அவரது முதலாவது விஜயம் 14.10.1977இலும், ஒறாபிபாஷா கட்டிடத்தைத் திறப்பதற்கு பிரதம அதிதியாக அன்றைய பிரதமர் என்ற வகையில் 16.09.1980இலும் அவரின் விஜயங்கள் நிகழ்ந்தன. கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரட்ண 17.10.1977இலும், பாராளுமன்ற சபாநாயகர் எம்.ஏ. பாக்கீர் மாக்கார் 1980இலும் ஸாஹிறாக் கல்லூரிக்கு வருகை தந்தனர். வாஷிங்டன் இஸ்லாமிய நிலையப் பணிப்பாளர் டாக்டர் மஹ்மூத் அப்துல் றவூப் 16.03.1974இல் ஸாஹிறாவிற்கு விஜயம் செய்து அதன் பதிவேட்டில்,

> "பாரம்பரியம் மிகுந்த இந்த இஸ்லாமிய நிறுவனத்திற்கு நான் புதியவனல்லன். இந்த அழகிய தீவில் இஸ்லாமிய கலாசாரம் வேரூன்றிப் பதிவதற்கு இது ஆற்றியுள்ள தொண்டு மகத்தானது. இதன் நிருவாகிகள் மேற்கொண்டுள்ள சேவையும் அவர்களின் சித்த சுத்தியும் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டன. இந்த இஸ்லாமியக் கல்வி நிலையம் சகலரதும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் பெறத் தகுதியுடைய தொன்றாகும்." (Zahira College 85th Anniversary Souvenir - 1977)

என்று குறித்துவைத்திருக்கிறார். மலேசிய கல்விமான் சையத் ஹாரூன் அல்-ஹபஷி 11.11.1975இல் விஜயம் செய்து,

> "1892ஆம் ஆண்டுமுதல் இக்கல்லூரி எண்ணற்ற இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் இஸ்லாத்தின் கொடியைத் தாங்கி நிற்கிறது. கடந்த காலத்தில் இதன் வெற்றிக்குத் துணை நின்றோருக்கும் இன்னும் அவ்வழியில் பங்காற்றுவோருக்கும் இறைவன் நற்கூலி வழங்குவானாக" (Zahira College 85th Anniversary Souvenir - 1977)



ஸாஹிறாக்கல்லூரியில் கலாநிதி இனாமுல்லாகான்



ஏ.கே. புறோஹி உரை நிகழ்த்துகிறார். டாக்டர் எம்.ஸி.எம். கலீல், ஷாபிமரிக்கார், மனேஜர் இஸ்மாயில் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

என்று கல்லூரிப் பதிவுப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார்.

கெய்ரோ இஸ்லாமிய ஆய்வு நிலையச் செயலாளர் நாயகம் அல்.ஹுஸைனி அப்டெல் மிகெய்ட் ஹாஷிம், டாக்டர் இஸ்மாயில் மாலிக் (ஆஸ்திரியா), டாக்டர் றிபாத் முஸ்தபா யுசெல்ரன் (சைப்ரஸ்), ஷேக் முஹம்மத் இக்பால் (கஷ்மீர்) ஆகியோர் ஸாஹிறாக் கல்லூரிக்கு விஜயம் செய்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் 04.07.1978இல் உரை நிகழ்த்தினர். சர்வதேச இஸ்லாமியக் கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்த அனைத்து வெளிநாட்டுப் பிரமுகர்களும் முஸ்லிம் புத்திஜீவிகளும் ஸாஹிறாவிற்கு வருகை தந்தனர். அன்வர் இப்றாஹிம் (மலேசியா) 06.10.1978இலும், மலேசிய இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த ஸக்கரியா ஹுஷீம், பேராசிரியர் அஸாட் ஹுசைன் (சிக்காக்கோ) ஆகியோர் 25.11.1978 இலும் ஸாஹிறாவுக்கு வருகை தந்தனர். ஐக்கிய அரபுக் குடியரசின் சார்ஜா 'வக்ப்' திணைக்களப் பணிப்பாளர் நாயகம் செய்யத் அப்துல்லா பின் அலி மஹ்மூத், சஊதி அரேபியாவைச் சேர்ந்த அஷ்ஷேக் இஸ்மாயில் பின் அதீக், மொதாமர் செயலாளர் நாயகம் கலாநிதி இனாமுல்லாகான், பாக்கிஸ்தான் ஏ.கே. புறோஹி முதலானோரும் ஷாபிகாலத்தில் ஸாஹிறாவுக்கு வருகை தந்தனர். தாவூத் போரா சமூகத் தலைவர் செய்யிதினா தாஹிர் புர்ஹானுத்தீன் அவர்களின் ஸாஹிறாக் கல்லூரி விஜயமும் ஷாபிமரிக்கார் காலத்திலேயே நிகழ்ந்தது.



செய்யிதினா தாஹிர் புர்ஹானுத்தீன் அவர்களின் ஸாஹிறாக் கல்லூரி விஜயம்

3.9 நலன்பேண் முயற்சிகள்

ஸாஹிறாக் கல்லூரியின் 'பெற்றார்-ஆசிரியர் சங்கம்' அதிபர் ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கியது. டாக்டர் எம்.ஸி.எம்.கலீல் காப்பாளராகவிருந்தார். எம்.எல்.எம். பாறூக் நீண்டகாலமாக அதன் செயலாளராகவிருந்தார். நானும் நிருவாக சபை உறுப்பினராக உதவிச் செயலாளராகவெல்லாம் இருந்திருக்கிறேன். பெற்றார்-ஆசிரியர் சங்கமே கல்லூரி மீலாத் விழாக்களை ஏற்பாடு செய்வது வழக்கமாக இருந்தது.

ஷாபிமரிக்கார் கால ஸாஹிறாக் கல்லூரியில் 'ஆசிரியர் சங்கம்' (Teachers' Guild) சிறப்பாக இயங்கியது. இச்சங்கம் 27.6.1967இல் ஆரம்பிக்கப்பட்டது. ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியர்களின் நலனைப் பேணுவது இச் சங்கத்தின் நோக்கமாகவிருந்தது. ஓ.எம். றஸீன் (1974/75), டி.ஆர் தோமஸ் (1975/76) ஆகியோர் இதன் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். 1979/80ஆம் வருடத்திற்கான தலைமைப் பதவி எனக்குக் கிடைத்தது. அதற்கு முன்னர் உதவிப் பொருளாளராக (1973/74), பொருளாளராக (1975/76) வெல்லாம் ஆசிரியர் சங்கப் பதவிகளை நான் வகித்திருக்கிறேன். ஆசிரியர் சங்கத் தலைவராக நான் செயற்பட்டபோது அதன் உப தலைவராக ரி.பி. ஜாயாவின் மருமகள் திருமதி எம். ஜாயாவும், செயலாளராக எஸ். இராஜரத்தினமும், பொருளாளராக எம்.எஸ். அல்லாப்பிச்சையும் தெரிவு செய்யப்பட்டனர்.

1973களில் 'ஆசிரியர் நலன்புரிச் சங்கம்' (Teachers' Benevolent Association) ஒன்று ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையில் இயங்கியது. டி.ஆர். தோமஸ் (1975/76), எச்.எம்.ஹனிபா (1977/78), ஆர்.எம்.அபேவர்த்தன (1978/79) ஆகியோர் இச் சங்கத்தின் தலைவர்களாக விருந்தனர். நானும் அதன் நிருவாக சபை அங்கத்தவராக (1975/76), உதவிப் பொருளாளராக (1978/79, 1979/80) வெல்லாம் இருந்திருக்கின்றேன். கே.என்.சல்டீன் 1975/76ஆம் வருடத்திற்கான செயலாளராக இருந்திருக்கின்றார். ஆசிரியர்களுக்குக் கடன்வழங்குவதே இச்சங்கத்தின் முக்கிய பணியாக இருந்தது.

கூட்டுறவுத் தத்துவங்களை மாணவர் அறிந்துகொள்ளவும், பாடப்புத்தகங்கள், கற்றல் உபகரணங்களை நியாயவிலையில் மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் விற்பனை செய்யவும் 15.10.1975இல் 'கூட்டுறவுச் சங்கம்' அமைக்கப்பட்டது. இச்சங்கமும் ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியர் சங்கத்தினாற்றான் ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து நடாத்திய இச் சங்கத்தின் முக்கிய செயற்பாட்டாளராக ஆசிரியர் எம். றிஸ்வி றஷாட் விளங்கினார்.

3.10 தமிழ்ப் பாரம்பரியம்

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிக்கு ஒரு தமிழ்ப் பாரம்பரியம் உண்டு. எம்.ஸி. சித்திலெவ்வையுடன் அப்பாரம்பரியம் ஆரம்பிக்கிறது. புலவர் மு. நல்லதம்பி 1918இல் இருந்து கொழும்பு ஸாஹிறாக்கல்லூரியின் தமிழ்ப் பண்டிதராகவிருந்தார். அதிபர் ரி.பி. ஜாயாவைக் காப்பாளராகக் கொண்டு நல்லதம்பி தமிழ்ச் சங்கத்தை 11.11.1929இல் ஸாஹிறாவில் தொடங்கினார். அதன் தலைவராகவும் புலவரே செயற்பட்டார். பதியுத்தீன் மஹ்மூத், பாக்கீரமாக்கார், எம்.எச்.எம். நெய்னாமரைக்கார், எம்.ஈ.எச். முஹம்மது அலி, ஏ.எம்.மேர்ஸா, வீ. நல்லையா போன்ற அரசியல்வாதிகளும் ஏ.ஸி.எம். அமீர், எஸ்.எம். கமால்தீன், ஏ.எம்.எம். மக்கீன், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், ஐ.எல்.எம். மஷூர், அபூதாலிப் அப்துல் லத்தீப் போன்ற புத்திஜீவிகளும் பண்டிதர் நல்லதம்பி உலாவித் திரிந்த ஸாஹிறா மண்ணின் தமிழ்க் காற்றைச் சுவாசித்தவர்களே. அஸீஸ் காலத்தில் சோ. நடராஜா, என். சண்முகரத்தினம், எஸ்.எம். கமால்தீன், எம்.எம். உவைஸ், கா. சிவத்தம்பி ஆகியோர் இத்தமிழ்ப் பாரம்பரியத்தைத் தொடர்பறாது பேணினர். ஷாபிமரிக்காரின் ஸாஹிறாவிலும் இம்மரபு பேணப்பட்டது. மஹ்ரூப் மரைக்கார் (1967-70) தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாசிரியராகவிருந்தார். அதன் பின் எம்.எஸ்.அல்லாப்பிச்சை பொறுப்பாசிரியராகவிருந்தார். தமிழ்த்துறை மேற்பார்வையாளராக விருந்த இராஜசிங்கமும் அதன் இயக்கத்தில் பங்கு கொண்டார். ஸாஹிறாக் கல்லூரியில் 1972 மே யில் நான் இணைந்தபோது அதிபர் ஷாபிமரிக்கார் எனக்கிட்ட முதற் கட்டளை ஸாஹிறாவின் சிரேட்ட தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளர் பதவியை ஏற்று அதை உயிர்த் துடிப்புள்ளதாக்க வேண்டும் என்பதே. அவரின் பணிப் புரையை ஏற்று அச்சங்கத்தின் பணிகளை மிக்க செயற்பாடுடைய தாக்குவதில் நானும் பங்களித் திருக்கிறேன்.



தமிழ்ச்சங்கச் செயற்குழு (1977-78) அதிபர் ஷாபிமரிக்கார், பொறுப்பாசிரியர் நஹியா ஆகியோருடன்

"Mention must be made of the active work done by the Senior Tamil Literary Association which has conducted a variety of activities in order to develop oratorical and debating skills as well as literary dramatic talents among its members. They are now engaged in efforts to produce a magazine of their own and also to hold an Arts Festival at the end of the year. The Master in-charge, Mr.A.M.Nahiya deserves credit for the good work done by the Association" (Shafie Marikar S.L.M., Principal's Prize Day Report 11.10.1977)

என்று 11.10.1977இல் நிகழ்ந்த பரிசளிப்பு விழா அறிக்கையில் அதிபர் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் என்னால் முன்னெடுக்கப்பட்டன.

'தமிழிலக்கியத்தில் நகைச் சுவை' என்ற தலைப்பில் சி.என்.மௌனகுரு 02.08.1973இல் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் சொற்பொழிவாற்றினார். திருச்சிராப்பள்ளி ஜமால் முஹம்மதுக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பெரும் புலவர் பேராசிரியர் நெய்னார் முஹம்மது அவர்களின் சொற்பொழிவு 25.01.1974இல் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்தது. கல்லூரிக் கபூர் மண்டபத்தில் 'படித்தல்' என்ற தலைப்பில் அவரின் சொற்பொழிவு இடம்பெற்றது. கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளராகவிருந்த கலாநிதி இ.பாலசுந்தரத்தின் சொற்பொழிவு 13.03.1974இல் நிகழ்ந்தது. தமிழ்நாடு வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரிப் பேராசிரியர் எஸ்.அப்துற் றஹ்மான் 'மாணவரும் கவிதையும்' என்ற பொருளில் 04.04.1975இல் சொற்பொழிவாற்றினார். இஸ்லாமியக் கலைக்களஞ்சிய ஆசிரியரும் பன்னூலாசிரியருமான தமிழக எம்.ஆர்.எம். அப்துற் றஹீம் அவர்களின் சொற்பொழிவு 'மாணவரும் குறிக்கோளும்' என்ற தலைப்பில் 28.01.1976இல் நிகழ்ந்தது. 'குறைவிருத்திப் பொருளாதாரம்' என்ற தலைப்பில் கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேட்ட விரிவுரையாளர் கலாநிதி வி.நித்தியானந்தம் அவர்களின் சொற்பொழிவும் 24.03.1977இல் நிகழ்ந்தது. 'சமுதாயத்தில் முஸ்லிம் மாணவரின் பங்கு' என்ற தலைப்பில் திருச்சி (தமிழ்நாடு) மஸ்ஹறுல் உலூம் கல்லூரிச் செயலாளர் அட்வகேட் கொ.றபீக் அஹமட் அவர்களும் 20.10.1977இல் சொற்பொழிவாற்றினார். மௌனகுரு, நித்தியானந்தம் ஆகியோரின் சொற்பொழிவுகள் தவிர்ந்த ஏனைய சொற்பொழிவுகளெல்லாம் தமிழ்ச் சங்கப் பொறுப்பாளராக விருந்த என் தலைமையில் நிகழ்ந்தேறின.



கவிக்கோ எஸ். அப்துற்றஹ்மான் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்



ஏ.ஆர். அப்துற்றஹீம் சொற்பொழிவாற்றுகிறார்



நஹியா தலைமையுரை நிகழ்த்துகிறார் கொ. றபீக் அஹமத் அதிபருடன் அமர்ந்திருக்கிறார்.

தமிழக அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தியபோதெல்லாம் ஷாபி மரிக்காரின் பிரசன்னமும் வழக்கமாக இருந்தது.

தமிழ் நாடகத்துறைக்கும்ஸாஹிறாக் கல்லூரித் தமிழ்ச் சங்கம் பங்களிப்புச் செய்திருக்கிறது. விஜேந்திரனின் நவரச நாடகமொன்று சங்கத்தின் ஆதரவில் கல்லூரிக் கபூர் மண்டபத்தில் 05.12.1977இல் மேடையேறியது.

> "நல்லதம்பி முதல் நஹியா வரை ஸாஹிறாவில் ஒரு தமிழ்ப் பாரம்பரியம் உண்டு. அது போற்றப்படுவதும் பேணப்படுவதும் முக்கியம்" (சிவத்தம்பி கா, 1977/78:6)

என்று ஜாயா, அஸீஸ் காலத்தில் பேணப்பட்டவாறான தமிழ்ப் பாரம்பரிய மொன்று ஷாபிமரிக்கார் காலத்திலும் நிலைத்திருந்தது என்பதை ஸாஹிறாக் கல்லூரித் தமிழ்ப் பாரம்பரியத்தின் அஸீஸ் காலப் பிரதிநிதி, பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பியும் கூறி, ஷாபிமரிக்கார் காலத் தமிழ்ப் பாரம்பரியப் பேணுகையை ஏற்று அங்கீகரித்தார்.



85 ஆவது ஆண்டு நிறைவு நினைவு மலர் 'வளர்பிறை'

ஸாஹிறாக் கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 'வளர்பிறை' நினைவு மலர் ஒன்றும் கல்லூரித் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளிவந்தது. இம்மலரில் எஸ்.எம். கமால்தீன், பேராசிரியர்கள் கா. சிவத்தம்பி, ச. தனஞ்செயராசசிங்கம், கலாநிதிகள் ம.மு. உவைஸ், பொ. பூலோகசிங்கம், இ. பாலசுந்தரம், தமிழக அறிஞர்களான ஆ. கா. அப்துஸ் ஸமத், கொ. ரபீக் அஹ்மத், ஹாபிஸ் எம்.கே. செய்யிது அஹமது, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நா. செல்வகுமாரன், ஆர். ஜெயரத்தினராஜா போன்றோரும் ஏ.எல். ஜவாத், எம்.எம்.எம். ம.ர்.றுப், எம்.எச்.எம். ஷம்ஸ், எஸ்.எச்.எம். ஜெமீல், ஏ.எம். நஹியா ஆகியோரும் கட்டுரைகள் எழுதியிருந்தனர். புலவர் ஆ.மு. ஷரிபுத்தீனின் கவிதையும் இம் மலரில் வெளிவந்தது. இம் மலரின் ஆசிரியராக நானே செயற்பட்டேன். இம்மலரில் இடம்பெறும் சிவத்தம்பி எழுதிய 'ஸாஹிறாவின் தமிழ்ப் பாரம்பரியம்' என்ற கட்டுரையும், 'ஸாஹிறாவின் தோற்றம் - சில வரலாற்றுச் சிந்தனைகள்'என்ற என்னுடைய கட்டுரையும் ஸாஹிறாக் கல்லூரி பற்றி எழுதப்பட்டவை. எம். சமீம் தினகரனில் 1978 டிசம்பர் 10ஆம் 11ஆம் திகதிகளிலும், கலாநிதி எம்.ஏ. நு.ர்.மான் வீரகேசரியில் 10.02.1979இலும் 'வளர்பிறை' பற்றி காத்திரமான விமரிசனக் கட்டுரைகளை எழுதியிருந்தனர்.

"கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக முக்கிய இடம்பெறவேண்டிய ஒரு கல்வி நிறுவனமாகும். ஸாஹிறா, முழு இலங்கையினதும் கல்வி வரலாற்றிலே பெறவேண்டிய இடத்தினை மதிப்பிடும் பொழுது இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அது எவ்வாறு முக்கிய ஊற்றுக் கால்களில் ஒன்றாக விளங்கியது என்பதனை மட்டிடவேண்டிய ஓர் அவசியம் உள்ளது. இக் கட்டுரை இம்முயற்சிக்கான பிராரம்பமாகும். கல்லூரி ஆவணங்களையும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றின் முக்கிய ஆக்கங்கள், அவற்றுக்கான ஆதார காரணங்கள் ஆதியனவற்றையும் ஒருசேர வைத்து வரலாற்று அடிப்படையில் மிக விரிவாக ஆராய்ச்சி செய்யப்படவேண்டுவது அவசியமாகும். இக்கட்டுரைப் பொருள் அத்தகைய முயற்சிக்கு முதற்கோடிட்டு வைக்குமெனின் அதுவே போதுமானதாகும்... ஸாஹிறா தனது நூற்றாண்டு விழாவை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வாய்தல் பணியினை ஸாஹிறாவின் வர்த்தமான அதிபர் தமிழ்ப் பொறுப்பாசிரியரின் உதவியுடன் செய்தல் வேண்டும், அல்லது, செய்வித்தற்கு வேண்டிய அமைப்பினைத் தோற்றுவிக்க வேண்டும்" (சிவத்தம்பி கா, 1977/78: 1)

என்று ஸாஹிறாக் கல்லூரியின் மாணவனாகவும் ஆசிரியராகவும் இருந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி 'ஸாஹிறாவின் தமிழ்ப் பாரம்பரியம்' என்ற தனது கட்டுரையில் விடுத்த இவ் வேண்டுகோள் அதிபர் ஷாபிமரிக்காரையும் அப்போதைய தமிழ்ச் சங்கப் பொறுப்பாளராகவிருந்த என்னையும் நோக்கி விடுக்கப்பட்டது.

'வளர் பிறை'யின் அட்டைப்படத்தை அமைத்தவர் ஸாஹிறாக் கல்லூரியின் முன்னாள் மாணவனும் பின்னாளில் பாராளுமன்ற உறுப்பினராக விருந்தவருமான எம்.ரி.ஹஸனலி அவர்கள். இப்போதைய பிரதியமைச்சர்களுள் ஒருவரான எம்.எஸ்.அமீர் அலியின் 'வளர்ச்சிப் பாதையில் ஸாஹிறா' என்ற தலைப்பிலான கட்டுரையும் இம் மலரில் இடம்பெறுகிறது. ஸாஹிறாக் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது அவர் எழுதிய கட்டுரை இது. எம்.எம்.ஹுசைன் (1973) ஏ.எஸ்.மஹ்ரூப் (1977), எம்.எம்.தாஹிர் (1977/78) போன்றோர் இச் சங்கத்தின் தலைவர்களாகவும், ஏ.எம்.ஜிப்றி (1973) எம்.எஸ்.எம்.அமீர் அலி (1977/78) ஆகியோர் செயலாளர்களாகவும் இச் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்த பி.எம்.அபுல் ஹஸன் (1977/78), ஊடகவியலாளர் ஏ.ஸி.துவான் நஸீர்(1977/78) போன்றவர்கள் சங்கத்தின் செயற்குழு அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றனர்

3.11 நிருவாக மாற்றம்

"The Maradana Mosque Executive Committee has been managing the college since 1917 disinterestedly and unostentatiously,with their approval and in

consultation with the Welfare Society and Old Boys' Association a Bill to incorporate a Board of Governors for Zahira College has been introduced in Parliament and is likely to become law very soon" (Shafie Marikar,S.L.M, Nov. Dec. - 1979)

என்று ஷாபிமரிக்கார் 1979இல் எழுதிவைத்திருக்கிறார். ஸாஹிறாக் கல்லூரிக்கென ஆளுனர் சபை ஒன்றை ஏற்படுத்தும் மசோதாவுக்கான முன்னறிவித்தல் பழீல் ஏ. கபூர் அவர்களினால் 29.09.1967இல் பாராளு மன்றத்திற்குச் செய்யப்பட்டமை பற்றியதாக ஷாபிமரிக்காரின் இக்குறிப்பு அமைகிறது. ஆளுனர் சபைச் சட்டம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறும் போது ஸாஹிறாக் கல்லூரியை விட்டு நீங்கும் எண்ணம் அவரின் மனதில் குடிகொள்ளத் தொடங்கிய காலத்தில் அவர் எழுதிய குறிப்பு இது.

ஷாபிமரிக்கார் 1981/1982களில் ஸாஹிறாவில் மிகவும் அல்லற்பட்டார். பாக்கீர் மாக்காரின் அரசியல் எதிரிகள், அஸீஸின் அபிமானிகள், பதியுத்தீனின் ஆதரவாளர்களெல்லாம் இதற்குப் பங்களிப்புச் செய்திருந்தனர். ஏ.ஜே.எம்.முஸம்மில், எம்.எம்.சுஹைர், எம்.என்.ஜுனைத், சயீத் எம். இர்ஷாத், எம்.ஸி.எம்.பாறூக், அமீர் இஸ்மாயில், ஷிப்ளி அஸீஸ், எம்.எஸ். எம்.சறூக், பாறூக் தாஹிர், எம்.ஜெளபர் ஹசன், எம்.ஏ.சி.எஸ்.ஹமீட், ஹுசைன் எஸ்.ஹாஷிம், எம். எம். ஹாஷிம், ஏ.எச்.ஜி.அமீன், எம்.ஏ.நவாஸ், ஹம்ஸா ஹனீபா, அன்சார் ஹம்தூன், ஜீ.எஸ்.எம். நாசிக் உள்ளிட்ட பலர் ஒப்பமிட்டு மருதானைப் பள்ளிவாசல் தலைவருக்கு 15.12.1981இல் அனுப்பி வைத்த கடிதம் ஷாபியின் நிருவாகத்தைக் குறைகூறியது. 'த ஐலன்ட்' பத்திரிகை 08.01.1982இல் பிரசுரித்திருந்த எம்.ஐ.எம். நளீம் ஹாஜியாரின் நேர்காணலும் எரியும் வீட்டில் எண்ணெய் வார்த்தது. ஸாஹிறாக் கல்லூரியை 5வருடங்களுக்குத் தன்னிடம் ஒப்படைத்தால் அதனை அபிவிருத்தி செய்துகாட்டுவதாக நளீம் ஹாஜியார் அந்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிக்கு புதிய ஆளுனர் சபை ஒன்றை ஏற்படுத்தும் வகையில் ஸாஹிறாக் கல்லூரி ஆளுனர்சபைக் கூட்டிணைத்தல் சட்டமூலத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற முஸ்லிம் அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சர் எம்.எச்.முஹம்மத் அவர்களுக்கும் இச் சட்டமூலத்தை உருவாக்குவதில் முன்னின்றுழைத்த நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் எம்.எச்.எம். நெய்னாமரைக்காருக்கும் நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஒன்று ஷாபிமரிக்காரின் தலைமையில் 29.01.1982இல் நடைபெற்ற பெற்றார்- ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் நிறைவேறியது. கல்லூரியின் சீரான நிருவாகத்தையும் வளர்ச்சியையும் சீர்குலைக்கும்

சக்திகளுக்கு எதிராக தனது கண்டனத்தை வெளியிட்ட இப் பொதுச் சபை ஷாபிமரிக்காரின் தலைமையிலான அப்போதைய ஸாஹிறாக் கல்லூரியின் நிருவாகத்தின் மீது பூரண நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்றையும் 142 வாக்குகள் ஆதரவாகவும் 8 வாக்குகள் எதிராகவும் பெற்று நிறைவேற்றியிருந்தது. (தினகரன் - 01.02.1982)

ஸாஹிறாக் கல்லூரி ஆளுனர் சபைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியதும் ஒரு வரலாறு. பாக்கீர் மாக்காரின் அனுசரணையில் பழீல் ஏ. கபூர் சனப்பிரதிநிதிகள் சபையில் ஸாஹிறாக் கல்லூரி ஆளுனர் சபையைக் கூட்டிணைக்கும் சட்டமூலத்தை நவம்பர் 1967இல் முன்மொழிந்தார். அது பற்றிய கல்வி கலாசார அமைச்சின் அறிக்கை மார்ச் 1970இல் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அது காலாவதியானது. அதன் பின்னர் எம். எச்.எம். நெய்னா மரைக்கார் 1976 நவம்பரில் அதை மீண்டும் முன்மொழிந்தார். அதுவும் காலாவதியானபோது நெய்னாமரைக்கார் மீண்டும் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக 1979 ஜனவரியில் அரசாங்க வர்த்த மானியில் அது பிரசுரமானது. எம்.எச். முகம்மத் முஸ்லிம் சமய கலாசாரத்துக்குப் பொறுப்பான அமைச்சரான போது, அன்றைய கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க விடயத்தை அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். எம்.எச். முகம்மதின் முயற்சியால் அமைச்சரவையினதும் பாராளுமன்றத்தினதும் அங்கீகாரத்தை இச் சட்ட மூலம் பெற்றது. பழீல் ஏ. கபூர், எம்.ஏ. பாக்கீர் மாக்கார், ஏ.எச்.எம். இஸ்மாயில், டாக்டர் எம்.ஸி.எம். கலீல், ஏ.ஸி.எம். அமீர், ஏ.செய்யிது அஹமத், எம்.ஏ.எம். ஹுசைன், எம்.எச்.எம். நெய்னா மரைக்கார், எம்.எச். முகம்மத், ஜாபிர் ஏ. காதர் ஆகியோரெல்லாம் இச் சட்டமூலம் அங்கீகாரம் பெறுவதில் ஒத்துழைப்பு நல்கியவர்கள்.

ஸாஹிறாக் கல்லூரி ஆளுனர் சபைச்சட்டம் (இல.18,1982) 20.05.1982இல் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதும் மருதானைப் பள்ளிவாசல் நிருவாகம் கல்லூரியை ஆளுனர் சபையிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தது. 09.07.1982இல் புதிய ஆளுனர் சபை கல்லூரியைப் பொறுப்பேற்பதற்கு வழிவிட்டு ஷாபிமரிக்கார் தனது இராஜினாமாவை மருதானைப் பள்ளிவாசல் நிருவாகத்திற்கு 01.07.1982இல் அனுப்பிவைத்தார். தனது பொறுப்புகளை உதவி அதிபரிடம் கையளிக்காமல் தமிழ்த்துறைத் தலைவராகவிருந்த எம்.எஸ் அல்லாப்பிச்சையிடம் ஒப்படைத்துவிட்டு தனது அதிபர் பணியை முடிவுக்குக் கொணர்ந்தார். 01.01.1967இல் இருந்து 01.07.1982வரை 15½ வருடகால கொழும்பு ஸாஹிறாவின் அதிபர் பதவியில் இருந்து அமைதியாக ஓய்வு பெற்றுக் கொண்டார். அவர் ஸாஹிறாவை விட்டு நீங்கிய போது

2.3 மில்லியன் ரூபாய் கல்லூரியின் வங்கிக் கணக்கில் இருந்தது. இதைவிட வருமானம் பெறும் நோக்கில் அவர் நிர்மாணித்த ஒறாபிபாஷா கட்டிடமும், மோட்டார் கராஜ், ஹெய்லீஸ் பங்குகளும் ஸாஹிறாக் கல்லூரிக்கு இருந்தது. கல்லூரி 09.07.1982இலிருந்து ஆளுனர் சபையின் நிருவாகத்தின் கீழ் வந்தது. முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் ஏ.ஸி.எம்.அமீர் ஆளுனர் சபையின் முதலாவது தலைவரானார். அத்தினத்தில் இருந்து (9.7.1982இல் இருந்து) எம்.எஸ். அல்லாப்பிச்சை (தற்காலிகம்), ஆர்.ஐ.ரி. அலஸ் (Director of Studies and Co-curricular Activities), ஏ.ஸி.எம். செய்றுதீன், சயீட் எம். இர்ஷாத், ரி.டி.ஹனான், ஏ.இஸட். ஒமர்தீன், ஏ.எம். சமீம், ஜாவித் யூசுப், பேராசிரியர் எம்.ரி.ஏ. புர்கான், கலாநிதி ஐ.ஏ. இஸ்மாயில், எஸ்.ஏ.ஆர். எம். பாறூக், கலாநிதி எம். உவைஸ் அஹமத், அப்துல் அஹத், ரி.கே. அஸுர், கே. ஜிப்ரி ஹனிபா, ஏ.ஆர்.எம். றிஸ்வி மரைக்கார் என்று பலர் ஒருவர் பின் ஒருவராக குறுகிய காலத்தில் அனேகர் அதிபர்களாக இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஸாஹிறாவுக்கு ஏற்பட்டது.

ஷாபிமரிக்கார் ஓய்வு பெற்றதன் பின் ஆளுனர் சபை ஸாஹிறாவின் நிருவாகத்தை மருதானைப் பள்ளிவாசல் நிருவாகத்திடம் இருந்து பொறுப்பேற்றபோது பாடசாலையின் ஸ்திரத்தன்மை கேள்விக்குள்ளானது; அல்லோல கல்லோலம் தலைவிரித்தாடியது. கொழும்பு ஸாஹிறாவைத் தொடர்ந்தும் தனியார் பாடசாலையாக வைத்திருக்க வேண்டுமா? என்ற சந்தேகத்தைக்கூட அதற்காகப் போராடியவர்களின் மனங்களில் தோற்றுவித்தது. தனியார் பாடசாலையாக்க கருத்துப் போராட்டங்கள் செய்தவர்களே தம் கருத்துக்களை மறு பரிசீலனை செய்யும் அளவிற்கு நிலைபரம் காணப்பட்டது. ஆர்.ஐ.ரி. அலஸ் காலத்தையொட்டி ஏற்பட்ட தளம்பலும் அதன் பின்னர் குறுகிய காலத்தில் அனேகர் அதிபர்களாக நியமிக்கப்பட்டமையும் இச்சிந்தனை மாற்றத்திற்குக் காரணங்களாயின.

> "ஸாஹிறாக் கல்லூரியை அரசாங்கத்திற்கு எடுத்ததற்காக பதியுத்தீனுக்கு எதிராக பெரும் பிரசாரத்தைக் கொண்டு சென்றவர், பின், தான் செய்தது தவறு என்பதை உணர்ந்தார். கல்லூரி மிகவும் கேவலமான நிலைக்குச் சென்று கொண்டிருப்பதைக் கண்டவர் பதியுத்தீனின் வீட்டிற்கு வந்து, அவரிடமே கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை அரசாங்கத்திற்கு எடுத்தது பற்றி உங்களுக்கு விரோதமான ஒரு பிரசாரத்தை எடுத்துக் கொண்டு அதனை மீண்டும் பெற்றுக் கொண்டமை மடத்தனமான வேலை, நீங்கள் செய்ததுதான் சரி என்று கூறினார்... பதியுத்தீனும் தனக்கு எதிராக நின்றவர்களுக்கு உண்மை இப்பொழுதாவது விளங்கி விட்டதே என்று சந்தோசம் அடைந்தார்" (ஹன்ஸீர் ஏ.டபிள்யு.எம்., 1989: 577)

என்று ஹன்ஸீர் எழுதி வைத்திருப்பது கவனத்திற்குரியது. ஹன்ஸீர் குறிப்பிடும் அத் தளம்பல் நிலை இப்போது படிப்படியாக அகல்வதும் ஸ்திரத்தன்மை ஏற்படுவதும், ஸாஹிறாவின் எதிர்காலத்திற்கு நல்லதொரு சகுனமாகத் தெரிகிறது.

ஆளுநர் சபை கல்லூரியில் செயற்பட முடியாத நிலை ஏற்பட்ட போது இடைக்கால சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. கணக்காளர் நாயகம் (ஷப்றி), வழக்காடுநர் நாயகம் (ஷிப்ளி அஸீஸ்), பொது நிருவாக அமைச்சின் செயலாளர் (எம்.என். ஜுனைத்), பேராசிரியர் மஹ்றூப் இஸ்மாயில் ஆகியோர் அவ்விடைக் கால சபையின் அங்கத்தவர்களாக விருந்தனர். வெறும் தலையாட்டிகளாக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவர் களுக்கிருந்தது. அடாவடித்தனத்துக்கு அடிபணிந்து நடக்க அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.



இடைக்கால சபை அங்கத்தவர் ஜுனைதுடன் ஷாபிமரிக்கார் அளவளாவுகிறார். அருகில் ஷப்றி, அல்ஆலிம் ஸறூக், ஆர்.ஜ.ரி. அலஸ், எம்.எஸ். அல்லாப்பிச்சை ஆகியோர் காணப்படுகின்றனர்

ஸாஹிறா பல தடைகளைத் தாண்டி நீண்ட பயணத்தை மேற் கொண்டிருக்கிறது. அதன் ஆரம்பமும் கடந்த காலப் பணிகளும் இந் நாட்டு முஸ்லிம்களின் கல்வி வரலாறாகிவிட்டது. ஸாஹிறாவின் வரலாறே இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாறு என்று கூறுமளவுக்கு அதன் வரலாறு முக்கியத்துவமிக்கது. ஷாபிமரிக்காரும் அவ்வரலாற்றின் முக்கிய பங்குதாரர்களுள் ஒருவராகிவிட்டார்.

> "இந்த நாட்டு முஸ்லிம்களின் வரலாற்றில் அல்லது தொண்டில் எந்தப் பாடசாலையாவது சம்பந்தப்பட்டிருக்கின்றதென்றால் அது ஸாஹிறாதானெனப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம். இந்த நாட்டில் உள்ள முஸ்லிம்களை எடுத்துக் கொண்டால் பெரும்பான்மையாக அவர்கள் ஸாஹிறாவுடன் தொடர்பு கொண்டவர்களாகவே இருப்பதைக் காணமுடியும். அரும் பெரும் தலைவர்களை இக்கல்லூரி உருவாக்கியிருக்கிறது; மேலும் உருவாக்கும்." (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன்-10.10.1977)

ஸாஹிறா தனது 85ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியபோது தலைமைவகித்து ஆற்றிய உரையில் ஷாபிமரிக்கார் குறிப்பிட்ட வாசகங்களிவை. எதிர்கால சந்ததியினர் மீண்டும் மீண்டும் உச்சரிக்கவேண்டிய முக்கிய வார்த்தைகளாக இவை அமைந்திருக்கின்றன. ஸாஹிறாவை நிருவாகம் செய்பவர்களின் தாரக மந்திரமாக இவ்வார்த்தைகள் அமைய வேண்டும். அப்போதுதான் ஸாஹிறா புத்துணர்வும் புத்தூக்கமும் பெறும்.

4 கொழும்பு ஸாஹிறாவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

4.1. ஷாபிமரிக்காருக்கு முந்திய நிலை

ஸாஹிறாக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு ஜாயா அதிபராகும் வரையுள்ள 29 வருட காலப்பகுதியில் 21.08.1892 - 01.09.1921 வாப்பிச்சி மரைக்கார் நிர்மாணித்த முதலாவது கட்டிடமும் (1892), ஜபர்ஜீ கட்டிக்கொடுத்த இருமாடிக் கட்டிடமும் (1906), கல்லூரியின் வருமானத்திற்கென ஜபர்ஜீ சுதர்சன் வீதியில் அமைத்துக் கொடுத்த 06 வீடுகளுமே ஸாஹிறாவின் உட்கட்டமைப்பு வசதிகளாகவிருந்தன.

என்.டி.எச். அப்துல் கபூர் அமைத்துக் கொடுத்த விஞ்ஞான ஆய்வுகூடம் (1922), பி.பி. உம்பிச்சி அமைத்துக் கொடுத்த விளையாட்டு மைதானம் (1924), அவர் நிர்மாணித்துக் கொடுத்த 12 வகுப்பறைக் கட்டிடம் (1925), பின்னர், அவரின் நிதி உதவியில் 12.12.1930இல் அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது கட்டிடம் (பாலர் பாடசாலைக் கட்டிடம்), 16 வகுப்பறைகளையும் கேட்போர் கூடத்தையும் உள்ளடக்கியதாக 1928இல் நிர்மாணிக்கப்பட்ட பிரதான கட்டடம் (அப்துல் கபூர் கட்டிடம்) என்பன ஜாயா காலத்தில் (01.09.1921-21.08.1948) நிர்மாணிக்கப்பட்டவை. வர்த்தகர் ஏ.எம்.எம்.அப்துல் காதர் பல்வைத்திய நிலையம் ஒன்றையும் தாபித்து கொடுத்திருந்தார் (1934). இப்போதைய விடுதிக்கட்டடத்திற்கான அத்திவாரக் கல்லும் ஜாயா காலத்தில்தான் 12.02.1948இல் நடப்பட்டது. என்.டி.எச். அப்துல் கபூர் இதன் நிர்மாணத்திற்கென 100,000/= ரூபாவை அப்போது நன்கொடை செய்திருந்தார். ஜாயா காலமே ஸாஹிறாக் கல்லூரியின் உட்கட்டமைப்புகள் சிறப்பாக விருத்தியடைந்த காலம்.

மூன்று வகுப்பறைகளைக் கொண்ட முத்துவாப்பா கட்டிடம் (1953), இக்பால் கட்டிடம் (1953), புதிய விடுதிக்கட்டிடத்தின் தளமாடி (1956), தற்காலிக சுலைமான் கட்டிடம் என்பன அஸீஸ் அதிபராகவிருந்தபோது

(21.08.1948 - 21.08.1961) நிர்மாணிக்கப்பட்டவை. ஜாயா காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரதான கட்டிடத்தின் கீழ்மாடியில் அமைந்திருந்த அப்துல் கபூர் மண்டபம் அக்கட்டிடத்தின் மேல் மாடிக்கு மாற்றப்பட்டு, கீழ்மாடியில் அம் மண்டபம் அமைந்திருந்த இடத்தில் 8 வகுப்பறைகள் அமைக்கப்பட்டதும் அஸீஸ் காலத்திலேயே. நூலகத்தை உள்ளடக்கியதான முஸ்லிம் கலாசார நிலைய வேலைகளும், சித்திலெவ்வை செயன்முறைக் கல்விக்கூட நிர்மாணப்பணிகளும் அஸீஸ் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அரசாங்கத்தினால் 21.08.1961இல் சுவீகரிக்கப்பட்டு மீண்டும் 31.12.1966இல் தனியார் பாடசாலையாகும் வரை ஏறக்குறைய 5½ வருடங்கள் ஸாஹிறாக் கல்லூரி அரசாங்கப்பாடசாலையாக இயங்க நேர்ந்தது. கல்லூரியை மீளப்பெற நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்ததால் அக்காலத்தில் எவ்வித உட்கட்டமைப்பு வசதிகளையும் அரசாங்கத்தினால் ஸாஹிறாக் கல்லூரிக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லை.

4.2 ஷாபிமரிக்கார் கால அபிவிருத்தி

கொழும்பு ஸாஹிறா மீண்டும் தனியார் பாடசாலையாகி ஷாபிமரிக்கார் அதிபராகப் பொறுப்பேற்றபோது அங்கு காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மிக மோசமான நிலையில் அழிவடைந்து கிடந்தன.

> "இன்று இப் பாடசாலையில் பல குறைபாடுகள் நிலவுவதாக பரவலாகப் பேசப்படுவதாகவும், இதிலும் கட்டிட வசதி இன்மையையே எல்லோரும் கூறிக்கொள்வதாகவும் அறியமுடிகிறது. 1967ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை நிருவாகம் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டபோது ஸாஹிறாவின் நிலையைக் கண்டவர்கள் இப்படிக் கூறமாட்டார்கள். மின்விசிறிகள் கூட சுழலாத நிலைமையிலேயே கல்லூரியை நாம் பொறுப்பேற்றோம்" (ஆமித் எம்.எச்., தினகரன்-01.02.1982)

என்று ரி.பி. ஜாயாவின் மருமகனும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஆமித் அந்நிலையைத் தெளிவுறுத்தினார். இதைவிட, ஷாபிமரிக்கார் அதிபரான போது பூரணத்துவப்படுத்தப்படாத பல கட்டிடங்களும் ஸாஹிறா வளாகத்தில் இருந்தன. அவற்றைப் பூரணப்படுத்தும் பணியையும் அவர் மேற்கொள்ளவேண்டியிருந்தது. விடுதிக் கட்டிடம் அவற்றுள் முக்கியமானது.

ஜாயா அதிபராகவிருந்த காலத்தில், நவம்பர் 1921இல், மருதானை டார்லி றோட்டில் நியூஓலிம்பியா தியேட்டருக்கு அருகாமையில் ஸாஹிறாக் கல்லூரி விடுதி ஆரம்பிக்கப்பட்டது. போபஸ் றோட், நொறிஸ்கனல் றோட், மீண்டும் டார்லி றோட், 18.07.1931இல் கல்லூரி வளாகம், பின்னர், தெஹிவலை வண்டவெற் பிளேஸ் (பெரிய மாணவர்கள்), பொரளை (சிறு

பிள்ளைகள்) போன்ற இடங்களுக்கெல்லாம் இடம்மாறி, இறுதியாக, 1946இல் கல்லூரி வளாகத்தில் நிரந்தர அமைவைப் பெற்றது. கல்லூரிக்கு நிரந்தரமான விடுதியின் அவசியம் உணரப்பட்டபோது ஜாயா அதன் நிர்மாணத்துக்கான தனது முயற்சிகளை ஆரம்பித்தார். என்.டி.எச். அப்துல் கபூர் இம்முயற்சிக்கு 100,000/=ரூபாவை நன்கொடை செய்தார். இலங்கையின் சுதந்திரதின வைபவத்தில் பாக்கிஸ்தான் அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அந்த நாட்டின் ஊடகத்துறை அமைச்சர் சர்தார் அப்துர்ராப் நிஸ்தார் இவ்விடுதிக்கான அத்திவாரக்கல்லை 14.02.1948இல் நாட்டிவைத்தார். இது ஜாயாவின் காலத்தில் நிகழ்ந்தது. அஸீஸ் அதிபரானதும், நவம்பர் 1950இல் புதிய விடுதிக் கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பமாயின. முழுக்கட்டிடத்தையும் நிறைவு செய்ய 550,000/= ரூபாவும், தளமாடியை மட்டும் பூர்த்தி செய்ய 350,000/= ரூபாவும், 1955களில் தேவைப்பட்டது. என்.டி.எச். அப்துல் கபூர் கொடுத்த 100,000/= ரூபாவுக்கு மேலதிகமாக 250,000/= ரூபா தளமாடியைப் பூர்த்தி செய்யத் தேவைப்பட்டது. அதைச் சேகரித்து தளமாடியை 15.09.1956இல் அஸீஸ் பூர்த்தி செய்தார்.

ஜாயாவினால் ஆரம்பிக்கப்பட்டு அஸீஸினால் தளமாடி பூரணத்துவப் படுத்தப்பட்ட விடுதிக் கட்டிடத்தை பரிபூரணப்படுத்தும் பொறுப்பு ஷாபிமரிக்கார் அதிபரானதும் அவர் மீது சுமத்தப்பட்டது. அப் பணியை அவர் 11.03.1967இல் தொடங்கினார். ஓய்வுபெற்ற சென்னை ஹைகோட்



விடுதிக் கட்டிடத்தை பிரதமர் டட்லி சேனநாயக்க திறந்து வைக்கிறார்.



விடுதிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தபின் பிரதமர் கூட்ட மேடைக்குச் செல்கிறார்.



பிரதமர் உரை நிகழ்த்துகிறார்

நீதிபதி பஷீர் அஹ்மத் சயீத் அவர்களினால் இவ்வேலை 26.01.1968 இல் மீள் ஆரம்பம் செய்யப்பட்டது. பேருவலை எம்.ஐ.எம்.நளீம் ஹாஜியாரின் தலைமையில் நிதி சேகரிக்கப் பட்டது. பி.எஸ்.கே.வி. பல்லாக்லெவ்வை



ஷாபிமரிக்கார் பூரணப்படுத்திய விடுதிக் கட்டிடமும் பார்வையாளர் கூடமும்

அன்ட் கம்பனியும் ஒரு மாடியைக் கட்டித்தர ஒப்புக்கொண்டது. இவ்வாறு ஜாயாவின் எண்ணத்திற்கு முழுவடிவம் கொடுக்க ஷாபிமரிக்கார் முயற்சிகளை மேற்கொண்டார். பரிபூரணமாக நிர்மாணிக்கப்பட்ட விடுதிக் கட்டிடம் 11.07.1969இல் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்காவினால் திறந்து வைக்கப்பட்டது. அஸீஸ் நிர்மாணித்த தளமாடியை விட 1ஆம், 2ஆம் மாடிகள் ஷாபிமரிக்காரின் முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்டன. 250 மாணவர்கள் தங்கிப் படிக்கும் பெரியதொரு விடுதியாக அது அமைந்தது.



நிகழ்வில் பிலிப் குணவர்தன உரை நிகழ்த்துகிறார்

"புது விடுதிக் கட்டிட வேலைகள் பூர்த்தியடைந்துவிட்டமை காலஞ்சென்ற டாக்டர் ரி.பி. ஜாயாவின் கனவு நனவாகிவிட்டதைக் குறிக்கிறது. 1921இல் ஜாயா ஸாஹிறாவைப் பொறுப்பேற்று சில மாதங்களில் இந்த விடுதி நிர்மாணத்திட்டத்தை உருவாக்கினார்...இக்கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் 1948 பெப்ரவரி 14ஆம் திகதி நாட்டப்பட்டது. 2 இலட்சம் செலவில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டது. என்.டி.எச். அப்துல் கபூர் 100,000/= ரூபாவை இத்திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கினார். இதற்குப் பின் 1948 ஆகஸ்ட் மாதத்தில் ஜாயா, வேறு சில பொறுப்புகளை ஏற்க வேண்டியதன் நிமித்தம் கல்லூரியில் இருந்து விலகவேண்டியதாயிற்று.

ஜாயா ஆரம்பித்த பணியை அவருக்குப் பின் அதிபராகப் பொறுப்பேற்ற எ.எம்.எ.அஸீஸ் சிரமேற்கொள்ள வேண்டியதாயிற்று. அஸீஸ் அதிக பிரயாசையுடன் பல இன்னல்களைச் சமாளித்து 1954ஆம் வருடத்தில் விடுதி மாடிக் கட்டிடத்தின் கீழ்மாடிக் கட்டிட வேலைகளைப் பூர்த்தி செய்தார். ஜாயாவின் கனவு நனவாக அஸீஸ் அத்திவாரமிட்டார். ஆனால் புதுக் கட்டிடம் பூரணமடையாமல் 13 வருடங்களாக ஸ்தம்பித்து நின்றது.

1967இல் மற்றுமொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1968 பெப்ரவரியில் பி.எஸ்.கே.வி. பல்லாக்லெவ்வை கம்பனியாரினதும் எம்.ஐ.எம். நளீம் அவர்களினதும் பண உதவியுடனும், வேறு அன்பர்களின் உதவியுடனும் மீண்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு முதல் மாடி, இரண்டாவது மாடி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இவ் வேலைகள் பூர்த்தியாவதில் எம்.ஜே.எம். றஹீம் (கட்டிடக் கலைஞர்), ஏ.ஸி.எம். ரவூப் (பொறியியலாளர்), ஏ.எச்.எல்.ஏ. சலீம் ஆகியோரின் சேவைகள் குறிப்பிடத்தக்கன. விடுதியின் புதிய கட்டிடம் டாக்டர் ஜாயாவின் நினைவுச் சின்னமாக விளங்குகிறது" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம், தினகரன் -11.07.1969:6)

என்று இவ்விடுதிக் கட்டிட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டதன் மூலம் ஜாயாவின் கனவை நனவாக்குவதில் அஸீஸினதும் தனதும் முயற்சிகளில் மன நிறைவடைகிறார் ஷாபிமரிக்கார்.

அக் கட்டிடம் திறந்துவைக்கப்பட்டபோது அக் கட்டிடத்தையொத்த பெரிய விடுதிக் கட்டிடம் பாடசாலை மட்டத்தில் இலங்கையில் எங்குமே இருந்ததாக அறியப்படவில்லை.

> "As regards the building we opened today, it is a hostel. I had occasion just now after unveiling the plaque to go around. I envied the students being provided with such magnificent facilities in their hostel. I thought of the days when I was in the boarding house at St.Thomas' College. We did not have magnificent buildings of this nature or other facilities that seem to have been provided here. I am very glad indeed that Zahira College has decided to have this hostel... You have put up a pavilion too. It is not necessary for me to tell you how important a part sports activities play in the life of a student. With a pavilion of this nature it is evident that you are taking a keen interest in fostering these activites. So that today we have had the opportunity of opening two very necessary buildings for this institution" (Dudley Senanayake, 11.07.1969: 15,16)

என்று விடுதிக் கட்டிடத்தையும் பார்வையாளர் கூடத்தையும் (Pavilion) ஸாஹிறாக் கல்லூரியில் திறந்துவைத்து உரையாற்றிய அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க குறிப்பிட்டுச் சொன்னார்.

> "I wonder whether any other school could boast of a building so magnificient as this" (Dudley Senanayake, 11.7.1969:14)

என்று ஷாபிமரிக்காரின் திட்டமிடலில் அரபுக்கட்டிடக் கலை அம்சங்களுடன் எழுந்து நின்ற அந்த விடுதிக் கட்டிடத்தை டட்லி சேனநாயக்கா புகழ்ந்துரைத்தார்.

விடுதிக் கட்டிடத் திறப்புவிழாயொட்டி ஷாபிமரிக்கார் 'டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு விடுத்த செய்தியில் கூறிய கருத்துக்களும் கவனத்திற்குரியன.

> "This magnificient building, a fitting tribute to Dr.Jayah is formally opened today by the Hon.Prime Minister. Zahira College will now become, more than ever in Dr.Jayah's own words, 'The Radiating centre of Muslim thought and activity'. The heart of this radiating centre will be the hostel to which streams of Muslim students will continue to come from every part of the Island each year, and each year return to their homes taking with them Muslim thought and action imparted to them in the college. Thus the work of Dr.Jayah will live on" (Shafie Marikar S.L.M, Daily News - 11.07.1969)

என்பதே ஷாபி விடுத்த அச்செய்தி. முஸ்லிம் சிந்தனையினதும் செயற்பாட்டினதும் மத்திய நிலையமாக ஸாஹிறா விளங்கவேண்டும் என்று ஜாயா கண்ட கனவை இந்த விடுதிக் கட்டிடம் நிறைவேற்றி வைப்பதாக ஷாபிமரிக்கார் அச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

> "Mr.Jaya's cherished dream of a permanent building for a hostel and pavilion had only been realised with the completion of the present building" (Shafie Marikar S.L.M., Daily News - 11.07.1969:12)

என்றும் ஷாபிமரிக்கார் அச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். இவ் விடுதிக் கட்டிடமும் அதனோடு இணைந்ததாக அமைக்கப்பட்ட பார்வையார் கூடமும் பூரணப்படுத்தப்பட்டபோது ஜாயாவின் விடுதி நிர்மாணத்திட்டம் நிறைவேறிய தாக ஷாபிமரிக்கார் மனநிறைவடைந்தார்.



சித்திலைவ்வை செயன்முறைப் பயிற்சிக் கூடம்

எ.எம்.எ. அஸீஸ் ஆரம்பித்த சித்தி லெவ்வை செயன்முறைப் பயிற்சிக் கூடமும் (SiddiLebbe Practical Workshop) 1971இல் ஷாபிமரிக்காரினால் பூர்த்திசெய்யப்பட்டது. இதற்கான அத்திவாரக்கல் அஸீஸ் அதிபராக விருந்த போது 1957இல் ரி.பி. ஜாயாவினால் நடப்பட்டது. அஸீஸ் ஆரம்பித்த நூலகம் உள்ளடங்கலான இலங்கை முஸ்லிம் கலாசார நிலையக் கட்டிடமும் ஷாபிமரிக் காரினால் செப்டெம்பர் 1977இல் பூர்த்தி செய்யப்பட்டது.



இலங்கை முஸ்லிம் கலாசார நிலையம்

மோட்டார் தொழினுட்பக் கற்கைக்கான வேலைத்தளம் ஒன்றை கல்லூரியின் பழைய மாணவர்கள் 1976இல் அமைத்துக் கொடுத்தனர். அச்சுக்கூடம் ஒன்றும் 03.05.1972 இல் ஸாஹிறாவில் ஏற்படுத்தப்பட்டது. ஜனவரி 1973இல் இருந்து அச்சுத் தொழில் பயில்வதற்கு ஸாஹிறாக் கல்லூரி மாணவர் களுக்கு இதனால் சந்தர்ப்பம் ஏற்பட்டது.



மோட்டார் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்

ஆசிரியர் விடுதி, விற்பனை நிலையம் ஆகியவற்றின் நிர்மாணத்திற்கான அத்திவாரக் கல்லை ஐக்கிய அரபு இராச்சிய அரசரின் பிரதிநிதி ஷெய்க் அப்துல்லா பாதல் அல்-ஹம்மாதி நாட்டிவைத்தார். ஆயினும் அவை நிர்மாணிக்கப்படவில்லை.

ஸாஹிறாக் கல்லூரிக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஷாபிமரிக்கார் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமே ஒறாபி பாஷா ஞாபகார்த்தக் கட்டிடம். ஜப்ஜீ சகோதர்கள் அமைத்துக் கொடுத்த அக்கட்டிடத்தை 18.09.1980இல் பிரதமர் ஆர்.பிரேமதாஸ திறந்துவைத்தார். இவற்றுடன் ஷாபிமரிக்கார் நின்றுவிடவில்லை. 16 வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றை நிறுவும் வேலைத் திட்டத்தையும் தொடங்கினார். துபாய் நாட்டு ஷேக் சாலே அற்ஹய்ஸ் (His Eminence Sheik Saleh Arhayis) அத் திட்டத்திற்கான அத்திவாரக்கல்லை 29.5.1981இல் நாட்டி வைத்தார். இதற்காக 30,000 அமெரிக்க டொலர்களை 29.07.1976இலும், 40,000 அமெரிக்க டொலர்களை 24.6.1981இலும் இஸ்லாமிய ஐக்கிய நிதியம் (Islamic Solidarity Fund) வழங்கியது. 8 வகுப்பறைக் கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் முடிவுற்றதும் 01.01.1982 இல் அவ்வகுப்பறைகள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டன. ஷாபிமரிக்காரின் முயற்சியினால் கிடைக்கப்பெற்ற அந்நிதியுதவி அவர் 30.06.1982இல் ஸாஹிறாவின் அதிபர் பதவியை விட்டு நீங்கிச் சென்ற பின்னரும் கிடைத்துக் கொண்டிருந்தது. 30,000 அமெரிக்க டொலர்கள் 03.08.1982இலும், 15,000 அமெரிக்க டொலர்கள் 9.10.1983இலும் கல்லூரிக்குக் கிடைத்தமை கவனத்திற்குரியது. ஷாபி மரிக்காரின் தனிமுயற்சியால் கல்லூரி பெற்ற கட்டிட நிதியுதவி இது.



ஐ.எஸ்.எப். கட்டிடம்

ஸாஹிறாக் கல்லூரி 1967இல் மீண்டும் தனியார் பாடசாலையாவதற்கு முன்னரும் பின்னரும் இருந்த உட்கட்டமைப்பு நிலைபற்றி பாராளுமன்றக் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு 14.09.1969இல் பாக்கீர் மாக்கார் ஆற்றிய உரையும் கவனத்திற்குரியது.

> "Thanks to the management, they went to court and they got back the college. Soon after that, what did the principal have to say in his report? I still remember what he said.. 'the site of the school reminded one of an abandoned battle field.' the buildings were in need of repair, cement floors were broken, and every thing was in a mess, and the Hon.Minister will remember that he had to pay to the school Rs. 20,000/= to Rs. 30,000/= as damages to restore the school to the condition in which it was at the time of the take over. I should ask the Hon. Third Member for Colombo Central (Mr.Keuneman) to go and see the difference now, how efficiently the college is managed, how beautifully the buildings are kept, how the floors are kept polished, how new buildings are coming up, how the garden is kept, and how education is given in an atmosphere that is

conducive to education. That is the way in which private schools are managed. There is one building that is coming up towards which the parents have contributed" (Parliamentary Hansard - 14.09.1969)

என்று ஷாபிமரிக்கார் அதிபராகி ஏறக்குறைய 2½ வருடங்களின் பின் ஸாஹிறாவில் ஏற்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பற்றி பாக்கீர் மாக்கார் விளக்கிச் சொன்னார்.

4.3 ஆளுநர்சபை நிருவாகத்தில்

பெற்றோரும் நலன் விரும்பிகளும் 2 மில்லியன் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்த 12 வகுப்பறைகளைக் கொண்ட 3 மாடிக்கட்டிடம் (27.03.1985), சவூதி அரேபிய இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி தாபித்துக் கொடுத்த 9 வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் (15.12.1997), நான்கு மாடி விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடம் (1989) என்பன ஆளுநர் சபையின் நிருவாக காலத்தில் நிர்மாணிக்கப்பட்டவை. வாப்பிச்சி மரைக்கார் கட்டிடம், ஜபர்ஜி கட்டிக்கொடுத்த இருமாடிக்கட்டிடம், என்.டி.எச். அப்துல் கபூர் அமைத்துக் கொடுத்த விஞ்ஞான ஆய்வு கூடம் என்பன அமைந்திருந்த கல்லூரியின் ஆரம்ப அமைவிடத்திலேயே இப் புதிய விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது. சுஹைர் ஆளுநர் சபைத் தலைவராக விருந்த போது 27.12.2004இல் கல்லூரிக்கு விஜயம் செய்த துபாய் நாட்டு அல் மக்தூம் பவுண்டேசன் பிரமுகர்கள் நான்கு மாடிக் கட்டிடம் ஒன்றை 30 மில்லியன் செலவில் அமைத்துக் கொடுத்தனர். வேலைகள் ஆரம்பமானபோது சுஹைர் ஈரான் நாட்டுத் தூதுவராகச் சென்று விட்டதால் பௌசுல் ஹமீதின் காலத்தில் அவ்வேலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு நிறைவுபெற்றது. இக்கட்டிடத்திலேயே கல்லூரியின் நூலகம் தற்போது இயங்குகிறது. இவற்றை விட பேராசிரியர் எம்.ரி.ஏ.புர்கான் 65 மில்லியன் ரூபா செலவில் நான்கு மாடிக் கட்டிடம் ஒன்றை அமைத்துக் கொடுத்திருக்கிறார். நவீன வசதிகளுடனான நீச்சல் தடாகமும்அமைக்கப்பட்டிருக்கிறது. இரு குண்டு வெடிப்புகளால் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக அப்போதைய அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் 29.10.1998இல் 2.5 மில்லியன் ரூபாவை கல்லூரிக்கு வழங்கினார். அப்பொழுது புனர்வாழ்வுப் பணிப்பாளராக நான் கடமையாற்றிக் கொண்டி ருந்தேன். அப்போதைய ஸாஹிறாக் கல்லூரி ஆளுநர் சபைத் தலைவர் இப்றாஹிம் ஹமீதுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாட்டை நானே முன்னின்று செய்தேன். எமது அமைச்சின் பொறியியல் ஆலோசகர் ஏ.எஸ். லெப்பையை ஸாஹிறாவுக்கு அனுப்பி அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட

மதிப்பீட்டறிக்கையின் பிரகாரம் இத்தொகை ஸாஹிறாவுக்கு வழங்கப்பட்டது. காசோலையைப் பெற்றுக் கொள்வதற்கு இப்றாஹிம் ஹமீதுடன், எம்.ரி.ஏ. புர்கான், றாஸிக் ஸறூக் ஆகியோர் அமைச்சுக்கு வந்திருந்தனர். ஆளுநர் சபை நிருவாகத்தில் விளையாட்டு மைதானமும் விடுதியும் புனரமைப்புச் செய்யப்பட்டு மீள் செயற்பாட்டுக்கு விடப்பட்டன. மூன்று வகுப்பறைகளைக் கொண்ட 'முத்துவாப்பாக்கட்டிடம்' இருந்த இடத்தில் 54மில். செலவில் 20 வகுப்பறைகளைக் கொண்ட ஐந்து மாடிக்கட்டிடமென்றும் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

பரோபகாரி என்.டி.எச். அப்துல் கபூர் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்த 18 ஏக்கர் காணி மஹரகமையில் இருக் கிறது. அக்காணியில் கிராமியக் கைத்தொழில் கற்கைக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு, தான் வகுத்திருந்த திட்டத்தை ஜாயா அப்போது வெளிப்படுத்தி இருந்தார். ஷாபிமரிக்காரும் ஜாயாவின் அத் திட்டத்தை வரவேற்று 1969ஆம் ஆண்டைய ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆயினும், ஷாபிமரிக்காரோ அவருக்கு முன் அதிபராகவிருந்த எ.எம்.எ. அஸீஸோ அதையிட்டுக் கவனம் செலுத்தாமை துரதிஷ்டமானது. இன்றுவரை அந்நிலம் பயன்பாடற்றுக் கிடக்கிறது. இக்காணியின் ஒருபகுதி வீதிக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதும், 500 மீட்டர் நீளப்பாட்டில் சட்டவிரோதமாக கடைகள் அமைக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுவதும் கவனத்திற்குரியது. ஸாஹிறாவுக்குரிய பம்பலப்பிட்டி சாகர வீதிக் காணியும் கவனிப்பாரற்று நீண்டகாலம் கிடந்ததால் வெளியார் ஒருவர் அதை ஆக்கிரமித்திருந்தார். இக்காணிகள் இரண்டும் சிறப்பாகப் பயன்படுத்தப்படாமைக்கு அப்போதைய மருதானைப் பள்ளி நிருவாகமும் இப்போதைய ஸாஹிறாக்கல்லூரி ஆளுநர் சபையும் பொறுப்புக் கூறவேண்டும்.

5

கொழும்பு ஸாஹிறாவின் இரு வரலாற்றுப் பதிவுகள்

5.1 75ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு



ஏ.எம்.எம். மக்கீன் சொற்பொழிவாற்றுகிறார். நீதிபதி எம்.ஏ.எம். ஹுசைனும் அதிபர் ஷாபிமரிக்காரும் காணப்படுகின்றனர்

ஸாஹிறாக் கல்லூரி மீண்டும் தனியார் பாடசாலையாகி ஷாபிமரிக்கார் 01.01.1967இல் அதிபரானதும் கல்லூரி 75ஆவது ஆண்டு நிறைவு விழாவை மிக எளிமையாகக் கொண்டாடியது. இவ்விழாவின் முக்கிய அம்சமாக ஸாஹிறாவின் பழைய மாணவன் கலாநிதி ஏ.எம்.எம். மக்கீன் அவர்களின் சொற்பொழிவு 22.11.1967இல் நிகழ்ந்தது. எம்.ஏ. பாக்கீர் மாக்கார் சிங்களத்திலும், எம்.ரி.ஏ. புர்கான் ஆங்கிலத்திலும், எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா தமிழிலும் வானொலியில் 16.11.1967இல் உரை நிகழ்த்தினர். கிரிக்கட், றகர், உதைபந்தாட்டம், மல்யுத்தப் போட்டிகள் நடைபெற்றன. கண்காட்சி, படக்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யு.தஹநாயக்க, எம்.ஏ. பாக்கீர் மாக்கார் (பா.உ), அமைச்சர் வீ.ஏ. சுகததாஸ, இலங்கைக்கான பாக்கிஸ்தான் தூதுவர் ஹுமாயூன்கான் பன்னி, இலங்கைக்கான ஐக்கிய அரபுக்குடியரசின் தூதுவர் காலிப் அப்துல் அஸீஸ் முஸ்தபா ஆகியோரெல்லாம் வெவ்வேறு நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தனர். இராப்போசன விருந்திற்கு (19.11.1967) பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவிருந்த பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களின் சார்பில், உள் நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யு. தஹநாயக்கா கலந்து சிறப்பித்தார். சிறப்பு



டபிள்யு. தஹநாயக்க கலந்து கொண்ட இராப்போசன வைபவம்

மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அம்மலருக்கு அனுப்பிவைத்த செய்தியில் முக்கிய விடயம் ஒன்றை ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொன்னார்.

> "Without Zahira College the fate of the community would be different in the context of this country. With Zahira College functioning today, we all know that the youth of the community would be educated to take its rightful place as an integral part of the whole. And if necessary learn to fight for our rights as an entity in the totality"



கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு வருட பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்த பிரதமர் டட்லி சேனநாயக்கவை அதிபர் வரவேற்கிறார்



கரீம்ஜீ ஜபர்ஜீயின் நிழற் படம் பிரதமரால் திரைநீக்கம் செய்யப்படுகிறது



அதிபர் பரிசளிப்பு உரை நிகழ்த்துகிறார் பிரதமர் டட்லி சேனநாயக்க அமர்ந் திருக்கிறார்

என்பதே அச்செய்தி. அவ்விழாவின் இறுதி அங்கமாக அமைந்த கல்லூ ரியின் 1968ஆம் வருடப் பரிசளிப்பு விழா வில் பிரதமர் டட்லி சேனநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். அன்றையத் தினம் கல்லூரிக் கபூர் மண்டபத்தில் கரீம்ஜீ ஜபர்ஜீயின் நிழற்படமும் பிரதமரினால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

1967 நவம்பர் 12-24வரை நிகழ்ந்த கல்லூரியின் 75ஆவது வருட நிறைவு நினைவு நிகழ்வுகள் - நிகழ்ச்சி நிரல்

நவம். 16 மு.ப. 10.00 - மௌலூத், கத்தமுல் குர்ஆன், சமயச் சொற்பொழிவுகள்

பி.ப. 1.30 - கிரிக்கட். பழைய மாணவர் எதிர் புதிய மாணவர்

பிரதம அதிதி: எம்.ரி. ஜதுரூஸ்

உள்ளக விளையாட்டுகள்

(பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், நலன் விரும்பிகள்)

வானொலி உரைகள்:

ஆங்கிலம் - எம்.ரி.ஏ. புர்கான்

			சிங்களம் - எம்.ஏ. பாக்கீர் மாக்கார் தமிழ்-எஸ்.இஸட்.எம். மஷஹ்ர் மௌலானா
நவம். 17	பி.ப. 4.45	-	றக்கர்: பழையமாணவர் எதிர் புதிய மாணவர்
	பி.ப. 7.45	-	குத்துச் சண்டை - சுற்றுப் போட்டி பிரதம அதிதி: திரு எப்.டபிள்யு. ஒபேசேகர (தலைவர் A.B.A.)
நவம். 18	பி.ப. 4.45	-	உதைபந்தாட்டப்போட்டி (A) விக்டறி விளையாட்டுக் கழகம் எதிர் ரத்னம் விளையாட்டுக் கழகம். பிரதம அதிதி: செனட்டர் ஏ.ஆர்.எம். ஹமீம்
	பி.ப. 6.30	-	படக்காட்சி (திறந்த வெளி) குத்துச் சண்டை சுற்றுப் போட்டி பிரதம அதிதி: ஜாபிர் ஏ. காதர் (கொழும்பு மேயர்)
நவம். 19	பி.ப. 8.00	-	75ஆவது ஆண்டு நிறைவு விழா இராப்போசன விருந்துபசாரம் தலைமை: ஏ.ஸி.எம். அமீர் கியு.ஸி. (பழைய மாணவர்சங்கத் தலைவர்) பிரதம அதிதி: கௌரவ டட்லி சேனநாயக்க (பிரதம மந்திரி)
நவம். 20	பி.ப 4.45	-	உதைபந்தாட்டப் போட்டி (B) சண்றைஸ் விளையாட்டுக் கழகம் எதிர் சைளண்டர்ஸ் விளையாட்டுக் கழகம். பிரதம அதிதி: செனட்டர் எம்.டி. கிச்சிலான் (தலைவர் F.C.A.)
நவம். 21	பி.ப. 3.45	-	உதைபந்தாட்டப் போட்டி (C) ஸாஹிறாக் கல்லூரி எதிர் கொழும்புப் பாடசாலைகள் அணி
	பி.ப. 4.45	-	உதைபந்தாட்ட இறுதிப் போட்டி (D) வெற்றிபெற்ற A அணி எதிர் வெற்றிபெற்ற B அணி பிரதம அதிதி: கௌரவ வீ.ஏ. சுகததாஸ (அமைச்சர் தேசிய மயமாக்கப்பட்ட சேவைகள்)
நவம். 22	பி.ப. 6.30	-	சொற்பொழிவு: கலாநிதி ஏ.எம்.எம். மக்கீன்
நவம். 23	பி.ப. 7.45	-	விநோத, சித்திர, கைவேலைகள் கண்காட்சி

திறப்பு: இலங்கைக்கான பாக்கிஸ்தானின் தூதுவர் ஹுமாயூன்கான் பன்னி

நவம். 24 பி.ப. 4.00 - விநோத, சித்திர, கைவேலைகள் கண்காட்சி
திறப்பு: இலங்கைக்கான ஐக்கிய அரபுக் குடியரசின் தூதுவர் கலீபா அப்டெல் அஸீஸ் மொஸ்தபா

பி.ப. 6.30 - திரைப்படம் (திறந்த வெளி)
வேறு நிகழ்வுகள்: ஸாஹிறாவின் உதயம் (புகைப்படங்கள், வெற்றிச்சின்னங்கள் முதலியனவற்றின் கண்காட்சி)

ஸாஹிறாக் கல்லூரியின் 75ஆவது வருட நிறைவு சிறப்பு மலர் ஒன்று (ZCC 75th Anniversary Souvenir) பழைய மாணவர் சங்கத்தினால் வெளியிடப்பட்டது. ஸாஹிறாக் கல்லூரியை மீளப் பெற்றதன் பின் நிகழ்ந்த முதலாவது நிகழ்வு என்ற வகையில் இது முக்கியமானது. 75 வருட ஸாஹிறாவின் வரலாற்றை, முக்கிய நிகழ்வுகளைத் தாங்கி இம் மலர் வெளிவந்தது. ஸாஹிறாவை அரசாங்கத்திடமிருந்து மீளப்பெறும் செயலணியின் தலைவராகச் செயற்பட்ட கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர், அப்போதைய அட்டோர்ணி ஜெனரல் ஏ.ஸி.எம். அமீர் அவர்கள், இவ்விழாவில் முக்கிய பங்கேற்றுச் செயற்பட்டார். இம்மலருக்கு அவர் வழங்கிய செய்தி பல முக்கிய விடயங்களை முஸ்லிம் சமூகத்துக்கு எத்திவைத்தது.



கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு நினைவு மலர்

> "**To the Muslims of this country Zahira is more than a mere educational institution.** It is also the symbol of the mission undertaken by a handful of pioneers, the greatest of whom was, undoubtedly, Jayah of Zahira, and a monument to their efforts which alone made possible the break – through of barrier of prejudice against education beyond the minimum required for the business activities of the sons of a 'race of shopkeepers', as we used to be described.
>
> Those of us who today reap what those pioneers sowed are resolved to ensure that what they did shall not have been done in vain; that what they gave us we shall also give our children and their children. In our efforts to do so we, in no small measure, have already played a part by saving Zahira from an embrace

of death which all but choked it to death. We have indeed begun well and done well, thanks to the help and support rendered by the Muslims since the restoration.

Zahira's future is not in our hands alone. Like those before us we too shall soon pass away leaving its destiny in the hands of the new generation. It is already their turn to take over from us, and to play their part to enable this premier muslim educational institution of the country to coutinue to radiate Islamic thoughts, culture, learning and activity for the next seventy five years" (Ameer A.C.M., 1967)

என்று அமைந்தது ஏ.ஸி.எம். அமீரின் செய்தி. சாதாரண கல்வித் தாபனம் என்பதை விட ஸாஹிறா உயர்வானது. கல்வி மீதான தப்பெண்ணத்தை நீக்கும் நோக்கில் ஒரு சிலர் முன்னெடுத்த முயற்சியின் நினைவுச் சின்னம் இது. அவர்களின் எண்ணம் வீண்போகவில்லை. அவர்கள் விதைத்ததை சமூகம் இன்று அறுவடை செய்கிறது. அவர்கள் எமக்குத் தந்ததை எமது பிள்ளைகளுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் விட்டுச் செல்கிறோம். நாங்கள் ஸாஹிறாவுக்கு நல்லதைச் செய்திருக்கிறோம்.மரணத்தை அடையவிருந்த ஸாஹிறாவைக் காப்பாற்றியிருக்கிறோம். அதற்குதவிய முஸ்லிம்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். ஸாஹிறாவின் எதிர்காலம் எமது கரங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை. முன்னையவர்கள் எம்மிடம் ஒப்படைத்ததைப் பாதுகாத்து, இஸ்லாமிய சிந்தனை, கலாசாரம், கல்விச் செயற்பாடுகளின் மத்திய நிலையமாக எதிர்வரும் 75 வருடங்களுக்கு வளர்த்தெடுக்கும் பொறுப்பை எதிர்காலச் சந்ததியினரிடம் ஒப்படைக்கிறோம் - என்றவாறு அமைந்திருந்த அமீரின் செய்தி மிக்க அர்த்த புஷ்டியுள்ளது. ஸாஹிறாவின் வரலாற்றில் மிகவும் துணிகரமான பங்களிப்பைச் செய்த அப் பெருந்தகை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் சென்ற செய்தி இது.

"Zahira holds an honoured place in the history of education in this country. It has been built up to be one of the leading educational institutions through the help of many generous benefactors. It has produced men who have adorned the professions and have rendered distinguished public service to this country. Zahira has not only earned fame for the scholastic ability of its pupils, but for their triumphs in the field of sports too" (Dudley Senanayake, 1967)

என்று சிறப்பு மலர்ச் செய்தியில் பிரதமர் டட்லி சேனநாயக்க குறிப்பிட்டிருந்தார். கல்வி அமைச்சர் ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்ல அவர்களின் செய்தியும் மலரில் இடம்பெறுகிறது. ஸாஹிறாவின் 75ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகளின் இறுதி அம்சமாக இடம்பெற்ற 1968ஆம் ஆண்டைய

ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் பிரதமர் குறிப்பிட்ட,

> "I take this opportunity of acknowledging on behalf of the nation the great services rendered to this country by Zahira" (The Crescent, 1968:15)

என்ற வார்த்தைகள் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் உள்ளத்திலிருந்து வெளிவந்தவை; ஸாஹிறாக் கல்லூரியின் 75 வருட கால கல்விப் பணிக்குக் கிடைத்த பெரும் புகழாரம்.

ஸாஹிறாவின் 75ஆவது வருட நிறைவுக் கொண்டாட்டங்களுக்கும் விருந்துபசாரத்துக்கும் கல்லூரியை அரசாங்கம் சுவீகரிப்பதற்குக் காரணமாக அமைந்த முன்னாள் அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களும் அதற்கு உடந்தையாகவிருந்த கல்லூரியின் முன்னாள் அதிபர் எ.எம்.எ. அஸீஸ் அவர்களும் அழைக்கப்படவில்லை. கல்லூரியை அரசாங்கம் சுவீகரித்ததற் கெதிராக பிரிவிகவுன்சில் வரை சென்று கல்லூரியை மீட்டெடுத்த பழையமாணவர் சங்கம் நடாத்திய இக் கொண்டாட்டங்களுக்கு அவர்கள் அழைக்கப்படாமை காரணமுடைத்து.

> "இவ்விழாவினை ஒழுங்கு செய்த கல்லூரி அதிகாரிகள் ஸாஹிறாவுக்கு அருஞ்சேவை செய்த ஒரு மனிதரை, ஜனாப் எ.எம்.எ. அஸீஸை மறந்து விட்டனர். ஸாஹிறாவின் 75ஆவது வருடாந்த இரவுப் போசன விருந்து வைபவத்தில் சொற்பொழிவாற்றிய பேச்சாளர்களின் ஒருவர் மட்டுமே அஸீஸின் பெயரைப் பிரஸ்தாபித்தார். மற்ற எந்த ஒரு தனிமனிதரையும் விட அஸீஸ் ஸாஹிறாவுக்காக நிறையச் சேவை செய்துள்ளார் என்பதை நான் அறிவேன். சமுதாயத்திற்காகவும் ஸாஹிறாவுக்காகவும் அவர் தம்முடைய ஸி.ஸி.எஸ். பதவியைத் துறந்தார். சமுதாயம் எப்படி அவரை மறக்க முடியும்? ஸாஹிறாவின் முன்னேற்றத்தில் பங்குகொள்ளத் தகுதி இல்லாதவர் களுக் கெல்லாம் அவர்கள் அதிக பிரசித்தம் அளித்துள்ளனர்" (றாசிக் பரீத் சேர், தினகரன் வாரமஞ்சரி - 01.12.1967)

என்று கல்லூரியின் 75ஆவது வருட நிறைவு நிகழ்வுகளுக்கு அஸீஸ் அழைக்கப்படாமை பற்றி சேர் றாஸிக் பரீத் கருத்துரைத்து கவனயீர்ப்புச் செய்தார்.

5.2 85ஆவது ஆண்டு பூர்த்தி விழா

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மீண்டும் தனியார் கல்லூரியாகி 10 ஆண்டுகள் பூர்த்தியடைந்ததை, கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவை, ஸாஹிறாக் கல்லூரி ஷாபிமரிக்காரின் தலைமையிலும் வழிகாட்டலிலும்

அறிவுபூர்வமாகக் கொண்டாடியது. 1977 ஒக்டோபர் 9-14 வரை நடைபெற்ற அவ்விழாவின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு:

ஒக். 09 - அங்குரார்ப்பணம்

ஒக். 10 - உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்

ஒக். 11 - கல்லூரிப் பரிசளிப்பு விழா

ஒக். 10-17 - இஸ்லாமிய மாநாடும் கருத்தரங்கும்

ஒக். 12-16 - கல்விக் கண்காட்சி

ஒக். 14-16 - கிறசன்ட் லைட் 1977 – பொருட்காட்சியும் களியாட்ட விழாவும்

ஒக். 17 - பொது இராப்போசன வைபவம்

வேறு நிகழ்வுகள்: பேச்சு, கட்டுரை, கிறாஅத், அறபு எழுத்தணிப் போட்டிகள்

அவ்விழாவின் முக்கிய அம்சமாக சர்வதேச இஸ்லாமிய ஆய்வு மாநாடு ஒன்று, 'உலகப் பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் தீர்வு' என்ற கருப்பொருளில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் சிறப்பாக நடந்தேறியது. இலங்கையில் நடைபெற்ற முதலாவது சர்வதேச இஸ்லாமிய மாநாடாகவும், ஸாஹிறாவின் வரலாற்றில் நிகழ்ந்த மிக முக்கிய மாநாடாகவும் இதைக் கொள்ளலாம். சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஜோர்தான், இந்தோனேஷியா, ஐக்கிய இராச்சியம், இந்தியா முதலான நாடுகளிலிருந்தும், உலக முஸ்லிம் காங்கிரஸ் (சிங்கப்பூர்), றாபிதத்துல் ஆலமில் இஸ்லாமி (மக்கா), முஸ்லிம் உலக லீக் (பாக்கிஸ்தான்) முதலான முதன்மை முஸ்லிம் அமைப்புகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் இம்மாநாட்டில் கலந்து சிறப்பித்தனர். முஸ்லிம் உலகின் கல்வி, பொருளாதாரம், சிறுபான்மைப் பிரச்சினைகளில் மாநாடு கூடிய கவனம் செலுத்தி முக்கிய தீர்மானங்களை எடுத்தது. மாநாட்டுத் தீர்மானங்கள் மிகவும் ஆய்ந்தோய்ந்து எடுக்கப்பட்டனவாக மிக்க பெறுமதியுடையனவாக விருந்தன.

பாராளுமன்ற உறுப்பினர் பழீல் ஏ. கபூர் தேசியக் கொடியையும், கல்லூரி முகாமையாளர் ஏ.எச்.எம். இஸ்மாயில் பாடசாலைக் கொடியையும், எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் இஸ்லாமிய மாநாட்டுக் கொடியையும் ஏற்றிவைத்து விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

"1892ஆம் ஆண்டில் சாதாரண நிலையில் உருவாகிய ஸாஹிறாக் கல்லூரி நம்நாட்டு கல்வி வரலாற்றில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. தொழிற் துறையிலும் பொது வாழ்க்கையிலும் இன்னும் பல

அம்சங்களிலும் புகழ்பரப்பி நற்சேவை புரிந்து நாட்டுக்கும் தங்கள் சமூகத்துக்கும் பெருமைக்குரிய பணியாற்றிய நல்லோர்கள் பலரை இக் கல்லூரி உருவாக்கித் தந்துள்ளது. தாய்நாட்டுப் பற்றுமிக்க சேவைநலப் புருஷர்களை எமது இளைய தலைமுறையிலிருந்து உருவாக்கித் தருவதில் ஸாஹிறாக் கல்லூரி எதிர்காலத்தில் தனது உரிய பணியை உரிமையுடன் வழங்கும் என்பதில் எனக்கும் பூரண நம்பிக்கையுண்டு. இக் கலாநிலையத்தின் பரிபூரண வெற்றிக்காக என்னுடைய நல்லாசிகளைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்" (ஜயவர்த்தன ஜே.ஆர்., தினகரன் - 10.10.1977: 1)

என்று அன்றையப் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும்,

"இஸ்லாமிய இலட்சியம், வாழ்க்கை நெறிகளை இளைய தலைமுறையினர் கடைப் பிடித்தொழுகுதல் வேண்டுமென்பதற்காக முஸ்லிம் கலாசார அடிப் படையிலான ஒரு சிறந்த கலாசாலை இந் நாட்டில் இருக்க வேண்டும் என எம் முன்னோர்கள் விரும்பினார்கள். இதற்காகவே ஸாஹிறாக் கல்லூரிக்கு அத்திவாரமிடப்பட்டது. அந்த அத்திவாரத்தில் ஸாஹிறா எண்பத்தைந்து வயதை இன்று கடந்துவிட்டது. அது நடந்துவந்த பாதையில் பல தடங்கல்கள் இல்லாமல் இல்லை. இவையனைத்தையும் துணிச்சலோடு ஸாஹிறா வெற்றிகண்டுள்ளது. 1961ஆம் வருடம் கல்வி அமைச்சரின் உத்தரவின் பேரில் ஸாஹிறா அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. இது ஸாஹிறாக் கல்லூரியின் வரலாற்றிலேயே ஒரு சோகமான நாளாக அமைந்தது. ஸாஹிறாக் கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்றதற்கு கல்லூரியின் பழையமாணவர் சங்கமும் பள்ளிவாசல் கமிட்டியும் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தன. பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகத்தினர் ஒன்றாக இணைந்து போராடினர். இறுதியில் ஸாஹிறாக் கல்லூரி மீண்டும் உரியவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. இது இக்கல்லூரிக்குக் கிடைத்த பெரு வெற்றி யாகும்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 12.10.1977: 4)



இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர் பெருமக்களுடன் ஷாபிமரிக்கார்

என்று கல்லூரி அதிபர் ஷாபிமரிக்காரும் இவ்விழாவையொட்டி அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்திகளில் குறிப்பிட்டிருந்தனர்.

இவ் விழாவில் பிரபல்யமிக்க முஸ்லிம் பேரறிஞர்களின் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. 'மத்ரஸாக் கல்வி' பற்றி ஒய்வுநிலை நீதியரசர் பஷீர் அஹ்மத் (சென்னை) அவர்களும், 'இஸ்லாம் எல்லோருக்குமுரிய சமயம், அதன் அழைப்பு மனித சமுதாயத்திற்குரியது'



ஆராய்ச்சி மாநாட்டில் தொடக்கவுரை ஆற்றுகிறார் அதிபர் ஷாபிமரிக்கார்

என்ற தலைப்பில் நீதிபதி அல்-ஸெய்த் அலி அல்-ஹாஷிம் (துபாய்), 'இஸ்லாமிய தத்துவம்' பற்றி தலைவர் ஜமாஅதே இஸ்லாமி ஹிந்த் மௌலானா முஹம்மத் யூசுப் (புது டில்லி), 'இஸ்லாத்தையும் அரபு மொழியையும் கற்பதன் அவசியம்' பற்றி சவூதி அராபிய மன்னரின் பிரதிநிதி கலாநிதி அப்துல்லா அப்துல் முஹ்சின் அல்-துர்கி (பணிப்பாளர், இமாம் சஊத், இஸ்லாமியப் பல்கலைக்கழகம், றியாத், சவூதி அரேபியா), 'இஸ்லாம் மனித சமூகத்திற்கான செய்தி' பற்றி ஜோர்தான் இஸ்லாமிய விவகார அமைச்சின் கல்விப் பணிப்பாளர் மஜீத் இர்சன் அல்-கைலானி, 'கலங்கரை விளக்கம்' என்ற தலைப்பில் ஜமால் முகம்மதுக் கல்லூரி முதல்வர் ஈ.பி.முஹம்மத் இஸ்மாயில் (தமிழ்நாடு), 'எதிர்நீச்சல்' என்ற தலைப்பில் இந்திய முஸ்லிம் லீக் தமிழகத் தலைவரும், மணிவிளக்கு ஆசிரியரும், தென்னக முஸ்லிம் கல்விச் சங்கத்தின் தலைவருமான ஏ.கே. ஏ. அப்துஸ் ஸமத் (தமிழ்நாடு), 'பொருளாதார அபிவிருத்திக்கு இஸ்லாமிய அணுகுமுறை' பற்றி கலாநிதி குர்ஷித் அஹ்மத் ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்தினர். ஷேக் முஹம்மத் சாலே அல்றாயிஸ் (துபாய்), பாண்டுங் தொழினுட்ப நிறுவகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அஹமட் சடாலி (இந்தோனேசியா), தென்னிந்திய ஒமறாபாத் ஜாமிஆ தாறுஸ்ஸலாம் இணைச் செயலாளர் மௌலானா காக்கா சயீத் அஹமத் சாய்பு ஒமெரி, எம். முஹம்மத் ஹுசைன் (ஒமறாபாத் ஜாமிஆ தாறுஸ்ஸலாம், தென்னிந்தியா), அம்பூர் மஸ்ஹறுல் உலூம் கல்லூரிச் செயலாளர் கொ. றபீக் அஹமட் (தென்னிந்தியா), பி.எம். ஹசன் இக்பால் (சென்னை), தென்னிந்திய பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பாக் கல்லூரிச் செயலாளர் ரி.ஈ.எஸ். பாது றப்பானி, மௌலானா ஜமால் மீயான்



ஆய்வரங்கின் அமர்வொன்று



ஆராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்த அ.கா.அ. அப்துஸ் ஸமத் அவர்களை ஷாபிமரிக்கார் வரவேற்கின்றார்



மாநாட்டுக்கு வருகை தந்த தமிழக அறிஞர் ஒருவருடன் கமால்தீனும் ஷாபி மரிக்காரும்



இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டுப் பிரமுகர்கள் டாக்டர் கலீலின் தலைமையில் பிரதமர் ஜயவர்தனவை அவரின் வாசஸ்தலத்தில் சந்திக்கின்றனர்

(றாபிதத்துல் ஆலமில் இஸ்லாமி - பாக்கிஸ்தான்) ஆகியோரெல்லாம் இவ்வாய்வு மாநாட்டில் பங்குபற்றினர்.

'உலகப் பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் தீர்வு' என்ற தலைப்பில் கருத்தாடல் (symposium) இடம்பெற்றது. முஹம்மத் கான் (பிரதிநிதி, முஹ்தமர் அல்-ஆலம் அல்-இஸ்லாமி, சிங்கப்பூர்) அவர்களின் தலைமையில் நிகழ்ந்த இக் கருத்தாடலில் டாக்டர் கலீல் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடக்க உரையை அப்போதைய தலைமை நீதிபதி நெவில் சமரக்கோன் நிகழ்த்தினார். முக்கிய உரையை பேராசிரியர் குர்ஷித் அஹ்மத் நிகழ்த்தினார்.

> "ஸாஹிறாவின் பெருமை எனது நாட்டிலும் பேசப்படுகிறது. ஒருமுறை அந்தக் கல்லூரியைப் பார்த்து விட்டு வந்துவிடுவோம் என்ற ஆர்வத்தில் இங்கு வந்துள்ளேன். அதற்கு இஸ்லாமிய மாநாடு பொருத்தமானதாக அமைந்து விட்டது" (குர்ஷித் அஹ்மத், தினகரன் - 26.10.1977)

என்று தனது உரையில் குர்ஷித் அஹ்மத் குறிப்பிட்டார். இவர் லண்டன் இஸ்லாமிய நிலையப் பணிப்பாளர் நாயகமும், மன்னர் அப்துல் அஸீஸ் சர்வ கலாசாலையின் ஆலோசகரும், 'இம்பெக்ட்' பத்திரிகையின் ஆசிரியருமாவார்.

> "Among the problems discussed at the International Islamic conference held at Zahira Colloge in October 1977, it was reiterated that instruction in the Arabic language was extremely essential for the Muslims and that Arabic should become the 'lingua franca' of the entire Islamic World. The conference also recommended that the teaching of Arabic should be promoted as a second Language throughout the non-Arabic speaking Muslim world and new methods of teaching Arabic should be evolved to make the process efficient and quick" (Noordeen M.B., 1983 : 10)

என்று அரபு மொழி கற்பித்தல் சம்பந்தமாக இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானம் பற்றி முன்னாள் கல்விப் பணிப்பாளர் எம்.பி. நூர்தீன் தனது 'A System of Islamic Education for Sri Lankan Muslims'என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். முஸ்லிம்கள் அரபு மொழி கற்றலின் அவசியம், தொடர்பு மொழியாக அல்லது இரண்டாம் மொழியாக, அரபு நாடுகளல்லாத முஸ்லிம்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் அரபு கற்பிக்கப்படுவதன் அவசியம், அம்மொழியைக் கற்பிப்பதில் புதிய உத்திகளின் பிரயோகம் என்பன பற்றியெல்லாம் மாநாட்டில் கலந்துரையாடப்பட்டதை நூர்தீனின் இக்குறிப்புக் காட்டுகிறது.

குறித்துச் சொல்லக்கூடிய பல தீர்மானங்கள் இவ்வாய்வு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன:

1. சமயக்கல்வி, சமய சார்பற்ற கல்வி என்பன இரண்டும் ஒன்றிணைக்கப் படவேண்டும். அவ்வொன்றிணைவு ஆளுமை வளர்ச்சிக்கும், வாழ்க்கை, அதனோடிணைந்த பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவும் உதவும்.
2. வெறுமனே தத்துவங்களின் அடிப்படையில் கல்வி அமையாது சமூக வாழ்க்கைக்குப் பிரயோசனமுடையதாக, அனுபவம், விழுமியங்கள், சமூகத் தேவைகளும் கல்வியில் முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும்.
3. படிப்பை இடைநிறுத்தல், பரீட்சையில் தோல்வியடைதல், படித்தவர்களின் வேலையின்மை போன்ற கல்வி விரயங்களைக் குறைக்கும் வகையில் கல்வி திட்டமிடப்படுதல் வேண்டும்.
4. கூட்டுக்கல்வி தவிர்க்கப்பட்டு பெண்களுக்கென பிரத்தியேகப் பாடசாலைகள், உயர்கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
5. நாடுகளிடையும், நாடுகளுக்குள்ளும் கல்வியில் சமமின்மை இல்லாதொழிக்கப்படல் வேண்டும்.
6. சமூக, விஞ்ஞான, தொழினுட்ப அபிவிருத்திகள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளத் தேவையான வசதிகள், ஏற்பாடுகள், தூண்டுதல்கள், சகாயம் என்பன செய்துகொடுக்கப்படுதல் வேண்டும்.
7. முஸ்லிம் உலகின் தொடர்பு மொழியாக அரபு இருத்தல் வேண்டும். அரபு மொழி பேசப்படாத நாடுகளில் அரபு மொழி 2ஆவது மொழியாக அமைதல் வேண்டும். அரபு மொழியை விரைவாகவும் திறமையாகவும் கற்பிப்பதற்கு புதிய உத்திகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.
8. முஸ்லிம் நாடுகளிடை ஆசிரியர், மாணவர் பரிமாற்றம் நிகழ வேண்டும். கற்றல்-கற்பித்தல் கருவிகள், பாடநூல்கள், கட்புல, செவிப்புல சாதனங்கள் முதலானவை தாராளமாகக் கிடைப்பதற்கு வழிவகைகள் காணப்படல் வேண்டும்.
9. முறைசாராக்கல்வியிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். இஸ்லாமியக் கல்விக்கும், கற்பித்தலுக்கும் ஊடகங்களின் முறையான பயன்பாடு அவசியமாகும்.
10. ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு, அனுபவப்பகிர்வு, முஸ்லிம் உலகின் வளங்களைப் பயன்படுத்துதல் என்பனவற்றுக்காகத் தலைமையகத்தையும் பிராந்திய நிலையங்களையும் கொண்ட சர்வதேச இஸ்லாமியக் கல்வி நிலையமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

11. நாடுகள் தோறும் பைத்துல்மால் ஏற்படுத்தப்பட்டு ஸக்காத் கொடுப்பனவுகள் சேகரிக்கப்பட்டு தேவையானவர்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

12. சிறுபான்மையினரின் அடிப்படை, கலாசார, சமய, அரசியல் உரிமைகள் மதிக்கப்படுதல் வேண்டும். அவர்களின் கோட்பாடு, விழுமியங்களின் அடிப்படையில் அவர்களின் சமய, கல்வி, கலாசார, சமூக வாழ்க்கைக்குத் தேவையான போதிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். சமய, கலாசாரச் சிறுபான்மையினரின் அபிவிருத்திக்குத் தேசிய அரசாங்கங்கள் உதவுதல் வேண்டும்.

என்பன முஹ்தமர் அல்-ஆலம் அல்-இஸ்லாமி - சிங்கப்பூர்க் கிளையின் பிரதிநிதி முஹம்மத் கான் தலைமையில் 'உலகப்பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் தீர்வு' என்ற மகுடத்தில் ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற ஆய்வு மாநாட்டின் முடிவில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களுட்சில. ஷாபிமரிக்காரின் முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வாய்வு மாநாடு ஸாஹிறாக் கல்லூரியின் வரலாற்றில் அனைத்துலக மட்டத்தில் நிகழ்ந்த முதலாவது மாநாடாக முத்திரை பதித்தது. அம்மாநாட்டில் படிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் நூலுருப்பெற்றிருப்பின் அம்மாநாட்டின் பெறுமதி இன்னும் உயர்ந்திருக்கும்.

ஸாஹிறாவின் 'இலங்கை முஸ்லிம் கலாசார நிலையம்' ஓய்வு நிலை நீதியரசர் பஷீர் அஹ்மத் சயீத் (மெட்ராஸ்) அவர்களினாலும், ஸாஹிறாக் கல்லூரி அச்சகம் இந்தோனேஷியத் தூதுவர் அட்லின்ஸ்ஜாவினாலும், புடைவை நெசவு நிலையம் பாக்கிஸ்தான் தூதுவர் மொஹமட் வலியுல்லாகான் ஹைஷ்கி அவர்களினாலும், மோட்டார் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் எகிப்திய தூதுவர் மொஸ்தபா றதேப் அப்துல் வஹாப் அவர்களினாலும் ஸாஹிறா வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டன. எகிப்தில் கற்க இரு மாணவர்களுக்குச் சகாயமளிக்கவும், அரபு விரிவுரையாளர் ஒருவரை ஸாஹிறாக் கல்லூரிக்கு அனுப்பவும் எகிப்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதென்ற செய்தியை எகிப்தியத் தூதுவர் தனது உரையில் குறிப்பிட்டார். இவ்வுறுதிமொழி பின்னர் அமுல் செய்யப்பட்டது.

விற்பனை நிலையம், ஆசிரியர் தங்குமிடம் என்பனவற்றுக்கான அத்திவாரக்கல்லை ஷேக் எஸ்.ஐ. ஜப்ரீயும், உத்தேச தொழில்நுட்பக் கல்வி நிலையத்திற்கான அத்திவாரக்கல்லை அபூதாபி நீதியமைச்சின் தொழினுட்பத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஷேக் அப்துல்லா பத்ல் அல்-ஹம்மாடியும் நாட்டிவைத்தனர்.

'கிறசன்ட் லைட்-77' கண்காட்சியும், களியாட்ட விழாவும் மூன்று தினங்கள் நிகழ்ந்தன. அதன் முதல்நாள் நிகழ்வை உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் ஆர். பிரேமதாஸ 14.10.1977 மாலையில் ஆரம்பித்துவைத்தார். இரண்டாம் நாள் நிகழ்ச்சியை ஜாபிர் ஏ. காதர் 15.10.1977இலும், மூன்றாம் நாள் நிகழ்ச்சியை கொழும்பு மத்திய தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் ஹலீம் இஷாக் 16.10.1977இலும் ஆரம்பித்து வைத்தனர். கல்விக் கண்காட்சியை இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி பி.பி.ஜி.எல். சிறிவர்த்தன திறந்து வைத்தார். விழாவின் ஓர் அங்கமாக 11.10.1977இல் நிகழ்ந்த கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.



கல்விக் கண்காட்சியை அதிபர் சகிதம் ஜாபிர் ஏ. காதர் பார்வையிடுகிறார்



பிரதமர் ஜே.ஆர். ஜயவர்த்தன பரிசளிப்பு விழாவிற்கு வருகைதருகிறார்



பிரதமர் ஜயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவுப் பரிசளிப்பு விழா (1.10.1977). எம்.வை. பாயிஸ் நன்றி நவில்கிறார்.

> "ஸாஹிறாக் கல்லூரிக்கும் தனக்குமுள்ள தொடர்பு புதியதொன்றல்ல. சட்டசபை அங்கத்தவராக, அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதெல்லாம் கல்லூரியின் ஏதாவதொருவிழாவில் கலந்து கொண்டுள்ளேன். இன்று பிரதமர் என்ற அந்தஸ்த்தில் கலந்து கொள்கிறேன்" (ஜயவர்த்தன ஜே.ஆர்., தினகரன் - 12.10.1977: 1-3)

என்று அங்கு உரையாற்றிய பிரதமர் தெரிவித்தார். இவ்விழாவின் இறுதி நிகழ்வாக 17.10.1977இல் நடைபெற்ற இராப்போசன வைபவத்திற்கு அப்போதைய கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன பிரதம அதியாகக் கலந்து சிறப்பித்தார்.

> "அல்குர்ஆன் சமய வாழ்வின் மேன்மைகளை மட்டுமன்றி, மனிதனின் அன்றாட வாழ்வின் தன்மைகள் குறித்தும் அழகாகக் கூறியுள்ளது. சமூகத்தின் சௌஜன்யம் குறித்து அல்குர்ஆனில் விளக்கப்பட்டுள்ள பாங்கு உயரியதாகும். முஸ்லிமல்லாத ஒருவனாக இருந்து கொண்டு தான் இதனை உணர்ந்து பார்த்துப் பெருமிதம் கொள்கிறேன்" (நிஸ்ஸங்க விஜேரத்ன, தினகரன் - 21.10.1977)

என்று அங்கு உரையாற்றிய அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன குறிப்பிட்டார். "தாம் நோய்வாய்ப்பட்டிருப்பதாகவும் மூன்று நாட்கள் கட்டாயம் ஓய்வெடுக்கும்படி டாக்டர் கூறியிருந்தும் ஸாஹிறாவின்பாலுள்ள உள்ளார்ந்த பற்றினாலும் அன்பினாலுமே இவ் வைபவத்தில் கலந்து கொள்ள விளைந்ததாகத் தெரிவித்த அமைச்சர் தனதுரையின் போது சரளமாகப் பாவித்த அரபுச் சொற்களும் திருமறை மேற்கோள்களும், இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங்களும், பௌத்தரான அவருக்கு இருந்த ஆழ்ந்த இஸ்லாமிய ஞானத்தைக் காட்டின. இஸ்லாமிய தத்துவ ஞானத்தில் மிக்க ஈடுபாடுகொண்டுள்ள அவர் தனது அண்மைய இந்திய விஜயத்தின் போது முதன் முதல் செய்யிதினா ஹஸ்ரத் ஹாஜா மியினுத்தீன் ஜிஸ்தி (ரஹ்) அவர்களது ஸியாரத்துக்குச் சென்றதாகவும் குறிப்பிட்டார்" என்று அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன அவ் வைபவத்தில் நிகழ்த்திய உரை பற்றி தினகரன் பத்திரிகை 19.10.1977இல் (பக்.1,5) செய்தி வெளியிட்டிருந்தது. உண்மையில் முஸ்லிம்கள் மீது பரிவும், முஸ்லிம் கல்வி மீது கரிசனையும் கொண்டவர் அவர். இவ்வாறு ஷாபிமரிக்காரின் ஏற்பாட்டில் ஸாஹிறாக் கல்லூரி கொண்டாடிய 85ஆவது ஆண்டு நிறைவு விழா உலக இஸ்லாமிய மாநாடாக, ஸாஹிறாவின் மீளெழுச்சி விழாவாக நடந்தேறியது. நளீம் ஹாஜியார் தலைமையில் பேருவலை ஜாமிஆ நளீமிய்யாவும், மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹீம் தலைமையில் 'சல்சபீல்' ஹோட்டலில் 'ஜமாஅதே இஸ்லாமி'யும் மாநாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்று உபசரித்தன. இவ்விழாவின் ஏற்பாட்டில் பொத்துவில் மௌலவி ஏ.எல்.எம். காசிமின் முயற்சிக்கும் பெரும்பங்குண்டு.

> "The 85th anniversary celebrations of Zahira College may be said to constitute a landmark in the history of the institution. The fitting manner in which the celebrations were planned and organized, impressed on the minds of the public, the glorious achievements of the past and the same time, pointed to new directions in which the college is advancing, in keeping with the demands and challenges of the present" (Shafie Marikar S.L.M. The Crescent July 1978: 3)

என்று கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழா பற்றிக் கருத்துரைத்த ஷாபிமரிக்கார் அதன் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்திக் காட்டினார்.

> "Zahira College has now Classes in the Sinhala and Tamil media from grade 1 to grade 12 in addition to English medium classes. It plays emphasis on practical and Pre-vocational training and in many aspects of educational theory and practice, so much so that the school even fore-shadowed the government's own plans in the field of education. The atmosphere is predominantly Islamic. In point of fact the time table set for the Boarders make the observance of the five times prayers obligatory and the Islamic traditions are observed in all

spheres of activities. Zahira college continues its tradition of service to the community and to the state and looks forward to meet the challenges of a changing society with complete confidence and in an Islamic environment" (Zahira College 85th Anniversary Souvenir 1977)

என்று 1967இல் பொறுப்பேற்று 10 வருடங்கள் சேவையாற்றி வளர்த்தெடுத்த ஸாஹிறாக் கல்லூரியின் முன்னேற்றத்தை 1977இல் மறுமதிப்பீடு செய்தார் ஷாபிமரிக்கார்.

"முஸ்லிம் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் ஸாஹிறாக் கல்லூரி வகித்துவரும் நிலை ஒப்புவமையற்ற ஒன்றாகும். இன்று அது நூறு வீதம் முஸ்லிம் பாடசாலையாகவும் தனியே முஸ்லிம் சூழலில் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் இருக்கிறது. இந்த நிறுவனம் தனியே இலங்கைச் செயற்பாடுகளின் ஒரு பிரிவாக மட்டுமன்றி பரந்த முஸ்லிம் உலகின் ஒரு அங்கமாகவும் இயங்குகின்றது" (Zahira College 85th Anniversary Souvenir -1977)

என்றும் ஸாஹிறாக் கல்லூரியைப் பற்றிக் குறிப்பிட்டுப் பெருமிதம் அடைந்தார் ஷாபிமரிக்கார். இம் மாநாட்டில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப் பட்டிருப்பின் முஸ்லிம் உலகு மிகு பயன் அடைந்திருக்கும். விழாவையொட்டி 12.10.1977இல் தினகரனில் வெளியிடப்பட்ட அநுபந்தத்தில் 'ஸாஹிறாவுக்கு விஜயம் செய்த வெளிநாட்டுப் பிரமுகர்கள்' என்ற தலைப்பில் தினகரன் உதவி ஆசிரியர் கே.எம்.எம். அபூபக்கர் கட்டுரை எழுதியிருந்தார். 'ஸாஹிறாவுக்கு எண்பத்தைந்து வயது' என்ற தலைப்பில் 09.12.1977 தினகரன் வாரமஞ்சரியில் எம். எம். மக்கீனின் கட்டுரையும் வெளிவந்தது. பல தகவல்களுடன் 85ஆவது ஆண்டு நிறைவு நினைவு மலரும் வெளிவந்தது.



கல்லூரியின் 85ஆவது வருட நிறைவு நினைவு மலர்

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி நூற்றாண்டு விழா (1892 - 1992) ஏற்பாட்டுக்குழுவிலும் அதன் பொதுக்கூட்ட ஏற்பாட்டுக்குழுவிலும் ஷாபிமரிக்கார் இடம் பெற்றிருந்தமையும் கவனத்துக் குரியது. அப்போது ஜாவித் யூசுப் அதிபராகவிருந்தார். ஸாஹிறாக் கல்லூரியின் நூறாவது ஆண்டு நிறைவு விழாவின் தொடக்க நிகழ்வு 29.09.1991இல் கல்லூரிக் கபூர் மண்டபத்தில் நிகழ்ந்தபோது One hundred years of Zahira என்ற தலைப்பில் ஷாபி கட்டுரை படித்தார். இக்கட்டுரை நூலுருப் பெறவேண்டும் என்பது என்னுடைய ஆதங்கம்.


ஸாஹிறாக் கல்லூரி நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக்குழு இ-வ. மாக 9ஆவதாக அமர்ந்திருப்பவர் ஷாபிமரிக்கார்

6 ஒறாபிபாஷா ஞாபகார்த்தம்

எகிப்திலிருந்து பிரித்தானிய ஆட்சியாளர்களால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒறாபிபாஷா இந்நாட்டில் வாழ்ந்த காலத்தில் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி, கலாசாரம், அறபுமொழி மேம்பாட்டுக்குப் பெரும் பங்களிப்புச் செய்திருந்தார். எம்.ஸி. சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் முதலான இலங்கை முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சியாளர்கள் ஒறாபிபாஷாவுடன் ஒன்றித்துச் செயற்பட்டமையினாற்றான் 'அல்-மத்ரஸதுஸ் ஸாஹிறா' என்ற பெயரில் இன்றைய கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை 1892 ஆகஸ்ட் 21இல் தோற்றுவிக்க முடிந்தது. ஸாஹிறாக் கல்லூரியின் தோற்றமும் இலங்கையில் வாழ்ந்து கொண்டிருந்த ஒறாபிபாஷாவின் எகிப்துக்கான மீளப் புறப்பாடும் ஒரே வருடத்தில் நிகழ்ந்தன. ஷாபிமரிக்கார் அதிபராகவிருந்த காலத்தில் கொண்டாடப்பட்ட கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழாவில் அக்கல்லூரியின் தாபிதத்தில் ஒறாபிபாஷாவின் பங்களிப்பும் சிறப்பாக நினைவு கூரப்பட்டது. ஒறாபிபாஷா பற்றி ஆதர் ஸி. டெப் எழுதிய கட்டுரைகள் நூலாக வெளியிடப்பட்டது. ஷாபிமரிக்கார் காலத்தில் ஸாஹிறாவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமொன்று 'ஒறாபிபாஷா நினைவுக் கட்டடம்' என நாமம் இடப்பட்டது. 'ஒறாபிபாஷா வீதி' இலங்கையிலும் 'இலங்கை வீதி' எகிப்தின் கெய்ரோ நகரிலும் ஒறாபிபாஷாவின் நினைவாகத் திறந்து வைக்கப்பட்டன. இவையெல்லாம் ஷாபிமரிக்கார் ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்தபோது கொண்டாடப்பட்ட கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழாவின் அம்சங்களாக நிகழ்ந்தேறின. ஷாபிமரிக்கார் ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து விட்டு வெறியேறிய பின் ஒறாபிபாஷா நினைவு நிகழ்வுகள் அகில இலங்கை முஸ்லிம் லீக்கினால் முன்னெடுக்கப்பட்டன. ஏற்கனவே ஷாபிமரிக்காரின் ஏற்பாட்டில் வெளியிடப்பட்ட ஒறாபிபாஷா பற்றிய நூல் முஸ்லிம் லீக்கினால் மீள்பிரசுரம் செய்யப்பட்டது. ஒறாபிபாஷா

நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. ஒறாபி பாஷா மியூஸியமும் கண்டியில் திறந்து வைக்கப்பட்டது. முஸ்லிம் லீக்கின் இச்செயற்பாடுகளும் ஷாபியின் சிந்தனையில் ஊற்றெடுத்தவைதாம். அவர் முன்னெடுத்த ஒறாபிபாஷா நினைவு நிகழ்வுகளின் தொடர்பறா நிகழ்வுகளாகவே அவைகளும் அமைந்திருந்தன.

ஒறாபிபாஷாவை எகிப்தின் தேசியவீரனாக மட்டும் நோக்காது அவரதுகாலப் பிண்ணணியில் நின்று அவரைப் பூரணமாக நோக்கும் போதுதான் அவரின் வரலாற்று முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளலாம். அந்நிய கலாசாரம் மூடநம்பிக்கைகளிலிருந்து எகிப்தை மீட்டெடுத்து அறிவுரீதியாக மக்களைச் சீர்திருத்துவதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற இலட்சியத்திற்காகச் செயற்பட்ட முஹம்மத் அப்துஹுவின் சிந்தனையின் செயற்பாட்டு வீரனாகவும் அவரை நாம் நோக்கவேண்டும். ஆப்கானில் பிறந்த இஸ்லாமிய பேரறிஞன் ஜமாலுத்தீன் ஆப்கானியின் கருத்துக்களால் கவரப்பட்டவர் அப்துஹு. அவரின் சிந்தனைவழி நின்று எகிப்தில் சமூகமேம்பாடு காணப் புறப்பட்டவர் அவர்.

எகிப்திய தேசியவாதிகளின் 'அல்-ஹிஸ்புல் வதனீ'என்ற இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர் அப்துஹு. 'எகிப்து எகிப்தியருக்குரியது' என்ற கோஷத்தை முன்னெடுத்த அவ்வியக்கமே பிரித்தானியரின் ஆட்சிக்கெதிராக ஒறாபிபாஷாவின் தலைமையில் 1882இல் புரட்சி செய்தது. தோல்வியில் முடிந்த அப் புரட்சியைச் செய்தமைக்காக ஒறாபிபாஷாவும் அவரின் தோழர்களும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். அப்புரட்சியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளாவிட்டாலும் கருத்தியல் ஆதரவு வழங்கியமைக்காக அப்துஹுவும் நாடு கடத்தப்பட்டு ஆரம்பத்தில் பெய்ரூத்திலும் பின்னர் பாரிஸிலும் வாழநேர்ந்தது. அவர் பாரிஸில் வாழ்ந்த காலத்தில் ஜமாலுத்தீன் ஆப்கானியுடன் சேர்ந்து 'அல்-உர்வத்துல் வுக்கா' (உறுதியான பிணை) என்ற அறபுச் சஞ்சிகையை வெளியிட்டார். அதன் முதல் சஞ்சிகை 13.03.1884இல் வெளிவந்தது. ஜமாலுத்தீன் ஆப்கானி அல்-அஸ்ஹர் சர்வகலாசாலையில் விரிவுரையாளராக விருந்தபோது அவருடனான முதல்சந்திப்பை அப்துஹு ஏற்படுத்தியிருந்தார்.

ஜமாலுத்தீன் ஆப்கானியும் தனது புரட்சிகரமான கருத்துக்களுக்காகவும் பிரித்தானியருக் கெதிரான அவரது நிலைப்பாட்டுக்காகவும் அப்போதைய எகிப்திய ஆளுனர் தௌபீக் பாஷாவினால் 1871இல் நாடுகடத்தப்பட்டார். கொன்ஸ்தாந்திநேபிளுக்கு நாடுகடத்தப்பட்ட அவர் மீண்டும் எகிப்துக்குத் திரும்பி அங்கு வாழ்ந்துகொண்டிருந்த போது, தௌபீக்பாஷாவுக்குப் பின்

எகிப்தின் ஆளுனராகவிருந்த கதீவ் இஸ்மாயிலின் காலத்தில் 1878இல் மீண்டும் நாடு கடத்தப்பட்டார்.

> "இப்போதகப் பெரியார்களுள்ளே (அல்-அஸ்ஹர் விரிவுரையாளர்களுள்ளே) தலை சிறந்தவர்கள் ஜமாலுத்தீன் ஆப்கானியும் ஷெய்கு முஹம்மது அப்துஹுவுமாவர். மிஸ்ற் நாட்டின் முன்னேற்றத்துக்கும் முஸ்லிம் உலக நன்மைக்கும் அஸ்ஹாரில் சீர்திருத்தங்கள் அத்தியாவசியமெனக் கருதிய அப்பெரியார்கள் அத்திருத்தங்களுக்காக மிகவும் முயற்சி செய்து எதிர்ப்பைச் சகித்து கடைசியில் வெற்றியும் பெற்றார்கள். இச் சீர்திருத்த இயக்கத்தின் பயனாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கடைசியில் முறையான சோதனைத் திட்டமொன்று வகுக்கப்பட்டது. புதிய பாடங்களும் சேர்க்கப்பட்டன" (அஸீஸ் எ.எம்.எ.,1963:102)

என்று ஜமாலுத்தீன் ஆப்கானியும் ஷெய்கு முஹம்மது அப்துஹுவும் மிக்க சிரமப்பட்டு அல்-அஸ்ஹர் சர்வகலாசாலையின் பாடத்திட்டத்தில் செய்த சீர்திருத்தங்கள் பற்றி எ.எம்.எ.அஸீஸ் எழுதிவைத்திருக்கிறார். இவ்வறிவுப் பின்புலத்தில் நின்று நோக்கும் போதுதான் இஸ்லாமிய உலகில் ஒறாபி பாஷாவின் முக்கியத்துவமும் அவர் சார்ந்திருந்த இயக்கத்தின் பெறுமதியும் புரியும்.

> "இஸ்லாத்தில் சுதந்திரம் பற்றிய விரிவான கோட்பாடு பற்றிய தெளிவை அவர் பெற்றிருந்ததன் காரணமாகவே, அரபிபாஷா, எகிப்தில் அவரது சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தாலும், அவரது தாயகத்திலிருந்து மிகத்தூரத்தேயுள்ள இலங்கைத் தீவில் வாழும் முஸ்லிம்களின் கல்வித் துறையில் அவரின் சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்தார். எகிப்தை அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யும் முயற்சியாக அமைந்த அவரது போராட்டம் இலங்கையில் முஸ்லிம்களை அறியாமையிலிருந்து விடுதலை செய்யும் ஒரு போராட்டத்தின் பரிமாணத்தைப் பெற்றது" (சுக்ரி எம்.ஏ.எம்., 1994:26)

என்று கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி கூறுவதும் அவதானத்திற்குரியது. இவற்றைப் புரிந்து கொள்ளும் போதுதான் ஒறாபிபாஷா நினைவுப் பரவலுக்கு ஷாபிமரிக்கார் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டார் என்பதன் இரகசியம் தெளியும்.

எகிப்திய தேசிய உணர்வின் சின்னம் ஒறாபிபாஷா. ஜமாலுத்தீன் ஆப்கானியின் சீடரான முஹம்மத் அப்துஹு 1878இல் நிறுவிய மிதவாத தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர் இவர். ஒறாபியின் தலைமையில் இயங்கிய இராணுவம் பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்டதும் சரணடைந்த அவரையும் அவரின் 6 தோழர்களையும் பகிரங்க விசாரணையின் பின் நாடுகடத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டு அவர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்

பட்டனர். ஒறாபிபாஷாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு அது பின்னர் நாடுகடத்தல் தண்டனையாக மாற்றப்பட்டது. துல்பா இஸ்மத்பாஷா, முஹம்மத் பஹ்மி பாஷா, அப்துல் ஆல் ஹில்மி பாஷா, அலி பஹ்மி பாஷா, ய.ஃகூப் சாமி பாஷா, முஹம்மத் சாமி அல் பரோடி ஆகியோரும் ஒறாபிபாஷாவுடன் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனராயினும் ஒறாபிபாஷாவின் ஆளுமையே மேலோங்கித் தெரிந்தது. இலங்கை முஸ்லிம்களினதும், அன்றைய முஸ்லிம் சமூகச் செயற்பாட்டாளர்களினதும் மதிப்பையும் மரியாதையையும் அவ்வாளுமை பெற்றுக் கொண்டது. அப்துல் ஆல் ஹில்மி பாஷா இலங்கையிலேயே மரணமடைந்து கண்டி மஹியாவை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். ஏனையோரனைவரும் மன்னிப்புப் பெற்று தாயகம் திரும்பும்வரை இலங்கை முஸ்லிம்களின் அரவணைப்பில் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

ஒறாபிபாஷா இலங்கையில் 19 வருடங்கள் (11.01.1883-18.09.1901) வாழ்ந்தார். ஆரம்பத்தில் கொழும்பிலும் பின்னர் கண்டியில் 26, ஜோர்ஜ் ஈ.டி.சில்வா மாவத்தையிலும் வாழ்ந்தார். இலங்கை முஸ்லிம்களின் கல்வி முயற்சியில் ஈடுபட்டு ஊக்கமிழந்துபோன எம்.ஸி. சித்தி லெவ்வை, வாப்பிச்சிமரைக்கார், ஜ.எல்.எம். அப்துல் அஸீஸ் போன்றோர் ஒறாபிபாஷாவின் வருகையுடன் மீளூக்கம் பெற்றனர். பௌத்த கல்விக்கு கேணல் ஒல்கொட் போல் முஸ்லிம்களின் கல்விக்கு ஒறாபிபாஷா செயற்பட்டார். சேக்காதி மரைக்கார், காசிம்லெவ்வை மரிக்கார் முதலானோரினால் புதிய சோனகத் தெருவில் 1861இல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையும், எம்.ஸி. சித்திலெவ்வை 1883இல் வாணியத் தெருவில் ஏற்படுத்திய பாடசாலையும் இயங்காமற்போன நிலையில் ஒறாபிபாஷாவின் வருகை இலங்கை முஸ்லிம்களின் கல்வியில் திருப்புமுனையாக அமைந்தது.

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை ஒறாபிபாஷா வலியுறுத்தினார். எம்.ஸி.சித்தி லெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஜ.எல்.எம். அப்துல் அஸீஸ் முதலானோருடன் சேர்ந்து அல்-மத்ரஸத்துஸ் ஸாஹிறாவைத் தொடங்குவதற்கு தனது உயர் பங்களிப்பை நல்கினார். அதன் அங்குரார்ப்பண வைபவத்திற்கு 21.08.1892இல் அவரே தலைமை தாங்கினார். 'அல்-மத்ரஸத்துஸ் ஸாஹிறா'என்ற பெயரைஇன்றைய ஸாஹிறாக் கல்லூரிக்கு அன்று சூட்டியவரும் ஒறாபிபாஷாவே. எகிப்திய 'அல்-அஸ்ஹர்'என்ற நாமத்துடன் ஒத்ததாக இப்பெயர் அமைந்திருந்தது. கரீம்ஜீ ஜபர்ஜீயினதும் அரசாங்கத்தினதும் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட ஸாஹிறாவின் முதலாவது இரு மாடிக்கட்டிடத்தையும் ஒறாபிபாஷாவே திறந்துவைத்தார்.

> "ஒறாபிபாஷா அவர்கள் சித்திலெவ்வை அவர்களுக்கு தக்கதுணையாக நின்று சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் நவீன கல்வியை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவந்தார். கடைசியில் இவரின் வேண்டுகோள்களுக்கு முஸ்லிம் சமூகம் செவிசாய்த்தது; சித்திலெவ்வை அவர்களின் கனவும் நனவாயிற்று. எனவே, 1892ஆம் ஆண்டில் அல் மத்ரஸத்துஸ் ஸாஹிறா ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முதலாவது நிர்வாகியாக வாப்பிச்சிமரிக்கார் நியமனஞ் செய்யப்பட்டார். இக் கல்வி நிலையத்தின் அழகான பெயரும் ஒறாபிபாஷா அவர்களாலேயே தெரிவு செய்யப்பட்ட தென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இந்த அல்-மத்ரஸத்துஸ் ஸாஹிறாதான் ஸாஹிறாக் கல்லூரியாக மலர்ந்துள்ளது" (அஸீஸ் எ.எம்.எ., 1963: 96-97)

என்று எ.எம்.எ. அஸீஸ் எழுதிவைத்திருப்பது கவனத்திற்குரியது. இன்றுவரை இசைக்கப்படும் ஸாஹிறாக் கல்லூரிக் கீதத்தைத் தயாரித்துக் கொடுத்தவரும் ஒறாபிபாஷாதான். ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழா 12.09.1901இல் அவரின் தலைமையில் நிகழ்ந்தபோது அரபு மொழியில் இயற்றப்பட்ட பிரிவுபசார கீதமொன்று அவர்மீது பாடப்பட்டது. அந்த மனமகிழ்ச்சியில் அவர் ஸாஹிறாவை விட்டு இறுதியாக நீங்கிச் சென்றார். ஸாஹிறாக் கல்லூரிக்கு அவரின் இறுதி விஜயம் அதுவாகவேயிருந்தது.

ஸாஹிறா மத்ரஸாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி வைபவம் ஒன்றிலும் ஒறாபிபாஷா கலந்து கௌரவித்தார். இவ் வைபவத்தின் போது அவர் ஒரு தென்னங்கன்றை ஞாபகார்த்தமாக ஸாஹிறா வளவில் நட்டினார். அது சில ஆண்டுகளுக்கு முன்புவரை நிலைத்திருந்தது. அம் மரம் வாப்பிச்சிமரைக்கார் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கட்டிடத்தை நோக்கி வளைந்திருந்ததனால் அது அக்கட்டிடத்திற்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடுமென ஸாஹிறா அதிபர் மருதானைப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு அறிவித்ததன் பேரில் அம் மரம் வெட்டப்பட்டது. எனினும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்மரத்தின் ஒரு தேங்காயை எடுத்து அம் மரம் இருந்த இடத்திற்கருகில் அவர்கள் நட்டுவித்தனர். (நம்முன்னோர், 1979:57-58).

ஒறாபிபாஷாவுக்கும் அவரின் தோழர்களுக்கும் ஒரு மாபெரும் பிரிவுபசாரம் நடைபெற்றது. ஹமீதியா பாடசாலை வளவில் நடந்த அக் கூட்டத்தில் அறபுத் துதிப்பாடல்களும் சுகமே தாயகம் போய்ச் சேர்வதற்கான பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. நாடுகடத்தப்பட்ட அவர்களிற் சிலர் காலத்துக்குக் காலம் மன்னிப்பு வழங்கப்பட்டதன் பேரில் முன்னரே இந் நாட்டைவிட்டுச் சென்றிருந்தனர். எனினும், கடைசிக் குழுவிலேயே ஒறாபிபாஷா சென்றார். அவரின் பிரிவு அங்கு கூடியிருந்த முஸ்லிம்களின்

இதயத்தைப் பிழிந்தது. ஒறாபிபாஷா இத்தீவிலிருந்து இறுதியாகச் சென்றது கரீம்ஜீ ஜபர்ஜீ அவர்களின் பம்பலப்பிட்டி இல்லமான 'ஈஸாவிலா' விலிருந்தாகும். அங்கு ஒறாபிபாஷா அவர்கள் அன்னாரின் விருந்தினராகத் தங்கியிருந்தார். (நம்முன்னோர்,1979:58)

> "தம்சமூகத்தின் தேவையை அச் சமூத்திற் பெரும்பாலானோர் அடிப்படையாக உணர்ந்து ஒப்புக் கொண்டு அதை நிவர்த்திக்க ஒழுங்கு முறையில் திட்டமிட்ட முயற்சி 1891க்கு முன் எடுக்கப்படவில்லை"

என்று கல்வித் திணைக்களத் தலைவரின் 1895ஆம் ஆண்டறிக்கை கூறுவது ஒறாபிபாஷாவின் கல்விப் பணிகளின் முக்கியத்துவத்தை உணர்த்தப் போதுமானது.

நீண்ட காற்சட்டையும் துருக்கித் தொப்பியும் அணியும் பழக்கத்தை இலங்கை முஸ்லிம்களிடை அறிமுகப்படுத்தியவர் அவரே. வெள்ளைப் புடைவைத் தொப்பி, சூறாத் தொப்பிகளுக்குப் பதிலாக 'பெஸ் தொப்பி' அணியும் பழக்கம் அவரினாற்றான் ஏற்படுத்தப்பட்டது. இலங்கை முஸ்லிம்கள், குறிப்பாக, இலங்கைச் சோனகர் 'பெஸ்தொப்பி'யை அணியத் தொடங்கினர். சட்டத்தரணி எம்.எஸி. அப்துல்காதர் 'பெஸ் தொப்பி'யை அணிந்து நீதிமன்றத்துள் நுழைந்தபோது பிரதம நீதியரசர் ஸி.பி.லயாட்டினால் அனுமதி மறுக்கப்பட்டதும், அதற்கெதிராக முஸ்லிம் சமூகம் கிளர்த்தெழுந்து 1905இல் மருதானைப் பள்ளிவாசல் முன்றலில் ஒன்றுகூடி தம்சமூகத்தின் எதிர்ப்பை வெளிப்படுத்தியதும், கரீம்ஜீ ஜபர்ஜீயின் நண்பர் பம்பாய் சட்டத்தரணி மௌலவி ரபீயுத்தீன் அக் கூட்டத்தில் கலந்து சொற்பொழி வாற்றியதும், அதன் விளைவாக 'பெஸ் தொப்பி'யணிந்து நீதிமன்றத்தில் தோன்றலாமென்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி கிடைத்ததும் சரித்திரத்தில் பதிவாகிவிட்டன. இவற்றையெல்லாம் ஒறாபிபாஷாவின் நிழலில்தான் தேடவேண்டும்.

ஒறாபிபாஷாவின் காலத்தில் அரபு மொழிப் புனருத்தாரணமும் இலங்கை யில் நிகழ்ந்தது. தனது வாழ்நாளில் எஞ்சிய காலத்தை அரபு மொழியைத் தாய்மொழியாக்கும் முயற்சியில் செலவிட சித்திலெவ்வை சித்தம் கொண்டு உழைத்ததும் இதனாற்றான்.

> "அறபிபாஷா இலங்கையில் அரபு மொழியின் புனருத்தாரணத்திற்கு அயராது உழைத்தார். இலங்கையில் அக்காலகட்டத்தில் அரபுத் தமிழ் வழக்கத்திலிருந்தது. ஆயினும் அறபு மொழிப் பாவனையும் விசேடமாக அறபுப் பேச்சுவழக்கும் ஒரு சிலராலேயே கையாளப்பட்டது. 1891இல் சித்திலெவ்வை சில அறபுப் புத்தகங்களை வெளியிட்டார். அதற்கு ஊக்கமளித்தவர் அறபிபாஷா ஆவார். மேலும் அறபிபாஷாவும் அவரது

சகாக்களும் அறபுப் பேச்சு வழக்கை முன்னேற்றுவதில் காரிய கர்த்தாக்களாக இருந்தனர். அறபுப் பேச்சுவழக்கில் எளிய நடையில் இலகுவான இலக்கணப் பிரயோகங்களும் இருப்பதால் அதைக் கற்பது அவ்வளவு கடினமாக இராது. 1892இல் ஸாஹிறாவின் முகாமைக்குழுக் கூட்டத்திற்கு அறபிபாஷா தலைமைவகித்தார். அச் சமயம் அறபு மொழியும் தமிழும் போதிப்பதெனவும், அதற்குரிய எத்தனங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் தீர்மானமாயிற்று. அச் சமயம் பலர் அறபு மொழியில் உரை நிகழ்த்தினர். அவர்களில் ஒருவர் சித்திலெவ்வை மற்றொருவர் அக்காலத்தில் கல்வி முயற்சிகளில் ஊக்கம் செலுத்திய ஏ.சாலிஹ் வாகிது ஆவார். இந்தச் செய்தியைப் பிரசுரித்த 'சிலோன் ஒப்சேர்வர்' இவ்வாறு எழுதியது: 'அறபு மொழியில் உரை நிகழ்த்தியமை இலங்கைக்கு வருகை தந்த எகிப்திய பாஷாக்களின் சாதனையாகும்' என்று அறபிபாஷாவின் சாதனையைப் பாராட்டியது" (மஹ்ரூப் எம்.எம்.எம். தினகரன்-18.09.1980 : 3)

என்று இலங்கையில் அறபு மொழி வளர்ச்சிக்கு ஒறாபிபாஷாவின் பங்களிப்பை திறனாய்வாளர் எம்.எம்.எம்.மஹ்ரூப் சுட்டிக்காட்டினார். பிளவுபட்டிருந்த கொழும்பு முஸ்லிம் சமூகத்தையும் தலைவர்களையும் ஒன்றுபடுத்தியதிலும், மத்திய கிழக்குப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலை இலங்கை முஸ்லிம்களிடை ஏற்படுத்தியதிலும் ஒறாபிபாஷா பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறார்.

இலங்கை முஸ்லிம்களின் கல்விக்குப் பெரும்பணி செய்த அப் பெருந்தகையின் உருவப்படமொன்று 17.05.1955இல் கல்லூரிக் கபூர் மண்டபத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. எ.எம்.எ. அஸீஸ் அதிபராகவிருந்த போது ஸாஹிறாவுக்கு விஜயம் செய்த எகிப்திய வெளிவிவகார அமைச்சர் முஹம்மத் பௌஸ் அதைத் திரைநீக்கம் செய்து வைத்தார். அவ் வைபவத்தில் அஸீஸ் நிகழ்த்திய வரவேற்புரை 'இலங்கையில் அறபி பாஷா' என்ற தலைப்பில் அவரின் 'இலங்கையில் இஸ்லாம்' நூலில் (பக்.94-98) இடம்பெறுகிறது. ஒறாபிபாஷாவின் முஸ்லிம் கல்விப் பணியின் பெருமையை நினைவுகூர வேண்டிய இலங்கை முஸ்லிம் களின் கடப்பாட்டை, குறிப்பாக, ஸாஹிறாவின் கடமையை ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்த காலத்தில் ஷாபிமரிக்காரும் கவனத்தில் கொண்டிருந்தார். தன்மீது சுமத்தப்பட்ட கடமையை முஸ்லிம் சமூகமும், நாடும், எகிப்து தேசமும் பிரமித்து நிற்கும் வகையில் அவர் நிறைவேற்றினார்.

ஸாஹிறாக் கல்லூரியின் தாபகர்களும் அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களும் ஷாபிமரிக்காரின் ஸாஹிறாவில் நினைவு கூரப்பட்டனர். எம்.ஸி. சித்திலெவ்வை, ஏ.எம். வாப்பிச்சி மரைக்கார், அஹ்மத் ஒறாபிபாஷா, ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், கரீம்ஜீ ஜபர்ஜீ,

பி.பி. உம்பிச்சி, என்.டி.எச். அப்துல் கபூர், ரி.பி. ஜாயா ஆகியோர் நினைவு கூரப்பட்டனர். அவர்களின் நினைவு தினங்களில் காலை ஆராதனைக் கூட்டமும், துஆப் பிரார்த்தனையும், அவர்களைப் பற்றி அதிபர் ஷாபிமரிக்கார் உரை நிகழ்த்துவதும் வழக்கமாகவிருந்தது. ஒறாபிபாஷா இலங்கையை விட்டு தன் தாயகத்திற்குப் புறப்பட்ட 85 வருட நிறைவு ஸாஹிறாக் கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழாவின் ஒரு முக்கிய அம்சமாக அமைந்திருந்தது.

ஜாயா, அஸீஸ் ஆகியோர் அதிபர்களாகவிருந்த காலப்பகுதியில் தொங்கவிடப்பட்டிருந்த கல்லூரித் தாபகர்களின் நிழற்படங்கள் (Portraits) கபூர் மண்டபத்தின் இரு மருங்கிலும் காணப்பட்டன. உருவப் படங்களை வைப்பது இஸ்லாத்திற்கு ஒவ்வாதது என்பதால் ஷாபிமரிக்கார் அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு அவற்றின் இடத்தில் பெயர்க்கற்களை (Plaques) பதித்திருந்தார். அந் நினைவுப் படிகங்களைத் திரைநீக்கம் செய்யும் நிகழ்வும் ஸாஹிறாக் கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழாவின் ஓர் அம்சமாக 09.10.1977இல் நிகழ்ந்தது. ஷாபிமரிக்காரின் தலைமையில் நிகழ்ந்த அந் நிகழ்வு ஸாஹிறாக் கல்லூரியின் தாபிதத்திற்கும் மேன்மைக்கும் பங்களிப்புச் செய்தோரைக் கனம் பண்ணுவதாக அமைந்திருந்தது. ஒறாபிபாஷா பெயர்க் கல்லை மாஸ்.டி. கிச்சிலானும், சித்திலெவ்வை பெயர்க்கல்லை ஏ.ஏ.எம். மஸ்ஊத் ஆலிமும், ஏ.எம்.வாப்பிச்சிமரைக்கார் பெயர்க்கல்லை உப சபாநாயகர் எம்.ஏ. பாக்கீர் மாக்காரும், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் பெயர்க்கல்லை கலாநிதி எம்.எம். உவைஸும் திரை நீக்கம் செய்தனர். கரீம்ஜீ ஜபர்ஜீ பெயர்க்கல்லை பிரதியமைச்சர் எம்.ஏ. அப்துல் மஜீதும், என்.எச்.எம். அப்துல் காதர் பெயர்க்கல்லை முஹம்மது ஸெய்னும், என்.டி.எச். அப்துல் கபூர் பெயர்க்கல்லை மௌலவி எச்.எச். ஷாஹுல் ஹமீத்(பஹ்ஜி) அவர்களும் திரைநீக்கம் செய்துவைத்தனர். பி.பி. உம்பிச்சி பெயர்க்கல்லை கே.எம். அபூபக்கரும், ரி.பி. ஜாயா பெயர்க்கல்லை டாக்டர் பரீத் மீராலெப்பையும் (பா.உ.), எ.எம்.எ. அஸீஸ் பெயர்க்கல்லை அப்துல் டபிள்யு.எம். அமீரும் திரைநீக்கம் செய்தனர்.

> "ஸாஹிறா ஈழத்து முஸ்லிம்களின் அருஞ்சொத்தாகும். இதன் வளர்ச்சிக்காக ஆரம்பகாலம் முதல் உழைத்தவர்களை நாம் என்றென்றும் நினைகூரவேண்டும்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினபதி-10.10.1977)

என்று இந் நிகழ்வுக்குத் தலைமைதாங்கி யாற்றிய உரையில் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டார்.

ஒறாபிபாஷா எகிப்திற்குத் திரும்பிய 80ஆவது ஆண்டை நினைவுகூரும் முகமாக ஒறாபிபாஷா நினைவு தினவிழா ஒன்றை பாரிய அளவில் ஷாபிமரிக்கார் ஏற்பாடு செய்திருந்தார். அதற்கென அவர் ஒரு குழுவையும் (Orabipasha Commemmoration Committee) அமைத்திருந்தார். டாக்டர். எம்.ஸி.எம். கலீல் தலைமையில் அமைக்கப்பட்ட அக் குழுவில் பின்வருவோர் இடம் பெற்றனர்: எம்.ஏ. பாக்கீர் மாக்கார் (சபாநாயகர்), கமால் அபுல் ஒயூன் (எகிப்தியத் தூதுவர்), ஹஸன் எனானி (முதலாவது செயலாளர், எகிப்தியத் தூதரகம்) எம்.எச்.எம். நெய்னாமரைக்கார் (பிரதியமைச்சர்), ஜாபிர் ஏ. காதர்(பா.உ.), எம்.எல்.எம்.அபூசாலி (மாவட்ட அமைச்சர்), ஏ.ஸி.எம். அமீர் (கியூ.ஸி.), டாக்டர் எம்.எஸ்.எம். றிபாய், எம். ஹுசைன் முஹம்மத் (பிரதி மேயர்), ஏ. றஹீமான் எம். ஹாதி, ரி.ஏ. ஜாயா, எச்.எஸ். ஹாஷிம், எம்.ஏ. நவாஸ் கபூர், எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா, எம்.கே.எம்.அபூபக்கர், எம்.செய்ன், எஸ்.எச்.எம். அலியார், ஏ.எச்.எம். அஸ்வர், எம்.எஸ்.ஏ. றஸ்ஸாக், ஏ.எம். நஸீர், எம்.எம். சாலிஹ், எம்.வை.எம். பழீல், பி. பாலசிங்கம், ஏ. காதர் எம். அலி, எம்.ஐ.எம். அமீன், எஸ்.எம். கமால்தீன், யு.டி. ஷரீப், ஏ.ஜ.எல். மரைக்கார், எம்.எஸ். அல்லாப்பிச்சை, ஏ.எம். நஹியா, மௌலவி எம். அப்துல் றஹ்மான், எம்.எச்.ஏ. மாசறூன், சாஹிர் சூபி இஸ்மாயில், எம்.எல்.எம். பாறூக், இஸ்மத் அப்துல்லா, எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் ஆகியோர் அக்குழுவில் இடம்பெற்றனர். ஷாபிமரிக்காரின் வழிகாட்டலில் அக்குழு நினைவுதின ஏற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொண்டது.



ஒறாபிபாஷா நினைவு நிகழ்வுக்கு பிரதமர் பிரேமதாஸ வருகை தருகிறார்

ஒறாபிபாஷா இலங்கையை விட்டுச் சென்ற 80ஆவது ஆண்டு நினைவு வைபவம் 18.09.1980, பி.ப. 6.30 மணிக்கு கல்லூரிக் கபூர் மண்டபத்தில் நடந்தது. டாக்டர் எம். ஸி.எம். கலீல் தலைமையில் நடைபெற்ற அவ்வைபவத்தில் பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் வரவேற்புரை நிகழ்த்தினார். சபாநாயகர் எம்.ஏ. பாக்கீர் மாக்கார், நீதி அமைச்சர் கலாநிதி நிஸ்ஸங்க விஜேரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் ஏ. அமிர்தலிங்கம், எகிப்தியத் தூதுவர் கமால் அபுல் ஒயூன், நிதி, திட்ட மிடல் பிரதியமைச்சர் எம்.எச்.எம். நெய்னா மரைக்கார், டபிள்யு. தஹநாயக்க (பா.உ.), ஜாபிர் ஏ. காதர்(பா.உ.), ஹலீம் இஷாக்(பா.உ.), ஏ.ஸி.எம். அமீர் (கியூ.ஸி.) ஆகியோர் இவ்வைபவத்தில் உரையாற்றினர். எஸ்.

இஸட்.எம். மசூர் மௌலானா தமிழிலும், செல்வன் தாபித் ஹுசைன் சிங்களத்திலும் நன்றியுரை நவின்றனர்.

> "பிறப்பால் இலங்கையரல்லாத போதும் ஒறாபிபாஷா இலங்கை முஸ்லிம்களின் கல்வி,சமூக எழுச்சிக்காக விலைமதிக்க முடியாத சேவை செய்த ஒரு தலைவர் என வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது... நல்ல சிந்தனையுடனும் பரோபகார நோக்குடனும் சேவை செய்வதற்கு நாடோ இனமோ கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்வது அவசியமானதல்ல என்பதனை ஒறாபிபாஷா அவர்களின் வாழ்க்கை தெளிவாக விளக்குகிறது... ஸாஹிறாக் கல்லூரியை மலரச்செய்த ஒறாபிபாஷாவை இலங்கைக்கு தேசப்பிரஷ்டம் செய்தால் அவர் மறைந்துவிடுவார் என பிரித்தானிய ஆட்சியாளர் கருதினர். ஆனால் பிரித்தானியர் இதில் ஏமாந்துவிட்டனர். அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒறாபிபாஷா இங்குவந்தபோது அவருக்கு வீரருக்குரிய வரவேற்பளிக்கப்பட்டது" (பிரேமதாஸ ஆர்., தினகரன்-19.09.1980)

என்று அவ்வைபவத்தில் உரையாற்றிய பிரேமதாஸ ஒறாபிபாஷாவின் புகழ் பேசினார். அங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ஏ. அமிர்தலிங்கம்,

> "இந்நாட்டு முஸ்லிம் மக்களின் வரலாற்றில் ஈடிணையற்ற தாக்கத்தை ஏற்படுத்தியவர் ஒறாபிபாஷா. தண்டனைபெற்ற ஒருவராக இந்நாட்டிற்கு வந்து 18 ஆண்டுகள் அவர் ஆற்றிய பணி மகோன்னதமானதாகும். ஈடிணையற்ற ஆற்றல், திறமை அவரில் குடிகொண்டிருந்தன. என்றுமே மறக்க முடியாத நினைவுச் சின்னமாக ஸாஹிறாக் கல்லூரியை அவர் விட்டுச்சென்றார். அமெரிக்காவிலிருந்து வந்த கேணல் ஒல்கொட்டும் அனகாரிக தர்மபாலாவும் இலங்கையில் புத்தமதத்துக்குப் புத்துயிரளித்தனர். சைவத்தமிழ் மக்கள் மத்தியில் 19ஆம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் விழிப்புணர்ச்சியை உருவாக்கினார். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒறாபிபாஷாவின் வருகை புத்துணர்வை ஏற்படுத்தியது. விழிப்புணர்ச்சியை முஸ்லிம்கள் மத்தியில் அவர் உருவாக்கினார். இலங்கைக்கு வந்த அவர் உணர்ச்சிமிக்க தலைவர்களோடு சேர்ந்துபாடுபட்டார். வாப்பிச்சிமரைக்கார், சித்திலெவ்வை போன்ற தலைவர்கள் அவரின் பணிக்கு ஒத்துழைத்தனர்"(அமிர்தலிங்கம் ஏ., தினபதி-19.09.1980)

என்று குறிப்பிட்டார்.

> "எகிப்து நாட்டிலிருந்து அன்னார் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டதும் ஒருவகையில் ஈழத்து முஸ்லிம் சமுதாயத்தின் நன்மைக்கே என்று கூறலாம்... அவர் இங்கிருந்த காலத்தில் ஏனைய முஸ்லிம் தலைவர்களுடன் ஒன்றிணைந்து முஸ்லிம்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டவே ஸாஹிறாக் கல்லூரியை நிறுவினார். அவர் எமக்குச் செய்த தொண்டுக்கு நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடன் தான் எப்படியாவது இந்தக் கலாநிலையத்தைப் பூரணத்துவமான

பல்கலைக்கழகமாக மாற்றுவதாகும். இந்த நாட்டில் முன்னெப்போதும் இல்லாதவாறு சகல இன மக்களும் தனித்துவத்துடன் வாழ உரிமைக்குரல் எழுப்பி வருகின்றனர். இதற்கு வித்திட்டவர்களில் ஒருவர்தான் ஒறாபிபாஷா" (அமிர்தலிங்கம் ஏ., தினகரன் - 19.09.1980)

என்றும் தன் உரையில் அமிர்தலிங்கம் குறிப்பிட்டுச் சொன்னார். ஸாஹிறாவின் தோற்றத்திலும் இலங்கை முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டிலும் ஒறாபிபாஷாவின் பங்களிப்பை அமிர்தலிங்கம் இவ்வாறு தெளிவுறுத்தினார். இவ்விழாவையொட்டி 17.09.1980இல் வானொலி உரைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஸாஹிறாவின் பழைய மாணவன் ஆர்.எம்.தர்மதாஸ பண்டா (பா.உ.) சிங்களத்திலும், எம்.சிவசிதம்பரம்(பா.உ.) தமிழிலும், டாக்டர் எம்.ஸி.எம்.கலீல் ஆங்கிலத்திலும் வானொலி உரைகளை நிகழ்த்தினர். இந்த நினைவுதினத்தையொட்டி 'The light around Ahmed Orabipasha' என்ற மகுடத்தில் 19.09.1980இல் ஏ.ஐ.எல்.மரைக்கார் 'டெய்லி மிரர்' பத்திரிகையிலும், 'இலங்கையில் அரபிபாஷா'என்ற தலைப்பில் 18.09.1980இல் எம்.எம்.எம்.மஹ்ரூப் தினகரனிலும், 'Orabipasha Pioneered Muslim Education'என்ற தலைப்பில் 18.09.1980இல் எஸ்.எம்.கமால்தீன் 'த சிலோன் டெய்லி நியூஸ்' பத்திரிகையிலும் கட்டுரைகள் எழுதியிருந்தனர். 'முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு கல்வி அவசியம் என உணர்த்தியவர் அரபிபாஷா'என்ற மகுடத்தில் எம்.சிவசிதம்பரம்(பா.உ.) 18.09.1980இல் வீரகேசரியில் எழுதியிருந்தார். ஏ.எச்.எம். அஸ்வரின் ලංදිව මුස්ලිම් අධ්‍යාපනය දියුණුකළ වීරයෙක් අහමඩ් ඔරාබිපාෂා என்ற தலைப்பிலான சிங்களக் கட்டுரையொன்றும் 'தினமின' பத்திரிகையில் 18.09.1980இல் பிரசுரமாகியிருந்தது.

ஷாபிமரிக்கார் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்று 'ஒறாபிபாஷா நினைவுக் கட்டிடம்' என்று பெயரிடப்பட்டு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் பிரேமதாஸாவினால் 18.09.1980இல் திறந்து வைக்கப்பட்டது. கட்டிடத்தின் பெயர்ப்பலகை அன்றையத் தினம் அவரினால் திரைநீக்கம் செய்யப்பட்டது. பிரதி பொலிஸ் மாஅதிபராகவிருந்த ஆதர் ஸி. டெப், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் ஒருபோது ஒறாபிபாஷா பற்றி எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'Orabipasha and the Egyptian Exiles'என்ற தலைப்பில், 18.09.1980இல், ஒறாபிபாஷா நினைவு நூலாக வெளியிடப்பட்டது. ஒறாபிபாஷா நினைவுதின நிகழ்வுடன்



ஒறாபிபாஷா ஞாபகார்த்தக் கட்டிடத்தை பிரதமர் பிரேமதாஸ திறந்து வைக்கிறார்

சம்பந்தப்பட்ட பிரசுரங்கள், பத்திரிகைகளுக்கான செய்தி வெளியீடுகள், நினைவுதினக் கட்டுரைகள் என்பனவற்றுக்குப் பொறுப்பான 'அஹ்மத் ஒறாபிபாஷா ஞாபகார்த்தக் குழு' இந்நூல் வெளியீட்டுக்கும் பொறுப்பாகவிருந்தது. பி. பால சிங்கம், ஏ.எச்.எம்.அஸ்வர், ஏ.எம்.நஹியா ஆகியோர் இக் குழுவின் உறுப்பினர்களாகச் செயற்பட்டனர்.



ஆதர் ஸி. டெப் ஒறாபிபாஷா பற்றி எழுதிய நூல்

> "It was in the early morning on Monday first September when I reached the Katunayake Airport, coming back from London, after 10 weeks of medical treatment for my son. At the Airport I was greeted by the fresh breeze, the shining sun, the smiling faces of the friendly people of Srilanka and together with this a kind invitation from my brother Shafie Marikar, the principal of Zahira College, Colombo to attend todays Celebrations of Egyptian hero, Ahmed Orabipasha who fought for national dignity of his people"

என்று ஒறாபிபாஷா நினைவுச் சொற்பொழிவில் எகிப்தியத் தூதுவர் கமால் அபுல் ஒயூன் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு மிக்க சிரமப்பட்டு ஷாபி மரிக்கார் இவ்வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தார். எகிப்திய தூதுவருக்கு ஒறாபிபாஷா நினைவுதின வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பை அவரின் கரத்தில் சேர்ப்பிப்பதில் ஷாபிமரிக்கார் பட்ட கஷ்டத்தை தூதுவரின் இவ்வுரை காட்டுகிறது.

ஷாபிமரிக்கார் ஸாஹிறாவின் 85ஆவது ஆண்டு பூர்த்தி விழாவுடன் இணைந்ததாகச் செய்த ஒறாபிபாஷா நினைவுதினம், அவர் 01.07.1982இல் ஸாஹிறாக்கல்லூரி அதிபர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததும் அகில இலங்கை முஸ்லிம் லீக்கினால் முன்னெடுக்கப்பட்டது. முஸ்லிம் லீக்கின் ஏற்பாட்டில் டாக்டர் எம்.ஸி.எம்.கலீல் தலைமையில் 10.01.1983இல் கொழும்பு ஸாஹிறா மண்டபத்தில் நிகழ்ந்த ஒறாபிபாஷா நினைவு தின நிகழ்வுகளும் இங்கு குறித்துச் சொல்லப்பட வேண்டிய முக்கியத்துவமுடையது. இந்நிகழ்வுக்கு பிரதமர் ஆர்.பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். சபாநாயகர் பாக்கீர் மாக்கார், அமைச்சர் எம்.எச். முகம்மத், பிரதி அமைச்சர் எம்.எச்.எம். நெய்னாமரைக்கார், ஜாபிர் ஏ. காதர்(பா.உ.), எகிப்தியத் தூதுவர் கமால் அபுல் ஒயூன், ஏ.எல்.எம். ஹாஷிம், ஆதர்.ஸி. டெப் ஆகியோர் அவ் வைபத்தில் கலந்துகொண்டு நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அங்கு உரையாற்றிய பிரதமர் பிரேமதாஸ,


பிரதமர் பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஒறாபிபாஷா நினைவு நிகழ்வு. சேர் றாசிக்பரீத், நிஸ்ஸங்க விஜேயரத்ன, ஷாபிமரிக்கார், டாக்டர் கலீல், அமீர்தலிங்கம், டபிள்யு. தஹநாயக்க ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்

"ஒறாபிபாஷா ஆரம்பகாலத்தில் சிலகாலம் கொழும்பில் வசித்தார். பின்னர் தனது வசிப்பிடத்தை கண்டிக்கு மாற்றினார். கண்டி அவரது இரண்டாவது உறைவிடமாக விளங்கியது. தற்பொழுது 'ஜோர்ஜ். ஈ.த.சில்வா மாவத்தை' என அழைக்கப்படும் முன்னைய 'ஹலோலுவா வீதி'யில் அமைந்துள்ள அவர் வசித்த வீடு தற்பொழுதும் 'ஒறாபிபாஷா'என அழைக்கப்படுவது அவரது நீண்டகால கண்டி வாசத்திற்குச் சான்று பகர்வதாக விளங்குகின்றது. கண்டி மாநகரிலே ஒறாபிபாஷாவுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னமொன்று அமைக்க எகிப்து அரபுக் குடியரசு அரசாங்கத்தின் முயற்சிக்கு எமது அரசாங்கம் உதவத் தீர்மானித்துள்ளமையை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்கும்பேறு கிடைத்தமையையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அந்த நினைவுச் சின்னம் ஒறாபிபாஷா இந்த நாட்டிலே காலடியெடுத்து வைத்தமைக்கும், இலங்கை அரசும் இலங்கை மக்களும் எகிப்திய அரசின் மீதும் எகிப்திய மக்கள் மீதும் கொண்டுள்ள நல்லெண்ணத்திற்கும் நட்புக்கும் நிலையான நினைவுச் சின்னமாக மிளிரும் என நாங்கள் நம்புகிறோம். அந்த மாமனிதருடைய வாழ்விலும் ஒழுக்கத்திலுமிருந்த சிறப்பு நமது நாட்டு மக்களின் வாழ்வில் அவரைப் பற்றிய ஒரு நிரந்தரமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்... முஸ்லிம்களின் தலைவரும் இந் நாட்டின் தலைவர்களில் ஒருவருமான டாக்டர் கலீல் இக் கூட்டத்தில் என்னிடம் பல கோரிக்கைகளை விடுத்தார். அவர் கோரிக்கைகளை விடுப்பதற்கு மாத்திரமின்றி எனக்கு உத்தரவிடுவதற்கும் உரிமையுடையவர். அவரின் கட்டளைகளை நான் சிரமேற்கொண்டு அமுல் செய்வேன்" (பிரேமதாஸ ஆர்., நல்ல மனிதரை நாடு ஒருபோதும் மறப்பதில்லை - 1983)

என்று கூறியதிலிருந்து ஒறாபிபாஷா நினைவு இந்நாட்டில் நின்று நிலைபெறுவதற்கு இந் நாட்டு அரசாங்கம் செய்தவற்றில் பிரேமதாஸாவின் பங்கை எம்மால் ஊகிக்கமுடிகிறது.



அகில இலங்கை முஸ்லிம் லீக் மீள்பதிப்புச் செய்த ஒறாபிபாஷா பற்றிய ஆதர் ஸி. டெப்பின் நூல்

ஷாபிமரிக்காரின் ஏற்பாட்டில் நிகழ்ந்த முதலாவது ஒறாபிபாஷா நினைவுப் பரவலின்போது வெளியிடப்பட்ட 'Orabipasha and the Egyptian Exiles' என்ற நூல், 'Orabipasha- the Egyptian Exiles in Ceylon' என்ற தலைப்பில், புதிய அமைப்பில், 1983இல் மீள் வெளியீடு செய்யப்பட்டது. 'Orabipasha-Hero who fought a mighty empire for people's liberty' என்ற மகுடத்தில் டாக்டர் எம்.ஸி.எம்.கலீல் 'டெய்லி மிரர்' பத்திரிகையில் 10.01.1983இலும், 'Orabipasha' என்ற தலைப்பில் 'சிலோன் டெய்லி மிரர்' பத்திரிகையில் எஸ். சிவதாசன் 11.1.1983இலும், எம்.எம்.தெளபீக் 15.01.1983இல் 'Host of Orabipasha' என்ற தலைப்பில் 'சிலோன் டெய்லி நியூஸ்' பத்திரிகையிலும்

கட்டுரைகள் எழுதினர். ஒறாபிபாஷா கண்டியில் வாழ்ந்த இல்லம் அரும்பொருட்காட்சிச் சாலையானது. 10.11.1983இல் ஜனாதிபதி ஜெயவர்த்தன அதைத் திறந்துவைத்தார். 'ஒறாபிபாஷா கலாசார நிலையம்'என்ற பெயரில் அது இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. 1892-1901வரை ஒறாபிபாஷா வாழ்ந்த அந்தக் கண்டி வீட்டைக் கொள்வனவு செய்யவும், ஒறாபிபாஷா நினைவு முத்திரை வெளியிடவும் பிரதமர் பிரேமதாஸ அங்கீகாரமளித்திருந்தார். அதுபற்றி இக் கூட்டத்தில் உரையாற்றிய எகிப்தியத் தூதரகப் பொறுப்பதிகாரி எஸ்மட் எல்காடி அவர்களும் குறிப்பிட்டிருந்தார். (Ceylon Daily News-25.06.1983). பிரதமர் வாக்குறுதி அளித்தபடி நினைவு முத்திரை (50 சத முத்திரை) 13.11.1983இல் வெளியிடப்பட்டது. ஒறாபிபாஷா வாழ்ந்த கண்டி வீட்டையும் எகிப்தியத் தூதரகம் கொள்வனவு செய்ய முடிந்தது.



ஒறாபி பாஷா நினைவு முத்திரை

இவ்விழாவின் தொடர்பறா அம்சமாக இன்னுமொரு முக்கிய விடயமும் நிகழ்ந்தது. மருதானை சிமன்ஸ் றோட் சந்தியிலிருந்து ரெக்னிக்கல் சந்தி வரையிலான மருதானை-கோட்டை பிரதான வீதி 'ஒறாபிபாஷா வீதி' என்று 24.06.1983 பி.ப. 4.00மணிக்கு மறுநாமம் சூடியது. அப்போதைய போக்குவரத்து, முஸ்லிம் சமய, கலாசார அமைச்சர் எம். எச். முஹம்மத் அப்பாதையின் புதிய பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். டாக்டர் எம்.ஸி.எம்.கலீல், ஜாபிர் ஏ.காதர் (பா.உ.), ஹுசைன் முஹம்மத் (பிரதிமேயர்), எகிப்தியத் தூதுவர் ஆகியோரெல்லாம் அவ்வேளை சமுகமளித்திருத்திருந்தனர். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன, பிரதமர் ஆர். பிரேமதாஸ ஆகியோரின் உதவியில் இவ்விடயம் நடந்தேறியது. ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன எகிப்துக்கு விஜயம் செய்தபோது அதே 24.06.1983 பி.ப. 4.00மணிக்கு கெய்ரோ நகர வீதியொன்றின் பெயர் 'ஸ்ரீ லங்கா வீதி' என்று மறுநாமம் சூடப்பட்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் திறந்து வைக்கப்பட்டதும் இதனுடன் சேர்த்துப் பார்க்கப்பட வேண்டிய முக்கிய நிகழ்வானது. இந்த 'ஸ்ரீ லங்கா வீதி'யில் தான் கெய்ரோவில் இலங்கைத் தூதரகம் அமைந்திருக்கிறது. அந்த வகையில் ஷாபிமரிக்கார் ஸாஹிறாவில்



'ஒறாபி பாஷா' வீதித் திறப்பு வைபவம் அமைச்சர் எம்.எச். முகம்மத் பெயர்ப் பலகையைத் திறந்துவைக்கிறார்

முன்னெடுத்த ஒறாபிபாஷா இலங்கையை விட்டுப் பிரிந்த 80ஆவது ஆண்டு நிறைவு நினைவு விழா அகில இலங்கை முஸ்லிம் லீக்கினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, இலங்கை முஸ்லிம்களின் கல்வி சமூகமேம்பாட்டில் ஒறாபிபாஷாவின் பங்களிப்பை நினைகூரும் விழாவாக பல சாதனை களுடன் நிறைவுற்றமை, ஷாபிமரிக்கார் தொடங்கி வைத்த ஒறாபிபாஷா நினைவு முயற்சிகளுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். முஸ்லிம் லீக், ஒறாபிஷா நினைவு நிகழ்வுகளைச் செய்தபோது ஷாபிமரிக்கார் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவில்லாதபோதும் அவரின் பங்களிப்பும் நெறிப்படுத்துகையும் அதற்கிருந்தது. எகிப்திய அரசாங்கம் ஒறாபிபாஷா நினைவாக கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களுக்கு இரு புலமைப் பரிசில்களை வருடாந்தம் வழங்கிவருவதும் கவனத்திற்குரியது. ஒறாபி பாஷாவின் பெயரில் ஒறாபிபாஷா நலன்புரிச்சங்க மொன்றும் 1988இல் ஏற்படுத்தப்பட்டது. எகிப்தியத் தூதுவர் பாறூக் செலபயா தலைமையில் கண்டியில் நிகழ்ந்த கலந்துரையாடலின் போது இச்சங்கம் தோற்றம் பெற்றது. பல பயனுள்ள சமூகப் பணிகளை ஒறாபிபாஷாவின் பெயரில் இச்சங்கம் மேற்கொண்டு வருகிறது.

டாக்டர் பஸ்லி நிஸார் தலைமையில் சசகாவா மண்டபத்தில் 28.10.1991இல் நடைபெற்ற ஒறாபிபாஷா நினைவு நிகழ்வில் அன்றைய நீதி, உயர் கல்வி அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் நினைவுரை நிகழ்த்தினார். இலங்கைச் சோனகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியின் மூலம் ஷாபிமரிக்கார் காலத்தில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியும் பின்னர் அகில இலங்கை முஸ்லிம் லீக்கும் முன்னெடுத்த ஒறாபிபாஷா நினைவுப் பரவலுடன் இலங்கைச் சோனகர் சங்கமும் இணைந்து கொள்கிறது.

7

ஜாயா நினைவும் நிதியமும்

ரி.பி. ஜாயா இவ்வுலகை 31.05.1960இல் நீத்தபோது அவரின் நினைவு நிகழ்வுகளை ஆரம்பத்தில் அகில இலங்கை முஸ்லிம்லீக்கும், பின்னர், ஏ.ஸி.எம். அமீர் தலைமையில் இயங்கிய கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கமும் முன்னெடுத்தன. 'ஜாயா நினைவு நிதியம்' ஆரம்பிக்கப்பட்டு அதன் செயலாளராக ஷாபிமரிக்கார் நியமிக்கப்பட்டதும் ஜாயா நினைவுச் செயற்பாடுகள் புதிய உத்வேகத்தைப் பெற்றன. வருடாந்தம் நினைவுப் பொதுக் கூட்டங்கள், வானொலி உரைகள் நிகழ்ந்தன. ஜாயா நினைவாலயம் அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு அதற்கென காணித்துண்டொன்றும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கு நேரெதிரே கொள்வனவு செய்யப்பட்டது. டார்லி வீதியின் ஒரு பகுதி 'ரி.பி. ஜாயா வீதி' என மறுநாமம் சூடியது. ஜாயா நினைவு முத்திரையும் வெளியிடப்பட்டது. இவையெல்லாம் ஜாயா நினைவு நிதியத்தின் செயலாளராக ஷாபிமரிக்கார் இருந்த போது நிகழ்ந்து முடிந்தவை. கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராக ஷாபிமரிக்கார் இருந்தபோது ஸாஹிறாக் கல்லூரியும் இந்நிகழ்வுகளில் இணைந்து செயற்பட்டது. அவர் ஸாஹிறாக் கல்லூரி அதிபர் பதவியை இராஜினாமாச் செய்ததும் ஜாயா நினைவுப் பணிகளும் மந்தகதியை அடைந்தன. ஷாபிமரிக்காரின் மரணத்துடன் ஜாயா நினைவுச் செயற்பாடுகள் அனைத்துமே ஸ்தம்பித்துப் போயின.

கலகெதர கிராமத்தில் சாதாரண குடும்பமொன்றில் 01.01.1890இல் பிறந்த ஜாயா 31.05.1960இல் மதீனாவில் மரணமடைந்த போது முஸ்லிம் சமூகத்தின் தன்னிகரற்ற தலைவராக, தேசியத் தலைவர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டு நினைகூரப்பட்டார். கண்டி தர்மராஜ, மொரட்டுவை பிறின்ஸ் ஒப் வேல்ஸ், கொழும்பு ஆனந்தாக் கல்லூரிகளின் ஆசிரியராக, கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராக (1921-1948) வெல்லாம் கல்விப் பணி செய்து கல்விமான்கள், துறைசார்நிபுணர்கள், அரசியல், சமூகத்தலைவர்களை யெல்லாம் உருவாக்கியவர் அவர். Educational and National Progress என்ற

தலைப்பில் இலங்கை முஸ்லிம் சங்கத்தில் அவர் 1919 பெப்ரவரியில் நிகழ்த்திய சொற்பொழிவு முஸ்லிம் கல்வி வரலாற்றில் தடம் பதித்த சொற்பொழிவாக இன்றும் மதிக்கப்படுகிறது. அவர் ஸாஹிறாவின் அதிபராக இருந்த காலத்தில் ஹமீதியா, டென்ஹாம் பாடசாலைகளின் கல்வி நிருவாகத்தை மேற்பார்வை செய்பவராகவும் இருந்திருக்கிறார். எட்டு வயதிற்குக் குறைந்த பெண் பிள்ளைகளை கொழும்பு ஸாஹிறாவில் சேர்த்துக் கல்வி புகட்டியவர் அவர். இரண்டாவது உலக யுத்த காலத்தில் பிரதேசங்களில் அவர் ஆரம்பித்த ஸாஹிறாவின் கிளைப் பாடசாலைகள் இன்று அவ்வப் பிரதேசங்களின் தலைப் பாடசாலைகளாகத் திகழ்ந்து முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்கு அபார பங்களிப்பை நல்குவது அவரின் முயற்சிக்குப் பெருமை சேர்க்கிறது. அகில இலங்கை ஆசிரியர் நலன்புரிச் சங்கம் (20 வருடங்கள்), கொழும்பு ஆசிரியர் சங்கம் (20 வருடங்கள்), அகில இலங்கை ஆசிரியர் சங்கம் (07 வருடங்கள்), இலங்கைத் தலைமை ஆசிரியர் சங்கம் என்பனவற்றின் தலைவராகவும், கல்விச் சபை (18 வருடங்கள்), கல்வி ஆணைக்குழு (1926), ஆசிரியர் சம்பளத்திட்ட உப குழு, பல்கலைக்கழக ஆணைக்குழு (1928), பல்கலைக்கழகக் கல்லூரிச் சபை, கல்வி விசேட ஆணைக்குழு (1943) என்பனவற்றின் உறுப்பினராகவும் இருந்து இந் நாட்டின் கல்விக்கு அளப்பெரும் பணி செய்தவர் அவர். அரசாங்க சபையின் கல்வி நிருவாகக் குழு உறுப்பினராக விருந்து 11 வருடங்கள் அவர் ஆற்றிய பணி மகத்தானது.

சட்டசபை உறுப்பினராக (1924-1931), அரசாங்க சபை அங்கத்தவராக (1936-1947), தொழில், சமூகசேவைகள் அமைச்சராக (1947-1950) வெல்லாம் இருந்து தேசத்திற்கும் சமூகத்திற்கும் அவர் ஆற்றிய பணிகளின் மகிமை வரலாற்றுப் பதிவுகளாகிவிட்டன. இந் நாட்டின் சுதந்திரத்திற்கும் தன்னாலான பங்களிப்பை அவர் வழங்கியிருந்தார். லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியான அவர் இலங்கைக்கான பாக்கிஸ்தானின் உயர்ஸ்தானிகராக விருந்தபோது (1950-1957) பஞ்சாப் பல்கலைக்கழகம் அவருக்கு 22.12.1951இல் டி.லிட். பட்டமளித்துக் கௌரவித்தது. முஸ்லிம் வாலிபர் சங்கத்தின் உப தலைவராகவும் (1915), இலங்கை முஸ்லிம் சங்கத்தின் தலைவராகவும் (1922-1924) இருந்த அவர் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவராகவும் பல வருடங்கள் செயற்பட்டு பல முஸ்லிம் அரசியல் தலைவர்களை உருவாக்கி சமூகத் தலைமையை ஏற்க வைத்தார். இப் பின்புலத்தில் நின்று பார்க்கும் போதுதான் ஷாபிமரிக்கார் முன்னெடுத்த ஜாயா நினைவுப் பணிகளின் முக்கியத்துவமும் ஜாயா நினைவு நிதியத்தின் செயலாளராக

அவர் செய்த பணிகளின் மகிமையும் புரியும். ஜாயா கொழும்பு ஸாஹிறாவின் அதிபர் பதவியிலிருந்து நீங்கி பாக்கிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம்பெற்றபோது ஜாயாவின் நிழற்படம் கல்லூரிக் கபூர் மண்டபத்தில் பிரதமர் டீ.எஸ். சேனநாயக்காவினால் 22.08.1948இல் திரைநீக்கம் செய்யப்பட்டமைதான் அஸீஸ் கால ஸாஹிறாவின் முதலாவது உத்தியோகபூர்வ நிகழ்வாக அமைந்தது.

இலங்கையில் இருந்து ஹஜ்ஜை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்கு மக்காவில் 'இலங்கை இல்லம்' ஒன்றைத் தாபிப்பது சம்பந்தமாக சவூதி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும், தனது மூன்றாவது ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொள்ளவும், 13.05.1960இல் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்ற ரி.பி. ஜாயா 31.05.1960இல் மதீனாவில் மரணமடைந்தார். 'மஸ்ஜிதுல் நபவி' (நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாசல்)யில் அவரின் ஜனாஸாத் தொழுகை நிகழ்ந்தது. நபிகளாரின் புனித அடக்கஸ்தலத்துக்கு சில நூறு யார்களுக்கப்பால் பிரசித்திபெற்ற 'ஜன்னதுல் பகீ.' எனுமிடத்தில் அவரின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

ரி.பி ஜாயாவின் மரணச் செய்தி கிடைக்கப்பெற்றதும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் கல்லூரி மண்டபத்தில் 01.06.1960இல் ஒன்றுகூடினர். மருதானைப் பள்ளிவாசலில் ஜனாஸாத் தொழுகை நடைபெற்றது. கல்லூரிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப் பட்டது. கல்லூரியும் இருநாட்கள் மூடப்பட்டது. இலங்கை முஸ்லிம்லீக் நிருவாகக்குழு 01.06.1960இல் அவசர அவசரமாகக்கூடி 3 தீர்மானங்களை நிறைவேற்றியது:

1. நாடெங்கிலும் உள்ள பள்ளிவாசல்களில் 1960 ஜூன் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப்பின் ஜனாஸாத் தொழுகை நடத்துவது
2. அனுதாபப் பொதுக்கூட்டமொன்றை மருதானைப் பள்ளிவாசல் முன்றலில் 1960 ஜூன் 12 ஞாயிற்றுக்கிழமை நடத்துவது
3. ஜாயா ஞாபகார்த்த நிதியமொன்றை ஏற்படுத்துவது

என்பன அத்தீர்மானங்கள்.

ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தில் 03.06.1960இல் உரை நிகழ்த்திய அஸீஸ்,ஜாயா நினைவாக ஸாஹிறாக் கல்லூரி வளாகத்தில் ஒரு இலட்சம் ரூபா செலவில், விஞ்ஞான ஆய்வு கூடக் கட்டிடமொன்றை கபூர் கட்டிடத்துக்கும், வாப்பிச்சி மரைக்கார் கட்டிய ஸாஹிறாவின் முதலாவது கட்டிடத்துக்கும் இடையில் அமைக்கவேண்டும்

என்ற கருத்தை முன்வைத்தார். அதெற்கென அன்று ஏற்படுத்தப்பட்ட ஜாயா நினைவு நிதியத்திற்குத் தலைவராகவும் பொருளாளராகவும் அஸீஸும், செயலாளராக எஸ்.எஸ். இஸ்ஸதீனும் செயற்படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதனிடை, ஜாயா நினைவுப் பணியில் அகில இலங்கை முஸ்லிம் லீக்கும் மிக மும்முரமாகச் செயற்பட்டது. இரு ஞாபகார்த்த நிதியங்கள் ஜாயா பெயரில் செயற்படுவதை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் விரும்பவில்லை. அஸீஸை அழைத்து தன் எண்ணத்தை கலீல் வெளிப்படையாகவே தெரிவித்து விட்டதால் முஸ்லிம் லீக் தொடங்கிய 'ஜாயா ஞாபகார்த்த நிதியம்' மட்டுமே செயற்படத் தொடங்கியது. கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவும் அதற்கிருந்தது. அந்நிதியத்தின் செயலாளர் எஸ். எல்.எம். ஷாபிமரிக்கார் நிதியத்தின் செயற்பாட்டைப் பக்குவமாகப் பார்த்துக் கொண்டார். முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம்.ஸி.எம்.கலீல் தலைமையில் மாபெரும் ஜாயா நினைவுதினப் பொதுக் கூட்டமொன்று 12.06.1960, பி.ப. 4.00 மணிக்கு ஸாஹிறாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. முஸ்லிம் லீக் செயலாளரும் ஜாயா ஞாபகார்த்தக் கமிட்டியின் செயலாளருமான ஏ.எல்.எம். ஹாஷிம் அதனை ஏற்பாடு செய்திருந்தார். நிதி அமைச்சர் ஜே.ஆர். ஜெயவர்த்தன, டாக்டர் ஸி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா, கொழும்பு மேயர் எம்.எச். முகம்மத், சென்ட்டர் எ.எம்.எ. அஸீஸ், எம். பளீல் ஏ. கபூர், எம்.ஏ.ஸி.எம். சாலி, ஏ.ஸி.ஏ. வதூத் ஆகியோர் அவ்வைபவத்தில் சொற்பொழிவாற்றினர். ஜாயாவின் பெயரில் நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு ஒரு நிதியம் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற தீர்மானமும் இக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. எம்.எச். முகம்மத் முன்மொழிந்த அத்தீர்மானம் ஏகமனதாக ஏற்கப்பட்டது. ஐக்கிய அரபுக் குடியரசின் தானிகர் 1000 ரூபாயை அன்றே செலுத்தி நிதியத்தின் நிதி சேகரிப்பை ஆரம்பித்து வைத்தார். "ஜாயா அவர்கள் மதீனாவில் மறைந்த வருடமாகிய 1960இல் கூட்டப்பெற்ற அனுதாபப் பொதுக்கூட்டத்தில் மற்றைய விஷயங்களோடு பெரியாரின் நாமம் சதா நம் மத்தியில் நிலைத்து நிற்கும் பொருட்டு ஞாபகார்த்தச் சின்னம் எழுப்புவதற்கென ஒரு நிதி ஏற்படுத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது" (கலீல் எம்.ஸி.எம்., தினகரன்- 31.05.1965) என்ற டாக்டர் கலீலின் கூற்று இதை ஊர்ஜிதம் செய்கிறது.

முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் கலீல் தலைமையில் ஸாஹிறாக் கல்லூரி கபூர் மண்டபத்தில் 31.05.1961, பி.ப. 6.15 மணிக்கு நிகழ்ந்த ஜாயா நினைவுதின நிகழ்வும் குறித்துச் சொல்லப்பட வேண்டிய முக்கியத்துவ முடையது. டட்லி சேனநாயக்க(பா.உ..), எம்.எச். முஹம்மத் (கொழும்பு

மேயர்), ஜி.ஜி. பொன்னம்பலம், டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா (பா.உ.), எம்.எச்.எம். நெய்னாமரைக்கார்(பா.உ.), டாக்டர் எம்.பி. டிரஹமன் (பா.உ.) ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அதே தினம் 31.05.1961இல் சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா சிங்களத்திலும், எஸ்.நடேசன் தமிழிலும், டாக்டர் எம்.எஸ்.எம். கலீல் ஆங்கிலத்திலும் ஞாபகார்த்த உரைகளை வானொலியில் நிகழ்த்தினர். இவ் வைபவம் முஸ்லிம் லீக்கின் ஏற்பாடாகவிருந்தது. முஸ்லிம் லீக் ஜாயா ஞாபகார்த்தக் கமிட்டிச் செயலாளர் ஏ.எல்.எம். ஹாஷிம் இதனை ஏற்பாடு செய்திருந்தார். இதன் பின்புலத்தில் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் இயங்கிக் கொண்டிருந்தார்.

இதன் தொடர்பறா நிகழ்வாக மருதானைப் புகையிரத வீதிக்கு நேரெதிரே அமைந்திருந்த டார்லி வீதியின் ஒருபகுதி (Sunderland), 'ரி.பி. ஜாயா வீதி' என மறுநாமம் சூடியது. அதன் புதிய பெயர்ப்பலகையை அன்றைய கொழும்பு மேயர் எம்.எச். முஹம்மத் 23.09.1962இல் திரை நீக்கம் செய்து வைத்தார். மறுநாள், 24.09.1962இல், கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்ந்த மாபெரும் நினைவுப் பொதுக் கூட்டமும் குறித்துச் சொல்லப்பட வேண்டிய முக்கியத்துவ முடையது. மருதானைப் பள்ளிவாசல் முன்றலில் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஏ.ஸி.எம். அமீர் தலைமையில் நடைபெற்ற அப்பெருங் கூட்டத்தில் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் (பா.உ.), ஏ. ரத்நாயக்கா (பா.உ.), டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், பேர்னாட் சொய்ஸா, ஏ. செய்யிது அஹமத், எஸ்.எம். அபூபக்கர், எஸ். இஸட்.எம். மஷ்ஹூர் மௌலானா ஆகியோரெல்லாம் உரை நிகழ்த்தினர்.



ரி.பி. ஜாயாவீதியின் பெயர்ப் பலகை கொழும்பு மேயர் எம்.எச். முகம்மத் அவர்களினால் திரை நீக்கம் செய்யப்படுகிறது

ஜாயாவின் கல்விப் பங்களிப்பு, அவரின் பல்துறைப் பணிகள், அவரின் சொற்பொழிவுகள், எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்ட முக்கிய பகுதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக 'T.B. Jayah - Pioneer of Muslim Education' என்ற மகுடத்தில் பிரசுரமொன்றையும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் 1962இல் வெளியிட்டது. அந்த வகையில் அரசாங்கம் சுவீகரித்த கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை மீளப்பெற அமைக்கப்பட்ட செயலணியினரின்



ஸாஹிறா பழைய மாணவர் வெளியிட்ட 'T.B. Jayah - Pioneer of Muslim Education' நூல்

ஜாயா நினைவுப் பணிகள் அப்போது முன்னிடம் பெற்றன. ஏ.ஸி.எம். அமீர் தலைமையில் செயற்பட்ட கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கமும் டாக்டர் எம். ஸி.எம். கலீலின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் லீக்கும் ரி.பி. ஜாயா நினைவுப் பணிகளை முன்னெடுப்பதில் தீவிர அக்கறை காட்டின. அதனாற்றான் போலும் எ. எம்.எ. அஸீஸ் முன்னெடுக்கவிருந்த 'ரி.பி. ஜாயா நினைவு நிதியம்' அதன் ஆரம்பத்திலேயே செயலிழக்க நேர்ந்தது.

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர்கள் சங்கத் தலைவர் ஏ.ஸி.எம். அமீர் தலைமையில் மூர் விளையாட்டுக் கழகத்தில் 11.11.1962இல் நடைபெற்ற கூட்டத்தில் 'ரி.பி. ஜாயா ஞாபகார்த்த நிதியம்' ஏற்படுத்தப்பட்டது. பழீல் ஏ. கபூர் அக் குழுவின் தலைவராகவும், எஸ். எல்.எம்.ஷாபிமரிக்கார் செயலாளராகவும் அன்று தெரிவுசெய்யப்பட்டனர். டாக்டர் எம்.ஸி.எம். கலீல், ஏ.ஸி.எம். அமீர், ஏ. றஹ்மான் எம். ஹாதி, டாக்டர் ஏ.ஸி.எம். சுலைமான், ஏ.எஸ். சதூர், எம்.எஸ். ஒஸ்மான், ஏ. செய்யிது அஹமத், ஏ.எச்.எல்.ஏ. சலீம், எச்.ஏ.கே. ஹாஜி ஒமர், டாக்டர் மொஹிதீன் ஹஸன், எம்.எஸ். அபூபக்கர் ஆகியோர் அந்நிதியத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாகச் செயற்படுவதென்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது. (Ceylon Daily News-14.11.1962)

'In memory of T.B. Jayah' என்ற தலைப்பில் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் 'சிலோன் டெய்லி நியூஸ்' பத்திரிகையில் 14.12.1963இல் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதே தினத்தில் 'மறைந்த தலைவருக்கு ஒரு மகத்தான மணிமண்டபம்' என்ற தலைப்பில் அவரின் தமிழ்க் கட்டுரை ஒன்றும் தினகரனில் பிரசுரமாகியிருந்தது.

> "ஜாயா ஸாஹிறாவைப் பொறுப்பேற்ற போது அங்கே 59 மாணவர்களே இருந்தனர். 27 நீண்ட ஆண்டுகளுக்குப் பின் ஜாயா அதிபர் பதவியைத் துறக்கும் போது அளுத்கமை, மாத்தளை, கம்பளை, கொம்பனித் தெரு, புத்தளம் ஆகிய இடங்களில் ஸாஹிறாவின் கிளைகளை ஸ்தாபித்து 4000க்கு மேற்பட்ட மாணவர்கள் உட்பட 150 க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் உற்பத்தி செய்திருந்தார். இது உண்மையிலேயே ஒரு அதிசயிக்கத்தக்க சாதனை. ஏனெனில், அன்று ஜாயா ஸாஹிறாவைப் பொறுப்பேற்ற போது கல்வியின்பால் முஸ்லிம் சமுதாயம் வெறுப்புக் கொண்டிருந்தது.
>
> முஸ்லிம்களுக்கும் முழு இலங்கைக்கும் ஜாயா ஆற்றிய கல்வித் தொண்டு மகத்தானது; சிரேஷ்டமானது. படிப்படியாக கல்வியின் மேம்பாட்டினை உணர்ந்த முஸ்லிம் சமுதாயம் ஸாஹிறாவின் மூலம் நாட்டின் சகல துறைகளிலும் சேவை செய்யக் கூடிய பலரை உருவாக்கியது. உதறித் தள்ளிய மாணிக்கத்தை அவர்கள் மதித்து நடந்து நாட்டின் எதிர்கால

சுபீட்சத்துக்காக தங்கள் பாகத்தையும் செய்ய முனைந்தனர். இக்கடமை வேட்கையை அவர்களுள் புகவைத்தது ஜாயாவின் போதனையும் சாதனையுமே.

இன்று நாட்டின் நாலா பக்கங்களிலும், நாலா துறைகளிலும் டாக்டர்களாக, நீதிபதிகளாக, வழக்கறிஞர்களாக, அரசியல்வாதிகளாக, அரசாங்க தொழில் ஸ்தாபன ஊழியர்களாக, நாட்டுப் பணியில் ஈடுபடும் எண்ணற்ற முஸ்லிம்களைக் கொண்டு, அன்று பெரியார் ஜாயா ஊற்றிய கல்வி அமுதின் பெருவாகத்தைக் கண்டுகொள்ளலாம்." (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 14.12.1963)

என்று தனது ஆசானும் வழிகாட்டியுமான ரி.பி. ஜாயாவின் கல்விப் பணி பற்றி அக் கட்டுரையில் ஷாபிமரிக்கார் எழுதியிருந்தார்.

ரி.பி. ஜாயாவின் 3ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் 31.05.1963ஆம் திகதி, பி.ப. 6.30 மணிக்கு மருதானைப் பள்ளிவாசல் முன்றலில் ரி.பி. ஜாயா ஞாபகார்த்த நிதியத்தின் ஏற்பாட்டில் நிகழ்ந்தது. டாக்டர் எம்.ஸி.எம். கலீல்(பா.உ.) அவர்களின் தலைமையில் நிகழ்ந்த இப்பெரும் கூட்டத்தில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து இரங்கலுரை நிகழ்த்தினர். பாக்கிஸ்தானின் தற்காலிகத் தூதுவர் ஸபறுல் இஸ்லாம், ஐக்கிய அரபுக் குடியரசின் தூதரகப் பொறுப்பதிகாரி அஹமட் புஆத் ஹொஸ்னி, எதிர்கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்க (பா.உ.), எஸ்.ஜே.வி. செல்வநாயகம்(பா.உ.), கலாநிதி என்.எம். பெரேரா(பா.உ.), வி.ஏ. சுகததாஸ(பா.உ.), கொழும்பு மேயர், பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆய்ஷா ரவூப், ஆனந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.ஏ. விஜயதிலக்க, செனட்டர் எஸ். நடேசன், ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தலைவர் ஏ.ஸி.எம். அமீர் ஆகியோரெல்லாம் கலந்து கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். ரி.பி. ஜாயா நினைவு நிதியத்தின் செயலாளர் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் கூட்ட ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்.

ஜாயா ஞாபகார்த்த மணிமண்டபம் நிறுவும் முயற்சியிலும் ஷாபிமரைக்கார் முன்னின்றுழைத்தார். அம் மணிமண்டபத்தை நிறுவுவதற்கான தொடக்க நிகழ்வுகள் 15.12.1963 காலை 10.00 மணிக்கு வேகந்தை பள்ளிவாசல் முன்றலில் நிகழ்ந்தது. டாக்டர் எம்.ஸி.எம். கலீலின் தலைமையில் நடைபெற்ற அந் நிகழ்வில் பாக்கிஸ்தான் பிரதமர் ஐயூப் கான் தன்னுடைய புத்திரி சகிதம் கலந்துகொண்டு நினைவுப் படிகத்தைத் திரைநீக்கம் செய்து அப் பணியை ஆரம்பித்து வைத்தார். தனது அரசாங்கத்தின் சார்பில் 10,000/=ரூபாவை இக் கட்டிட நிர்மாணத்துக்கு வழங்குவதாகவும் ஐயூப்கான் அங்கு உறுதி கூறினார். ஏ.ஸி.எம். அமீரும் அங்கு உரை நிகழ்த்தினார். ஜாயா நினைவு நிதியத்தின் செயலாளர் ஷாபிமரிக்காரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்நிகழ்வில் எதிர்க்கட்சித்



ஜாயா நினைவு மண்டப வேலைகளை ஆரம்பித்து வைக்க வேகந்தைக்கு வருகை தந்த பாக்கிஸ்தான் ஜனாதிபதி ஐயூப்கானை டாக்டர் எம்.ஸி.எம். கலீல், ஷாபிமரிக்கார் ஆகியோர் வரவேற்கின்றனர்



ஜாயா நினைவு மண்டப் படிகத்தை ஜனாதிபதி ஐயூப்கான் திரைநீக்கம் செய்கிறார்

தலைவர் டட்லி சேனநாயக்க, சபாநாயகர் ஆர்.எஸ். பொல்பொல, கொழும்பு மேயர் வீ.ஏ. சுகததாஸ, சுகாதார வீடமைப்பு அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

> "ரி.பி. ஜாயா மணிமண்டபம் எழுப்புவதற்காக கொழும்பு மருதானையில் மத்தியமான ஓர் இடத்தை நாம் இப்போது தெரிந்தெடுத்துள்ளோம். முஸ்லிம் சமூகத்தின் கலாசார சமூக சேமநல பொதுக் கேந்திரஸ்தானமாகத் திகழப்போகும் மூன்று அடுக்கு மாடிகளைக் கொண்ட இக் கட்டிடத்தைப் பூர்த்தி செய்வதற்காக சுமார் 5 இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப் பட்டுள்ளது. கல்லூரி அதிபர்கள், அரசாங்க, வர்த்தக மற்றும் பொது ஸ்தாப னங்களின் தலைவர்கள் எங்களோடு ஒத்துழைத்து தாராளமாக உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன்-30.05.1964)

என்று ஜாயா ஞாபகார்த்த நிதியின் செயலாளர் ஷாபிமரிக்கார் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் கோரியிருந்தார். ஜாயா ஞாபகார்த்த நிதியத்திற்கு நிதி சேகரிப்பதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட கொடி தினத்தையொட்டி (30.05.1964) இச்செய்தியை ஷாபிமரிக்கார் வெளியிட்டி ருந்தார். பாடசாலைகள், ஜும்ஆப் பள்ளிவாசல்களில் 29.05.1964இலும், பொது மக்களுக்கு 30.05.1964இலும் கொடிகளை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இக் கொடிதினத்தையொட்டி, 'மங்காப் புகழ் படைத்த முஸ்லிம் தலைவர்' என்ற தலைப்பில் ஏ.எச்.எம். அஸ்வரின் கட்டுரை ஒன்று தினகரனில் 30.05.1964இல் பிரசுரமாகி இருந்தது.

ஜாயாவின் நான்காவது சிரார்த்த தினத்தையொட்டி கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் பொதுக் கூட்டமொன்றை நிதியத்தின் செயலாளர் ஷாபிமரிக்கார் 31.05.1964இல் ஏற்பாடு செய்திருந்தார். பழீல் ஏ. கபூர் தலைமையில் நிகழ்ந்த அக் கூட்டத்தில் ஜி.ஜி.பொன்னம்பலம், பாக்கிஸ்தான்

தூதுவர் அன்வர் முராத், இந்தோனேஷிய தற்காலிகப் பிரதிநிதி முனவ்வீர் சட்சாலி, கொழும்பு மேயர் வீ.ஏ. சுகததாஸ, ஏ. செய்யிது அஹமத், ஏ. எல்.எம். ஹாஷிம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். உரைபெயர்ப்புகளை மசூர் மௌலானா செய்தார். நிதியத்தின் செயலாளர் ஷாபிமரிக்காரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது. இதற்கு முந்திய தினம் (30.05.1964) எம்.எச்.எம். நெய்னாமரைக்கார் தமிழிலும், பழீல் ஏ. கபூர் ஆங்கிலத்திலும், ஏ.எச்.எல்.ஏ. சலீம் தமிழிலும் நினைவு தினப் பேச்சுகளை இலங்கை வானொலியில் நிகழ்த்தினர்.



ஜாயா நினைவு மண்டபம், விருந்தினர் விடுதி, நூலகம், கலாசார நிலையம் - உத்தேச வரைபு

ரி.பி. ஜாயா ஞாபகார்த்த நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் புதுக்கடை தட்டாரவீதியில் 97/7இலக்க இல்லத்தில் 01.06.1965இல் நிகழ்ந்த போது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்த நிதியத்தின் செயலாளர் ஷாபிமரிக்கார், கொழும்புமருதானையில் ஆனந்தாக் கல்லூரிக்கு எதிரே 25 பர்ச்சஸ் காணியை விலைக்கு வாங்கி ஜாயா ஞாபகார்த்த மணிமண்டபத்தை எழுப்புவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாகக் குறிப்பிட்டார் (தினகரன்-04.06.1965). பின்வருவோர் அவ்வருடத்துக்கான நிதியத்தின் நிருவாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: டாக்டர் எம்.ஸி. எம். கலீல், உப-தலைவர்கள்: பழீல் ஏ. கபூர், ஏ.ஸி.எம். அமீர், ஏ.எஸ். சத்தார். செயலாளர்: எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், உதவிச் செயலாளர்: எஸ். இஸட்.எம். மசூர்மௌலானா, பொருளாளர்: ஏ. றஹ்மான் எம். ஹாதி, உப பொருளாளர்: ஏ.ஸி.எம். ரஊப். செயற்குழு: ஏ. செய்யித் அஹமத், எம்.எச். எம். நெய்னாமரைக்கார் (எம்.பி.), ஜாபிர் ஏ. காதர் (எம்.எம்.சி.), எச்.ஏ.கே. ஹாஜி ஒமர், கே.ஏ. முஹம்மத் அலி, அஸ்கர் ஏ. ஜபர்ஜீ, டாக்டர் எம்.ஸி.எம். சுலைமான், ஏ.எச்.எல்.ஏ. சலீம், ஒஸ்மான், ஏ.ஏ. காதர், மன்சூர் ஏ. காதர், எஸ்.பி.எம். ஹுசைன், எம்.எம். பஹாவுதீன், முஹம்மத் செய்ன் (எம்.எம்.சி.), ஈ.எல்.எம். சலீம், எம்.ரி. ஐதுரூஸ் ஆகியோர். தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் எம்.ஸி.எம். கலீல் முந்திய வருடத்தில் நிதியத்தின் தலைவராகவிருந்த பழீல் ஏ. கபூருக்கு நன்றி தெரிவித்தார். (தினகரன்- 04.06.1965)

ரி.பி. ஜாயாவின் 7ஆவது நினைவு தினம் 31.05.1967இல் ஸாஹிறாக் கல்லூரியில் அனுஷ்டிக்கப்பட்டது. மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் நிறைந்திருந்த அவ் வைபவத்தின் பிரதம அதிதியாக

இலங்கைக்கான பாக்கிஸ்தானின் தூதுவர் ஹுமாயூன்கான் பன்னி கலந்து சிறப்பித்தார். பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்களையும் அவர் வழங்கி வைத்தார்.





ஸாஹிறாக் கல்லூரி அனுஷ்டித்த ஜாயா நினைவு தின நிகழ்வில் பாக்கிஸ்தானின் இலங்கைக்கான தூதுவர் ஹுமாயூன்கான் பன்னி பிதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கிறார்

ரி.பி. ஜாயா ஞாபகார்த்த நிதியத்துக்கு நிதிசேகரிக்க கொடி தினமொன்றை 17.09.1967இல் நிதியத்தின் நிருவாகக்குழு ஏற்பாடு செய்திருந்தது. அந்நிதியத்தின் செயலாளர் ஷாபிமரிக்கார் அப்போது கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவும் பதவியேற்றிருந்தமை இச் செயற்பாடு களைத் துரிதமாக முன்னெடுக்க வசதியாக அமைந்தது.

ரி.பி. ஜாயாவின் எட்டாவது சிரார்த்த தின நிகழ்வுகளை 31.05.1968 பி.ப. 4.30மணிக்கு ஸாஹிறாக்கல்லூரி கபூர் மண்டபத்தில் செயலாளர் ஷாபிமரிக்கார் ஏற்பாடு செய்திருந்தார். பி.டி.எஸ். குலரத்ன, இஸ்ஸதீன் முஹம்மத், எஸ்.ஏ. விஜயதிலக, அட்வகேட் செய்யித் அஹமத் ஆகியோர் இந்நிகழ்வில் சொற்பொழிவுகள் ஆற்றினர். அதனையொட்டி வானொலியில் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் ஆங்கிலத்திலும், வட்டாரக் கல்வி அதிகாரி அப்துல் மஜீத் சிங்களத்திலும், தினகரன் உதவி ஆசிரியர் எம்.கே.எம். அபூபக்கர் தமிழிலும் 31.05.1968இல் உரைகள் நிகழ்த்தினர். ஜாயா நினைவுப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள், போட்டியில் அவர்கள் நிகழ்த்திய உரைகளை அவ் வைபவத்திலும் நிகழ்த்தினர். சிரேஷ்ட பிரிவில் ஏ.ஜே. எம். முஸம்மில் (ஆங்கிலம், சிங்களம்), எம்.எஸ்.எம். அனஸ் (தமிழ்) ஆகியோர் முதலாமிடங்களையும், கனிட்ட பிரிவில் எம்.எஸ்.எம். பௌசுல் அமீர் (ஆங்கிலம்), அம்ஜாட் ஆர். மரைக்கார் (சிங்களம்), எம்.எஸ்.எம். றபீக் (தமிழ்) ஆகியோர் முதலாமிடங்களையும் வென்றனர். வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் வழங்கினார்.

ஒன்பதாவது ஜாயா நினைவு வைபவம் 22.06.1969 பி.ப. 4.00 மணிக்கு டாக்டர் எம்.ஸி.எம். கலீல் தலைமையில் ஸாஹிறாக் கல்லூரி கபூர் மண்டபத்தில் நிகழ்ந்தது. ஷாபிமரிக்கார் செயலாளராகவிருந்த ஜாயா நினைவு நிதியமும், அவர் அதிபராகவிருந்த ஸாஹிறாக் கல்லூரியும்

இணைந்து இவ் வைபவத்தை நடத்தியது. தொழில் அமைச்சர் எம். எச். முகம்மத், சேர் செனரத் குணவர்த்தன, செனட்டர் எஸ்.எம்.எச். மசூர், எஸ்.இஸட்.எம். மசூர் மௌலானா ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினர். ஜாயா நினைவுப் பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு சேர் செனரத் குணவர்த்தன பரிசுகளை வழங்கினார். சிரேட்ட பிரிவில் எம். வை.எம். ஸபருல்லா (ஆங்கிலம்), அம்ஜாட் ஆர். மரைக்கார் (சிங்களம்), எஸ்.எம். அலிஅக்பர் (தமிழ்) ஆகியோரும், கனிட்ட பிரிவில் எஸ்.எம். பௌசுல் அமீர் (ஆங்கிலம்), ஏ.என்.எம். பஹ்மி (தமிழ்) ஆகியோரும் முதற் பரிசுகளை வென்றனர். எம்.வை.எம்.பாயிஸ் சிரேட்ட ஆங்கிலப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகளுடன் 12ஆவது ஜாயா நினைவு தின நிகழ்வுகள் ஆரம்பமாகின. எச்.எம். ஹனிபா, எஸ். சுபைதீன், எம்.எல்.எம்.எம். ஹசன், ஓ.எம். நஸீன், ஐ.ஸி. இஸ்மாயில் முதலான சிரேட்ட ஆசிரியர்கள் உள்ளடங்கிய குழுவின் ஏற்பாட்டில் ஸாஹிறாக் கல்லூரியின் ஆரம்ப, கனிட்ட, சிரேட்ட மாணவர்களிடை பேச்சுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. 01.06.1972இல் நடைபெற்ற அதன் இறுதி நிகழ்வில் மலேசியாவின் இலங்கைக்கான தூதுவர் துங்கு இந்ராபெட்றா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். 'New Light on Ceylon – Arab Relations' (இலங்கை – அராபிய உறவில் புதிய ஒளி) என்ற தலைப்பில் மாணவர்களுக்கான கலாநிதி எஸ்.ஏ. இமாமின் சொற்பொழிவும் அப்துல் கபூர் மண்டபத்தில் நிகழ்ந்தது. ஜாயா நினைவு தினப் பொது நிகழ்வுகள் 04.06.1972 பி.ப. 4.00 மணிக்கு ஸாஹிறாக் கல்லூரி கபூர் மண்டபத்தில் நடந்தேறின. 'இலங்கை - அராபியர் தொடர்பில் சில அம்சங்கள்' என்ற தலைப்பில் கலாநிதி எஸ்.ஏ. இமாமும், 'இஸ்லாமிய கருத்துக்களின் ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் மலேசியப் பல்கலைக்கழக இஸ்லாமியத் துறைத் தற்காலிகத் தலைவரும் ரி.பி. ஜாயாகால கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மாணவனுமான கலாநிதி ஏ.எம்.எம். மக்கீனும் இந் நிகழ்வில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அன்றையத் தினம் கல்வி அமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹ்முத் ஆங்கிலத்திலும், முன்னாள் ஆனந்தாக் கல்லூரி அதிபர் பி.டி.எஸ். குலரத்ன சிங்களத்திலும், எம். சிவசிதம்பரம் தமிழிலும் வானொலியில் உரைகள் நிகழ்த்தினர்.

கொழும்பு மேயர் வின்சன் பெரேரா சிங்களத்திலும், தமிழ் சேவையிலும் முஸ்லிம் சேவையிலும் எஸ்.எம். கமால்தீன் தமிழிலும், எம்.ஏ.எம். ஹுசைன் ஆங்கிலத்திலும் ரி.பி. ஜாயாவின் 13ஆவது நினைவுதின வானொலிச் சொற்பொழிவுகளை 30.05.1973இல் நிகழ்த்தினர். ஹலீம் இஷாக் (எம்.

எம்.ஸி.) சிங்களத்திலும், நீதியரசர் ஐ.எம். இஸ்மாயில் ஆங்கிலத்திலும், மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.ஏ. றஹீம் தமிழிலும் 15ஆவது ஜாயா நினைவுதின வானொலியுரைகளை 30.05.1974இல் நிகழ்த்தினர். 17ஆவது நினைவுதின உரையை 31.05.1977இல் ஏ.எம். முஸ்தகீம் முஸ்லிம் சேவையில் நிகழ்த்தினார். 20ஆவது நினைவுதின வானொலிச் சொற்பொழிவுகளை தொழில் அமைச்சர் சி.பி.ஜே. செனிவிரத்ன சிங்களத்திலும், கிராமியக் கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமான் தமிழிலும், காதர் எம். அலி முஸ்லிம் நிகழ்ச்சியிலும் 30.05.1980இல் நிகழ்த்தினர். இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் ஆங்கிலத்தில் 31.05.1980இல் வானொலியில் நினைவுரை நிகழ்த்தினார்.

ஷாபிமரிக்கார் ஜாயா ஞாபகார்த்த நிதியத்தின் செயலாளராகவிருந்த ஒவ்வொரு வருடமும் ஜாயா நினைவு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அவரின் நினைவை மக்கள் மனதில் மங்காதிருக்கச் செய்தார். அந்தவகையில் அவர் ஏற்பாடு செய்த 21ஆவது நினைவுதின நிகழ்வும் குறித்துச் சொல்லப்படவேண்டிய முக்கியத்துவமுடையதாகும். ஐம்பது சத ஜாயா நினைவு முத்திரை 31.05.1981 காலை 10.00 மணிக்கு வெளியிட்டு வைக்கப்பட்டது. டாக்டர் எம்.ஸி.எம். கலீல், உயர் கல்வி, விஞ்ஞானத்துறை அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் ஆகியோர் முன்னிலையில் இந்நினைவு முத்திரையை, தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் டீ.பி. விஜயதுங்க கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் வெளியிட்டு வைத்தார். அதே தினத்தில் கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஏ.எம். சரீப் தலைமையில் காத்தான்குடி அஞ்சல் அலுவலகத்திலும் நினைவு முத்திரை வெளியீட்டு வைபவம் நிகழ்ந்தது. சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் ஜாயா நினைவு முத்திரை விற்பனைக்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. மாலை நிகழ்வாக கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி கபூர் மண்டபத்தில் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. டாக்டர் எம்.ஸி.எம்.கலீலின் தலைமையில் நிகழ்ந்த அவ் வைபவத்திற்கு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.பி. விஜயதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். சபாநாயகர் எம்.ஏ. பாக்கீர் மாக்கார், பொதுநிருவாக அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம, போக்குவரத்து, முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச். முஹம்மத், ஜாபீர் ஏ. காதர் (பா.உ.), எஸ். இஸட்.எம். மசூர் மௌலானா ஆகியோரெல்லாம் இக்கூட்டத்தில் நினைவுரைகள் நிகழ்த்தினர். இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை பதிப்பித்த



ஜாயா நினைவு முத்திரை

ஜாயா நினைவு நூலொன்றும் இவ்வைபவத்தில் அமைச்சர் மொண்டேகு ஜயவிக்கிரமவினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

'மர்ஹூம் அல்ஹாஜ் ரி.பி. ஜாயா' என்ற தலைப்பில் தினகரனில் 31.05.1985இல் எம்.ஏ. பாக்கீர் மாக்காரும், 'T.B. Jayah – An exemplary diplomat' என்ற தலைப்பில் 'சண்' (Sun) பத்திரிகையில் 25.05.1988இல் எஸ்.எச். யூனுஸும் ஜாயா நினைவுக் கட்டுரைகளை எழுதியிருந்தனர்.



ஜாயாவின் 100ஆவது பிறந்த தின வைபவத்தில் எஸ்.எம். கமால்தீன் எழுதிய 'T.B. Jayah - The Visionary' நூலை டாக்டர் கலீல் பிரதமர் டி.பி. விஜேதுங்கவுக்கு வழங்குகிறார். தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் ஏ.எல்.எஸ். ஹமீத், டாக்டர் கலீல், பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோரும் கலந்து கொண்டனர்

ஜாயாவின் 100ஆவது ஜனன தினம் கல்லூரி கபூர் மண்டபத்தில் அனுஷ்டிக்கப் பட்டது. பிரதமர் டி.பி. விஜேதுங்க, தோட்டத் தொழிற்றுறை அமைச்சர் காமினி திசா நாயக்க, வர்த்தக-கப்பல்துறை அமைச்சர் ஏ.ஆர். மன்சூர், முன்னாள் அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோ ரெல்லாம் கலந்து சிறப்பித்தனர். டாக்டர் எம்.ஸி. எம். கலீல் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

ஜாயாவின் 31ஆவது நினைவு நிகழ்வு ஸாஹிறாக் கல்லூரி கபூர் மண்டபத்தில் 31.05.1991இல் நடைபெற்றது. முஸ்லிம் லீக்கின் ஏற்பாட்டில் அதன் தலைவர் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் தலைமையில் நிகழ்ந்த அவ்வைபவத்தில் அன்றைய கல்வி-உயர்கல்வி அமைச்சர் லலித் அதுலத் முதலி நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

ஜாயா நினைவாலயம் அமைக்க ஆனந்தாக் கல்லூரிக்கு நேரெதிரே பெறப்பட்ட காணியை விட ரி.பி. ஜாயா வீதியே (டார்லி வீதியின் ஒரு பகுதி) பொருத்தமானதென்றும் அவ்வீதியில் காணித்துண்டொன்றைப் பெற போக்குவரத்து - முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச். முகம்மத் உதவ வேண்டுமென்றும் 16.07.1985இல் அவரைச் சந்தித்த ரி.பி. ஜாயா நிதியத்தின் தூதுக்குழு வேண்டுகோள் விடுத்தது. எம்.எச். ஆமித், முகம்மது செய்ன், காதர் எம். அலி, ஏ.எம். நஸீர், ஏ.எச்.எம். அஸ்வர், மஷ்ஹூர் மௌலானா ஆகியோரெல்லாம் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். அமைச்சரும் அக்கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாக உறுதியளித்தார். டாக்டர் எம்.ஸி.எம். கலீல் பிரதமருக்கு இதுபற்றி விளக்கிக் கூறியதாகவும் பிரதமரின் ஆலோசனையின் பிரகாரமே அக்குழு அமைச்சரைச் சந்தித்ததாகவும் பத்திரிகைகளும் அப்போது செய்தி வெளியிட்டிருந்தன. ஆயினும், இம்முயற்சி வெற்றிபெறவில்லை.

ரி.பி. ஜாயா ஞாபகார்த்த நிதியத்தின் செயலாளராக 11.11.1962இலிருந்து செயற்பட்ட ஷாபிமரிக்காரின் பணி முஸ்லிம் சமூகத்திற்கும் இலங்கைத் தேசியத்திற்கும் பெரும் பங்களிப்புச் செய்த தனது ஆசான் ரி.பி. ஜாயாவின் நினைவை மக்கள் மனதிலிருந்து அகலாதிருக்கச் செய்ததில் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறது. ஷாபிமரிக்காரின் மறைவுக்குப் பின் அப்பணியின் காத்திரம் குறைந்துவிட்டது. சிதறுண்ட செயற்பாடுகள் ஜாயா நினைவுப் பணிகளில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அப்பணிகள் ஒருமைப்படுத்தப்பட வேண்டியதுடன் ரி.பி. ஜாயா ஞாபகார்த்த மணிமண்டப வேலைகளும் மீளத் தொடக்கம்பெறவேண்டும். அம்முயற்சிகள் ஜாயாவின் மேதைமையிலிருந்து முஸ்லிம் சமூகமும் இந் நாடும் ஊக்கம் பெறச் செய்யும். ஜாயா அதிபராகவிருந்த கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் கற்று, இலவசக் கல்வியின் வாடையே வீசாத அக் காலத்தில் ஜாயாவின் உதவியில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கற்று, அவர் தொடங்கிய அளுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியை அவரின் அழைப்பின் பேரில் ஏற்று, ஜாயா அதிபராகவிருந்து வளர்த்தெடுத்த கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபருமாகி, ஜாயாவின் மரணத்தின் பின் ஜாயா ஞாபகார்த்த நிதியத்தின் செயலாளர் பதவியிலுமமர்ந்து அதன் பணிகளையும் சிறப்பாக முன்னெடுத்து, ஜாயா கற்பித்த ஆனந்தாக் கல்லூரிக்கு சரிநேராக, அதற்காகப் பெறப்பட்ட காணியில் ஜாயாவுக்கு ஞாபகார்த்த மணிமண்டபம் ஒன்றையும் நிர்மாணித்துவிட அயராது முயற்சிகள் செய்தவர் ஷாபிமரிக்கார். சமூகத்தின் கலாசார மையமாக, ஜாயாவின் நாமத்தை என்றென்றும் நினைகூரச் செய்யும் நிலையமாக அதனைக் காணவிளைந்தவர் அவர். "டாக்டர் ரி.பி. ஜாயாவின் ஞாபகார்த்தமாக எமது தீவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மணிமண்டபம் முஸ்லிம்கள் இப்பெரியாருக்கு அளிக்கக்கூடிய கௌரவத்தின் ஒரு சிறுதுளியே" (ஷாபிமரிக்கார் எஸ். எல்.எம்., தினகரன் - 14.12.1963) என்று ஷாபி நினைத்து நிறைவேற்றத் துடித்த அச்சிறு கௌரவத்தைக்கூட இன்றுவரை முஸ்லிம் சமூகம் ஜாயாவின் நினைவாகச் செய்யமுடியாமற் போனமை துரதிஷ்டமானது; கவலைக்குரியது. அதை நிறைவேற்றும் பொறுப்பு இன்று முழு முஸ்லிம் சமூகத்தின் மீதும் சுமத்தப்பட்ட கடமையாகிவிட்டது. அதனை நிறைவேற்றுவதன் மூலம் ஜாயாவின் மேதைமையை, அவரின் பணியின் மகிமையை நினைகூரலாம்; அதனை நாடும் உலகமுமறியச் செய்யலாம். கல்விமான் ஷாபிமரிக்காரின் எண்ணத்தை நிறைவேற்றிய திருப்தியும் முஸ்லிம் சமூகத்துக்கேற்படும்.

8

முஸ்லிம் கல்வி மாநாட்டின் உயிர்நாடி

8.1 வரலாற்றுப் பின்புலம்

சேர் செய்யிது அஹமதுகானின் அலிகார் இயக்கத்தையும், 1886இல் இந்திய முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்காக அவர் ஆரம்பித்த **Mohammadean Educational Conference** இன் செயற்பாடுகளையும் இலங்கை முஸ்லிம் தலைவர்களும் தம் செயற்பாடுகளுக்கு முன்னுதாரணமாக்கினர்.

> "மேற்குத் தேசங்களுடையனவும் கிழக்குத் தேசங்களுடையனவும் சீர்திருத்த முறைகளை ஒன்று சேர்த்து முஸ்லிம்கள் கற்க வேண்டும். இதுவே இந்திய முஸ்லிம்களை முன்னேற வைத்த அலிகார் கல்லூரியை ஸ்தாபித்த சேர் செய்யது அஹமதுகான் கையாண்ட முறை"

என்று பிரசித்திபெற்ற தனது மருதானைப் பள்ளிவாசல் சொற்பொழிவில் சித்திலெவ்வை குறித்துச் சொன்னபோது, அங்கு குழுமியிருந்த முஸ்லிம்களும் செய்யிது அஹமத்கானின் வழியில் கல்வி முயற்சிகளை முன்னெடுக்க உணர்வு கொண்டனர். அதன் விளைவே, எம்.ஸி. சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் ஆகியோர் 1891இல் ஏற்படுத்திய **Colombo Muslim Educational Society** (கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கம்). இச்சங்கத்தின் இரண்டாவது கூட்டம் 21.08.1892இல் நடைபெற்ற போது ஒறாபிபாஷாவும் வருகை தந்திருந்தார். சித்திலெவ்வை தனது உரையில் கல்விபால் நாட்டம் கொள்ளுமாறு முஸ்லிம் சமூகத்தைக் கோரினார். ஐ.ஏ.எஸ். வாஹித் அரபு மொழியில் உரையாற்றினார். கரீம் ஜீ ஜபர்ஜீ நிதி உதவி வழங்கினார். இம் முயற்சியில்தான் 1892இல் 'அல்-மத்ரஸத்துஸ் ஸாஹிறா' உருவானது. இக்கல்லூரியின் ஆரம்பத்துடன் கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கமும் செயலிழந்து போனது. ஆயினும்,

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் செயலிழக்கவில்லை. தொடர்ந்தும் தன் சமூகத்தை கல்விபால் நாட்டம் கொள்ளச் செய்வதில் முயற்சிகளை முன்னெடுத்தார்.

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் 1867.10.27இல் பிறந்தவர். 1915 செப்டம்பர் 11இல் மரணிக்கும் வரை முஸ்லிம் சமூக, கல்விப் பணிகளை முன்னெடுப்பதில் தடம் பதித்தவர். 'ஜமிய்யதுல் இஸ்லாமிய்யா' சங்கத்தின் செயலாளராக (1888), எம்.ஸி. சித்திலெவ்வையின் 'முஸ்லிம் நேசன்' பத்திரிகைப் பதிப்பாசிரியராக (1889), கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தின் (The Colombo Muslim Educational Society) செயலாளராக (1891), அல்-மத்ரஸத்துஸ் ஸாஹிறாவை சித்திலெவ்வை, ஒறாபி பாஷா, வாப்பிச்சி மரைக்காருடன் இணைந்து ஆரம்பித்த பங்காளியாக (1892), பதினைந்து வருடங்கள் சோனகர் சங்கத்தின் (Moors Union) தலைவராக (1900), 'அஸ்-ஸபாப்' என்ற அறபுத் தமிழ் கல்லச்சுப் பத்திரிகையின் ஆசிரியராக (1900), 'முஸ்லிம் கார்டியன்' என்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக (1901-1908), 'அல்-முஸ்லிம்' என்ற ஆங்கில தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக (1907), மருதானைப் பள்ளிவாசல் முகாமையாளராக (1903 ஜூனிலிருந்து பத்து வருடங்கள்) வெல்லாம் முஸ்லிம் சமூகப் பணி செய்தவர் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ். முஸ்லிம் இனத்தின் சட்டசபைப் பிரதிநிதித்துவத்துக்காக சித்திலெவ்வையுடன் இணைந்து போராடியவர் அவர். சேர் பொன். இராமநாதன் முகம்மதிய விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் மீது 1885இல் சட்ட சபையில் உரை நிகழ்த்திய போதும், பின்னர், றோயல் ஏசியாட்டின் சொசைட்டியின் இலங்கைக் கிளையில் 1888.04.26இல் 'Ethnology of the Moors of Ceylon' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படித்தபோதும், சோனகர் இனத்தால் தமிழரே என்று குறிப்பிட்டுச் சொன்ன போது, கண்டனக் குரல் எழுப்பியவர்களுள் சித்திலெவ்வையும், ஐ.எல்.எம். அஸீஸும் முக்கியமானவர்கள். சித்திலெவ்வை முஸ்லிம் நேசனில் தனது கண்டனத்தை வெளியிட்டார். 'A Criticism of Mr. Ramanathan's Ethnology of the Moors of Ceylon' என்ற தலைப்பில் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் இராமநாதனின் கருத்தை மறுத்து கட்டுரை எழுதினார். அவர் 1900இல் தாபித்து 15 வருடங்கள் தலைவராகவிருந்த சோனகர் சங்கம் (Moors Union) அவரின் இவ் விமரிசனக் கட்டுரையை 1907இல் நூலாக வெளிக்கொணர்ந்தது. சோனகரின் பூர்வீகம் அதில் தெளிவுபடுத்தப்பட்டது. துருக்கித் தொப்பி அணிந்து உயர் நீதிமன்றம் சென்ற அட்வகேட் அப்துல் காதர் அனுமதி மறுக்கப்பட்ட போது அதற்கெதிராக சமூகத்தின் உணர்வை ஒன்று திரட்டி பிரித்தானிய அரசுக்குத்

தெரியப்படுத்தி, முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தைக் காப்பதில் ஐ.எல். எம். அப்துல் அஸீஸ் முன்னின்றுழைத்தார். சட்டசபை உறுப்பினர் டபிள்யு. எம். அப்துல் றஹ்மான் தலைமையில் 31.12.1905இல் மருதானைப் பள்ளிவாசல் முன்றலில் நிகழ்ந்த துருக்கித் தொப்பிப் போராட்ட சமூக எழுச்சிப் பெருங்கூட்டத்தில் மௌலவி றபியுத்தீன் அஹ்மத்துடன் ஐ.எல். எம். அப்துல் அஸீஸும் உரையாற்றினார். குடியேற்ற நாட்டுச் செயலாளராக விருந்த சேர் ஹியூ கிளிபட்டின் இஸ்லாத்துக்கு விரோதமான கருத்துக்களையும் அஸீஸ் பலமாகச் சாடினார். சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் (The Moors Islamic Cultural Home) கூட ஐ.எல்.எம். அப்துல் அஸீஸினுடைய Moors Union இன் வழிவந்த அமைப்பாகவே கொள்ளப்பட வேண்டுமென்பார் எ.எம்.எ. அஸீஸ். இலங்கையில் தமிழில் குத்பாப் பிரசங்கம் நிகழ்த்தப்படவும் எம்.ஸி. சித்திலெவ்வையும் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸுமே காரணஸ்தர்கள்.

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் 1910இல் **The Muslim Young Men's Association** என்ற பெயரில் ஓரியக்கத்தை ஆரம்பித்து, 'The Ceylon Muslim Review' பத்திரிகையையும் வெளியிட்டு சேர் செய்யது அஹமத்கானின் வழியில், கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கம் விட்ட இடத்திலிருந்து தனது கல்விப் பணியைத் தொடர்ந்தார். சேர் செய்யது அஹமத் கான் வெளியிட்ட உருதுப் பத்திரிகையான Takzeebul Akhlaque (The Social Reformer) இன் நோக்கையே அப்துல் அஸீஸின் பத்திரிகையும் தனது நோக்காகக் கொண்டிருந்தது. 'இலங்கை முஸ்லிம்களும் ஆங்கிலக் கல்வியும்' என்ற ரி.பி. ஜாயாவின் கட்டுரையொன்று 1914 ஒக்டோபர் 'சிலோன் முஸ்லிம் றிவிவ்' பத்திரிகையில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. அஸீஸின் 'The Muslim Young Men's Association, அவரின் மரணத்தின் பின் 24.02.1918இலிருந்து **'The Ceylon Muslim Association'** என்ற பெயரில் இயங்கியது. அப்போதைய கல்விப் பணிப்பாளர் ஈ.பி. டென்ஹாமும், 1919 பெப்ரவரியில் 'கல்வியும் தேசிய முன்னேற்றமும்' என்ற தலைப்பில் ரி.பி. ஜாயாவும் இச் சங்கத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அதன் விளைவாகவே மாளிகாவத்தையில் டென்ஹாம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 'The Ceylon Muslim Association' பின்னர் **'The Young Muslim League'** என்றும், அதன் பின்னர் **'All Ceylon Muslim League'** (அகில இலங்கை முஸ்லிம் லீக்) என்றும் பெயர் மாற்றங்கள் பெற்று இன்றுவரையும் இயங்குகிறது. 11.09.1915இல் இறந்துபோன ஐ.எல்.எம். அப்துல் அஸீஸின் கல்விப் பணிகளை நினைகூருமுகமாக 1924இல் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடொன்றை 'The Young Muslim League' இரு நாட்கள் நடத்தியது. முதல் நாள் நிகழ்வுக்கு கொழும்பு ஸாஹிறாக்

கல்லூரி முகாமையாளர் என்.எச்.எம். அப்துல் காதரும், இரண்டாம் நாள் நிகழ்வுக்கு அக்கல்லூரியின் அதிபர் ரி.பி. ஜாயாவும் தலைமை தாங்கினர். இதுவே முதலாவது அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடாகக் கொள்ளப்படுகிறது. இம்மாநாட்டில் எம்.ஏ.சி.எம். சாலி,'The Study of Arabic in relation to the Holy Quran' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

அரசாங்க சபையின் இரண்டாவது கல்வி நிருவாக சபை 1936இல் செயற்பாட்டை ஆரம்பித்த போது இன்னுமொரு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு கூட்டப்பட வேண்டியதன் அவசியத்தை 'அகில இலங்கை முஸ்லிம் லீக்' உணர்ந்தது. வரவேற்புக் குழுத் தலைவராக ரி.பி. ஜாயாவும், செயலாளராக டாக்டர் எம்.ஸி.எம். கலீலும் செயற்பட்டு இரண்டாவது அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டை 13.09.1936இல் ஏற்பாடு செய்திருந்தனர். அல்லாமா யூசுப் அலியின் தலைமையில் மாநாடு நடைபெற்றது. இதுவே இரண்டாவது அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடானது.

சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா தலைமையில் நியமிக்கப்பட்ட கல்வி விசேட குழுவின் அறிக்கை 1943இல் வெளிவந்தது. ரி.பி. ஜாயா, ஏ. ஆர்.ஏ. றாஸிக் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்ற அரசாங்க சபையின் முஸ்லிம் அங்கத்தவர்கள். எம்.சி. அப்துல் காதர், எம்.எஸ். காரியப்பர், சேர் மொஹமத் மாக்கான் மாக்கார், ஏ.ஆர்.ஏ. றாஸிக், டாக்டர் எம்.ஸி.எம். கலீல் ஆகியோர் இக்குழுவின் முன் சாட்சியமளித்த முஸ்லிம்கள். விசேட குழுவின் அறிக்கை வெளிவந்தபோது முஸ்லிம்களின் கல்வி மீது முஸ்லிம் லீக் கூடிய கவனமெடுத்துச் செயற்பட்டது. சேர் மொஹமத் மாக்கான் மாக்கார் இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலமது. "இலங்கை முஸ்லிம் லீக்கின் மத்திய கவுன்சிலின் அவசரக் கூட்டமொன்று சேர் மொஹமத் மாக்கான் மாக்கார் தலைமையில் நடைபெற்றபோது விசேட கல்விக் கமிட்டியின் அறிக்கை விவாதிக்கப்பட்டது. விவாதத்தை ஆரம்பித்துவைத்து ரி.பி. ஜாயா பேசுகையில், குழந்தைகளில் 80% வீதமானோர் இப்போது கல்விகற்க வசதியின்றி இருக்கின்றனரென்றும், கல்விகற்க எல்லோருக்கும் வசதியளிக்கும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்மென்றும் கூறினார்... அவர் பேசி முடிந்ததும் கல்வியறிக்கையின் பல அம்சங்களும் நுணுக்கமாக விவாதிக்கப்பட்டன. கல்வியறிக்கையைப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க பிரபலஸ்தர்களைக் கொண்ட ஓர் உப கமிட்டியை நியமிக்க தலைவரின் யோசனைமீது தீர்மானிக்கப்பட்டது" (தினகரன்-1944.02.17:4). அதன் தொடர்பறா நிகழ்வாக மூன்றாவது அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு மாத்தளையில் 1945இல் நடைபெற்றது.

அலிகார் பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் சியாஉத்தீன் அஹமட் இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். ரி.பி. ஜாயா, டாக்டர் எம். ஸி.எம். கலீல் ஆகியோருடன் இணைந்து அலிகார் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் றஊப்பாஷா இம்மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார். மீராசாஹிப், மீஸான் ஹாஜியார் ஆகியோரின் உதவியும் இதற்கிருந்தது.

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் கல்விப் பிரிவு நான்காவது அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டை கல்முனையில் 15.05.1949இல் நடத்தியது. எம்.ஏ.எம். ஹுசைன் (அட்வகேட்), எம்.எம். அப்துல் காதர் (அட்வகேட்), எஸ்.எம். கமால்தீன், எம்.எம். முஸ்தபா (சட்டத்தரணி), ஏ.எம். அமீன் (அட்வகேட்), ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர்(பா.உ.), விடத்தல் தீவு கிராமசபைத் தலைவர் எம்.பி.எம். முஹம்மத் காசிம், எம்.ஏ.சி. எம். சாலி, ஏ.எல்.எம். ஹாஷிம், எம்.எஸ்.எம். யூசுப் (தலைமை ஆசிரியர்), எம். லாபிர் காசிம் ஆகியோரும் அப்போதைய அளுத்கம ஸாஹிறாக் கல்லூரி அதிபர் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். எ.எம்.எ. அஸீஸின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுத் தலைவராக எம்.ஏ.எல். காரியப்பர் (புறக்டர்) செயற்பட்டார். இலங்கை சுதந்திரம் பெற்று இலவசக் கல்வித் திட்டமும் அமுலில் இருந்த போது நடைபெற்ற மாநாடு இது. கல்விமொழி உள்ளிட்ட பல விடயங்கள் இம் மாநாட்டில் கலந்துரையாடப்பட்டன. கல்வி மொழிபற்றித் தீர்மானிக்க விசேடகுழுவொன்று அமைக்கப்பட்டு அதன் தீர்மானம் முஸ்லிம் சமூகத்தின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று அஸீஸ் மாநாட்டில் முன்மொழிந்தார். முஸ்லிம் கல்வியில் கூடிய கவனம் செலுத்திமைக்காக அரசாங்க சபையின் கல்விக் குழுத் தலைவர் சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கராவுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் உள்ளிட்ட 8 தீர்மானங்கள் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. அரசாங்கசபைக் காலத்தில் முஸ்லிம் கல்வி நலனில் கூடிய அக்கறை காட்டியமைக்காக அரசாங்க சபையின் கல்வி நிருவாகக் குழுத்தலைவருக்கும் (ஸி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா) அதன் அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் அரசாங்க சபையின் கல்வி நிருவாகக் குழுவின் கொள்கையை அப்போதைய கல்வி அமைச்சர் (ஈ.ஏ. நுகவெல) தொடர வேண்டுமென்றும் தீர்மானமொன்றை அன்றைய அளுத்கம ஸாஹிறாக் கல்லூரி அதிபர் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் முன்மொழிந்தார். அமைச்சர் நுகவெல பின்பற்ற வேண்டுமென ஷாபிமரிக்கார் முன்மொழிந்தனவற்றுட் சில பின்வருவன:

1. முஸ்லிம் பிரதேச அரசினர் பாடசாலைகளுக்கு முஸ்லிம் ஆசிரியர்களை நியமித்தல்
2. முஸ்லிம் மாணவரை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அனுமதிப்பதில் விசேட வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (ஆரம்பக் கல்வி, பின் ஆரம்பக் கல்வி)
3. இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு முஸ்லிம் மாணவர் அனுமதி
4. உதவி நன்கொடை பெறும் முஸ்லிம் பாடசாலைகளைத் தாபித்தல்
5. எஸ்.எஸ்.ஸி. (ஆங்கிலம்) பரீட்சைக்கும் ஏனைய பரீட்சைகளுக்கும் கல்வி மொழியைத் தெரிதலும் தேவைப்படுத்தப்படும் அதிகுறைந்த மொழித்தகைமையும்
6. அரசினர் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் அரபு மொழி கற்பித்தல்
7. பாடசாலைகள், பல்கலைக்கழகம் என்பவற்றுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகளுக்குரிய அனுமதி, பிரவேசம் என்பவற்றின் வயதுத் தகைமை

என்பன ஷாபிமரிக்கார் அன்று பிரேரித்த தீர்மானங்களுட் சில. எஸ்.எல். எம். ஹாஷிம் ஷாபியின் இத்தீர்மானத்தை வழிமொழிந்தார். (Az- Zahira, 1949:46)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. மாநாடு பாக்கிஸ்தானியரான டாக்டர் மஹ்மூத் ஹுஸனின் தலைமையில் 28.06.1959இல் நிகழ்த்திய 'இலங்கை முஸ்லிம்களின் பாடவிதானத்தில் மொழி' என்ற தலைப்பிலான கருத்தரங்கும் இதனுடன் இணைத்துப் பார்க்கப்படவேண்டிய முக்கியத்துவமுடையது. அஸீஸின் கவனம் இவ்விடயத்தில் சற்று அதிகமாக இருந்தது.

பல முக்கிய கல்விச் சீர்திருத்தங்கள் 1960களில் முன்னெடுக்கப்பட்டன. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் இல.05,1960, உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் (குறைநிரப்பு ஏற்பாடுகள்) சட்டம் இல.08,1961 என்பன பாராளுமன்றத்தில் நிறைவேறின. கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி உட்பட பல தனியார் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டன. 1961 ஏப்ரலில் நிகழ்ந்த சிரேட்ட கல்வி அதிகாரிகளின் பண்டாரவளை மாநாட்டின் பின் கல்வி நிருவாகப் பரவலாக்கம் நிகழத்தொடங்கியது. தேசியக் கல்வி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை 1961இலும், இறுதி அறிக்கை 1962இலும் வெளிவந்தன. தொழிற்கல்வி ஆணைக் குழுவினதும், பல்கலைக்கழக ஆணைக்குழுவினதும் அறிக்கைகளும் 1963இல் வெளிவந்தன. இந்நிலையில் 10.12.1963இல் நிகழ்ந்த அகில

இலங்கை முஸ்லிம் லீக்கின் செயற்குழுக் கூட்டத்தில் முஸ்லிம் பாடசாலை, முஸ்லிம் ஆசிரியர், முஸ்லிம் தலைமை ஆசிரியர்கள், மௌலவி ஆசிரியர்கள் பற்றியெல்லாம் பல பிரச்சினைகள் எழுந்தன. முஸ்லிம் மாணவரின் கல்விமொழி பற்றி அப்போது கருத்து முரண்பாடுகள் நிலவின. பெற்றோர் சிங்களத்தை ஆதரிக்க ஆசிரியர்கள் அதை எதிர்த்தனர். தமிழ்ப் பிரதேச முஸ்லிம் அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் தாய்மொழிக் கல்வியை (தமிழை) ஆதரிக்க, தென்னிலங்கை, மலையக முஸ்லிம் அரசியல் தலைமைகள் சிங்களத்தை முஸ்லிம்கள் கல்வி மொழியாகக் கொள்ள வேண்டுமென்ற கொள்கையை இறுகப் பற்றி நின்றனர். எனவே தான், சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்கும் மாநாடொன்றின் தேவை உணரப்பட்டது. முஸ்லிம் கல்விப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை எட்ட பிரதிநிதிகளின் மாநாடொன்றை ஏற்பாடு செய்யுமாறு தலைவர் டாக்டர் எம்.எஸ்.எம். கலீல் அபிப்பிராயம் தெரிவித்தார். முஸ்லிம்லீக்கின் கல்வி விவகாரத்துக்குப் பொறுப்பான செயற்குழுவின் தலைவராக 01.01.1962இலிருந்து செயற்பட்டுக்கொண்டிருந்த எஸ்.எல். எம். ஷாபிமரிக்காரிடம் அம் மாநாட்டை ஏற்பாடு செய்யும் பொறுப்பு விடப் பட்டது. தேசிய கல்வி முறைமைக்கான முன்மொழிவுகள் - 1964 (The proposals for a National System of Education-1964) அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டதும் சமூகத்தின் கல்வி விடயமாக முஸ்லிம் லீக்கின் கரிசனை அதிகரித்தது. ஷாபிமரிக்காரும் துரிதமாகச் செயற்படத் தொடங்கினார்.

> "கல்வி மகாநாட்டின் சுறுசுறுப்பான இயக்கத்திற்கு 1964ஆம் ஆண்டில் வெளிவந்த தேசிய அடிப்படையிலான கல்வித் திட்டத்திற்குரிய ஆலோசனைகள் எனும் கல்வித் திட்ட அறிக்கை (வெள்ளை அறிக்கை) ஓர் உந்து சக்தியாக அமைந்ததெனலாம். இவ்வறிக்கையில் கூறப்பட்ட பாரிய மாற்றங்களுக்கான ஆலோசனைகளை முஸ்லிம் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து தகுந்த நடவடிக்கைகளைக் கல்வி மகாநாடு மேற்கொண்டது" (கமால்தீன் எஸ்.எம்., 1989:3)

என்று கமால்தீனும் 'முஸ்லிம் கல்விப் பணியில் கால் நூற்றாண்டு' என்ற தனது கட்டுரையில் எழுதி இதனை ஊர்ஜிதம் செய்தார். முஸ்லிம் கல்வி மாநாட்டின் தோற்றத்திற்கு உடனடிக் காரணமாக இவ் வெள்ளையறிக்கையைக் கொள்கிறார் கமால்தீன். முஸ்லிம் லீக்கின் கல்வி விவகாரத்திற்கான செயற்குழுவின் ஏற்பாட்டில் கூட்டப்பட்ட மாவட்ட, பிரதேச மட்டப் பிரதிநிதி களின் ஆரம்ப ஆலோசனைக் கூட்டம் 31.05.1964இல் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. கல்வி அமைச்சர் பதியுத்தீன்

மஹ்மூத் இவ்வாரம்ப ஆலோசனைக் கூட்டத்தின் பிரதம அதிதியாகவும் பேச்சாள ராகவும் கலந்து கொண்டார். சுயாதீன அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டை ஏற்படுத்தவும் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகளை அடையாளம் காணவும் ஒரு விசேட குழுவும் இக்கூட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. அவ்விசேட குழு அடிக்கடி கூடி 84 முஸ்லிம் கல்விப் பிரச்சினைகளை அடையாளம் கண்டது. ஸாஹிறாக் கல்லூரியில் 1964 செப்டம்பர் 19,20ஆம் திகதிகளில் நிகழ்ந்த மாநாட்டின் கூட்டத்தில் சுயாதீன அ.இ.மு.க. மாநாட்டை ஏற்படுத்தும் தீர்மானம் ஏகமனதாக ஏற்கப்பட்டதுடன் முஸ்லிம் கல்விப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடி எடுக்கப்பட்ட 84 தீர்மானங் களும் ஏற்கப் பட்டன. எச்.எஸ்.இஸ்மாயிலின் தலைமையில் கொழும்பு ஸாஹிறாவில் இம்மாநாடு நடைபெற்றது. சுகவீனம் காரணமாக வரமுடியாமற்போன கல்வி அமைச்சர் பி.பி.ஜி. கலுகல்லயின் சார்பில் அன்றைய கல்விப் பணிப்பாளர் ஈ.எச்.டி. அல்விஸ் மாநாட்டைத் தொடக்கி வைத்தார். சுகாதார அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத், ஏ. ரத்நாயக்க(பா.உ.), எஸ்.ஜே.வி. செல்வநாயகம்(பா.உ.) ஆகியோரும் உரை நிகழ்த்தினர். டாக்டர். எம்.ஸி.எம். கலீலின் செய்தியும் படிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதுவரை அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் ஓர் அங்கமாக இயங்கி வந்த கல்வி நிறைவேற்றுச்சபை சுயாதீனமான நிரந்தர அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடாக இயங்கத் தொடங்கியது.



அ.இ.மு.க. மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு வருகை தந்த அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூதை ஷாபிமரிக்கார் அழைத்து வருகிறார்.



சபாநாயகர் எச்.எஸ்.இஸ்மாயில் தலைமையில் நிகழ்ந்த அ.இ.மு.க. மாநாட்டு அங்குரார்ப்பண நிகழ்வில் அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் உரை நிகழ்த்துகிறார். ஏ.எல்.எம் ஹாஷிம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. நாகநாதன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் அங்குரார்ப்பண வைபமாக அமைந்த இம்மாநாடு பற்றி, தினகரன் 1964 செப்ரெம்பர் 19ஆம் 20ஆம் திகதிகளில் தலைப்புச் செய்திகள் வெளியிட்டு, மாநாட்டின் தொடக்க நிகழ்வை மகிமைப்படுத்தியது. முஸ்லிம் கல்வி மாநாட்டின் முன்னுள்ள பொறுப்புகளைச் சுட்டிக்காட்டும் நோக்கில் ஏ.எச்.எம். அஸ்வர் எழுதிய கட்டுரையொன்றும் 19.09.1964ஆம் திகதிய தினகரனில் பிரசுரமாகி யிருந்தது. மாநாடு எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

"முஸ்லிம் சமூகத்தின் கல்வி அபிவிருத்தியில் முக்கியமான கட்டத்திலே இம்மாநாடு நடைபெறுகிறது. கல்வி விஷயங்களில் முஸ்லிம் சமூகம் சிரத்தை எடுப்பதற்குக் கடமைப்பட்டுள்ளது" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., 1964:2)

என்று ஷாபிமரிக்கார் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

"இம்மாநாடு முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இம் மாநாட்டின் ஆலோசனைக்கெடுக்கப்படும் விஷயங்கள் முஸ்லிம் கல்வியுடன் பெருமளவில் சம்பந்தப்பட்டுள்ளன. சலக முஸ்லிம் பாடசாலைகளிலும் சமயம் போதிக்கப்பட வேண்டியதுபற்றி நாம் உணர்ந்துள்ளோம். அரசாங்கம் முந்திக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் முஸ்லிம்களுக்கென கலாசாரப் பல்கலைக்கழகமொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பார்களென நம்புகிறோம்" (இஸ்மாயில் எச்.எஸ்., தினகரன் ஞாயிறு வெளியீடு 20.09.1964: 1)

என்று மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய எச்.எஸ். இஸ்மாயில் குறிப்பிட்டார்.

"1956ஆம் ஆண்டிற்குப் பின் முஸ்லிம்களின் கல்வி பல வகையில் கவனிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் ஆசிரியர்களினதும், பாடசாலைகளினதும் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. வறுமையையும் அறியாமையையும் ஒழிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். தேசியக் கல்வித்திட்டமொன்றைத் தாபிப்பதற்கே பாடசாலைகளை எடுத்தோம். முஸ்லிம்கள் இலங்கையில் பல காலங்களாக வாழ்ந்துவருகின்றார்கள். அரசாங்கம் எமக்குக் கொடுக்கவேண்டிய பங்கைக் கொடுக்கவேண்டும். நாம் கேட்கவேண்டியதைப் பயப்படாமல் கேட்கவேண்டும். தேசியக் கொள்கைக்கு விரோதமாக எம்மால் தீர்மானிக்க முடியாது. அவ்வாறு செய்தோமானால் பெரும்பான்மையோரின் கோபத்தைப் பெறுவோம். நாம் கேட்பதை நல்லமுறையில் தேச நலனுக்கு அடங்கிய முறையில் கேட்க வேண்டும்" (பதியுத்தீன் மஹ்மூத், தினகரன் ஞாயிறு வெளியீடு 20.09.1964: 1)

என்று சுகாதார அமைச்சராகவிருந்த பதியுத்தீன் மஹ்முத் அம்மாநாட்டில் தெரிவித்தார்.

"கல்வியில் இன, மத அடிப்படையில் எவ்வித பாரபட்சமும் காட்டமாட்டோம். கல்வியில் சிறுபான்மையோர் பிரச்சினையென்பதேயில்லை. கல்விபெறுவது இந் நாட்டில் வாழும் சகலரினதும் உரிமை... 1956ஆம் ஆண்டிற்குப் பின் முஸ்லிம் கல்வியின் நலனைக் கருதி பல நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்" (தினகரன் ஞாயிறு வெளியீடு 20.09.1964:2)

என்று வித்தியாதிபதி அல்விஸ் வாசித்த கல்வி அமைச்சர் பீ.பீ. ஜி. கலுகல்லயின் செய்தி தெரிவித்தது. "எமது மத, கலாசாரத் தனித் தன்மையைப் பாதுகாப்பதுடன் நாட்டின் நலனுக்கும் அபிவிருத்திக்கும் தேவையானவாறு நாம் உதவிபுரியத் தயாராகி எமக்குரிய பங்கையும் பெற விரும்புகிறோம்" என்று ஏ.எல்.எம்.ஹாஷிம் வாசித்த டாக்டர் எம்.

ஸி.எம். கலீலின் செய்தி குறிப்பிட்டது. "பெரும்பான்மைச் சமூகத்தினர் முஸ்லிம் கல்வியில் அக்கறை கொண்டுள்ளனர்" என்று வத்தேகம பாளுமன்ற உறுப்பினர் ஏ. ரத்நாயக்க குறிப்பிட்டார். இவ் வங்குரார்ப்பண வைபத்தில் உரையாற்றிய தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே. வி. செல்வநாயகம்,

> "முஸ்லிம்கள் தமது முஸ்லிம் கல்வி அடிப்படையில் வளரவேண்டும் என்பது எமது கட்சியின் கொள்கையாகும். உங்களின் அபிலாஷைக்கு நாம் எப்போதும் உதவியளிப்போம். சில காலங்களுக்கு முன்பு முஸ்லிம்கள் கல்வியைப் பொருட்படுத்தாததனால் பெரும் நஷ்டத்தையடைந்தனர். இன்று முஸ்லிம்களின் மத்தியில் கல்வி பெருமிடத்தைப் பெறுகிறது. முஸ்லிம்கள் பெருமளவில் தமிழ்க் கல்வியை வளரச் செய்திருக்கிறார்கள். அதனால் தமிழ்ப்பாஷை வளர்வதற்கு நீங்கள் ஆதரவாயிருந்திருக்கிறீர்கள். விஞ்ஞானக் கல்வியில் நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஒரு சமுதாயத்தின் முழு வளர்ச்சிக்கு தனிப் பிரதேசம் இருக்கவேண்டும். இவ் விஷயத்தில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் வித்தியாசம் உண்டு. தமிழர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் பிரதேசவாசிகளாக இருக்கின்றார்கள். ஆனால் முஸ்லிம்கள் இலங்கையில் எங்கும் சிதறிவாழ்கின்றனர். நீங்கள் எல்லோரும் தனியிடத்திலே வாழ்ந்தீர்களென்றால் பலம் வாய்ந்தவர்களாக இருப்பீர்கள். அரசியல், கல்வி, சமூகத் துறைகளில் எதைத் தேடுகிறீர்களோ அதை அடைவீர்கள்" (செல்வநாயகம் எஸ்.ஜே.வி., தினகரன் வார வெளியீடு 20.09.1964:2)

என்று கூறினார். முஸ்லிம்களின் சிதறிவாழும் தன்மை அவர்களின் கல்வியில் தாக்கம் ஏற்படுத்துகின்றதென்ற உண்மையை அவர் அங்கு சொன்னார். இரு நாட்கள் நடைபெற்ற அம்மாநாட்டில் எடுக்கப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

- விவசாயக் கல்வியை வளரச் செய்யுமுகமாக விவசாயக் கல்லூரி களையும் வேறு தாபனங்களையும் ஏற்பாடு செய்யும் போது முஸ்லிம் பிரதேசங்களின் தேவைகளையும் கவனத்தில் கொள்வதோடு, அப்படியான கல்லூரிகளும் பொருத்தமான இடங்களில் நிறுவப்பட வேண்டும்.
- முஸ்லிம்களுக்கு வர்த்தகக் கல்வி முக்கியமாகையால் முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள சகல மகாவித்தியாலயங்களிலும் தகைமைபெற்ற வர்த்தக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதுடன் வர்த்தகக் கல்வி படிப்பதற் கான சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட வேண்டும்.
- தற்போதுள்ள எந்தவொரு அகில இலங்கைக் கல்லூரியையோ அல்லது மகாவித்தியாலயத்தையோ அதற்கென மாற்றாமல், 1961-

1962ஆம் ஆண்டின் சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் வாக்குறுதி அளித்ததுபோல் ஒரு கலாசாரப் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும்.

- பாடசாலைகளின் தேவைக்கேற்ப ஒவ்வொரு பாடசாலையிலும் தகைமைபெற்ற விஞ்ஞான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
- க.பொ.த. (சாதாரண) வகுப்புகளிலும், க.பொ.த. (உயர்தர) வகுப்பு களிலும் விஞ்ஞான பாடங்கள் படிப்பிப்பதற்காக எல்லா முஸ்லிம் மகாவித்தியாலயங்களிலும் சகல வசதிகளையும் கொண்ட விஞ்ஞான ஆய்வு கூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மதத்திற்கும் சம்பந்தப்பட்ட பாடத்திட்டங்கள் பற்றியும், பரீட்சைகள் பற்றியும் வித்தியாதிபதிக்கு ஆலோசனை கூறுவதற்கு வெவ்வேறு ஆலோசனைக் குழுக்கள் இருக்கவேண்டும்.
- அரசாங்க சேவை, பல்கலைக்கழகப் பிரவேசம், ஏனைய கல்வித் தாபனங்களுக்கான பிரவேசங்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களுக்கு விகிதாசாரப்படி 80:12:8 ஆகவிருத்தல் வேண்டும்.
- ஆசிரியர்களை அடிக்கடி இடமாற்றம் செய்வதனால் பாடசாலைகளின் சுமுகமான வேலைமுறைக்குக் கடும் பங்கம் விளைவதால் இப்படியான இடமாற்ற முறை மாற்றப்படவேண்டும்.
- கல்விப் பணியில் ஈடுபடும் சகலரையும் ஒன்று சேர்க்கும் ஒரு கல்விச் சேவை ஏற்படுத்தப்படவேண்டும்.
- சகல பயிற்சிக் கலாசாலைகளிலுமுள்ள முஸ்லிம் மாணவர்களுக்கு மார்க்கப் போதனை (இஸ்லாம்) அளித்தல் வேண்டும்.

என்பன அன்றைய மாநாடு நிறைவேற்றிய முக்கிய தீர்மானங்கள். (தகவல்:தினகரன்-21.09.1964:1) இம்மாநாட்டில் போதனாமொழி பற்றிக் கலந்துரையாடப்பட்டபோதும் தலைவர் எச்.எஸ்.இஸ்மாயிலின் நெறிவுறுத்தலின் பேரில் அவ்விடயம் வாக்கெடுப்பிற்கு விடப்படவில்லை. கொழும்பு உதவி மேயர் ஜாபிர் ஏ.காதரின் நன்றியுரையுடன் மாநாட்டின் நிகழ்வுகள் நிறைவுற்றன. துணைவித்தியாதிபதி துரைசிங்கமும் மாநாட்டில் பிரசன்னமாக விருந்தார்.

இச்சுயாதீன நிரந்தர அ.இ.மு.க. மாநாட்டின் முதலாவது பொதுக்கூட்டம் எச்.எஸ். இஸ்மாயிலின் தலைமையில் 25.10.1964இல் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்றபோது யாப்பும் ஏற்கப்பட்டு செயற்குழு உறுப்பினர்



மாநாட்டுச் செயற்குழு உறுப்பினர்கள் -1968

களாகப் பின்வருவோரும் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: எச்.எஸ். இஸ்மாயில், உப தலைவர்: ஜாபிர் ஏ காதர், நிருவாக சபைத் தலைவர்: எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், நிருவாக சபைத் துணைத் தலைவர்: டாக்டர். எம்.எச்.எம். அப்துல் காதர், நிருவாக சபையின் உதவித் தலைவர்கள்: ஐ.எல்.எம். மஷூர், ஏ. செய்யிது அஹமது, ரி.வி.எம். நூன், பொதுச் செயலாளர்: ரி.ஏ. ஜாயா, பொருளாளர்: முஹம்மத் செய்ன், உதவிச் செயலாளர்கள்: எம்.எச்.ஏ. வாஹித், எம். உவைஸ் அஹமட், உதவிப் பொருளாளர்: எஸ்.எம்.ஏ. ஹஸன் ஆகியோர். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருவர் வீதம் 24 மாவட்டங்களுக்கும் 48 பேரும், பொதுக் கூட்டத்திற்குச் சமுகமளித்த 20பேரும் இம்மாநாட்டின் அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அ.இ.மு.க. மாநாட்டுச் செயற்குழுவின் முதலாவது தலைவராக எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் தனது பணியைத் தொடங்கினார். இதுவே, இக் கல்வி மாநாட்டின் வரலாற்றுப் பின்புலம்; மாநாடு பயணம் செய்த வரலாற்றுப் பாதை.

இம்முதலாவது பொதுக் கூட்டம் சில முக்கிய தீர்மானங்களை எடுத்தது:

- போதனாமொழி எதுவாக இருந்த போதும் (சிங்களம்/தமிழ்) எல்லா முஸ்லிம் பாடசாலைகளிலும் 3ஆம் தரத்தில் இருந்து ஆங்கிலம் கட்டாய பாடமாக இருத்தல் வேண்டும். முஸ்லிம் பாடசாலைகளில் தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட வகுப்புகளில் 3ஆம் தரத்திலிருந்து, முடியுமாயின் 2ஆம் தரத்திலிருந்து சிங்களம் மேலதிக கட்டாய பாடமாக இருத்தல் வேண்டும். முஸ்லிம் பாடசாலைகளில் சிங்களத்தைப் போதனாமொழியாகக் கொண்ட வகுப்புகளில் விரும்பினால் மேலதிகமாக தமிழ்மொழி 3ஆம் தரத்திலிருந்து கற்பிக்கப்படலாம்.
- ஒவ்வொரு வருடமும் சிறப்பாசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு (சிங்களம், தமிழ்) போதியளவு முஸ்லிம்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.
- பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிபெறும் சகல முஸ்லிம் பயிலுனர் ஆசிரியர்களுக்கும் சிங்களம் கற்பிக்கப்படவேண்டும்.
- ஒவ்வொரு வருடமும் சிங்கள மொழிமூல ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு (ஆண், பெண் இரண்டிற்கும்) போதியளவு முஸ்லிம்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

- முஸ்லிம் பெண்களும் சிங்கள மொழிமூலம் பயிற்சிபெற வாய்ப்பளிக்கு முகமாக அளுத்கம முஸ்லிம் ஆசிரியைகள் பயிற்சிக் கல்லூரியில் சிங்களமொழி மூல போதனை ஆரம்பிக்கப்படவேண்டும்.
- முழுச் சம்பளத்துடனான 'இத்தா'லீவு முஸ்லிம் ஆசிரியைகளுக்கு வழங்கப்படவேண்டும்.
- முஸ்லிம் ஆசிரியர் சங்கங்கள் முஸ்லிம் ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவையைத் தயாரிக்க வேண்டும்.
- கல்விச் சேவை ஏற்படுத்தப்படவேண்டும்.

என்பன அன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் (தினகரன்-27.10.1964). முஸ்லிம்களின் போதனாமொழிபற்றித் தீர்மானம் செய்வது சம்பந்தமாக அங்குரார்ப்பண மகாநாட்டில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை நினைவூட்டி அது பற்றி எத்தீர்மானங்களையும் எடுப்பதிலிருந்து தலைவர் எச்.எஸ். இஸ்மாயில் மீண்டும் தவிர்த்துக் கொண்டார். அதன் மூலம் ஏற்படவிருந்த சங்கடமான நிலையிலிருந்து மாநாட்டைப் பாதுகாத்துக் கொண்டார்.

> "இக் கல்விமாநாட்டின் தோற்றத்திற்கு வழியமைத்துக் கொடுத்தது அகில இலங்கை முஸ்லிம் லீக் ஆகும். முஸ்லிம் கல்வி சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண விளைந்த முஸ்லிம் லீக் முஸ்லிம்களிடையே கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டது. அதன் நிறைவேற்று அதிகாரக் குழு முஸ்லிம் கல்வி சம்பந்தமான புள்ளி விபரங்களை நாடளாவிய வகையில் திரட்டி குறை நிறைகளை மக்களுக் குணர்த்திப் பொருத்தமான தீர்வுகாணும் ஆர்வத்தைத் தூண்டியது. இதன் விளைவாகவே அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு தான் வரித்துக் கொண்ட நோக்கங்களில் பெருமளவு வெற்றி காணக்கூடியதாயிருந்தது" (கமால்தீன் எஸ்.எம்., தினகரன் வாரமஞ்சரி வெளியீடு 29.10.1989:3)

என்று அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தோற்றத்தில் முஸ்லிம் லீக்கின் பங்களிப்பை கமால்தீன் குறிப்பிட்டுச் சொன்னார். இந்திய முஸ்லிம்களுக்கு அளவற்ற கல்விப் பணி செய்த சேர் செய்யது அஹமத்கானின் சிந்தனைக்கும் அவரின் அலிகார் இயக்கத்துக்கும் இம் மாநாட்டுக்கும் சம்பந்தமிருக்கிறது. சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஒறாபி பாஷா, ஜ.எல்.எம். அப்துல் அஸீஸ் போன்ற இலங்கை முஸ்லிம்கல்வி மறுமலர்ச்சி இயக்கத்தினரின் சிந்தனை ஓட்டம் இம்மாநாட்டின் தோற்றத்துக்குப் பங்களிப்புச் செய்திருக்கிறது. ரி.பி. ஜாயா, டாக்டர் எம்.ஸி.எம். கலீல், எச்.எஸ். இஸ்மாயில், எ.எம்.எ. அஸீஸ், பதியுத்தீன் மஹ்மூத் போன்றோரின் பங்களிப்பும் இம்மாநாட்டுக்கு எப்போதும் இருந்திருக்கிறது. எச்.எஸ்.

இஸ்மாயில் (1964-65), ஏ.எச்.எல்.ஏ. சலீம்(1965-66), ஜாபிர் ஏ. காதர் (1966-69), நீதிபதி எம்.எம். அப்துல் காதர் (1969-1971), டாக்டர் எம்.எச். எம். அப்துல் காதர் (1971), கலாநிதி எம்.எம். உவைஸ் போன்றவர்கள் இம் மாநாட்டின் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். ரி.ஏ. ஜாயாவும் அவரின் பின் ரி.எம். அப்பாஸும் ஷாபிமரிக்காரின் காலத்தில் செயலாளர்களாகப் பணிசெய்திருக்கின்றனர். இவ்வரலாற்றுப் பெருமைமிக்க அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாக சபைத் தலைவராக 25.10.1964இலிருந்து மரணபரியந்தம் எஸ். எல்.எம். ஷாபிமரிக்காரும் பதவி வகித்து இலங்கை முஸ்லிம்களின் கல்விக்கு அளப்பெரும் பணி செய்திருக்கிறார். ஷாபிமரிக்காரின் சமூக உணர்வும், சிந்தனையும் இம்மாநாட்டினூடு சமூகத்துக்கும் நாட்டுக்கும் நன்மைகள் விளைத்திருக்கின்றன. ஷாபிமரிக்கார் செய்த அ.இ.மு.க. மாநாட்டின் கல்விப் பணியின் வரலாற்று முக்கியத்துவம் இது. இம்மாநாட்டின் இணைப் பொதுச் செயலாளர்களாக ஜாவித் யூசுபும் நானும் 26.06.1993 இலிருந்து செயற்பட்டோம்.



All Ceylon Muslim Educational Conference

அ.இ.மு.க. மாநாட்டின் உதவிச் செயலாளராக நியமித்து ஷாபிமரிக்கார் எனக்கு அனுப்பிவைத்த நியமனக் கடிதம்

"முஸ்லிம் கல்வி மீளெழுச்சிக்கான தேவை அவசியப்படுத்தப்பட்டபோது முஸ்லிம் லீக்கின் தலைவராகவிருந்த ரி.பி. ஜாயா கல்வி நிறைவேற்றுச் சபை (Executive Committee on Education) ஒன்றை ஏற்படுத்துமாறு முன்மொழிந்தார். அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் செயற்குழுக் கூட்டம் டாக்டர் எம்.ஸி.எம். கலீலின் தலைமையில் 10.12.1963இல் நடைபெற்ற போது முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகளையிட்டு ஆராய்வதற்கு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சங்கங்களை அழைத்து, கலந்து பேசி, தீர்மானங்களை எடுக்க வேண்டுமென அவர் கருத்துத் தெரிவித்தார். இதனைச் செய்யும் பொறுப்பு முஸ்லிம் லீக்கின் கல்வி நிறைவேற்றுச் சபைத் தலைவராகவிருந்த ஷாபிமரிக்காரிடம் ஒப்படைக்கப்பட்டது. இலங்கைத் தீவில் செயற்பட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் சங்கங்கள், அரபு ஆசிரியர், மௌலவி ஆசிரியர் சங்கங்களையெல்லாம் அழைத்து 1963இல் ஷாபிமரிக்கார் கலந்துரையாடினார். இவ்விடயத்தில் ஷாபி பிரதான பங்கு வகித்தார். முஸ்லிம் லீக்கின் கல்வி நிறைவேற்றுச் சபை அரசியல் சார்புத் தோற்றத்தைக் கொண்டிருந்ததால் அது 'அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு'என அழைக்கப்பட வேண்டுமென்று ஷாபிமரிக்கார் கருதினார். இது சம்பந்தமான முஸ்லிம் லீக் கல்வி நிறைவேற்றுக் குழுவின் ஆரம்பக் கலந்துரையாடல் கௌரவ எச்.எஸ். இஸ்மாயில் தலைமையில் 31.05.1964இல் நிகழ்ந்தது. மாவட்டங்களிலிருந்து பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். அரசியல் சார்பற்ற சுயாதீன கல்வி மாநாடொன்றின் தேவையை இதில் கலந்து கொண்ட அனைவரும் ஏற்றனர். 1964 செப்டம்பரில் சுயாதீன கல்வி மாநாட்டை

நடத்துவதெனவும் தீர்மானம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் தன் பணியை ஆரம்பித்தார்." (Hashim, A.L.M. 2007: 28 - 29)

என்று முஸ்லிம்லீக்கிலிருந்து, முஸ்லிம் லீக் கல்வி நிறைவேற்றுச் சபையும், அதிலிருந்து, சுயாதீன அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடும் தோற்றம் பெற்ற மாற்றை, முஸ்லிம் லீக் பிரமுகர் பரிஸ்டர் ஏ.எல். எம். ஹாஷிம், ஷாபிமரிக்கார் நினைவு நிகழ்வை ஒட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் (2007) குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

8.2 கல்விச் செயற்பாடுகள்

"The primary goal of this conference is to ensure that the education provided in Sri Lanka is blended with cherished values practiced in the religious and cultural environment on one side and to ensure Educational Provision to Muslim Schools to have equal share of opportunities for the Muslim Children on the other side" (Shafie Marikar, 2005:17)

சமய-கலாசாரப் பின்னணியில் கல்வி, முஸ்லிம் மாணவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு என்பன அ.இ.மு.க.மாநாட்டின் இலக்குகள். முஸ்லிம் கல்விமான்கள், நிருவாகிகள், மக்கள் பிரதிநிதிகள், இயக்கங்களுடன் சேர்ந்து அவ்விலக்குகளை அடையும் பயணத்தை ஷாபிமரிக்கார் மிகச் சாதுரியமாக மேற்கொண்டார்.

"Having realized these two stupendous tasks which cannot be performed satisfactorily without help of the outside agencies, the conference for past 40 years, has been keeping in touch with other organizations and Muslim MPs, with their help, it could realize some of its cherished goals" (Shafie Marikar S.L.M., 2005:17)

என்று ஷாபி கூறியிருப்பது கவனத்துக்குரியது.

1964 செப்டம்பர் 19, 20ஆம் திகதிகளில் நடைபெற்ற அ.இ.மு.க. மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் டாக்டர் எம்.சி.எம். கலீலின் தலைமையில் செயற்குழு உறுப்பினர்கள் அப்போதைய கல்வி அமைச்சர் ஐ.எம்.ஆர்.ஏ. ஈரிய கொல்லையை 05.06.1965இல் சந்தித்து அத்தீர்மானங்களை அவரின் அறிகைக்கும் செயற்படுத்துகைக்குமாகக் கையளித்துக் கலந்துரையாடினர். எம்.எச்.எம். நெய்னாமரிக்கார், பளீல் ஏ கபூர், பாக்கீர் மாக்கார், எம்.எஸ். காரியப்பர், ஏ. லத்தீப் சின்னலெவ்வை முதலான பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 44பேர் இத்தூதுக் குழுவில் இடம்பெற்றனர். டி.எம். ஹெட்டிஆராய்ச்சி (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), எம்.பி. நூர்தீன் (உதவிக் கல்விப் பணிப்பாளர்), வி. துரைசிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்), டபிள்யு.ஏ.ஜே.டபிள்யு.

ஜயதிலக (கல்வி அதிகாரி) ஏ.சந்திர சேகரம்பிள்ளை (மாவட்டக் கல்விப் பரிசோதகர்) ஆகியோர் அமைச்சருடன் பிரசன்னமாகியிருந்தனர். ஷாபிமரிக்காரின் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு செயற்படத் தொடங்கிய பின் நிகழ்ந்த கல்வி அமைச்சருடனான முதலாவது சந்திப்பு என்ற வகையில் இது முக்கியத்துவம் வாய்ந்தது. அமைச்சர் ஈரியகொல்லை தூதுக்குழுவினருடன் மிகவும் தாராளமாக நடந்துகொண்டார். பின்வரும் தீர்மானங்கள் இச் சந்திப்பில் எட்டப்பட்டன:

- முஸ்லிம் மாணவர்கள் பெரும்பான்மையினராகக் கற்கும் பாடசாலைகள் 'முஸ்லிம் பாடசாலைகள்' என்ற தனித்துவ அடையாளத்துடன் தொடர்ந்தும் இயங்குவதை அமைச்சர் ஏற்றுக் கொண்டார். ஏற்கனவே டபிள்யு. தஹநாயக்க கல்வி அமைச்சராகவிருந்தபோது, 1956 ஜூன் 25இல் 50% க்கு அதிகமான முஸ்லிம் பிள்ளைகள் கற்கும் அரசினர் பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாகவும் அவற்றின் ஆசிரிய வெற்றிடங்கள் முஸ்லிம்களைக் கொண்டே நிரப்பப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
- பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனி மகாவித்தியாலயங்கள் இருக்கவேண்டும் என்பதை கொள்கையளவில் ஏற்பது.
- பல மொழிகளைக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் தொடக்கப்பள்ளிகளில் செய்யப்படுதல் வேண்டும். அரபுமொழி கற்பிப்பதற்கும் இது ஏற்படையதாதல் வேண்டும்.
- ஜீ.ஸி.ஈ. (உயர்) வகுப்புகளில் இஸ்லாமிய நாகரிகம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதை அங்கீகரித்தல்.
- எல்லா வகுப்புகளுக்குமான இஸ்லாம் பாடத்துக்கான பாடத்திட்டத்தை ஒழுங்காக அமைத்துக் கொள்ளல்.
- அரபு,இஸ்லாம் கற்பிக்க மௌலவி ஆசிரியர்கள் தொடர்ந்தும் இருப்பர். ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையில் நியமனங்கள் செய்யப்படலாம். புது நியமனங்கள் பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும்.
- மௌலவிகளுக்கு மீள்பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும்.
- தனியார் சமய சாஸ்திர நிறுவனங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டதுபோல அங்கீகாரம் வழங்குதல்
- முஸ்லிம் கலாசாரப் பல்கலைக்கழகம் அமைத்தல். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரபு, இஸ்லாமிய நாகரிகத்துறை ஒன்றை ஏற்படுத்துதல் தொடர்பில் விரைவில் பரிசீலிக்கப்படும்.

- ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நியமனங்கள் தகுதி அடிப்படையில் வழங்கப்படும்.
- முஸ்லிம் ஆசிரியைகளுக்கு முழுச் சம்பளத்துடனான 'இத்தா'லீவு வழங்கப்படுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.
- முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

என்ற 12 தீர்மானங்கள் இச் சந்திப்பில் எட்டப்பட்டமை மகாநாட்டுக்கும் ஷாபிமரிக்காரின் முயற்சிக்கும் கிடைத்த ஆரம்ப அங்கீகாரமாக அமைந்தது.

மாநாட்டின் முதலாவது பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு கல்வி அமைச்சர் ஈரியகொல்லைக்கு மாநாடு கையளித்த கோரிக்கைகளின் பிரதி 16.09.1965இல் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு பாக்கீர்மாக்காரினால் கொண்டுவரப்பட்டது. கல்வி அமைச்சருக்கு 12.09.1969இல் அனுப்பப்பட்ட கோரிக்கையின் பிரதியும் பாக்கீர் மாக்காரினால் பாராளுமன்றத்தில் 14.09.1969இல் சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்த கல்வி அமைச்சர் டபிள்யு.தஹநாயக்க 25.06.1956இல் செய்த, முஸ்லிம் கல்விப் பிரகடனம் என்று கூறத்தக்க பணிப்புரைகளையும், பாக்கீர் மாக்கார் 16.09.1965இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார். தஹநாயக்காவின் அக் கட்டளைகளின் பின்புலமாக இருந்தவர் பதியுத்தீன் மஹ்மூத் என்பது கவனத்திற்குரியது.

பதியுத்தீன் மஹ்முத் 1960 ஜூலையிலிருந்து கல்வி வானொலி அமைச்சராக ஏறக்குறைய 3½ வருடங்கள் பணி செய்துவிட்டு, சுகாதார அமைச்சரானபோது சுயாதீன அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு தோற்றம் பெற்றது. 1964இல் வெளிவந்த கல்வி வெள்ளையறிக்கை, முஸ்லிம்களின் கல்வி மொழி பற்றிய சர்ச்சை, பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக இல்லாமற் போனமை, தீர்க்கப்பட வேண்டிய பல கல்விப் பிரச்சினைகளுக்கு முஸ்லிம் சமூகம் முகம் கொடுக்க நேர்ந்தமை என்பனவெல்லாம் மகாநாட்டைத் தோற்றுவிக்கக் காரணங்களாயின. மகாநாட்டின் தொடக்க வைபவத்தில் பதியுத்தீன் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியிருந்தார். அவர் மீண்டும் 1970-77 வரை கல்வி அமைச்சராகவிருந்த போது மாநாட்டின் சுமை சற்றுக் குறைவடைந்திருந்தது. பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டமை, பாடத்திட்டமாற்றம், பல்கலைக்கழக மறுசீரமைப்பு, பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் மாற்றம் என்பனவெல்லாம் பதியுத்தீன் காலத்தில் நிகழ்ந்தவை. பதியுத்தீனும் ஷாபிமரைக்காரும் ஸாஹிறாக் கல்லூரியில் கற்றவர்கள்; ஜாயா கால மாணவர்கள்.

ஜாயாவினால் தாபிக்கப்பட்ட ஸாஹிறாவின் கிளைப் பாடசாலைகளான கம்பளையில் பதியுத்தீனும் அளுத்கமையில் ஷாபிமரிக்காரும் அதிபர்களாக விருந்தவர்கள்; அரசியலில் இரு துருவங்கள். பண்டாரநாயக்காவுடனான ஆரம்பத் தொடர்பை பதியுத்தீனுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததும் ஜாயாகால கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிதான். சமூக உணர்விலும் சமூகத்தின் கல்வி மேம்பாட்டிலும் இருவருமே அக்கறை யுள்ளவர்கள்.

> "கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் காலத்தில் முஸ்லிம் கல்வித் துறையிலான பல குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டன. முஸ்லிம் கல்வி மாநாட்டின் வேண்டுகோளின் மீது பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்" (கமால்தீன் எஸ்.எம். தினகரன் வாரமஞ்சரி வெளியீடு 29.10. 1989)

என்று எஸ்.எம். கமால்தீன் குறிப்பிட்டிருப்பது கல்வி மாநாட்டின் செயற்பாடுகளுக்கு பதியுத்தீன் மஹ்மூத் தடையாக இருக்கவில்லை என்ற இன்னொரு அர்த்தத்தையும் கொண்டுள்ளது.

8.3 இருபது ஆண்டுகள் நிறைவு

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு தனது 20ஆவது ஆண்டு நிறைவு விழாவை 25.10.1984 - 31.01.1985வரை கொண்டாடியபோது அதன் 20 வருட முஸ்லிம் கல்விப்பணி நினைகூரப்பட்டது. விஷேட அனுபந்தங்களுடன் தினகரன், டெய்லி நியூஸ் பத்திரிகைகள் 25.10.1984 இல் வெளிவந்தன. டாக்டர் எம்.ஸி.எம். கலீல், நீதி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரட்ண, பிரதமரின் சார்பில் அவரின் செயலாளர் கே.எச்.ஜே.விஜயதாஸ, வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத், அமைச்சர் எம்.ஏ. பாக்கீர் மாக்கார், உயர் கல்வி அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவருமான கலாநிதி எப்.எஸ்.ஸி.பி. கல்பகே, கல்வி அமைச்சின் செயலாளர் ஈ.எல். விஜேமான ஆகியோரெல்லாம் அ.இ.மு.க. மாநாட்டின் 20 வருடகால கல்விப்பணியைப் பாராட்டி வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

> "I am happy to learn that you are proposing to celebrate the twenty years of service to the country and the Muslim Community in the field of education. I congratulate the conference on the valuable service it has been rendering, particularly to the Muslim community for the last twenty years. I express my regret in not being able to render any assistance whatsoever to the conference, for the simple reason that the work is in the hands of able and experienced men" (Kaleel Dr. M.C.M., Daily News – 25.10.1984)

என்று அமைந்திருந்தது அப்போதைய முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம்.ஸி.எம். கலீல் அவர்களின் செய்தி.

> "The ACMEC has almost been the watchdog of the Educational affairs of the Muslim Community. They have never let slip a single occasion where the community's interest has to be safeguarded. The ACMEC has succeeded in gathering together all those interested in Muslim Education -Educationists, teachers, the Muslim public and the leaders under one banner. Today they meet round the table, discuss their educational problems and with unity of purpose take decisions and put forward their claims before the proper authorities" (Bakir Markar M.A., Daily News – 25.10.1984)

என்று அப்போது அமைச்சராகவிருந்த எம்.ஏ. பாக்கீர்மாக்கார் தனது ஆசிச் செய்தியில் தெரிவித்திருந்தார். பாக்கீர் மாக்கார் அவர்கள் முஸ்லிம் லீக்கின் மிக முக்கிய அங்கத்தவராகவிருந்தவர். முஸ்லிம் லீக் வாலிபர் சங்கத்தை நீண்டகாலம் வழிநடத்தியவர். முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர். மாநாட்டின் கூட்டங்களுக்கு தவறாமல் வருகை தந்தவர். ஷாபிமரிக்காரின் ஒன்றுவிட்ட சகோதரர்.

> "It (ACMEC) has played a dynamic role in linking Principals of Muslim schools, teachers, parents and community leaders in districts to ensure that there is qualitative improvement in the standard of education received by the members of the community with a view to enable the Muslims of Srilanka to take their place side by side with other communities for the general good of Srilanka. Since its inception, the conference has strenuously sought to ensure that Muslim children have not lost sight of the basic religious tenets of Islam and also that they were provided with facilities for the study of Arabic as an essential ingredient for their scriptural studies.It is this commitment to their religion, culture and traditions that have enabled the Muslim community to move forward within the diversity that marks the plural society that is in Srilanka. This is a valuable feature from which all other religious groups who form our national spectrum could learn with great advantage.
>
> In the field of general education, that is the primary task of our schools, the conference has consistently worked towards improvement of standards for the Muslim children who had suffered a severe handicap for various reasons over a long period of time, particularly over the last 4 centuries, when the only instruction available to them was the Madarasas provided through their own efforts and which were solely confined to religious instruction.
>
> The Muslims are today working towards an equalization of standards in general education, as equality of opportunity becomes available to them. As a result in the fields of literary and scientific knowledge, their children are proving equal

to the best in the Island. This is as it should be and it is heartening to see them taking their rightful place as distinguished citizens within the elite of our country and proving their worth.

They are thus, to the great tradition enjoined upon them by the founder of their faith who exhorted his followers to seek knowledge even to the furthest boundaries of the world.

My pleasant relations with the All Ceylon Muslim Educational Conference, even though for a brief period of time, was stimulating experience to me and I watch its progress with continuing interest wishing them at all times success in their dedicated task" (Nissanka Wijeratna, Daily News – 25.10.1984)

இது அன்றைய நீதி அமைச்சராகவிருந்த நிஸ்ஸங்க விஜேரத்னவின் செய்தி. நிஸ்ஸங்க விஜேரத்ன அவர்களை சாதாரண அரசியல்வாதியாக நான் பார்ப்பதில்லை. புலமைமிகு பெருந்தகை அவர். அதனால் அவரின் செய்தி கூறும் பொருளும் மிக்க கனதியானது. கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது.

"Over the past two decades I have been closely associated with work of the conference. Meaningful contributions have been made in the field of education, not only to the Muslim community but also for the nation as a whole.

The conference has served as a 'lighthouse' continuously reviewing, analyzing and assessing the motivation, the progress, and the shortfalls in the field of Muslim Education.

This role is deeply appreciated by the Muslim community in particular and by all those who are interested in Education in general" (Hameed A.C.S., Daily News – 25.10.1984)

என்று அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் அவர்கள் தனது செய்தியில் மாநாட்டின் பணிகளைக் குறித்துச் சொல்லி பெருமைப்படுத்தினார். இவர்களைவிட அப்போதைய பிரதம மந்திரியின் செயலாளர் கே.ஜே.விஜயதாஸ, கல்வி அமைச்சின் செயலாளராகவிருந்த ஈ.எல். விஜேமான்ன, உயர்கல்வி அமைச்சின் செயலாளராகவும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் தலைவராகவுமிருந்த கலாநிதி எப்.எஸ். ஸி.பி. கல்பகே ஆகியோரும் முஸ்லிம் கல்வி மாநாட்டின் கல்விப் பணிகளைப் பாராட்டி செய்திகள் அனுப்பியிருந்தனர். முஸ்லிம் கல்வி விடயத்தில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு பாக்கீர் மாக்கார் குறிப்பிட்டது போல், 'காவல்நாய்'ப் பாத்திரமேற்றுச் செயற்பட்டது. ஏ.ஸி.எஸ். ஹமீத்

சரியாகச் சொன்னதைப்போல், முஸ்லிம் கல்விக்கு ஒளிவிளக்காகவும் ஷாபிமரிக்காரின் தலைமையில் செயற்பட்டது.

8.4 வெள்ளி விழா நிகழ்வுகள்

அ.இ.மு.க. மாநாட்டு வெள்ளி விழா நிகழ்வுகளின் சம்பிரதாய பூர்வமான தொடக்க வைபவம் 1990 மார்ச் 10,11 ஆம் திகதிகளில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிக் கபூர்மண்டபத்தில் ஆரம்பமாயின. முதல் நாள் நிகழ்வுகள் 10.03.1990 காலை 9.00 மணிக்கு சபாநாயகர் எம்.எச். முஹம்மத் தலைமையில் நடைபெற்றன. கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார பிரதம அதிதியாகவும் தோட்டக்கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.எம். அபூசாலி, முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சர் எம்.ஜாபிர் ஏ.காதர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். ஏ. அஸீஸ், எம். ஹலீம் இஷாக் (பா.உ.), எம்.எச். எம்.அஷ்ர.ப் (பா.உ.) ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு பி.ப.1.30-5.00 மணி வரை நடைபெற்றது.

தென்மாகாண ஆளுனர் எம்.ஏ.பாக்கீர் மாக்கார் தலைமையில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் 11.03.1990 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாயின. வர்த்தக கப்பல் துறை அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அதிபர்களுக்கான கருத்தரங்கும் காலை 11.00 மணிக்கு இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது. அ.இ.மு.க. மாநாட்டின் உபதலைவர் எம்.எச்.ஆமித் நிறைவுரையும் கல்வியமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவுப் பணிப்பாளர் எம்.ஏ.காதர் முகைதீன் நன்றியுரையும் நிகழ்த்தினார்.

முஸ்லிம் கல்விமாநாடு 25.10.1989 - 30.03.1990வரை அதன் வெள்ளிவிழாவைக் கொண்டாடியது. 1964-1989 வரை மாநாடு செய்த கல்விப் பணிகளை, அம் மாநாடு ஏற்பாடு செய்திருந்த வெள்ளி விழா நிகழ்ச்சிகள் துலாம்பரமாகக் காட்டின. முஸ்லிம் நாடுகளில் சமயமும் அரபுக் கல்வியும் பற்றிய ஆய்வரங்கு, முஸ்லிம் பாடசாலை அதிபர்களின் மாநாடு, முஸ்லிம் பெண் கல்வி பற்றிய ஆய்வரங்குகளெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பிரச்சினைகள் ஆழமாக ஆராயப்பட்டன. அந்த வகையில் மாநாடு 25 வருடங்கள் செய்த கல்விப் பணிகளின் மீளாய்வு விழாவாக வெள்ளிவிழா நடந்துமுடிந்தது. வெள்ளி விழாவையொட்டி 'முஸ்லிம் கல்விப் பணியில் கால் நூற்றாண்டு' என்ற தலைப்பில் எஸ்.எம். கமால்தீன், 29.10.1989இல், தினகரன் வாரமஞ்சரியில் கட்டுரையொன்றையும் எழுதியிருந்தார்.

"கடந்த கால்நூற்றாண்டுக் காலத்தில் முஸ்லிம் கல்வி மாநாடு சமூகத்திற்கு அளப்பரிய பணியாற்றி வந்துள்ளது. இப் பணி கால்நூற்றாண்டளவினதாயினும் மிகவும் பாரிய விளைவுகளை உள்ளடக்கியதொன்றாகும். இலவசக் கல்வித் திட்டம், போதனாமொழிமாற்றம்,முஸ்லிம் பாடசாலைகளின் தனித்துவம், சமயநெறிப்போதனை முதலிய அடிப்படையான பல விடயங்கள் இக்காலப் பிரிவில் கல்விமான்களின்கவனத்தை ஈர்த்திருக்கின்றது. இவையனைத்திலும் கல்வி மாநாடு விழிப்போடும் கடமைப் பொறுப்போடும் செயலாற்றிச் சமூக நலனைப் பாதுகாத்து வந்துள்ளது. இத்தகு முயற்சியில் சமூகத்திலுள்ள கல்விமான்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக நலன்பேணும் பெரியார்கள் முதலானோரின் ஒத்துழைப்பையும் கல்விமாநாடு பெருமளவில் பெற்றுள்ளது... மாற்றங்களும் திருத்தங்களும் காலத்திற்குக் காலம் ஏற்பட்டு வந்தபோதெல்லாம் முஸ்லிம் கல்விமாநாடு தகுந்த அவதானத்தோடிருந்து முஸ்லிம் கல்வி நலன் காத்துவந்துள்ளது. இவ்வாறான விடயங்களில் மாநாடு தானே நேரடியாகவும் பாராளுமன்றத்திலுள்ள அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளின் மூலமும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. கல்வி சம்பந்தமான பிரச்சினைகளில் பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் கட்சிபேதமின்றி கல்வி மாநாட்டுடன் ஒத்துழைத்து வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்"

என்று அக்கட்டுரையில் கமால்தீன் எழுதிவைத்திருக்கின்றார். மாநாட்டின் 25 வருடப் பணிகளையும் அதன் செயற்பாட்டு முறைமைகளையும் கமால்தீன் அக் கட்டுரையில் சரியாக மதிப்பீடு செய்திருந்தார். மாநாட்டுடனும், தலைவர் ஷாபிமரைக்காருடனும் மிக நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தவர் கமால்தீன்.

- அரபு மொழிப் பயிற்சிக் கூடங்களை நாடளாவிய ரீதியில் நிறுவுதல்
- இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்று நூலொன்றை வெளியிடுதல்.
- இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலைபற்றிய மதிப்பீடொன்றைத் தயாரித்தல்.
- பள்ளிவாசல்கள், சனசமூகநிலையங்கள், முஸ்லிம் பாடசாலைகளில் நூல் நிலையங்களை நிறுவுதல்
- அரபு மொழியிலுள்ள இஸ்லாமிய சமயச் சொற்களுக்கு நேரான தமிழ், சிங்களச் சொற்கோவை ஒன்றைத் தயாரித்தல்

என்பன மாநாட்டு வெள்ளிவிழாவின் உத்தேசத் திட்டங்களுள் முக்கிய மானவையாக கமால்தீன் அடையாளப்படுத்திக் காட்டினார்.

அ.இ.மு.க. மாநாட்டின் 25 வருட முஸ்லிம் கல்விப் பணிபற்றிய கருத்தாடல் ஒன்று 22.10.1989 பிற்பகல் 8.30 மணிக்கு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பானது. எஸ்.எம்.கமால்தீனின் நெறியாள்கையில்

நடைபெற்ற அந்நிகழ்ச்சியில் நானும் பங்குகொண்டேன். அந்நிகழ்ச்சி பற்றிய தன்னுடைய மகிழ்ச்சியை அஞ்சல் அட்டையில் பதிவு செய்து அன்றைய தினமே ஷாபி எனக்கு அஞ்சல் செய்திருந்தார்.

8.5 மாநாட்டின் முப்பது ஆண்டுகள் நிறைவு

அ.இ.மு.க. மாநாடு தனது 30ஆவது ஆண்டு நிறைவை ஸாஹிறாக் கல்லூரிக் கபூர் மண்டபத்தில் 28.01.1995இல் கொண்டாடியது. அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், 30 வருடங்களாக கல்விக்குப் பங்களிப்புச் செய்த பிரமுகர்களையெல்லாம் கௌரவிப்பது விழாவின் முக்கிய அம்சமாக ஏற்பாடாகி இருந்தது. அந்நிகழ்வுக்கு தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



மாநாட்டின் 30 ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் மௌலவி ஏ.எல்.எம். காஸிம் உரையாற்றுகிறார். தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர் லக்ஷ்மன் ஜயதிலக, ஷாபிமரிக்கார் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்



பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்கவை பேராசிரியர் உவைஸ் வரவேற்கிறார். அருகில் ஷாபி மரிக்கார் நிற்கிறார்.



பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்கவை ஷாபிமரிக்கார் கூட்ட மண்டபத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

அதனையொட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கல்விச் சேவையில் 17.12.1994ஆம் திகதி பி.ப. 5.30 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'அகில இலங்கை முஸ்லிம் மாநாட்டின் கல்விப் பங்களிப்பு' என்ற தலைப்பில் நிகழ்ந்த அக் கலந்துரையாடலில் எம்.எம்.உவைஸ், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், எஸ்.எம்.எம். அப்துல் கபூர், ஏ.எம். முஸ்தகீம் ஆகியோரும் நானும் பங்கு கொண்டோம். எஸ்.எம். கமால்தீன் நிகழ்ச்சியை நெறியாள்கை செய்தார்.

> "கட்சி அரசியலுக்கு அப்பாலிருந்து அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் உள்ளூராட்சி அங்கத்தவர்களையும் ஒன்றாக இணைத்து கல்வித்துறையில் சமூகம் பெற வேண்டிய பங்கினைப்

> பெற்றுயர இந்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு அயராது உழைத்து வருகின்றது... கடந்த மூன்று தசாப்தங்களாக இந்தச் சங்கத்தைக் கட்டிக்காத்து நல்ல பலனை ஈட்டித்தர அல்லாஹ் எமக்கு ஒரு ஷாபிமரிக் காரைத் தந்தான். அந்தக் கல்விமானை, பேச்சும் மூச்சும் கல்வியாகவே தொனிக்கும் அந்த முஸல்மானை, மேலும் பல தசாப்தங்களுக்கு உடல் நலத்தோடு வாழ அல்லாஹ்வைப் பிரார்த்தித்து அ.இ.மு.க. மாநாட்டின் முப்பதாண்டு நிறைவை நெஞ்சோடு இணைத்து அல்லாஹ்வைப் புகழ்வோமாக!"

என்று அ.இ.மு.க. மாநாடு முப்பதாண்டுகளாக முஸ்லிம் கல்விக்குச் செய்த சேவைக்காக அம்மாநாட்டின் உயிர் நாடியாகத் திகழ்ந்த ஷாபிமரிக்காரைப் புகழ்ந்தோதினார் பரீட்சைகள் திணைக்கள முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஏ.எம். முஸ்தகீம். 'மூன்று தசாப்தம் காணும் இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு' என்ற தலைப்பில் 31.10.1994இல் வீரகேசரியில் எழுதிய கட்டுரையிலேயே அவர் மேற்கண்டவாறு எழுதியிருந்தார். முஸ்லிம் கல்விப் பிரச்சினைகளைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தவர்களுள் முதன்மையானவர்கள், ஷாபிமரிக்கார் வாழ்ந்த காலத்தில் ஷாபிமரிக்காரும் எ.எம்.எ. அஸீஸுமே என்று துணிந்து கூறலாம். ஷாபிமரிக்கார் கலந்து கொள்ளாத முஸ்லிம் கல்வி மாநாடுகள், கருத்தரங்குகள் நிறைவுறுவதில்லை என்ற நிலை அவர் வாழ்ந்த காலத்தில் காணப்பட்டது. கல்வியியலாளர்களும், ஆய்வாளர்களும், அரசியல் தலைவர்களும் கல்விப் பிரச்சினைகளில் ஷாபிமரிக்காரின் கருத்துக்களையும் தகவல்களையுமே நாடிநின்றனர்.

8.6 மாநாட்டின் நாற்பதாவது அகவை

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் 40ஆவது வருட நிறைவு வைபவம் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி அப்துல் கபூர் மண்டபத்தில் 24.09.2005இல் நிகழ்ந்தது. கலாநிதி ஏ.ஜி. ஹுசைன் இஸ்மாயிலின் நெறியாழ்கையில் நடைபெற்ற இவ்விழாவில் இந்தியத் தூதுவர் நிருபமாராவ், லிபியா, மலேசியா, எகிப்து நாடுகளின் உயர் ஸ்தானிகர்கள், ஏ.எச்.எம். அஸ்வர், முஸ்லிம் லீக் தலைவர் ஏ.எல்.எம். ஹாஷிம், அவரின் மகன் கபீர் ஹாஷிம், றஊப் ஹக்கீம், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, எம்.எச். ஆமித், எம்.ஏ. அப்துல் மஜீத், பிரதி மேயர் அஸாத் சாலி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் எம்.எம். சுஹைர், கல்விமான் ஏ.எம். சமீம், ஜெஸீமா இஸ்மாயில் முதலானோரெல்லாம் கலந்து கொண்டிருந்தனர்.

முஸ்லிம் கல்வி மாநாட்டின் 40ஆவது ஆண்டு நிறைவு விழா, நிருவாக சபைத் தலைவராக 40வருட சேவையைப் பூர்த்தி செய்த ஷாபிமரிக்காருக்கு



ஷாபிமரிக்கார் பாராட்டு விழா மலராக 24.09.2005 இல் வெளிவந்த மாநாட்டின் 40 வருடப் பூர்த்தி விழா சிறப்பு மலர்

எடுக்கப்பட்ட பாராட்டு விழாவாகவும் அமைந்திருந்தது. அப்போதைய பாராளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே. எம். லொக்குபண்டார விழாவின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அதனை ஒட்டி மலரொன்றும் வெளியிடப்பட்டது. மாநாட்டின் நீண்டகால உறுப்பினரும் ஷாபிமரிக்காரின் பல்துறை சமூகப் பணிகளுக்கு உறுதுணையாகவிருந்தவருமான முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் இம் மலரின் ஆசிரியராகவிருந்தமை குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது. கலாநிதி எச்.ஜி. ஹுசைன் இஸ்மாயில் போன்றோர் இம்மலர் வெளியீட்டில் அஸ்வருக்கு உதவியாகவிருந்தனர். மாநாடு பற்றிய அனேக தகவல்களைத் தாங்கிய ஏடாக இம்மலர் அமைந்திருக்கிறது. அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் ஏ.எல்.எம். ஹாஷிம், ஏ.எம். நஹியா, ஏ.எம். சமீம், கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, பேராசிரியர் டபிள்யூ. ஜி. குலரத்ன, மௌலவி எம்.ஜே.எம். றியாழ், பேராசிரியர் எஸ். சந்திரசேகரன், கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ், பேராசிரியர் எம்.டி.எம். ஜிப்ரி, எம்.என். மிஹ்லார் ஆகியோரின் கட்டுரைகள் மலரை அலங்கரிக்கின்றன. ஷாபிமரிக்காரைப் பற்றி ஜஸீமா இஸ்மாயில் எழுதிய 'Achieve Shafie's Vision & Goal' என்ற கட்டுரையும், 'Shafie Marikar's Recollections of Thoughts - A chat with Azwer' என்ற ஷாபிமரிக் காருடனான அஸ்வரின் நேர்காணலும் ஷாபிமரிக்காரையும் அவரின் அபார கல்விப் பணிகளையும் எமக்கு நினைவூட்டுகின்றன. 'அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் 40 வருட கல்விப்பணி - மாநாட்டின் தோற்றம் அதன் சமூக தாக்கம்' என்பது இம்மலருக்கு நான் எழுதிய கட்டுரையின் தலைப்பு. முஸ்லிம் கல்வி மாநாட்டுடனும் ஷாபிமரிக்காருடனும் தொடர்புடைய பல நிழற்படங்களும் இணைக்கப்பட்டிருப்பது இம் மலருக்கு இன்னும் பெறுமதி சேர்க்கிறது. முஸ்லிம் கல்வி வரலாற்றை ஆய்வோ ருக்கு பல முக்கிய தகவல்களை இம் மலர் அளிக்கிறது.



அ.இ.மு.க. மாநாட்டின் 2004 / 2005 ஆம் ஆண்டுக்கான நிருவாக சபை

8.7 ஷாபிமரிக்கார் கால சிறப்பு வெளியீடுகள்

'All Ceylon Muslim Educational Confrence' என்ற மகுடத்தில் அ.இ.மு.க. மாநாடு 1968இல் வெளியிட்ட சிறப்பு மலர் முக்கியமானது. உவைஸ் அஹ்மத் அதன் ஆசிரியர். அ.இ.மு.க. மாநாட்டின் தலைவர் ஜாபிர் ஏ.



மாநாடு 1968 இல் வெளியிட்ட சிறப்பு மலர்

காதர், நிருவாக சபைத் தலைவர் ஷாபிமரிக்கார் ஆகியோரின் செய்திகளைத் தாங்கி வெளிவந்த இச் சிறப்பு மலரில் மும்மொழிகளிலும் ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. எம். உவைஸ் அஹ்மத், ரி.ஏ.ஜாயா, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் ஹுமாயூன் கான் பன்னி, எஸ்.எம்.ஏ.எம்.முஸம்மில், எம்.கே.எம்.அத்தாஸ், திருமதி.எச்.எம்.காலித் ஆகியோரின் ஆங்கிலக் கட்டுரைகளும், எம்.எம்.அப்துல் மஜீதின் சிங்கள மொழி மூலக் கட்டுரையும், எம்.ஏ.எம்.சுக்ரி, ஏ.எம்.முஸ்தகீம், ஏ.எல்.எம்.கியாஸ், எச்.ஜே.மொஹமட் ஆரிப், ஓ.ஏ.சாஹுல் ஹமீத் ஆகியோரின் தமிழ்க் கட்டுரைகளும் மலரில் இடம்பெறுகின்றன.

இம் மாநாடு 1993 ஒக்டோபரில் ஒரு சஞ்சிகையினை வெளிக் கொணர்ந்தது. 'ACMEC Journal' என்பது அதன் பெயர். பல விடயங்களைத் தாங்கி மும்மொழிகளிலும் வெளிவந்த அச் சஞ்சிகையில் ஷாபிமரிக்காரின் ஆசிரியர் கருத்து கவனத்தை ஈர்க்கிறது. ஷாபிமரிக்காரின் அந்தச் செய்தியை வாசித்தபோது சித்திலெவ்வையின் முஸ்லிம் நேசன் ஆசிரியத் தலைப்புகள் என்னுடைய ஞாபகத்துக்கு வந்தன. சஞ்சிகையின் நோக்கத்தை மாத்திரமல்ல அவரின் தெளிந்த கல்வி ஞானத்தையும் சமூகத்தின் கல்வி மேம்பாட்டில் அவர் கொண்டிருந்த அக்கறையையும் இச் செய்தி எமக்குத் தெளிவுபடுத்துகிறது. முஸ்லிம் கல்விமாநாடு முன்னெடுத்துச் செல்லும் கல்விப் பணியையும் அதன் குறிக்கோளையும் கூட எமக்கு நினைவூட்டுகிறது.



ACMEC Journal
Oct. 1993

"அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாடு 1964ஆம் ஆண்டில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது முதல் பொதுவாக முஸ்லிம் கல்வியினதும் குறிப்பாக வசதி குறைந்த முஸ்லிம் பாடசாலைகளினதும் நலன்களை இடையறாது பேணிப் பாதுகாத்தும் அவற்றிக்காகக் குரல் கொடுத்துக் கொண்டும் வருகிறது. அதன் நீண்டகால அவசியத் தேவைகளி லொன்றை இச்சஞ்சிகை பூர்த்தி செய்கிறது. கல்விமாநாட்டின் வரலாற்றிலே ஒரு மைல் கல்லாக அமையும் இச் சஞ்சிகை புரவலர் களின் பூரண ஆதரவு இல்லாவிட்டால் மலர்ந்திராது. இச்சஞ்சிகையின் முக்கிய குறிக்கோள் முஸ்லிம் கல்வியின் மேம்பாட்டுக்கும், இஸ்லாமிய விழுமியங்களைப் பரப்புவதற்கும், கல்விமாநாடும்


அ.இ.மு.க. மாநாட்டின் அமர்வொன்றில் ஷாபிமரிக்கார் உரை நிகழ்த்துகிறார். கலாநிதி உவைஸ் அஹமத், எஸ்.எம். கமால்தீன், ஏ.எல்.எம். ஹாஷிம் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்

அதன் மாவட்டக் கிளைகளும் செய்யும் பணிகளை எம்மக்களுடைய கவனத்திற்கு கொண்டுவருவதுமே யென்றாலும், இதன்வாயிலாக முஸ்லிம் சமூகத்தைத் தட்டி எழுப்புவதற்கும், எங்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கல்வியின் முக்கியத்தையிட்டு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கும், நெடுங் காலமாக இருந்து வரும் பிரச்சினைகளாகிய கல்வித் தரத்தை உயர்த்தும் அவசரமான பாரிய பணியில் சமூகத்தை ஈடுபடுத்துவதற்கும் கல்விமாநாடு முயற்சி செய்யும். அத்தோடு இச்சஞ்சிகை கல்வி சம்பந்தமான விடயங்களில் எப்பொழுதும் அழுத்தம் திருத்தமாக இஸ்லாமிய நோக்கத்தைப் பிரதிபலிக்கும். தொகுத்துக் கூறுவதானால், சமூகத்திற்கியைந்த குணாதிசய உணர்வையும் பொதுநோக்கத்தையும் கொடுக்கும் ஒரு மனோபாவ மாற்றத்தை சமூகத் திலுண்டாக்கும் ஓர் இணைப்பியக்க ஊக்கியாக இச்சஞ்சிகையை ஆக்குவதற்கு கல்வி மாநாடு விழைகிறது"

என்று 'ACMEC Journal' இன் வெளியீட்டு நோக்கத்தை ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொன்னார்.

8.8 மாநாட்டு தலைவரின் கடிதங்களும் மகஜர்களும்

கல்வி முறையில் மாற்றங்கள் முன்மொழியப்படும்போதும் கல்விப் பிரச்சினைகளை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய போதும் அவற்றையிட்டு அ.இ.மு.க. மாநாட்டின் தலைவர் ஷாபிமரிக்கார் சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதி அனுப்பிய கடிதங்களும் சமர்ப்பித்த மகஜர்களும் கவனத்திற்குரியன: வரலாற்றுப் பெறுமதிமிக்கன. அந்தவகையில் அவ்வச் சந்தர்ப்பங்களில் அவர் இந்நாட்டு ஜனாதிபதிகள், பிரதமர்கள், கல்வி உயர் கல்வி அமைச்சர்கள், சுகாதார நெடுஞ்சாலைகள் சமூக சேவைகள் அமைச்சர், துறைமுகங்கள், கப்பற்றுறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், கல்வி, உயர் கல்வி அமைச்சுகளின் செயலாளர்கள், கொழும்பு, தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள், தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர், பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக்குழுச் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர், கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர், முஸ்லிம் பாடசாலைகள் பிரிவுப்பணிப்பாளர், ஜம்மியத்துல் உலமா சபைத்தலைவர், செயலாளர் முதலானோருக்கு அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாக சபைத் தலைவர் என்ற ரீதியில் ஷாபிமரிக்கார் அனுப்பிவைத்த கடிதங்களும் மகஜர்களும் முக்கியத்துவமுடையன. முஸ்லிம் கல்விப் பிரச்சினைகள், அதற்கான அ.இ.மு.க. மாநாட்டின் தீர்வு யோசனைகள் என்பனவற்றை அக்கடிதங்கள் தெளிவாகக் காட்டின. காலவரண்முறைப்படி அக்கடிதங்கள் தொகுக்கப்பட்டு நூலுருப் பெறும்போது ஒரு காலகட்டத்தின்

முஸ்லிம் கல்வி வரலாற்றைக் காட்டும் ஆவணமாக, கல்வியியல் ஆய்வாளர்களுக்கு உதவும் தகவற் களஞ்சியமாக, அ.இ.மு.க. மாநாட்டின் முஸ்லிம் கல்விக் கரிசனை, அதன் சாதனைகளைக் கட்டியம் கூறும் ஏடாக அது அமையும்.

8.9 ஷாபிமரிக்காரின் பின் அ.இ.மு.க. மாநாடு

"முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைகள் சம்பந்தமாக காலத்துக்குக்காலம் முஸ்லிம் கல்விமான்களை, கல்வி அதிகாரிகளை, முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்களை அழைத்து குறைகளை அறிந்து தேசிய ரீதியில் கல்வித்துறையில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அறிந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பணியில் ஷாபிமரிக்கார் அவர்களின் தலைமையில் இயங்கிய முஸ்லிம் கல்வி மாநாடு கடந்த 40 வருடங்களுக்கு மேலாகத் தொழிற்பட்டு வந்தது. அவர் இன்று இயங்கமுடியாத அளவிற்கு நோய்வாய்ப்பட்டு இருப்பதால் அவரின் தலைமையில் இயங்கிய முஸ்லிம் கல்வி மாநாடும் நோய்வாய்ப்பட்டு விட்டதா? "15.08.2004இல் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு ஸாஹிறாக் கல்லூரியில் இடம்பெறும்; முஸ்லிம் கல்வி சம்பந்தமாக எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் இனங்காணப்பட்டு உரிய ஒழுங்கு மேற்கொள்ளப்படும்" என்ற பத்திரிகைச் செய்தியைப் படித்து அக்கறையுள்ள பலர் சமுகமளித்தனர். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் மாகாணசபை உறுப்பினர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சகலருக்கும் எழுத்துமூலமான அழைப்பு அனுப்பப்பட்டதாக செயலாளர் கூறினார். ஆனால் செயற்குழு உறுப்பினர்கள் ஐவரைத் தவிர மாகாண, பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர் ஒருவராவது சமுகமளிக்கவில்லை... கோரமின்மையால் பிறிதொரு தினத்தில் இம் மாநாட்டை ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது" (மஹ்றூப் கரீம், எம்.எம்.எம்., நவமணி - 3.10.2004: 10)

என்று ஒய்வுபெற்ற அதிபரும் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினதும் அம்மாவட்ட முஸ்லிம் அதிபர் சங்கத்தினதும் தலைவருமான எம்.எம்.எம். மஹ்றூப் கரீம் 'நவமணி'ப் பத்திரிகையில், 'முஸ்லிம் பாடசாலைகளின் கல்விநிலை சீரழிந்து செல்வதைக் கவனிப்பவர் யார்?' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். ஷாபி மரிக்கார் சுகயீனமுற்றுவிருந்த அவரின் அந்திம காலத்தில் அவரின் அ.இ.மு.க. மாநாடு செயற்பாடிழந்து போனதை இக்குறிப்புக் காட்டுகிறது.

தனது அந்திம கால சுகவீனமும் இயலாமையும் அ.இ.மு.க.மாநாட்டின் பணிகளைப் பாதித்துவிடாதிருக்க தனது வாழ்காலத்திலேயே ஷாபிமரிக்கார் தனது எண்ணங்களை வெளிப்படுத்தியிருந்தார். தன்னுடன் நெருங்கிப் பழகிய சிரேட்ட மாநாட்டினர் சிலரை தனது வீட்டுக்கழைத்து தனிப்பட்ட ரீதியில் இதுபற்றிக் கலந்துரையாடினார். கலாநிதி ஏ.ஜி. ஹுசைன்

இஸ்மாயில், ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரையும் என்னையும் தனித்தனியே வீட்டுக்கழைத்து இதுபற்றி அவர் கலந்து பேசினார். ஏ.ஜி. ஹுசைன் இஸ்மாயில் அவர்களே தனக்குப்பின் அ.இ.மு.க. மாநாட்டின் செயற்குழுத் தலைவராக இருக்க வேண்டுமென்ற விருப்பம் ஷாபிமரிக்காருக்கிருந்ததை அவருடனான கலந்துரையாடலின்போது நான் அறிந்து கொண்டேன். அது இப்போது நிறைவேறியிருக்கிறது. கல்வித்துறைப் பேராசிரியர் அவர். பல்கலைக்கழக மொன்றின் உபவேந்தராகவிருந்தவர்; ஷாபிமரிக்காரின் நம்பிக்கைக்குரியவர்; ஏற்கனவே மாநாட்டு நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். அவர் ஷாபிமரிக்காரின் மாணவரும் கூட. அப்பண்பாளரின் தலைமையில் மாநாடு இயங்குவது ஷாபிமரிக்கார் காலத்தில் மாநாட்டின் உதவிச் செயலாளராக இருந்தவன் என்ற வகையில் எனக்குத் திருப்தியும் இரட்டிப்பு மகிழ்ச்சியும் தருகிறது.

ஹுசைன் இஸ்மாயிலின் காலத்திலும் அ.இ.மு.க. மாநாடு பல செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கிறது. 24.04.2006இல் மாநாடு அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து முஸ்லிம் கல்விப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடியது. ஜனாதிபதியின் விருப்பத்திற்கிணங்க முஸ்லிம் கல்விப் பிரச்சினைகளை இனம்கண்டு அறிக்கை சமர்ப்பிக்கவென அப்போதையக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஒரு குழுவை நியமித்தார். பேராசிரியர் ஏ.ஜி. ஹுசைன் இஸ்மாயிலின் தலைமையில் நியமிக்கப்பட்ட அக்குழுவில் ஜெஸீமா இஸ்மாயில், எஸ். எச்.எம். ஜெமீல் ஆகியோர் அங்கத்தவர்களாகவும் திருமதி ஹஜர்ஜான் மன்சூர் செயலாளராகவு மிருந்தனர். அவர்கள் தயாரித்த அறிக்கை 27.12.2009இல் ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டது.



26.04.2007 இல் வெளியிடப்பட்ட ஷாபி நினைவு மலர்



24.06.2007 இல் நிகழ்ந்த ஷாபிமரிக்கார் நினைவு வைபவத்தில் அ.இ.மு.க. மாநாட்டுச் செயலாளர் எம்.வை. எம். பாவா உரையாற்றுகிறார். றசீட் எம்.இம்தியாஸ், அமைச்சர் றவூப் ஹக்கீம், ஹுசைன் இஸ்மாயில், பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க, ஏ.எச்.எம்.அஸ்வர், அமைச்சர் றிஷாட் பதியுத்தீன் அமர்ந்திருக்கின்றனர்.

ஷாபிமரிக்கார் நினைவு நிகழ்வுகள் பல ஏற்பாடு செய்யப்பட்டன. அ.இ.மு.க. மாநாடும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணியும் இணைந்து றண்முத்து ஹோட்டலில் 26.04.2007 இல் நடத்திய ஷாபிமரிக்கார் நினைவு நிகழ்வில் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக பிரதான உரை நிகழ்த்தினார். அமைச்சர்கள் றவூப் ஹக்கீம்,

றிஷாட் பதியுத்தீன் ஆகியோரெல்லாம் கலந்து கொண்டனர். அன்று நிகழ்ந்த ஷாபிமரிக்கார் ஞாபகார்த்த நிகழ்வில் ஷாபிமரிக்கார் நினைவாக மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. பைசல் பழீல் அதன் ஆசிரியர். என். எம்.அமீன், ஏ.எச்.எம். அஸ்வர், கலாநிதி ஏ.ஜீ.ஹுசைன் இஸ்மாயில், ஐ.எல்.எம்.சுஜப், ஜஸீமா இஸ்மாயில், ஏ.எல்.எம்.ஹாஷிம், றஷீத் எம்.இம்தியாஸ், எம்.பைஸல் பழீல் ஆகியோரின் ஷாபிமரிக்கார் பற்றிய ஆக்கங்கள் மலரில் இடம்பெறுகின்றன. றண்முத்து ஹோட்டலில் 26.04.2009இல் நடைபெற்ற ஷாபிமரிக்கார் நினைவு நிகழ்வில் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். அ.இ.மு.க. மாநாட்டின் 45ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஷாபிமரிக்கார் நினைவு நிகழ்வும் கொழும்பு-03, சசகாவா மண்டபத்தில் 24.10.2009இல் நடைபெற்றது. அமைச்சர் டி.ஈ.டபிள்யூ. குணசேகர பிரதம அதிதியாகக் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தார். பேராசிரியர் எஸ். சந்திரசேகரன் பிரதான உரையை நிகழ்த்தினார். கனதியான மலரொன்றும் அந்நிகழ்வையொட்டி வெளியிடப்பட்டது. இம்மலரிலும் 24.09.2005இல் வெளியிடப்பட்ட மலரில் நான் எழுதிய 'அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் 40 வருட கல்விப்பணி' என்ற கட்டுரை மீள்பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. பேராசிரியர் சோ.சந்திரசேகரன், பேராசிரியர் எம்.ஏ.நு.ஃமான், கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ், கலாநிதி ஜே.எம்.கே.பி.ஹுஜர்ஜான் மன்சூர் முதலானோரின் கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெறுகின்றன. இன்னுமொரு ஷாபிமரிக்கார் நினைவு நிகழ்வு தெமடகொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் 28.03.2011இல் மாநாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முஸ்லிம் அதிபர்களுடனான சந்திப்பொன்றும் மாநாட்டின் அனுசரணையில் தெமடகொட வை.எம்.எம்.ஏ.யில் 03.12.2011இல் நிகழ்ந்தது. 92 முஸ்லிம் அதிபர்கள் இதில் கலந்து கொண்டனர். சுதேச வைத்தியர்கள் 27 பேருடனான கலந்துரையாடலும் ஹுசைன் இஸ்மாயில் தலைமையில் முஸ்லிம் நூலகத்தில் 13.03.2012இல் நிகழ்ந்தது.



ஷாபிமரிக்கார் நினைவு மலராக 24.10.2009 இல் வெளிவந்த மாநாட்டின் 45வது ஆண்டு பூர்த்திவிழா சிறப்புமலர்

அ.இ.மு.க. மாநாட்டின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள தபால் திணைக்களக் கேட்போர் கூடத்தில் 17.05.2015 இல் நிகழ்ந்தன. பேராசிரியர்கள் ஹுசைன் இஸ்மாயில் (தலைவர்), எம்.எஸ்.எம். அனஸ் (செயற்குழுத் தவிசாளர்) ஆகியோரின் வழிகாட்டலில் சட்டத்தரணி றஷீத் எம்.இம்தியாஸின் (செயலாளர்) செயற்படுகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வியமைச்சர் அகிலவிராஜ்

காரியவசம், அமைச்சர் கபீர் ஹாஷிம் முதலானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். அன்று வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் 'அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு - வரலாற்றுப் பெருமை பங்களிப்புப் பற்றிய ஒரு பார்வை' என்ற தலைப்பிலான என்னுடைய கட்டுரையும் இடம்பெறுகின்றது.

முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டு முயற்சிகள் கவனமாக முன்னெடுக்கப் பட வேண்டிய காலமிது. ரி.பி. ஜாயா, சேர் றாசிக் பரீத், பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோரின் காலம் போலன்றி பெரும்பான்மையினரின் இன உணர்வுகள் பல துறைகளிலும் ஊடுருவித் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் வேளை இது. முன்னரிலும் பார்க்க கூடிய கவனத்துடனும் புத்திசாதுரியத்துடனும் விடயங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ஷாபிமரிக்கார் போன்று அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களின் மையமாக அமைய வேண்டிய தேவை அ.இ.மு.க. மாநாட்டுக்கு இருக்கிறது. இடம் பெயர்ந்தோர் கல்வி, சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச முஸ்லிம் மாணவரின் கல்வி, வறிய முஸ்லிம் மாணவரின் கல்வி, ஆரம்ப, இடைநிலை, உயர் நிலைக் கல்வி, ஆசிரியர் கல்வி, தொழிற்கல்வி, சமயக் கல்வி, மத்ரஸாக் கல்வி, மொழிக்கல்வி, கல்வி மொழி பற்றியெல்லாம் கவனம் செலுத்தும் தேவை இன்றும் குறைந்து விடவில்லை. தேசியக் கல்விக் கொள்கைகள், பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகளெல்லாம் மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டி ருக்கின்ற வேளை இது. ஷாபிமரிக்கார் எதிர்த்த 'சமயக் கல்விக்குப் பதில் ஒழுக்கக் கல்வி' பற்றி மீண்டும் கதைகள் சொல்லப்படுகின்றன. மாணவரின் சீருடை பற்றியும் பிற சமயத்தவர்களின் பார்வை முஸ்லிம் மாணவர் மீது கூர்மையடைந்திருக்கிறது. பொதுஜனங்களைக் கல்விபால் அறிவுறுத்தி, ஊக்கமூட்டி, தொடர்ந்தும் வழிநடத்த வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் அரசியலுக்கப்பால் நின்று, பிளவுண்டு கிடக்கும் அரசியல் தலைவர்களையும், கருத்து வேறுபாடு கொண்ட பொதுஜனங்களையும் ஒன்றிணைத்து சரியான வழியில் நகர்த்திச் செல்லும் பாரிய பொறுப்பும் மாநாட்டுக்கிருக்கிறது. சமூகம் ஏற்றுக் கொள்ளும் அறிவுத் தலைமையினாற்றான் இதைச் சாதிக்க முடியும் என்பதை அனைவரும் ஏற்பர். கலாநிதி எம்.எஸ். எம். அனஸ், ஜுன் 2013இல் இருந்து அ.இ.மு.க. மாநாட்டின் நிர்வாக சபைத் தலைவராகி இருக்கிறார். மாநாட்டு நிருவாக சபைத் தலைவராக 2005-2013வரை பணிசெய்த கலாநிதி ஹுசைன் இஸ்மாயிலின் வழி நடத்துகையும் மாநாட்டின் தலைவர் என்ற வகையில் தொடர்கிறது. என். எம். அமீன், சட்டத்தரணி ரஷீட் எம். இம்ரியாஸ், பைசல் பழீல் போன்றோரின் ஒத்துழைப்பும் சமூகத்தின் விடிவை நோக்கிய கல்விப் பயணத்தில் மாநாட்டுக்கு உறுதுணையாக இருப்பது மகிழ்ச்சி தருகிறது.

9

முஸ்லிம் கல்வி

ஆறுமுகநாவலர், அநகாரிகதர்மபாலா, எம்.ஸி. சித்திலெவ்வை ஆகியோர்வழி நின்று கலாசாரப் பின்னணியில் கல்வித் தாபனங்கள் இயங்குவதை ஷாபிமரைக்கார் விரும்பினார். அந்த நோக்கிற்றான் பாடசாலைகளில் சமயம் கற்பிப்பதை, தனியார் பாடசாலை முறைமையை, பாடசாலைகள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளாக இயங்குவதை, ஆண்கள், பெண்களுக்கென தனித் தனிப் பாடசாலைகள், பயிற்சிக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அமைவதை அவர் விரும்பினார்.

முஸ்லிம் பாடசாலை அதிபர்களின் மாநாடொன்றை அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு 10.10.1962இல் கூட்டியது. முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைகள் பற்றி ஆராய அகில இலங்கை கல்வி மாநாட்டுச் செயற்குழு கல்வி அமைச்சரை 06.03.1975, 13.08.1977, 12.06.1979, 20.12.1979களில் சந்தித்தது. கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்னவுடனான சந்திப்பு (13.08.1977) பல நன்மைகளை முஸ்லிம் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுத்தது. 1975 ஜூன் 7, 8ஆம் திகதிகளில் கருத்தரங்கொன்று அ.இ.மு.க. மாநாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டு புதிய கல்விச் சீர்திருத்தம் உள்ளடங்கலான முஸ்லிம் கல்வி பற்றி கருத்துக்கள் பரிமாறப்பட்டன. 'இலங்கையில் முஸ்லிம் கல்வி' என்பது அக் கருத்தரங்கின் மகுடம். டாக்டர் எம்.எச்.எம். அப்துல் காதர் தலைமையில் நிகழ்ந்த இக்கருத்தரங்கில் பதியுத்தீன் மஹ்முத் தொடக்கவுரை நிகழ்த்தினார். ஐக்கிய அரபுக் குடியரசின் ஸ்தானிகர் கமால், பாக்கிஸ்தான் தூதுவர் அப்துர் ரவூப்கான், இந்தோனேஷியத் தூதுவர் சோகிர்மான், கம்பளை ஸாஹிறாக் கல்லூரி அதிபர் எம். சமீம், வித்தியாதிபதி கி. லட்சுமண ஐயர் உள்ளிட்ட பலர் இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்தினர்.

> "புதிய கல்வித் திட்டத்துக்கு மக்களின் ஆதரவு முக்கியமாக இருப்பது போல ஆசிரியர்களின் பங்கும் முக்கியமானது. சிறந்த கல்வித்திட்டத்தை அரசு அமைத்துள்ள போது அதன் பயனைப் பெற நாம் தவறிவிடுகிறோம்.

முஸ்லிம் மக்கள் உலக மக்களுடன் ஒன்றிணைந்தவர்கள்; சகோதரத்துவ அடிப்படைக்கு வித்தானவர்கள். இந்த நோக்கில்தான் இன்று பல முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகளை இங்கு கருத்துரை வழங்க அழைத்தோம். இதன்மூலம் அந் நாடுகளின் கல்வித் திட்டங்களும் எமக்குப் புலப்படும்" (தினகரன் - 09.06.1975)

என்று ஷாபிமரிக்கார் தன்னுடைய உரையில் குறிப்பிட்டார்.

முஸ்லிம் வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கும் 27.05.1978இல் கருத்தரங் கொன்றை அ.இ.மு.க. மாநாடு ஏற்பாடு செய்திருந்தது. அட்டாளைச்சேனையில் ஆசிரியர் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த பெண் ஆசிரியர் பயிலுநர்களை, அளுத்கம ஆசிரியைகள் பயிற்சிக் கல்லூரிக்கு இடமாற்றப்பட வேண்டும்; இருவருட இஸ்லாம் பயிற்சி நெறி முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூ ரிகளில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற மாநாட்டின் கோரிக்கைகளை நிஸ்ஸங்க விஜேரத்ன கல்வி அமைச்சராகவிருந்தபோது 27.05.1978இல் அங்கீகரித்தார். எச்.என்.ஸீ.ஈ. பாடத்திட்டத்திலிருந்து 'சோஷலிஷ தத்துவம்' என்ற பாடமும் நீக்கப்பட்டது. ஷாபிமரிக்காரின் மேதைமையில் அமைச்சர் நிஸ்ஸங்க விஜயரத்னவுக்கிருந்த மதிப்பு, மரியாதை, நீண்டகால உறவை இந்த அங்கீகாரம் வெளிப்படுத்தியது. கல்விச் சேவைகள் ஆணைக் குழு 15.10.1979இல் அமைக்கப்பட்டபோது மாநாடு அதையும் வரவேற்று 25.12.1979இல் குரல் கொடுத்தது.

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய முக்கியமானதும் அவசரமானதுமான கல்விப் பிரச்சினைகள் பற்றி சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அறிகைக்காக ஒரு அறிக்கையை அ.இ.மு.க.மாநாட்டின் நிருவாகசபைத் தலைவர் என்ற வகையில் ஷாபிமரிக்கார் 28.11.1980இல் அனுப்பியிருந்தார். அன்றைய மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் பரீத் மீரா லெவ்வை அவ்வறிக்கை இனம் காட்டும் கல்விப் பிரச்சினைகளை பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார். 01.12.1980ஆம் திகதிய பாராளுமன்ற 'ஹன்சாட்' அதனை முழுமையாக உள்ளடக்கி யிருந்தது. (பக். 974 - 982)

கல்வி வெள்ளையறிக்கை 12.09.1981இல் வெளியிடப்பட்டதும் ஷாபிமரிக்கார் அ.இ.மு.க. மாநாட்டின் சார்பாக ஒரு விசேட குழுவையும், மாவட்டங்கள் தோறும் மாவட்டக் குழுக்களையும் அமைத்து வெள்ளை யறிக்கையை சமூகத்தின் தெளிவான அறிகைக்கும் ஆய்வுக்குமுட்படுத்தினார். இம்மாநாட்டுக் குழுக்கள் மாவட்ட மட்டத்தில் கருத்தரங்குகளை நடாத்தி வெள்ளை அறிக்கைப்பற்றி பிரதேச முஸ்லிம்களின் கருத்துக்களை அறிந்து

வெள்ளை அறிக்கை பற்றிய இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ள அ.இ.மு.க. மாநாட்டுக்கு உதவின.

இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிலையத்தில் (கொழும்பு), 'இலங்கை முஸ்லிம் கல்வி' பற்றி 1985இல் நிகழ்ந்த ஆய்வரங்கொன்றில், Muslim Education in Srilanka என்ற தலைப்பில் ஷாபிமரிக்கார் ஆய்வுக் கட்டுரை படித்தார்.



அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ் நடத்திய கல்வி வெள்ளை அறிக்கை பற்றிய கருத்தரங்கில் நஹியா உரையாற்றுகிறார். ஷாபிமரிக்கார், எம்.சிவசிதம்பரம், இலட்சுமண ஐயர் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

கல்வி வெள்ளை அறிக்கை பற்றிய கருத்தரங்கொன்றை என்னுடைய தலைமையில் இயங்கிய அரசியல் சார்பற்ற 'ஸ்ரீ லங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ்' கொழும்பு ஸாஹிறாக்கல்லூரி கபூர் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. 19.11.1981இல் நிகழ்ந்த இக்கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், முன்னாள் கல்விப் பணிப்பாளர் இலட்சுமண ஐயர், கல்வி அதிகாரி எம்.எம். அப்துல் மஜீத், கொழும்புப் பல்கலைக் கழக சிரேட்ட கல்வித்துறை விரிவுரையாளர் எஸ். சந்திரசேகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். அரபுக் கல்வி அதிகாரி எம்.ஜே.எம். றியாழ், அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாக சபைத் தலைவர் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் ஆகியோரும் பயனுள்ள கருத்துக்களை அக்கருத்தரங்கில் தெரிவித்தனர்.

கல்வி நிருவாக மறுசீரமைப்புக் குழுவின் (1983/84) சிபாரிசுகள் பற்றியும் 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றியும் (14.11.1987) ஷாபிமரிக்காரின் மாநாடு கரிசனையுடன் செயற்பட்டது. சமயக்கல்வி பற்றிய விசேட குழுவின் அறிக்கையை மாவட்ட முஸ்லிம்களின் கவனத்திற்கு 03.02.1982இல் அனுப்பி வைத்தமை, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை 20.10.1983இல் மாநாட்டின் தூதுக்குழு பாராளுமன்றத்தில் சந்தித்து முஸ்லிம் கல்விப் பிரச்சினைகள் பற்றிக் கலந்து பேசியமை, கல்வி அமைச்சருக்கு முஸ்லிம் கல்விப் பிரச்சினைகள் பற்றி 09.12.1983இல் மகஜர் அனுப்பியமை, தேசிய தொழில் பயிலுநர் சபைத் (National Apprenticeship Board) தலைவர் எஸ்.ஜே. மொஹிதீன் மாநாட்டு நிருவாக சபையினருக்கு 22.05.1984இல் சொற்பொழிவு நிகழ்த்தியமை என்பனவெல்லாம் ஷாபிமரிக்காரின் தலைமையில் அ.இ.மு.க. மாநாட்டின் செயற்குழு முஸ்லிம் கல்வி மேம்பாட்டு நோக்கில் நிகழ்த்தி முடித்தவை.

மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட்டபோது கல்வி நிருவாகப் பரவலாக்கமும், கல்வி அதிகாரப் பகிர்வும் செய்யப்படுவதை வரவேற்ற ஷாபிமரிக்கார் மாகாணசபைகளின் கீழும் முஸ்லிம் பாடசாலைகளின் தனித்துவம் பேணப்பட வேண்டுமென்பதில் கரிசனையுடன் செயற்பட்டார். அன்றைய கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 24.11.1987இல் அவர் அனுப்பி வைத்த கடிதத்தில் அக் கரிசனை தெளிவாகத் தெரிந்தது.

> "Since the state has been given the power to lay down the policy in regard to all subjects and functions, we urge that in the field of Education the following should be laid down as unalterable policy directives to Provincial Councils:
>
> (a) Schools should continue to be classified as Sinhala, Tamil and Muslim schools
>
> (b) The Principal of school should belong to the religious denomination of the majority of the pupils of the school.
>
> (c) The Teaching staff of a school should, as far as possible, be in proportion to the religious denominations of the pupils of the school."

என்பன அக்கடிதத்தின் முக்கிய வாசகங்கள். மாகாணசபைகள் அமைக்கப்படும்போது அம்மாகாணங்களில் இயங்கும் முஸ்லிம் பாடசாலைகளின் தனித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். முஸ்லிம் பாடசாலைகள் விடயத்தில் மத்திய அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையை மாகாணசபைகளும் எவ்வித மாற்றங்களுமின்றிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை தக்கசமயத்தில் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார் ஷாபிமரிக்கார்.

இலங்கையிலுள்ள 750 அரசினர் முஸ்லிம் பாடசாலைகளில் 3500 ஆசிரியர் வெற்றிடங்களிருப்பதை 16.04.1997இல் ஷாபிமரிக்கார் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார்.

9.1 'முஸ்லிம் பாடசாலைகள்' எண்ணக்கரு

முஸ்லிம் மாணவர் 50% க்கு அதிகமான எண்ணிக்கையில் கற்கும் அரசினர் பாடசாலைகள் 'அரசினர் முஸ்லிம் பாடசாலை'களாகவும் அவற்றின் ஆசிரிய வெற்றிடங்கள் முஸ்லிம்களைக் கொண்டே நிரப்பப்படவேண்டும் என்றும் கல்வி அமைச்சராக டபிள்யு. தஹநாயக்க இருந்தபோது 25.06.1956 இல் தீர்மானம் செய்யப்பட்டது. இது சம்பந்தமாக தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் மாநாடு ஒன்று மலேவீதியில் அமைந்திருந்த

கல்வி அமைச்சில் கல்வி அமைச்சர் தஹநாயக்காவினால் 27.03.1958இல் கூட்டப்பட்டது. எச்.எஸ். இஸ்மாயில், ஸி.ஏ.எஸ்.மரைக்கார், சி.சுந்தரலிங்கம் ஆகிய மூவரையும் தவிர அனைத்து தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர். ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே. வி. செல்வநாயகம், பி. கந்தையா, எஸ். நடேசன், சேர் றாசிக் பரீத், எம்.எஸ். காரியப்பர், எம்.எம். முஸ்தபா, எ.எம்.எ. அஸீஸ் ஆகியோரெல்லாம் கலந்துகொண்ட உயர் அவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம் அது. "I would like to call this the Magna Carta of the Muslims in relation to Education"என்று கல்வி அமைச்சர் தஹநாயக்க 25.06.1956இல் செய்த முஸ்லிம் கல்விப் பிரகடனத்தை 16.09.1965இல் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாக்கீர்மாக்காரும் நினைவூட்டிப் பேசியிருந்தார். இத் தனித்துவ அடையாளம் தொடர்ந்து பேணப்படுமென்று டாக்டர் எம்.ஸி. எம். கலீலின் தலைமையில் தன்னை 19.09.1964இல் சந்தித்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தூதுக்குழுவுக்கு அன்றைய கல்வி அமைச்சர் ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்லயும் உறுதியளித்திருந்தார். ஆயினும், 19.02.1988இல் நிகழ்ந்த கம்பளை ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட கல்வி அமைச்சர் றணில் விக்ரமசிங்க தனது உரையில் 'அரசினர் முஸ்லிம் பாடசாலைகள்' பற்றித் தெரிவித்த கருத்து ஷாபியை நிலைதளரச் செய்தது. இது பற்றி அன்றைய ஜனாதிபதிக்கு 15.03.1988இல் அவர் கடிதம் எழுதி 'முஸ்லிம் பாடசாலை' முறைமை தொடரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பிரேமதாஸ ஜனாதிபதியான போது அவருக்கும் இது பற்றி 16.01.1989இல் கடிதம் எழுதிக் கவலை தெரிவித்தார். இன, சமய அடிப்படையில் எதிர்காலத்தில் பாடசாலைகள் அமைவதை தேசிய கல்வி ஆணைக்குழு நிராகரித்தபோதும் ஷாபிமரிக்கார் அதுபற்றித் தனது சமூகத்தை விழிப்படையச் செய்தார். கல்விச் சீர்திருத்தத்துக்கான முன்மொழிவுகள் வெள்ளை அறிக்கையாக வெளியிடப் படாமல் அவசர அவசரமாக இத்தகைய முக்கிய விடயங்களில் தீர்மானங்களைச் செய்வதை ஷாபிமரிக்கார் விமரிசனம் செய்தார்.

> "Whatever changes are introduced in regard to organization of the school system etc.the Muslim community is strongly of the view that the concept of 'Govt. Muslim Schools'for schools with over 50% Muslim children, providing for separate memorandum of terms as well as different hours of work on Fridays etc.and with Muslim Principals in-charge should continue unchanged, Reference order made by Dr.W.Dahanayake, Minister of Education dated June 25, 1956 and re-enforced by order made by Hon.I.M.R.A. Iriyagolla, Minister of Education and Cultural Affairs dated June 5, 1965. The state should continue to establish

such 'Muslim Schools' in different areas as and when found necessary- as such Schools are essential for the development and promotion of Islamic Religious practices and culture in the different parts of the Island"

என்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை 11.11.1998இல் கடிதம் மூலம் அறிவுறுத்தி முஸ்லிம் பாடசாலைகளின் தனித்துவத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு ஷாபிமரிக்கார் வேண்டிக் கொண்டார்.

ஷாபிமரிக்கார் முன்னெடுத்த 'முஸ்லிம் பாடசாலைகள்' எண்ணக்கருவின் தோற்றத்துக்கான காரணங்களை முஹம்மதிய விவாகப் பதிவுச் சட்டத்தின் மீது சேர் பொன். இராமநாதன் 1885இல் சட்டசபையில ஆற்றிய உரையிலும், 26.04.1888இல் அவர் றோயல் ஏசியாட்டிக் சொசைட்டிக்குச் சமர்ப்பித்த அவ்வுரையின் கட்டுரைவடிவிலும் மட்டுமின்றி, 1915இல் நிகழ்ந்த சிங்கள-முஸ்லிம் இனக்கலவரத்தின் பின்னர் அவர் (பொன். இராமநாதன்) செயற்பட்ட விதத்திலும் தேடவேண்டும். எம்.ஸி.சித்திலெவ்வை, ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் ஆகியோரின் எழுத்துக்களும், அட்வகேட் அப்துல் காதரின் துருக்கித் தொப்பிப் போராட்டமும் இதற்குத் தீனிபோட்டது. ஷாபிமரிக்காரின் 'முஸ்லிம் கல்வி', 'முஸ்லிம் பாடசாலைகள்' எண்ணக்கருக்கள் இந்த வரலாற்றுப் பின்புலத்தில் நின்று பார்க்கும் போதுதான் கூடிய தெளிவு தரும்.

"இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் என மூவகைப் பாடசாலைகள் இருப்பதை அவர் விரும்பினார். ஒவ்வொரு சமூகமும் தத்தமது கலாசார சூழலில் கல்வி கற்பதற்கு இவ்வகையான பாடசாலைகள் தொடர்ந்தும் செயல்படுவதையும் அவர் ஆதரித்தார். அரசு இவ்வாறான அமைப்பை மாற்ற முயலும் போதெல்லாம் எதிராகக் குரல்கொடுத்தார்" (ஹுசைன் இஸ்மாயில் ஏ.ஜீ., 2007:18)

என்று கலாசாரப் பின்னணியில் பாடசாலைகள் இயங்குவது சம்பந்தமான ஷாபிமரிக்காரின் நிலைப்பாடு பற்றிக் கலாநிதி ஹுசைன் இஸ்மாயில் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது கவனத்திற்குரியது.

முஸ்லிம் பாடசாலைகளின் றமழான் விடுமுறையைக் குறைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தபோது அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் ஊடாக ஷாபிமரிக்கார் தனது பலத்த கண்டனத்தை 29.08.1971இல் தெரிவித்தார்.

9.2 கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு

ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் இடையறா முயற்சி 'முஸ்லிம் பாடசாலைகள்' பிரிவு

ஒன்று கல்வி அமைச்சில் ஏற்படக் காரணமாயிற்று. நிஸ்ஸங்க விஜேரத்ன கல்வி அமைச்சராகவிருந்த போது ஜனவரி 1979இல் இப்பிரிவு தோற்றம் பெற்றது. ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவுக்கு ஷாபிமரிக்கார் 16.01.1989இல் எழுதிய கடிதம் ஒன்றில் இப்பிரிவின் தோற்றம் பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது.

> "When UNP Government assumed office in July 1977 with Hon.Nissanka Wijeyaratne as Minister of Education, our representations to the Hon.Minister received the most careful consideration and several steps were taken towards the advancement of Muslim Education on the lines suggested by us. Besides responding favourably to our written representations, deputations of the ACMEC, including also several Muslim Members of Parliament, were able to meet the Hon.Minister on four occasions. These interviews were most fruitful and several important decisions were taken and implemented in the interest of Muslim Education. The setting up of a separate 'Muslim Schools Unit' in the Ministry of the Education as from January,1979 with a Grade-1 Director of Education as its head was one of the most important steps taken by the former Hon.Minister of Education"

என்பது அக்குறிப்பு. முஸ்லிம் பாடசாலைகள் பிரிவின் தோற்றத்திற்கு அங்கீகாரமளித்த அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்தினவை ஷாபிமரிக்கார் உயர்த்திப் பேசினார்.

கல்வி அமைச்சின் 'முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை' என்ற பெயரில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் பிரிவு 09.01.1979இல் 'முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு' என்ற பெயரில் தனது பணியை ஆரம்பித்தபோது,தனது நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறிய திருப்தி அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுக்கு ஏற்பட்டது. இப்பிரிவு பின்னர் ஆகஸ்ட் 1980இல் இல்லாமற் செய்யப்பட்டபோது ஷாபியின் தலைமையில் முஸ்லிம் கல்வி மாநாடு கண்டனக் குரல் எழுப்பியது.

> "After a great deal of agitation on behalf of the Muslim community, the former Minister of Education set up a special Muslim Schools Unit in the Ministry of Education in order to pay special attention to and see to the needs of the much neglected Govt. Muslim Schools spread throughout the Island. Besides the unit co-ordinated the work of the Arabic Circuit Education officers as well as undertook the registration of the Madarasas throughout the country. The unit was expected to draw up scheme for the improvement of the teaching of Islam in Muslim Schools and to Muslim children in other schools. Special attention was to be paid to the development of science and technical education in the Muslim Schools. That unit functioned under a Grade One Director of Education. We are informed that this unit is no more. Why has this been done? What

alternative arrangements have been made for the functions preformed by this unit. Cannot this unit be restored?"

என்று எழுதி அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிருவாக சபைத் தலைவர் ஷாபிமரிக்கார், 28.11.1980இல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தை இவ்விடயமாக ஈர்த்தார். தீர்வு காணப்பட வேண்டிய முஸ்லிம் கல்விப் பிரச்சினைகளில் இதையும் இணைத்துக் கவனயீர்ப்புச் செய்தார். 1981வரை செயற்பட்டு பின்னர் செயற்பாடிழந்துபோன முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டார கல்வி அமைச்சரானபோது மீண்டும் 1989 ஒக்டோபரிலிருந்து முதலாம்தரப் பணிப்பாளரின் கீழ் இயங்கத் தொடங்கியது. 28.11.1980இலும், மார்ச், ஜூன், 1989 களிலும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு முன்வைத்த கோரிக்கைகள் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவின் மீளியக்கத்துக்குக் காரணமாயிற்று. கல்வி அமைச்சர் லொக்குபண்டாரவுக்கு 08.12.1989இல் எழுதிய கடிதத்தில் மாநாட்டின் சார்பில் ஷாபிமரிக்கார் முஸ்லிம் பாடசாலை கள் பிரிவின் மீளியக்கத்துக்கு உதவியமைக்காக நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

இப்பிரிவு தமிழ்மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளை மட்டுமின்றி சிங்களமொழி மூல முஸ்லிம் பாடசாலைகளையும், அப் பாடசாலைகளில் சிங்களமொழி, அரபு மொழி கற்றல் கற்பித்தலையும் மேற்பார்வை செய்ய வேண்டியிருக்கிறது. முஸ்லிம் தேசிய பாடசாலைகளை மேற்பார்வை செய்வதையும் கூட இப் பிரிவு மேற்கொள்ளலாம் என்ற கருத்தும் ஷாபிமரிக்காருக்கிருந்தது. அதனாற்றான் அப் பிரிவு முதலாம்தரப் பணிப்பாளரின் கீழ் இயங்கவேண்டும் என்பதில் ஷாபிமரிக்கார் கூடிய கரிசனை காட்டினார்.

"This unit re-established in the Ministry of Education as from October 1989 is responsible for a variety of funtions. At present it is headed by a Grade One Director of Education with a 'seconded' teacher to assist.

We strongly recommend the following measures to enable the unit to function effectively:

(a) A separate financial allocation be made available to this unit

(b) A Chief Education Officer (Arabic) and a Muslim Staff Officer (Class 2-SLEAS) as co-ordinator be attached to this unit

(c) At least one Muslim clerk be appointed

(d) Office equipment eg. Tamil, English typewriters to be provided

(e) A Sinhala – qualified Muslim officer to coordinate the teaching of Sinhala in Muslim Schools to be appointed

We have already suggested that a) the supervision and co-ordination of the teaching of Islam in Muslim Schools and to Muslim children in other schools be transferred to the Muslim Schools unit from the present Religious (Privena) Division: b) the monitoring of the reconstruction and rehabilitation of Muslim Schools damaged or abandoned during the ethnic crisis in the North and East be also undertaken by this unit. The Muslim Schools unit can also coordinate as a liaison unit for

(i) The Religious Advisory Committee for Islam of the Ministry

(ii) The Arabic Study Association (set up by the Education Ministry a few decades ago)

The transfer of the promotion of the teaching of Islam and the Ministry Religious Advisery Committee for Islam from the Religious and pirivena unit to the Muslim Schools unit would relieve the Director, Religious and privena unit at present of a good portion of his burden.

The advancement of Muslim Schools in particular and the promotion of the Muslim Education in general, depends to a large extent on the strengthening of the Muslim Schools unit in the Ministry of Education"

என்று 1989இல் மீளியக்கம்பெற்ற கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு பலப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தையும், அப்பிரிவு ஆற்ற வேண்டிய பணிகளையும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிகைக்காக 27.11.1991இல் ஷாபிமரிக்கார் அனுப்பிவைத்த மகஜரில் தெரிவித்திருந்தார்.

9.3 பாடசாலைக் கொத்தணி முறைமை

கொத்தணி முறை 1981ஆம் ஆண்டைய வெள்ளையறிக்கையின் சர்ச்சைக்குரிய விடயமாகவிருந்தது. ஒவ்வொரு கொத்தணியும் ஏறக்குறைய 10 பாடசாலைகளையும் 3000-5000 மாணவர்களையும் கொண்டிருக்கும் என்று வெள்ளையறிக்கை ஏற்பாடுசெய்திருந்தது. மூலாதாரப் பள்ளிக்கூட அதிபரே கொத்தணி அதிபராகவும் இருப்பாரென்றும் அவரே நிதி ஒதுக்கீடு, வளப்பங்கீடு, பாடசாலைகளின் நிருவாக முகாமை என்பனவற்றையெல்லாம் செய்வாரென்றும் வெள்ளையறிக்கை ஏற்பாடு செய்தது. கல்வியில் பாடசாலை களுக்கிடை சமத்துவத்தைப் பேணுவதே இத்திட்டத்தின் நோக்கமாக

விருந்தது. ஆயினும், கொத்தணிமுறையின் கீழ் தமிழ்மொழிமூல முஸ்லிம், தமிழ்ப் பாடசாலைகள் சிங்களக் கொத்தணி அதிபரினால் புறக்கணிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. ஒரே மொழியைப் பேசும் கொத்தணிப் பாடசாலைகளில் கூட செல்வாக்குள்ள சாதி, இனங்களைச் சேர்ந்த கொத்தணி அதிபர்களினால் செல்வாக்கற்ற சாதி, இனப்பாடசாலைகள் புறக்கணிக்கப்படவும் வாய்ப்பிருந்தது. இவற்றிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் வகையில் சில இடங்களில் ஒரு இனத்திற்கெனத் தனிக் கொத்தணி அமைப்பதும் கொத்தணித் தத்துவத்திற்கு முரணானது. அது கொத்தணிக்குள் கொத்தணியாகிவிடும். எனவேதான், மாநாட்டின் தலைவர் ஷாபிமரிக்கார் வெள்ளையறிக்கை 12.09.1981இல் வெளிவந்ததும் விசேட குழுவொன்றையும் மாவட்டக்குழுக்களையும் அமைத்து வெள்ளையறிக்கையை சமூகத்தின் தெளிவான அறிகைக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தினார். ஈ.எல்.விஜேமான்னவை அழைத்து மாநாட்டு நிருவாக சபை உறுப்பினர்களுக்கு வெள்ளையறிக்கை பற்றித் தெளிவு படுத்தினார். கல்வி அமைச்சைச் சேர்ந்த திருமதி மல்லிகா சமரநாயக்காவின் சொற்பொழிவையும் 04.08.1982இல் மாநாட்டினருக்கு ஷாபிமரிக்கார் ஏற்பாடு செய்திருந்தார். முன்னாள் கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூதும் யு.என்.பி. அரசாங்கத்தின் கொத்தணி முறைமீதான தனது அதிருப்தியை அப்போது வெளிப்படுத்தியிருந்தார்.

> "பல இனங்கள் சேர்ந்து வாழும் நாட்டிற்கு கொத்தணி முறை ஏற்றதல்ல. விசேடமாக அது முஸ்லிம்களைப் பாதிக்கும். பல புதிய பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும். கொத்தணிக்குள் தனித்து ஒரு முஸ்லிம் பாடசாலையோ அல்லது தமிழ்ப் பாடசாலையோ அகப்பட்டுவிட்டால் அதனால் எப்படி இயங்கமுடியும்? கொத்தணிப் பாடசாலை அதிபர் சிங்களவராக இருக்க அதன் கீழ் தமிழ்ப் பாடசாலை வரும் பொழுதோ அல்லது அதிபர் தமிழராக அல்லது முஸ்லிமாகவிருக்கையில் அதன் கீழ் சிங்களப் பாடசாலைகள் வரும் பொழுதோ அங்கு மொழிப் பிரச்சினை ஒரு பிரதான பிரச்சினையாக உருவெடுக்கும். சிங்கள ஆசிரியர்களை எப்படி தமிழ்ப் பாடசாலைகளுக்கும் தமிழ் ஆசிரியர்களை எப்படி சிங்களப் பாடசாலைகளுக்கும் பரிவர்த்தனை செய்வது? தளபாடங்களைப் பரிவர்த்தனை செய்வதிலும் பாரிய பிரச்சினைகள் ஏற்படலாம். பாடசாலைகள் தூர இடங்களில் இருந்தால் விளையாட்டு மைதானத்தைப் பாவிப்பதும் அதிக செலவுக்குரிய விடயமாகிவிடும்" (எங்கள் தலைவர் பதியுத்தீன், 1989: 1037-1038)

என்று கொத்தணி முறைக்கெதிரான தனது கருத்தை பதியுத்தீன் மஹ்முத் 28.12.1981இல் பத்திரிகைகளுக்குத் தெரிவித்து முஸ்லிம் கல்வி மாநாட்டின் கருத்துடன் உடன்பட்டு நின்றார்.

காத்திரமான மேற்பார்வை, வளப்பகிர்வு நோக்கில் பாடசாலைக் கொத்தணி முறையை ஷாபிமரிக்கார் ஆதரித்தார். ஆயினும், முஸ்லிம்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாடசாலைக் கொத்தணிகள் தமிழில் இயங்குவதால் முஸ்லிம்களுக்கு பாதிப்பில்லாமல் சிறப்பாக இயங்குவதாகவும், அவ்விரு மாகாணங்களுக்கும் வெளியே சிங்கள மொழிமூலப் பாடசாலைகள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் தமிழ் மொழிமூலம் இயங்கும் முஸ்லிம் பாடசாலைகள் பல பிரச்சினைகளை கொத்தணி முறையின் கீழ் எதிர்நோக்குவதாகவும் அன்றைய கல்வி அமைச்சருக்கு ஷாபிமரிக்கார் 24.11.1987இல் எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டினார். மொழி அடிப்படையில் பாடசாலைக் கொத்தணிகள் அமைவதை ஷாபிமரிக்கார் விரும்பினார். வாய்பான இடங்களில் முஸ்லிம் பாடசாலைகளை தனிப் பாடசாலைக் கொத்தணியாக்குவதையும் அவர் ஆதரித்தார். கல்வி அமைச்சர் லொக்குபண்டாரவுக்கு 08.06.1989இல் எழுதிய கடிதத்தில் அவர் இக் கருத்தைத் தெரிவித்திருந்தார். இம்முறைமை தொடரவேண்டுமாயின் கல்விமொழி அடிப்படையில் கொத்தணி முறை மீளமைக்கப்பட வேண்டுமென்பது ஷாபிமரிக்காரின் கருத்தாகவிருந்தது.

> "If the Ministry is having second thoughts regarding the School cluster system, in the interest of all schools it is best to come to a decision and announce the changes without any further delay. As far as Muslim Schools are concerned the cluster- system has not benefitted the Muslim Schools in the multi-media cluster by way of either supervision or sharing of resources. We recommend that the Muslim schools in an Education Division or Divisions, depending on the number, be brought under an executive Principal"

என்று ஒரு மொழியே முழுநாட்டினதும் கல்வி மொழியாக இருக்கும் ஒரு நாட்டுக்குப் பொருத்தமான இக் கொத்தணி முறைமை முஸ்லிம் பாடசாலைகளுக்கு நன்மை தராதென்ற உண்மையை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு 27.11.1991இல் ஷாபிமரிக்கார் எத்திவைத்தார்.

9.4 உத்தேச கல்விச்சீர்திருத்தம் - 1997

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகவும் றிச்சட் பத்திரண கல்வி உயர்கல்வி அமைச்சராகவும் இருந்தபோது கொணரப்பட்ட 1997ஆம் ஆண்டைய கல்விச் சீர்திருத்தம் பற்றிய கலந்துரையாடலொன்று அ.இ.மு.க. மாநாட்டின் ஏற்பாட்டில் ஷாபிமரிக்காரின் தலைமையில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் 28.06.1997இல் நிகழ்ந்தது. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவரும் மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின்

பணிப்பாளர் நாயகமுமான பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க அக்கலந்துரையாடலைத் தொடக்கி வைத்தார். உத்தேச கல்விச்சீர்திருத்தங்கள் பற்றிய அரசாங்க விளம்பரம் பத்திரிகைகளில் 17.08.1997 இல் வெளியிடப்பட்டதும், அது தொடர்பில் ஷாபியின் செயற்பாடும் துரிதமடைந்தது. அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாக சபை உறுப்பினர்கள், முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கெல்லாம் இது பற்றி 17.08.1997இல் எத்தி வைத்து அவர்களின் கருத்துக்கள், அபிப்பிராயங்களையும் அவர் கோரியிருந்தார்.

'புதிய கல்விச் சீர்திருத்தம்' என்ற தலைப்பில் கடிதமொன்றை அச்சிட்டு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் நிருவாக சபை உறுப்பினர்கள், முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக் கெல்லாம் அனுப்பிவைத்தார்.

> "நாட்டில் கல்வித் துறையில் பாரிய மாற்றங்களைச் செய்ய அரசு உத்தேசித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த வருட இறுதியில் உத்தேச மாற்றங்கள் பற்றி பல்வேறு மட்டங்களில் ஆராயப்பட்டுள்ளன.
>
> கல்வி உயர் கல்வி அமைச்சு அண்மையில் உத்தேச கல்விச் சீர்திருத்தங்கள் பற்றி 1997 ஆகஸ்ட் 17ஆம் திகதி சண்டே ஒப்ஸேர்வர், சிலுமின, தினகரன், தி ஐலண்ட், த சண்டே டைம்ஸ் ஆகிய பத்திரிகைகளில் உத்தியோகபூர்வ அறிக்கைகளை வெளியிட்டது.
>
> கல்வியில் ஆர்வமுள்ள நீங்கள் அவற்றைப் படித்துப் பார்த்து உத்தேச சீர்திருத்தங்கள் தொடர்பாக ஏற்கனவே உள்ள மாற்றங்கள் பற்றியும் பரிசீலனை செய்திருப்பீர்கள் என நினைக்கிறோம்.
>
> ஆகவே தயவுசெய்து குறித்த கல்விச் சீர்திருத்தம் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் ஆகியவற்றை அனுப்பிவைப்பீர்கள் என்றால் வரவேற்போம். தயவு செய்து அவற்றை 1997 நவம்பர் 25ஆம் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்."

என்று அமைந்திருந்தது அவர் அனுப்பிவைத்த கடிதத்தின் வாசகங்கள். அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டு நிருவாக சபைத் தலைவர் ஷாபிமரிக்கார் 28.10.1997இல் அனுப்பி வைத்த அக்கடிதம் அவரின் முஸ்லிம் கல்வி பாலான அக்கறையை, சமூகமும் அதன்பால் கவனம் செலுத்த வேண்டுமென்ற அவரின் ஆவலை, தேசியக் கல்விபால் முஸ்லிம்களை ஆற்றுப்படுத்தி நெறிப்படுத்த அவர் செய்த பிராயத்தனத்தை, அவரின் சமூகப்பற்றைக் காட்டியது.

துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சில், அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ர.்ப் தலைமையிலும் 1997இன் கல்விச்சீர்திருத்தம் பற்றிய

கருத்தரங்கொன்று 25.03.1998இல் நிகழ்ந்தது. அவ்வமைச்சின் புனர்வாழ்வுப் பணிப்பாளராகவிருந்த நான் அதனை ஏற்பாடு செய்திருந்தேன். கலாநிதி ஏ.எம். சஹாப்தீன், பேராசிரியர் ஜிப்ரி, எச்.எம். பாறூக் (கல்விச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர்), எம். சமீம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்), எம்.எம். குத்தூஸ் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்), ஏ.ஆர்.ஏ. அஸீஸ் (அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரித் தலைவர்), ஏ.சி.எம். இப்றாஹிம் (பரீட்சைகள் திணைக்கள மேலதிக ஆணையாளர்), கே.எம். வஸீர் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), ஏ.ஆர்.ஏ. நயீம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), எம்.ஐ.எஸ்.ஏ. கலீல் (கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவு, தனியார் பாடசாலைகள் பணிப்பாளர்), எஸ். நல்லையா (மேல் மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்), எஸ்.எச்.எம். ஜெமீல் (கலாசார அமைச்சு), ஏ. ஸி.எம். றாசிக் (மேலதிக செயலாளர், கலாசார அமைச்சு), ஜுரம்பதி (அதிபர், கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி), திருமதி றஹ்மான் (திட்டப் பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்), சூடின் ஆகியோருட்பட பல பிரபல கல்விமான்களும் கல்வி நிருவாகிகளும் அக்கலந்துரையாடலில் பங்கு கொண்டனர். றஊப் ஹக்கீம் (குழுக்களின் பிரதித் தலைவர்), ஹிஸ்புல்லா (பிரதி அமைச்சர்), எம்.எம். சுஹைர், (பா.உ.), மஷ்ஹூர் மௌலானா (முன்னாள் செனட்டர்), நஜீப் மஜீத் (பா.உ.) எம்.ரி.ஏ. ஹசனலி, திருமதி பேரியல் அஷ்ர.ஃப் ஆகியோரும் இதில் பங்கு கொண்டனர். இக்கலந்துரையாடலில், 'பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை' பற்றி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் எஸ். பத்மநாதனும், 'உயர் கல்வியில் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' பற்றி பேராசிரியர் எஸ். சந்திரசேகரனும், 'புதிய கல்வித் திட்டத்தில் ஆரம்பக் கல்வி எதிர் நோக்கும் பிரச்சினைகள்' பற்றி தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த எம்.பி. ஷிப்ளியும்,'ஆசிரியர் கல்வி' பற்றி ஏ.ஆர்.ஏ. அஸீஸும், 'பாடசாலை முகாமைத்துவம்' பற்றி எஸ். நல்லையாவும், 'தொழில் நுட்பச் செயன்முறைத் திறன்' பற்றி எம்.எச்.ஏ. சமதும் விளக்கிக் கூறினர். கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பொதுவாகவும், பாடசாலைகளில் அரபு மொழி கற்பித்தல் பற்றிச் சிறப்பாகவும், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் தெளிவுபடுத்தினார். அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாக சபைத் தலைவர் என்ற வகையில் அவரின் கருத்துக்கள் பல சந்தேகங்களுக்கு விளக்கம் தருவனவாக அமைந்திருந்தன. தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக, கலாநிதி கே.டி. அருள்பிரகாசம், ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி தாரா டி மெல் ஆகியோரும் இக்கருத்தரங்குக்கு வருகை தந்திருந்தனர்.

'கல்விச் சீர்திருத்தம்-1997' பற்றி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகத்தில் 27.02.1999இல் நிகழ்ந்த கருத்தரங்கிலும் ஷாபிமரிக்கார் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவர் என்ற வகையில் கலந்து கொண்டு கருத்துரை நிகழ்த்தினார்.

அ.இ.மு.க. மாநாட்டின் ஏற்பாட்டில் 'புதிய கல்விச் சீர்திருத்தமும் முஸ்லிம் பாடசாலைகளும்' என்ற தலைப்பில் கருத்தரங்கொன்று கொழும்பு ஸாஹிறாவில் 04.09.1999இல் நிகழ்ந்தது. கலாநிதி எச்.ஜி. ஹுசைன் இஸ்மாயில், எஸ்.ஏ.ஸி.எம். இனானு (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), எஸ். எம். கமால்தீன், எம்.எச்.எம். ஹஸன் (திட்ட அலுவலர், தே.க.நி.), எஸ். எச்.எம். ஜெமீல் ஆகியோர் அவ்வரங்கில் உரை நிகழ்த்தினர். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதையிட்டு ஏற்கனவே 11.11.1998இல் எத்திவைத்திருந்தார் ஷாபிமரிக்கார்.

முஸ்லிம் கல்விப் பிரச்சினைகள் பற்றி தெளிவும் விளக்கமும் அளிக்கவென அ.இ.மு.க. மாநாடு 26.11.2000இல் ஸாஹிறாக் கல்லூரியில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலாநிதி ஹுசைன் இஸ்மாயில், மௌலவி எம்.ஜே.எம். றியாழ், எம்.என். மிஹ்லார், ஏ. எச்.ஏ. லத்தீப் (செயலாளர், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்), எம்.ஐ.எஸ்.ஏ. கலீல் (பணிப்பாளர், முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு), அல்-ஆலிம் ஏ.ஆர்.எம். ஸறூக், டாக்டர் எம்.ஸி.எம். மகேஸ், எஸ்.எம். கமால்தீன் ஆகியோர் பிரசன்னமாகவிருந்து பிரச்சினைகளுக்கு விளக்கமளித்தனர்.

9.5 சிங்கள மொழிமூல முஸ்லிம் மாணவர் பிரச்சினைகள்

முஸ்லிம் மாணவர் கணிசமான தொகையினராகக் கற்கும் கொழும்பில் உள்ள 15 அரசினர் சிங்களப் பாடசாலைகளிலும், கொழும்புக்கு வெளியே சிங்கள மொழிமூலம் முஸ்லிம் மாணவர் கற்கும் சிங்களப் பாடசாலைகளிலும் ஒரு முஸ்லிம் ஆசிரியரேனும் இல்லாதிருப்பதை ஷாபிமரிக்கார் அன்றைய கல்வி அமைச்சரின் கவனத்திற்கு 24.11.1987இல் கொண்டு வந்திருந்தார். கணிசமான முஸ்லிம் மாணவர்கள் சிங்கள மொழிமூலம் சிங்களப் பாடசாலைகளில் கற்பதால் இஸ்லாம், அரபு மொழி கற்றல்-கற்பித்தல் சரியாக நடைபெறுவதில்லை. அது மேற்பார்வை செய்யப்படுவது அவசியம். இதற்காக சிங்கள மொழியில் தேர்ச்சியுள்ள முஸ்லிம் கல்வி அதிகாரி (அரபு-இஸ்லாம்) ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவில் இணைக்கப்படுதல் வேண்டுமென்றும், கல்வி அமைச்சர் லொக்குபண்டாரவுக்கு 08.12.1989இல் அனுப்பிவைத்த மகஜரொன்றில் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார். தொடர்

மதிப்பீட்டு முறை அமுலிலிருந்த அக்காலத்தில் இஸ்லாம் பாட ஆசிரியர்கள் அப் பாடசாலைகளில் இல்லாதிருந்தமை முஸ்லிம் மாணவர்களை வெகுவாகப் பாதித்தமை பற்றியும் அமைச்சருக்கு ஷாபிமரிக்கார் அக் கடிதத்தில் விளக்கிச் சொல்லியிருந்தார்.

> "While there are no teachers to teach Islam in these schools, the position has become extremely urgent in view of the continuous assessment scheme at present in operation where teachers are expected to assess the work of students in years 09,10 and 11 for the G.C.E.(O/L) examination"

என்று சிங்களப் பாடசாலைகளில் சிங்களமொழிமூலம் கற்கும் முஸ்லிம் மாணவர் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அமைச்சரின் கவனத்திற்குக் கொணர்ந்த ஷாபி, அதற்கான சிறந்த தீர்வொன்றையும் அமைச்சருக்குப் பரிந்துரைத்தார்.

> "We find that a quite number of Muslim-Sinhala qualified teachers are appointed to Sinhala Schools which have no Muslim pupils. In view of the urgent need for Muslim teachers to teach Sinhala, we urge that Sinhala trained Muslim teachers be appointed in the first instance to Muslim Schools with Sinhala streams, and secondly to Sinhala Schools with Muslim pupils"

என்பதே ஷாபி பரிந்துரைத்த பிரச்சினைக்கான தீர்வு. தகுதிவாய்ந்த சிங்களமொழிமூல முஸ்லிம் ஆசிரியர்களை முதலாவதாக சிங்களமொழிமூல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் அடுத்ததாக, முஸ்லிம் மாணவர் கற்கும் சிங்களப் பாடசாலைகளுக்கும் நியமிக்குமாறு ஷாபி செய்த பரிந்துரை அப்பிரச்சினைக்கான சிறந்த தீர்வாக அமைந்திருந்தது. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முஸ்லிம் கல்வி மாநாடு 27.11.1991இல் அனுப்பிவைத்த மகஜரிலும் ஷாபிமரிக்கார் இதனை அழுத்திக் கூறியிருந்தார்.

> "Special attention to be paid to the teaching of Islam to Muslim pupils in Sinhala medium schools. The Ministry to ensure that these pupils if their number is over 15 in a school are taught Islam in the Sinhala medium by competent Muslim teachers. In the western province alone, there are 20,317 Muslim pupils studying in the Sinhala medium in 576 Sinhala Schools for the majority of whom no provision has been made for the teaching of Islam in these schools.
>
> When giving appointments to new Moulavi teachers, preference be given to those who have passed the G.C.E.(A/L) examination in Islam / Islamic Civilization in Sinhala medium so that such teachers may be appointed to teach these subjects in the Sinhala medium"

என்று சிங்கள மொழிமூலம் கற்கும் முஸ்லிம் மாணவர்களின் இஸ்லாம் கற்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் பற்றி முஸ்லிம்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்த மகஜரில் முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவர் ஷாபிமரிக்கார் தெரிவித்திருந்தார்.

சிங்கள மொழிமூலம் கற்கும் மாணவர்கள் பயன்படுத்தத்தக்க இஸ்லாம் பற்றிய சிங்கள நூல்களும் வெளியீடுகளும் குறைவாகையால் அது பற்றிய கரிசனையும் ஷாபிக்கிருந்தது. அதனால் சிங்கள மொழிமூல இஸ்லாம் பாட நூல் விநியோகத்தைத் தாமதப்படுத்தாது உரிய காலத்தில் கிடைக்கச் செய்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கில் அதையிட்டும் 28.11.1980இல் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தை ஷாபிமரிக்கார் ஈர்த்திருந்தார்.

> "As there are only very few publications on Islam in the Sinhala medium, it is essential that the Sinhala medium Text Books in Islam for all grades be issued without any further delay"

என்று அமைந்திருந்தது அவர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செய்த முறையீடு. இப்பிரச்சினைக்குத் தீர்வாக கம்பளை ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதியுத்தீன் மஹ்முத் தனது கல்லூரியில் அமுல் செய்த திட்டமும் இங்கு கவனத்திற்குரியது.

> "இஸ்லாம் மதத்தைப் பற்றிய புத்தகங்கள் சிங்களத்தில் இன்னும் எழுதப்படாமல் இருந்தாலும் நான் அக் குறைபாட்டை நீக்குவதற்காக எங்களது கல்லூரியிலே வெளியீட்டுக் குழு ஒன்றை ஏற்படுத்தி மதப் புத்தகங்களை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளேன். அதன் பிரதான வழிகாட்டியாக வேலைசெய்வதற்காக பிரபல பல்கலைக்கழகத்தில் கல்விபயின்ற கே.இன்ரசாச என்னும் பிக்குவை நியமித்துள்ளமையை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதன் பெறுபேறாக முஸ்லிம் கதைக் கொத்தில் ஒரு பாகத்தைச் சிங்களத்திற்கு மொழி பெயர்த்துள்ளோம். என்னால் மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்ட அந்தப் புத்தகம் மிகக் கெதியில் வெளியிடப்படும். இதனால் சிங்கள மக்களுக்கும் இஸ்லாம் பற்றியுள்ள தப்பபிப்பிராயங்களை நீக்கிக் கொள்ள இயலுமாக இருப்பதோடு இஸ்லாம் பற்றி நல்ல அபிப் பிராயத்தையும் ஏற்படுத்திக் கொள்ள இயலும்" (எங்கள் தலைவர் பதியுத்தீன், 1989:332)

என்று சிங்களமொழிமூல மாணவர்களின் நலன்கருதி கம்பளை ஸாஹிறாக் கல்லூரியில் தான் அறிமுகப்படுத்திய திட்டத்தை பதியுத்தீன் குறிப்பிட்டுச் சொன்னார்.

முஸ்லிம் பாடசாலைகள் தமிழ்வட்டாரக் கல்வி அதிகாரிகளின் மேற் பார்வையில் இயங்குகின்றன. அப் பாடசலைகளில் உள்ள சிங்களத்துறையும் தமிழ் வட்டாரக் கல்வி அதிகாரியின் கீழ் இயங்கவேண்டி ஏற்படுவதால் பாடப்புத்தக விநியோகமும், ஏனைய தேவைகளும் சிங்களத் துறைக்குச்

சரியாகக் கிடைப்பதில்லை. எனவே, முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள சிங்களத்துறைகளின் மேற்பார்வை சிங்கள வட்டாரக் கல்வி அதிகாரிகளின் கீழ்க் கொணரப்படவேண்டுமென்று ஷாபிமரிக்கார் அபிப்பிராயம் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தமிழ்மொழிமூல முஸ்லிம் பாடசாலையிலாவது சிங்கள மொழிமூல கற்கை நெறிகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணமும் ஷாபிமரைக்காருக் கிருந்தது.

9.6 முஸ்லிம் முன்பள்ளிகள்

பள்ளிவாசல்களை அண்டிய பொருத்தமான இடங்களில் முஸ்லிம் முன் பள்ளிகள் அமைய வேண்டுமென்றும், அவ்வாறு அமையும் முன்பள்ளிகளை நடத்துவதற்குப் பொருத்தமானவர்கள் மௌலவியாக்களே என்றும், அவர்களுக்கு முன்பள்ளிகளை நடாத்துவது சம்பந்தமாக பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் ஷாபிமரிக்கார் கருதினார்.

9.7 கொழும்பு முஸ்லிம் பாடசாலைகள்

அனேக கொழும்பு முஸ்லிம் பாடசாலைகள் இடவசதியின்மையால் இருவேளைப் பாடசாலைகளாக இயங்குகின்றன. அப்பாடசாலைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவற்றையெல்லாம் ஒரு நேரப் பாடசாலைகளாக்க வேண்டுமென்று அப்போதைய கல்வி அமைச்சர் லலித் அதுலத்முதலியை ஷாபிமரிக்கார் 20.06.1990இல் கேட்டிருந்தார்.

10 சமயக் கல்வியின் காவலன்

பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் சமயக் கல்வி இடம்பெறவேண்டியதன் அவசியத்தை வெகுவாக வலியுறுத்தினார் ஷாபிமரிக்கார். இஸ்லாத்தின் ஆரம்பகால முஸ்லிம்களின் கல்விச் செழிப்பையும் அவர்களின் பிற்காலப் பின்னடைவையும் ஒப்பிட்டு நோக்கி சமூகத்தின் அறிகைக்கும் எத்திவைத்தார்.

> "முகம்மது நபியின் உபதேசங்கள் இஸ்லாத்தின் விலைமதிப்பற்ற முதுசொமாகி உலகம் இதற்குமுன் கண்டிராத வளமிக்க நாகரிகமொன்றினைத் தோற்றுவிக்க அடிப்படையாக அமைந்தன. கணிதம், வானியல், மருத்துவத்துறைகளில் முஸ்லிம்கள் தேடுகையும் ஆய்வுகளும் செய்து பல புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்களித்தனர். ஆயினும், இலங்கையில் ஏனைய இனங்கள் கல்வியை ஆர்வத்துடன் கற்று பெருமளவு முன்னேற்றம் கண்டபொழுது வளமிக்க முதுசொத்துக்குச் சொந்தக்காரர்களான முஸ்லிம்கள் பின்னடைந்தனர்"

என்று 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியிலும் இலங்கை முஸ்லிம்களின் கல்விப் பின்னடைவுபற்றி ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொன்னார் (Zahira College 85th Anniversary Souvenir-1892-1977). கல்வியில் முஸ்லிம்கள் அடைந்த பின்னடைவுக்கான காரணங்கள் பற்றிய ஷாபியின் தேடுகையில் பல விடயங்கள் அடையாளம் காணப்பட்டன.

> "There were many factors which contributed to this end. The Muslims as a group were deeply religious and were distrustful of the materialistic outlook engendered by western education which would have a baneful influence upon the young. Besides, the Muslims were successful businessmen and were confident that western education would by no means advance the cause of business" (Zahira College 85th Anniversary Souvenir 1977)

என்று மேநாட்டுக் கல்வியில் இலங்கை முஸ்லிம்கள் ஆர்வம் கொள்ளாமைக்கான காரணங்களை அடையாளம் காண்கிறார் ஷாபிமரிக்கார். முஸ்லிம்களின் ஆழ்ந்த சமய நம்பிக்கை, மேநாட்டுக் கல்வி, இளைஞர்கள் மீது தீய செல்வாக்கைச் செலுத்தும் என்ற பயம், தாம் மேற்கொள்ளும் வியாபார

முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேநாட்டு கல்வியினால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை என்ற எண்ணம் என்பனவெல்லாம் மேநாட்டு கல்விபால் முஸ்லிம்களை நாட்டம் கொள்ளாமற் செய்தது என்று ஷாபிமரிக்கார் கருதினார்.

10.1 பாடசாலைகளில் சமயக் கல்வி

> "நல்லொழுக்கம் ஒருவனில் உருவாவதற்கு வித்திடுவது அவனின் வீடும் குடும்பமும் என்பதை நான் எடுத்துக் கூறத்தேவையில்லை. பாடசாலை ஒரு மாணவனின் வீட்டின் இடத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனெனில், மாணவனின் சூழலில் பாடசாலை என்பது ஒரு சிறிய அங்கமே.குடும்பம்தான் குழந்தைகளுக்கு ஆரம்பப்பாடசாலையாகும். அதில் கற்பதுதான் குழந்தையின் மனதில் இறுதிவரை நிலைத்திருக்கும். அண்டை அயலாரின் கலாசாரத்தன்மையும் கல்வியின் ஒரு பிரதான அம்சமே. ஒழுக்கசீலமும் பண்பாடும் நிறைந்த ஒரு பகுதியில், நல்லொழுக்கத்திற்கொரு முன்மாதிரியாய் அமையக்கூடிய உத்தமர் கள் வாழும் பகுதியில் வளர ஒரு குழந்தைக்கு வாய்ப்புக் கிட்டினால் அக் குழந்தை நல்ல அதிஷ்டம் படைத்த குழந்தை எனக் கூறிவிடலாம். பாடசாலை, வீடு, சுற்றுப்புறச்சூழல் ஆகிய மூன்றின் ஒத்துழைப்பின் மூலம்தான் 'நாளாந்த வாழ்க்கைக்கான அத்திவாரம் சமயமே' என்ற அரசாங்கத்தின் குறிக்கோள் நிறைவேற வழிபிறக்கும்" (Shafie Marikar S.L.M., August 1978)

என்று ஒரு மாணவனின் வாழ்வில் பாடசாலை, வீடு, சுற்றுப்புறச்சூழல் என்பன பெறும் முக்கியத்துவத்தை ஷாபிமரிக்கார் விளக்கிச் சொன்னார். அதன் மூலம் ஒரு மாணவனின் சமய அறிவை மேம்படுத்துவதில் இம் மூன்றினதும் தாக்கத்தையும் கோடிட்டுக் காட்டினார். 'த கிறசன்ட் - ஆகஸ்ட் 1978' இதழில் 'சமயக் கல்வி'என்ற தலைப்பில் அவர் எழுதிய முகப்புக் கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுக் கூறியிருந்தார். அதே கட்டுரையில்,

> "1960இல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பு பல்வேறு மதங்களைச் சேர்ந்த நிறுவனங்கள் நடத்திவந்த மதச்சார்புள்ள பாடசாலைகளில் அவ்வச் சமயச் சூழல் பூரணமாக நிலவி வந்தது. பாடசாலைகளில் இன்று காணப்படும் கட்டுப்பாடற்ற நிலையின் வளர்ச்சிக்கும், தேசம் முழுவதிலும் பரவலாகக் காணப்படும் சட்டவிரோதச் செயல்களின் பெருக்கத்திற்கும், அந்நிலை நமது தேசிய வாழ்வின் இன்றைய பிரதான அம்சமாகப் பரிணமிப் பதற்கும் பெருமளவுக்கு உறுதுணையாக அமைந்தது, 1960இல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற அந்த துர்ப்பாக்கிய சம்பவமே. மதச்சார்புள்ள பாடசாலைகளுக்கே உரித்தான தனித்தன்மைவாய்ந்த சூழல், அரசாங்க பாடசாலைகளின் கல்விப்போதனைகளில் இல்லாதிருப்பதே அதற்கான காரணம்" (Shafie Marikar S.L.M., August 1978)

என்றும் ஷாபிமரிக்கார் எழுதிவைத்திருக்கிறார். அரசாங்கப் பாடசாலைகளை விட தனியார் பாடசாலைகளிலேயே மதச்சூழல் சிறப்பாக அமைந்திருக்கும் என்பது அவரின் கருத்து. மதச்சார்புள்ள, மதச்சார்பற்ற அல்லது வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுவோர் வாழும் ஒரு நாட்டில் அரசாங்க பாடசாலைகளில் சமயம் கற்பிப்பதும் சமய விழுமியங்களைக் கற்பிப்பதும் சிக்கலான விடயம் என்ற உண்மையை உணர்ந்திருந்தவர் அவர். அமெரிக்க அரசாங்க பாடசாலைகளில் சமயக் கல்வி கற்பிக்கப்பட வேண்டியதில்லை என்பது அமெரிக்கக் கல்வியியலாளர் ஜோன் டூயியின் கருத்து. இச்சிக்கலான பிரச்சினைக்கு நிவாரணம் தனியார் பாடசாலைகளே என்று ஷாபிமரிக்கார் கருதியதிலும் நியாயமிருக்கிறது. தன் சொந்தச் சமயம் இல்லாத வேறொரு சமயத்தை மாணவருக்குக் கற்பிக்கக் கூடாதென்பதிலும் ஷாபிமரிக்கார் திடமான நிலைப்பாடுடையவராக விருந்தார்.

> "பாடசாலைப் பொதுக் கல்வியில் சமயக் கல்வியின் முக்கியத்துவத்தை அவர் (ஷாபிமரிக்கார்) வலியுறுத்தினார். பாடசாலைகளில் எல்லா மாணவருக்கும் சமய பாடம் கட்டாய பாடமாகவிருக்க வேண்டுமெனவும் சமயம் கற்பிப்பதற்கு அதிக பாடவேளைகள் ஒதுக்கப்பட வேண்டுமெனவும் அவர் வாதிட்டார்... 1980ஆம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கையில் 'சமயம்' என்பதற்குப் பதிலாக எல்லா மாணவருக்கும் 'ஒழுக்கக் கல்வி' (Moral Education) என்ற பாடத்தை அறிமுகம் செய்ய வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்தது. ஷாபிமரிக்கார் ஏனைய சமயப் பெரியார்களுடன் இணைந்து இதனைத் தடுத்தார். சில சந்தர்ப்பங்களில் சமயபாடத்தைத் தெரிவுக்குரிய பாடமாக (Optional Subject) மாற்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டபோதும் அவர் அதனைப் பலமாக எதிர்த்தார்.
>
> பாடசாலைகளில் சமயபாடத்தைக் கற்பிக்க தகுதியான ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்த காரணத்தால் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் சமய பாடத்திற்கான ஆசிரியர் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்குமாறு அரசைத் தூண்டினார். க.பொ.த உயர் வகுப்பு கலைத்திட்டத்தில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் என்ற இரு பாடங்களையும் உள்ளடக்குவதற்கான முயற்சியிலும் அவர் வெற்றிகண்டார். இஸ்லாமிய அறிவியல்துறையில் விசேட பட்டப் பாடநெறிகளை அறிமுகம் செய்வதற்கு இலங்கையிலுள்ள ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய அறிவியற்பீடம் ஒன்றை அமைக்க வேண்டுமென 1980ஆம் ஆண்டுகளிலே அரசை வலியுறுத்தினார். 2006ஆம் ஆண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய அறிவியல்-அரபுமொழிக்கான பீடம் அமைக்கப்பட்டுள்ளதென்று நான் அவரிடம் குறிப்பிட்ட போது தனது கனவு 20 வருடங்களுக்குப்பின் நனவாகியதை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்." (ஹுசைன் இஸ்மாயில் ஏ.ஜீ., 2007:18)

என்று இலங்கையின் கல்வித் திட்டத்தில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் ஆகிய பாடங்களை இடம்பெறச் செய்ததிலும் அப் பாடங்கள் கலைத் திட்டத்திலிருந்து இல்லாமற்போகாமல் பார்த்துக் கொண்டதிலும் ஷாபிமரிக்காருக்குப் பெரும் பங்கிருப்பதை 'ஷாபிமரிக்காரின் கல்விச் சிந்தனைகள்' என்ற கட்டுரையில் ஹுசைன் இஸ்மாயில் பதிவு செய்திருக்கிறார்.

பாடங்களைப் படித்து பரீட்சையில் சித்திபெற்று தொழில் உலகில் பிரவேசிப்பதற்கே தற்காலக் கல்வி மாணவர்களைப் பயிற்றுவிப்பதால் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக அமையும் சமயமும் அதனோடிணைந்த கலாசாரமும் கைநழுவிப்போகும் ஆபத்திருப்பதை ஷாபிமரிக்கார் சுட்டிக்காட்டினார். விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் புகட்டமுடியாத சமயக் கல்வியையும் அதனோடிணைந்த கலாசார விழுமியங்களையும் போதிப்பதற்கு பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கவேண்டுமென்பது ஷாபிமரிக்காரின் கரிசனையாக விருந்தது. எமது நாட்டுமக்கள் பின்பற்றும் வெவ்வேறு சமய பண்பாட்டு விழுமியங்களை அவ்வச் சமய மாணவர்கள் கற்பதன் மூலமே பல்கலாசார சமூகமொன்றைக் கட்டியெழுப்பலாமென்று அவர் கருதினார். அதன் மூலம் வேற்றுமையில் ஒற்றுமையை, தேசிய நல்லிணக்கத்தை எட்ட முடியும் என்பது அவரின் நம்பிக்கை.

பாடசாலைகளில் சமயக் கல்வி கட்டாய பாடமாகவும் ஜீ.ஸீ.ஈ. (சா.த.) பரீட்சைக்கு ஒரு பாடமாகவும் 11.11.1981இல் அமைச்சரவை அங்கீகார மளித்ததில், ஜீ.ஸீ.ஈ. (சா.த.) பரீட்சைக்கு கல்வி வெள்ளையறிக்கை – 1981 இன் ஏற்பாட்டின் கீழ் சமயபாடம் தவிர்க்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு அகில இலங்கை முஸ்லிம் மாநாட்டின் தலைவர் ஷாபிமரிக்கார் 31.10.1981இல் அனுப்பிவைத்த மகஜருக்கும் பங்கிருக்கிறது.

> "சமயக் கல்விக்கு வெள்ளையறிக்கையில் எந்தவிதமான முன்னுரிமையும் அளிக்கப்படவில்லை. அதேவேளையில் சமயக் கல்வி சம்பந்தமான அறிக்கையொன்று வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது இன்னமும் வெளியிடப்படவில்லை. சமயக் கல்வி சம்பந்தமான அறிக்கை வெள்ளையறிக்கை வெளிவந்தபோதே வெளிவந்திருக்க வேண்டும் - அதில் தாமதம் செய்வதேன்? சமயக்கல்வி பற்றித் தீர்க்கமாக அறிவிக்காமல் இவ்வெள்ளையறிக்கையை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளல் பொருத்தமானதாகுமா?"

என்று பதியுத்தீன் மஹ்மூத் அவர்களும் 28.12.1981இல் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் வினா எழுப்பியிருந்தார் (எங்கள் தலைவர் பதியுத்தீன்

மஹ்மூத், 1989: 1038-1039). சமூகத்தின் கல்வி விடயத்தில் முஸ்லிம் கல்வி மாநாட்டின் தீர்மானங்களுடன் பதியுத்தீன் மஹ்மூத் ஒத்தகருத்துடைய வராகவிருந்தார். சமூகத்தின் நலன்கருதி மாநாடு எடுக்கும் தீர்மானங்களுடன் பதியுத்தீன் மஹ்மூத் முரண்பட்டது கிடையாது.

சமயப்பின்னணியில் கல்வி புகட்டுவதை தான் அதிபராகவிருந்த கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் ஷாபிமரிக்கார் செயற்படுத்திக் காட்டினார். வெள்ளிக் கிழமைகளில் ஜும்ஆத் தொழுகையும் ஏனைய நாட்களில் ழுகர்த் தொழுகையும் பாடசாலை நேர அட்டவணையில் இடம் பெற்றிருந்ததால் ஸாஹிறாக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் கூட்டுத் தொழுகைக்கான வாய்ப்பைப் பெற்றனர். விடுதிமாணவர்கள் ஐவேளைத் தொழுகையையும் மருதானைப் பள்ளிவாசலில் கூட்டாக நிறைவேற்றும் வகையில் நேரஅட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது. அதிபரும், கல்லூரி யின் முஸ்லிம் ஆசிரியர்களும் மாணவர்களுடன் கூட்டுத் தொழுகையில் பங்குபற்றுவதும் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியது. ஞாயிற்றுக்கிழமைகளில் விடுதிமாணவர்களுக்கு சமயச் சொற்பொழிவுகளை விடுதி மௌலவிகள் நிகழ்த்துவதும் வழக்கமாக இருந்தது. கல்லூரியினதும் விடுதியினதும் எல்லா நடவடிக்கைகளிலும் சமயப் பேணுகை இருந்தது. 'இஸ்லாமிய சிந்தனையினதும் செயற்பாட்டினதும் மத்தியநிலையமாக ஸாஹிறா விளங்கவேண்டும்' என்ற ஜாயாவின் எண்ணத்திற்கு ஷாபிமரிக்காரின் செயற்பாடு உயிர்கொடுத்தது. "ஸாஹிறாக் கல்லூரி ஒரு கல்விநிலையம் மாத்திரமன்று. அது இலங்கைக்கு மாத்திரமான ஒரு நிலையமுமன்று. முஸ்லிம் உலகுக்கென அது உருவாக்கப்பட்டுள்ளது" என்ற ஜாயாவின் கருத்தையும் ஷாபிமரிக்கார் தனது செயற்பாடுகளில் கவனத்திற் கொண்டிருந்தார்.

> "நமது பள்ளிகளிலிருந்து உண்மைச் சமயங்களின் செல்வாக்கை ஒதுக்கி விடுவோமாயின் பல்லாண்டுகளாக மனிதனின் ஒழுக்கவளர்ச்சிக்கு வெகுவாகப் பயன்பட்டுவந்த ஒன்றை ஒதுக்கித் தள்ளியவர்களாவோம்"(கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்,1987:631)

என்ற ராஜாஜீயின் கருத்து ஷாபிக்கு இதமளிக்கும். சமயச்சார்பற்ற நாடு எனும்போது நாட்டில் சமயங்களுக்கிடமில்லை என்பது பொருளன்று. நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தத்தம் சமயக்கருத்துக்களுக்குகந்த வகையில் வாழ்க்கை நடத்த உரிமைபெற்றவர்கள் என்பதும் ஒருவனது சமயம் அவனை நாட்டு மக்களுள் உயர்ந்தவனாகவோ தாழ்ந்தவனாகவோ கருதுவதற்கு இடமளிக்காது என்பதுமே 'சமயச் சார்பற்ற அரசு' என்பதன் பொருள் என்று ராஜாஜீ சமயச் சார்பற்ற அரசு என்பதற்கு அளித்த

விளக்கமும் இங்கு கவனத்திற்குரியது. ஷாபிமரிக்காருக்கு மிக உடன்பாடான விளக்கமிது.

10.2 சமயக் கல்விக்குப் பதில் ஒழுக்கக் கல்வி

ஒழுக்கமும் சமயமும் இணைந்து காணப்படினும் அவை அடிப்படையில் வெவ்வேறானவை. ஒழுக்கம் தனிமனிதனுடன் மட்டுமன்றி சமூகத்துடனும் தொடர்புபடுவது. சமய உணர்வின்றியும் நல்லொழுக்கம் ஒரு மனிதனிடம் காணப்படலாம். சமயஉணர்வு நல்லொழுக்கப் பண்புகளையே ஒருவனிடம் தோற்றுவிக்கும் என்பதையும் நிச்சயமாகக் கூறிவிட முடியாது.

> "ஒழுக்கத்தின் இறுதிக் குறிக்கோள்களை நாம் நெருங்க நெருங்க அவை மேலும் மேலும் நம்மிடமிருந்து விலகிச் செல்வனவாக அமைகின்றன. ஆகவே, இத்துறையில் நாம் பெறும் வெற்றி முழுமையான மனநிறைவை அளிப்பதில்லை என்று ரஸ்க் குறிப்பிடுகிறார். ஆனால், சமயமானது நமக்கு முழுமையான மனநிறைவை அளிப்பதாகும். எனினும், உயர் நிலையை எய்தும் போது ஒழுக்க முறைகள், சமய உணர்ச்சி ஆகிய இரண்டும் இணைந்து ஒன்றிக் காணப்படுகின்றன. அன்பு, அருள் போன்ற கருத்துக்கள் இவற்றை இணைக்கின்றன." (சந்தானம் எஸ்., 1987:233-234)

என்று எஸ். சந்தானம் 'கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்' என்ற நூலில் கூறியிருப்பது ஷாபிமரிக்காரின் சிந்தனையை ஒத்திருக்கிறது. பலமதங்கள் பின்பற்றப்படும் ஒரு நாட்டில் ஒழுக்கக் கல்வி என்பது அந்நாட்டில் பெரும்பான்மையினர் பின்பற்றும் மதத்தை மட்டும் சார்ந்ததாக அமைந்து விடும் ஆபத்துமிருக்கிறது.

பாடசாலைகளில் சமயக் கல்விக்குப் பதிலாக ஒழுக்கக் கல்வியை (Moral Education) அரசாங்கம் அறிமுகப்படுத்துவதற்குச் செய்த முயற்சியில் மறைந்திருந்த ஆபத்தையிட்டு சமூகத்தை எச்சரித்தார் ஷாபிமரிக்கார். அன்றைய கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாகசபைத் தலைவர் என்ற வகையில் ஷாபிமரிக்கார் 18.11.1980இல் இது சம்பந்தமாக ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார்.

> "Our executive council has always emphasized the need for the Ministry of Education to pay more and more attention to the teaching and practice of Religion in all schools. We are happy that the Bogoda Premaratne Committee Report in Chapter XXIV has reported this idea and made very comprehensive recommendations aimed at the advancement of Religious Education in Schools.
>
> As far as the Muslim Community is concerned, we are of the view that there cannot be any Moral Education divorced from Religious Education which

promotes not only moral but also spiritual values. In addition, in an organized Religion like Islam there are sanctions for the observance or otherwise of its tenets and principles which is lacking in Moral Education.

Hence, as far as Muslim schools and Muslim children in other schools are concerned, we are of the view that a Moral Education programme is (a) unnecessary, (b) wasteful, (c) will cause confusion in the minds of pupils and above all, moral values in our society. Religion (Islam) taught both in theory and practice in schools amply satisfy the needs of the school going population of Muslims."

என்று அமைகிறது அக்கடிதத்தின் முக்கிய வாசகங்கள். ஒழுக்க வளர்ச்சிக்கு சமயக்கல்வி வலுவான அடிப்படையாக அமைகிறது. இஸ்லாம் ஒரு முழுமையான சமயம், ஒரு வாழ்க்கை முறை என்பதால் ஒழுக்கக் கல்வி இஸ்லாத்தின் ஒரு அங்கம் மட்டுமே. இஸ்லாத்தைப் போதிக்கின்ற போது ஒழுக்கக் கல்வியும் அதில் உள்ளடங்கி விடுகிறது. எனவே, சமயக் கல்விக்குப் பதில் ஒழுக்கக் கல்வியைப் பாடசாலைகளில் கற்பிக்கும் திட்டம் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவசியமற்றது, வீணானது, குழப்பத்தை ஏற்படுத்துவது என்று கருத்துரைத்தார் ஷாபிமரிக்கார். சமயக் கல்வி தொடர்பாக போகொட பிரேமரத்ன குழுவின் சிபாரிசுகளை அமுல் படுத்துமாறும் அமைச்சரை ஷாபிமரிக்கார் கேட்டுக் கொண்டார். ஒழுக்கக் கல்வி என்ற போர்வையில் பிற சமய விழுமியங்கள் கூடிய அழுத்தம் கொடுக்கப்படலாம் என்ற அச்சம் ஷாபிமரிக்காருக் கிருந்தது.

"If Moral Education is going to supplement Religion, it is superfluous. If it is going to replace Religion it is dangerous. We see in this sinister move to minimise the important place given in this country up to now to organised Religions. Will the Hon. Minister please do everything possible to improve the teaching and practice of the organised Religions of this country in schools and instruct his officers to give up this wasteful and dangerous Programme"

என்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 28.11.1980இல் ஷாபிமரிக்கார் எழுதிய கடிதத்தில் 'ஒழுக்கக் கல்வி' என்ற பெயரில் அரசாங்கம் அறிமுகப்படுத்தவிருந்த திட்டத்தில் மறைந்து கிடந்த ஆபத்தைச் சுட்டிக்காட்டி அதை பாடசாலைகளில் கற்பிக்கும் திட்டத்தைக் கைவிட்டு சமயக்கல்விப் போதனையை இன்னும் சிறப்பாகக் கடைப்பிடிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

ஷாபிமரிக்காரின் இந்நிலைப்பாடு பற்றிச் சிந்திக்கும்போது 15.01.1897இல் சிக்காக்கோவில் நடந்த உலக சமயங்களின் மாநாடும், சில ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, கலாசார நிலையத்தின்

(UNESCO) சார்பில்,'உலக சமயங்களின் பொதுச்சபை' (World Community of Religions)என்ற ஓர் அமைப்பை நிறுவும் சாத்தியக்கூறுகள் பற்றி பிலிப்பைன்ஸில் ஆராய்ந்துள்ளமையும் நினைவுக்கு வருகின்றது. நல்லொழுக்கம் பெறுவது (Morality) கல்வியின் இறுதி நோக்கம் என்ற ஹேர்பர்ட்டின் சர்ச்சைக்குரிய கருத்தும் இச்சந்தர்ப்பத்தில் இரைமீட்கப்படுகிறது. இவற்றையெல்லாம் மேவிநின்று பாடசாலைகளில் சமயக்கல்விக்குப்பதில் ஒழுக்கக் கல்வியை அறிமுகப்படுத்த அரசாங்கம் எடுத்த முயற்சியை ஷாபிமரிக்கார் எதிர்த்தார். தனது சமூகத்தை ஒன்றுதிரட்டி அதன் பலத்த எதிர்ப்பை அரசுக்கு எத்திவைத்தார். அம்முயற்சியில் அவர் வெற்றியும் கண்டார்.

10.3 முஸ்லிம் பாடசாலைகளில் நடனம்

1972 ஜனவரியிலிருந்து அமுல் செய்யப்படவிருந்த புதிய கல்விச் சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டபோது அவற்றை நன்கு படித்து கருத்துக் களைத் தெரிவிக்குமாறு அ.இ.மு.க. மாநாடு 04.10.1971இல் மாநாட்டின் மாவட்டக் கிளைகளுக்கு அம் முன்மொழிவுகளை அனுப்பி வைத்தது. "நடனம்" ஒரு பாடமாக பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதற்கும் இதில் முன்மொழிவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், முஸ்லிம் பாடசாலைகளில் 'நடனம்' கற்பிக்கப்படுவதற்கு அ.இ.மு.க. மாநாடு எதிர்ப்புத் தெரிவித்தது. அந்த எதிர்ப்பின் காரணமாக வரைதல் அல்லது இசை அல்லது நடனம் என்று 01.01.1972இல் கலைத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது. முஸ்லிம் பாடசாலைகளில் நடனம் கற்பிக்கக் கூடாது என்று ஐ.ஏ. காதர் குழுவும் 21.08.1973இல் சிபாரிசு செய்தது. அரசினர் முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் கலைத்திட்டத்திலிருந்தும் 'நடனம்' என்ற பாடத்தை நீக்கிவிடுமாறு அ.இ.மு.க. மாநாடு விடுத்த கோரிக்கைக்கு அப்போதைய கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன 13.08.1977இல் இணக்கம் தெரிவித்தார். அதன்படி, பாடசாலைக் கலைத்திட்டத்திலிருந்தும் என்.ஸி.ஜி.ஈ. பரீட்சையிலிருந்தும் 'முஸ்லிம் நடனம்' என்ற பாடம் அகற்றப்பட்டது. அரசினர் முஸ்லிம் பாடசாலைகளிலும் முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் நடனம் கற்பிப்பதும் தவிர்க்கப்பட்டது.

10.4 கல்வி அமைச்சின் சமயக் கல்விப் பிரிவு

கல்வி அமைச்சில் சமயக் கல்விப் பிரிவொன்று இயங்கிக் கொண்டிருந்தது. பின்னர் அதன் பணிகள் செயலிழந்தன. கல்வி அமைச்சின் பிரிவேனாப்

பிரிவு 1987 செப்டம்பர் 7- 13 வரை சமய வாரத்தை முதன்முறையாக அனுஷ்டித்தபோது, சமயப் பிரிவு கல்வி அமைச்சில் இயங்கியிருப்பின் இச்சமயவாரத்தை இன்னும் சிறப்பாக சகலஇனப் பாடசாலைகளினதும் பூரண ஒத்துழைப்புடன் அனுஷ்டித்திருக்க முடியும் என்ற கருத்தை ஷாபி கொண்டிருந்தார். அப்பிரிவை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஷாபிமரிக்கார் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் 1989 மார்ச், ஜூன் மாதங்களில் செய்த முறையீடுகளின் தாக்கமும் இப்பிரிவின் மீளியக்கத்திற்குக் காரணமாயிற்று. ஒக்டோபர் 1989இலிருந்து அப்பிரிவு மீண்டும் இயங்கத் தொடங்கியது. அதன் மீளியக்கத்திற்காக அப்போதைய கல்வியமைச்சர் லொக்குபண்டாரவுக்கு ஷாபிமரிக்கார் 08.12.1989இல் எழுதிய கடிதத்தில் தனது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

சமயக் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பாக முழுநேரக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்று அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு 05.02.1997இல் அனுப்பிவைத்த மகஜரில் ஷாபிமரிக்கார் கேட்டிருந்தார். அக் கடிதத்தில் ஈ.எல். விஜேமான குழு (1982) சமயக் கல்விக்கென தனியான பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமெனச் செய்த பரிந்துரைபற்றியும், ஐந்து சமயக் கல்விக் குழுக்களின் தொடக்கக் கூட்டம் 28.03.1986இல் பிரதிக் கல்வி அமைச்சரின் தலைமையில் கல்வி அமைச்சில் நடைபெற்றபோது, சமயக் கல்விக்கும் பிரிவேனாக் களுக்குமாக ஒரு பணிப்பாளர் செயற்படுவது மிகச் சிரமமான செயல் என்றும், சமயக் கல்விக்கென தனியான முழுநேரப் பணிப்பாளர் நியமிக்கப் படுவது அவசியம் என்றும் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொன்னதை அனேகர் ஏற்றுக் கொண்டமைபற்றியும், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவர் என்ற வகையில் ஷாபிமரிக்கார் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் சுட்டிக் காட்டியிருந்தார்.

10.5 சமயக் கல்வி ஆலோசனைச் சபைகள்

மார்ச் 1982இல் இயக்கமிழந்துபோன ஐந்து சமயக் கல்வி ஆலோசனைச் சபைகளும் மீண்டும் இயக்கம் பெற்றமை ஷாபிக்கு மிக்க மகிழ்ச்சி தந்தது. பௌத்த, இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ, இஸ்லாம் கல்விக்கான ஐந்து ஆலோசனைச் சபைகளும் 1990 ஜனவரியிலிருந்து கல்வி அமைச்சில் மீண்டும் இயங்கத் தொடங்கியமை ஷாபிமரிக்காரின் நீண்டகால போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாக அமைந்தது.

11

அரபு மொழி மேம்பாடு

11.1 பாடசாலைகளில் அரபு மொழிக்கற்கை

அரசினர் பாடசாலைகளில் அரபு மொழி கற்பிப்பதற்கான ஆரம்ப முயற்சிகளைச் செய்தவர் எம்.ஸி. சித்திலெவ்வை. பாடசாலை மாணவர்களுக்கென அரபு 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் புத்தகங்களையும், 'து.ஃபத்துன் நகுவு' என்ற அரபு இலக்கண நூலொன்றை விளக்கங்களுடன் மூன்று பாகங்களாகவும் வெளியிட்டவர் அவர். அரபு மொழியை இலங்கை முஸ்லிம்களின் தாய்ப்பாஷையாக்கும் நோக்கிலும் முயற்சிகள் செய்த முன்னவரும் அவர்தான். அரசாங்க சபைக் காலத்தில், அரசாங்கப் பாடசாலைகளில் அரபு மொழி கற்பிப்பதில் சேர் றாசிக் பரீத் செய்த முயற்சிகளையும் நாமறிவோம். ஷாபிமரிக்காரும் இவ்வழிநின்று சிந்தித்தார். ஜீ.ஸீ.ஈ. (சா.த.) பரீட்சைக்கு 'பாளி' ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்டபோது, பாளிக்குப் பதில் பாடமாக அரபு மொழியை அங்கீகரிக்குமாறு 29.03.1979இல் அ.இ.மு.க. மாநாடு மகஜர் சமர்ப்பித்தது.

ஷாபியின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டினுடைய வேண்டுகோளின் பேரில் 6-9 வரையான வகுப்புகளில் கற்பிக்கப்பட்ட 'இஸ்லாம்' பாடம் 'இஸ்லாமும் அரபும்' என்று 01.01.1972இல் மறுநாமம் பெற்றது. மௌலவிகளின் சம்பளம் பற்றிப் பேசுவதற்கும் முஸ்லிம் கல்வி மாநாடு ஷாபிமரிக்காரின் தலைமையில் சம்பளங்களுக்கும் நிரந்தரப் பதவிகளுக்குமான ஆணைக்குழுவை (Salaries and Cadre Commission) 17.11.1970இல் சந்தித்துப்பேசியது.

பாளி அல்லது அரபு மொழி என்று பாளி மொழிக்குப் பகரமாக அரபு மொழியை பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் சேர்ப்பதற்கும் 1980ஆம் ஆண்டிலிருந்து அரபு மொழியை 9ஆம் வகுப்பிலிருந்து ஒரு பாடமாகக் கற்பிப்பதற்கும் 1979இன் பிற்பகுதியில் இணங்கிக் கொண்ட கல்வி

அமைச்சு, பாளி மொழியைக் கற்பிக்க நடவடிக்கை எடுத்து அரபு மொழி கற்பித்தலைத் தாமதப்படுத்தியபோது, ஷாபிமரிக்கார் அது பற்றியும் முஸ்லிம்களின் கவனத்தை ஈர்த்தார். அவர் 28.11.1980இல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில் 1981 டிசம்பரிலிருந்தாவது அரபு மொழி க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்கு ஒரு பாடமாக அமைய வேண்டியதன் அவசியம் பற்றித் தெரிவித்திருந்தார்.

அரபு-இஸ்லாம் கற்றல் கற்பித்தலை மேற்பார்வை செய்ய 1980களில் 8 வட்டாரக் கல்வி அதிகாரிகளே இருந்தனர். அப்போதிருந்த 600 முஸ்லிம் பாடசாலைகளையும் முஸ்லிம் பாடசாலைகளல்லாத பிற பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்களின் அரபு-இஸ்லாம் கற்கைகளை மேற்பார்வை செய்யவும் இன்னும் 6 வட்டாரக் கல்வி அதிகாரிகளையாவது நியமிக்க வேண்டுமென்று ஷாபிமரிக்கார் கோரிக்கை விடுத்தார். இவ்வட்டாரக் கல்வி அதிகாரிகளை மேற்பார்வை செய்யவும் தொடர்புறுத்திச் செயற்படுத்தவும் கல்வி அமைச்சில் ஒரு அரபுக் கல்வி அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்றும் 1980களில் ஷாபிமரிக்கார் கல்வி அமைச்சரைக் கோரியிருந்தார்.

ஜீ.ஸீ.ஈ. (சா.த.) பரீட்சைக்கு 1972வரை ஒரு பாடமாகவிருந்து என்.ஸி.ஜீ.ஈ. பரீட்சையின் அறிமுகத்துடன் அப்பரீட்சைக்குரிய ஒருபாடமாக இல்லாமற் செய்யப்பட்ட அரபு மொழி, மாநாட்டின் முயற்சியால் ஜீ.ஸீ.ஈ. (சா.த.) பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்தின் அறிமுகத்துடன் 1989 டிசம்பரிலிருந்து மீண்டும் விருப்பத்திற்குரிய பாடமாகியது. பாளி அல்லது சமஸ்கிருதத்துக்கு மாற்றுப்பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. டபிள்யு. ஜே.எம். லொக்குபண்டார கல்வி அமைச்சராகவிருந்தபோது இது நிகழ்ந்தது. அரபு கற்றலுக்குத் தேவையான பாடத்திட்டம், பாடவழிகாட்டி என்பனவற்றில் கவனம் செலுத்தும் அவசியத்தையும் ஷாபிமரிக்கார் சுட்டிக்காட்டினார்.

> "1987இல் 'தொடர்மதிப்பீட்டு முறை' பாடசாலைகளில் அமுல் நடத்தப்பட்ட போது, இஸ்லாம், அரபுப் பாடங்களின் கணிப்பீடு சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட்ட போது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடும் இணைந்து அரசாங்கத்திற்கு சில திட்டங்களை முன் வைத்ததன் பயனாக பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன" (றியாழ் எம்.ஜே. எம்., 2005:96)

என்று மௌலவி எம்.ஜே.எம். றியாழ் தனது கட்டுரையொன்றில், ஜம்மியத்துல் உலமாவுடன் இணைந்து அ.இ.மு.க. மாநாடு அரபு-இஸ்லாம் கற்பித்தல் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் செய்த பங்களிப்பைச் சுட்டிக் காட்டினார்.

"அப்போதைய கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் என். வீ.கே.கே. வேரகொட பாடசாலை அதிபர்களுக்கனுப்பிய 11.06.1994 திகதியிடப் பட்ட சுற்றுநிருபம், கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் கே.ஐ. விக்கிரமசிங்க சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிய 23.12.1994 திகதியிடப்பட்ட சுற்று நிருபங்கள் காரணமாக பாடசாலை நேரங்களில் அரபு மொழி கற்பிப்பதைப் பல அதிபர்கள் கைவிடும் நிலை ஏற்பட்டிருப்பதாக உலமா சபைக்கும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுக்கும் பல முறைப்பாடுகள் வந்தன. எனவே, உலமா சபை சார்பாக பொதுச் செயலாளராக இருந்த நானும், கல்வி மாநாடு சார்பாக அதன் தலைவர் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும், கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரணவுக்கு ஆட்சேபனைக் கடிதங்களை அனுப்பி வைத்தோம். இவ்விடயம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பதில் கிடைத்தது... 27.04.1995இல் தேசிய கல்வி ஆணைக்குழுவுடனான சந்திப்பில் தேசிய ஆணைக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்தும் அரபு மொழியைப் பாடசாலை நேரங்களில் கற்பிப்பதற்கு ஏதுவாக, க.பொ.த. (சாதாரண) பரீட்சையின் எட்டுப் பாடங்களுள் ஒன்றாக மாணவர்கள் அரபு மொழியைத் தெரிவு செய்யும் விதத்தில் கல்வி அமைச்சினால் அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தனர்" (றியாழ் எம்.ஜே.எம்., 2005:98,99)

என்று மௌலவி றியாழ் எழுதி பாடசாலைகள் அரபுக் கல்விப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய போது அ.இ.மு.க. மாநாடு உதவிக்கரம் நீட்டியதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். தேசிய கல்வி ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலகவுடன் இவ்விடயம் சம்பந்தமான சந்திப்பில் எம்.எம். உவைஸ், மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹிம், மௌலவி எம்.ஐ. அப்துல் ரஸ்ஸாக், மௌலவி றியாழ், மௌலவி எம்.எம்.ஏ. முபாரக், அல்-ஆலிம் ஏ.ஆர்.எம். ஸறூக், நீதிபதி எம். ஜமீல் ஆகியோரும் அ.இ.மு.க. மாநாட்டின் செயற்குழுத் தலைவர் ஷாபிமரிக்காரும் கலந்து கொண்டதாக மௌலவி றியாழ் குறிப்பிடுகிறார்.

"முஸ்லிம்களின் பல்வேறு கல்விப் பிரச்சினைகளை இனங்கண்டு உடனுக்குடன் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு தீர்ப்பதற்காக 1964இல் நிறுவப்பட்ட அ.இ.மு.க. மாநாடு அதன் தாபகத் தலைவர் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரின் வழிகாட்டலுடன் 40 வருடங்களாக இயங்கி வருகின்றது. தேசிய மட்டத்தில் முஸ்லிம்களின் கல்வி மேம்பாட்டுக்காக உழைத்துவரும் இந் நிறுவனத்தை மென்மேலும் பலப்படுத்துவது முஸ்லிம் கல்விமான்களின் கடமை" (றியாழ் எம்.ஜே.எம், 2005: 101,102)

என்று அ.இ.மு.க. மாநாட்டின் கல்விப்பணி பற்றி மௌலவி றியாழ் புகழ்ந்தோதுவது அரபு, இஸ்லாம் சம்பந்தமாக முஸ்லிம் கல்வி மாநாட்டினதும்

அதன் தலைவர் ஷாபிமரிக்காரினதும் பங்களிப்பைக் கட்டியம் கூறுவதாக அமைகிறது.

11.2 பல்கலைக்கழகத்தில் அரபுமொழிக் கற்கை

களனிப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த அரபுத் துறையை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றுமாறு அ.இ.மு.க. மாநாடு 25.12.1979இல் கோரிக்கை விடுத்தது. அரபு-இஸ்லாமிய நாகரிகத்துக்கென தனியான பல்கலைக்கழகமொன்றை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் 04.08.1982இல் முஸ்லிம் கல்வி மாநாடு முன் வைத்தது.

அரபு மொழியை ஒரு பாடமாகக் கற்க 1995/96இல் தெரிவான 10 மாணவர்களின் வசதிக்காக கொழும்புப் பல்கலைக்கழகம் அரபு மொழித் துறையை மீள ஆரம்பிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை அ.இ.மு.க. மாநாடு 17.11.1996இல் எடுத்திருந்தது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரபு மொழிக் கற்கை 1994/95 கல்வி ஆண்டில் இருந்தது. அவர்கள் 2வது வருடமாக 1995/96இலும் தொடர்ந்து கற்றார்கள். ஆயினும், 1995/96இல் அரபு மொழியைக் கற்கவிரும்பும் புதிய மாணவர்களுக்கு கொழும்புப் பல்கலைக்கழகம் இடமளிக்கவில்லை. கிழக்கு மாகாணத்தைச் சாராத மாணவர்களின் வசதிக்காக கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரபு மொழிக் கற்கையை மீள ஆரம்பிக்க வேண்டுமென்று அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாக சபைத் தலைவர் ஷாபிமரிக்கார் கொழும்புப் பல்கலைக்கழக உபவேந்தரை 05.02.1997இல் கடிதம் மூலம் கேட்டிருந்தார். கொழும்புப் பல்கலைக்கழகம் அரபு மொழிக் கற்கையை ஆரம்பிப்பின் கொழும்பிலுள்ள அரபு நாடுகளின் தூதரகங்களுடைய உதவியையும் பெற்று அக்கற்கை நெறியின் தரத்தைச் சிறப்பாகப் பேணமுடியும் என்றும் ஷாபிமரைக்கார் தன்னுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.



All Ceylon Muslim Educational Conference

Ref No: 21/95/97

Sth. Hamidia Road, Colombo-12.

Sept. 1972 Equation 21

February 5, 1997

The Vice Chancellor,
University of Colombo,
Colombo-03.

Dear Sir,

Course in Arabic, Accessory of Colombo

Further to the correspondence between the two of us on the above :

In regard to note that the Course in Arabic which was conducted during the last academic year in the University of Colombo, is not available now for the present students. The Course is going to establish only for next-coming students.

Take pleasure in enquiring me in the vice Chancellor, my Secretary, Students Union and Arabic Teacher's Association, Colombo, to know the reasons who was associated in the different Committees among the Students and Teachers in Sinhala or Arab.

The record of the Course is basis for first-year students from the eastern province and the recent a great need of Arabic-speaking Muslim Teachers in the Eastern province. Therefore, I request you to kindly look into the matter and see that it is not allowed to be a subject for the benefit of the students.

As part of the responsibility of Arabic as a separate course for 1st. year students of the University of Colombo and more attached to the Islamic Studies Course. I am requesting you to kindly establish in Arabic Language through the students for the same benefit.

In my view where can this particularly in Colombo, where the presence of Arabic Embassies and Arabic Teachers, I am sure that it will be possible to get the services and assistance of these Arabic Teachers for the benefit of Arabic Course in the University.

As Chairman, I'm to express the Course in Arabic as a separate [illegible] which help poor and needy Christian students to follow it.

Thanking You,

Yours Sincerely,
Sd/- M.H.M. Shahim
Chairman
All Ceylon Muslim Educational Conference

Treasurer: [illegible] Secretary: [illegible] Vice Chairman: [illegible] Vice Chairman: [illegible]

கொழும்புப் பல்கலைகழக உபவேந்தருக்கு ஷாபிமரிக்கார் 05.02.1997 இல் எழுதிய கடிதம்

1998களில் இஸ்லாமிய நாகரிகம் மட்டும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டபோது அரபும் இஸ்லாமிய நாகரிகமும் ஒரு துறையின் இருவேறுபாடங்கள் என்றும், எனவே, இஸ்லாமிய நாகரிகத்தை மட்டுமன்றி அரபு மொழியையும் ஒரு பாடமாகக் கற்க அப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வசதியிருக்கவேண்டுமென்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஷாபிமரிக்கார் அறிவுறுத்தல் செய்தார்.

அரபு-இஸ்லாமியக் கற்கைகளுக்கான பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவி பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருப்பதை அடிக்கடி நினைவூட்டி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விளம்பரப்படுத்தியாவது அப்பதவிக்குப் பொருத்தமான ஒருவரைக் கண்டுபிடித்து நியமிக்க வேண்டுமென்றும் ஷாபி உரியவர்களைக் கேட்டுக் கொண்டார். இத் துறையில் பட்டப்பின் படிப்புகளை மேற்கொள்வோருக்கு பேராசிரியர் பதவி நிரப்பப்படுவது அவசியம் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தகுதியான விரிவுரையாளர்கள் இன்மையால் அரபு மொழியில் பட்டப் பின்படிப்புகளை மேற்கொள்ளும் வசதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இல்லாதிருந்ததைச் சுட்டிக்காட்டி இந்தியா, பாக்கிஸ்தான், வங்காளதேசம், மலேசியா முதலான நாடுகளின் பிரபல பல்கலைக்கழகங்களுடன் இணைப்பை ஏற்படுத்தி மாணவர்களின் இத்தேவையை நிறைவேற்றலாம் என்றும் ஷாபி அபிப்பிராயம் தெரிவித்தார்.

11.3 மத்ரஸாக் கல்வி

மத்ரஸாக்கள் விரும்பியபடி கலைத்திட்டங்களை அமைத்து கிளிப்பிள்ளைக்கு பேசக்கற்பிப்பது போன்று கல்வி உளவியலுக்கு ஒத்துப்போகாத கற்பித்தல் முறையில் இயங்கிக் கொண்டிருந்தபோது மத்ரஸாக்களின் கல்வி முறை சீர்திருத்தப்பட வேண்டும் என்று சிந்தித்தவர் ஷாபிமரிக்கார். சித்திலெவ்வை, எ.எம்.எ. அஸீஸ் போன்றவர்களும் மத்ரஸாக்களின் கல்விமுறை சீர்திருத்தப் பட வேண்டும் என்று அவ்வப்போது குரல்கொடுத்து வந்திருக்கின்றார்கள். மத்ரஸாக்களின் கலைத்திட்டம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென அ.இ.மு.க. மாநாடு விசேட குழுவொன்றை நியமித்தது. அக்குழு தனது அமர்வுகளை 16.09.1978இலிருந்து ஆரம்பித்தது. மத்ரஸாக்கள் ஒரு பொதுக் கலைத்திட்டத்தைப் பின்பற்ற வேண்டும்; மத்ரஸாக்களில் கற்கும் மாணவர்கள் 'மத்ரஸாக் கல்விச் சபை' நடத்தும் ஒரு பொதுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்; கற்பிப்பதற்குச் சிபாரிசு செய்யப்பட்ட 13 பாடங்களுடன் மூன்று மொழிகள் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்), சமூகக்கல்வி, பொது விஞ்ஞானம், தொழில்சார் கல்வி, கணிதம் என்ற பாடங்களும் அங்கு போதிக்கப்பட வேண்டும் - என்று அக்குழு சிபாரிசு செய்தது. முதல் நான்கு வருடங்கள் தமிழிலும், 5ஆம் 6ஆம் வருடங்களில் தமிழ், அரபு மொழிகளிலும், 7ஆம் 8ஆம் வருடங்களில் அரபு மொழியில் மட்டும் கற்றல், கற்பித்தல் நிகழ வேண்டுமென்றும் அக்குழு சிபாரிசு செய்தது. இச்சிபாரிசுகள் 03.03.1979இல் நிகழ்ந்த அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாகக் குழுக்கூட்டத்தில் கலந்துரை யாடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த வகையில் காலத்துக்கும்

தேவைக்கும் ஏற்புடையதாக, பாரம்பரியக் கல்வியும் நவீன கல்வியும் இணைந்ததாக, அரபு மொழியுடன் நாட்டு மொழிகளையும் ஆங்கிலத்தையும் கற்பிப்பதாக, அனைத்து மத்ரஸாக்களும் ஒரு பொதுவான கலைத்திட்டத்தைப் பின்பற்றுவனவாக அமைந்திருக்க வேண்டுமென்பதில் அ.இ.மு.க. மாநாடு திடமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. பதிவு செய்யப்பட்ட மத்ரஸாக்கள் (அரபுக் கல்லூரிகள்) பின்பற்றுவதற்குப் பொருத்தமான பாடத்திட்டம், செயற்றிட்டம் என்பனவற்றை, சமய கலாசார அமைச்சுக்குச் சிபாரிசு செய்யுமாறு 'ஜம்மியத்துல் உலமா'வையும் முஸ்லிம் கல்வி மாநாடு கோரியிருந்தது.

பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராகவிருந்தபோது 1962இல் முதல்முதலாக அல்-ஆலிம் தொடக்கப் பரீட்சை அரசாங்கத்தின் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டது. பதியுத்தீனின் காலத்திலேயே, 1964இல் இருந்து, அல்-ஆலிம் இறுதிப் பரீட்சையும் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டது. 1976இலிருந்து நடைமுறையிலிருந்த அல்-ஆலிம் பரீட்சைக்கான பாடத்திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளைத் திருத்தியமைக்கும் நோக்கில் 07.02.1986 காலை 9.30 மணிக்கு ஒரு மகாநாட்டை பரீட்சைகள் ஆணையாளர் கூட்டியிருந்தார். அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் முக்கிய செயற்பாட்டாளரும் ஷாபிமரிக்காருடன் இணைந்து செயற்பட்டவருமான முஸ்தகீம் அவர்கள் பரீட்சைகள் திணைக்கள அதிகாரியாகவிருந்த போது ஷாபியின் நெறிவுறுத்தலில் நிகழ்ந்த மாநாடு இது. உதவிப் பரீட்சைகள் ஆணையாளர் பி.சீ.ஆர்.பி. குணரத்னவின் பதில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல்கலைக்கழக அரபுத் துறை விரிவுரையாளர்கள், அரபுக் கல்லூரிகளின் பிரதிநிதிகள், முஸ்லிம் சமய, கலாசாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவர் ஷாபிமரிக்கார் உள்ளிட்ட 18 பேர் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

நடைமுறையிலுள்ள பாடத்திட்டம் 1976இலிருந்து அமுல் செய்யப்படுவதாகவும், அதில் குறைபாடுகளிருப்பதாகவும் அவற்றை நிவர்த்திக்கத் தேவையான தீர்வுகளைச் சமர்ப்பித்து 1988 ஜனவரியிலிருந்தாவது புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கலந்து கொண்டவர்களை முஸ்தகீம் வேண்டிக் கொண்டார். அல்-ஆலிம் பரீட்சை 1962 முதல் நடைபெறுவதாகவும் அக்காலப்பகுதியில் அல்-ஆலிம் பரீட்சைக்கான ஒரு சபை ஏற்படுத்தப்பட்டதாகவும், அச்சபை தனது கடமையைச் செய்வதற்கென ஒருமுறையேனும் கூடியதா என்பதைக்கூட அறிந்து கொள்ளமுடியவில்லை என்றும், அக்காலம் முதல் மத்ர

ஸாக்களின் இறுதிப் பரீட்சைகளைச் சமப்படுத்த எத்தனையோ இயக்கங்கள் முயற்சித்த போதும் அம்முயற்சிகள் கைகூடவில்லையென்றும் தெரிவித்த மௌலவி றூஹுல் ஹக், மிக உயர்ந்த தரத்தில் அப்பரீட்சையை நடத்துவதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

> "இப்பரீட்சையை இலங்கையிலுள்ள எல்லா மத்ரஸாக்களுக்கும் பொதுவான ஒரு இறுதிப் பரீட்சையின் தரத்துக்கு உயர்த்தி ஒரு தரமான பரீட்சையாக நடத்த வேண்டும்" (பரீட்சைகள் ஆணையாளரின் கூட்ட அறிக்கை - 28.02.1986)

என்று ஷாபிமரிக்காரும் வலியுறுத்திச் சொன்னார். கவனமான கலந்துரையாடலின்பின் அல்-ஆலிம் பரீட்சையின் பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதை ஏற்றுக் கொண்ட அவ்வுயர் சபை அச்செயற்பாட்டை முன்னெடுக்கவென ஒரு குழுவையும் நியமித்தது. தலைவர்: கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, செயலாளர்: மௌலவி எம்.ஜே. எம். றியாழ், இணைப்புச் செயலாளர்: ஏ.எம். முஸ்தகீம், உறுப்பினர்கள்: மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹிம், மௌலவி எம்.ஏ.எம். முபாரக், மௌலவி ஏ.எல்.எம். ஹாஷிம், மௌலவி எம்.ஏ.ஆர்.எம். புவாத், மௌலவி எம்.ஓ. பத்ஹுர் ரஹ்மான், ஜனாப் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் ஆகியோர் அக்குழுவின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அக்குழுவின் கூட்டமொன்று 06.03.1986இல் பேருவலை ஜாமிஆ நழீமிய்யாவிலும் நிகழ்ந்தது. கருத்து முரண்பாடுகளும் அரசியல் தலையீடுகளும் அல்-ஆலிம் பரீட்சைக்கான சீர்திருத்தப்பட்ட பாடத்திட்ட அமுலாக்கத்தைக் காலதாமதப்படுத்தின. ஆயினும், அவ்விடயத்தில் ஷாபிமரிக்காரின் முயற்சிகள் தொடர்ந்தன. பரீட்சைகள் ஆணையாளரால் 1986இல் அமைக்கப்பட்ட விசேட குழுவின் சிபாரிசுக்கமைய அல்-ஆலிம் ஆரம்ப இறுதிப் பரீட்சைகளின் பாடத்திட்டத்தை மறுசீரமைக்குமாறு பரீட்சைகள் ஆணையாளரை ஷாபிமரிக்கார் பலமுறைகள் கோரியிருந்தார். அல்-ஆலிம் பரீட்சை மத்ரஸாக்களின் இறுதிப் பரீட்சைக்குச் சமமானதாகவும் பொதுப் பரீட்சையாகவும் அமையவேண்டும் என்பது அக்குழுவின் சிபாரிசாக விருந்தது.

அல்-ஆலிம் பரீட்சையின் தரத்தை உயர்த்துவது சம்பந்தமாக அ.இ.மு.க. மாநாடு சமய கலாசார அமைச்சின் மேலதிகச் செயலாளருக்கு 1997 ஏப்ரல் 09, 22ஆம் திகதிகளிலும் சிபாரிசுகளைச் செய்திருந்தது.

ஷாபிமரிக்காரின் முயற்சியில் 'அரபு ஆசிரியர் சங்கம்' ஒன்றும் 1976 இல் தோற்றம் பெற்றது. அதன் தலைவராக மௌலவி ஏ.எல்.எம்.

ஹாஷிமும், செயலாளராக மௌலவி ஏ.ஸி.எஸ். ஹமீத், பொருளாளராக ஏ.ஸி. ஷாஹுல் ஹமீத் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். ஏ.ஸி.ஏ.எம். புஹாரி, எம்.எச்.எம். புஹாரி உள்ளிட்ட பலர் நிருவாக சபையிலும் இடம்பெற்றனர். இச்சங்கம் உருவானதில் ஷாபிமரிக்காரின் பங்களிப்பு அதிகமென்றும் பல தடவைகள் ஷாபிமரிக்கார் இது சம்பந்தமாகத் தன்னுடன் தொடர்பு கொண்டு கலந்து பேசியதாகவும் என்னிடம் தெரிவித்த மௌலவி ஹாஷிம், இச்சங்கம் இப்பொழுது செயலிழந்து விட்டதாகவும் தெரிவித்தார். இச்சங்கத்தின் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த மௌலவி கே.எம்.எச். காலிதீன் பின்னர் 'கதீப்மார் சம்மேளனம்' என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஏற்படுத்திச் செயற்படுத்தியதும் நாமறிந்தது.

12

பல்கலைக்கழகக் கல்வியில் அக்கறை

முஸ்லிம் மாணவரின் உயர் கல்வியில் ஷாபிமரிக்கார் அதீத அக்கறை காட்டினார். முஸ்லிம் மாணவரின் பல்கலைக்கழக அனுமதி, யுத்தத்தினால் யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மாணவர்களுக்கு வேறு பல்கலைக்கழகங்களில் இடமெடுத்துக் கொடுத்தல், கிழக்குப் பல்கலைக்கழகம் அமையவிருந்த போது, அதன் நிருவாக மையம், பீடங்கள் அமைய வேண்டிய பொருத்தமான இடங்களை அடையாளம் காணுதல் என்பனவெல்லாம் முஸ்லிம்களின் உயர் கல்வி சம்பந்தமாக ஷாபியின் கவனத்தை ஈர்த்திருந்தன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் எதிர்காலம் பற்றியும் அவர் சிந்தித்தார். 'ஜாமிஆ' உருவில் எ.எம்.எ. அஸீஸ் காணவிழைந்த, பதியுத்தீனும் அஸீஸும் இணைந்து கொழும்பு ஸாஹிறாவில் ஏற்படுத்தவிருந்த கலாசாரப் பல்கலைக்கழகம் பற்றிய எண்ணமும் ஷாபியின் சிந்தனையில் குடி கொண்டிருந்தது.

12.1 அனுமதிக் கொள்கை

பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் 1971இல் மாற்றம் செய்யப்பட்ட போது வடபுல மாணவர்கள் அதற்கெதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர். விரக்தியடைந்த மாணவர்கள் பலர் போராட்டக் குழுக்களிலும் சேரத் தொடங்கினர். முஸ்லிம் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமாக அப்போதைய ஜனாதிபதியும் உயர் கல்வி அமைச்சருமான ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு என்னுடைய தலைமையில் இயங்கிய 'ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ்' ஒரு மகஜரை 18.11.1980இல் அனுப்பிவைத்திருந்தது. பின்தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையில் தகுதி குறைந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதை

விட, நாடளாவிய ரீதியில் மாணவர்கள் இன விகிதாசாரத்துக்கேற்ப திறமை அடிப்படையில் சகல பீடங்களுக்கும் அனுமதி பெறுவதை இளைஞர் காங்கிரஸ் ஆதரித்தது. ஜீ.ஸீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறும் மாணவர்களை கற்கை நெறிகளுக்கேற்ப, பெற்ற புள்ளிகளின் அடிப்படையில், திறமை அடிப்படையில் நிரைப்படுத்தி அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களிலிருந்து ஒவ்வொரு பீடத்துக்கும் 8 சதவீத அனுமதி முஸ்லிம் சமூகத்துக்கு வழங்கப்பட வேண்டும். மொத்தப் பல்கலைக்கழக அனுமதியிலும் முஸ்லிம் மாணவர் தொகை நாட்டின் சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப 8%ஆக அமைதல் வேண்டும் என்று அந்த மகஜர் தெரிவித்தது. ஷாபிமரிக்கார் அக்கருத்தை வரவேற்றார். அதை தன்னுடைய அ.இ.மு.க. மாநாட்டின் மூலமும் வலியுறுத்திச் சொன்னார்.

> "Muslims form 8% of the total population of the country and in the Universities especially in the Science based faculties the percentage of Muslim students has never exceeded 3.5%. Hence, the University student population does not reflect the cultural pattern of our country. After studying carefully the present scheme of Admission (30% Merit, 55% District basis and 15% under -developed Districts) and the proposed scheme (30% Merit and 70% District basis) we have come to the conclusion that only a reservation or quota of 8% places in all the faculties and courses for Muslim students who reach the minimum admission requirements (3 passes and 25% in the 4th subject) is the only solution to the problem. Hence, we appeal to H.E. the President who is also the Minister of Higher Education to meet this just request of ours"

என்று 'ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ்' முன்னெடுத்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையை ஷாபிமரிக்கார் ஆதரித்தார். இதுவரை அது சாத்தியமாகாவிட்டாலும் முஸ்லிம்களின் பல்கலைக்கழக அனுமதி பற்றிய பிரச்சினைக்குத் தெளிவான ஒரு தீர்வாக அது அமைந் திருந்தது. டாக்டர் பரீத் மீராலெவ்வை (பா.உ.) இப் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையை பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தமையும் கவனத்திற்குரியது. (Parliamentary Debates - 01.12.1980:979)

அ.இ.மு.க. மாநாடு, பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை பற்றிய கருத்தரங்கொன்றை 08.10.1983இல் ஏற்பாடு செய்திருந்தமை, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை 20.10.1983இல் சந்தித்து அவர்களையும் இவ்விடயமாக அறிவுறுத்தியமை, பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை மீளாய்வுக் குழுவுக்கு 04.11.1983இல் மகஜர் அனுப்பி வைத்தமை, பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை மீளாய்வுக் குழுவை 15.11.1983இல்

நேரில் சந்தித்து விளக்கிச் சொன்னமை என்பனவெல்லாம் பல்கலைக் கழகத்துக்கு முஸ்லிம் மாணவரின் அனுமதிக் கொள்கை பற்றிய ஷாபிமரிக்காரினதும் அ.இ.மு.க. மாநாட்டினதும் கரிசனையைக் காட்டுகின்றன. பல்கலைக்கழகத்துக்கு மாணவர் அனுமதி சம்பந்தமாக பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை மீளாய்வுக் குழுவுக்கு 29.11.1983இல் மாநாடு அனுப்பி வைத்த இன்னுமொரு மகஜரும் கவனத்திற்குரியது.

பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக் குழுவுக்குப் பரிந்துரை செய்வதற்காக அ.இ.மு.க. மாநாடு விசேட குழுவொன்றை அமைத்திருந்தது. அக் குழு 1987 ஜூலை 05, 13ஆம் திகதிகளில் கூடி பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையொன்றைத் தயாரித்து பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக் குழுவுக்கு 20.07.1987இல் அனுப்பிவைத்தது. அதன் முக்கிய வாசகங்கள் வருமாறு:

> "Though selection to the universities on 'merit' should be the ideal and an ultimate aim, the differences in standards owing to historical or other reasons, make it unjust and inequitable to make the students of the less developed areas and ethnic groups to compete on equal terms with their counterparts of the more developed areas and ethnic groups…
>
> We therefore, urge a scheme of classification of schools according to facilities, etc. We request that all schools with advanced level clsses in the country be (1A, 1B, 1C Schools) classified into 3 groups:A,B&C. (A- Developed Schools, B- Developing Schools and C- Under-developed Schools)
>
> Rather than categorising given districts as educationally under privileged, we recommend that all schools throughout the country which do not have facilities like Teachers, Science Laboratories, Libraries, Class rooms, accommodation etc, also giving consideration to their recent advanced level results, be classified as 'B' and 'C' and such schools be eligible to receive additional weightage in the calculation of total aggregate marks for students who obtain three passes and 25 % in the fourth subject at the A/L examination. We recommend that an additional 25 marks be added to the aggregate marks of students from category 'C' schools and 15 marks to students from category 'B' schools. As the quality of the schools may vary from time to time, we further recommend that the position be reviewed every three years…
>
> Once the disparity with regard to schools is eliminated with the addition of marks to category 'B' and 'C' Schools, we then urge the present system of Dictrict-wise admission for all 'eligible' students who have obtained a minimum of 180 marks after the addition of the 'bonus'marks.

If these recommendations do not find favour with the committee, we urge that the present scheme of admission i.e. 30% ; 65% and 5% be continued for at least another five years.

We are of the considered view that in a multi-religious, multi-racial, multi-linguistic and multi-cultural society, it is in the interst of inter-racial understanding and national amity that the university student population should reflect in due proportion the different cultural groups in the country. Therefore we urge that whatever scheme may be adopted, not less than 8% of the total intake to the universities be Muslims and preferably faculty- wise as well.

We urge that all courses of study available in the Jaffna University be also made available in the Tamil Medium both in Colombo and Peradeniya Universities.

We also urge students be allowed to sit for G.C.E.(A/L) Examination for purpose of university admissions on three occasions as at present for a few more years"

பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக் குழுவுக்கு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு அனுப்பிவைத்த பரிந்துரைகள் இவை. மாநாட்டின் விசேட குழுவில் நானும் ஒருவனாகச் செயற்பட்டேன். திறமை, மாவட்ட அடிப்படை, அதற்குள்ளும் பாடசாலை அடிப்படை, இன விகிதாசாரம் என்பனவெல்லாம் இச்சிபாரிசில் உள்ளடங்கியிருந்தன. ஆயினும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டபோது அதில் திருப்திகொள்ளாத ஷாபிமரிக்கார் அன்றைய ஜனாதிபதியும் உயர்கல்வி அமைச்சருமான ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு தனது அதிருப்தியையும், நிவர்த்திக்கான ஆலோசனைகளையும் தெரிவித்து 28.01.1988இல் கடிதமொன்றை அனுப்பிவைத்தார். அதன் பிரதிகளை பிரதமர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், மாவட்ட அமைச்சர் கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரபல முஸ்லிம் சங்கங்களுக்கெல்லாம் அறிகைக்காக ஷாபி அனுப்பியிருந்தார்.

"கல்வியில் சம சந்தர்ப்பம் வழங்கல்' என்ற கோட்பாட்டில் அவர் (ஷாபிமரிக்கார்) மிக நம்பிக்கை வைத்திருந்தார். கிராமப்புற மாணவர் உட்பட, சகல இனங்களைச் சேர்ந்த மாணவரும் சமமான கல்வி வாய்ப்புக்களைப் பெறவேண்டுமென அவர் விரும்பினார். திறமை அடிப்படையில் மாத்திரம் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதால் வசதி குறைந்த பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர் பாதிக்கப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார். மொழிரீதியில் புள்ளிகளைத் தரப்படுத்துவதை அவர் விரும்பவில்லை. மாவட்ட ரீதியில் குறிப்பிட்ட தொகை மாணவர் அனுமதிக்கப் படவேண்டுமென ஏனையோர்களுடன் சேர்ந்து குரல் கொடுத்தார். மாவட்டத்துக்குள்ளும் கல்வி வசதிகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதால்

> பாடசாலைகளை A, B, C எனத் தரப்படுத்தி பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தை முதலில் முன்வைத்தவர் ஷாபிமரிக்கார். இக் கருத்து கல்விமான்களிடையே இப்போது பரவலாக வலுப்பெற்றுவருகிறது'' (ஹுசைன் இஸ்மாயில் ஏ.ஜீ., 2007: 21-22)

என்று ஷாபிமரிக்காரின் பல்கலைக்கழக அனுமதிக்கொள்கையில் அடங்கி யிருந்த, 'கல்வியில் சம வாய்ப்பு' பற்றி கலாநிதி ஹுசைன் இஸ்மாயில் எழுதிவைத்திருப்பது கவனத்திற்குரியது.

மாவட்டங்களுக்கிடையிலும் மாவட்டங்களுக்குள்ளும் கல்வி வசதிகளில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைப் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை மீளாய்வுக்குழு தனது அறிக்கையில் ஏற்றுக் கொண்டதுடன் மாவட்ட அடிப்படையிலன்றி பாடசாலை அடிப்படையில் வகுக்கப்படும் அனுமதிக் கொள்கையே சிறந்ததாக அமையுமென்பதையும் ஏற்றுக் கொண்டது. ஆயினும்,அவற்றையெல்லாம் உதாசீனம் செய்து மீளாய்வுக்குழு செய்த சிபாரிசு ஷாபிமரிக்காருக்கு உடன்பாடானதாக இருக்கவில்லை. பல்கலைக் கழக அனுமதி 6 வருடத்தில் 100% தகுதியடிப்படையில் அமைய வேண்டும் என்ற சிபாரிசும் ஷாபிக்கு ஏற்புடையதாகப் படவில்லை. மீளாய்வுக்குழுவின் சிபாரிசு அமுல் நடத்தப்பட்டால் மொத்தப் பல்கலைக்கழக அனுமதியில் 65% கொழும்பு, யாழ்ப்பாண மாவட்டங்களுக்குச் செல்ல 35% அனுமதியே ஏனைய 23 மாவட்டங்களுக்குச் செல்லும் என்று ஷாபிமரிக்கார் வாதிட்டார். பின்தங்கிய பாடசாலைகள் அபிவிருத்தி மட்டத்தை அடைவதற்கு ஆகக்குறைந்தது 20 அல்லது 25 வருடங்கள் செல்லும் என்றும் ஷாபிமரிக்கார் வாதிட்டார். பிரச்சினையை பிரச்சினையாக ஷாபிமரிக்கார் விட்டுவிடுவதில்லை. அதற்கு தீர்வுகளை முன்மொழிவதும் அவரின் வழக்கமாகவிருந்தது.

1. இக்கொள்கையை அமுல் நடத்துவதாயின் பாடசாலைகள், பெற்றோர், ஆசிரியர்கள், பொதுசனங்களுக்கு ஆகக்குறைந்தது இரு வருட அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.
2. பின்தங்கிய மாவட்டங்களான அம்பாரை, பதுளை, ஹம்பாந்தோட்டை, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வழங்கப்படும் 5% மாவட்ட ஒதுக்கீடு 1990/1991இலிருந்து மேலும் 5 வருடங்களுக்குத் தொடர்ந்திருக்க வேண்டும்.
3. மாவட்ட மட்ட ஒதுக்கீடு 1990/1991இலிருந்து ஒவ்வொரு வருடமும் 5% குறைக்கப்பட்டு 2003/2004இல் முற்றாக நீக்கப்படலாம்.

4. தகுதி அடிப்படையில் வழங்கப்படும் 30%ஒதுக்கீடு 1990/1991இலிருந்து ஒவ்வொரு வருடமும் 5% அதிகரிக்கப்பட்டு 2003/2004இல் 100% தகுதியடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி அமையலாம்.

5. பல்கலைக்கழக அனுமதிக்கு, ஜீ.ஸீ.ஈ. (உயர்) பரீட்சைக்கு மூன்று முறைகள் தோற்றுவதற்கு இன்னும் 5வருடங்களுக்கு அனுமதிக்க வேண்டும். அதற்குப் பின்னர் இருமுறைகள் மட்டும் தோற்ற அனுமதிக்கலாம்.

6. பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவைப்படும் ஆகக்குறைந்த மொத்தப் புள்ளி 180 1990/1991இலிருந்து ஒவ்வொரு வருடமும் 5 புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டு 1993/1994இலும் அதற்குப் பின்னரும் 200 புள்ளிகளாக்கப்பட வேண்டும். மருத்துவத்துறை, பொறியியல் துறைகளுக்கான மிகக்குறைந்த மொத்தப்புள்ளி 200,1990/1991இலிருந்து ஒவ்வாரு வருடமும் 5 புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டு 1994/1995இல் 220 புள்ளிகளாக்கப்பட வேண்டும்.

இதுவே ஷாபிமரிக்கார் பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக் குழுவின் அறிக்கைக்கு மாற்றுத் தீர்வாக அன்றைய உயர்கல்வி அமைச்சருக்குச் சமர்ப்பித்த பல்கலைக்கழக அனுமதித்திட்டம். மிகவும் புத்திசாலித்தனமாகத் தயாரிக்கப்பட்ட திட்டமாக இது அமைந்திருந்தது. முஸ்லிம் நலனும் அதில் உள்வாங்கப்பட்டிருந்தது. இருப்பினும் 1987 ஆகஸ்ட்டில் ஜீ.ஸீ.ஈ. (உயர்) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் 1988/1989ஆம் ஆண்டுக்கான குறைந்தமட்ட மொத்தப்புள்ளி முன்னறிவித்தலின்றி 180இலிருந்து 200ஆகவும், மருத்துவத்துறை அனுமதிக்கான குறைந்த மட்ட மொத்தப்புள்ளி 200இலிருந்து 240ஆகவும் ஆக்கப்பட்டபோது, ஷாபிமரிக்கார் மிகவும் கவலையடைந்தார். கிராமப்புற மாணவர்களும் அபிவிருத்தி அடையாத பிரதேச மாணவர்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்று அவர் கருதினார்.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான மாவட்டத்தின் அதிகுறைந்த தரம் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுவதாகவும், மாவட்டத்துக் குள்ளும் பாடசாலைகளின் தரத்தைப் பொறுத்து பாடசாலைகளுக்கிடை வேறுபாடுகள் காணப்படுவதாகவும், அதனால், இப்போதுள்ள பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை மாற்றம் செய்யப்படவேண்டும் என்ற கருத்தை தேவநேசன் நேசையாவும் கொண்டிருந்தார்.

> "In respect of university admissions, schools can be divided into categories A,B,C and D (in descending order of merit) in respect of each university faculty based on the average university intake from the schools into that faculty in the

past 3 years. We can then make a minor adjustment in the total marks scored by the student at the university entrance (G.C.E. A/L) examination depending on the category to which the school in which the child studies belonged, eg., we may add 10 marks to the aggregate in respect of those from schools of group B, 20 marks in respect of those from schools in group C and 30 marks in respect of those from schools in group D. Some refinement in the scheme of making is necessary in respect of students who may have changed schools in the 4 or 5 years prior to University admission. Though this scheme will not compensate for all disabilities, it will, to some measure, compensate for disparity in educational opportunities" (Devanesan Nesiah, 1998:62)

என்று 'Ethnic and District Quotas' என்ற கட்டுரையில் ஆய்வாளர் தேவநேசன் நேசையா(1998) பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையொன்றை விதந்துரைக்கின்றார். பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக் குழுவிற்கு ஷாபிமரிக்காரின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு 1987இல் அனுப்பிவைத்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகக்கான விதந்துரைகளின் எண்ணக்கருவை தேவநேசனின் இக்கொள்கையிலும் காணமுடிவது அவதானத்திற்குரியது.

பல்கலைக்கழகப் புகுமுகப்பரீட்சைக்கு இஸ்லாமிய நாகரிகமும் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பது ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாட்டின் நீண்டகாலக் கோரிக்கை. அது சம்பந்தமாக கல்வித் திணைக்களத்துக்கு ஆலோசனை கூற பேராதனைப் பல்கலைக்கழக அரபுத்துறைத் தலைவர் எஸ்.ஏ.இமாம் அவர்களின் தலைமையில் வித்தியோதய பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எம்.எம். உவைஸ், கொழும்புப் பல்கலைக்கழக அரபு விரிவுரையாளர் எம்.ஏ.எம். சுக்ரி ஆகிய மூவர் கொண்ட குழுவையும் 1967இல் அ.இ.மு.க. மாநாடு நியமித்திருந்தது.

"அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாட்டின் முயற்சியில் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு இஸ்லாமிய நாகரிகத்தை ஒரு பாடமாக முஸ்லிம் மாணவர்கள் எடுக்கக்கூடியதாக அடுத்த வருடத்தில் பாடத்திட்டம் மாற்றம் செய்யப்படவிருக்கிறது. இதுபற்றி கல்வி இலாகாவுக்கு ஆலோசனை வழங்க மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதில் பேராதனைப் பல்கலைக்கழக அரபுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.ஏ. இமாம் (தலைவர்), வித்தியோதய பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் எம்.எம். உவைஸ், கொழும்புப் பல்கலைக்கழக அரபுத்துறை விரிவுரையாளர் எம்.ஏ.எம். சுக்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்." (தினகரன் - 12.10.1967)

என்ற தினகரன் பத்திரிகைச் செய்தி 'இஸ்லாமிய நாகரிகம்' பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைக்கு ஒருபாடமாக அங்கீகரிக்கப்படுவதில் அ.இ.மு.க. மாநாடு மேற்கொண்ட முயற்சியை ஊர்ஜிதம் செய்கின்றது.

பல்கலைக்கழக அனுமதிக்கு இஸ்லாமிய நாகரிகம் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் 10 வருடப் போராட்டம் அப்பாடம் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கு 1974இல் அங்கீகாரம் பெற்றதும் நிறைவேறியது. க.பொ.த. (சாதாரண) பரீட்சைக்கு தமிழிலக்கியம் 'ஆ' பாடத்திட்டத்தை முஸ்லிம் மாணவர்களுக் கென ஏற்படுத்தி, ஒரு கிழமைக்கு அரை மணித்தியாலம் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்த இலங்கை வானொலி முஸ்லிம் சேவையை ஒரு நாளைக்கு ஒன்றரை மணித்தியாலமுமாக ஆக்கிக் கொடுத்த பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராகவிருந்த போதுதான், இஸ்லாமிய நாகரிகமும் பல்கலைக்கழக அனுமதிக்கு அங்கீகாரம் பெற்ற பாடமாயிற்று. அந்த வகையில், பதியுத்தீன் மஹ்மூத் கல்விக்குப் பொறுப்பான அமைச்சராகவிருந்த ஏறக்குறைய 08 வருடகாலம் ஷாபிமரிக்காரினதும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டினதும் கோரிக்கைகள் நிறைவேறுவதற்குக் கிடைத்த மிக வாய்ப்பான காலமாக அமைந்திருந்தது.

12.2 யுத்தகாலக் கரிசனை

நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த உள்நாட்டு யுத்தத்தினால் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் முஸ்லிம் மாணவர் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் ஷாபிமரிக்கார் மிக்க கரிசனை காட்டினார். முஸ்லிம் மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குத் திடீரென மாற்றப்பட்ட போது அ.இ.மு.க. மாநாடு ஷாபிமரிக்காரின் தலைமையில் 27.02.1979இல் பதில் கல்வி அமைச்சரைச் சந்தித்தது. அதன் விளைவாக அப்பல்கலைக் கழகத்துக்கு மாற்றம் பெற்ற மாணவர்களுள் ஒரு பகுதியினரை மீண்டும் கொழும்புக்கு மாற்றவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கோராத முஸ்லிம் மாணவர்களை அப்பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்ப தில்லை என்றும் இணக்கப்பாடு காணப்பட்டது. விரும்பிச் சென்ற முஸ்லிம் மாணவர்களைத் தவிர வேறு முஸ்லிம் மாணவர் எவரும் இத்திகதிக்குப் பின்னர் இப்பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படவில்லை என்பது கவனத்துக்குரியது.

இக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரபு - இஸ்லாமிய நாகரிகத்துறை விரிவுரையாளராகவிருந்த மௌலவி காலிதீனின் தலைமையில் இயங்கிய 'அகில இலங்கை கதீப்மார் சங்கம்', கல்வி, உயர் கல்வி

அமைச்சர் நிஸ்ஸங்க விஜயரத்னவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தது. 11.01.1980இல் அனுப்பிவைக்கப்பட்ட அக்கடிதம் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்பாடுகளைக் கண்டித்தது.

> "தேசியக் கல்விக் கொள்கைக்கு எதிரான நடவடிக்கையில் இலங்கை முஸ்லிம் கல்விமாநாடு மேற்கொண்ட நடவடிக்கையினை தாங்கள் அங்கீகரித்துள்ள செய்தியினை பத்திரிகைகளில் வாசித்து மிகவும் கவலையடைந்தோம்... முஸ்லிம் கல்விமாநாட்டின் எல்லாத் தீர்மானங்களையும் முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை... இது தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸால் அனுப்பப்பட்டுள்ள மகஜரை நாங்கள் பூரணமாக ஆதரிப்பதுடன் அதனை உடனடியாகக் கவனத்திற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்... இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலையை உயர்த்துவதில் அக்கறையுள்ள நாம் முஸ்லிம் மாணவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பதில்லை என்ற தங்களது தீர்மானத்தைக் கைவிடுமாறு அன்பாய் வேண்டிக் கொள்கின்றோம்."

என்று அக்கடிதத்தின் முக்கிய வாசகங்கள் அமைகின்றன. இவ்வாறான எதிர்ப்புகளுக்கெல்லாம் முகம் கொடுத்து தனது சமூகத்தை வழிநடத்த வேண்டிய நிலை ஷாபிமரிக்காருக்கிருந்தது. தடைகளையெல்லாம் மீறி அவரின் பணி சமூகத்துக்காகத் தொடர்ந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் கற்கை நெறிகளை கொழும்பு அல்லது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து வடமாகாணத்துக்கு வெளியேயிருந்து அவ்விரு பல்கலைக் கழகங்களிலொன்றுக்கு அனுமதி கோருவோரை அப்பல்கலைக்கழகங்களுக்கே அனுமதிக்க வேண்டுமென்றும், பட்டப்பின்படிப்பு கல்வியியல் டிப்ளோமா பயிற்சிக்குத் தெரிவாகி அக்கற்கைநெறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டபோது அங்கு செல்ல விரும்பாத 18 முஸ்லிம்களுக்கும் வேறு எழுவருக்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இக்கற்கை நெறியை ஆரம்பிப்பதன் மூலம் இடம் கொடுக்க வேண்டுமென்றும், தமிழ் மொழி மூல பட்டப் பின்படிப்பு கல்வியியல் டிப்ளோமா பாடநெறியை கொழும்பில் ஆரம்பிக்காவிட்டால் மேற்குறிப்பிட்ட 25 மாணவர்களும் அக்கல்வியைக் கைவிட நேரிடும் என்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு அ.இ.மு.க. மாநாட்டு நிருவாகக் குழுத் தலைவர் ஷாபி மரிக்கார் 09.11.1980இல் அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இதுபற்றி 04.10.1980 இல் தந்திச் செய்தியொன்றையும் 08.10.1980 இல் மகஜர் ஒன்றையும் ஷாபிமரிக்கார் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுத் தலைவருக்கு அனுப்பியிருந்தார். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு அவர் 28.11.1980இல் எழுதிய கடிதத்திலும் அதுபற்றித் தெரிவித்திருந்தார்.

> "We request the University Grants Commission to provide parallel courses in the Tamil Medium either in Colombo or in Peradeniya for all courses conducted in Jaffna University. Quite a number of Muslim students as well as Tamil students from areas other than the Northern Province will find it more convenient to follow Tamil medium courses either in Colombo or Peradeniya."

என்று அக்கடிதத்தில் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டிருந்தார்.

உயர் கல்வியில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய முக்கிய உடனடிப் பிரச்சினைகள் உள்ளிட்ட முஸ்லிம் கல்விப் பிரச்சினைகளையிட்டு 03.12.1981, 05.12.1983களில் ஜனாதிபதிக்கு அ.இ.மு.க. மாநாடு கடிதங்களை அனுப்பி வைத்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற 29 முஸ்லிம் மருத்துவத்துறை மாணவர்களும் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்று அ.இ.மு.க. மாநாடு 11.01.1985இல் விடுத்த கோரிக்கையின் விளைவாக இரண்டாம் வருடத்தில் கற்றுக் கொண்டிருந்த அறுவரைத் தவிர ஏனையோரனைவரும் கொழும்பு, பேராதனை, றுகுணு மருத்துவ பீடங்களில் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டனர். பின்னர், அப் பல்கலைக் கழகங்களில் படிப்பைத் தொடரவும் அப்பல்கலைக்கழகங்களின் பரீட்சைகளுக்குத் தோற்றவும் 1986/87இல் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேராத 1986/87, 1987/88 வருடங்களில் யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான முஸ்லிம் மாணவர்களை,அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு 29.2.1988இல் அமைச்சரவை உப குழுவுக்குச் செய்த தீர்வுத்திட்ட யோசனைக்கிணங்க, வேறு பல்கலைக்கழகங்களுக்கு மறு பகிர்வு செய்யுமாறும், அதற்குத் தேவையான கட்டளைகளைப் பிறப்பிக்குமாறும் கோரும் தீர்மானம் ஒன்றை 13.3.1988இல் அ.இ.மு.க. மாநாடு நிறைவேற்றி அத்தீர்மானத்தை அன்றைய உயர்கல்வி அமைச்சர், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு 22.03.1988இல் எத்திவைத்தது.

> "We were assured by the University Grants Commission in 1988 that as from the year 1989/90 Tamil medium courses would be provided at the University of Colombo. We have been agitating for this for several years and the parliamentary select committee (Headed by Hon.A.C.S. Hameed M.P.) also recommended it. If this is done the need for the UGC to assign students from outside Jaffna Dictrict to the Jaffna University will not arise in future".

என்று அமைச்சர் லலித் அதுலத்முதலிக்கும் 13.02.1991இல் எழுதிவிட்டு ஆறுதல் பெருமூச்சுவிட்டார் ஷாபிமரிக்கார்.

அ.இ.மு.க. மாநாட்டின் ஒரு தசாப்தப் போராட்டத்தின் விளைவாக கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1989/90இல் தமிழ் மொழி மூல பாடநெறிகள் நடத்தப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 15.07.1988இல் மாநாட்டுக்கு அறிவித்தது. தமிழ் மொழிமூல கற்கை நெறிகளை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கவும், யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற மாணவர்களை கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 12.08.1988இல் தீர்மானித்த போது, அ.இ.மு.க. மாநாட்டின் நீண்டகாலப் போராட்டம் வெற்றி பெற்ற மனநிறைவு ஷாபிமரிக்காருக்கு ஏற்பட்டது.

ஏ.ஸி.எஸ். ஹமீத் 20.12.1988இல் உயர்கல்வி அமைச்சரானபோது ஷாபிமரிக்கார் தனது முயற்சியில் மீளுக்கம் பெற்றார். உயர் கல்வியில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையிட்டு உயர் கல்வி அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் அவர்களுக்கு 04.04.1989இல் மாநாடு ஒரு தெளிவுறுத்தற் கடிதத்தினை அனுப்பியிருந்தது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1968இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழி மூலக்கற்கை நெறிகள் பின்னர் இல்லாமற் செய்யப்பட்டு அ.இ.மு.க. மாநாட்டின் இடையறா முயற்சியினால் முஸ்லிம் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மீண்டும் அப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. உயர் கல்வி அமைச்சராகவிருந்த ஏ.ஸி.எஸ். ஹமீதின் உதவி இதற்குப் பெருந்துணை செய்தது.

12.3 கிழக்குப் பல்கலைக்கழகம்

கிழக்கில் அமையவிருந்த பல்கலைக்கழகம் பற்றி அம்மாகாண முஸ்லிம் களின் கருத்துக்களை அறிந்து பொருத்தமானஇடத்தைச் சிபாரிசு செய்வதற்காக கிழக்கு மாகாணத்திற்கு 09.05.1975இல் விஜயமொன்றை ஷாபிமரிக்கார் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு மேற்கொண்டது. அட்டாளைச்சேனை, கல்முனை, மட்டக்களப்பு,



கிழக்குப் பல்கலைக்கழக அமைவிடம் பற்றி கிழக்கு முஸ்லிம்களின் கருத்துக்களைக் கேட்டறிய அ.இ.மு.க. மாநாட்டுச் செயற்குழு 9.5.1975இல் கொழும்பிலிருந்து கிழக்குக்குப் புறப்பட்டபோது

திருகோணமலை முதலான இடங்களில் கூட்டங்களை நடாத்தி முஸ்லிம்களின் கருத்துக்களையும் மாநாடு கேட்டறிந்தது.

> "அக்குழு கல்முனை வந்தபோது அவர்களோடு தொடர்புகொண்ட சில முஸ்லிம் பிரமுகர்கள் இப்பல்கலைக்கழகம் முஸ்லிம் பிரதேசத்தில் அமைவதால் முஸ்லிம்களின் பண்பாட்டிற்கும், கலாசார சூழலுக்கும், சமயவாழ்வுக்கும் பெரும் இடைஞ்சலாக மட்டுமின்றி, சிலவேளை மோசமான முடிவுகளையும் தரும் என்று பலமுறை எடுத்துக்கூறியதால் இங்கு கிழக்குப் பல்கலைக்கழகத்தை அமைக்கும் திட்டத்தை அப்போதைய அரசாங்கம் கைவிட்டு, அமைச்சரும் கல்குடாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான தேவநாயகத்தின் வேண்டுகோளுக்கிணங்க கல்குடாத் தொகுதியில் உள்ள வந்தாறுமூலையில் அமைத்தது. கல்முனை முஸ்லிம் பிரதேசத்தில் இப் பல்கலைக்கழகம் அமையக்கூடாது என்ற விடயத்தில் அப்போதைய இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளும் கூட உடன்பாடாக இருந்தமை துரதிஷ்டமானதே" (ஜலால்தீன் மௌலவி எம்.எஸ்.எம். - 1997:15)

என்று கிழக்குப் பல்கலைக்கழகம் அமையவிருந்த கால கல்முனைப் பிரதேச முஸ்லிம்களின் மனோபாவத்தை தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மௌலவி எம்.எஸ்.எம். ஜலால்தீன் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது. 'இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாறு' என்ற தலைப்பில் தினகரன் வாரமஞ்சரியில் அவர் எழுதிய தொடர்கட்டுரையில் இக்கருத்தைத் தெரிவித்திருந்தார். ஷாபிமரிக்காரினதும் அவரின் முஸ்லிம் கல்வி மாநாட்டினதும் எண்ணமும் அப்போது அதுவாகத்தான் இருந்தது என்பதை நானுமறிவேன்.

கிழக்கின் உத்தேச பல்கலைக்கழகத்தில் கற்கைநெறிகள் எங்கெங்கு அமையவேண்டும் என்பது பற்றி 31.03.1986இல் உயர்கல்வி அமைச்சர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு மாநாட்டின் தலைவர் ஷாபிமரிக்கார் அப்போது கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

> "The ACMEC has been making representations to Your Excellency regarding the setting up of the Batticaloa University(e.g. our memo dated 12.12.1984)
>
> (a) In order to enable students of all three communities to follow the various courses of studies with the sense of security and satisfaction, we are of the view that the Main campus of the Univesity should be in Batticaloa Town, which should include besides the Administration Block the Science Faculty and in due course the Medical Faculty as well.
>
> (b) We suggest that the Faculty of Agriculture should be located in Malwatta, Sammanthurai.

(c) We reiterate that the Faculty of Marine Engineering, Fisheries etc. be setup in Trincomalee/ China Bay

(d) We consider Ampara to be the best location for the Faculty of Engineering and Technology.

(e) We can think of no better place to locate the Faculty of Hinduism, Hindu Civilization including Hindu Philosophy and Fine Arts than Vantharumoolai.

(f) Faculty of Commerce and Management including Economics and Business Administration should be located in Kalmunai, and

(g) Faculty of Arabic and Islamic Studies(including Islamic History, Islamic Philosophy) shold be located in Akkaraipattu/Addalaichenai.

If the proposed University is to be known as 'Eastern University of Srilanka' it becomes very essential all the more that the seat of administration of the University should be in Batticaloa, traditionally the seat of administration of the province...we can assure Your Excellency that if the ACMEC proposals are accepted, there would not only be accelerated educational development of the Eastern Province but also furtherance of cordial relationship between the three major communities that constitute the population of the Eastern Province"

என்று கிழக்கு மாகாணத்தின் துரித கல்வி அபிவிருத்திக்கும், இனங்களின் ஒற்றுமைக்கும் பொருந்தும் வகையில் உத்தேச கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகள் அமைவதற்குப் பொருத்தமான இடங்களை ஷாபிமரிக்கார் சரியாக இனம்காட்டினார். ஆயினும், இனவாதம், பிரதேசவாதம், போராட்டக் குழுக்களின் அச்சுறுத்தல் காரணங்களினால் திட்டமிட்டவகையில் அப்பல் கலைக்கழகத்தின் ஆரம்பம் அமையமுடியாமற் போனமை துரதிஷ்டவசமானது.

மட்டக்களப்புப் பல்கலைக்கழகக்கல்லூரி 01.08.1981இலிருந்து இயங்கத் தொடங்கியது. 1978 இல. 16, பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 21 இன் கீழ் 26.09.1986இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் செய்யப்பட்ட பல்கலைக்கழகக் கட்டளையின்படி இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் 01.10.1986இல் அமைந்தது. ஆங்கில மொழி மூலம் இயங்கும் பல வளாகங்களைக் கொண்ட தேசியப் பல்கலைக்கழகமாக அது பிரகடனம் செய்யப்பட்டது. பல்கலைக்கழகச் சட்டம் 16, 1978இன் பிரிவு 22இன் 'வளாகக் கட்டளை'யும் இதனுடன் சேர்த்து அமைச்சரினால் செய்யப்பட்டது. கல்வி, உயர்கல்வி அமைச்சர் செய்த கட்டளையை மாற்றும் அதிகாரம் பல்கலைக்கழகக் கவுன்சிலுக்கு இல்லை என்பது ஷாபிமரிக்காரின் வாதம். செய்யப்பட்ட பல்கலைக்கழகக் கட்டளையின்படி இப்பல்கலைக்கழகத்தின் நிருவாக மையம் மட்டக்களப்பு நகரத்தில்

அமைய வேண்டும் என்பது ஷாபிமரிக்காரின் கருத்து. பின்னர், கல்வி உயர்கல்வி அமைச்சராக றிச்சட் பத்திரண இருந்தபோதும் இதே கருத்தை ஷாபிமரிக்கார் 22.11.1994இல் அவருக்கும் தெரிவித்திருந்தார். இப்பல்கலைக் கழகம் முஸ்லிம்களுக்கு வசதியாகவும் பொருத்தமான இடங்களிலும் அமைய வேண்டுமென்பதில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

ஷாபிமரிக்காரின் இந்த எண்ணத்துக்கு 1979இல் எனது தலைமையில் இயங்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸும் உறுதுணையாக நின்றது. உத்தேச கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம்களுக்கும் பயனுள்ளதாயமையவும், தமிழ் - முஸ்லிம் உறவு பலமடையவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி, 'முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ்' ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியது. இப்பல்கலைக்கழகம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட குழுவில் ஒரு முஸ்லிமாவது இடம்பெறவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய இளைஞர் காங்கிரஸ், தீர்மானிக்கப்படும் கற்கை நெறிகளுடன் அரபு-இஸ்லாம், இஸ்லாமிய தமிழிலக்கியத் துறைகளும், யூனானி உள்ளடங்கலான ஆயர்வேத மருத்துவ பீடமும் இங்கு அமைக்கப்பட வேண்டுமென்றும் அம் மகஜர் குறிப்பிட்டது. பீடங்கள் பொருத்தமான வெவ்வேறிடங்களில் அமையினும் நிருவாகமையம் மட்டக்களப்பின் தென் பகுதியிலேயே அமைவது பொருத்தமானது என்றும் அம் மகஜர் ஆலோசனை தெரிவித்தது. (தினகரன் வாரமஞ்சரி - 16.03.1980). ஆயினும், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் பரீத் மீராலெப்பையின் தலைமையிலான குழுவொன்று வந்தாறுமூலையிலேயே அப்பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னது. (வீரகேசரி 03.04.1980).

மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரிக்குத் தெரிவான முஸ்லிம் மாணவர்கள் கற்பதற்கான சூழல், யுத்தநிலை காரணமாக இல்லாமற் போனபோது அப்பல்கலைக்கழகக் கல்லூரிக்கு 1ஆம் 2ஆம் வருடங்களுக்குத் தெரிவான 24 மாணவர்களின் எதிர்காலம்பற்றி மிக்க பொறுப்புணர்வுடன் ஷாபிமரிக்கார் நடந்துகொண்டார். முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை 20.03.1986இல் பாராளுமன்றத்தில் ஷாபிமரிக்காரின் தலைமையிலான விசேட குழு சந்தித்துக் கலந்துரையாடி அம்மாணவர்களை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் செய்யவேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை எடுத்தது. அதை அ.இ.மு.க. மாநாடு உயர்கல்வி அமைச்சராகவிருந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கவனத்திற்கும் 31.03.1986இல் கொணர்ந்தது.

"Having considered the difficulties experienced by the 1st and 2nd year Muslim Students of the Batticaloa Univesity College, the ACMEC request His Excellency,

the Minister of Higher Education to order the transfer of the 24 Muslim students to Peradeniya Univesity immediately to enable them to pursue their studies in a peaceful environment.

Hon.A.C.S.Hameed kindly consented to meet Your Excellency and convey to you the above resolutions of the Executive Council endorsed by the Muslim Members of Parliament.

As the Students concerned have missed so much of their normal studies, we appeal to you in the interest of Muslim Education to take action to transfer these students to Peradeniya University"

என்று ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஷாபி குறிப்பிட்டிருந்தார். அக்கால சூழ்நிலையை மனம்கொண்டு பார்க்கும் போதுதான் ஷாபிமரிக்கார் ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கையின் முக்கியத்துவம் உணரப்பெறும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் மூவினங்களையும் பிரதிபலிக்கும் தேசிய பல்கலைக்கழகமாக இயங்க வேண்டுமென்று கருதியவர் ஷாபிமரிக்கார். யுத்தகால நிலைபரங்களினால் தேசிய பல்கலைக்கழகம் என்ற அதன் அந்தஸ்த்தில் தளம்பல் ஏற்பட்டபோது அன்றைய ஜனாதிபதியும் கல்வி, உயர்கல்வி அமைச்சருமான ஆர்.பிரேமதாஸவுக்கும் அவர் மகஜரொன்றை அனுப்பி அப் பல்கலைக்கழகத்தின் அன்றைய நிலை பற்றித் தெரியப் படுத்தினார்.

"The Intention at the time of establishment was for this University to be National Institution where Sinhala, Tamil and Muslim Students could have their University Education in peace and harmony. It was also with this intention that at the beginning the medium of instruction at this University College was only English-the only such University in Srilanka.

It is to be noted that due to the ethnic disturbances the entire Sinhala and Muslim population of students, academic staff, administrative staff and other employees were forced to leave the University, at times at the threat to their lives at gun point. And today it remains a University consisting of only Tamil Students and staff...the Eastern University should reflect the ethnic composition of the Eastern Province in the Student population, the composition of staff, the Governing Council and other statutory Bodies of the University"

என்று ஷாபிமரிக்கார், எம்.எச். ஆமித்(பா.உ.) ஆகிய இருவரும் ஒப்பமிட்டு 18.02.1993இல் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் மகஜர் குறிப்பிடுகிறது. ஷாபியின் கூர்மையான பார்வையில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் அன்றைய நிலை தெளிவாகத் தெரிந்தது.

இனக்குரோதம் தலைதூக்கி நின்ற உள்நாட்டு யுத்த காலத்தில் 1994/95, 1995/96 கல்வி ஆண்டுகளில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைக்கு அனுமதி பெற்ற 34 முஸ்லிம் மாணவர்கள் பற்றியும் ஷாபிமரிக்கார் கவனம் செலுத்தினார். கொழும்பு, பேராதனை அல்லது வேறேதாவது தென்னிலங்கைப் பல்கலைக்கழக மொன்றுக்கு அவர்களை இடமாற்ற வேண்டுமென்று அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கவை மாநாட்டின் செயற் குழுத்தலைவர் என்ற கோதாவில் ஷாபிமரிக்கார் 17.02.1997இல் கோரியிருந்தார். கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றிருந்த அம் மாணவர்கள் 13.09.1996, 30.11.1996, 27.01.1997களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குச் செய்த முறையீட்டையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டு, 1995 ஒக்டோபரில் தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரியும் 1996 மேயில் தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு இடமளிப்பதற்காகவே என்பதையும் ஜனாதிபதிக்கு நினைவூட்டினார். தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கலை, வர்த்தகம், முகாமைத்துவம், கலாசாரக் கற்கைகளே அப்போது ஆரம்பிக்கப்பட்டிருந்தன. விஞ்ஞானக் கற்கைகள் இருக்கவில்லை. அதனால் இம்மாணவர்கள் ஏறக்குறைய ஒன்றரை வருடங்களை வீணாக்கி விட்டிருந்தனர். இவ்விடயமாக ஷாபிமரிக்கார் பின்வரும் கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு விடுத்திருந்தார்:

1. கிழக்குப் பல்கலைக்கழத்தில் பதிவு செய்த 34 விஞ்ஞானத்துறை முஸ்லிம் மாணவர்களையும் பேராதனை, கொழும்பு அல்லது வேறேதாவது தென்னிலங்கைப் பல்கலைக்கழகமொன்றுக்கு அனுமதிக்க வேண்டும்.
2. எதிர்காலத்தில் மாணவர்களின் விருப்பமின்றி முஸ்லிம் மாணவர்களை கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கக் கூடாது.
3. உயிரியல், பௌதிகம், விஞ்ஞானம், விவசாயக் கற்கை நெறிகளை ஆரம்பிக்கத் தேவையான விரிவுரையாளர்கள், ஏனைய வசதிகளை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கூடிய விரைவில் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

என்பன 17.02.1997இல் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில் ஷாபிமரிக்கார் வலியுறுத்திச் சொன்னவை. யுத்தகால சூழலில் நின்று பார்க்கும் போதுதான் ஷாபிமரிக்காருடைய இப்பெரும் பணியின் மகிமை தெளிவாகத் தெரியும். தமிழ் மொழிமூல கல்வியல் முதுமாணிக் கற்கைநெறியை கொழும்புப்

பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்குமாறு 20.03.1997இல் கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தரை அ.இ.மு.க. மாநாடு கோரியிருந்தமையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது.

12.4 முஸ்லிம் கலாசாரப் பல்கலைக்கழகம்

அரபு-இஸ்லாம் கற்கைக்கென கலாசாரப் பல்கலைக்கழகமொன்றை அமைக்கக்கோரும் தீர்மானமொன்று முஸ்லிம் கல்வி மாநாட்டில் 04.08.1982 இல் எடுக்கப்பட்டது. பௌத்த, சிங்கள மேம்பாட்டுக்காக 1958இல் வித்தியோதய, வித்தியலங்காரப் பிரிவேனாக்கள் பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டதைப்போல, தமிழ்மொழி இந்து கலாசார வளர்ச்சிக்கும், அரபுமொழி இஸ்லாம் சமய மேம்பாட்டுக்கும் இரு பல்கலைக்கழகங்கள் நிறுவப்படுமென்று 1961இன் சிம்மாசனப் பிரசங்கத்தில் மகாதேசாதிபதி குறிப்பிட்டுச் சொன்னதை மனத்திலிருத்தி ஷாபிமரிக்கார் இத்தீர்மானத்தை எடுத்திருந்தார். இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டம் இல.74, 1981இன் கீழ் அமைவுற்ற இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகத்தை யொத்ததாக இஸ்லாம்-அரபுப் பல்கலைக்கழகமொன்று இலங்கையில் அமையவேண்டும், இஸ்லாமியத் தத்துவம், சம்மந்தமுள்ள கற்கைநெறிகள், அரபுமொழி மேம்பாடு என்பனவற்றுக்கு இப் பல்கலைக்கழகம் பெரிதும் உதவும் என்று கருதிய ஷாபிமரிக்கார் சிரேஷ்ட அரபுக் கல்லூரிகளை (மத்ரஸாக்கள்) இணைப்புக் கல்லூரிகளாகக் கொண்டு அப் பல்கலைக்கழகம் அமையவேண்டுமென்றும் கருதினார்.

12.5 தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த சிங்கள மாணவர்கள் அனைவரும் 1978இல் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களில் இருந்து முஸ்லிம் மாணவரும் சில தமிழ் மாணவர்களும் 1990களில் வெளியேறினர். அவ்வாறு வெளியேறிய ஏறக்குறைய 596 மாணவர்களுள் 90%இற்கு அதிகமானவர்கள் முஸ்லிம் மாணவர்கள். அவர்களுக்கு வேறு பல்கலைக்கழகங்களில் இடம் எடுத்துக் கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டிருந்தது. ஷாபிமரிக்காரின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மாணவர்களின் விடயத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையும் அரசாங்கத்தையும் அடிக்கடி கவனஈர்ப்புச் செய்து கொண்டிருந்தது. இவ்விடயத்தில் ஷாபிமரிக்காரின் பங்களிப்பு சற்று அதிகமாகவே இருந்தது. அப்போதைய அரசாங்கம் மாகாணத்திற்கு

ஒன்று என்ற வகையில் 9 இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளை ஆரம்பித்தது. திருகோணமலையில் அமைக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திற்கான இணைப்புக் கல்லூரியுடன் முஸ்லிம்கள் திருப்தியடையாததால் சம்மாந் துறையில் இன்னுமொரு கல்லூரியும் நிறுவப்பட்டது. ஏ.எஸ்.எஸ்.ஹமீத் அப்போது உயர்கல்வி அமைச்சராகவிருந்தார்.

யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான முஸ்லிம் மாணவர்களின் கஷ்டங்களும் துயரங்களும் தென்கிழக்கில் ஒரு பல்கலைக்கழகத்தின் தாபிதத்தை ஏற்படுத்தக் காரணமாயிற்று. பாதிக்கப்பட்ட மாணவர்கள் தம் துன்பங்களை பிரசுர வடிவில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு அனுப்பிவைத்தனர். எம்.எச்.எம். அஷ்ர.்.பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் அரசியல் சக்தியாக விளங்கிய காலமது. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசாங்கத்தில் அமைச்சராக விருந்த அஷ்ர.்.ப் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவிப்பதில் பெரும்பங்காற்றினார். அட்டாளைச்சேனையில் 23.10.1995இல் தென்கிழக்குப் பல்கலைக்கழக் கல்லூரியாக ஆரம்பமாகி, 15.05.1996இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்ந்து நிற்கும் அப் பல்கலைக் கழகத்தின் தோற்றத்தில் அமைச்சர் அஷ்ர.்.ப்பின் பணி மரியாதைக்குரியது. அப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமொன்றை ஷாபிமரிக்காரின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு 17.08.1996இல் நிறைவேற்றி ஜனாதிபதி, கல்வி உயர் கல்வி அமைச்சர், அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் ஆகியோருக்கு அனுப்பிவைத்தது. அப்பல்கலைக்கழகம் 23.10.1996இலிருந்து ஒலுவிலுக்கு இடம்மாறியதை வரவேற்ற அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு வேறெந்த தேசிய பல்கலைக்கழகங்களுக்கும் அந்தஸ்த்தில் சற்றும் குறைவுபட்டதாக இப்பல்கலைக்கழகம் அமைந்துவிடக்கூடாதென்றும் தெரிவித்தது. விஞ்ஞானக் கற்கைகள் விஸ்தரிக்கப்படுவதுடன் விவசாயக் கற்கைநெறிகளும் அங்கு ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் ஷாபிமரிக்கார் விரும்பினார்.

சம்மாந்துறை இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களுள் ஒன்றாக்கிவிடுமாறு கோரும் தீர்மானமொன்றையும் ஷாபியின் முஸ்லிம் கல்வி மாநாடு 17.08.1996இல் நிறைவேற்றியிருந்தது. இத்தீர்மானம் 03.10.1996இல் அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கும் அறிவிக்கப்பட்டது.

அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாடு பல்கலைக்கழகக் கல்வியில் கூடிய அக்கறை காட்டி வந்திருக்கிறது உயர்கல்விச் சட்டம் இல. 20,1966 சம்பந்தமாக சனப்பிரதிநிதிகள் சபை நிலையியற்குழு 'B'யின் முன்னிலையில்

04.08.1966இலும், வடக்கில் அல்லது கிழக்கில் பல்கலைக்கழகம் அமைவது சம்பந்தமாக அ.இ.மு.க. மாநாடு, உயர் கல்விக்கான தேசியப் பேரவை (NCHE)யின் முன் 27.01.1970இலும், வில்மட் ஏ. பெரேரா உயர்கல்வி விசாரணைக்குழுமுன் 11.03.1970இலும் முஸ்லிம் கல்வி மாநாடு ஷாபி மரிக்காரின் தலைமையில் சாட்சியமளித்தது. பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை தீர்மானிக்கப்படும்போது, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படும் போது, பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை நிலவும்போது, பல்கலைக்கழகங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படும்போதெல்லாம் அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாடு தக்க ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்கிவந்திருக்கிறது. முஸ்லிம் பொதுமக்களையும் அறிவூட்டி அவர்களையும் உயர்கல்விபால் கவனம் கொள்ளச் செய்து வந்திருக்கிறது. பல்கலைக்கழகங்களின் கற்கை நெறிகள் பற்றியும் மாநாடு கரிசனைகாட்டி வந்திருக்கிறது. ஷாபிமரிக்காரினதும் முஸ்லிம் கல்வி மாநாட்டினதும் உயர்கல்வி முன்னெடுப்புகள் முஸ்லிம் கல்விக்கு உரமிட்டி ருக்கிறது; முஸ்லிம் உயர்கல்வியை மேம்பாடடையவும் செய்திருக்கிறது.

13

யூனானி வைத்தியத்துறையில் கரிசனை

ஷாபிமரிக்கார் பேருவலையில் யூனானி வைத்தியப் பரம்பரையில் பிறந்தவர். அவர் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்குழுத் தலைவராகச் செயற்படத் தொடங்கிய போது யூனானி வைத்தியத்துறை மீது அதீத அக்கறை காட்டினார். பல்கலைக்கழகக் கற்கை நெறியாகவும் சுதேச வைத்தியத்துறைகளில் ஒன்றாகவும் அதற்குரிய இடத்தை யூனானி வைத்தியத்துறையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதில் பெரும் முயற்சிகள் செய்தார். உயர் கல்வி அமைச்சுக்கும் சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சுகளுக்கும் யூனானி வைத்தியத்துறை மேம்பாடு பற்றி பல ஆலோசனைகளை அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டினூடு அவர் முன்வைத்தார். சேர் றாசிக் பரீதுக்குப் பின் யூனானி வைத்தியத்துறை மேம்பாட்டில் கூடிய கரிசனை காட்டி முயற்சிகளை முன்னெடுத்தவர் ஷாபிமரிக்கார் ஒருவரே என்று வரலாறு பதிவுசெய்திருக்கிறது.

சின்னாசியா கோனியாவைச் சேர்ந்த சுல்தான் ஆப்தீனின் மகன் இளவரசர் ஜமாலுத்தீன் கி.பி. 10ஆம் நூற்றாண்டளவில் பேருவலையில் குடியேறி வைத்தியத்துறையிலீடுபட்டார். இவரின் மருத்துவ அறிவைப் பயன்படுத்தும் நோக்கில் ஒரு மருத்துவக் கல்லூரியை 'பெரம்மனிய' என்ற இடத்திலிருந்து ஆட்சி புரிந்த 3ஆம் தாப்புல மன்னன் (கி.பி. 824 – 844) ஏற்படுத்தியதாக வரலாற்றுச் செய்திகளுள.

> "Unani Medicine was known in Sri Lanka as far back as the 10th century A.D. when Prince Jamaluddin, son of the Sultan of Koniya (in Asia Minor), is said to have settled at Beruwela and practiced as a Physician. However, it is possible that this form of medical treatment was introduced into the island much earlier, around the 7th century A.D. when Arab settlements were widely established at the ports" (Mahroof M.M.M. and Marina Azeez, 1986 : 218)

என்று ஆய்வாளர்கள் எம்.எம்.எம். மஹ்றூப், மரீனா அஸீஸ் ஆகியோர் இந்நாட்டின் யூனானி வைத்தியத்தின் தொன்மையை அடையாளப்படுத்திக் காட்டினர்.

> "The commercial prosperity of the Muslims in Sri Lanka at that period helped the practice of Unani medicine in this country in many ways. The constant coming and going of ships ensured that there was a free flow of information between the Unani Practitioners of Sri Lanka and those of the out side Muslim World. Unani physicians from other countries visited Sri Lanka. Some of the masters of the ships which touched Sri Lankan ports were themselves unani practitioners. The entry of unani drugs from the countries of their origin was equally uninhibited. Succeeding centuries saw Unani medicine thriving peacefully" (Mahroof M.M.M., April 1984 : 50)

என்று முஸ்லிம்களின் இலங்கை வருகையுடன் யூனானி வைத்தியமும் இலங்கையில் நிலை கொண்டமாற்றை ஆய்வாளர் எம்.எம்.எம். மஹ்றூப் இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார். கொழும்பிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் வாழ்ந்த முஸ்லிம்களின் சிகிச்சை முறை யூனானி முறையைச் சார்ந்ததாகும் என்று 1345இல் இலங்கைக்கு யாத்திரை செய்த இப்னு பதூதாவின் குறிப்பொன்றும் தெரிவிக்கிறது.

கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபுப் புவியியலாளர் அல்-இஸ்தக்ரி இலங்கையிலிருந்து மருத்துவ மூலிகைகள் ஏற்றுமதி செய்யப் பட்டது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

> "Geographer Yakuth (d.1229) and Al - Quzrini (d. 1283) in their Encyclopaedia maintain that the medicinal herbs of Ceylon were very valuable. They are exported to the Arab world to keep drug stores running" (Imam S.A., 1965: 12)

என்று இலங்கையிலிருந்து அரபு நாடுகளுக்கு மருத்துவ மூலிகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதை 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புவியியலாளர் யாகூத், அல்-கஸ்றின் ஆகியோரும் எழுதி வைத்துள்ளதாக கலாநிதி எஸ்.ஏ. இமாம் குறிப்பிடுகிறார்.

கேகாலை மாவட்டத்திலுள்ள 'கெடபெரியா' குடும்பத்தினர் யூனானி வைத்தியர்களாகப் புகழ் பெற்றவர்கள். முஸ்லிம் ஸ்பெய்னில் (அந்தலூசியா) ஆட்சிபுரிந்த சுல்தான் அபூயாக்கூப் யூசுபின் (1163-1184) அரண்மனை வைத்தியராகப் பணிபுரிந்த முஹம்மத் இப்னு துபைலின் வம்சாவழியினரே இவர்கள்.

> "வட இந்தியாவில் சிந்து மாகாணத்திலுள்ள 'கோப்' என்னும் கிராமத்தில் மருத்துவர் இப்னு துபைலின் இரண்டு ஆண் சந்ததிகள் வாழ்ந்தனர். இலங்கையில் தம்பதெனியாவில் ஆட்சி புரிந்த இரண்டாம் பராக்கிரமபாகு (1236 - 1270) மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க டில்லி சுல்தான் அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தான்... சிங்கள மன்னர்கள் இந்தியாவில் அவர்கள் வாழ்ந்த நகரத்தை வைத்து 'கோபாலா' என்ற வம்சப் பெயரை வழங்கினர்" (Ahamed Udayar S.H., 1983: 171-174)

என்று 'கெடபெரியா' குடும்பத்தொன்மையை அஹமட் உடையார் இவ்வாறு தெளிவுறுத்திச் சொன்னார்.

தம்பதெனியாவை 2ஆம் பராக்கிரமபாகு ஆட்சி செய்தபோது (1236 - 1270) வைத்தியரத்ன கோபால முதலிகே அன்சார் இப்னு துபால் உடையாரும், முதலாம் விமலதர்ம சூரியனின் காலத்தில் (1592-1604), ராஜகருணா வெகம்பொல அவேகொட முதியான்சேலாகே ஷேக் சல்தீன் பின் அத்தாஸ் துபால் உடையாரும், 2ஆம் இராஜசிங்க மன்னன் காலத்தில்(1635-1687) ஷேக் முகம்மது உடையார் இப்னு அலி இப்னு துபாலும் அரச வைத்தியர்களாக இருந்திருக்கின்றனர். ஹஜ்ஜி முகாந்திரம் கோபால முதியான்சேலாகே முகம்மது உடையார் அரச வைத்தியராக 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்திருக்கிறார். வைத்தியரத்ன முதியான்சேலாகே அபூபக்கர் புள்ளே என்பவருக்கு சனரத் மன்னன் கௌரவமும் 'சன்னஸ' பட்டயமும் வழங்கினான். வெலம்பொடையைச் சேர்ந்த கோபால முதியான்சேலாகே சேகுமுகம்மது உடையாருக்கும் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் (1747-1781) 'சன்னஸ' பட்டயம் வழங்கினான்.

மன்னன் சனரத்தும் (1604-1635) அவன் மகன் 2ஆம் இராஜசிங்கனும் காலியில் வைத்தியத் தொழில் புரிந்த சுல்தான் குதியாவுக்கு இரு காணிகளை மானியமாக அளித்து கண்டிக்குக் குடிபெயரச் செய்தனர். சுல்தான் குதியா, மன்னனின் அரண்மனையில் அரச வைத்தியராகப் பணிபுரிந்தார். (லோனா தேவராஜா, 1994:91)

மின்னா மரைக்கார் பஸ்தாமியார் 1515இல் போர்த்துக்கீச அரச குடும்ப வைத்தியராகவும், உதுமாலெப்பை மரைக்கார் மேஸ்திரியார் சேக்காதி மரைக்கார் மேஸ்திரியார் 1640இல் டச்சு அரசாங்க வைத்தியராகவும் பணியாற்றியுள்ளனர். கண்டி மன்னனின் வைத்தியத்திணைக்களத் தலைமைப் பதவியான 'பெஹெத்கே முகாந்திரம் நிலமே' பதவியையும் 'ராஜகருண வைத்தியத்திலக கோபால முதலியார்' பட்டத்தையும் முஸ்லிம் வைத்தியர்கள் நீண்டகாலமாக வகித்து வந்தனர். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனின் சகோதரனான ராஜாதிராஜசிங்க மன்னனின் (1781-1798) மனைவிக்கு

(favourite secondary wife) வைத்தியம் செய்தமைக்காக புவலிகட வெதறாலகே அபூபக்ர் புள்ளே 1786இல் தஸ்கர என்ற இடத்தில் நில நன்கொடை அளித்துக் கௌரவிக்கப்பட்டதையும் வரலாறு பதிவு செய்துள்ளது. வர்த்தகத்துறைக்கு அடுத்தபடியாக இந்நாட்டின் வைத்தியத்துறைக்கு முஸ்லிம்கள் பெரும் பணிசெய்துள்ளனர்.

> "பேருவலையில் வாழ்ந்த பெரும் முகம்மதிய வணிகர் ஒருவருக்கும் அவருடைய எக்காலத்துக்குமான பரம்பரையினருக்கும் என அறுநூறு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் சிங்கள அரசர்களுள் ஒருவன் வழங்கிய மிகப் புதுமையானதும் மிகத் தொன்மையானதுமான செம்பாலான பட்டயம் ஒன்றின் நகலொன்று என்னிடம் உள்ளது. இந்தியாவிலிருந்து புடைவை நெய்வோரை முதன்முதலாக அந்த வணிகர் இந்த நாட்டுக்கு அறிமுகம் செய்துவைத்ததற்காக அது குறிப்பிட்ட சில சிறப்புரிமைகளையும் சலுகைகளையும் அவர்களுக்கு அளிக்கின்றது. அந்த நெசவாளர்களே இலங்கையில் எந்தக் காலத்திலாயினும் குடியேற்றப்பட்ட நெசவாளர்களாவர். இந்தப் பட்டயத்தின் காரணமாக அந்த வணிகரின் நேரடிச் சந்ததியினர், அந்நாட்டின் சிங்கள அரசால் அவர்களின் மூதாதையர்களுக்கு வழங்கப்பட்ட அந்தச் சிறப்புரிமைகளின் ஒரு பகுதியைப் பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் இப்போதும் அனுபவிக்கின்றனர். அவை இலங்கையின் போர்த்துக்கேய, டச்சு, ஆங்கில அரசாங்கங்களால் உறுதிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்தக் குடும்பத்தின் தலைவர் உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 1806இல் மருத்துவத் திணைக்களத்தின் சுதேச அத்தியட்சகராக என்னால் நியமிக்கப்பட்டார். தீவிலுள்ள சுதேச வைத்தியர்களில் மிக்க அறிவுள்ளவர்களில் ஒருவர் என நாட்டின் குடிமக்களால் அவர் கருதப்பட்டதோடு, சுதேச மருத்துவ நூல்களில் மிகச் சிறந்த ஒரு தொகுதியைத் தம்வசம் கொண்டவராகவும் விளங்கினார். அவற்றில் அனேகம் அவருடைய குடும்பத்தில் எழுநூறு எண்ணூறு ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்றன. அந்தக் காலப்பகுதி முழுவதிலும் அக்குடும்பத்தில் குறைந்தது ஒருவராவது மருத்துவத் தொழிலை மேற்கொள்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இலங்கையில் முகம்மதிய சுதேச வைத்தியர்களால் மருத்துவ நோக்கங்களுக்காக மிகப் பழங்காலந்தொட்டு பாவிக்கப்பட்ட அத்தீவின் எல்லா மூலிகைகளைப் பற்றியும் மிகவும் விரிவான ஓர் அறிக்கையை அவர் எனக்குச் சமர்ப்பித்தார். 1810இல் மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கம் எனது ஆலோசனையின் பேரில் இலங்கையில் ஓர் அரச தாவரத் தோட்டத்தை அமைப்பதற்கான பெருநோக்கங்களில், இந்த மூலிகைகளையும் உணவுக்காகவோ வர்த்தக நோக்கங்களுக்காகவோ உபயோகிக்கக்கூடிய தீவின் மற்றும் எல்லாச் செடியினங்களையும் மரக்கறி வகைகளையும் பயிரிடுவதும் விருத்தி செய்வதும் ஒன்றாக அமைந்திருந்தது" (நம் முன்னோர், 1979 : 8 - 9)

என்று இலங்கையில் பிரதம நீதியரசராகவிருந்த சேர் அலெக்சாந்தர் ஜோன்ஸ்டன் 3.2.1827இல் அரச செயலாளருக்கு எழுதிய கடிதத்தின் அடிக்குறிப்பில் இவ்வாறு எழுதிவைத்திருக்கிறார்.

> "அவர்கள் (முஸ்லிம்கள்) இலங்கைக்கு அறிமுகப்படுத்திய மருத்துவம் பற்றிய பிரதான நூல்களில் ஒன்று அவிசின்னாவின் நூலாகும். அரிஸ்டோட்டல், பிளேற்றோ, ஊக்லிட், கலென், டொலமி ஆகியோரின் நூல்களின் மொழிபெயர்ப்புகளையும் அவர்கள் இங்கு அறிமுகப்படுத்தினர். நான் இலங்கையில் இருந்த பொழுது அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகளை முகம்மதிய மத அறிஞர்களும் வணிகர்களும் என்னிடம் கொண்டுவந்தனர். அந்த நூல்கள் ஆரம்பத்தில் தங்கள் மூதாதையரால் பக்தாதிலிருந்து தருவிக்கப்பட்டனவென்றும் அவை இலங்கையில் சில நூறு ஆண்டுகளாக இருந்தன என்றும் அவர்கள் கூறினர்" (நம்முன்னோர், 1979:9-10)

என்றும் அரச செயலாளருக்கு அலெக்சாந்தர் ஜோன்ஸ்டன் 3.2.1827இல் எழுதிய அதே கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிடும் அவிசென்னா (அலி இப்னு ஸீனா) (980- 1037) எழுதிய 99 நூல்களுள் 17 நூல்கள் மருத்துவ நூல்கள். அவரின் 'கானூன் பித்திப்' (மருத்துவ விதிகள்) என்ற பிரசித்திபெற்ற நூல் யூனானி வைத்தியத்துறை மாணவர்களால் இன்றும் பயன்படுத்தப்படுகிறது. அப்பாஸிய ஆட்சிக் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் பக்தாதுடன் கொண்டிருந்த தொடர்பினால் அரபு மூல நூல்களும் 'பைத்துல் ஹிக்மா'வில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட அரபு நூல்களும் அக்கால இலங்கை முஸ்லிம்களிடம் காணப்பட்டதை அலெக்சாந்தர் ஜோன்ஸ்டனின் இக்குறிப்புக் காட்டுகிறது. இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சியில் மேலும் வளர்ச்சி பெற்ற இவ்வைத்தியம் 'யூனானிதிப்' (யூனானி மருத்துவம்) என அழைக்கப்பட்டமையும் கவனத்துக்குரியது.

> "Unani Medicine has a proud tradition that goes back to millennia. Its origins lie in ancient Greece among the founding fathers of modern medicine such as Hippocrates. In fact the very term unani (pronounced yu-naa-nee) means 'Greek' and derives from the Arabic name for Greece yunan. Although this form of medicine is no longer practised in the West, it has found a considerable following in South Asia, among the Muslims of India, Pakistan and Sri Lanka amongst whom it continues to flourish. Its spread of course is largely attributable to the Arabs who not only preserved the Greek sciences in their centres of learning at a ime when it was declining in the West, but also cultivated and developed it to such a high standard that the western physicians who had earlier spurned Hellenic wisdom came to look upon it with respect, so much so that the 'Qanun-fit –tibb' or 'Canon of Medicine' of Ibn Sina (Known to the west

as Avicenna) was used as a standard medical text book in the western world until as late as the 17th century. However it is sad to find Unani medicine steadily declining in the Arab world in favour of conventional western medicine. It is today mainly in India that the system continues to flourish thanks to the patronage extended to it by the Moghul Emperors. Indeed it is India and not Arabia that is the acknowledged centre of Unani today. The Urdu language of India's Musalman has in fact become the effective medium of instruction in Unani studies to such an extent that even in Sri Lanka Urdu is taught as a subject in the Unani syllabus for three years while those students pursuing higher studies are required to consult standard Urdu medical treatises such as the Sharh-e-Asbab" (Asiff Hussein, Sunday Observer - 21.07.2002: 24).

என்று 'யூனான்' என்ற சொல் கிரேக்க தேசத்தைக் குறிக்கும் அரபுச்சொல் என்பதை நினைவூட்டி, யூனானி மருத்துவத்தின் தாயகம், அராபியப் பங்களிப்பு, மொஹலாய சக்கரவர்த்திகளின் அரவணைப்பில் அதன் வளர்ச்சி பற்றியெல்லாம் ஆஸிப் ஹுசைன் 'சண்டே ஒப்சேர்வரில்' (21.07. 2002) எழுதிய 'Unani Medicine a Greek Medical tradition of the Muslims' என்ற கட்டுரையில் எழுதி வைத்திருப்பது அவதானத்திற்குரியது. நோய் நிவாரணிகளாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உபதேசித்தனவற்றையும் உள்வாங்கி இவ்வைத்தியம் வளர்ச்சியடைந்தது. அராபியாவும் மேற்குலகும் அம்மருத்துவத்தைக் கைவிட்டுவிட்ட நிலையில் இந்தியா, பாக்கிஸ்தான், வங்காளதேசம், இலங்கை முதலான தென்ஆசிய நாடுகளில் அம்மருத்துவம் நிலைகொண்டிருப்பதையும், உருதுமொழி அம்மருத்துவத்தின் கற்றல் கற்பித்தல் மொழியாக அமைந்திருப்பதையும் ஆஸிப் ஹுசைன் அக்கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வைத்தியத்தின் வரலாற்றுப் பின்புலத்தை அறியாமையினாலோ என்னவோ ஆரம்பகால முஸ்லிம் வைத்தியர்கள் எந்த வைத்திய முறையைப் பின்பற்றி இலங்கையில் வைத்தியம் செய்தனர் என்பது பற்றி பிற்கால ஆய்வாளர் சிலர் சர்ச்சை கிளப்பியிருக்கின்றனர்.

"There is no archaeological or historical evidence to show that the Muslims of Ceylon have practiced the Unani System of Medicine"

என்று சித்த வைத்தியர் வடிவேல் சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் 19.07.1992இல் எழுதிய 'Whither Unani Medicine' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"Judging from references to Muslim Physicians it could be assumed that there were many of them practicing in the Kingdom and rising to the highest ranks in their profession. **There is no indication of what system of Medicine they**

> **practiced.** There are still Muslim Villagers in Sri Lanka Villages who are, very likely, descendants of the Kandiyan practitioners" (Lorna Dewaraja, Dr. 1994: 89)

என்று 'The Muslims in Kandiyan Kingdom – A Study in Ethnic Harmony' என்ற கட்டுரையில் கலாநிதி லோனாதேவராஜாவும் எழுதிவைத்திருக்கிறார். சோனகர் இஸ்லாமிய கலாசார நிலையத்தின் 50 ஆண்டுகள் நிறைவு மலரில் (1944-1994) இக்கட்டுரை (பக். 89) இடம் பெறுகிறது. வடிவேலின் கட்டுரைக்கு மறுப்புக் கட்டுரையொன்றும் வெளிவந்திருக்கிறது. சோனகர் இஸ்லாமிய கலாசார நிலையத்தின் 50 ஆண்டுகள் நிறைவு மலரில் (1944 - 1994) எம்.ஐ. ஷரிப், டாக்டர் எம்.சி. முஹம்மத், மஹீஸ் ஆகியோர் இணைந்து எழுதிய 'Unani System of Medicine' என்ற கட்டுரையே (பக். 125 - 127) அம்மறுப்புக் கட்டுரை.

> "In the light of strong historical facts, it is surprising indeed that, a person like D. Vadivel whose academic qualification demands that, facts and figures should be gathered with an unbiased and unprejudiced mind, should maliciously claim that 'There is no archaeological or historical evidence to show that the Muslims of Ceylon have practiced the Unani System of Medicine'. One wonders whether Dr. Vadivel is really ignorant of these historic evidences or whether this is a sinister attempt to deliberately distort facts and rewrite Sri Lankan History? Is Dr. Vadivel merely the catspaw? When one considers that Dr. Vadivel is a former lecturer at the Institute of Indigenous Medicine, it makes us wonder whether he has written this highly distorted article in order to satisfy his vengeance against somebody whom he dislikes" (M.I.C.H. Golden Jubilee Souvenir (1944 - 1994 : 127)

என்று அம்மறுப்புக் கட்டுரையில் வடிவேலின் கருத்தை கட்டுரை ஆசிரியர்கள் மூவரும் ஒத்தமனத்தினராக விமரிசித்திருந்தனர். யூனானி வைத்திய முறை இந்நாட்டு முஸ்லிம்களின் பாரம்பரிய வைத்தியமுறை என்பதை அழுத்திச் சொல்வதாக அவர்களின் இக்கட்டுரை அமைந்திருந்தது.

'ஹக்கீம்கள்' என அழைக்கப்படும் வைத்தியக் குடும்பங்கள் யூனானி வைத்தியத்தை பரம்பரை பரம்பரையாக இந்நாட்டில் பாதுகாத்து வருகின்றன. இவர்கள் இலங்கையைத் தரிசித்த அராபியரின் வாரிசுகளாக இருக்கலாம். யூனானி வைத்தியத்துறையின் வரலாற்றுத் தொன்மையை அறிந்து கொள்வதன் மூலமே சேர் ராசீக் பரீதும் அவரைத் தொடர்ந்து ஷாபி மரிக்காரும் அம்மருத்துவத் துறையின் உயிர் வாழ்வுக்கு முன்னெடுத்த பெருமுயற்சிகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

சுதேச வைத்தியக் கல்லூரி 1934இல் தாபிக்கப்பட்டபின் அங்கு பயிற்றப்பட்டவர்களே ஆயர்வேத, சித்த, யூனானி வைத்தியர்களாக விளங்குகின்றனர். இந்திய யூனானிக் கல்லூரியில் பயின்ற சிலரும் இவர்களில் இருக்கின்றனர். அதனால், 'ஹக்கீம்' என்ற சொல் பயிற்றப்பட்ட, தகுதியுள்ள யூனானி வைத்தியர்களைக் குறிக்கும் சொல்லாக இப்பொழுது இல்லாமற் போய் விட்டது. ஆயினும், பாரம்பரிய யூனானி வைத்தியர்களை அச்சொல் இன்னும் குறித்து நிற்கிறது. இச் சுதேச வைத்தியக்கல்லூரி இப்பொழுது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஓரங்கமாக இயங்குகிறது.

1930இல் ஏற்படுத்தப்பட்ட சுதேச வைத்தியச் சபையில் (Indigenous Medical Board) ஆயுர் வேத, சித்த, யூனானி வைத்தியத் துறைசார் பிரதிநிதித்துவம் இருந்தது. ஆயுர் வேதச் சட்டம் இல. 31, 1961,

> "Ayurveda means Ayurveda, Siddha, Unani Desiya Chikitsa and all indigenous systems of medicine of all countries recognised by their governments respectively"

என்று 'ஆயுர் வேதம்' என்பதற்கு வரைவிலக்கணம் கூறுகிறது. ஆயினும் சிங்கள, தமிழ் சமூகங்களின் இயக்கங்களும் தலைவர்களும் காட்டிய அக்கறை காரணமாக ஆயுர்வேத, சித்த வைத்தியத்துறைகள் வளர்ச்சி யடைந்து சிறந்த தரத்தையும் எட்டிவிட்டன. கிரேக்க நாகரிக காலத்தில் வேரூன்றி அரேபிய நாகரிக காலத்தில் வலுவாக வளர்ச்சி பெற்ற யூனானி வைத்தியம் முகலாய ஆட்சியின் போது இந்தியாவில் சிறப்பான வளர்ச்சியை அடைந்தது. இந்தியா, பாக்கிஸ்தான், பங்காளதேசத்தில் யூனானி வைத்தியம் வளர்ச்சி கண்ட அளவுக்கு இலங்கையில் அதன் வளர்ச்சி இல்லாமற் போனமைக்கு அவ்வைத்தியத்துறையின் இஸ்லாமிய கலாசாரப் பெறுமானத்தை இலங்கை முஸ்லிம் சமூகமும் அதன் தலைவர்களும் உணரத்தவறியமையே காரணமாகும். 1967, 1974களில் கொழும்புப் பல்கலைக்கழக யூனானி வைத்தியத் துறை மூடிவிடப் படக்கூடிய ஆபத்தை எதிர்கொண்டபோது அக்கறையுள்ள சிலரின் தகுந்த நேரத் தலையீடு அந்நிலையைத் தவிர்த்தது. சேர் றாசிக் பரீத், எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் ஆகியோர் இதற்காக நன்றி கூறப்பட வேண்டியவர்கள்.

1940இலிருந்து இன்றுவரை சுதேச ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி யிலிருந்தும் (Govt. Indigenous Ayurvedic Medical College), இப்போது சுதேச வைத்திய நிறுவகத்திலிருந்தும் (Institute of Indigenous Medicine) வெளியேறும் யூனானி வைத்தியர்கள் தகுதியானவர்களாக இல்லை. தயாரிக்கப்பட்ட யூனானி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கும் இதுவரை அரச அனுமதி இல்லை. இதற்கெல்லாம் முஸ்லிம் சமூகத்தின் உதாசீன மனப்பான்மையே காரணம்.

"The Muslim Community as a whole, to whom Unani is considered as cultural heritage and its leaders didn't feel much about this system. From 1930s to the present era, the interest of the Muslim community and its organisations and leaders were positively ineffective as far as Unani is concerned. Unani system is mere mirage in the cross road of indigenous medical development... After the implementation, Muslim community, Organisations and the leaders up to the present era never cared to follow up the development of their own system of medicine to achieve a development in quality and stature. Whereas the Sinhala and Tamil community Organisations and community leaders did have a dedicated follow up in the development of their Ayurveda and Siddha Systems, thus they have reached their marks in quality and natural development...

It is challengeable truth that from 1940s up to the present era all Unani medical practitioners passing out from the Govt. Indigenous Ayurvedic Medical College and the present Institute of Indigenous Medicine do not practice Unani medical system in their private medical practices, almost 99.9% of them, they practice some form medicine alternativa. But, they cannot be blamed as whatever Unani medicines in the Unani pharmacopiae they would have studied are not available for their purchases to use in their practice. For years the Government had never given an opportunity for the importation of Unani compound medicines nor made arrangements for the local production of at least 75% of the Unani compound medicines in the Unani Pharmacopiae, for the use of the Unani physicians. The dedication and interest of the Sinhala community on Ayurveda is prominently seen... Thus Ayurvedic medicines are so freely available in the open market that all qualified ayurvedic physicians could and should practice Ayurvedic medicines without resorting to any medicines alternativa in their practices. Similarly the dedication of the Tamil community too has produced a positive complement of Siddha State and local government institutional development in the North and Eastern Provincial Areas." (Aleem Moulana Dr.S.A., Daily News - 28.10.1998:9)

என்று யூனானி வைத்தியத்துறையின் இப்போதைய உண்மை நிலையை 'Is Unani a Part of Ayurveda Act?' என்ற தனது கட்டுரையில் டாக்டர் எஸ்.ஏ. அலீம் மௌலானா தெளிவாகக் கூறியிருப்பது அவதானத்துக்குரியது. யூனானி மருந்துகளின் இறக்குமதி ஆயுர்வேத மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் (Ayurvedic Drug Corporation) பொறுப்பிலிருக்கிறது. யூனானி மருந்தாக்கத் திற்குத் தேவையான மூலப்பொருள்களையும் ஏறக்குறைய 600 வகையான மருந்துக் கலவைகளையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு தேவை இருக்கிறது. ஆயினும், அண்மைவரை கூட்டுத்தாபனம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. தேவையான மருந்துகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளுமாறு வைத்தியர்களை அது நெறிவுறுத்தியது.

சில வருடங்களுக்கு முன் 2 மில். ரூபா பெறுமதியான யூனானி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியபோதும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் மீது 90% தீர்வை விதிக்கப்பட்டதால் யூனானி மருந்துகளை அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நோயாளிகள் தள்ளப்பட்டனர். மேனாட்டு மருந்து இறக்குமதிகளுக்கு வரிச்சலுகை வழங்கப்படுவதால் ஒப்பீட்டு ரீதியில் யூனானி மருந்துகளின் விலை எப்போதும் கூடுதலாக இருந்தது. இந்நிலையிலிருந்து பார்க்கும் போதுதான் யூனானி மருத்துவத் துறைபாலான முஸ்லிம் சமூகத்தின் அக்கறையின்மையும், சேர் றாசிக் பரீதும் ஷாபிமரிக்காரும் செய்த பங்களிப்பின் முக்கியத்துவமும் உணரப்படும்.

சுதேச வைத்திய ஆணைக்குழு (1947) சமர்ப்பித்த அறிக்கை பற்றி சுதந்திர இலங்கையின் முதலாவது வரவு செலவுத்திட்டம் 21.01.1948இல் சென்ட்சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உரையாற்றிய சென்ட்டர் சேர் றாசிக் பரீத் பின்வருமாறு கூறினார்:

> "கௌரவ சென்ட்சபை அங்கத்தவர்கள் அறிந்திருப்பது போன்று இந்நாட்டில் மூன்று வகையான சுதேச மருத்துவ முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆயுர்வேதம், சித்த, யூனானி என்பன அவை. ஆயுர்வேத மருத்துவம் கொழும்பிலும், சித்த வைத்தியம் யாழ்ப்பாணத்திலும் கற்பிக்கப்பட வேண்டுமென்றும், முஸ்லிம் மருத்துவமான யூனானி இலங்கையில் கற்பிக்கப்படலாகாது என்றும் இக்குழு சிபாரிசு செய்திருக்கிறது. இச்சிபாரிசு எனது சமூகத்தவரின் உள்ளங்களில் பெரும் வேதனையை உண்டாக்கியுள்ளது. இக்குழுவில் கலாநிதி எம்.எல். தாஸ்குப்தா, (தலைவர்), பி.டி.எஸ். குணவர்த்தன, எஸ். நடேசன், பண்டிதர் ஜி.பி. விக்கிரமாராச்சி ஆகியோர் அங்கத்துவம் வகித்தனர். இவர்களில் எவருக்குமே யூனானி முறையைப் பற்றி எதுவுமே தெரியாது. யூனானி மருத்துவ முறை பற்றி ஓரளவேனும் அறிந்திருக்கும் ஒருவராவது இக்குழுவில் இடம்பெறாதது துரதிஷ்டமே. இதனால் முஸ்லிம் சமூகம் இன்று தண்டனை அனுபவிக்கிறது." (Razik Fareed Sir, 1968:87)

என்று சேர் றாசிக் பரீத் சென்ட்சபை அங்கத்தவர்களை யூனானி மருத்துவத் துறை பற்றிக் கவன ஈர்ப்புச் செய்தார். ஆயுர்வேத, சித்த வைத்தியத் துறைக்குப் பொறுப்பான சுதேச வைத்திய சபையினால்தான் யூனானி வைத்தியத்துறையும் நிருவகிக்கப்பட்டது. அச்சபையில் சேர் றாசிக் பரீத் 28 வருடங்கள் அங்கத்துவம் வகித்தார். ஆயுர்வேத வைத்திய முறையை விருத்தி செய்வதற்கு வழிவகைகளைக் காணவென நியமிக்கப்பட்ட குழுவிலும் (1966), இலங்கை யூனானி முறையை விருத்தி செய்வதற்கு வழிவகைகள் காணவென நியமிக்கப்பட்ட குழுவிலும் (1967) தலைவராகக்

கடமையாற்றி பயனுள்ள பல ஆலோசனைகளை அவர் முன்வைத்தார். யூனானி விரிவுரைகள் தமிழில் நடத்தப்பட வேண்டுமென 1938இல் பணிக்கப்பட்டபோது, தமிழில் விரிவுரையாளர்களின்மையைக் காரணம் காட்டி, அப்பிரிவை மூடிவிட நேருமென்பதால், யூனானி விரிவுரைகளை ஆங்கிலத்தில் நடத்த நாசிக் பரீத் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறெல்லாம் நாசிக் பரீத் யூனானி வைத்தியத்துறையின் உயிர் வாழ்வுக்காகப் போராடியிருக்காவிட்டால் என்றோ அத்துறை அஸ்தமித் திருக்கும். இந்த வரலாற்றுப் பின்னணியில் நின்று நோக்கும்போதுதான் யூனானி வைத்தியத்துறைக்கு உயிரூட்ட ஷாபிமரிக்கார் செய்த முயற்சியின் முக்கியத்துவமும் தெரியவரும். கொழும்புப் பல்கலைக்கழக சுதேச வைத்தியத் துறையின் யூனானிப் பிரிவில் கற்கும் மாணவர்களில் அனேகர் முஸ்லிம்களாக விருப்பதாலும் அவர்கள் தமிழ் மொழி மூலம் கற்பதாலும் யூனானி வைத்தியத் துறையின் தலைவரும் அத்துறையின் விரிவுரையாளர் களும் தமிழ் மொழி மூலம் பயிற்றும் திறமை பெற்றிருத்தல் அவசியம். இத்துறையில் சிறப்புப் பணி செய்வதற்கு அரபு, உருதுமொழி அறிவு தேவை. யூனானி வைத்தியத்துறையில் பட்டப்பின் படிப்புக்கான வசதிகள் ஏற்படுத்தப்படுவதன் அவசியத்தையும் ஷாபிமரிக்கார் வலியுறுத்தினார். தேவையான யூனானி மருந்துவகைகளை ஆயுர்வேதத் திணைக்களம் இறக்குமதி செய்யவேண்டுமென்றும், அலிகார், ஒஸ்மானியா பல்கலைக்கழகங் களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இலங்கையில் யூனானி வைத்தியத்துறையை விருத்தி செய்ய வேண்டுமென்றும் ஷாபிமரிக்கார் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டினூடாக வேண்டுகோள் விடுத்தார். பட்டப்பின் படிப்புப் பட்டம் பெற்ற யூனானி வைத்தியத்துறைப் பட்டதாரிகள் இலங்கையில் இல்லை. இலங்கை யூனானி வைத்தியத்துறையில் விரிவுரையாளர்களாகப் பணிபுரிவோரும் தகுதியானவர்களாக இல்லை. அவர்களில் அனேகர் நிரந்தர நியமனம் பெறும் தகுதியுடையவர்களாக இல்லாமையால் தற்காலிக விரிவுரையாளர்களாகவே பணிசெய்கின்றனர். எனவேதான், அலிகார், ஒஸ்மானியாப் பல்கலைக்கழகங்களின் யூனானி நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அப்பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் சேவைகளைப் பெற்றுப் பயனடைய வேண்டுமென்று ஷாபிமரிக்கார் கருத்துரைத்தார்.

கொழும்புப் பல்கலைக்கழக சுதேச மருத்துவ நிறுவகத்தின் யூனானிப் பிரிவின் நிலைப்பற்றி அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாக சபைத் தலைவர் ஷாபிமரிக்கார் அப்போதைய கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அதுலத் முதலியின் கவனத்தை ஈர்த்திருந்தார். அவர் 13.02.1991 இல் அமைச்சருக்கு

அனுப்பி வைத்த கடிதத்தில் யூனானி வைத்தியத்துறை எதிர்நோக்கும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

"We strongly urge that the recommendations dated 25.5.1988 made by the Sub-Committee of the Board of Management of this Institute appointed on 02.07.1987 to find out ways and means of improving the Unani section of the Institute of Indigenous Medicine be implemented in full.

In the Unani Section there is an acute shortage of staff. While the cadre is for 2 lecturers, 2 assistant lecturers and one demonstrator, there is only one lecturer and the rest are assistant lecturers on probation. If the Unani Section is to function smoothly there should be at least another five assistant lecturers.

Recently six Departments of Study have been approved for Ayurveda whereas, only two sub-departments have been approved for Unani (one for Materia Medica and the other for Medicine). While the number of subjects in Unani is similar to Ayurveda, one wonders why this discrimination - when the demand for Unani has shown considerable increase - this time the number seeking admission being nearly 50.

Unlike Ayurveda graduates who have wide prospects of being absorbed into government service, there is an absence of such openings for Unani graduates. Hence there is no enthusiasm for students to apply for admission. Opening of Unani Hospitals in areas with Muslim population and the setting up of Unani wards in the existing Ayurvedic Hospitals will provide opportunities for the employment of Unani graduates as Medical officers. In the case of two or three Unani Hospitals recently set up permanent Unani Medical officers have still not been appointed eg. Beruwela, Pangaragammana (Mahiyangana).

A Unani ward with about 30 beds is available in the Ayurveda Teaching Hospital. There are however no Unani House officers in charge of the wards. One male and one female Unani House officers should be immediately appointed. Similarly in the OPD Room No. 7 where members of the Unani teaching staff take turns voluntarily to attend to patients there are no permanent Unani House officers. One Unani

House officer is a must. Again even in the Unani Pharmacy, there are no Unani medical officers to prepare Unani medicines - at least two Unani medical house officers should be appointed. In all five Unani medical officers are required immediately. There are no Unani visiting Physicians to conduct clinical lectures for the students. The non-availability of Unani medicines limits the work done in the Unani wards, in the Unani Hospitals, in the OPD as well as the scope of private practice in Unani medicine. The Ayurvedic Dugs Corporation handles the import and distribution of Unani drugs. There should be a qualified Unani Pharmaceutist attached to the Ayurvedic drugs Corporation who could prepare the Unani medicines. While there are more than 500 Unani Drugs available in India and Pakistan only about twenty prepared drugs are available for the Unani wards and the OPD. Every effort should be made to get down a good stock of Unani medicines and ensure that the drugs are made available to the Teaching Hospital, Unani Hospitals including OPD and also to the private Unani Medical practitioners.

In the absence of any Unani graduates with post-graduate qualifications in Sri Lanka to conduct courses for post-graduate degrees, it appears essential to get down a suitably qualified Professor or Lecturer to the Unani Institute, through the Faculty of Medicine, Aligarh Muslim University.

The need for assistant lecturers to obtain post-graduate qualifications for purpose of advancing their knowledge of unani medicine, for confirmation and salary increments has never been felt, so much as at present. The sub-committee of the Committee of Management, which was appointed to look into this question on 02.07.1987 recommended that M.A. or M.D. course for both Ayurveda and Unani be organized. But the Committee of Management however, have now suggested to the Unani teaching staff to follow the M. Phil. course. However even for this purpose lecturers with post-graduate qualifications in Unani medicine will have to be got down from India. Hence it will be necessary to ensure that immediate steps are taken to negotiate with the Faculty of Unani medicine of Aligarh or Osmaniya Universities and obtain the services of qualified staff from these Universities.

In view of the vast strides made by the Faculty of Unani medicine of the Aligarh Muslim University, it would be useful to-forge a link between the Unani section of the Institute of Indigenous Medicine of Sri Lanka. and the Faculty of Unani Medicine of the Aligarh Muslim University and promote mutual staff/students exchange programmes mainly for the benefit of the Sri Lankan Institute.

Many posts as detailed above have remained unfilled for several years as a result of which the entire system of unani medicine continues to be neglected. We understand that for the last twenty five years only one Unani medical officer has been appointed. We desire that Immediate remedial measures must be taken both by the Ministry of Education and Higher Education and the Ministry of Health.

We once again reiterate that Unani medicine should come under a separate institute like the Institute of Siddha Medicine under the University of Jaffna. It will be possible to promote both Unani and Ayurveda very much if the two systems of medicines are administered by two different institutes."

என்று அமைந்திருந்தது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் யூனானி மருத்துவத் துறையின் நிலை பற்றி ஷாபிமரிக்கார் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தின் வாசகங்கள். யூனானி மருத்துவத்துறைக்குக் காட்டப்படும் பாரபட்சம், முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் யூனானி வைத்தியசாலைகளை நிறுவுதல், ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்குத் தகுதியுள்ள யூனானி மருந்தாளர் ஒருவரை நியமித்தல், அலிகார், ஒஸ்மானியா பல்கலைக்கழகங்களிலிருந்து தகுதியான பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் சேவைகளைப் பெறுதல், யூனானி மருத்துவத் துறையை சித்த வைத்தியத் துறையைப் போல் தனியான மருத்துவத் துறையாக அபிவிருத்தி செய்தல் பற்றியெல்லாம் ஷாபிமரிக்கார் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

சித்தவைத்தியத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சுயேட்சையான துறையாக இயங்குகிறது. கைதடியில் சித்த வைத்திய போதனா வைத்தியசாலையும் இருக்கிறது. 53 சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இயங்கி சித்த வைத்தியத்தின் சுதந்திரமான இயக்கத்தை உறுதிப்படுத்துகின்றன. சித்த வைத்தியத் துறையில் கலாநிதிப் பட்டங்களைக் கூட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோற்றான் யூனானி வைத்தியத்துறையும் ஆயுர்வேத

வைத்தியத்துறையிலிருந்து தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்று ஷாபிமரிக்கார் கோரினார். உயர் கல்வி அமைச்சும் சுகாதார அமைச்சும் இதில் கவனம் செலுத்துவது அவசியமாகும். முஸ்லிம் சமூகமும் இது பற்றி விழிப்புணர்வு பெற வேண்டும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறை ஏற்படுத்தப்படும் போது ஒலுவில் வைத்தியசாலையைத் தரமுயர்த்தி, அதன் வசதிகளை அதிகரித்து, யூனானி வைத்தியத் துறையையும் அப்பல்கலைக்கழகத்துக்கு மாற்ற வேண்டுமென்று ஷாபிமரிக்காரின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு 17.11.1996இல் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது. யூனானி வைத்தியத் துறையில் பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் ஷாபிமரிக்கார் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவற்றை எத்திவைத்து பரிகாரம் காண முயன்றார்.

ஷாபிமரிக்காரின் ஹக்கீம் பரம்பரையைச் சேர்ந்த அவரின் ஒன்றுவிட்ட சகோதரன் பாக்கீர் மாக்காரின் மகன் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் இத்துறைப் பங்களிப்பும் ஷாபிமரிக்காரின் பங்களிப்புடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியதாகிறது. இம்தியாஸ் வீடமைப்பு இராஜாங்க அமைச்சராகவிருந்த போது அவரின் கோரிக்கையின் பேரில் 30 கட்டில்களைக் கொண்ட 'யூனானி வார்ட்' ஒன்று ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்டது. அந்நற்பணிக்காக அப்போதைய சுதேச வைத்தியத்துறை அமைச்சர் லொக்கு பண்டாரவுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமொன்றை ஷாபிமரிக்காரின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு நிறைவேற்றி யிருந்தது. அதே இம்தியாஸின் முயற்சியில்தான் மஹியங்கணைப் பிரதேசத்திலுள்ள பண்டைய முஸ்லிம் கிராமமான 'பங்கர கம்மாண' வில் 1989இல் யூனானி வைத்தியசாலையொன்று ஏற்படுத்தப்பட்டது. கொழும்புக்கு வெளியே ஏற்படுத்தப்பட்ட முதலாவது யூனானி வைத்தியசாலை இது. பேருவலை மாளிகாஹேனயிலும் யூனானி வைத்தியசாலையொன்று இம்தியாஸின் முயற்சியினால் ஏற்படுத்தப்பட்டது. இவையெல்லாம் இலங்கையின் யூனானி மருத்துவத்துறையில் ஏற்பட்ட சில முக்கிய வளர்ச்சிப் போக்குகள். அதற்காக பேருவலை ஹக்கீம் குடும்பம் நன்றிக் குரியது. ஷாபிமரிக்கார் இச்செயற்பாடுகளின் மூலவேராக அமைந்திருந்தார்.

யூனானி வைத்தியத்துறை விரிவுரையாளர்கள் பட்டப்பின் படிப்புக் கற்கைகளை மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட வேண்டும்; யூனானி வைத்தியத்துறையில் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்; ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் யூனானி மருந்தாளர் ஒருவர் சேவையிலிருக்க வேண்டும்; ஆயுர்வேத வைத்தியர்கள் அரச சேவையிலும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்; முஸ்லிம்கள்

கணிசமாக வாழும் பகுதிகளில் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் 'யூனானி வார்ட்' அமைக்கப்படுவதன் மூலம் யூனானி வைத்தியர்கள் நியமிக்கப்பட வாய்ப்புகள் ஏற்படும் என்றெல்லாம் இலங்கையில் யூனானி வைத்தியத் துறையின் அபிவிருத்திக்குப் பல பயனுள்ள ஆலோசனைகளை ஷாபிமரிக்கார் முன்மொழிந்தார்.

யூனானி வைத்தியத்துறை சம்பந்தமாக ஷாபிமரிக்கார் 11.11.1998இல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். யூனானி வைத்தியத்துறைக்குக் கிடைக்க வேண்டிய இடம் கிடைப்பதில்லை. அதன் முன்னேற்றம் மிகவும் பின்தங்கியுள்ளதால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தகுதிவாய்ந்தவர்களைக் கொண்ட ஒரு விசேட குழுவை அமைத்து அதன் பரிந்துரைகளைப் பெற வேண்டும் என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுச் சொன்ன ஷாபிமரிக்கார், வேறுபல ஆலோசனைகளையும் அத்துறையின் முன்னேற்றத்துக்காக முன்வைத்தார்.

1. யூனானி சபையின் நிருவாக அதிகாரங்கள் அதிகரிக்கப்படல் வேண்டும்.
2. யூனானி வைத்தியத்துறையின் இப்போதுள்ள இரு பிரிவுகள் குறைந்தது இன்னும் இரு பிரிவுகளால் அதிகரிக்கப்பட வேண்டும்.
3. நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தில் யூனானி ஆராய்ச்சி உத்தியோகத்தர் வெற்றிடம் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும்.
4. ஆயுர்வேத, சித்த, யூனானி வைத்தியத்துறைகளுக்கு தனித்தனி நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும்.
5. மூலகங்களுக்குப் பதிலாக தயாரிக்கப்பட்ட யூனானி மருந்துகளை இறக்குமதி செய்ய யூனானி வைத்தியர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.
6. தேசிய சுகாதார சபை யூனானி வைத்தியத்துறைப் பிரதிநிதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.
7. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறைக்கு முஸ்லிம்கள் தெரிவாவதில்லை என்பதாலும், யூனானி வைத்தியத்துறையில் பயில அரபு, உருது மொழிகளில் அறிவு அவசியமென்பதாலும் யூனானி வைத்தியத்துறைக்குப் போதியளவு முஸ்லிம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு உத்தரவாதம் செய்ய வேண்டும்.

என்றெல்லாம் பல பயனுள்ள ஆலோசனைகளை முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்தவர்களின் அறிகைக்கு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவர் என்ற வகையில் ஷாபிமரிக்கார் சமர்ப்பித்திருந்தார். அந்தவகையில், இலங்கையில் இத்துறையின் வளர்ச்சிக்கு ஷாபிமரிக்கார் பெருந்தொண்டாற்றியிருக்கிறார். பாரம்பரிய ஹக்கீம் சுதேச வைத்தியப் பரம்பரையைச் சேர்ந்த ஷாபிமரிக்காரின் யூனானி வைத்தியத்துறை மேம்பாட்டுக்கான பங்களிப்பாக இவை அமைகின்றன.

ஷாபிமரிக்காரின் வழிநின்று கல்விப் பணி செய்யும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு யூனானி மருத்துவத்துறையின் வளர்ச்சியிலும் கூடிய கவனம் செலுத்தும் கடப்பாடுடையது. யூனானி மருந்து தயாரிப்பு நிலையம், யூனானி மூலிகைத் தோட்டம், பண்டைய யூனானி நூல்கள் ஏடுகளை மறுபதிப்புச் செய்தல் என்பவற்றில் அ.இ.மு.க. மாநாடு கவனம் செலுத்த வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் கவனத்தையும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு யூனானி வைத்தியத் துறையின்பால் ஈர்க்க வேண்டும்.

14

கல்விக் கருத்தும் சிந்தனையும்

எம்.ஸி. சித்திலெவ்வை, ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், ரி.பி. ஜாயா, எ.எம்.எ. அஸீஸ் முதலான இந்நாட்டின் பிரபல முஸ்லிம் கல்விச் சிந்தனையாளர்களின் வரிசையில் ஷாபிமரிக்காருக்கும் தனி இடமுண்டு. இஸ்லாமிய கல்விக் கோட்பாட்டை மீறாத தன்மை, இஸ்லாமிய உலகை நோக்கிய பார்வை, முஸ்லிம் அறிவுப் பாரம்பரியப் பேணுகை என்பன அவரின் கல்விச் சிந்தனைகளில் இழையோடின. முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கிய கல்விப் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் திராணி ஷாபிமரிக்கார் வாழ்ந்த காலத்தில் அவரின் சிந்தனைகளுக்கிருந்தது. கல்வி, ஆசிரியர் திருப்தியும் பொறுப்பும், சிறுவர் கரிசனை, ஒழுக்கக்கட்டுப்பாடு, பெற்றோர் பொறுப்பு என்பன பற்றிய அவரின் கருத்துக்கள் பிரபல கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு நோக்கற்பாலன.

14.1. கல்வி

> "கல்வி என்பது முழுமை; அதை பகுதி பகுதியாகப் பிரித்துக் கற்பிக்க முடியாது" (சந்திரசேகரம் ப. 1975: 203)

என்று கல்வியின் முழுமைத்தன்மை பற்றி பேராசிரியர் ப. சந்திரசேகரம் கூறினார்.

> "கல்வியானது முழு வாழ்க்கையுடனும் தொடர்புடையது. அதனை ஒவ்வொரு பகுதிக்கெனப் பகுத்துப்பார்த்தல் முடியாது. ஒன்றுடன் ஒன்று தொடர்புற்ற சில குறிக்கோள்கள் அதற்குள. பண்புகளைப் பலப்படுத்தல், விவேகத்தை அபிவிருத்தி செய்தல், அறிவையும் கலாசாரத்தையும் பெற்றுக் கொள்ளல் என்பன இவற்றுள் பிரதானமானவை" (Shafie Marikar S.L.M., The Crescent - Sept. 1978: 7)

என்று கல்வியானது முழுவாழ்வுடனும் தொடர்புடையதென்று ஷாபிமரிக்கார் கூறினார். 'தொழில் வசதிக்கான கல்வி' என்ற தலைப்பில் 'கிறசண்ட்' (செப்-1978) இதழுக்கெழுதிய கட்டுரையில் இக்கருத்தை அவர் கூறியிருந்தார்.

> "கல்வியில் மாட்சிமை எய்துவதற்கு வேண்டிய முக்கிய தேவைகள் யாவை? முதன்மையான தேவை இஸ்லாமியப் பாரம்பரியத்தில் உருவாகிய ஓர் உலக நோக்கிலான பார்வை. இது இல்லாவிட்டால் அந்நிய விழுமிய முறையை விமர்சிக்கக்கூடிய பகுத்துணர்வோ, தங்குதடையில்லாமல் வேகமாகப் பரவுகின்ற மேற்கத்தேய பண்பாட்டையும் நாகரிகத்தையும் தடுத்து நிறுத்தக் கூடிய மனவலிமையோ எங்களுக்கிருக்காது. இந்த நாகரிகத்தின் கொடூரபாதிப்பு ஆளுமையையும் ஆன்மீகத்தையுமிழந்த மனிதனில் பிரத்தியட்சமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. தற்போதைய கவலைக்கிடமான காட்சியின் பயங்கரப்பரிமாணம், மதச்சார்பற்ற மானிடத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி என்னும் நவீன கருத்து முஸ்லிம் கல்வியில் துல்லியமாக ஊடுருவுவதைப் பற்றி விழிப்போடிருக்கச் செய்யவேண்டும். இஸ்லாமிய நோக்கில் அபிவிருத்தி என்பது மனிதனின் முழுமையான உடல், உள, ஆன்மீக அபிவிருத்தியேயன்றி வேறல்ல. தற்போதைய கல்வி, கற்பிக்கப்படும் மாணவ மாணவிகளின் முழுச் சீவனையும் இலக்காகக் கொண்டிருப்பதால் ஆசிரியர்கள் வகிக்கும் பங்கு மகத்தானது; அச்சாணி போன்றது. அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது மாணவர்களுடைய மன வளர்ச்சி மாத்திரமல்ல முழு ஆளுமை வளர்ச்சியாகும். தீபவிழைவுகளின்றி ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துவிடமுடியாது. இஸ்லாமியக் கல்வி முறையில் அநேகமாக புகட்டப்படாமல் கற்கும் ஒழுக்க, ஆன்மீகப் பண்புகளின் வளர்ச்சி அத்தியாவசியமானது. ஆகையால் முஸ்லிம் ஆசிரியர்கள் சிறந்த உதாரண புருசர்களாகத் திகழவேண்டிய தேவை அதி முக்கியமாகின்றது. கல்வியின் உன்னத நிலையை நிர்ணயிக்கும் மற்ற முக்கியஅம்சம் ஊக்குவிக்கும் சூழலாகும். இதை உருவாக்குவதற்குத் தேவையானவை சமூகத்துக்குப் புத்துயிரளித்தலும், அறிவுத் தாகத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தில் சமூகத்தை ஊறச் செய்வதுமாகும். முஸ்லிம்களாகிய எங்களுக்கு ஒரு புகழ்படைத்த வரலாறு இருந்ததென்றால் அதற்குக் காரணம் எங்கள் மூதாதையர்கள் அறிவு வளர்ச்சிக்கு அளித்த அளப்பெரிய அந்தஸ்த்தும் காட்டிய கரிசனையுமாகும். கல்வியை கல்விக்காக மாத்திரமல்ல பூரணத்துவ நிலையை அடையும் ஒரு மார்க்கமாக அதை நாடினார்கள். ஆகையால் அச்சிறந்த செறிந்த பாராம்பரியத்திற்கு உரிமையாளராகிய நாங்கள் அதைப் பேணிப் பாதுகாப்பதோடு அவ்விலட்சியத்தை அடைவதற்கு முழு ஆர்வத்தோடும் அக்கறையோடும் அயராது உழைக்கவேண்டியது எங்கள் தலையாய கடனாகும். காலம் எங்களுக்காகக் காத்திருக்காது" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., ACMEC Journal, Oct. 1993)

என்று அமையும் கல்விமான் ஷாபிமரிக்காரின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுச் சஞ்சிகைச் செய்தியை ACMEC Journal – 1993 Oct. இதழ் தாங்கி வந்த வெறும் ஆசிரியர் தலையங்கமாக நான் பார்க்கவில்லை. முதிர்ந்த கல்விமான் ஒருவரின் ஆழ்ந்த கல்விக் கருத்துகள் இவை. கல்விச் செயற்பாடுகளில் தனது சமூகம் அவதானம் செலுத்த வேண்டியன வென ஷாபிமரிக்கார் தன் சமூகத்துக்கு அடையாளப்படுத்திக் காட்டிய முக்கிய அம்சங்களிவை.

14.2 ஆசிரியர் திருப்தியும் பொறுப்பும்

கல்வி அறிவுப்பெருக்கத்திற்கு மட்டுமன்றி மாணவரின் உடல், உள, சமூகவளர்ச்சிக்கும் உதவுவது. பிறப்பிடம், சாதி, வறுமை, மொழிவேறுபாடு, சமயம் என்பன கல்விக்குக் குறுக்கே நிற்கக்கூடாது. கல்வியின் நோக்கங்களை பாடசாலைகளில் செயற்படுத்துவது ஆசியர் பணி. தியாக மனப்பான்மை, நல்லொழுக்கம், மாணவர்பால் அன்பும் பரிவும் உள்ளவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும். நாட்டுப் பற்று, கடமையுணர்ச்சியுடன் அவர்கள் அப்பணியைச் செய்ய வேண்டும். பாடசாலை நேரம் முழுவதும் அவர்கள் தம் கடமைகளைச் செய்ய வேண்டியிருப்பதுடன் பாடசாலை நேரத்துக்குப் பின்னரும் அடுத்த கற்பித்தலுக்காகத் தன்னைத் தயார்படுத்த வேண்டும். புதிய கருத்துக்களையும் தேடிப்பெற்று தம்கற்பித்தலை மாற்றிக் கொள்ளவும் வேண்டும். எதிர்கால சந்ததியை அறிவு, ஒழுக்கம், பண்புள்ள சமூகமாக ஆக்கிக் கொடுப்பது ஆசிரியர்களின் கைகளிற்றான் பெரிதும் தங்கியிருக்கிறது. அவர்கள் கொடுக்கும் தலைமைத்துவம், முன்மாதிரியான நடத்தை, நிருவாகம், கற்பித்தற் பணி, அறிவு, ஆய்வுத் திறன், மதிப்பீட்டுச் செயற்பாடு என்பனவெல்லாம் அவர்களின் ஆசிரியப் பணியை மகிமைப்படுத்துவன. அவர்கள் செய்யும் தொழிலுக்குரிய மதிப்பையும் கௌரவத்தையும் வழங்குவது சமூகத்தினதும் அரசாங்கத்தினதும் கடமையாகும். இப்புனித பணியைச் செய்யும் ஆசிரியர்கள் தம் பணியைச் சரிவரச் செய்வதற்கு அவர்கள் மனமகிழ்ச்சியுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

> "எந்த ஒரு கல்விக் கூடத்தின் நல்வாழ்வும் வெற்றியும் அதில் பணிபுரியும் ஆசிரியர்களின் சுபீட்சத்தையும் மனத்திருப்தியையும் பொறுத்ததாக அமைந்துள்ளது" (The Crescent, July 1979:7)

என்று கல்விமான் ஷாபிமரிக்கார் கூறியதில் மிக்க அர்த்தமுள்ளது. ஆசிரியர்களுக்குப் பயிற்சி, நலனோம்பல், தகுந்த வேதனம், சமூக அந்தஸ்த்து, பதவி உயர்வு, கல்வி நிருவாகத்தில் அவர்களையும்

பங்குகொள்ளச் செய்தல் என்பனவெல்லாம் ஷாபியின் மேற்கூற்றில் தொக்கு நிற்கின்றன. ஆசிரியர்களின் பொருளாதார, சமூக, தொழில் நிலை உயர்வு பற்றியும் ஷாபிமரிக்கார் கவனம் செலுத்தினார். பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சம்பள விடயத்தில் எல்.பி.டி.சில்வா குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொள்ளமுடியாது என 16.04.1975இல் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு எதிர்ப்புத் தெரிவித்தமையும், பின்னர், அதை ஆசிரியர் சங்கங்கள் முன்னெடுத்தமையும் நாமறிந்தது.

ஆசிரியர்களைத் திருப்திப் படுத்தி அவர்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பெறும் நோக்கில் அவர்களை ஊக்கப்படுத்த மேலதிகக் கொடுப்பனவொன்றையும் (Bonus) ஷாபிமரிக்கார் ஸாஹிறாக் கல்லூரியில் அறிமுகப்படுத்தியிருந்தார். 1980ஆம் ஆண்டிற்கான போனஸ் கொடுப்பனவு 1981 டிசம்பர் மாதச் சம்பளத்துடன் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. அக்கொடுப்பனவைப் பெற்றவர்களுள் நானும் ஒருவன். ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியர் சங்கம் வகுத்த திட்டத்திற்கமைய இக்கொடுப்பனவு சம்பளத்திற்கு மேலதிகமாக வருடாந்தம் வழங்கப்படவிருந்தது.

> "On behalf of the management of Zahira College I have pleasure in making a 'Bonus' payment of Rs… to you… we are making this payment as a token of our appreciation of the good work you have done and the co-operation extended to us during 1980. This payment has been made out on the basis of the general principles formulated by the College Teachers' Guild… I sincerely hope that this gesture on the part of the management would have a corresponding response from you and that you would continue to extend your whole-hearted co-operation to all our colleagues on the staff towards the further advancement of Zahira College in all directions – religious, educational and sports"

என்று 1980ஆம் வருடத்திற்கான போனஸ் கொடுப்பனவுடன் 04.12.1981ஆம் திகதியிட்டு ஷாபிமரிக்கார் இணைத்திருந்த கடிதத்தின் முக்கிய வாசகங்கள் இவை. ஷாபிமரிக்காரின் கல்விச் சிந்தனையின் செயற்பாட்டு வடிவம் இது. ஆசிரியரின் மனமகிழ்ச்சியும் திருப்தியும் கல்வித் தாபனமொன்றின் வெற்றிக்கான செயற்பாட்டுக்கு அவசியமென்பதை உணர்ந்து செயற்பட்டவர் அவர்.

தலைமைத்துவமானது ஆதிக்கம், பணிவு எனும் இயல்பூக்கங்களைச் சார்ந்து நிற்பது. "ஆதிக்க மனப்போக்கு, துணிந்து துரிதமாகச் செயலாற்றும் திறன், சொல்வன்மை, எடுத்த செயலை முடிக்கும் திறன், மனவெழுச்சிப் பெருக்கம், பிறரிடம் பரிவு, பிறருடன் சேர்ந்து செயலாற்றும் திறன், பிறரைச் செயற்படவைக்கும் திறம், அளவற்ற சக்தி பின்னிற்பது போன்ற அடக்கம்

ஆகியவையே உண்மைத் தலைவனிடன் காணப்படும் பண்புகள்" என்பார் ஆல் போர்ட் என்ற அறிஞர். ஒரு குழு முன்னேற்றமடைவற்குத் தேவையான வற்றை அதன் தலைவன் செய்தல் வேண்டும். தலைவன் அறிவாற்றல் மிக்கவனாக, வழிகாட்டியாக, குழுவின் இலட்சியத்தின் அடையாளமாக விளங்கவேண்டும். சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களுக்குக் காரணஸ்தர்களாக விளங்கியவர்கள் தலைவர்களாகவே இருந்திருக்கின்றனர்.

தலைமை ஆசிரியர்களும் பாடசாலைச் சமூகங்களின் தலைவர்களே. இவர்களின் தலைமை பதவியால் ஏற்பட்டது. மாணவரின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் தங்கள் தலைமையை இவர்கள் நன்கு பயன்படுத்த வேண்டும். எளிமை, அன்பு, அறிவாற்றல், பண்பட்ட உள்ளம், நேர்மை, நடுநிலைமை, மாணவரின் செயற்பாடுகளில் விருப்பத்துடன் பங்கு கொள்ளல் ஆகிய பண்புகளைக் கொண்ட தலைமையாசிரியர்கள் மாணவரினதும் அவர்கள் சார்ந்த சமூகத்தினதும் அன்பையும் மதிப்பையும் பெறுவார்கள். பாடசாலைத் தலைமை ஆசிரியர்களாகப் பணி செய்த பலர் அவர்தம் சிறப்புப் பணிகளினால் சமூகத்தலைவர்கள் என்ற அந்தஸ்த்துக்கு உயர்ந்துமிருக்கிறார்கள். சுவாமி விபுலாநந்தர், ரி.பி. ஜாயா, டபிள்யு தஹநாயக்க, ரிச்சட் பத்திரண, எ.எம்.எ. அஸீஸ், பதியுத்தீன் மஹ்மூத், எஸ். நடேசன், வீ. நல்லையா, ஹன்டி பேரின்பநாயகம் போன்றோர் பாடசாலை ஆசிரியர்களாக, தலைமை ஆசிரியர்களாகவிருந்து சமூகத்தலைவர்களாக உயர்ந்தவர்கள். கல்வியில் உயர் நிலையில் உள்ள சமூகத்தைவிட உயர் நிலை அடையாத சமூகத்தின் ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் பொறுப்பு அதிகமாகும்.

> "முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம் முஸ்லிம் பாடசாலைத் தலைமையாசிரியர் களின் கையில் தங்கியிருக்கிறது. வருங்கால சமுதாயத்துக்கு அவர்களே பொறுப்பாளிகள். எனவே, சமூக நலனில் அக்கறை கொண்டு அவர்கள் செயலாற்ற வேண்டும்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 12.10.1967:5)

என்பது அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாடு, முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கென 10.10.1967இல் நடத்திய மாநாட்டில் ஷாபிமரிக்கார் அதிபர்களுக்குச் செய்த உபதேசம். பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆய்ஷா ரவூப், சென்ட்டர் மசூர் மௌலானா, மாவட்ட நீதிபதி எம்.எம். அப்துல் காதர், சமூகசேவைகள் உதவி அமைச்சர் எம்.எம். முஸ்தபா, ஏ.எல்.ஏ. மஜீத் ஆகியோரெல்லாம் உரைநிகழ்த்திய இம் மாநாட்டிலேயே சமூக நலனுக்காக உழைக்க முன்வருமாறு முஸ்லிம் பாடசாலை அதிபர்களை ஷாபிமரிக்கார் வேண்டிக் கொண்டார். கொழும்பு மேயர் ஜாபிர் ஏ. காதர் இம் மாநாட்டிற்கு தலைமை வகித்தார். தலைமை

ஆசிரியர்களின் உதாசீனம் செய்ய முடியாத சமூகப் பொறுப்பை சமூகத்தை வழிநடத்த வேண்டிய அவர்களின் தார்மீகக் கடமையை ஷாபிமரிக்காரின் அறிவுரை தொட்டுக் காட்டியது.

> "நீங்கள் உங்கள் பாடசாலை அமையப் பெற்ற கிராமங்களில் அங்குள்ள கிராமவாசிகளுக்கு வழிகாட்டிகளாகவும், அறிவைப் புகட்டும் அறிஞர்களாவும், உத்தம நண்பர்களாகவும் திகழவேண்டும்" (அஸீஸ் எ.எம்.எ., 1963:127-128)

என்று அளுத்கம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர் மத்தியில் 04.06.1944இல் உரை நிகழ்த்திய எ.எம்.எ. அஸீஸ் குறிப்பிட்டுச் சொன்ன ஆசிரியர்களுக்கிருக்கவேண்டிய உதார பண்புகள் ஷாபிமரிக்காரின் தலைமையாசிரியர்களுக்கான உபதேசத்திலும் தெரிகின்றன. இவ்விரு அறிஞர்களின் சிந்தனையும் ஆசிரியர்களின் சமூகப் பொறுப்பு விடயத்தில் ஒருவழிப்பட்டு நிற்பதை அவதானிக்கலாம்.

14.3 சிறுவர் கரிசனை

சிறுவர் எனப்படுவோர் 18 வயதிற்குக் குறைந்த வயதினர். ஐ.நா.சபை சிறுவர்களின் உரிமைகளைப் பிரகடனம் செய்திருக்கிறது. அவ்வுரிமைகள் பெற்றோருக்கோ ஆசிரியர்களுக்கோ எதிரானதல்ல. சாதி, சமயம், குலம், பால், பொருளாதார வேற்றுமைகளை மேவிநிற்கும் சிறுவர்களின் உரிமைகள் அவை.

ஷாபிமரிக்கார் சிறுவர்பால் கரிசனை கொண்டவர். அவர்களின் கல்வி, ஆரோக்கியம் என்பனவற்றில் அவரின் அக்கறை குறித்துச் சொல்லப்பட வேண்டியதாகும். கல்வி பெறுவதற்கான சிறுவரின் உரிமை, போஷணை, சுகாதாரப் பேணுகை, நோய்நொடிகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை போன்றன ஷாபிமரிக்காரின் கரிசனையில் முக்கிய இடம் பெற்றன. சிறுவரின் ஒழுக்கம் பற்றிக் கருத்துரைத்த அவர் பின்வருமாறு கூறினார்:

> "If children are brought up in a religious atmosphere and are well-grounded in the tenets of their faiths, the standard of discipline in the country is bound to improve" (Shafie Marikar S.L.M., The Crescent, Nov-Dec,1979)

சமயச் சூழலில் சிறுவர் வளரும்போது நாட்டில் ஒழுக்கக் கட்டுப்பாடு (discipline) முன்னேற்றம் அடையும் என்பது அவரின் கருத்தாகவிருந்தது.

சிறுவரின் தன்னம்பிக்கை, சுய அறிவு, சுய சக்தி, துணிவு என்பனவற்றை கல்வி வளர்க்க வேண்டும் என்ற கருத்துடையவர் அவர். அதனாற்றான் சிறுவரின் ஆரோக்கியம், போஷாக்கு முதலிய விடயங்களில் அரசாங்கம்

கவனம் செலுத்த வேண்டும், அவர்களின் விருப்புகள், அவர்களில் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வகையிலும், அவர்களின் கலாசாரம், புத்தி, ஆன்மீக வளர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும், கல்வி மறுசீரமைக்கப்பட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். 'த கிறசன்ட்- டிசம் 1979' இற்கு அவர் எழுதிய 'சர்வதேச சிறுவர் ஆண்டு' என்ற கட்டுரையில் அவரின் இந்த அழுத்தத்தைக் காணலாம். விளையாட்டு மைதானங்கள், நூலகங்கள், பொழுதுபோக்கு வசதிகள் சிறுவர்க்காக ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஷாபிமரிக்கார் அக்கட்டுரையில் வலியுறுத்திச் சொன்னார். இலவச பாடநூல் விநியோகத்தை வரவேற்ற அவர், இலவசக் கல்வி அதன் யதார்த்த நிலையை இப்போதுதான் அடைந்திருக்கின்றது என்றும் சொன்னார். சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு 'சிறுவர் உரிமைச்சாசனம்' (Children's Charter) சட்டவடிவம் பெறவேண்டும் என்றும் அவர் கருதினார். கொடுமை, நேர்மையற்ற நடத்தை, துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க இது அவசியம் என்றும் அவர் கருதினார். ஷாபிமரிக்காரின் இக் கருத்துக்களில், 'குழந்தையிடமும் மனிதரிடமும் அவர்களின் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் சிறப்பு மிக்க பண்புகளை வெளிக் கொணர்தல் கல்வியாகும்' என்ற காந்தியின் கருத்தும், 'மனிதனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமைபெற்ற நிறைவினை (perfection) மலரச் செய்வது கல்வி' என்ற விவேகானந்தரின் உபதேசமும் இழையோடுவதைக் காண்கிறோம். குழந்தை உளவியலுக்கு தமது கல்விக் கோட்பாட்டில் முக்கிய இடம்கொடுத்த ரூசோவும் எமது நினைவுக்கு வருகிறார்.

> "Every effort is made to provide a suitable environment and atmosphere so as to promote the physical, mental and social development of the children. The primary school seeks to provide, among other things, a well ordered experience, a stimulating life and a wide range of companionship" (Shafie Marikar S.L.M., 1977 : 4)

ஸாஹிறாக் கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 08.11.1977இல் நிகழ்ந்த ஆரம்பப் பிரிவுப் பரிசளிப்பு விழாவில் ஷாபிமரிக்கார் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டுச் சொன்ன கருத்து இது. ஆரம்பப் பாடசாலைச் சிறுவர்களின் உடல்,உள,சமூக அபிவிருத்தியில் ஷாபிமரிக் காரின் கரிசனையை இது காட்டுகிறது. நல்லொழுக்கம், நல்வாழ்வு, நல்லிணக்கம் உள்ள சமூகத்திற்கு சிறுவர்கள் தயார் படுத்தப்படவேண்டும் என்ற கருத்தையும் ஷாபி இவ்வுரையில் குறிப்பிட்டுச் சொன்னார். அவரின்

கல்வி முன்னெடுப்புகளில் உளவியல் பெறும் முக்கியத்துவத்தை இவ்வுரை காட்டுகிறது.

யுத்தத்தாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மீது விசேட கவனம் செலுத்தினார் ஷாபிமரிக்கார். அவர்கள் பாதுகாப்புப் பெறுவதையும், அவர்களின் புனர்வாழ்வையும், கல்வியில் அவர்கள் பாதிக்கப்பட்டு விடாதிருப்பதையும் கவனத்திற் கொண்டு செயற்பட்டவர் அவர். ஏ.எச்.எம். அஸ்வருடனான சொல்லாடலில் இளைஞர்களுக்கு ஒரு முக்கிய செய்தியை அவர் விடுத்திருந்தார்.

> "I urge the Muslim youth to take the mantle of leadership and make certain that the light that emanated from knowledge shall not cease to guide the community" (Shafie Marikar S.L.M 2005 : 53)

என்பதே அச்செய்தி.

14.4 ஒழுக்கக் கட்டுப்பாடு (Discipline)

தனிநபர், நிறுவனம் மட்டுமல்ல முழுத்தேசமும் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் தங்கியிருப்பதால் ஒழுக்கக் கட்டுப்பாடு மிக முக்கியமானதாகவும் அதிகம் பேசப்படும் விடயமாகவும் உள்ளது. மக்கள், ஒழுக்கக் கட்டுப்பாடு, ஊக்கம், சுறுசுறுப்புள்ளவர்களாக இல்லாவிட்டால் நாடு வெற்றியும் சுபீட்சமும் அடைய முடியாது என்பது ஷாபிமரிக்காரின் கருத்து. 'நடத்தைக்கான ஒழுங்கு விதிகளே ஒழுக்கக் கட்டுப்பாடு' (A System of rules for conduct) என்று ஒக்ஸ்போர்ட் அகராதி கூறும் விளக்கத்தையும் தந்து,

> "Discipline is synonymous with 'character training' and is concerned not merely with outward behaviour but with the inner motives of conduct. The English Board of Education once defined it as, 'the means by which children are trained in orderliness, good conduct and the habit of getting the best out of themselves.' This implies that a well - disciplined student is assured of success in life" (Shafie Marikar S.L.M., Dec. 1978)

என்றும் கூறி, ஒழுக்கக் கட்டுப்பாடு பற்றி விளக்கம் தந்தார் ஷாபிமரிக்கார். 'த கிறசன்ட்' (டிசம். 1978) பத்திரிகைக்கெழுதிய முகப்புக் கட்டுரையில் ஷாபிமரிக்கார் மேற்கண்டவாறு எழுதிவைத்திருக்கிறார். ஒழுக்கக் கட்டுப்பாடுள்ள மாணவன் தன் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி பெறுவான் என்பதை இதன் மூலம் ஷாபிமரிக்கார் கூற விழைந்தார். அதிகாரம் உள்ளவர்களால் பிள்ளைகள் மீதுசுமத்தப்படுவதல்ல ஒழுக்கக் கட்டுப்பாடு; அவர்களுக்குள்ளேயே அது அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். சமூக விரோதச் செயல்களில் இருந்து தவிர்ந்து கொள்வது, பிறரின் உரிமைகள்,

வசதி, வாய்ப்புகளுக்கு மதிப்பளிப்ப தெல்லாம் மாணவர்களிடம் தாமாகவே ஏற்படவேண்டும் என்ற முக்கிய கருத்தையும் அவர் வலியுறுத்தினார்.

> "The ideal type of discipline is not what is imposed on the children by those in authority over them but what develops from within themselves. The repression and control of anti - social impulses must be self - imposed. The student himself must realize the harmful consequences of anti - social behaviour and refrain from it. He must learn to be regardful of the rights, comforts and conveniences of others" (Shafie Marikar S.L.M, Dec. 1978)

என்று அவரின் எழுத்துக்கள் ஒழுக்கக் கட்டுப்பாட்டில் வெளிச் சுமையைவிட உள்ளுணர்வை முக்கியப்படுத்திக் காட்டுகிறது.

மனிதனிடம் இயற்கையாகக் காணப்படும் பண்படாத நடத்தைகளை உயர்ந்த இலக்கியத்துக்குட்படுத்தி அவற்றை அடக்கி ஆள்வதே ஒழுக்கம் என்று அரிஸ்டோட்டில் கூறினார். மேதையானாலும் நல்லொழுக்கமற்றவன் மதிக்கப்படுவதில்லை. உலகில் காணப்படும் போட்டியும் பூசலும் மாணவரிடை காணப்படும் பதற்றமும் ஒழுங்கின்மையும், ஒழுக்கக் குறைபாடுகளினின்றும் எழுந்தனவே.

ஒழுக்கக் கட்டுப்பாடு சீர்கேடடையின் வேலையில் தடங்கல் ஏற்படும். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அலுவலகங்கள், தொழிற்சாலைகளில் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் சீர்கேடடைந்தமையின் தீய விளைவுகளைக் காணமுடிகிறது. ஒழுக்கக் கட்டுப்பாட்டில் தடங்கல் ஏற்படின் கல்வி உதாசீனம் செய்யப்படும்; தொழில் சிரமத்திற்குள்ளாகும்; உற்பத்தி தடைப் படும்; நாட்டின் முன்னேற்றமும் அபிவிருத்தியும் தாமதமடையும். மாணவர் களும், தொழிலாளர்களும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன், நடத்தை, விதிமுறை களை ஏற்று ஒழுகுவார்களாயின் அவர்களின் வெற்றியும் மகிழ்ச்சியும் உத்தரவாதப்படுத்தப்படும் என்றும் ஷாபிமரிக்கார் தெளிந்துரைத்தார்.

> "A break-down of discipline can lead to serious disruption of work, wherever it may occur. Its harmful effects can be seen most clearly in schools, universities, offices and factories. When there is indiscipline, studies are neglected, work suffers, production is hampered and the progress and the development of the country as a whole are retarded. When students and workers are disciplined and conform to accepted norms of work and conduct, success and happiness are assured for all"

என்று ஒழுக்கக் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்படாதவிடத்து ஏற்படும் தீய விளைவுகளையும் கடைப்பிடிக்கப்படுமிடத்து ஏற்படும் நல்வெளிப்பாடுகளையும் ஷாபிமரிக்காரின் மேற்குறிப்புக் காட்டுகிறது.

"A well-disciplined student will be pleasing in his demeanour, diligent in his studies and work respectful to his parents, teachers and elders and practise desirable habits such as punctuality, cleanliness and truthfulness. The reverse happens when there is lack of discipline. It should be our aim to ensure that high standards of discipline are maintained if we are to achieve efficiency and success in our work and activities. It is an endeavour in which every one of us has to be concerned" (Shafie Marikar S.L.M., The Crescent, Dec .1978)

என்றும் ஷாபிமரிக்கார் எழுதி, நல்லொழுக்கக் கட்டுப்பாடுள்ள மாணவர், பெற்றோர், ஆசிரியர், முதியோரை மதித்து நடப்பர் என்றும், தொழிலில் திறமையும் வெற்றியும் பெறவேண்டுமாயின் மிக உயர்ந்த ஒழுக்கக் கட்டுப் பாட்டை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் ஷாபிமரிக்கார் அழுத்திச் சொல்லியிருப்பது மாணவருக்கும் நாட்டுக்கும் அவர் விடுக்கும் செய்தியாக அமைந்திருக்கிறது.

"சிறுவர்கள் சமயச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு அதன் தத்துவங்களில் பூரண அறிவுடையோராய் இருப்பார்களாயின் இந் நாட்டில் ஒழுக்க நிலை சீரடையும்" (Shafie Marikar S.L.M., The Crescent, Nov. - Dec. 1979 : 3)

என்ற கருத்துடையவர் ஷாபிமரிக்கார்.

14.5 பெற்றோர் பொறுப்பு

பிள்ளைகளின் முதல் ஆசிரியர்களும் வழிகாட்டிகளும் பெற்றோர்களே. பிள்ளைகள் மீது அன்பு செலுத்துதல், பொருளாதார வசதியளித்தல், கல்வியூட்டல், பாதுகாப்பளித்தல் அவர்கள் எதிர்நோக்கும் பண்பாட்டு முரண்பாடுகளைத் தீர்த்து வைத்தல், அவர்களின் நடத்தைக் கோலத்தைக் கண்காணித்து நல்வழிப்படுத்தல், அவர்களின் உடல்,உள நலன் பேணல், அவர்களின் எதிர்கால அடைகை பற்றி அவர்களுடன் சேர்ந்து தீர்மானம் எடுத்தல் என்பனவெல்லாம் பெற்றோர் செய்யவேண்டியன. பிள்ளைகளின் கற்றற் செயற்பாட்டிற்கு பெற்றோர் உறுதுணையாக இருத்தல் அவசியம். வீட்டில் கற்பதற்கு வசதி செய்து கொடுத்தல், பாடசாலை ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பிள்ளைகளின் நிலைபரம் பற்றிக் கலந்து பேசிச் செயற்படல் என்பனவெல்லாம் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள். இவ்வுளவியல் அம்சங்களை பெற்றோர்களின் கவனத்திற்கு ஷாபிமரிக்கார் எத்திவைத்தார்.

"பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் காட்டும் அக்கறையிலும் வீடுகளில் அவர்கள் இருக்கையில் அவர்களது நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதிலுமே பிள்ளைகளது வெற்றி பெருமளவு தங்கியுள்ளது. இவ்வகையில் சம்பந்தப்பட்ட பிள்ளையின் வகுப்பாசிரியருடன் பெற்றார் தொடர்புகொண்டு

செயற்படுவது நல்லது. பிள்ளைகளது கல்வி வளர்ச்சிக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டியது பெற்றோர் கடமை" (Shafie Marikar S.L.M., The Crescent, Sept. 1978: 8)

என்று பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் காட்டவேண்டிய கவனத்தை ஷாபிமரிக்கார் சுட்டிக்காட்டினார்.

"பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய கல்வி சம்பந்தமான குறைகள் ஏதும் ஏற்படுமிடத்து மனவெறுப்போ, மனத்தளர்ச்சியோ ஏற்படாவண்ணம் புத்தூக்கமும் புத்துணர்ச்சியும் மனதில் வேரூன்றச் செய்தல் வேண்டும். சித்தியேற்பட்டவிடத்து திடமான முன்னேற்றம் தொடர்ந்து வரும் என்ற நம்பிக்கையை உண்டாக்கவேண்டும்.

தம்முடைய பிள்ளைகளின் கல்வி நிலையை மேற்பார்வை செய்வதும் அவர்கள் ஒழுங்காக பாடசாலைக்குச் சமுகமளிக்கிறார்களா என்பதைக் கவனிப்பதும் பெற்றோருடைய முக்கிய கடமை. பிள்ளைகள் தம்முடைய முழுக்கவனத்தையும் ஊக்கத்தையும் படிப்பில் செலுத்தும் பொருட்டு அவசியம் தேவையானவற்றை வழங்குவதும் தேவையான வசதிகள் யாவற்றையும் செய்து கொடுப்பதும் பெற்றோருடைய முக்கிய கடமை. அத்தோடு பெற்றோர் பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தம்முடைய பிள்ளைகளுடைய கல்வி முன்னேற்றம் பற்றி அடிக்கடி விசாரித்தறிவது மிக முக்கியம். குறை பாடுகள் காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான தக்க நடவடிக்கைகள் உரிய தருணத்தில் எடுக்கப்படல் வேண்டும். எந்தெந்தப் பாடங்களில் தம்முடைய பிள்ளைகளின் கவனம் கூடுதலாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

பேச்சுவன்மையையும் பாஷைத் திறமையையும் உரிய தரத்திற்குக் கொண்டு வரும் நடவடிக்கைகளில் பிள்ளைகள் பங்குபற்றுவதற்கான சகலவிதமான ஊக்கங்களையும் உண்டாக்கி இயன்ற உதவிகளைப் புரிவதும் பெற்றோரின் கடமை. சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் உயர்கல்வி பயில்வதற்கும் தொழிற்றுறைப் போட்டிகளில் முன்னணியில் நிற்பதற்கும் அவசியமாதலின் ஆங்கில அறிவைப் பெறச்செய்வது மிகமிகமுக்கியம்.

எல்லாத் துறைகளிலும் பிள்ளைகள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பது எங்களுடைய நோக்கம். கல்வித் தேர்ச்சியிலும் விளையாட்டுத்துறையிலும் மிளிர்ந்து விளங்குவதோடு குணநலன்களிலும் நன்னடத்தைகளிலும் மிளிர்ந்து விளங்குபவன் போற்றத்தக்க சிறந்த மாணவன். இந்த இலட்சியங்களை அடைவது எல்லாப் பெற்றோர்களினதும் இலட்சியமாதல் வேண்டும்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., த கிறசன்ட்- நவம்./டிசம். 1979: 3,6)

என்று பெற்றோர்களுக்கு ஷாபிமரிக்கார் உபதேசித்தார். ஷாபிமரிக்காரின் கல்வி உளவியல் சார் அறிவுரைகள் இவை.

"மாணவர்களின் மனப்போக்கினை நல்வழிப்படுத்துவதில் சமயம் முக்கியமாகக் கருதப்படுவதால் பெற்றோர் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கப்படும் சமய வழக்கங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். அதனால், பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சமயப் பயிற்சியானது தொடர்ந்து வீட்டிலும் கடைப்பிடிப்பதாக அமையும் சமய வழக்கங்களையும் நடைமுறைகளையும் மாணவர்கள் பின்பற்றுவதால் மாணவர்களிடம் நன்னடத்தையினையும் நல்ல பழக்கவழக்கங்களையும் உருவாக்க உதவுவதோடு அவர்களது எதிர்கால வெற்றிக்கு அத்திவாரமிடுவதாக அமையும்.

பெற்றோர் கவனிக்கவேண்டிய இன்னொரு முக்கிய கடமை, பிள்ளைகள் சுத்தம் பேணச் செய்வதோடு விரும்பக்கூடிய உடல் நலத்தைப் பேணும் பழக்கங்களையும் இளவயதிலேயே உறுதியாகக் கைக்கொள்ளச் செய்வதாகும்.

பாடசாலைக்கல்வி முக்கியமாக அமைந்தாலும் விளையாட்டுத்துறை, வெளிக்களச் செயன்முறைகள் என்பனவற்றில் பங்கு கொள்வதால் கிடைக்கும் நன்மைகளையும் இழக்கக்கூடாது" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., த கிறசன்ட், ஜன-மார்ச் 1982:7.8)

என்று பிள்ளைகளின் சமயப் பழக்க வழக்கங்கள், சுத்தம், உடல் நலம் போன்றவற்றிலும் விளையாட்டுத்துறை, வெளிக்கள வேலைகளிலும் பெற்றோர் ஊக்கம் காட்டவேண்டுமென்று ஷாபிமரிக்கார் அறிவுரை கூறினார். பிள்ளைகள் மொழி, சமயம், பழக்கவழக்கங்கள், உளப்பாங்குகள், சில திறன்களை வீட்டில் பெற்றோரிடமும் மூத்தோரிடமும் பெற்று பக்குவப்பட்ட நிலையில் பாடசாலைக்கு வரும் போது ஆசிரியர்களின் கற்பித்தற் பணி இலகுவாகிறது; மாணவரின் வினைத்திறன் அதிகரிக்கிறது என்ற உண்மையையும் ஷாபிமரிக்கார் பெற்றோருக்கு எடுத்துச் சொன்னார்.

கல்வி பற்றிய ஷாபிமரிக்காரின் சிந்தனை மிகத் தெளிவானது. உளவியலுக்கும் இஸ்லாத்துக்கும் ஏற்புடையது. ஆன்மீக மேம்பாட்டுக்கும் சுபீட்சமான மனித வாழ்வுக்கும் கல்வி உதவ வேண்டுமென்பதில் அவர் தெளிவான சிந்தனையுடையவராக விருந்தார். கல்வி முழு வாழ்க்கையுடனும் தொடர்புடையது என்பது அவரின் நிலைப்பாடு. சிறந்த பண்பாட்டுடன் கூடிய பரிபூரண மனித ஆளுமையின் வளர்ச்சிக்கு கல்வி உதவ வேண்டுமென்ற வகையில் தனது கல்விச் செயற்பாடுகளை அவர் வகுத்திருந்தார். கல்வியும் அதன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் பரிபூரண சுதந்திரமுடையதாக இருக்க வேண்டுமென்பதிலும் கல்வி அளிக்கப்படுவதில் சமத்துவம், சம சந்தர்ப்பம் பேணப்பட வேண்டுமென்பதிலும் அவர் திடமான கொள்கையுடையவராக விருந்தார். குர்ஆனும் நபிகளாரின் வாழ்வும் அங்கீகரிக்கும் பரந்துபட்ட கல்வியும், இஸ்லாம் பரிபூரண வாழ்க்கைமுறை என்ற தத்துவமும் ஷாபிமரிக்காரின் கல்விச் சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் இழையோடின.

15

தொழிற்கல்வி

இலங்கைப் பாடசாலைகளில், 1972ஆம் ஆண்டைய கல்விச் சீர்திருத்தத்தில் தொழில் முன்னிலைக் கல்வியும், 1977இல் தொழில் நுட்பக் கல்வியும், 1981இன் கல்வி வெள்ளையறிக்கையில் வாழ்க்கைத் திறன் கல்வியும் அறிமுகம் செய்யப்பட்டதாயினும் அவை எதிர்பார்த்த பயனைத் தரவில்லை. பெற்றோரும் அதில் அக்கறை காட்டவில்லை. அதனால் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறும் தகுதியைப் பெறவில்லை. சுய தொழில்களை மேற்கொள்ளத் தேவையான திறன்களும் அனுபவங்களும் 13வருட பாடசாலைக் காலத்திலும் 3வருட பல்கலைக்கழகக் காலத்திலும் வழங்கப்படாமையால் தாம் கற்ற கல்வியைக் கொண்டு தொழில் வாய்ப்புகளைப் பெற முடியாத நிலையை மாணவர் எதிர்நோக்க நேரிட்டது. அதன் பாரதூரத்தன்மை நாட்டையும் சமூகத்தையும் பாதித்து விடாதிருக்க தன்னாலானவற்றையெல்லாம் ஷாபிமரிக்கார் செய்தார். தொழிற் கல்வியின் அவசியம் பற்றி கூடிய அக்கறை காட்டினார். பிள்ளைகள் தொழிற் கல்வியைப் பயில்வதுடன் அதுசம்பந்தமான நேரடிச் செயற்பாட்டு அனுபவத்தையும் பெறும் வகையில் தனது தொழிற்கல்வித் திட்டத்தை அமைத்துச் செயற்படுத்தினார்.

> "ஒருவரைத் தொழிலுக்காகத் தயார் செய்தலும் கல்வியின் குறிக்கோள்களுள் ஒன்றே... கடந்த காலத்தில் ஓரளவு கவனிக்கப்படாது காணப்பட்ட இக்குறிக் கோள், இலங்கையில் இன்று நிலவும் சூழ்நிலையில் அதன் மேல் விசேட கவனத்தைச் செலுத்தத் தூண்டுகிறது." (Shafie Marikar S.L.M., The Crescent, Sept. 1978 :7)

என்று தொழிற்கல்வி பற்றி ஷாபிமரிக்கார் கருத்துரைத்தார். காந்தியின் 'உணவுக்காக உழைத்தல்' (Bread Labour), 'ஆதாரக் கல்வித்திட்டம்' என்பனவற்றுடன் இணைத்துப் பார்க்கும்போது ஷாபியின் மேற்கருத்து கூடிய தெளிவும் முக்கியத்துவமும் பெறும். வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமல்ல தொழிற் பயிற்சியும் கல்வியின் பாற்படும் என்று கொண்டவர்

காந்தி. வேலை வாயிலாகக் கல்வி, சுயதேவையைப் பூர்த்திக்கும் முறையில் கல்வி என்ற இரு அம்சங்கள் காந்தியின் ஆதாரக் கல்விக் கொள்கையில் உள்ளடங்கியிருந்தன. டால்ஸ்டாய், ஜோன் றஸ்கின் முதலானோரின் சிந்தனைகள், காந்தியின் ஆதாரக் கல்விக் கொள்கை, சர்வோதய இயக்கம் என்பனவற்றில் ஷாபியின் தொழிற் கல்விச் சிந்தனை தொடக்கத்தைப் பெறுகின்றது.

கல்வியானது தொழில் நோக்கம் ஒன்றையே அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்பதை ஏற்கமுடியாது. ஆயினும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு கல்வி திட்டமிடப்படும்போது தொழில் நுட்பக் கல்வியும் தொழிற் கல்வியும் (Technical and Vocational Education) முக்கியம் பெற வேண்டும் என்பதை ஏற்கவேண்டும். கற்ற தொழிற் பயிற்சியை மேற்கொண்டு நடத்தத் தேவையான தரத்தை மாணவர் எய்த வேண்டும். அந்த வகையில்,"ஒருவரைத் தொழிலுக்காகத் தயார் செய்தலும் கல்வியின் குறிக்கோள்களுள் ஒன்று" என்ற ஷாபிமரிக்காரின் கூற்று ஏற்கத்தக்கது.

> "வேலையின்மை ஓர் உலகளாவிய பிரச்சினையே. சிற்சில நாடுகளில் இதன் பாதிப்பு அதிகமாகக் காணப்படலாம். எமது நாட்டைப் பொறுத்தவரையில் எமது கல்வித் திட்டத்திற் காணப்பட்ட சில குறைபாடுகளே இதற்குக் காரணம் எனக் கூற வேண்டியுள்ளது. நாட்டின் தேவைக்குப் பொருத்தமற்றவை எனக் கூறக் கூடியனவும், வெறுமனே புத்தகம் சார்ந்ததுமான கல்வி முறையே இங்கு நிலவி வந்தது. நாட்டின் பொருளாதார விருத்திக்கேற்பவும் தொழில் வாய்ப்பு நிலைமைகளை ஈடுசெய்யக்கூடிய வகையிலும் நாட்டின் கல்வி முறை திட்டமிடப்பட வேண்டும். கல்வி முறையானது நாட்டின் தேவைகளுக்கும், அபிலாசைகளுக்கும் பொருந்தக் கூடிய வகையில் செயல்முறை சார்ந்ததாக இருத்தல் வேண்டும்." (Shafie Marikar S.L.M., The Crescent, Sept. 1978 : 7)

என்று நாட்டுக்கேற்ற கல்வி முறைபற்றி ஷாபிமரிக்கார் விளக்கம் தந்தார்.

> "தற்போது நாட்டை எதிர்நோக்கும் நிலைமைகள் எமது பாடசாலைகளுக்கும் ஒரு சவாலாக விளங்குகின்றன. நாட்டின் பொருளாதாரத் தேவைகளை அனுசரித்து கல்வி நெறிகளை வழங்க வேண்டியுள்ளமையே அதுவாகும். அதிஷ்டவசமாக தொழில் முன்னிலைக் கல்வி நெறியின் தேவையை உணர்ந்து பல்வேறு தொழில் நுட்பப் பாடங்களை ஸாஹிறா ஏற்கனவே போதிக்கத் தொடங்கி விட்டது. இத்தகைய பாடங்கள் 1972இன் கல்வித் திட்டத்தின் பிரகாரம் பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட முன்னரே ஸாஹிறாக் கல்லூரியில் போதிக்கப்படத் தொடங்கிவிட்டமை குறிப்பிடத் தக்கது. இன்று இத்தகைய பல பாடங்கள் ஸாஹிறாவில் போதிக்கப்படுகின்றன. தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தரக்கூடிய வர்த்தகப் பாடத்தை ஜீ.ஸீ.ஈ.

(உயர்தர) வகுப்புகளில் மாணவர்கள் பலர் பயின்று வருகின்றனர். 'வெண் சட்டை'த் தொழில்களுக்கான எமது விருப்பத்திலும் ஆசையிலும் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதே இன்றைய எமது தேவையாகும். இதே போன்று எமது பாரம்பரியத் தொழில் துறைகளுக்கு நாம் ஆசைப்படுவதையும் கைவிட்டு எமது மனோபாவத்தை நாம் மாற்றியமைக்க வேண்டும்." (Shafie Marikar S.L.M., Sept. 1978)

என்று ஷாபிமரிக்கார் உபதேசித்தார். 1972இல் தொழில் முன்னிலைக் கல்வி பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்படுமுன்பே ஸாஹிறாக் கல்லூரியில் 'தொழிற் பயிற்சி நிலையம்' அமைத்து தொழிற்கல்வியில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டவர் அவர். 'த கிறசன்ட்' - ஜூலை - 1978 இதழில் 'Technical Education at Zahira College' என்ற கட்டுரையில் அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

> "It is our sad experience and common knowledge that the sweeping educational changes introduced in 1972 from grade 6 to the N.C.G.E. and to the H.N.C.E. were unnecessarily rushed and ill planned. Particularly in the field of pre-vocational studies it took some years for schools to settle down to syllabuses of work and more time to reach any satisfactory standards of attainment. However, Zahira College was not caught unprepared" (Shafie Marikar S.L.M., The Crescent - July 1978:4)

என்று அதுபற்றி ஷாபிமரிக்கார் குறிப்பிட்டிருக்கிறார். ஷாபியின் கல்வித் திட்டமிடுகையின் தூரநோக்கு அவரின் இக்கூற்றில் தெரிகிறது. தேவையற்ற அவசரத்திலும் மோசமான திட்டமிடுகையிலும் ஏற்பட்ட 1972இன் கல்விமாற்றங்களுக்கு, குறிப்பாக, தொழில் முன்னிலைக் கல்விப் போதனைக்கு பாடசாலைகள் திடீரெனத் தயாராக முடியவில்லை. ஆயினும், ஸாஹிறாக் கல்லூரி அந்தத் தயாரற்ற நிலைக்கு அகப்படாமல் ஷாபியின் தூரநோக்கு தவிர்த்திருப்பதை அவரின் மேற்கூற்றுக் காட்டுகிறது. அதுமட்டுமல்ல, தொழில் முன்னிலைப் பாடங்களாகக் குறிப்பிடப்பட்டவை நகரப் புறப் பாடசாலைகளைவிட கிராமப்புறப் பாடசாலைகளுக்கே கூடிய பொருத்த முடையனவாகக் காணப்பட்டதையும் ஷாபிமரிக்கார் சுட்டிக் காட்டினார்.

> "It was seen that the area basis in which pre – vocational studies were selected were more suited to rural areas than urban areas. It was up to us to see that semi – technical studies would be the most suited to Zahira College in the field of vocational studies. Hence, Motor Mechanism, Radio Mechanism, Radio Electronics, Printing, Weaving, Gemmology, Commerce and Batik printing were made available as fields of pre -vocational studies from grade 6 to N.C.G.E." (Shafie Marikar S.L.M., The Crescent - July 1978:4)

என்று அவர் குறிப்பிட்டுச் சொன்னார். இவ்விடயமாக ஷாபிமரிக்கார் இன்னுமொரு விடயத்தையும் முக்கியப்படுத்திச் சிந்தித்தார்.

> "We were conscious of the increasing number of drop – outs when final selections were made for higher education. How far was the community prepared to carry the burden of drop – outs?" (Shafie Marikar S.L.M., The Crescent - July 1978 : 4)

என்பது ஷாபிமரிக்காரின் கவலையாகவிருந்தது. உயர் கல்விக்குத் தேர்வு பெறாத மாணவர்களின் எதிர்காலத்துக்கு இத்தொழில் முன்னிலைப் பாடங்கள் எம்மட்டு உதவுமென்பது அவரின் கரிசனையாகவிருந்தது. ஷாபியின் ஸாஹிறாக் கல்லூரியில் 08.01.1976இலிருந்து மோட்டார் தொழில்நுட்பம் (Motor Mechanism), றேடியோ இலத்திரனியல் (Radio Electronics), மாணிக்கவியல் (Gemology) பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1973 ஜனவரியிலிருந்து அச்சுத் தொழிற் பயிற்சியும், புடைவை நெசவும், 1975இலிருந்து பற்றிக் பிறிண்டிங்கும் (Batik Printing) கற்பிக்கப்பட்டன. சுருக்கெழுத்தாளர், புக்கீப்பர், செயலாளர்களுக்கான கற்கை நெறிகளையும் ஆரம்பிக்க ஷாபிமரிக்கார் திட்டமிட்டிருந்தார்.

> "We are now planning to start commercial courses such as Stenographers. Book – Keepers and Secretaries" (Shafie Marikar S.L.M., The Crescent - July 1978 : 4)

என்றும் அதே 'Technical Education at Zahira College' என்ற கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருப்பது அவரின் அத்திட்டத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

> "Mr. N.D.H. Abdul Gaffoor, has gifted a block of land eighteen acres in extent at Maharagama seven miles away from the city and has also generously undertaken to put up the necessary buildings to complete the rural and industrial education scheme that I have in mind" (Jaya T.B., Prize giving - 24.09.1936)

என்று, 24.09.1936இல் ரி.பி. ஜாயா ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் குறிப்பிட்டுச் சொன்ன, கிராமிய, கைத்தொழிற் கல்வி முன்னெடுப்புகளைச் செய்யும் எண்ணமும் ஷாபிமரைக்காருக்கிருந்தது. ஷாபிமரிக்கார் 08.08.1969இல் நிகழ்த்திய பரிசளிப்பு விழா உரையில் அது தெளிவாகத் தெரிந்தது. அந்நோக்கில்தான் விவசாயத்தை ஒரு பாடமாகக் கற்பிக்க ஷாபி ஏற்பாடுகளைச் செய்து அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் விவசாயப் போதனாசிரியர் ஏ.கே. காரியப்பரையும் அதற்காக நியமித்தார். போதிய நிதி வசதியிருந்திருப்பின் ஜாயாவின் இக் கனவையும் ஷாபி மரிக்கார் பூரணமாக நிறைவேற்றியிருப்பார். ஸாஹிறாவுக்கு என்.டி.எச். அப்துல் கபூர் அன்பளிப்புச் செய்த 18 ஏக்கர் காணியைக்

கல்லூரியின் ஆளுநர் சபை எதற்குப் பயன்படுத்தப்போகிறது என்று இன்று பலரும் வினவுகின்றனர்.

> "Sammanthurai Technical College is situated in the heart of Ampara District – one of the best rice – producing districts in the country. It is therefore, surprising that there are no courses in Agriculture or Agro – based Technical courses at Sammanthurai Technical College. We urge that immediate steps be taken to introduce Agriculture/ Agro - based technical courses into the curriculum of Sammanthurai Technical College. This would lead to the improvement of Agricultural studies in Ampara District as well."

என்று விவசாயப் பிரதேசத்தில் அமைந்துள்ள சம்மாந்துறைத் தொழில் நுட்பக் கல்லூரியில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்பக் கற்கை நெறிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று ஷாபிமரிக்கார் அபிப்பிராயம் தெரிவித்தார். 25.04.1974இல் ஆரம்பிக்கப்பட்ட இத் தொழில் நுட்பக் கல்லூரி 01.01.1991இல் தரமுயர்த்தப்பட்டு முதலாந் தர தொழில் நுட்பக் கல்லூரியானபோது ஷாபிமரிக்கார் மிக்க மகிழ்ச்சியடைந்தார். அதன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கற்கை நெறிகள், விரிவுரையாளர்களின் தொகையில் ஏற்பட வேண்டிய அதிகரிப்புப் பற்றியெல்லாம் அவர் கோரிக்கைகள் விடுத்தார். கொழும்பு, கண்டி, குருநாகலை, காலி, இரத்தினபுரி ஆகிய இடங்களிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் தமிழ்மொழிமூல கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் ஷாபியின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு முன்வைத்தது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பப் பீடமொன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டு முதல் தொகுதி மாணவர்கள் 2016/17ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவானமை அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். விவசாயக் கற்கைநெறிக்கு 85 பேரும் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிக்கு 75 பேரும், மொத்தம் 160 பேர் இப்பீடத்திற்குத் தெரிவாகினர். கைத்தொழில் நிறுவனங்களில் இம்மாணவர்களுக்கு: செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்படுமென்றும் இங்கு கல்வி கற்று வெளியேறும் பட்டதாரிகள் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப் பட்டுள்ளன வென்றும் அப்பல்கலைக்கழக உபவேந்தர் அறிவித்திருந்தார். ஷாபிமரிக்கார் இன்று உயிர் வாழ்ந்திருப்பின் உபவேந்தரின் இவ்வறிவிப்பு அவரை மகிழ்வித்திருக்கும்.

16

எல்லோருக்கும் கல்வி

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர்களாகவிருந்த ரி.பி. ஜாயா, எ.எம்.எ. அஸீஸ் ஆகியோர் வழிநின்று முஸ்லிம் சமூகத்தில் சகலருக்கும் கல்வியில் சமவாய்ப்புத் திட்டத்தை ஷாபிமரிக்காரும் முன்னெடுத்தார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிச் சகாயநிதி, ஸாஹிறாக் கல்லூரிச் சமூகசேவை நிதியம், அநாதை மாணவர்களுக்கு ஸாஹிறாவில் இலவச அனுமதி, பாடசாலைக் கல்வியைத் தவறவிட்டவர்களுக்கு மாலைநேர வகுப்புகள் என்றெல்லாம் ஏற்பாடுகளைச் செய்து கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் கற்கும் வாய்ப்பை ஏழை மாணவர்களுக்கும், உயர் கல்வி வாய்ப்புக்களைப் பெறச் சந்தர்ப்பமற்ற பிரதேச மாணவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தவர் ஷாபிமரிக்கார். அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்ட பலர் இன்று சமூகத்தில் மிக உயர்ந்த நிலையிலிருக்கின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி, சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கல்வி, முஸ்லிம் பெண் கல்வி பற்றியெல்லாம் ஷாபிமரிக்கார் கூடிய கரிசனை காட்டினார். அவரின் தலைமையிலியங்கிய அ.இ.மு.க. மாநாடு இதற்குத் துணை நின்றது.

16.1 ஏழை மாணவரின் கல்வி

16.1.1 ஸாஹிறாக் கல்லூரிக் கல்விச்சகாய நிதி (Zahira College Scholarship Fund)

வசதிகுறைந்த, திறமையுள்ள க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் 'ஸாஹிறாக் கல்லூரிக் கல்விச் சகாயநிதி' என்ற பெயரில் ஒரு திட்டத்தை 03.05.1972இல் ஷாபிமரிக்கார் ஆரம்பித்தார். அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் போட்டிப் பரீட்சையில் தகுதி பெறும் 15-20 மாணவர்கள் வருடம்தோறும் தெரிவு செய்யப்பட்டு சகாயம் செய்யப்பட்டனர். விடுதி வசதி, பாடசாலைக் கட்டணம், பாடநூல்கள்,

அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், சீருடைகள் என்பன இத்திட்டத்தின் கீழ் அவர்களுக்கு இரு வருடங்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டன. ஜீ.ஸீ.ஈ. (உயர்தர) படிப்பை தம் பிரதேசங்களில் மேற்கொள்ள முடியாத, பின்தங்கிய கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்கள் தலைநகரின் முஸ்லிம் தலைக்கல்லூரியான கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் சேர்ந்து படித்து உயர்கல்வி நிலையங்களுக்குத் தெரிவாகும் சந்தர்ப்பத்தை இத் திட்டத்தின் மூலம் பெற்றனர். பேருவலைத் தனவந்தர் அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் இத்திட்டத்திற்குச் செய்த உதவிகள் குறித்துச் சொல்லப்பட வேண்டியன. இத்திட்டத்தினால் பயன்பெற்ற பலர் சமூகத்தில் உயர்நிலை அடைந்துள்ளனர்.

> "This scheme takes care of poor pupils who would other wise be denied the opportunity of developing to the full the talent they possess for the service of the country to which they are proud to belong" (Principal's Prize Day Report 11.10.1977)

என்று பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட 1977ஆம் வருட ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவின் அதிபரின் அறிக்கையில் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டுச் சொன்னார். இந்தியத்தினூடு அவர் சாதிக்க விழைந்ததை இக்கூற்று உணர்த்துகிறது.

16.1.2 ஸாஹிறாக் கல்லூரி சமூகசேவை நிதியம் (Zahira College Social Service Fund)

உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உதவி வழங்குவதற்கென 'ஸாஹிறாக் கல்லூரிச் சமூகசேவை நிதியம்' என்ற பெயரில் ஒரு நிதியத்தை ஷாபிமரிக்கார் 10.12.1975இல் ஆரம்பித்துவைத்தார். அவரின் தலைமையில் நிகழ்ந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அந் நிதியத்திற்கான யாப்பு ஏற்கப்பட்டு உத்தியோகத்தர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

> "It shall be the aim of this fund to remove any disparities that may exist in the school community through unfortunate circumstances and relieve any distress brought to the notice of the fund"

என்பது இச் சமூகசேவை நிதியத்தின் நோக்கமாக அதன் யாப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியர் சங்கத்தினால் இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. அதை நிருவகிக்கும் செயற்குழுவின் பதவி வழித் தலைவராக அதிபரும், உபதலைவராக உதவி அதிபரும் விளங்கினர். ஸாஹிறாக் கல்லூரியில் கற்கும் வறிய மாணவர்களின் புத்தகம், கற்றல் உபகரணங்கள், சீருடை, பரீட்சைக் கட்டணம், பயணச் சீட்டு, வாசித்தற்

கண்ணாடி போன்றனவெல்லாம் இந்த நிதியத்தினால் வழங்கப்பட்டன. வகுப்பாசிரியர்களின் சிபாரிசின்பேரில் பொருத்தமான மாணவர்களுக்கு இவ்வசதிகள் வழங்கப்பட்டன.

> "The social service fund which has already completed two years of existence, continues to perform a useful function in affording relief to needy and deserving students. This is in pursuance of its aim to help the less privileged members of the student community and remove any inequalities that may exist among them"

என்று சமூகசேவை நிதியம் பற்றி, அதன் நோக்கம் பற்றி, 'த கிறசன்ட்' (ஆகஸ்ட் 1978) பதிவு செய்திருக்கிறது. வறிய மாணவர்களை கல்வியில் கைதூக்கிவிடும் ஷாபிமரிக்காரின் நல்லதொரு திட்டமிது.

இந்நாட்டின் கல்வி வரலாற்றில் ஷாபிமரிக்காரின் 'ஸாஹிறாக் கல்லூரிக் கல்விச் சகாய நிதி'த் திட்டத்தையும் 'ஸாஹிறாக்கல்லூரி சமூகசேவை நிதியத்தை'யும் ஒத்த பல நலன்தரு திட்டங்கள் நடைமுறையிலிருந்திருக்கின்றன. டொனமூர் காலப் பிற்பகுதியில் சுதேச மொழிப் பாடசாலைகளில் கற்ற திறமையுள்ள மாணவர்கள் ஆங்கில உயர் பாடசாலைகளில் கற்பதற்கு வசதியாக வழங்கப்பட்ட புலமைப்பரிசில் திட்டம், பாடசாலைக் கட்டணம் முதலான செலுத்துமதிகளிலிருந்து மாணவர்களுக்கு விலக்களிக்கும் வகையில் கல்வித் திணைக்களம் 1920இல் அறிமுகம் செய்த 'டென்ஹாம் புலமைப்பரிசில் திட்டம்', ஆங்கில உயர் பாடசாலைகளில் கற்பதற்கு வசதியளிக்கும் வகையில் கல்வித் திணைக்களம் 1939இல் அறிமுகம் செய்த புலமைப்பரிசில் திட்டம், விடுதி வசதியுடன் கூடிய மத்திய மகாவித்தியாலயங்களில் கற்பதற்கு உதவு முகமாக 1946இல் அறிமுகம் செய்யப்பட்ட புலமைப்பரிசில் திட்டம், விஞ்ஞான இடைநிலைக் கல்வியை மத்திய மகா வித்தியாலயங்களிலும், அதன் தொடர்ச்சியாக உயர் கல்வியைப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்வதற்கு 1958இல் ஏற்படுத்தப்பட்ட விஞ்ஞானப் புலமைப்பரிசில் திட்டம், விளையாட்டுத்துறையில் திறமையுள்ள மாணவர்களுக்கு மத்திய மகாவித்தியாலயங்களிலும், தொடர்ந்து பல்கலைக்கழகங்களிலும் கற்க வாய்ப்பளிக்கும் முகமாக 1958இல் ஏற்படுத்தப்பட்ட புலமைப் பரிசில் திட்டம் என்பனவெல்லாம் ஷாபியின் 'ஸாஹிறாக் கல்லூரிச் சகாய நிதித்திட்டம்' பற்றி நோக்குகையில் அறியப்பட வேண்டியன. எ.எம்.எ. அஸீஸ் 1945இல் வசதி குறைந்த திறமையான மாணவர்களின் கல்விக்கு உதவவென ஏற்படுத்திய 'இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி'யின் சாதனைகளும் ஷாபியின் கவனத்தை ஈர்த்திருந்தன. இவற்றைவிட, கட்டாயக்கல்வி, 1943இல் நியமிக்கப்பட்ட கல்வி விசேட குழுவின் சிபாரிசின்

பேரில் 1945இலிருந்து அமுல் செய்யப்பட்ட சுயமொழிக்கல்வியை உள்ளடக்கிய இலவசக் கல்வித்திட்டம், தனியார் பாடசாலைகள் 1961இல் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டமை என்பனவெல்லாம் ஷாபிமரிக்காரின் புலமைப்பரிசில் திட்டத்துடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியன. இப்பின்புலத்தில் நின்று பார்க்கும்போதுதான் ஸாஹிறாக் கல்லூரியில் ஷாபிமரிக்கார் செயற்படுத்திய, 'ஸாஹிறாக் கல்லூரிக் கல்விச் சகாயநிதித் திட்டம்', 'ஸாஹிறாக் கல்லூரி சமூக சேவை நிதியம்' என்பனவற்றின் முக்கியத்துவமும், ஷாபி இறுகப் பற்றி நின்ற 'கல்வியில் சமசந்தர்ப்பம்' என்ற எண்ணக்கருவின் அர்த்தமும் புரியும்.

16.1.3 அநாதை மாணவரின் கல்வி

ஷாபிமரிக்கார் தான் அதிபராகவிருந்த காலம் முழுவதும் 'மாகொல' அநாதைகள் இல்ல மாணவர்களை ஸாஹிறாக் கல்லூரியில் இலவசமாக அனுமதித்து கல்வி வழங்கிய புண்ணியவான். ஸாஹிறாக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது நன்கொடையை அவர் வலியுறுத்தியது கிடையாது. ஸாஹிறாவை அண்டிவாழும் மருதானைப் பிரதேசப் பிள்ளை களுக்கு அவர்களின் பொருளாதாரம், சமூக அந்தஸ்த்து பெற்றோரின் தொழில் போன்றனவற்றைக் கவனத்திற்கொள்ளாது அனுமதியில் முன்னுரிமை கொடுத்தவர் அவர்.

16.1.4 மாலைநேரப் பாடசாலை

ரி.பி. ஜாயா ஸாஹிறாக் கல்லூரியின் அதிபரானதும் 10.11.1921இல் இலவச இரவுப் பாடசாலையை அங்கு ஆரம்பித்து, பாடசாலைக் கல்வியைத் தவறவிட்டவர்கள், மூத்தவர்கள், வறியமாணவர்கள், தொழில்புரிவோர் கல்விபெறுவதற்கு வாய்ப்பளித்தார். மாலை நேரப் பாடசாலை ஒன்றும் ஜாயா கால ஸாஹிறாவில் இயங்கிக் கொண்டிருந்தது. ஷாபிமரிக்காரும் கொழும்பு ஸாஹிறாவின் அதிபரானதும் அவர் அதிபரான அவ்வருடமே(1967) மாலைநேரப் பாடசாலையை அங்கு ஆரம்பித்தார். ஸாஹிறாக் கல்லூரி யின் பழைய மாணவனும் அரச சேவையில் கல்விப் பணிப்பாளராகவிருந்த வருமான ஹத்தாத் தலமையில் இப் பாடசாலை இயங்கியது. ஜாயா ஆரம்பித்த அதே நோக்கில் ஷாபியின் இம் மாலைப் பாடசாலையும் செயற்பட்டது.

16.2 யுத்தத்தால் இடம் பெயர்ந்தோர் கல்வி

1983இல் தொடக்கம் பெற்ற ஆட்சிக்கெதிரான வன்முறைகள் பல்லாயிரக்கணக்கான வடக்கு கிழக்கு முஸ்லிம்களைத் தம் பாரம்பரியப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயரச் செய்திருந்தது. 1990 ஒக்டோபர் இறுதி வாரத்தில் நூற்றுக்கும் அதிகமான வடபுலக் கிராமங்களிலிருந்து 80,000க்கும் அதிகமான முஸ்லிம்கள் தம் வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட துயரமான சம்பவம் நிகழ்ந்தது. இதற்கு முன்பே சிங்கள மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ்ப்பிரதேசங்களிலிருந்து தென்பகுதிக்கு இடம் பெயர்ந்திருந்தனர். வடக்கு,கிழக்கு மாகாணங்களின் எல்லைப்புறக் கிராமங் களிலும் முஸ்லிம்கள் வாழ முடியாத நிலை காணப்பட்டது. பல நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டனர். புத்தளம் மாவட்டத்தில் 53,000 பேரும், அநுராதபுர மாவட்டத்தில் 14,000 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 5,000 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 8,000 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 6,000 பேரும் என்றவாறு வடபுல முஸ்லிம்கள் நாடெங்கும் சிதறிவாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. அசையும் அசையாச் சொத்துக்களையெல்லாம் அப்படியே விட்டு விட்டு இரவோடிரவாக வெளியேறிய அம் மக்கள் பிறமாவட்டங்களில் அகதி முகாம்களில் வாழவேண்டி ஏற்பட்டது. இடம் பெயர்வதற்குமுன் 50இற்கும் அதிகமான முஸ்லிம் பாடசாலைகளிலும் பிரபல தமிழ்ப் பாடசாலைகளிலும் கல்வி கற்றுக் கொண்டிருந்த அம்மாணவர்கள் புதிதாகப் புகலிடம் பெற்ற பிரதேசங்களில் கல்வி கற்கும் வாய்ப்பை முற்றாகவே இழந்திருந்தனர். அங்கு கட்டிடங்கள், கழிப்பிட வசதிகள், நீர், மின்சாரம், தளபாடம், ஆசிரியர் போன்ற வளங்கள் பற்றாக்குறையாகவிருந்தன. காலைநேரப் பாடசாலை பிரதேச மாணவர்களுக்கும் பின்னேரப் பாடசாலை (பி.ப. 2.00 - 5.30 வரை) இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும் நடத்தப்பட வேண்டியிருந்தது. ஏறக்குறைய 40%மான இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் அனுமதி கிடைக்கவில்லை. பல பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மாணவர்களே அதிக தொகையினராக விருந்தனர். ஆலங்குடா அ.மு. வித்தியாலயத்தில் 80.31%மானோரும், குறிஞ்சிப்பிட்டி அ.மு. வித்தியாலயத்தில் 78.34% மானோரும், கண்டக்குழி அ.மு. வித்தியாலயத்தில் 74.97%மானோரும், முதலைப்பாளி அ.மு. வித்தியாலயத்தில் 74.25%மானோரும் இடம்பெயர்ந்த மாணவர்களாகவிருந்தனர். வட்டக்கண்டல் அ.மு.வித்தியாலயம், மணல்தீவு றோ.க.த.வித்தியாலயம், தில்லையடி அ.மு.வித்தியாலயம் ஆகியவற்றிலும் இடம்பெயர்ந்த மாணவர்களே பெரும்பான்மையினராகக் கற்றனர். உள்ளூர் மாணவர்களுக்கும், இடம்பெயர்ந்த மாணவர்களுக்குமிடை மனக்கசப்பும்

குரோதமும் தலைகாட்டத் தொடங்கியது. அத்தகைய நிலை கல்பிட்டி அல்-அக்ஸா மத்திய கல்லூரியில் தெளிவாக வெளிப்பட்டுத் தெரிந்தது. உள்ளூர் மாணவர்களை விட (1450 பேர்) இடம்பெயர்ந்த மாணவர்களே அங்கும் அதிக தொகையினராகக் (1475 பேர்) கற்றுக் கொண்டிருந்தனர். அங்கு ஏற்பட்ட முரண்பாட்டைத்தீர்த்துவைக்கும் பொறுப்பு புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அஷ்ர்.்.பினால் புனர்வாழ்வுப் பணிப்பாளராகவிருந்த என்மீது சுமத்தப்பட்டது. அக்கல்லூரியில் 07.04.1995ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின் என்னால் கூட்டப்பட்ட சமாதான மாநாடொன்றில் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. கல்வி அதிகாரிகள், பிரதேசசபைத் தலைவர், கல்லூரியின் காலை மாலை நேரப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர், பிரதேச அரசியல் தலைவர்களை யெல்லாம் ஒன்றுகூட்டி இக் கைங்கரியத்தை நான் செய்ய வேண்டியிருந்தது. (தினகரன் வாரமஞ்சரி, 09.04.1995)

தூரமான இடங்களிலிருந்த முகாம்களிலிருந்து பிள்ளைகள் பாடசாலை களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. உடுத்த உடையுடன் வெறுங்கையோடு துரத்தப்பட்ட இவர்களின் பொருளாதார வசதி அடிமட்டத்திலிருந்ததால் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கு போக்குவரத்துக்குப் பணம் கொடுக்கும் நிலையில் பெற்றோர்கள் இருக்கவில்லை. படிப்பதற்கும் முகாம்களில் வசதிகளிருக்கவில்லை. அகதி மாணவரின் கல்வியில் கவனம் செலுத்தும் பொறுப்பு அன்றைய கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மீது சுமத்தப்பட்டிருந்தது. அவ்வமைச்சின் அமைச்சராக அஷ்ர்.்ப் அவர்களும், புனர்வாழ்வு, கல்வி மற்றும் சமூக நலனுக்குப் பொறுப்பான பணிப்பாளராக நானும் செயற்பட்ட காலம் அது.

அ.இ.மு.க. மாநாடு இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்விப் பிரச்சினைகளையிட்டு ஆராய்வதற்குக் கருத்தரங்கொன்றை 26.06.1993இல் ஏற்பாடு செய்து, தகவல்களைப் பெற்று, அவர்களின் கல்விப் பிரச்சினைகளை முஸ்லிம் சமூகத்துக்கும் அரசாங்கத்துக்கும் எத்தி வைத்தது. அகதி மாணவர்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் முஸ்லிம் கல்விமாநாடு பல முயற்சிகளைச் செய்தது.

> "அ.இ.மு.க. மாநாடு முஸ்லிம் அகதி மாணவர்களின் கல்வியிலும் அம் மாணவர்கள் தொடர்ந்து எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் ஏற்படுத்தக் கூடிய தாக்கத்திலும் ஆழ்ந்த காத்திரம் கொண்டுள்ளது.

5ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா.த.), க.பொ.த. (உ.த.) ஆகிய பரீட்சை வகுப்புகளில் ஆசிரியர் பற்றாக்குறை, இட நெருக்கடியான வகுப்புகள், குறைந்த நேரப் படிப்பித்தல், அகதி முகாம்களில் படிப்பதற்கு வசதியின்மை ஆகியனவற்றால் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். பொருளாதாரப் பிரச்சினை காரணமாக பல பெற்றோர்கள் ஜீவன உபாயமின்றிக் கஷ்டப்படுவதால் அவர்களின் பிள்ளைகளின் படிப்பு பாரதூரமான முறையில் பின்னடைந்துள்ளது. அப்பிள்ளைகளிடம் பாட சாலைக்குப் போகத் தேவையான உடைகளோ உபகரணங்களோ இல்லை.

அதிமுக்கியமாகக் கருதப்படும் அப்பியாசக் கொப்பிகள், கலர் பெட்டிகள், கணித உபகரணப் பெட்டிகள், வரைதல் கொப்பிகள் ஆகியவற்றை 15,000 அகதி மாணவர்களுக்குக் கொடுக்கும் திட்டமொன்றை அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு ஆரம்பித்துள்ளது. அவற்றைக் கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் பெற்றோர்களிடமிருந்தும் ஏனைய பாடசாலை களிலுள்ள முஸ்லிம் சங்கங்களிடமிருந்தும் முஸ்லிம் வியாபாரிகள், கல்வி உபகரண உற்பத்தியாளர்களிடமிருந்தும் சேர்க்கும் ஓர் இயக்கத்தைத் தொடங்கி இப்பொருள்களைச் சேகரிக்கும் நிலையமொன்றையும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நிறுவியது. இம்முயற்சிக்குக் கிடைத்த ஆதரவு திருப்தியானதாயிருக்கிறது. கல்பிட்டி அல்-அக்ஸா ம.வி. (1366 முஸ்லிம் அகதிமாணவர்), அநுராதபுர இக்கிரிகொல்லாவ முஸ்லிம் ம.வி. (534 முஸ்லிம் அகதி மாணவர்கள்) ஆகிய வித்தியாலயங்களின் அதிபர்களுக்கு பொதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

92 பாடசாலைகளுக்கு விநியோகிக்கச் சேர்க்கப்பட்ட பொருள்கள் போதாது. ஆகையால், பொருள்களை ஸாஹிறாக் கல்லூரி உப அதிபர் மேற்பார்த்து, தபால் பெட்டி 861, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைப் பெற்றோர்களையும், கொழும்பிலுள்ள முஸ்லிம் எழுத்து உபகரண விற்பனையாளர்களையும், கல்வி மாநாடு கேட்டுக் கொள்கிறது.

இக்கதியற்ற மாணவர்களுக்கு உங்கள் தாராள உதவி அவசரமாகத் தேவைப் படுகிறது. தயவு செய்து கைகொடுத்து உதவுங்கள்."

என்று அ.இ.மு.க. மாநாடு 1993 ஒக்டோபரில் வெளியிட்ட 'ACMC Journal'இல் 'வடக்கிலிருந்து புலம் பெயர்ந்துவந்த முஸ்லிம் அகதி மாணவர்களின் பிரச்சினை' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில், இடம் பெயர்ந்த அகதி மாணவர்களின் கல்விப் பிரச்சினைகளை சமூகத்தின் கவனத்திற்குச் சமர்ப்பித்தது. இடம் பெயர்ந்து பிற மாவட்டங்களில் வாழும் 15,000 மாணவர்களுக்கு உதவும் இத்திட்டத்தை ஷாபிமரிக்காரின் வழிநடத்துகையில் அ.இ.மு.க. மாநாடு 01.08.1993இல் ஆரம்பித்தது.

கல்பிட்டி அல்-அக்ஸா மத்திய கல்லூரிக்கும், கல்/கண்டக்குழி முஸ்லிம் வித்தியாலயத்துக்கும் இரு வகுப்பறைக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்குமாறு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டு நிருவாக சபைத் தலைவர் ஷாபிமரிக்கார் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களுக்கு 27.03.1995இல் கடிதமொன்றை அனுப்பியிருந்தார். இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வியில் ஷாபிமரிக்கார் கொண்டிருந்த கரிசனையை இக்கடிதம் சுட்டுகிறது.

> "We have been very much concerned about the deterioration in the educational facilities available to Muslim displaced students presently attending schools in Kalpitiya Zonal Division. Although non-governmental organisations have provided a limited amount of facilities towards the educational development of the schools of this area yet the two leading schools in the area (Al-Aqsa C.C. & Kandalkuli M.V.) require urgently additional buildings to accommodate the displaced children and enable them to receive their education in a satisfactory manner…We are grieved to note that these schools are as double - schools the standard of education has deteriorated greatly. The Education Ministry has not been able to provide the additional buildings owing to lack of funds. Hence we appeal to you to provide the necessary funds to enable the construction of the necessary buildings so that the displaced Muslim students attending to these schools may be able to receive a better education"

என்று அமைச்சர் அஷ்ர.்.புக்கு எழுதிய கடிதத்தில் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டிருந்தார்.

இது சம்பந்தமாக ஏற்கனவே புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல் மாவட்டங்களுக்கெல்லாம் நானே நேரடியாகச் சென்று தகவல் களை திரட்டியிருந்தேன். புத்தளம் மாவட்டத்துக்கான திட்ட அறிக்கையை 26.04.1995 இல் அமைச்சருக்குச் சமர்ப்பித்து அவரின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டதால் ஷாபிமரிக்காரின் எண்ணத்தை நிறைவேற்றுவது எனக்கு முடியுமானதாயிற்று.

புத்தளம் மாவட்டத்தில் 35 பாடசாலைகள் ஐந்து மாதங்களுக்குள் நிர்மாணிக்கப்பட்டன. பூரணமாக்கப்பட்ட 29 பாடசாலைக் கட்டிடங்கள் ஒரே நாளில், 05.10.1996இல் அமைச்சர் அஷ்ர.்.பினால் திறந்து வைக்கப் பட்டன. ஷாபிமரிக்கார் கோரிய கல்பிட்டி அல்-அக்ஸாவுக்கு மாடிக்கட்டிடம் (110x25) ஒன்றும், மலக்கழிப்பிடம் ஒன்றும் சலக் கழிப்பிடம் ஒன்றும் வழங்கப்பட்டது. அவர் கோரிய கண்டல் குழி முஸ்லிம் வித்தியாலயத்திற்கும் வகுப்பறைக் கட்டிடமொன்றும் (100x20), சலக் கழிப்பிடம் ஒன்றும் வழங்கப்பட்டது. இதற்குப் பின்னர் அடுத்தவருடம் இன்னுமொரு 110x25

மாடிக்கட்டிடம் அல்-அக்ஸாவுக்கு வழங்கப்பட்டது. பொலன்னறுவை, அநுராதபுரம், குருநாகல் போன்ற மாவட்டங்களிலும் பல பாடசாலைக் கட்டிடங்கள் இடம் பெயர்ந்த மாணவர்களுக்காக நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டன.

தங்கள் அசையும், அசையாச் சொத்துக்களையெல்லாம் இழந்து இன்னொரு மாவட்டத்தில் நலன்புரி நிலயங்களிலே அல்லற் பட்டுக்கொண்டிருந்த வடபுல முஸ்லிம்மாணவர்கள் தங்கள் கல்வியையும் இழந்துவிடக் கூடாது என்பதில் அமைச்சர் அஷ்ர.ப் காட்டிய கரிசனை ஷாபிமரிக்காருக்குத் திருப்தி தந்தது.

> "The ACMEC expresses its gratitude and appreciation to the Hon.M.H.M.Ashraff, Minister, Ports, Shipping, Rehabilitation and Reconstrution for so expeditiously providing the necessary buildings to enable the displaced Muslim students from North presently in schools in Puttalam and Kalpitya areas to pursue their education during normal school hours…We are grateful to you for the prompt action taken on our memo dated March 27, 1995"

என்று அ.இ.மு.க. மாநாட்டினதும் தனதும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அமைச்சர் அஷ்ர.ப்புக்குத் தெரிவித்துக் கொண்டார் ஷாபிமரிக்கார். அன்றைய புனர்வாழ்வுப் பணிப்பாளருக்குப் (ஏ.எம்.நஹியா) பிரதியிட்டு 16.10.1996 இல் அனுப்பி வைத்த அக் கடிதத்தில் மேலும் இரு கோரிக்கைகளையும் ஷாபிமரிக்கார் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

1. நலன்புரி நிலையங்களை அண்டி இடம்பெயர்ந்த மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக படிப்பு மண்டபங்களை (Study Halls) அமைத்தல்.
2. இடம்பெயர்ந்தவர்கள் அதிகமாக வாழும் அநுராதபுர, குருநாகல் பிரதேசங்களிலும் இடம்பெயர்ந்த மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு மேலதிக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

என்பனவே அவை. அவற்றுள் 2ஆவது கோரிக்கையையும் அமைச்சு சிறப்பாக நிறைவேற்றியது. ஷாபிமரிக்கார் குறிப்பிட்ட அநுராதபுர, குருநாகலைப் பிரதேசங்களில் மட்டுமின்றி பொலநறுவைப் பிரதேசத்திலும் அனேக பாடசாலைகளை அமைச்சு நிர்மாணித்துக் கொடுத்தது.

இடம் பெயர்ந்த மாணவர்களுக்கென, 'கல்விச் சுபீட்ச சகாயநிதி'த் திட்டமொன்றையும் 12.12.1996இல் கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடைமுறைப்படுத்தியது. இடம்பெயர்ந்த திறமையான

க.பொ.த.(உயர்தர) மாணவர்கள் தம் உயர்கல்வியைத் தொடர, மாதாந்தச் சகாயமாக ரூபா 500/= அவர்கள் பரீட்சைக்கு முதல் தடவை தோற்றும்வரை கொடுக்கப்பட்டது. பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் அத்திட்டத்தினால் பயனடைந்தனர். அமைச்சின் இத்திட்டமும் ஷாபிமரிக்காருக்கு மிகவும் மகிழ்ச்சி தந்தது. புனர்வாழ்வு, கல்வி, சமூக நலன்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் என்ற வகையிலும், அ.இ.மு.க. மாநாட்டின் உதவிச் செயலாளர் என்ற வகையிலும், எனது புனர்வாழ்வு புனரமைப்புச் செயற்பாடுகளில், கொழும்பு ஸாஹிறாவின் ஆசிரியராக நான் பணி செய்த கால எனது மதிப்பிற்குரிய அதிபர் ஷாபிமரிக்காரின் சிந்தனைக்கும் விருப்புக்கும் அதிகூடிய முக்கியத்துவமளித்தேன்.

இடம் பெயர்ந்த மாணவர்களை சிறப்புக் குழுமமாகக்கருதி அவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கு குறைந்த வெட்டுப்புள்ளியை நிர்ணயிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சர் அஷ்ர.ப் அவர்களின் மரணத்தால் தடைப்பட்டுப் போனமையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதாகும்.யுத்தத்தால் இடம்பெயர்ந்து பிற மாவட்டங்களில் வாழ்ந்த மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்பதை 11.01.1994இல் நிகழ்ந்த உயர்கல்வி அமைச்சர் அநுர பண்டாரநாயக்காவுடனான அ.இ.மு.க. மாநாட்டின் சந்திப்பில் எடுத்துச் சொல்லப்பட்டமையும் கவனத்திற்குரியது.

> "1996 ஒக்டோபரின் பிறகு இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு ஒளி கிடைக்கத் தொடங்கியது. புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 29 பாடசாலைக் கட்டடங்களைப் பல பாடசாலைகளுக்கு அமைத்துக் கொடுத்தது. பல பாடசாலைகளுக்கு தளபாடவசதிகள், மலசலகூடவசதிகள் செய்துகொடுக்கப் பட்டன. அதன் காரணமாக மாலைநேரப் பாடசாலை இல்லாமலாகியது. இடம்பெயர்ந்த மாணவர்கள் மற்ற மாணவர்களைப் போல காலைநேர வகுப்புகளில் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டதோடு அவர்களுக்கென்று நான்கு புதிய பாடசாலைகளும் உருவாகின. எருக்கலம்பிட்டி மு.ம.வி., வேப்பமடு அ.மு.வி., ஹுசைனியா மு.ம.வி., கொய்யாவாடி அ.மு.வி. ஆகியனவே அவையாகும். 1996இல் முறையே நாகவில்லுச் சந்தியிலும் வேப்பமடுவிலும் உளுக்காப் பள்ளத்திலும் அரபா நகரிலும் இவை உதயமாகின. இன்னும் 19 பாடசாலைகள் இடம்பெயர்ந்த மாணவர்களுக்காக அமைப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு க.பொ.த.(சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்கத் தொடங்கும் இடம்பெயர்ந்த மாணவர்களில் தெரிவுசெய்யப்படும் ஒரு தொகையினருக்கு மாதம் 500/= ரூபா வீதம் 27 மாதங்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்கி வருவதால் உயர்தரம் கற்கும் இடம்பெயர்ந்த மாணவர்கள் பெரும் பயன் அடைந்து வருகின்றனர்" (மஹ்ரூப் மரைக்கார் எம்.எச்.எம்.எம். 1999:198-199)

என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு செய்த பெருமுயற்சியினாலும் ஷாபிமரிக்கார் போன்ற கல்விமான்களின் கரிசனையினாலும் இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி காப்பாற்றப்பட்டதை அப்போது கல்விப் பணிப்பாளராக விருந்த மஹ்ரூப் மரைக்கார் இவ்வாறு எழுதிவைத்திருக்கிறார். மஹ்றூப் மரைக்கார் ஷாபிமரிக்கார் கால கொழும்பு ஸாஹிறாவின் ஆசிரியராகவிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சர் லலித் அதுலத் முதலியை 20.06.1990இல் சந்தித்தபோதும், 13.02.1991இல் அது சம்பந்தமாக அவருக்கு மகஜர் சமர்ப்பித்த போதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபுல முஸ்லிம் மாணவர் களின் கல்விக்கு ஏற்பட்ட பாதிப்பை ஷாபிமரிக்கார் விளக்கிச் சொன்னார்.

> "All Muslim schools in the Northern Province numbering 46 (Jaffna & Kilinochchi -7, Mannar-28, Vavuniya-9, Mullaitivu-2) with 491 teachers (332 males&159 females) & 13,771 Muslim pupils have ceased to function. The Muslim Population in the Province in these areas has been compelled to leave the NP, and are now refugees in Puttalam, Kalpitiya, Anuradhapura, Polonnaruwa,Colombo and other places. The refugees themselves are occupying mostly buildings belonging to several Muslim schools which consequently have also ceased to function
>
> These students should be allowed a third year in the G.C.E.(O/L) class in schools. Muslim students attending the Jaffna University, Jaffna Teachers College-Palaly, Jaffna Technical College are no more attending these institutions and must be found places elsewhere.
>
> When normalcy returns an assessment of the extent of damages done to buildings and property of Muslim schools both in the North and East should be made without delay and action taken to rehabilitate the schools."

என்று யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் மாணவரின் அவலங்களை அமைச்சருக்கு விளக்கி எழுதினார் ஷாபிமரிக்கார். யுத்தநிலை வழமைக்குத் திரும்புகின்றபோது அழிந்துபோன வடபுல, கிழக்குப் பிரதேசங்களின் முஸ்லிம் பாடசாலைக் கட்டடங்களும் ஆதனங்களும் புனரமைக்கப்படுதல், ஜீ.ஸீ.ஈ. (சா.த.) மாணவர்கள் மூன்றாவது முறையாகவும் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகப் பரீட்சை எழுத அனு மதித்தல், யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு கல்வி நிலையங்களில் கற்றுக் கொண்டிருந்தவர்களுக்கு வேறு இடங்களில் அக் கற்கைகளைத் தொடர ஏற்பாடுகளைச் செய்தல் பற்றியெல்லாம் ஷாபிமரிக்கார் அமைச்சர் லலித் அதுலத் முதலியின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார்.

யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக்கழகங்களில் இருந்து உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்த ஏறக்குறைய 540 முஸ்லிம் பட்டதாரி மாணவர்களுக்கு வேறு பல்கலைக் கழகங்களில் இடமெடுத்துக் கொடுக்கும் முயற்சியிலும் ஷாபிமரிக்கார் முன்னின்று செயற்பட்டார். இடம்பெயர்ந்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு கொழும்பு, களனி, பேராதெனிய, றுகுணு பல்கலைக்கழகங்களிலும், வர்த்தக, முகாமைத்துவ மாணவர்களுக்கு கொழும்புப் பல்கலைக்கழகத்திலும், கலைத்துறையினருக்கு பேராதனைப் பல்கலைக் கழகத்திலும், விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு ஸ்ரீ ஜயவர்த்தனபுர, பேராதனைப் பல்கலைக் கழகங்களிலும் இடமெடுத்துக் கொடுத்து அம்மாணவர்கள் தம் கல்வியை இழந்துவிடாதிருக்க ஷாபிமரிக்கார் தம்மாலானவற்றையெல்லாம் செய்தார். அப்போது உயர்கல்வி அமைச்சராக விருந்தவர் ஏ.எல்.எஸ்.ஹமீத் அவர்கள்.

> "இன்று உள்ளூர் மாணவர்கள், இடம்பெயர்ந்த மாணவர்கள் என்ற நிலை முற்றாக நீங்கிவிட்டது. எல்லாப் பாடசாலைகளிலும் இடம்பெயர்ந்த மாணவர்களின் திறமைக்கு மதிப்பளிக்கப்படுகிறது. புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.எப்.எல்.மொஹிடீன் ரஜா என்ற மாணவன் உள்ளூர் மாணவர்களால் 'உயர்தர மாணவர் ஒன்றியத்'தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்... புத்தளம் மாவட்டத்தில் இருந்து மருத்துவம், பொறியியல், பௌதீக உயிரியல் விஞ்ஞானம், வர்த்தகம், கலை, சட்டம் முதலிய துறைகளுக்காக வருடாந்தம் தெரிவாகும் மாணவர்களில் கணிசமான இடம்பெயர்ந்த மாணவர்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இடம்பெயர்ந்த மாணவர்களின் மூலம் உள்ளூர் மாணவர்களும், உள்ளூர் மாணவர்களின் மூலம் இடம்பெயர்ந்த மாணவர்களும் ஊக்கம் பெற்றதனால் கற்றலில் போட்டி ஏற்பட, அந்தப் போட்டியின் காரணமாக கல்வித் தரம் அதிகரிப்பது கண்கூடாகும்" (மஹ்ரூப் மரைக்கார் எம்.எச்.எம்.எம்., 1999:200-201)

என்று கல்விப் பணிப்பாளர் மஹ்ரூப் மரைக்கார் எழுதிவைத்திருப்பது ஷாபிமரிக்காருக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். அவரின் எண்ணத்திற்கும் கரிசனைக்கும் கிடைத்த வெற்றியுமாகும்.

16.3 சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களின் கல்வி

சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களின் கல்வியிலும் ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கிய அ.இ.மு.க. மாநாடு கரிசனை காட்டியது.

> "The natural disaster due to the onslaught of Tsunami has multiplied the cultural, educational and social problems of all communities in coastal areas where

> Muslims are predominantly living and badly affected. Apart from the damages caused to their livelihood, their future education is also under question. Some of the Muslim schools are still unable to start functioning properly. Due to the acute shortage of teachers and permanent principals, standards of education in the Muslim schools are deteriorating. It is estimated that there are 6000 vacancies for teachers is Sri Lanka and 4000 vacancies are existing in Muslim schools. These basic requirements have to be met with, for the well being of the Muslim Community." (Shafie Marikar S.L.M., 2005:17)

என்று சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யுமாறு கோரிக்கைவிடுத்தார் ஷாபிமரிக்கார். நாட்டின் கரையோரங்களில் செறிந்து வாழும் முஸ்லிம் சமூகம் அதிக உயிர்களை சுனாமியில் இழந்தது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் சிறாரின் எதிர்காலக்கல்வி பாதிக்கப்பட்டு விடாதிருக்கவும், அழிந்துபோன உட்கட்டமைப்பு வசதிகள், வளங்கள் மட்டுமன்றி, அப்பாடசாலைகள் எதிர் நோக்கிய ஆசிரியர் பற்றாக்குறை என்பன பற்றியெல்லாம் கவனம் செலுத்தி சம்பந்தப்பட்டவர்களையும் அதன்பால் செயற்பட மாநாட்டின் நிருவாக சபைத்தலைவர் ஷாபிமரிக்கார் தூண்டுதல் செய்தார்.

16.4 முஸ்லிம் பெண் கல்வி

அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் ஏற்பாட்டில் எ.எம்.எ. அஸீஸ் தலைமையில் 15.05.1949இல் கல்முனையில் நிகழ்ந்த கல்வி மாநாடு முஸ்லிம் மகளிர் கல்வியில் கூடிய கவனம் செலுத்தியது. முஸ்லிம் மகளிர் உயர் கல்வியை ஊக்குவிக்க அளுத்கம முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரியை ஒத்த பல கல்லூரிகளை நாடெங்கும் நிறுவுமாறு கல்வி அமைச்சரைக் கோரும் தீர்மானமொன்றும் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. அட்வகேட் அமீன் முன்மொழிய எம்.ஏ.எம். யூசுப் வழிமொழிந்த அத்தீர்மானம் ஷாபிமரிக்கார் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட அம்மாநாட்டின் முக்கிய தீர்மானங்களுள் ஒன்றாக நிறைவேறியது. சுயாதீன அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்குழுத் தலைவராக 1964 செப்டம்பரில் தெரிவு செய்யப்பட்ட ஷாபிமரிக்காரும் முஸ்லிம் பெண் கல்வியில் கூடுதல் அக்கறை காட்டினார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழா 1977 ஒக்டோபர் 9-14வரை கொண்டாடப்பட்டபோது நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய ஆய்வு மாநாட்டின் ஓரங்கமாக மகளிர் கருத்தரங்கொன்றையும் அவர் ஏற்பாடு செய்திருந்தார். பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எப். றஹீம், முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெஸீமா இஸ்மாயில்,

அக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி எச்.எம்.காலித், யாழ்ப்பாணம் கதீஜா மகாவித்தியாலய அதிபர் செல்வி லைலா முஹிதீன், முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி ஸம்ஸம் அக்பர், ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி எப்.நஸாய்க், நோயல் கல்லூரி கனிட்ட பாடசாலை ஆசிரியை திருமதி கே. டீன், ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியை கைறுன் நிஸா ஷாபிமரிக்கார் ஆகியோர் உட்பட பலர் இக்கருத்தரங்கில் கலந்து கருத்துக்களை முன்வைத்தனர்.

> "பாடசாலை மட்டத்தில் ஆண், பெண் மாணவர்கள் தனித்தனிப் பாடசாலைகளில் கற்க வேண்டுமென்பது அவரின் (ஷாபிமரிக்காரின்) கருத்து. அவர் கலவன் பாடசாலை முறையையோ கூட்டுக் கல்வியையோ விரும்பவில்லை...பாடசாலை களில் ஒழுக்கமான சூழல் வளர்வதற்கு இவ்வகையான பாடசாலைகள் அத்தியாவசியம் என அவர் கருதினார்" (ஹுசைன் இஸ்மாயில் ஏ.ஜீ., 2007: 19-20)

என்று ஆண்கள், பெண்களுக்கென பிரத்தியேக பாடசாலைகளை ஷாபிமரிக்கார் ஆதரித்தமை பற்றி கலாநிதி ஹுசைன் இஸ்மாயில் இவ்வாறு குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

> "இலங்கையில் பெண்களுக்கென ஒரு தனியான பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்ற கருத்தை முதலில் முன்வைத்தவர் ஷாபிமரிக்கார். இவரது கருத்தை அப்போதைய கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன அவர்கள் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டார். இந்தியாவில் பெண்களுக்கான தனியான பல்கலைக்கழகங்கள் இயங்குவதை அவர் அரசுக்கு எடுத்துக் காட்டினார்" (ஹுசைன் இஸ்மாயில் ஏ.ஜீ., 2007:20)

என்றும் ஹுசைன் இஸ்மாயில் கூறி பெண்களுக்கென தனியான பல்கலைக்கழகம் அமையவேண்டுமென்ற ஷாபிமரிக்காரின் எண்ணத்தையும் வெளிப்படுத்திச் சொன்னார். பெண்களுக்கென்று ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியாவது அமையவேண்டுமென்பது ஷாபிமரிக்காரின் விருப்பமாக விருந்தது.

> "We accept the proposal to set up Regional / University Colleges in principle. While awaiting the details of this scheme we request that at least one of these be set apart for female students"

என்று ஷாபிமரிக்கார் தலைமையில் அமைச்சர் லலித் அதுலத்முதலியை 20.06.1990இல் சந்தித்துப் பேசிய அ.இ.மு.க. மாநாட்டின் பிரதிநிதிகள் பெண்களுக்கென தனியான பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்று அமைவதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினர்.

தமிழ்மொழிமூல கல்வியற் கல்லூரி அட்டாளைச்சேனை முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அண்மித்ததாக முஸ்லிம் ஆண்களுக்கும், அளுத்கம முஸ்லிம் ஆசிரியைகள் பயிற்சிக் கல்லூரிக்கு அருகாமையில் தனியாக முஸ்லிம் பெண்களுக்கும் அமைய வேண்டுமென்று ஷாபிமரிக்கார் கோரினார். அட்டாளைச்சேனையில் அமைவது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டது. அளுத்கமையில் அமைவது கொள்கையளவில் மார்ச்/ஜூன் 1989இல் அப்போதைய கல்வி அமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும் அமைச்சர் லலித் அதுலத்முதலிக்கு ஷாபிமரிக்கார் 13.02.1991இல் எத்திவைத்தார். அளுத்கமையில் ஏற்படுத்தப்படும் கல்வியியற் கல்லூரியில் சிங்கள மொழிமூல கற்கைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் ஷாபிமரிக்கார் 1998களில் சிந்தித்தார்.

இலங்கை முஸ்லிம் மகளிர் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென அளுத்கம முஸ்லிம் மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் திருமதி ஹலீமா கமால்தீன், அளுத்கம முஸ்லிம் மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி எச்.எம். காலித் ஆகியோரின் தலைமையில் இரு குழுக்களை அ.இ.மு.க. மாநாடு நியமித்திருந்தமையும் கவனத்திற்குரியது.

பேராதனைப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸும் முஸ்லிம் மாதர் ஆராய்ச்சிச் செயல் முன்னணியும் இணைந்து கொழும்பு 'மார்கா' நிலையத்தில் 1994 நவம்பர் 19, 20ஆம் திகதிகளில் நடாத்திய 'இலங்கை முஸ்லிம்களின் கல்வி' பற்றிய செயலமர்வுகளிலும் ஷாபிமரிக்கார் பங்கு பற்றி கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

இனம், மொழி, பொருளாதாரம், சமூக வகுப்பு, வாழும் பிரதேசம் என்ற பாகுபாடுகளின்றி யாவருக்கும் கல்வி வழங்கப்படவேண்டும் என்று ஐ.நா. மனிதஉரிமைகள் சாசனத்தின் 26ஆவது பிரிவு விதிக்கிறது. எமது சோல்பரி அரசியல் யாப்பின் 27ஆவது பிரிவும் யாவருக்கும் எல்லா மட்டங்களிலும் கல்வியைப் பெறுவதற்குச் சமசந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று கூறியது. கன்னங்கரா தலைமையில் 1943இல் அமைக்கப்பட்ட கல்வி விசேட ஆணைக்குழுவும் இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி பற்றியெல்லாம் பரிந்துரை செய்தது. 1945இல் இலவசக் கல்வித் திட்டம் இலங்கையில் அமுல் செய்யப்பட்டது. இலவசக் கல்வித் திட்டத்தைப் பூரணப்படுத்தும் நோக்கில் அநேக தனியார் பாடசாலைகள், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1960), உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள் (குறைநிரப்பு ஏற்பாடுகள்) சட்டம் (1961) என்பனவற்றின் கீழ் பல தனியார் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டு

அரசாங்கப் பாடசாலைகளாக்கப்பட்டன. அதைவிட வறிய மாணவரின் போசாக்கை அதிகரிக்கும் நோக்கில் அமுல் செய்யப்பட்ட மதிய உணவுத் திட்டமும் முக்கியமானது. 1953இல் கைவிடப்பட்டு, 1956இல் மீண்டும் வழங்கப்பட்டு, 1989இல் உணவு முத்திரைத் திட்டமாக அமுல் செய்யப்பட்ட இவ்வுதவித் திட்டமும் கவனத்திற்குரியது. 1980இல் அமுலான இலவச பாடநூல் விநியோகமும் முக்கியமானது. இலவசச் சீருடையும் இப்போது வழங்கப்படுகிறது. எல்லோருக்கும் கல்வி, கல்வியில் சமவாய்ப்பு என்ற இலக்கை நோக்கிய சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் கல்வி வரலாற்று நகர்வை அறிந்துகொள்ளுகின்ற போதுதான் ஷாபிமரிக்காரின் இந்நோக்கிலான பங்களிப்பைத் தெளிவாகப்புரிந்துகொள்ள முடியும். அந்தவகையில் ஷாபியின், 'எல்லோருக்கும் கல்வி' என்ற நோக்கு தேசியக் கல்விநோக்குடன் ஒத்துச் செல்வதைக் காணலாம்.

17

சுயாதீன தனியார் பாடசாலைகள்

பல இனத்தவர்கள், சமயத்தவர்கள், கலாசாரங்களைப் பின்பற்றுபவர்கள் வாழும் ஒரு நாட்டில் சமயப் பின்னணியில் கல்வி புகட்டவும், பன்மையில் ஒருமை பேணவும், பல்கலாசாரப் பேணுகைக்கும் - சுயாதீன தனியார் பாடசாலைகள் பெரும் பங்களிப்புச் செய்ய முடியும். கிறித்தவ ஆதிக்கத்திலிருந்து சுதேச சமயங்களைப் பாதுகாத்துக்கொள்ள, இந்து, பௌத்த, முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சியாளர்கள் கையாண்ட முறை இது. கிறித்தவ சமயத்தைப் பரப்ப கிறித்தவ மிசனரிகள் கையாண்ட வழியும் இதுவாகத்தானிருந்தது. ஆறுமுகநாவலர், அநகாரிக தர்மபாலா, எம்.ஸி. சித்திலெவ்வை முதலான சுதேசத்தலைவர்களின் வழியில் சிந்தித்த ஷாபிமரிக்காரின் விருப்பும் தனியார் பாடசாலை முறைமையையே நாடி நின்றது. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் பிரச்சினைகளற்றவை என்று கொள்ள முடியாது. கல்லூரி உரிமையாளர்களின் சமயத்தை ஏற்காத பெற்றோரின் பிள்ளைகள், தேசிய நலனைப் பேணாத கல்லூரிச் சொந்தக்காரர்கள், சிக்கனமற்ற, பணவிரயமுள்ள நியமனங்கள் போன்ற பல பிரச்சினைகள் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைப் பொறுத்தவரை தீர்க்கப்பட வேண்டியன. தகுதியுள்ள, நடுநிலையாளர்களைக் கொண்ட ஒரு விசேட குழுவை அரசாங்கம் அமைத்து இப்பிரச்சினைகளை ஆராய்ந்து உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை மறுசீரமைக்க வேண்டும் என்று எ.எம்.எ.அஸீஸ் கருதினார். (ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழா அறிக்கை - 15.02.1958)

> "நல்ல நிருவாகமுள்ள, நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சமயச்சார்புள்ள பாடசாலை அதே சமயத்தைப் பின்பற்றும் மாணவனுக்கு மிகவும் சிறந்த பாடசாலை"

என்று ஆனந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.டி.எஸ்.குலரட்ண கருத்துரைத்தார். (சிலோன் ஒப்சேர்வர் - 05-05-1957)

ஷாபிமரிக்கார் அதிபராகவிருந்த அளுத்கம ஸாஹிறாவும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியும் தனியார் பாடசாலைகள். இவ்விரு தனியார் பாடசாலைகளிலும் மொத்தம் 29 வருடங்கள் அதிபராகவிருந்த ஷாபி மரிக்காரின் கருத்துக்கள் தனியார் பாடசாலை முறைமையை ஆதரிப்பனவாக, அவற்றுக்கு வலுவூட்டுவனவாக விருந்தன. ரி.பி. ஜாயாவையும் எ.எம்.எ. அஸீஸையும் போல ஷாபிமரிக்காரும் தனியார் பாடசாலைகளில் அதிபராக இருந்தவரேயொழிய அரசாங்கப் பாடசாலைகளின் அதிபராக அவர் ஒருபோதும் இருந்தது கிடையாது.

> "Private schools play a very special and significant role in a nation's education and have a unique and distinctive contribution to make to its educational and cultural development. **Educational experimentation, enterprise and search for new lines of development can only flower in the free atmosphere of a private school.** Each private school, under the inspiration of its own religion (Buddhism, Hinduism, Islam or Christianity) must develop its education, with the freedom to experiment under the inspiration of its own peculiar cultural and literary tendencies and traditions, thus contributing to the richness and variety of nation's culture. In the last analysis, the true value and richness of a national culture, must lie in the purity and variety of its component cultures. Any attempt to thwart this ideal must, of necessary, impoverish and weaken the national culture. This will precisely be the effect achieved by nationalising education and bringing it under a uniform regimentation of dictation from the centre. Already the effect of this policy is seen in Government schools where principals and teachers are so limited and hedged in by rules regulations, circulars and other instructions, that no one is free to do any work not to speak of original work, for fear of contravening a rule or displeasuring the education officer. So, may **I plead with you, sir, to permit every religious community to have at-least one school managed by it, with Government financial support, with the Mid - Day meal and the cadet corps as well as pension rights for teachers.**" (Principal's Prize Day Report, 05.08.1968: 12)

என்று தேசிய கல்விக்கும் கலாசாரத்துக்கும் தனியார் பாடசாலைகளின் முக்கியத்துவம் பற்றி ஷாபிமரிக்கார் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் 1968ஆம் வருட பரிசளிப்பு விழா அறிக்கையில் குறிப்பிட்டுச் சொன்னார். கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் ஒவ்வொரு சமயத்தவரும் பேணுவது நாட்டின் கலாசாரப் பெறுமதியை உயர்த்துவதுடன் தேசத்தின் பல்கலாசாரப் பேணுகையாகவும் அமையும் என்பது ஷாபிமரிக்காரின் கருத்து. 'பன்மையில் ஒருமை', 'வேற்றுமையில் ஒற்றுமை' ஷாபிமரிக்காரின் கோஷங்களாகவிருந்தன. ஒவ்வொரு சமயக்குழுவும் ஆகக்குறைந்தது ஒரு தனியார் பாடசாலையையாவது நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். அப்பாடசாலைகளுக்கு

அரசாங்கம் நிதி உதவி, மாணவர்களுக்கு மதிய போசனம், கடெற் பயிற்சி, ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் என்பனவற்றையெல்லாம் வழங்கி உதவ வேண்டுமென்றும் அப்பரிசளிப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்த அன்றையப் பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் ஷாபிமரிக்கார் வேண்டுகோள் விடுத்தார்.

தனியார் பாடசாலைகளும் இலவச மதிய போசனத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற ஷாபிமரிக்காரின் கோஷம் 1961க்குப் பின் தனியார் பாடசாலைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியைச் சுட்டிக்காட்டியது. பாடசாலை மாணவருக்கு இலவச மதிய போசனம் வழங்குவது 1931க்கு முன்னர் பல பிரதேசங்களில் ஒழுங்கற்ற முறையில் நடைமுறையிலிருந்து திருக்கிறது. கொழும்பு மாநகர சபை வறிய மாணவர்கள் 800 பேருக்கு 1931களில் இலவச பகலுணவு வழங்கியமை வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. கல்வித் திணைக்களம் 1945இலிருந்து நாடளாவிய ரீதியில் அமுல் நடத்தத்தொடங்கிய இத்திட்டத்தில் வசதி குறைந்த மாணவர்கள் மட்டுமே பயனாளிகளாக விருந்தனர். சகல ஆரம்பப் பிரிவு மாணவர்களையும் சில இடைநிலை மாணவர்களையும் உள்ளடக்கியதாக 1947இல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1948-49களில் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்ட இத்திட்டம், 1953இல் முற்றாகக் கைவிடப்பட்டு பின்னர் அமெரிக்க 'கெயர்' நிறுவனத்தின் உதவியுடன் 01.10.1956இலிருந்து மீண்டும் செயற்படத் தொடங்கியது. வறிய ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு மட்டும் என்றிருந்த இத்திட்டம் 1967 பெப்ருவரியில் 6, 7, 8ஆம் வகுப்பு மாணவர்களையும் உள்ளடக்கியதாக விஸ்தரிக்கப்பட்டது. இத்திட்டம் தனது உச்சக்கட்ட வளர்ச்சியை 1967 ஆகஸ்ட்டில் அடைந்தது. வயது, வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து அனைத்து மாணவர்களும் இத்திட்டத்தின் பயனாளிகளாயினர். பிரிவேனாக்களில் கற்றுக் கொண்டிருந்த வசதி குறைந்த மாணவர்களும் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். இலவச உணவுத் திட்டத்தில் இவ்வாறெல்லாம் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த 1967களில் ஷாபிமரிக்கார் முஸ்லிம் தனியார் பாடசாலையான கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்தார். ஸாஹிறாக் கல்லூரி மாணவர் உள்ளிட்ட அனைத்து தனியார் கல்லூரி மாணவர்களும் இத்திட்டத்தின் பலனை அனுபவிக்க வேண்டுமென்பதில் அவர் கூடிய கரிசனை காட்டினார். அன்றையப் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் தலைமையில் 1968இல் ஸாஹிறாக் கல்லூரிப் பரிசளிப்பு விழா நிகழ்ந்தபோது அக்கரிசனையை அவர் தெளிவாக வெளிக்காட்டினார். தனியார் கல்லூரிகளுக்கும் இலவச

பகலுணவுத் திட்டத்தை விஸ்தரிக்குமாறு தனது உரையில் பிரதமரை அவர் வேண்டிக்கொண்டார்.

அரசாங்கம் 1979/80களில் இலவச பாடநூல் விநியோகத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்த போது ஷாபிமரிக்கார் அதை வரவேற்றார். தனியார் பாடசாலைகளையும் உள்ளடக்கியதாக அத்திட்டம் அமைந் திருந்தமை அவருக்குத் திருப்தி தந்தது.

> "அரசாங்கத்தின் இலவசப் பாடநூல் விநியோகத் திட்டத்தில் தனியார் பாடசாலை மாணவர்களையும் உள்ளடக்கியமைக்காக அதிமேதகு ஜனாதிபதிக்கு நன்றிக் கடப்பாடுடையோம்" (The Crescent, Nov. - Dec., 1979)

என்று ஸாஹிறாக் கல்லூரியின் குரல், 'த கிறசன்ட்' நவம்.-டிசம்பர், 1979 இதழ் அந்நற்கைங்கரியத்தைச் செய்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தது. ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கிய, 'அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு'ம் அரசாங்கத்தின் இத்திட்டத்தைப் பாராட்டி 25.12.1979இல் அறிக்கை வெளியிட்டது. இலவசக் கல்வியின் முழுப்பயனையும் மாணவர்கள் அடைவதற்குப் பாடநூல்களையும் இலவசமாக வழங்க வேண்டுமென்ற கருத்துடையவர் ஷாபிமரிக்கார். இலவசக் கல்வியின் பலன்களை அனுபவிக்கும் உரிமை தனியார் பாடசாலைகளின் மாணவர் களுக்கும் உண்டு என்பது அவரின் நிலைப்பாடு.

தனியார் பாடசாலைகள் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்படுவதற்கெதிராக, தனியார் பாடசாலையான ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் என்ற வகையில் ஷாபிமரிக்கார் கண்டனக் குரல் எழுப்பினார்.

> "I am sorry to say we are given little encouragement and a very obvious step - motherly treatment by the Ministry of Education. Our repeated requests for the latest departmental schemes, syllabuses and course guides have met with very little response, and we have heard of other Private schools who have been similarly treated. We are denied not only this mental food but even the physical nourishment, the mid - day meal has been cut off. So the Ministry of Education, like some evil step - mother, starves our children both mentally and physically, because the school carries a label 'private', though our Muslim children, like the rest of the young ones of other races in this country, live move and have their being in one common motherland" (Principal's Prize Day Report, 05.08.1968:4,5)

அன்றையப் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் முன்னிலையில் ஷாபிமரிக்கார் எழுப்பிய உரிமைக்குரல் இது. தனியார் கல்லூரிகளையும் அணைத்துச் செல்வதாக அரசாங்கத்தின் கல்விக் கொள்கை அமைதல் வேண்டும்;

இன, மத பேதம் பாராட்டுவதாகக் கல்விக் கொள்கை அமையக்கூடாது; இந்நாட்டில் பிறந்து வாழும் முஸ்லிம் பிள்ளைகளும் பிற இன மாணவர் களுக்குச் சமமாக அரசாங்கம் வழங்கும் கல்வியின் பயனை அனுபவிக்க உரிமையுள்ளவர்கள் - என்ற கருத்துப்பட ஷாபிமரிக்கார் அன்று நிகழ்த்திய உரை முக்கியமானது.

> "Your Principal in the course of his speech touched upon a stormy and controversial subject of state education and state aid to Private Institutions. This was one of the greatest controversies that was raised in this country some years back. Another regime took the step of state education. Some times some steps become irrevocable. For instance you cannot unscramble a scrambled egg. But I know there has been considerable suffering in certain institutions because of this step. We shall endeavour to keep in mind these difficulties and see what we can do to put these matters right." (Dudley Senanayake, The Crescent - 1968 : 15)

என்று ஸாஹிறாக் கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாப் பரிசளிப்பு நிகழ்வு 1968இல் நடைபெற்ற போது, பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆற்றிய உரையில், ஷாபிமரிக்காரின் கோரிக்கைக்கு பிரதமர் டட்லி சேனநாயக்க பதிலளித்தார். இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமென்றும் ஒரு தடவை நிகழ்ந்து விட்டால் சில விடயங்களை பின்னர் மாற்றமுடியாமற் போகுமென்றும் கூறிய பிரதமர், இத்தீர்மானத்தால் சில கல்வி நிலையங்கள் கஷ்டமுறுவதைத் தான் அறிந்திருப்பதாகவும், அதை எவ்வாறு சரி செய்வ தென்பதை மனத்திலிருத்திக் கொண்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தபோது ஷாபியின் எண்ணத்திற்குக் கிடைத்த முதலாவது அங்கீகாரமாக அது அமைந்தது.

இராஜாங்க அமைச்சர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் பரிசளிப்பு விழா 08.08.1969இல் நிகழ்ந்தபோதும் இதே கருத்தை ஷாபிமரிக்கார் மீண்டும் வலியுறுத்திச் சொன்னார்.

> "The state can permit and give its full financial support to one or two schools of each religious denomination to act as a leaven to leaven the education loaf. This will release a stream of healthy tendencies to liberate and energise education to higher levels" (Principal's Prize Day Report. 08.08.1969 : 7)

என்று ஷாபிமரிக்கார் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு எடுத்துக் கூறினார். தனியார் பாடசாலைகளில் 'கடெற்' இல்லாமற் செய்யப்பட்டமைக்கெதிராகவும் ஷாபிமரிக்கார் அதே பரிசளிப்பு விழா உரையில் கருத்துத் தெரிவித்தார்.

"It will be a splendid gesture on the part of the state to remove the ban on cadetting in private schools and allow us our senior and junior cadet platoons. Our boys are most unjustifiably handicapped in the competition for jobs, which require the training and discipline of cadets, particularly in the recruitment to the Police and Army. We made this request at the last prize giving at which the Prime Minister was our Chief Guest and we do so again trusting you will help us in this matter" (Principal's Prize Day Report. 08.08.1969 : 7)

என்று தனியார் பாடசாலைகளிலும் 'கடெற்' இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறினார்.

"I should like to request the Hon. Minister to take steps to see that there is at least one private school for each denomination. The Government should also give them some sort of assistance, because the children who attend those schools are also its responsibility; they too are nationals of this country; their parents too are citizens of this country. Therefore, if the Government is prepared to meet all expenses of the state managed schools, why cannot it meet 30 to 40 percent of the expenses of these schools in the form of some sort of assistance, to carry on the schools?. In fairness, something must be done. This National Government should not perpetrate the injustice that has been done to them."

என்று ஒரு இனக்குழுமத்துக்கு ஒரு தனியார் பாடசாலையையாவது நடத்துவதற்கு அரசாங்கம் உதவ வேண்டுமென்றும், தனியார் பாடசாலை மாணவரும் பெற்றோரும் இலங்கைப் பிரஜைகளே என்றும், அரசாங்கப் பாடசாலைகளின் முழுச் செலவையும் ஏற்கும் அரசாங்கம் தனியார் பாடசாலைகளின் 30 - 40 சதவீத செலவையாவது பொறுப்பேற்க வேண்டுமென்றும் 14.09.1969இல் பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்திய பாக்கீர் மாக்காரும் கல்வி அமைச்சரவைக் கேட்டுக் கொண்டார். ஷாபி மரிக்காரின் உரிமைக் குரலுக்குச் சாதகமாக பாராளுமன்றத்தில் கேட்ட பாக்கீர் மாக்காரின் குரல் இது.

"Private schools are not illegal bodies. They are legal entities created by acts of Parliament and forming a part of the National system of Education. We are bound by all the laws relating to education. We follow strictly the national policies relating to language, curriculum, text books, have the same hours of work, school holidays and our pupils sit for the same public examinations. We cater alike for the rich as well as for the poor. Then why, I ask this discrimination? Some private schools charge fees, others cannot do so. While teachers in the state schools enjoy pension rights, our teachers are denied these rights for themselves as well as for their dependants. Cadet contingents were withdrawn from our schools and our teachers who were cadet officers were posted to the reserve. Some of our schools were pioneers in cadetting in Sri Lanka. Our

teachers, however qualified they may be, are not entitled to serve as Examiners, moderators or supervisors for public examinations. Scholarships and even grants offered by foreign agencies are not available to our teachers and students. If the Government does not consider private social services, private hospitals, private legal practice as militating against the provision of free welfare services of the state, why does the state hesitate to permit us conditions that are fair and just? It is true we do exercise in the private sector a certain amount of freedom in planning, in a choice of teachers, text books, in matters of discipline. But, this is all for the good."

என்றும் தனியார் பாடசாலைகள் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்படுவதற்கெதிராக ஷாபிமரிக்கார் கருத்துத் தெரிவித்தார். 85ஆவது நூற்றாண்டு பரிசளிப்பு விழா 11.10.1977இல் நிகழ்ந்த போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அன்றையப் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் முன்னிலையில் நிகழ்த்திய உரையிலேயே அதிபர் ஷாபிமரிக்கார் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதே ஸாஹிறாவின் 85ஆவது ஆண்டு நிறைவு பரிசளிப்பு வைபவத்தில் இன்னுமொரு முக்கிய விடயத்தையும் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கவனத்திற்கு ஷாபிமரிக்கார் கொணர்ந்தார்.

"We at Zahira adhere firmly to the belief that religion should be made the foundation of any educational system. Here, we lay stress on regular religious worship and the practice of Islamic Principles of conduct. Religious activities are carried on under the guidance and direction of Moulavies on our staff and every endeavour is made to ensure that these activities help to elevate to the tone and atmosphere of the school. By attaching importance to character formation we hope to make our own contribution towards the fulfilment of the present Government's aim to create a "New society, based on human and moral values". In fact, it was with a sense of joy and relief that we welcomed your Government's policy statement where you promise to obtain the assistance and co-operation of all religious groups to 'ensure that all children obtain their primary education in a national and religious environment and make religious education an essential feature in education thereafter… It was for this very cause and principle and for that alone, i.e. to ensure to our children an education in a religious environment, that the denominational managements decided in 1960 to retain at least a few of their Grade 1 schools and maintain them as Private institutions" (Principal's Prize Day Report 11.10.1977)

என்பதே ஷாபி பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு எத்திவைத்த செய்தி. எந்தவொரு கல்வித்திட்டத்திற்கும் சமயம் அடிப்படையாக அமைய வேண்டுமென்பதை ஸாஹிறா திடமாக நம்புவதாகவும், நன்னடத்தை, மனித

ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில் புதியதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் இலக்கை அடைவதற்கு ஸாஹிறாவும் தனது பங்களிப்பை நல்குமென நம்புவதாகவும், சமயச் சூழலில் கல்வி அளிப்பதற்காகவே சில சமய நிறுவனங்கள் 1960களில் முதலாம் தரப்பாடசாலைகள் சிலவற்றை தனியார் பாடசாலைகளாக தொடர்ந்தும் நடாத்தத் தீர்மானித்தனவென்றும் ஷாபிமரிக்கார் தனது உரையில் வலியுறுத்திச் சொன்னார். சமயச் சூழலில் கல்வி புகட்டுவதற்கு தனியார் பாடசாலைகளின் முக்கியத்துவத்தை அவ்வுரையில் ஷாபிமரிக்கார் தெளிவுபடுத்தினார்.

தனியார் பாடசாலைகளின் அவலங்களையும் அவை எதிர் நோக்கிய பிரச்சினைகளையுமிட்டு, ஆசிரியர் சங்கங்களும் இயக்கங்களும் விடுத்த கோரிக்கைகளின் பேரில் அரசாங்கம் கவனம் செலுத்தத் தொடங்கிய போது ஷாபிமரிக்கார் அடைந்த மகிழ்ச்சி அவரின் எழுத்துக்களில் தெரிந்தது. 'த கிறசன்ட்' (ஜூலை 1978) இதழுக்கு அவர், 'A New Phase' (புதுயுகம்) என்ற தலைப்பில் எழுதிய முகப்புக் கட்டுரையில் அதனைத் தெளிவாகக் காண முடிந்தது.

> "தனியார் பாடசாலைகள் தேசத்தின் வாழ்வில் ஆற்றிவரும் தொண்டையும் அதன் நலனுக்காக அவை ஆற்றிவரும் பங்களிப்பையும் அரசாங்கம் தனது புதிய கல்விக் கொள்கை மூலம் அங்கீகரித்து அதற்குரிய முக்கியத்துவத்தை அளிக்க முன்வந்திருக்கிறது... அண்மைக் காலங்களில் தனியார் பாடசாலை களின் குரல்கள் செவியேற்கப்படவில்லை. அவைகளின் புகார்களும் கோரிக்கைகளும் நிராகரிக்கப் பட்டன. தேசத்தின் கல்வியமைப்பில் தனியார் நிறுவனங்கள் இரண்டாந்தர இடத்தையே பெற்றிருந்தன. அரசாங்கம் இவற்றுக்கு எவ்வித ஆதரவும் காட்டியதில்லை. இப்பொழுது இந்தநிலை மாறியிருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். கல்வியமைச்சு தனியார் பாடசாலைகளுடன் பேச்சுகள் நடத்த முன்வந்துள்ளதுடன், ஏற்கனவே ஒருசில சலுகைகளையும் வழங்க முன்வந்தள்ளது. இதனால் தனியார் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் நிலை ஏற்றமுற வழிபிறந்திருக்கிறது. இது முக்கியமானதொரு மாற்றமாகும். ஏனெனில், எந்த ஒரு கல்விக் கூடத்தின் நல்வாழ்வும், வெற்றியும் அதில் பணிபுரியும் ஆசிரியர்களின் சுபீட்சத்தையும் மனத்திருப்தியையும் பொறுத்ததாகவே அமைந்துள்ளது. வருங்காலத்தில் தனியார் நிறுவனங்கள் மேலும் பல சலுகைகளைப் பெற வாய்ப்பிருக்கும் என்றும் நாம் நம்புகிறோம்."
> (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., த கிறசன்ட், ஜூலை 1978 : 7, 8)

என்று மகிழ்ச்சி தெரிவித்தார் ஷாபிமரிக்கார். தனியார் பாடசாலைகளின் பக்கம் அரசாங்கம் கவனம் செலுத்தியபோது தான் அதிபராகவிருந்த தனியார் நிறுவனமான கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியும் பயனடையும்,

அதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் கல்விக்கும், தேசத்தின் கல்விக்கும், அக்கல்லூரி பெரும்பணி ஆற்றமுடியும் என்று ஷாபிமரிக்கார் கருதினார். தனியார் பாடசாலை ஆசிரியர்களின் பொருளாதார, சமூக, தொழில் நிலையை உயர்த்துவதிலும் ஷாபிமரிக்கார் கரிசனை காட்டினார். அதன் மூலமே ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை, மனோநிலையை மேம்படுத்தலாம் என்பது அவரின் எண்ணம். ஆசிரியர் சங்கம் (Teachers' Guild), ஆசிரியர் நலன்புரிச்சங்கம் (Teachers Benefit Association) ஆகிய ஆசிரியர் நலநோம்பு அமைப்புகளை ஷாபிமரிக்கார் ஸாஹிறாவில் ஏற்படுத்தி செயற்பாடுடைய தாக்கினார். கல்லூரியின் 85ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது ஆசிரியர் விடுதிக்கான அத்திவாரக்கல்லும் நடப்பட்டது. தனியார் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளத்தை, ஓய்வூதியத்தை அரசாங்கம் கொடுக்கவேண்டு மென்ற போராட்டத்தில் ஷாபியின் பெருமுயற்சிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

பாடசாலை – சமுதாயத் தொடர்பு தனியார் பாடசாலைகளில் அரசினர் பாடசாலைகளை விடக் கூடுதலாகவிருக்கும் என்பது ஷாபிமரிக்காரின் கருத்தாக இருந்தது. பெற்றார் - ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன்புரிச் சங்கங்களின் பணிகள் மூலம் சமுதாயத்தைப் பாடசாலைக்குக் கொண்டுவருதல், சமூகத்திற்குப் பாடசாலைச் சமூகத்தின் பணிகளை விஸ்தரிப்பதன் மூலம் பாடசாலையை சமுதாயத்திற்குள் அழைத்துச் செல்லல், சமுதாயத் தேவைகளுக்காக பாடசாலைக் கட்டிடம், நூலகம், மைதானம் போன்றனவற்றைக் கொடுத்துதவுதல், முதியோர் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துதல் போன்றவாறான பணிகள் மூலம் சமுதாயத்தின் மையமாகப் பாடசாலை இயங்குதல் என்பவற்றை அரசாங்கப் பாடசாலைகளைவிட தனியார் பாடசாலைகள் கூடுதலாகச் செய்யமுடியும் என்பது ஷாபிமரிக்காரின் எண்ணமாக இருந்தது. அந்த வகையில் சமூக மேம்பாட்டு நோக்குடைய கல்விப் போராளியாக நான் ஷாபிமரிக்காரைக் காண்கிறேன். ஷாபிபோன்றவர்களின் அயராத முயற்சியால் 01.01.1980இலிருந்து கட்டணம் அறவிடும் பாடசாலைகள் பல, அரசாங்க உதவி பெறும் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளாயின. தனியார் பாடசாலைகளில் கற்பித்த தகைமையுள்ள ஆசிரியர்களின் சம்பளத்தை அரசாங்கம் வழங்கத் தொடங்கியமை தனியார் பாடசாலைகளுக்குப் பெரும் ஆறுதலாக அமைந்தது. ஓய்வூதியத் திட்டத்திலும் அக்கல்லூரிகளின் ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். ஷாபியின் நீண்டகாலப் போராட்டத்துக்குக் கிடைத்த பெருவெற்றி இது. கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளுக்கு நிதி உதவி வழங்குவது தொடர்பாக 20.06.1979இன் அமைச்சரவைத்

தீர்மானத்துக்கும் கல்வி அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலுக்குமிடை வேறுபாடு காணப்பட்டபோது அதுபற்றியும் சுட்டிக்காட்ட ஷாபிமரிக்கார் தயங்கவில்லை.

> "The Cabinet decision on 20.06.1979 to grant financial assistance to private schools stated that "Non fee living private schools be financed in the same manner as government schools". However, the Hon. Minister of Education by regulations dated 30.08.1982 (vide Gazette No. 225 of 24.12.1982) restricted the payment of salaries to the number of eligible teachers as on 01.01.1980 quite contrary to the cabinet decision... There are 25 non-fee levying schools whose development has been retarded owing to the lapse in the regulations."

என்று 16.01.1989இல் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்குச் சமர்ப்பித்த மகஜரில் ஷாபிமரிக்கார் குறிப்பிட்டிருந்தார்.

> "The ACMEC has been interested in the welfare and progress of Zahira College, Colombo, the only Muslim Private non fee levying school aided by Government".

என்றும் அதே மகஜரில் குறிப்பிட்டு ஒரேயொரு முஸ்லிம் தனியார் பாடசாலையான ஸாஹிறாக் கல்லூரி மீது தனது தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் கரிசனையையும் ஷாபிமரிக்கார் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எத்திவைத்தார்.

18 மொழிக் கொள்கை

18.1 அரச கரும மொழி பற்றி முஸ்லிம் தலைவர்களின் நிலைப்பாடு

அரசாங்க சபையின் களனித் தொகுதிப் பிரதிநிதி ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆங்கிலத்தின் இடத்திற்கு சிங்களம் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்று 1944இல் அரசாங்க சபையில் பிரேரணையொன்றை முன்மொழிந்த போது, சிங்களம் என்று வரும் இடங்களில் சிங்களமும் தமிழும் என்ற திருத்தத்துடன் வீ. நல்லையா முன்மொழிந்தார். அதை ரி.பி. ஜாயா வழி மொழிந்தார். சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக இருக்கவேண்டும் என்பது ஜாயாவின் கொள்கை. சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழிகளாக ஆக்குவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட அறுவர் கொண்ட தெரிவுக்குழுவிலும் ஜாயா அங்கத்துவம் வகித்தார். அக்குழுவின் முன் சுவாமி விபுலாநந்தர், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், வீ. நல்லையா, எம். எஸ். காரியப்பர் முதலானோர் சாட்சியம் அளித்தனர். குழுவின் அறிக்கை 1946இல் வெளியிடப்பட்டது. சிங்களத்தை அரச கரும மொழியாக்குவதில் சேர் றாசிக் பரீத் தன்னுடைய முழு ஆதரவையும் வழங்கினார்.

> "I certainly feel that in the best interests of Lanka and her People one language will bring unity among our people. If we all take to one language, then we will not think in-terms of Tamils, Moors, Sinhalese, Burghers, Malays and so on… I have therefore great pleasure in supporting the motion of the Hon. Member for Kelaniya" (Razik Fareed, 1968 : 82 - 83)

என்று ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்மொழிந்த 'சிங்களம் மட்டும்' மசோதா மீது 25.05.1944இல் அரசாங்க சபையில் உரையாற்றுகையிலும்,

> "The dreams I dreamt and the vision I saw 12 years ago are a reality today that the Sinhalese language be the only official language of Sri Lanka."

என்று 'சிங்களம் மட்டும்' மசோதாவின் 2ஆவது வாசிப்பின் மீது பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் 13.06.1956இலும் சேர் றாசிக் பரீத் 'சிங்களம் மட்டும்' சட்டத்துக்குச் சாதகமாகக் கருத்துரைத்தார்.

> "All my happiness in seeing this bill being passed will turn to sorrow the day English is banished from these shores… The mandate to vote for this bill was given to me on the assurance given by me to my community that English will continue, and so will Arabic"

என்றும்,

> "There has been a legitimate fear in the minds of all sections of the people including the Sinhalese, with regard to the complete switchover by 1960 as envisaged in this bill. We have no reason to doubt the assurance given by our Prime Minister that, should any genuine difficulty arise, the government will not hesitate to amend the act suitably to meet it… The Hon. Prime Minister has further assured us that he will permit the reasonable use of English and Tamil, and I am confident that he will honour his word and give even greater facilities to these two languages when the time for implementation comes…" (Razik Fareed,1968: 103)

என்றும் 'சிங்களம் மட்டும்' சட்டம் அமுல் செய்யப்படுகையில் முஸ்லிம் சமூகம் முகம் கொடுக்க நேரிடும் பிரச்சினைகளையிட்டும் அவற்றை எதிர்கொள்வதற்கு பிரதமர் அளித்த உத்தரவாதங்களையும் பாராளுமன்றத்தில் 13.06.1956இல் நிகழ்த்திய உரையில் சேர் றாசிக் பரீத் குறிப்பிட்டுச் சொன்னார். பிரச்சினைகளை எதிர்கொள்ளத்தக்க வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யவும், ஆங்கிலம், தமிழ் மொழிகளின் நியாயமான பாவனையை அனுமதிக்கவும் பிரதமர் அளித்த உத்தரவாதத்தையும் சேர் றாசிக் பரீத் அங்கு நினைவுறுத்திப் பேசினார். தமிழ்ப் பிரதேச முஸ்லிம் அரசியல் தலைவர்கள் காலிமுகத்திடலில் 'சிங்களம் மட்டும்' சட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு சிங்களக் காடையரின் தாக்குதலுக்கும் இலக்காகினர்.

> "It was the Beruwala Urban Council which moved the first resolution requesting that Sinhalese be made the national language of this country… I appealed to my community and they responded to my appeal and of course, we joined the majority community in asking for Sinhalese as the state language' (Bakir Markar M.A., Parliamentary Hansard – 22.04.1960)

என்று 22.04.1960இல் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் பாக்கீர் மாக்கார் குறிப்பிட்டார்.

அரசகரும மொழியாக சிங்களம் இருக்க வேண்டுமென்று கருத்துரைத்த முன்னவர்களில் கம்பளை ஸாஹிறாக்கல்லூரி அதிபராகவிருந்த பதியுத்தீன் மஹ்மூத் அவர்களும் ஒருவர்.

> "சிங்களம் மாத்திரம் அரசாங்க பாஷையாக இருக்க வேண்டுமென்று முதன் முதலில் கூறியவர் கம்பளை ஸாஹிறாக்கல்லூரி அதிபராகவுள்ள பதியுத்தீன்" (எங்கள் தலைவர் பதியுத்தீன், 1989 : 333)

என்று எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் புகழ்ந்துரைக்கப்பட்டவர் அவர்.

> "As far as Ceylon is concerned there are two main languages – Sinhala and Tamil. It would be an egregious blunder for any one to suggest that there should be one official Language and that Sinhala" (Ameen A.M., 1954 : 13)

என்று அட்வகேட் ஏ.எம். அமீன் அரசகரும மொழி பற்றிய தனது கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். பின்னாளில் மாவட்ட நீதிபதியாகவிருந்த அமீன், 'The Ceylonese and the State Language' என்ற தலைப்பில் 'செரண்டிப்' பத்திரிகைக்கு 08.11.1954இல் எழுதிய கட்டுரையில் இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார். இரு பிரதான மொழிகள் பேசப்படும் இலங்கையில் சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக இருக்க வேண்டுமென்று தீர்மானிப்பது மடத்தனம் என்பது அமீனின் கருத்து. இவ்வாறு முஸ்லிம் தலைவர்களும் புத்திஜீவிகளும் 'சிங்களம் மட்டும்' அரச கருமமொழி சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் 'சிங்களம் மட்டும்' சட்டத்திற்குச் சார்பான கருத்துடையவராக விருந்தார். இவ்விடயத்தில் சேர் றாசிக் பரீத், பாக்கீர் மாக்கார், பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோரின் கருத்துக்களுடன் ஒத்த கருத்தை அவர் கொண்டு இருந்தார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்த சென்ட்டர் அஸீஸ் அச்சட்டத்துக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தார். சிங்களம் மட்டும் சட்டத்தை ஆதரித்த ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறியவர் அவர். "சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாத முஸ்லிம் இனத்தை இம் மசோதா மிகவும் பாதிக்கும்" என்பது அவரின் வாதம். தாய்மொழி, கல்விமொழி பற்றிய ஷாபிமரிக்காரின் நிலைப் பாட்டைத் தெரிந்து கொள்ள அரசகரும மொழி தொடர்பான முஸ்லிம் தலைவர்களின் நிலைபாட்டைத் தெரிந்து கொள்வது பயனுள்ளது.

18.2 தாய் மொழி

இலங்கை முஸ்லிம் சமூகம் பல இனக் குழுமங்களின் சங்கமமாக இருக்கிறது. தம் தாய்ப் பாஷை 'அரபுத் தமிழ்' என்றும் தம் மூதாதையர் அராபியரென்றும் கூறிக் கொள்ளும் சோனகர் (Ceylon Moors), மலே மொழி பேசும் மலாயர், தமிழ் பேசும் இந்திய வம்சாவழி முஸ்லிம்கள் (Coast Moors), உருதுமொழி பேசும் பாக்கித்தான் வம்சாவழியினர், வட இந்திய மொழிகளைப் பேசும் கோஜா, மேமன், போரா இனத்தவர்களெல்லாம் இலங்கை முஸ்லிம்கள் என்ற வகைப்பாட்டில் அடங்குவர். வீடுகளில் சிங்களத்தைப் பேசும் குடும்பங்களும், ஆங்கில மொழியைப் பேசும் குடும்பங்களும் முஸ்லிம் சமூகத்தில் இல்லாமலில்லை. அதனாற்றான், இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி எதுவென்பதைத் தீர்க்கமாகக் கூறிவிட முடியாத நிலை அவதானிக்கப்பட்டது. சிங்கள, தமிழ் சமூகங்கள் எதிர்நோக்காத, முஸ்லிம் சமூகம் மட்டும் எதிர்நோக்கும் பிரச்சினை இது. அரச கரும மொழியாக 'சிங்களம் மட்டும்' சட்டம் கொணரப்பட்ட போதும், முஸ்லிம்களின் கல்வி மொழி எதுவாக இருக்க வேண்டுமென கேள்வி எழுப்பப்பட்ட போதும் இப்பிரச்சினையின் விசுவரூபத்தைக் காணமுடிந்தது. மொழி சம்பந்தமாக தீர்க்கமான முடிவுகளை முஸ்லிம் சமூகம் எடுக்க முடியாமல் தடுமாறியதற்கு இதுவே காரணம். முஸ்லிம்களின் சிதறி வாழும் தன்மை இதற்குத் தீனிபோட்டது.

> "இந்த ஊரிற் குடியிருக்கிறவர்கள் அறபு, தமிழ், இங்கிலீஷ், சிங்களம் ஆகிய பாஷைகள் படிக்கிறது மிகவும் அவசியமாயிருக்கிறது." சித்திலெவ்வை எம்.ஸி., முஸ்லிம் நேசன் - 07.01.1886

என்று நான்கு மொழிகளை இலங்கை முஸ்லிம்கள் கற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்திய எம்.ஸி. சித்திலெவ்வை, தனது அந்திம காலத்தை இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியாக அறபு மொழியை ஆக்குவதில் செலவிட சித்தம் கொண்டிருந்தார்.

> "வேறுபட்ட எழுத்துக்களையுடைய வித்தியாசமான சரித்திர, சமய, பாஷா அடிப்படைகளையுடைய சிங்களம், தமிழ், ஆங்கிலம், அறபு ஆகிய நான்கு மொழிகளையும் முஸ்லிம் சிறுவர் கற்க வேண்டியதால் உண்டாகும் சிரமம் தவிர்க்க முடியாததாகும்."

என்று சித்திலெவ்வை வழிநின்று அறிவுரைத்த எ.எம்.எ. அஸீஸ்,

> "இலங்கை முஸ்லிம்கள் பெரும்பான்மையோரின் வீட்டுப்பாஷை வடக்கா யிருந்தாலும் தெற்காயிருந்தாலும் தமிழே" (அஸீஸ், எ.எம்.எ., 1963: 198)

என்றும் கூறினார். முஸ்லிம்களின் தாய்மொழி தமிழே என்று 1943இல் வண்ணார் பண்ணையில் பேராசிரியர் விபுலாநந்தருக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் கருத்துரைத்து சர்ச்சைக்குள்ளான காதி அபூபக்கரின் மகனே அஸீஸ். தந்தை கூறிய கருத்தை தந்தைக்கு முன்னரே 1941களில் கூறிய தனயன் இவர்.

அல்லாமா யூசுப் அலியின் தலைமையில் 1936இல் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நிகழ்ந்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டில் முஸ்லிம்களின் தாய்மொழி அரபுத் தமிழ் என்ற கருத்தை சேர் றாசிக் பரீத் முன்வைத்தார். அப்போது பலத்த எதிர்ப்பைச் சந்தித்த அக்கருத்து அத்துடன் அஸ்த்தமித்து விடவில்லை. அரபுத்தமிழ் இயக்கம் ஒன்றை எம்.எச்.எம். சஹீட் என்பவர் ஆரம்பித்து அக்கருத்துக்கு மீண்டும் உயிர்கொடுக்க முனைந்தார்.

> "We Mussulmans in Ceylon have our own language with our own script which we consider the cradle of our culture and civilisation. It is the language which built and nursed Islam in our country. About fifty to sixty years ago when the country was groaning under the darkness of illiteracy, over 80% of the Muslim men & women were able to read, write and understand this language. It is full of technical and scientific terms of Arabic origin which cannot be written in Tamil characters. All our religious books are couched in this language"

என்று சஹீட் 'சிலோன் டெய்லி நியூஸ்' பத்திரிகைக்கு 02.12.1963இல் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருந்தமை அவதானத்துக்குரியது. எம். எம். தௌபீக், எம். சமீம் போன்றவர்களெல்லாம் அரபுத் தமிழுக்குச் சாதகமாகக் கருத்துரைத்திருக்கிறார்கள். ஷாபிமரிக்காரின் ஏற்பாட்டில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் 1977 ஒக்டோபரில் நிகழ்ந்த அனைத்துலக இஸ்லாமிய மாநாட்டில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் எம்.பி. நூர்தீனும் அரபுத்தமிழை முஸ்லிம்களின் தாய்மொழியாக்குவது பற்றி கருத்துக்களை முன்வைத்து உரைநிகழ்த்தினார். மூர் (Moors) அல்லது சோனகர் பேசும் இம்மொழியை 'சோனகம்' என்று அழைக்கலாமென்றும் அவர் குறிப்பிட்டார்.

> "Our children in the North and East study in the Tamil Medium, while in other parts of Sri Lanka the medium is mostly Sinhala, the result of which will be to divide us into Sinhala speaking and Tamil speaking Muslims. Sonagam taught throughout the country will be an effective unifying force and the children will grow up in healthy Muslim tradition. This will tend to unify not only the Ceylon moors, but all Muslims in Sri Lanka, including the Malays." (Noordeen M.B., 1983 : 12)

என்று அரபுத் தமிழின் முக்கியத்துவம் பற்றி நூர்தீன் தனது 'A system of Islamic Education for Sri Lankan Muslims' என்ற கட்டுரையில் எழுதிவைத்திருக்கிறார். 'அரபுத் தமிழ் எங்கள் அன்புத்தமிழ்' என்ற கோஷத்தை எ.எம்.எ. அஸீஸும் எழுப்பினார். ஆயினும், அதற்கு தாய்மொழி அந்தஸ்த்தை அவர் வழங்கவில்லை.

18.3 கல்வி மொழி

ஆங்கிலக் கல்வி இந்தியர்களை அவர்களின் சொந்த மண்ணிலேயே அந்நியர்களாக்கி விட்டதாக மனம் வருந்திய காந்தியடிகளின் கல்விக் கொள்கையில் தாய்மொழியே கல்வி மொழியாக வலியுறுத்தப்பட்டது.

> "ஆரம்பக் கல்வியின் அடிப்படைக்குறை ஆங்கில மொழிமூலம் கல்வி பயிற்றப்பட்டதேயாகும். இங்கிலாந்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கிலத்தை விட்டுவிட்டு ஜேர்மன் மொழியில் ஆங்கிலச் சிறாருக்கு ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தால் எப்படியிருக்குமோ அவ்வாறே சிங்கள, தமிழ் மாணவர்க்கு ஆங்கில மூலம் ஆரம்பக் கல்வி அளிப்பது இருக்கும்."

என்று கொழும்பில் அளிக்கப்பட்ட ஆரம்பக்கல்வியிலுள்ள குறைபாடுகள் பற்றி, அன்றைய கல்வி அதிகாரி பரோஸுக்கு, சேர் பொன். அருணாசலம் 1900 ஜூலையில் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வாசகங்கள் மிக்க அர்த்த புஷ்டியுள்ளவை. கல்விமொழி தாய் மொழியில் அமைய வேண்டுமென்பதே இவரின் கொள்கை. குழந்தைகளுக்கு இயல்பான மொழி தாய் மொழி. உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் தெளிவாக வெளியிட அம் மொழியே உதவும். அதன் மூலமே ஆளுமையைச் சிறப்பாக வளர்க்க முடியும். தாய்மொழி சிதையின் பண்பாடும் சிதைவடையு மென்பதால் தாய்மொழியே போதனாமொழியாக இருக்க வேண்டுமென்பதில் உளவியலாளர் ஒத்த கருத்துடையவர்கள்.

அண்டை நாடான இந்தியாவில் மகாத்மா காந்தி கல்வி மொழி தாய்மொழியாதல் வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தார். இரவீந்திரநாத் தாகூரும் கல்வி தாய்மொழியில் அளிக்கப்படுவதையே விரும்பினார். இலங்கையில் 1943இல் ஏற்படுத்தப்பட்ட கல்வி விசேட குழுவும் தொடக்கப் பள்ளிகளில் தாய்மொழியே கல்வி மொழியாக இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. 1945இன் இலவசக் கல்வித் திட்டமும் தாய்மொழிக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்தது. 1966இல் வெளியிடப்பட்ட கல்விச் சுற்றறிக்கை தாய்மொழியே கல்வி மொழி என்று கூறி, சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி என்றும் குறிப்பிட்டு, மாணவரின் போதனா மொழியைப் பெற்றோர் தேர்ந்தெடுக்கலாமென்றும் ஏற்பாடு

செய்தது. தாய்மொழியே கல்வி மொழி என்பது இதனால் மாற்றமுற்றது. 1972இல் அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களிலும் இது நிவர்த்திக்கப் படவில்லை. 1978இன் அரசியலமைப்புச் சட்டம் தாய் மொழியே கல்விமொழி என்று ஏற்பாடு செய்யாமல் தேசிய மொழிகளிலொன்றை, அதாவது, சிங்களத்தை அல்லது தமிழை தம் பிள்ளைகளின் கல்வி மொழியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையை பெற்றோருக்கு அளித்தது. கல்விமொழி தேசிய மொழிகளில் ஒன்று என்ற நிலை இதன் மூலம் ஏற்பட்டது. அதைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றோர் மீது சுமத்தப்பட்டது. அந்த ஏற்பாட்டை ஷாபிமரிக்கார் வரவேற்றார். ஆயினும், அந்த உரிமையைப் பெற்றோர் தவறுதலாகப் பயன்படுத்தி பிழையான முடிவுக்கு வருவதை ஷாபிமரிக்கார் விரும்பியிருப்பார் எனக் கருதமுடியாது. இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தில் வாழும் மலாயர், பாக்கிஸ்தானியர், வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இடம் பெயர்ந்த கோஜாக்கள், போறாக்கள், மேமன்கள் போன்ற பல்வேறு இனக் குழுமத்தினரின் கல்வியிலும், சிங்களப் பிரதேச முஸ்லிம்களின் கல்வியிலும், ஷாபிமரிக்கார் கொண்ட அக்கறையே 1978இன் அரசியலமைப்புச் சட்டத்தின் கல்வி மொழிக் கொள்கையை அவர் வரவேற்றமைக்குக் காரணம் என்று அவரின் கல்வி மொழிக் கொள்கையை நியாயப்படுத்திக் கொள்ளலாம்.

> "தாய்மொழிக்கும் மூளைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. தாய் மொழிக் கல்வியைத் தொடக்கக் கல்வியாகப் பெறுவோரின் சுயசிந்தனை ஊற்றுக்கண் மூளையில் முழுமையாகத் திறக்கப்படுகிறது... புறச் சூழலிலிருந்து ஒலிகளை மக்கள் ஏற்று, பகுத்தறிந்து, உணர்ந்து, புரிந்து கொள்ளும் முறையில் காணப்படும் வேறுபாடு தாய் மொழியால் ஏற்படுகிறது. மூளையிலுள்ள உணர்ச்சி இயக்க அமைப்புடன் மிக நெருங்கியது தாய் மொழி மட்டுமே. ஒவ்வோர் இனப்பிரிவினரிடமும் தனிப்பண்பாட்டு மனப்பான்மை அமைவதற்கும் குழந்தைப் பருவத்தில் பயிலும் தாய்மொழிக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு."

என்பது மூளைக்கும் மொழிக்குமுள்ள தொடர்பை ஆராய்ந்த ஜப்பானிய நரம்பியல் நிபுணர் சுனோடா 1981இல் ஏதென்சில் நடைபெற்ற யுனெஸ்கோ கருத்தரங்கில் வெளியிட்ட ஆய்வுக்கருத்து. 'சுய சிந்தனை வளம்பெற தாய்மொழிக் கல்வி அவசியம்' என்ற தனது கட்டுரையில் மணவை முஸ்தபாவும் இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்.

> "குறைந்தளவு ஆரம்பக் கல்வியாவது ஐந்தாண்டுகள் தாய்மொழியில் பெற்றால் அக்குழந்தையின் மூளையில் சுய சிந்தனை ஊற்றுக்கண் முழுமையாகத் திறக்கப்படும். ஐந்தாண்டு தாய்மொழிக் கல்விக்குப் பிறகு அக்குழந்தை எந்த மொழி கற்றாலும் அதற்கு பாதிப்பேதும் ஏற்படாது. இந்த அடிப்படையிலேயே யுனெஸ்கோ தன் கல்விக் கொள்கையை வகுத்தளித்துள்ளது. அம்முறையே

> உலக முழுமையும் இந்தியாவெங்கணும் தமிழ்நாடு தவிர்த்துள்ள தென்னகம் அனைத்தும் அவரவர் தாய்மொழி மூலமே ஆரம்பக் கல்வி ஐந்தாண்டுகள் கற்பிக்கப்படுகின்றன" (மணவை முஸ்தபா, தினக்குரல் - 16.06.2006: 5)

என்று அக் கட்டுரையில் மணவை முஸ்தபா குறிப்பிட்டிருக்கிறார்.

இலவசக் கல்வியையும் தாய்மொழிக் கல்வியையும் விதந்துரைத்த சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவின் தலைமையிலான கல்வி விசேட குழுவில் (1943) ரி.பி. ஜாயாவும் சேர் றாசிக் பரீதும் அங்கம் வகித்தனர். ஷாபிமரிக்காரின் குரு ரி.பி. ஜாயா தாய் மொழிக் கல்விக்குச் சாதகமானவர்.

> "Our system of education is actually faulty. In the first place the medium of instruction in Ceylon schools is a foreign language and not the vernacular. Secondly in an eastern country like Ceylon we accord a pre – eminent position to western classics and not to our own classics Sanskrit or Arabic. We have simply learnt words and phrases which we never properly understood or grasped. We have had not a process of mental development, we have had simply a process of utter cramming and the result is we are barren of great men and leaders. We are barren of heroes. We are barren of nation builders…
>
> **The first thing in education is that you must always proceed from the known to unknown. At least in the earlier stages of education we must have the vernacular as the basis of instruction and then only English and teach it on the basis of the vernaculars.** When our pupils have understood English, let them when they pursue their higher studies make English the medium of instruction." (Jayah T.B., Ceylon Muslim Review, Feb - 1919)

என்பது ரி.பி. ஜாயாவின் கல்விமொழிக் கொள்கை. ஆரம்பக் கல்வி சுயமொழிகளில் அமைதல் வேண்டும்; மாணவர் ஆங்கிலத்தில் ஆற்றல் பெற்றதும் உயர் கல்வி மொழியாக ஆங்கிலத்தைக் கொள்ளலாம் என்பது அவரின் நிலைப்பாடு.

> "I have always noted with regret whenever I oversee these classes the absence of that natural liveliness, that stir and animation among the children which will doubtless be found in classes where the medium of instruction is the home language and where the children freely converse in their home language" (Jayah T.B., Principal's Report 1928 / 1929)

என்று ஜாயா குறிப்பிட்டு வீட்டு மொழியைக் கல்வி மொழியாகக் கொள்வதிலுள்ள மேன்மையைச் சுட்டிக் காட்டினார். ஷாபிமரிக்காரின் அதிபரும் வழிகாட்டியுமான ரி.பி. ஜாயாவின் கல்வி மொழிக் கொள்கை இது.

"முஸ்லிம்களின் வீட்டு மொழியாகவிருக்கும் தமிழே அவர்களுக்குப் பாடசாலைகளில் போதனா மொழியாக இருக்க வேண்டும்" (அஸீஸ் எ. எம்.எ., தினகரன் வாரமஞ்சரி, 29.06.1958)

என்பது எ.எம்.எ. அஸீஸின் நிலைப்பாடு. சமயம், கலாசாரம், சமூகத்தின் ஒற்றுமை என்பனவற்றை நோக்காகக் கொண்டே முஸ்லிம் சிறாரின் கல்வி மொழியும் முஸ்லிம் பாடசாலைகளின் பாடவிதானமும் அமைய வேண்டு மென்பது அவரின் எண்ணமாகவிருந்தது. தமிழ்ப் பிரதேச முஸ்லிம் அரசியல் வாதிகளும் கல்விமான்களும் அப்பிரதேச முஸ்லிம் மாணவரின் கல்வி மொழியாக தமிழ் இருக்கவேண்டுமென்பதற்குச் சாதகமான கருத்துடையவர்கள்.

கம்பளை ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்த பதியுத்தீன் மஹ்மூத் முஸ்லிம்களின் கல்வி மொழி சிங்களமாகவிருக்க வேண்டுமென்ற கருத்துடையவர். ஆயினும், பிள்ளைகளின் கல்வி மொழியைத் தெரிவு செய்யும் உரிமை பெற்றோருக்கிருக்க வேண்டுமென்பது அவரின் நிலைப்பாடு.

"அரசாங்கம் முன்னர் வாக்குறுதியளித்தது போல் போதனா மொழியைத் தெரிவு செய்வதைப் பெற்றோர்கள் வசம் ஒப்படைக்காமல் தாய்மொழியைப் போதனா மொழியாகக் கொள்ளும் தேசிய அரசாங்கத்தின் உத்தேசத் தீர்மானத்தை இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் பொதுச்சபை வன்மையாகக் கண்டிப்பதோடு போதனா மொழியைத் தெரிவு செய்யும் பொறுப்பு பெற்றோர்கள் வசம் ஒப்படைக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகிறது" (இன்ஸான், 08.12.1967 :7)

என்று பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் நிகழ்ந்த இஸ்லாமிய சோஷ லிஸ முன்னணியின் பொதுச்சபை தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தது.

"தங்கள் குழந்தைகளுக்கு எவ்வகையான கல்வி அளிக்கப்பட வேண்டு மென்பதைத் தேர்ந்தெடுக்கின்ற முன்னுரிமை பெற்றோருக்குண்டு"

என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சாசனத்தின் 26 (3)ஆவது விதிக்கு அமைவாக பதியுத்தீனின் கல்வி மொழிக்கொள்கை அமைந்திருப்பது அவதானத்துக்குரியது.

"இலங்கை முஸ்லிம்களுக்குத் தாய்ப்பாஷையாக சிங்களத்தைக் கற்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். நான் அதிபராகச் சேவை செய்கின்ற கம்பளை ஸாஹிறாக் கல்லூரியிலே ஆரம்பவகுப்புகளிலுள்ள எல்லா முஸ்லிம் பிள்ளை களுக்கும் கட்டாயமாக இரண்டாவது பாஷையாக சிங்களப் பாஷையைக் கற்க வசதி செய்து கொடுத்திருக்கிறேன்" (எங்கள் தலைவர் பதியுத்தீன், 1989 : 332)

என்று கூறியவர் பதியுத்தீன். பிற்காலத்தில் அக்கொள்கையை அவர் தளர்த்தியிருந்தார். முஸ்லிம் பிள்ளைகள் தமிழில் கற்பதை அவர் பிற்காலத்தில் ஆதரித்தார்.

> "ஆரம்ப காலத்தில் (பதியுத்தீன் மஹ்மூத்) சிங்களமே முஸ்லிம்களின் கல்வி மொழியாக இருக்கலாம் எனும் கொள்கையைக் கொண்டிருந்தார். காலக்கிரமத்தில் இதை முற்றாகக் கைவிட்டுத் தமிழ்மொழி மூலமே முஸ்லிம்கள் கல்வி பெற வேண்டும் என வலியுறுத்தினார்." (ஜெமீல் எஸ். எச்.எம்., 1998 : 81)

என்று முஸ்லிம்களின் கல்விமொழி பற்றி பதியுத்தீன் ஆரம்பத்தில் கொண்டிருந்த சிங்களம்சார் கொள்கையை பின்னர் தளர்த்திக் கொண்டதாக எஸ்.எச்.எம். ஜெமீலும் குறிப்பிட்டிருக்கிறார். அரச கரும மொழியாக சிங்களத்தை ஆதரித்த சேர் ராசிக் பரீத் முஸ்லிம் சமூகம் ஆங்கிலத்தைக் கல்வி மொழியாகக் கொள்ள வேண்டுமென்ற கருத்துடையவர்.

முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி மொழி எதுவாக விருக்க வேண்டும் என்பது பற்றி 1963/ 64களில் முஸ்லிம்களிடை அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டபோது அகில இலங்கை முஸ்லிம் லீக் செயற்குழு, மாவட்டங்கள் தோறும் கருத்தரங்குகளை எற்பாடு செய்து முஸ்லிம்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தது. சிங்களத்தில் கற்கவேண்டுமென்பதற்கு அனேக பெற்றோர் ஆதரவு வழங்கியதாகவும் ஆசிரியர்கள் அக்கருத்தை ஏற்கவில்லை என்றும் ஏ.எல்.எம். ஹாஷிம் தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். ஒத்த கருத்தின்மையால் முஸ்லிம் லீக் தனது எண்ணத்தைக் கைவிட்டுவிட்டதாகவும் அக்கட்டுரையில் அவர் தெரிவித்திருந்தார்.

> "In 1963 / 64 Muslim interest in Education was aroused. Debates took place whether the Muslim schools should be made Sinhalese medium schools. Late Hon. Badiudeen Mahmud supported me in this thinking. The Executive Committee of the All Ceylon Muslim League arranged seminars in every District in the Island. Majority of parents Associations supported the proposal, but teachers were opposed to the move. After final count down the Executive Committee droped the idea, as there was no unanimity" (Hashim A.L.M., 2005: 40)

என்று முஸ்லிம் லீக் பிரமுகர், முன்னாள் செனட்டர் ஏ.எல்.எம். ஹாஷிம் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது.

கல்விமொழியாக தமிழை அல்லது சிங்களத்தைத் தெரிவு செய்யும் நிலை இந்நாட்டு மக்களுக்கேற்பட்ட போது கல்வி மொழியாக முஸ்லிம்கள் எம்மொழியைத் தெரிவு செய்வது உசிதமானது, உளவியலுக்கு ஏற்புடையது

என்றெல்லாம் கேள்விகள் முஸ்லிம்களிடை எழுப்பப்பட்டன. வடபுல சைவத் தமிழரோ தென்புல சிங்கள பௌத்தரோ எதிர்நோக்காத, முஸ்லிம்கள் மட்டும் எதிர் நோக்கிய பிரச்சினை இது. இந்நாட்டின் தேசிய மொழிகளல்லாத வேறு மொழிகளைப் பேசும் பல இனக் குழுமங்களை உள்ளடக்கியிருந்த முஸ்லிம் சமூகத்துக்கு மட்டும் உரித்தான பிரச்சினையாக கல்வி மொழிப்பிரச்சினை தோற்றம் பெற்றது. முஸ்லிம் சிறாரின் கல்வி மொழி ஒரு பிரச்சினையாக உருவெடுத்தபோது சமூகம் அதுபற்றி வாதப் பிரதி வாதங்களில் ஈடுபட்டது. இவ்விடயத்தில் முஸ்லிம் சமூகம் பிளவு பட்டு விடுமோ என்ற நிலை கூட ஒரு கட்டத்தில் ஏற்பட்டிருந்தது. சில புத்தி சாதுரியமிக்க முஸ்லிம் தலைவர்கள் இப்பிரச்சினைபற்றிக் கலந்துரை யாடல்களைச் செய்தனரேயொழிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்துக் கொண்டனர். சமூகத்தின் முடிவுக்காக அதை விட்டுவிட்டனர்.

பல மொழிகளைப் பேசும் இனக்குழுமங்களைக் கொண்ட முஸ்லிம் சமூகத்தின் நிலையையும் அவர்களின் நாடெங்கும் சிதறிவாழும் தன்மையையும் கருத்திற் கொண்டுதான் போலும் முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி மொழி பெற்றோர் விரும்பும் மொழியாக, தமிழ் அல்லது சிங்களமாக அமையலாம் என்று ஷாபிமரிக்கார் கருதினார். தமிழ்ப் பிரதேச முஸ்லிம் பிள்ளைகள் தமிழைக் கல்வி மொழியாகக் கொள்வதை ஷாபிமரிக்கார் ஏற்றிருந்தார். ஆனால் சிங்களப் பிரதேச முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி மொழி பற்றிய பிரச்சினையில்தான் ஷாபிமரிக்கார் சிங்கள சார்பு நிலைப்பாட்டில் இருந்தார். பிள்ளைகளின் கல்வி மொழியைத் தெரிவு செய்யும் உரிமை பெற்றோருக்கிருக்க வேண்டுமென அவர் வாதிட்டார்.

எச்.எஸ். இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்திலும் அதன் முதலாவது பொதுக்கூட்டத்திலும் முஸ்லிம் மாணவரின் கல்வி மொழி பற்றிக் கலந்துரையாடப்பட்டதாயினும் இஸ்மாயிலின் வேண்டுகோளின் பேரில் மாநாடு அது சம்பந்தமாக எத்தீர்மானத்தையும் எடுக்கவில்லை. அவ்வாறானதொரு தீர்மானம் சமூகத்தைப் பிளவுபடுத்திவிடும் என அவர் கருதினார். சுயாதீன அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு தோற்றம் பெறுவதற்கே முக்கிய காரணமாக அமைந்த முஸ்லிம் மாணவரின் கல்வி மொழி பற்றி அம்மாநாடு எத்தீர்மானத்தையும் எடுக்காமல் கவனமாகச் செயற்பட்டமை அவதானத்துக்குரியது .

பொதுக்கல்வி, தொழில்நுட்பக் கல்விச் சீர்திருத்தத்துக்கான முன்மொழிவுகள் (வெள்ளை அறிக்கை) 1966இல் வெளியிடப்பட்டபோதும் 1967 நவம்பரில் அது மசோதாவாக பாராளுமன்றத்துக்குக் கொணரப்பட்ட

போதும் முஸ்லிம் சமூகம் வாதப்பிரதிவாதங்களிலீடுபட்டது. கல்வி மொழி தாய் மொழியாக இருக்க வேண்டுமென்ற ஷரத்து அதில் அடங்கியிருந்தமையே இதற்குப் பிரதான காரணமாகவிருந்தது. அ.இ.மு.க. மாநாட்டுச் செயற்குழு 03.11.1966இல் கூடி இது பற்றி ஆராய்ந்து எடுத்த தீர்மானங்கள் 03.12.1966இல் நிகழ்ந்த ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் ஏற்கப்பட்டது. மாநாடு 09.12.1966இல் நடாத்திய அவசரக் கூட்டத்தில் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், எம்.எப். எம். பாக்கீர், ரி.ஏ. ஜாயா ஆகியோரடங்கிய உபகுழுவொன்று ஏற்படுத்தப்பட்டு அவர்களின் யோசனைகள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், சனெட்டர்களுக்கெல்லாம் அனுப்பி வைக்கப்பட்டன.

> "பெற்றோர் விரும்பிய மொழியில் தம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென முஸ்லிம்களாகிய நாம் ஆரம்பம் முதல் கிளர்ச்சி செய்து வந்துள்ளோம். தாய்ப்பாஷையென்பது சிங்களமோ தமிழோ மட்டுமல்ல; அது முஸ்லிம்கள் வீடுகளில் பேசும் வேறோர் மொழியாகவும் இருக்கலாம். இது இப்படியிருக்க தாய்ப்பாஷையாகிய சிங்களத்தில் அல்லது தமிழில் மட்டுமே கல்வி பெறலாம் என்று கல்வி அமைச்சர் தனது புதிய கல்வி மசோதாவில் குறிப்பிட்டிருப்பதை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை.
>
> போதனா மொழியும் தாய் மொழியும் வெவ்வேறு தன்மைகள் பொருந்தியவை. ஒன்றோடு மற்றொன்று இணைய முடியாது. எனவே, சிங்களத்தை அல்லது தமிழை போதனா மொழியாகத் தெரிந்தெடுக்க முஸ்லிம் பெற்றோருக்கு உரிமை வழங்கப்பட வெண்டுமென்பதே எமது மகாநாட்டின் கோரிக்கையாகும். அத்துடன், இந்நாட்டு முஸ்லிம்களில் அநேகர் தமது பிள்ளைகளின் போதனா மொழியாக சிங்களத்தைத் தெரிந்தெடுக்க விரும்புகின்றனர். இவர்களுக்கு சகல வசதிகளையும் அரசாங்கம் செய்து தரவேண்டும்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 25.11.1967 : 1,4)

என்று ஷாபிமரிக்கார் அரசாங்கத்தைக் கோரினார். இவ்வுரையில் காணப்படும் சில கருத்துக்கள் விமரிசனத்துக்குரியவை. அவற்றை சமூகத்தின் கவனத்திற்கு விட்டுவிடுகிறேன். எச்.எஸ். இஸ்மாயில் அன்று செய்ததை நான் இன்று செய்திருக்கிறேன்.

தாய்மொழியே போதனா மொழியாக இருக்குமென்ற ஏற்பாடு இம் மசோதாவில் (1967) இடம்பெற்றதால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் களும் சனெட்டர்களும் பாராளுமன்றத்தில் ஒன்று கூடி தாய்மொழியே போதனாமொழி என்றில்லாமல் பெற்றோர் விரும்பும் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். (தினபதி, 02.12.1967)

"தாய்மொழியே போதனா மொழியாக இருக்கும் என மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஷரத்து பிரதமர் டட்லி சேனநாயக்கா சில காலத்துக்கு முன்பு சேர் றாசிக் பரீதுக்கு அளித்த வாக்குறுதிக்கு நேர் விரோதமானது. இந்த ஷரத்து திரு. ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்லை அவரைச் சந்தித்த தூதுக்கோஷ்டிக்கு அளித்த வாக்குறுதிக்கு எதிரானது. அரசாங்கத்தின் இந்தத் துரோகச் செயலை அனைவரும் எதிர்க்க முன்வரவேண்டும்... எமது பிள்ளைகளில் 95 வீதத்தினர் இன்று உத்தியோக மொழியில்தான் கற்கின்றனர். இந்த மசோதா அமுலுக்கு வருமாயின் அன்றுதொட்டு இன்றுவரை உத்தியோக மொழியில் கல்வி பயிலும் எம்மின முஸ்லிம் பிள்ளைகள் நாளைக்கு தமிழ் மொழியில் கல்வி கற்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலை உருவாகும்... முஸ்லிம் பிள்ளைகள் உத்தியோக மொழியில் கல்வி கற்கும் சந்தர்ப்பம் அளிக்கும் விதமாக அரசாங்கம் மசோதாவை மாற்றியமைக்க வேண்டும்" (பதியுத்தீன் மஹ்மூத், தினபதி - 03.12.1967: 1)

என்று முன்னாள் கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் மசோதாவுக்கெதிராக கண்டனக் குரல் எழுப்பினார். கல்வி அமைச்சரைச் சந்தித்த தூதுக்குழு என்று பதியுத்தீன் குறிப்பிட்டுச் சொன்னது, டாக்டர் எம்.ஸி.எம். கலீலின் தலைமையில் 05.06.1965இல் கல்வி அமைச்சரைச் சந்தித்த அ.இ.மு.க. மாநாட்டுத் தூதுக் குழுவினரையே குறித்தது. அ.இ.மு.க. மாநாட்டின் நிருவாகசபைத் தலைவர் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், எம்.எச்.எம். நெய்னா மரைக்கார், பழீல் ஏ. கபூர், பாக்கீர் மாக்கார், எம்.எஸ். காரியப்பர், ஏ. லத்தீப் சின்னலெப்பை உள்ளிட்ட 42 பேர் அன்று அமைச்சரைச் சந்தித்து 2½ மணித்தியாலங்கள் முஸ்லிம் கல்வி பற்றிக் கலந்துரையாடினர். முஸ்லிம் கல்வி வசதிகளில் ஏதாவது மாற்றங்கள் செய்வதாயின் அ.இ.மு.க. மாநாட்டின் ஆலோசனைகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்வதாகவும் அமைச்சர் அன்று இணக்கம் தெரிவித்திருந்தார். அது மீறப்பட்டதாகவே பதியுத்தீன் மஹ்மூத் குற்றம் சாட்டினார்.

18.4 ஸாஹிறாவில் கல்வி மொழியும் மொழிப் போதனையும்

மலையகம் தந்த ஜாவாவின் காலத்தில் ஆங்கில மொழிப் பாடசாலையாக விருந்த ஸாஹிறாவில் யாழ்ப்பாணத்தவரான அஸீஸ் அதிபராகவிருந்த போது ஆங்கில மொழி வகுப்புகளுடன் தமிழ் மொழிமூல வகுப்புகளும் இயங்கின. தென்னிலங்கையில் பிறந்த ஷாபிமரிக்காரின் காலத்தில் ஆங்கிலம், தமிழ் மொழி வகுப்புகளுடன் சிங்கள மொழி வகுப்புகளும் சமாந்தரமாக இயக்கம் பெற்றன.

தனது மொழிக்கொள்கையை திடசித்தத்துடன் கொழும்பு ஸாஹிறாவில் செயற்படுத்தினார் ஷாபி. ஷாபிமரிக்கார் ஸாஹிறாக் கல்லூரியைப்

பொறுப்பேற்றபோது ஆங்கில, தமிழ் மொழிமூல வகுப்புகளே ஸாஹிறாவில் இருந்தன. 1967 ஜனவரியிலிருந்து இவற்றுக்குச் சமாந்தரமான சிங்கள மொழிமூல வகுப்புகளை முதல்தடவையாக ஷாபி அறிமுகப்படுத்தினார். 1967 ஜனவரியில் சிங்கள மொழிமூல வகுப்புகள் 6ஆம் 7ஆம் வகுப்புகளில் ஆரம்பிக்கப்பட்டன. 1968இல் 1,6,7, 8ஆம் வகுப்புகளிலும், 1969இல் 1,2,6,7,8,9ஆம் வகுப்புகளிலும் இவ்வாறு சிங்கள மொழி மூல வகுப்புகள் வருடாந்தம் விஸ்தாரமடைந்தன. 9ஆம் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிங்களம் கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டதுடன் உயர்தர மாணவர்களுக்குப் பயிற்சிச் சிங்களமும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழை இரண்டாவது மொழியாகக் கற்கும் ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கும் பயிற்சிச் சிங்களம் கற்பிக்க ஷாபிமரிக்கார் காலத்தில் ஸாஹிறாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் மூலம் அரசகரும மொழிப்போதனையும் அதன் உரிய இடத்தை ஸாஹிறாவில் பெற்றுக் கொண்டது.

கொழும்பு ஸாஹிறாவை ஷாபிமரிக்கார் பொறுப்பேற்ற 1967 காலப்பகுதியில் அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கேற்ப ஆங்கில மொழிமூல வகுப்புகள் படிப்படியாக இல்லாமற் செய்யப்பட்டபோது. ஏற்கனவே இருந்த தமிழ் மொழிமூல வகுப்புகள் தொடர, இல்லாமற் போய்க்கொண்டிருந்த ஆங்கில மொழிமூல வகுப்புகளுக்குப் பகரமாக சிங்கள மொழிமூல வகுப்புகளை ஷாபிமரிக்கார் ஆரம்பித்தார். சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாத முஸ்லிம் சமூகம் சிங்கள மொழியை நோக்கி நகர்த்தப்பட்டது. ஏற்கனவே கம்பளை ஸாஹிறாவிலும் அதன் அதிபர் பதியுத்தீன் மஹ்மூத் சிங்கள மொழிமூல வகுப்புகளை ஆரம்பித் திருந்தார். முஸ்லிம் சமூகத்தின் மீதான இதன் தாக்கம் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பது ஒருபுறமிருக்க, சிங்கள மொழிமூல வகுப்புகள் கொழும்பு ஸாஹிறாவில் ஆரம்பிக்கப்பட்டது ஷாபிமரிக்காரின் காலத்திலேயே என்பதும் அறிதற்குரியது. அதேவேளை தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு சிங்களமும் சிங்கள மொழிமூல மாணவர்களுக்குத் தமிழும் கற்பிக்கவும் ஷாபிமரிக்காரின் காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

> "We have three streams in the media of instruction. English & Tamil in Grade 1 and in 6 to 12 and now for the first time in the History of the school we have introduced a Sinhala stream in grades 1,6,7, & 8 ; next year we hope to start grade 9 Sinhala Arts & Science classes. Sinhala is also taught as a compulsory language in grads 9 & 10 now, and practical Sinhala in the Advanced Level classes. English Medium students, who have Tamil as their 2nd language, are taught compulsory Sinhala regularly and systematically. So, every endeavor is being made to give the official language its proper place in the curriculum of our school" (Principal's Prize Day Report - 05.08.1968 : 4)

என்று ஸாஹிறாக் கல்லூரியில் ஷாபிமரிக்கார் அமுல் நடத்தத் தொடங்கிய மொழிக் கொள்கையை 05.08.1968இல் பிரதமர் டட்லி சேனநாயக்க முன்னிலையில் அவர் ஆற்றிய, மீளவும் தனியார் பாடசாலையான ஸாஹிறாக் கல்லூரியின் முதலாவது பரிசளிப்பு விழா உரையில் குறிப்பிட்டுச் சொன்னார்.

> "Every endeavour is being made to give official language its proper place in the school curriculum. Sinhala is a compulsory subject in the English and Tamil medium classes" (Principal's prize day report, 08.08.1969 : 4)

என்று இராஜாங்க அமைச்சராகவிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் நிகழ்த்திய 2ஆவது பரிசளிப்பு விழா உரையிலும் ஸாஹிறாவில் தான் அமுல்நடத்திய மொழிக் கொள்கையை ஷாபிமரிக்கார் மீண்டும் பிரஸ்தாபித்தார்.

> "We are grateful to the Sinhalese community for more than one reason… I represent the Beruwala electorate. Although Beruwala may appear to be a Muslim area, it is really not so. Muslims form only 21 percent of the population. The rest are members of the Sinhalese community. My leader nominated me for that electorate, and although another Muslim candidate also contested, thus dividing the Muslim vote, I was returned with an overwhelming majority by the Sinhalese voters…" (Parliamentary Hansard – 22.04.1960)

என்று 22.04.1960இலும்,

> "Muslims were given two more training colleges at Galle and Kandy. The Sirimavo Bandaranayake Government opened the Kandy Muslim Training College and confined it to the training of Muslim teachers in the Sinhala medium. Muslims particularly those living in Sinhalese areas are anxious to have their education in the Sinhala medium. We ask the minister to please allow us to have our teachers trained in Sinhalese in order that they may teach in the Sinhala medium" (Parliamentary Hansard - 16.09.1965)

என்று 16.09.1965இலும், பாக்கீர் மாக்கார் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் நிழலில் ஷாபிமரிக்காரின் மொழிக் கொள்கையை நான் காண்கிறேன். ஏனெனில், பாக்கீரின் கல்வி சம்பந்தப்பட்ட உரைகளில் ஷாபியின் சிந்தனை ஓட்டமிருக்கும்.

> "இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழுமாதல் வேண்டும்" (அரசியலமைப்புச் சட்டம், 1978 iv:19) "ஆள் ஒருவர் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயின், தேசிய மொழியல்லாத ஒரு மொழியைக் கல்வி மொழியாகக் கொண்டிருக்கின்ற ஓர் உயர் கல்வி நிறுவனத்துக்கு இவ்வேற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது" (அரசியலமைப்புச் சட்டம், 1978 iv:21)

என்பன போன்ற 1978ஆம் ஆண்டைய அரசியல் யாப்பு ஏற்பாடுகள் ஷாபிமரிக்காரின் கல்வி மொழிக்கொள்கைக்கு உரம் சேர்ப்பனவாக அமைந்தன.

> "இன்று பிரகடனம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் காலத்திற்குப் பொருத்தமானதும் நாட்டுக்குத் தேவையானதும்" (தினகரன், 11.09.1978),
>
> "எமது நாட்டில் சென்ற 7ஆம் திகதி பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது. அந்த மாற்றத்தின் மூலம் ஒவ்வொரு பிரஜையும் பூரண சுதந்திரம் பெற்றவர்களாக, எல்லா உரிமைகளும் பெற்றவர்களாக விளங்குகிறார்கள். புதிய அரசிய லமைப்புச் சட்டத்தினை நாம் வரவேற்கின்றோம்" (ஷாபிமரிக்கார் எஸ்.எல். எம்., தினகரன், 11.09.1978)

என்றெல்லாம் புகழ்ந்துரைத்து 1978ஆம் ஆண்டைய அரசியலமைப்புச் சட்டத்தை வரவேற்றார் ஷாபிமரிக்கார். கொழும்பு ஸாஹிறாவில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து 07.09.1978இல் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த விசேட கூட்டத்திலேயே ஷாபிமரிக்கார் இவ்வாறு தெரிவித்திருந்தார். முஸ்லிம் பாடசாலைகளில் மொழிகள் கற்பித்தல் பற்றி கருத்தரங்கொன்றும் அ.இ.மு.க. மாநாட்டின் ஏற்பாட்டில் 22.01.1990இல் நடைபெற்றது. தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளில் தொடர்பு மொழியாக (Link Language) சிங்கள மொழி கற்பிக்கப்படுவதை நீக்கிவிடும் சுற்றுநிருபம் கல்வி அமைச்சினால் 18.02.1981இல் வெளியிடப்பட்டபோது அதை ஷாபியின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு எதிர்த்தது.

> "The prevalent situation was that a large majority of Sinhala schools did not teach Islam to Muslim students as a result, our Muslim children were deprived of learning their religion in schools. A future generation of Muslim children would thus be denied a proper knowledge of their religion. This would be a tremendous blow to the Muslim community. But if a Sinhala stream would be started in every Muslim – Tamil medium school, the necessity to gain entrance to Sinhalese schools could be minimized. In such situation, the Muslim children could study in Sinhala in an Islamic environment. While studying Sinhala medium the children would also at the same time be afforded an opportunity to learn religion. It was a dual purpose solution" (Shafie Marikar, S.L.M., 2005: 52)

என்று சமயப் பின்னணியில் சிங்கள மொழிமூலம் கற்பதற்கு ஏற்புடையதாக சகல தமிழ்மூல முஸ்லிம் பாடசாலைகளிலும் சிங்கள மொழிமூலக் கற்கை நெறிகளை ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்தையும் ஷாபிமரிக்கார் முன்மொழிந்தார். அதன் மூலம் சிங்களப் பாடசாலைகளில் அனுமதி கோரும் முஸ்லிம் மாணவர் தொகை குறைவதுடன் சமய, கலாசாரப்

பின்னணியில் சிங்கள மொழிமூலம் அவர்கள் கற்கவும் முடியும் என்றும் ஷாபிமரிக்கார் கருதினார். அதனாற்றான் தான் அதிபராகவிருந்த கொழும்பு ஸாஹிறாவிலும் அதற்கு முன்னர் அவர் அதிபராகவிருந்த அளுத்கம ஸாஹிறாவிலும் சிங்கள மொழிமூல வகுப்புகளை ஆரம்பிப்பதில் அவர் அக்கறை காட்டினார்.

நாட்டின் கல்விமொழிக் கொள்கையில் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்ட போதெல்லாம் ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கிய அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு முஸ்லிம் சமூகத்தைக் கவனமாக வழிநடத்தியது. சிங்கள மொழியின் முக்கியத்துவத்தை முஸ்லிம் சமூகமும் உணரச் செய்தது. சிங்களப் பிரதேசங்களில் சிதறி வாழும் முஸ்லிம்களின் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகளிலும் மாநாடு கவனம் செலுத்தியது. சிங்கள மொழியில் முஸ்லிம் ஆசிரியர்களைப் பயிற்றுதல், முஸ்லிம் மாணவர்களுக்கேற்ற பாடநூல்கள், சமய நூல்கள், பொது நூல்களை சிங்கள மொழியில் வெளியிடுதல் பற்றியெல்லாம் மாநாடு கரிசனை காட்டியது. எதிர்பார்த்த வெற்றியைத் தராதுபோன கொத்தணிப்பாடசாலை முறைமை 1983இல் அறிமுகப்படுத்தப்பட்ட போது, சிங்களப் பிரதேச தமிழ் மொழிமூல முஸ்லிம் பாடசாலைகளின் நிலைமை பற்றியும், தமிழ்ப் பிரதேச முஸ்லிம் பாடசாலைகள் பற்றியும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு கவனம் செலுத்தி ஆராய்ந்து அரசாங்கத்துக்கு அடிக்கடி ஆலோசனைகளைக் கூறியது. அந்த வகையில் ஷாபியினதும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டினதும் மொழிக்கொள்கை நெகிழ்வுப் போக்குடையதாக, முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை மட்டும் கருத்திற் கொள்ளாது, சிங்களப் பிரதேசங்களில் சிதறிவாழும் முஸ்லிம்களையும், பல்வேறுபட்ட முஸ்லிம் இனக்குழுமங்களையும் கவனத்திலிருத்தி ஏற்படுத்திக் கொண்டதாக அமைந்திருந்தது.

> "Traditionally the mother tongue or the 'home tongue' of the Muslims was Tamil regardless of whether they resided in the Northern Province or in the Southern Province. After the 1956 Sinhala only bill, the Muslims resident in the South and Predominantly Sinhala speaking areas adopted Sinhala language as the home tongue. In effect therefore, today for example in the Kurunagala district most of the Muslims use the Sinhala language as the home tongue. In several mosques in the Southern parts of Sri Lanka even the Friday sermon at the Jummah Mosque is delivered in Sinhala.
>
> Historically, almost all Muslims have had the advantage of being very fluent in one language, either in Sinhala or Tamil and the ability to converse at least in a limited manner in the other language.

> The Muslim children living in the Sinhala areas follow their education predominantly in the Sinhala language, and the Muslim students in the Northern and Eastern Provinces have their education in the Tamil medium. That is the scenario today." (Furkan M.T.A., The Zahirian, July 1997 : 1)

என்று 1997களில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவிருந்த எம்.ரி.ஏ. புர்கான் 'The Zahirian' செய்திமடலில் அதிபரின் செய்தியாக எழுதியிருக்கிறார். அஸீஸ் கால ஸாஹிறாக் கல்லூரி மாணவனான புர்கான் மொழிக் கொள்கையில் அஸீஸின் கருத்துக்கு முரணான கருத்தை வெளிப்படுத்தியிருப்பது அவதானத்துக்குரியது. ஷாபிமரிக்காரின் கருத்துக்கு உரம் சேர்ப்பதாக இக்கருத்து அமைந்திருப்பதும் கவனத்துக்குரியது. ஷாபிமரிக்காரைப் போல தென்னிலங்கையைப் (பலப்பட்டிய) பிறப்பிடமாகக் கொண்ட புர்கான் சர்ச்சைக்குரிய இன்னொரு கருத்தையும் கூறியிருக்கிறார்.

> "All the educated and affluent Muslims who are in high positions in Education, Industry, Commerce, Business and Politics use English as their home language. It is therefore obvious that for a Muslim child who is educated either in Sinhala or Tamil in the school, the home language should be the third language which is English. Muslim parents who are able to converse in English should speak to their children in English at home. That's the way to prepare for the future." (Furkan M.T.A., The Zahirian, July 1997:2)

என்பதே அக்கருத்து. முஸ்லிம்களின் கல்வி மொழி சிங்களம் அல்லது தமிழாக அமையினும் அவர்களின் வீட்டு மொழி ஆங்கிலமாக அமையக்கூடிய வகையில் எதிர்காலத்தை முஸ்லிம்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற புர்கானின் கருத்து அதே The Zahirian, July 1997 செய்தி மடலில் அதிபர் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களின் தாய்மொழி, கல்விமொழி பற்றியெல்லாம் தெரிவிக்கப்படும் பல்வேறு கருத்துக்களில் ஒன்றாக புர்கானின் இக்கருத்தும் இணைந்து கொள்கிறது. ஷாபிமரிக்காரின் மொழிக்கொள்கை பற்றி நோக்குகையில் அதே ஸாஹிறாவின் இன்னுமொரு அதிபர் இப்படியும் கூறியிருக்கிறார் என்பதையும் தெரிந்து கொள்வது ஆய்வாளருக்கு மிக்க பயனுள்ள செய்தியாக அமையும். முஸ்லிம்களின் தாய்மொழி, கல்விமொழிபற்றிய முரண்பாடான கருத்துக்களைக் கொண்ட ஸாஹிறாக் கல்லூரி அதிபர்களின் மொழிக் கொள்கைகளினால் முஸ்லிம்களின் கல்வி எம்மட்டு பயன்பெற்றிருக்கின்றது, எந்த அளவுக்கு பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது என்பதை சமூகத்தின் எதிர்கால ஆய்வுக்கும் தீர்வுக்குமாக விட்டுவிடுகிறேன். இலங்கை முஸ்லிம் சமூகம் தனது தாய்மொழி (வீட்டுமொழி), கல்விமொழி பற்றி தீர்க்கமான எம்முடிவையும் இதுவரை எடுக்கவில்லை என்பதும் கவனத்திற்குரியது.

19

தேசிய கல்விப் பணி

ஷாபிமரிக்கார் இந்நாட்டின் கல்விக்குப் பெரும்பணி ஆற்றியவர். அவரின் கல்வி மேதைமையை பல அரச ஆலோசனைச் சபைகளும் நிறுவனங்களும் பெற்றுப் பயனடைந்தன. களுத்தறை மாவட்ட ஆசிரியர் சங்கத் தலைவர் (1950/52), இலங்கைத் தலைமை ஆசிரியர்கள், தலைமை ஆசிரியைகள் மாநாட்டின் செயலாளர் /பொருளாளர் (1967-1982), கல்வி வெளியீட்டு ஆலோசனைச் சபை உறுப்பினர் (1967-70), கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி ஆலோசனைச் சபை அங்கத்தவர் (1979), இலங்கைப் பாடசாலைகளின் சமயக்கல்வி பற்றிய விசேட குழுவின் அங்கத்தவர் (1980/81), பல்கலைக்கழக அனுமதி மீளாய்வுக்குழு அங்கத்தவர் (1983/84), பேராதனைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு அங்கத்தவர் (1966/70), தயரட்ண ஆசிரியர் சம்பள மீளாய்வுக்குழு உறுப்பினர் (1982/83), போகொட பிரேமரட்ண கல்விச் சீர்திருத்தக் குழு அங்கத்தவர் (1978/79), இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் (1980 - மார்ச் 1990), பொதுநலவாய ஆங்கிலம் பேசுவோர் சங்க இலங்கைக் கிளைச் செயற்குழு உறுப்பினர் (1981இலிருந்து), பாரம்பரியக் கற்கைகளுக்கான தேசிய நிறுவகத்தின் (NITS) ஆளுநர் சபை உறுப்பினர் (17.10.1981இலிருந்து), கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் விசேட உத்தியோகத்தர் (ஆங்கிலம்) (01.06.1982-30.06.1986), தேசிய கல்வி நிறுவக (NIE) ஆட்சிக் குழு உறுப்பினர் (01.07.1989இலிருந்து) போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்விசார் பதவிகளை வகித்து இந்நாட்டின் தேசியக் கல்விக்கு அளப்பெரும் பணிசெய்தவர் ஷாபிமரிக்கார்.

உயர் கல்விக்கான தேசிய சபையை ஏற்படுத்துவது சம்பந்தமான உயர்கல்வி மசோதா மீது நிலையியற் சபையின் (Standing Committee) முன் 04.07.1966இல் ஷாபிமரிக்கார் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்குழு வாக்குமூலமளித்தது.

எல்.பி.டி. சில்வா தலைமையிலான, சம்பளம் மற்றும் நிரந்தர பதவிகள் ஆணைக்குழு முன்னிலையிலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சம்பளத்திட்டத்தின் குறைபாடுகளையிட்டு 16.04.1975இல் அ.இ.மு.க. மாநாடு எடுத்துரைத்தது.

எச்.என்.எஸ்.ஈ. பரீட்சைக்கு 'சோஷலிச தத்துவம்' என்ற பாடத்திற்குப் பதிலாக சமய பாடத்தைக் கற்பிக்கும்படி கல்வி அமைச்சரைக்கோரும் தீர்மானமொன்றை அ.இ.மு.க. மாநாடு 22.11.1975இல் நிறைவேற்றியிருந்தது. பாடத்திட்டத்திலிருந்து அப்பாடத்தை அகற்றிவிடுவதற்கு அப்போதைய கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன 13.08.1977இல் அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1977களில் அமுலிலிருந்த கல்வித் திட்டம் பற்றி ஷாபிமரிக்கார் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

> "Unfortunately, the new scheme of Education appears to have been hastily conceived and implemented without adequate forethought and preparation. As a result the high expectations with which the scheme was inaugurated, failed to be fulfilled. Some of its chief defects were a heavily over - loaded curriculum and unwieldy syllabuses which it was not possible to cover during the prescribed period. The child was subjected to a severe strain and the average teacher was called upon to play a role for which he was ill - prepared. Inadequacy of text books and the delay in providing course and guides led to uncertainty and confusion in the minds of teachers and pupils.
>
> The gap between the syllabuses of the NCGE and HNCE examinations is also too wide to be bridged early, so that the pupil was placed under a severe handicap in the early stages of the HNCE course. Another unsatisfactory feature of the scheme has been the uncertainty and vagueness regarding the subjects to be included in the HNCE course, a noteworthy example being the controversial introduction of 'socialism' without a clear definition of its scope and content. A major defect of the new scheme is that the NCGE is not designed to lead up to higher studies and success at the HNCE does not qualify a student for admission to the University. The examinations have not received international recognition and the pupils following these courses have an uncertain future unless remedial action is taken early. In this respect there are grounds for parental anxiety and concern."

என்று கொழும்பு ஸாஹிறாவின் பரிசளிப்பு விழா 11.10.1977இல் நிகழ்ந்த போது ஆற்றிய உரையில், அப்போது நடைமுறையிலிருந்த கல்வித் திட்டத்தை, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அன்றையப் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் முன்னிலையில் விமரிசனம் செய்தார்.

கல்விச் சீர்திருத்தத்துக்கான போகொட பிரேமரத்ன ஆலோசனைக் குழுவில் (1978/79) பின்வருவோர் இடம்பெற்றனர்: போகொட பிரேமரத்ன (தலைவர்), வண. தெவமொட்டாவ அமரவன்ஸ மகாதேரோ, வண. பிதா பீட். பர்ணாந்து, திரு. கெனத் எம்.டி. லனரோல், பேராசிரியர் எல்.ஜி. ஹேவகே, ஈ.எல். விஜேமான, எல். ஏலியன் பர்ணாந்து, எச்.பி. ஜயவர்த்தன, எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார், கலாநிதி கே.டி.பி. விக்கிரமசிங்க, எம்.ஏ.எம். அப்துல் ஹஸன், கலாநிதி டபிள்யூ. விமலாநந்த தென்னக்கோன், எஸ்.யூ. சோமசேகரம், கே. லஷ்மண ஐயர், கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, கே. சச்சிதானந்தா, திருமதி லக்ஷ்மி டி.எஸ். விஜயரத்ன (செயலாளர்).

என்.ஸி.ஜீ.ஈ.க்குப் பதில் ஜீ.ஸீ.ஈ. (சா.த.), எச்.என்.ஸி.ஈ.க்குப் பதில் ஜீ.ஸீ.ஈ. (உ.த.) மீண்டும் அறிமுகம், தொழில் முன்னிலைப் பாடங்களுக்குப் (Pre-vocational subjects) பதில் தொழிற் பாடங்களின் (Technical Subjects) அறிமுகம், சுகாதாரக் கல்வி அறிமுகம், சமயக் கல்விக்குக் கூடிய முக்கியத்துவம், தமிழ் மொழி மூல மாணவருக்கு சிங்களமும், சிங்கள மொழி மூல மாணவருக்கு தமிழும் இணைப்பு மொழி (Link Language) யாதல், ஆங்கிலத்தை சர்வதேச மொழியாக 3ஆம் வகுப்பிலிருந்து பாடசாலைகளில் கற்பிக்க ஏற்பாடு, ஒழுக்கக் கட்டுப்பாடின்மையை (indiscipline) பாடசாலைகளில் அறவே ஒழித்தல் போன்ற பல நல்ல சிபாரிசுகளை போகொட பிரேமரத்தின குழு செய்தது.

இக்குழுவே பாடசாலைக்கு மாணவர் அனுமதிக்கப்படும் வயதை ஐந்தாக்கியது. கல்வி முன்னேற்றத்துக்கு சமூகத்தின் சம்பந்தம் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதில் இக்குழு கூடிய அக்கறை காட்டியது. பெற்றார் - ஆசிரியர் சங்கம், பழைய மாணவர்சங்கம், நலன்புரிச் சங்கங்களின் பாடசாலைகளுடனான சம்பந்தம் இதனால் அதிகரித்தது. பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுக்கு இச்சம்பந்தம் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கிறது. எனவேதான் ஷாபிமரிக்கார் அக்குழுவின் சிபாரிசுகளை அமுல் நடத்துமாறு அடிக்கடி வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

> "We welcome the appointment by the Hon. Minister of Education of an Educational reforms committee, under chairmanship of Mr. Bogoda Premaratne, to examine the prevailing educational system and to make recommendations with a view to improving the standard of Education in the country" (Shafie Marikar, The Crescent - July 1978 : 2)

என்று 'Educational Reforms - Transitional Arrangement' என்ற தலைப்பில் 'The Crescent - July 1978' இதழுக்கெழுதிய கட்டுரையில் ஷாபிமரிக்கார் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். இக்குழுவின் உறுப்பினர் என்ற வகையில்

போகொட பிரேமரத்ன குழுவின் சிபாரிசுகளில் ஷாபிமரிக்காரின் சிந்தனையும் இழையோடியது.

கல்விச் சீர்திருத்தம் சம்பந்தமாக பாடசாலைகளில் இடம்பெறும் சமயக்கல்வியின் அம்சங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென ஒரு குழுவும், தொழில் நுட்பக் கல்விக்கென 1979இல் இன்னொரு குழுவும், தேசிய தொழில் பயிலுநர் பயிற்சிக்கென மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டு அக்குழுக்களின் ஆலோசனைகளும் போகொட பிரேமரத்ன கல்விச் சீர்திருத்தக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாறு நியமிக்கப்பட்ட சமயக் குழுவிலும் ஷாபிமரிக்கார் நியமிக்கப்பட்டிருந்தார்.

சமயக் கல்விக்கான விசேட குழு (1980/81) ஈ.எல். விஜயமான தலைமையில், தலல்ல தம்மானந்த தேரோ, வண. தந்தை றபோல் அலோசியஸ், வண. தந்தை கே.எம்.ஜே. பெர்னாண்டோ, பேராசிரியர் ஆ. சதாசிவம், பேராசிரியர் எல்.ஜி. ஹேவகே, திருமதி ஏ. குணவர்த்தன, திருமதி ஏ.ஜே. வைத்தியரட்ண, திருமதி கே.டி. சொய்ஸா, எஸ். அத்துகோறளை, எம்.ஏ.டி. சில்வா, கே. லக்ஷ்மண ஐயர் ஆகிய பதின்மூவர் கொண்டு அமைக்கப்பட்டது. அக்குழுவில் முஸ்லிம் சமூகத்தை எஸ்.எல்.எம். ஷாபிமரிக்கார் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

1. சமயங்களுக்கும் பிள்ளைகளின் ஆன்மிகவிருத்திக்கும் ஊக்கமளிக்கும் சூழலைப் பாடசாலைகளில் ஏற்படுத்துதல்
2. இளைஞரின் சமூகப் பொறுப்பையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்துதல்
3. சமய சமரசத்தையும் தேசிய ஐக்கியத்தையும் முன்னேற்றும் அதே வேளை சமய கலாசார பாரம்பரியத்தையும் போதித்தல்.

என்ற மூன்று விடயங்களை வழிகாட்டுதல்களாகக் கொண்டு இக்குழு தனது சிபாரிசுகளை முன்வைத்தது.

தேவையில்லாமல் கல்வித்துறையில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுவதைக் கண்டித்த ஷாபிமரிக்கார் கல்வியின் சகல துறைகளிலும் கவனம் செலுத்தி மிக்க அவதானத்துடன் தயாரிக்கப்பட்ட போகொட பிரேமரத்ன அறிக்கையை அமுல்நடாத்த அரசாங்கம் தாமதித்த போது அதுபற்றி விசாரணை செய்தார்.

> "The Bogoda Premaratna Committee, after a careful study of the entire field of education issued their report several months ago. Have the recommendations of the committee been accepted by the Government? If so why have they not been implemented? If not, why has the Ministry of Education so far failed to issue a white paper embodying its proposals based on this report and the Nagalingam Technical Education Report etc? Why have radical changes been

introduced without the country knowing the education system or scheme accepted by the Government?"

என்று ஷாபிமரிக்கார் கேள்வி எழுப்பினார். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிகைக்காக அவர் 28.11.1980இல் அனுப்பிவைத்த கடிதத்திலும் இவ்விடயத்தை உள்ளடக்கியிருந்தார்.

ஸ்டான்லி கல்பகேயின் தலைமையில் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கொள்கை மீளாய்வுக் குழுவில் (1983/84) பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர, போகொட பிரேமரத்ன, திருமதி. எச்.எஸ். ஜயசிங்க, ஏ.எஸ். வீரசிங்க, வி. மாணிக்கவாசகர் ஆகியோரும் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரும் இடம்பெற்றிருந்தனர்.

தகைமையுள்ள தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளமும், ஓய்வூதியமும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, அகில இலங்கை ஆசிரியர் சங்கம் (ACUT) என்பனவற்றினூடாக கடும்பிரயத்தனங்களை ஷாபிமரிக்கார் மேற்கொண்டார். தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஜனவரி 1980இலிருந்து ஓய்வூதியம் வழங்கவும் தனியார் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு இலவச பாடநூல் விநியோகம் செய்யவும் அரசாங்கம் தீர்மானித்தபோது ஷாபிமரிக்கார் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

"We are immensely grateful to the Government and in a special manner to His Excellency the President, the Prime Minister and our genial Minister of Education for the magnanimous decision to assist private schools and restore pensions to private school teachers as from January 1980. Only those who have gone through the agonies of finding the necessary funds to maintain these schools as Non – fee living Private institutions without any state aid, are fully aware of the difficulties that these schools have endured during the past twenty years. This kind gesture of the Government will enable as not only to meet our major financial commitments, but also help us devote our time – spent in the past in collecting donations, to improve our educational standards.

We are also thankful to His Excellency the President for his decision to include private schools in the scheme for the distribution of free Text Books for our children. These two major decisions show in very clear and unmistakable terms the firm conviction of the President and his 'Dharmishta' Government to be just and fair by all" (Shafie Marikar S.L.M., The Crescent, Nov. - Dec. 1979)

என்று இவ்விரு முக்கிய தீர்மானங்களையும் எடுத்தமைக்காக ஷாபிமரிக்கார் அரசாங்கத்தை வெகுவாகப் புகழ்ந்துரைத்தார். இவ்விரு விடயங்களையும்

வென்றெடுக்க அவர் செய்த இடையறா முயற்சிகளை நானறிவேன். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அப்போதைய செயலாளர் ஜே.ஏ. கஜநாயக்க அவர்களை ஸாஹிறாவின் சிரேட்ட சிங்களத்துறை மேற்பார்வையாளராக அமர்த்தி அவருக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளுடன் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள ஷாபிமரிக்கார் தூண்டுதலும் ஒத்தாசையும் செய்தார். தனியார் பாடசாலை ஆசிரியர்கள் வென்றெடுத்த உரிமைகள், சலுகைகளுக்காக தனியார் பாடசாலை ஆசிரியர் சமூகம் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கும், ஷாபிமரிக்கார், கஜநாயக்கா போன்றோருக்கும் பெரிதும் கடப்பாடுடையது.

ஷாபிமரிக்காரின் கல்வி வழிகாட்டி ரி.பி. ஜாயா அவர்களும் ஆசிரியர் சங்கங்களுடன் தம்மை நீண்டகாலம் இணைத்துக் கொண்டவரே. 1929-41வரை அகில இலங்கை ஆசிரியர் சங்கம் (All Ceylon Union of Teachers), 1927-45வரை கொழும்பு ஆசிரியர் சங்கம் (Colombo Teachers' Association), 1927-43 வரை இலங்கை ஆசிரியர் நலன்புரிச் சங்கம் (Ceylon Teachers' Benevolent Association) ஆகிய ஆசிரியர் சங்கங்களில் ஜாயா அங்கத்துவம் வகித்தவர் என்பது கவனத்திற்குரியது. 1940-41இல் தலைமை ஆசிரியர் மாநாட்டின் (The Head Masters' Conference) தலைவராகவும் அவர் இருந்திருக்கிறார். இவையெல்லாம் ரி.பி. ஜாயா ஷாபிமரிக்காருக்கு விட்டுச் சென்ற முன்னுதாரணங்கள். அவ்வழியில் ஷாபியும் வழிநடந்தார்.

மாகாண சபைகளுக்குக் கல்வி அதிகாரங்களை வழங்குவது சம்பந்த மாகவும் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு 20.08.1986 இல் ஷாபியின் அ.இ.மு.க. மாநாடு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தது.

பொதுக்கல்விக்கான தேசியக் கொள்கையை அபிவிருத்தி செய்தல் பற்றியும் தேசிய கல்விக் குழுவுக்கு 04.10.2002இல் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு மகஜரும், 28.04.2003இல் நேரடி வாக்குமூலமும் அளித்தது.

> **"He was truly a 'giant' in the field of Education with a broad range of experience.** He had gone above and beyond the narrow confines of education as understood in Sri Lanka. He had read a broad range of subjects and was associated closely with both the General Education System and the Universities" (Lakshman Jayatilleke, Daily News – 18.08.2011)

என்று ஷாபிமரிக்கார் கல்வித்துறையில் பரந்த அனுபவமுள்ள திறமைசாலி, குறுகிய வட்டத்திற்கு அப்பால் நின்று அவர் கல்வியை நோக்கியவர், பரந்த அறிவுள்ளவர் என்றும், பொதுக் கல்வியுடனும் பல்கலைக்கழகக்

கல்வியுடனும் தன்னைச் சம்பந்தப்படுத்தியவர் என்றும் கல்விமான் லக்ஷ்மன் ஜயதிலக்க ஷாபிமரிக்காரின் புகழ் பேசினார்.

> **"ACMEC has a clear - cut role in identifying educational goals and priorities for Muslim children and how their needs could be catered to in an equitable manner within the overall national context.** We were fully convinced that serving the educational and development needs of Muslim children was a service to the whole country to its entire people" (Lakshman Jayatilleke, Daily News – 18.08.2011)

கல்வியின் இலக்குகளை அடையாளப்படுத்தி முஸ்லிம் பிள்ளைகளின் தேவைக்கேற்ப முக்கியத்துவப்படுத்தி தேசிய வரம்பை மீறாமல் அவற்றை நியாய பூர்வமாக முஸ்லிம் பிள்ளைகளுக்கு எவ்வாறு பெற்றுக் கொடுக்கலாமென்பதில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு தெளிவான கொள்கையுடையதாகவிருந்ததென்பது லக்ஷ்மன் ஜயதிலக்கவின் கருத்து.

> **"Shafie Marikar was a true visionary.** His leadership in founding the All Ceylon Muslim Education as far back as 1964 is evidence of this. It is an example for all other communities to follow… I urge you to make ACMEC a strong and vibrant organization that can dedicate itself to the correct upbringing of Muslim children within the multi cultural Sri Lankan nation. This is more important than carving out territories" (Lakshman Jayatilleke, Daily News – 18.08.2011)

என்று 'Shafie Marikar, a 'giant' in the field of education' என்ற தலைப்பில் டெய்லி நியூஸ் பத்திரிகையில் 18.08.2011இல் எழுதிய கட்டுரையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர், வயம்ப பல்கலைக்கழக வேந்தராகவெல்லாம் கல்விப்பணி செய்த லக்ஷ்மன் ஜயதிலக எழுதி வைத்திருக்கிறார்.

> "ACMEC subscribed to the idea that education had a four – fold purpose, namely to contribute to national development and character building development of general competences and of specific competences of every Sri Lankan. **ACMEC gave valuable inputs to the NEC in the formulation of proposals towards the formulation national policy on all aspects of education. As Chairman, I consulted Shafie Marikar on many occasions his maturity and friendship were sources of strength to me… He guided and inspired me in carrying out my duties"** (Lakshman Jayatilleke, Daily News – 18.08.2011)

ஷாபிமரிக்காரின் அனுவபமும் நட்பும் தேசியக் கல்விக் கொள்கையை வகுப்பதில் தனக்கு எம்மட்டு பலத்தையும், வழிகாட்டலையும், ஊக்கத்தையும் தந்ததென்பதைத் தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவரும் இந்நாட்டின்

தலைசிறந்த கல்விமான்களுள் ஒருவரான லக்ஷ்மன் ஜயதிலக குறிப்பிடுவது கவனத்துக்குரியது.

> "The conference has a pride of place in the nation building efforts through education and in keeping up the dignity and values of religious culture integrated into the national system of Education in Sri Lanka. For which, it has made constructive suggestions to improve the education system when proposals are submitted."

என்ற ஷாபிமரிக்காரின் கூற்று கல்வியினூடு தேசத்தைக் கட்டி எழுப்பும் பணியில் அவர் தலைமை தாங்கிய அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தேசியக் கல்விப் பங்களிப்பைக் காட்டுகிறது.

அன்புக்கும் சகோதரத்துவத்துக்குமான சர்வதேச சங்கத்தின் இலங்கைக் கிளையின் செயற்குழு உறுப்பினராகவும் 1985இலிருந்து ஷாபிமரிக்கார் செயற்பட்டார்.

20

ஷாபியின் அரசியலும் முஸ்லிம் கல்வியும்

ஷாபிமரிக்கார் வெளிப்படையாக அரசியல் செய்யாதவர்; ஆயினும், அரசியல்வாதிகளை உருவாக்கியவர். யு.என்.பி. அரசியல் சார்புடையவர். ரி.பி. ஜாயாவின் அரசியல் பாசறையில் வளர்ந்தவர். டாக்டர் எம்.ஸி.எம். கலீல், பழீல் ஏ. கபூர், ஜாபிர் ஏ. காதர், எம்.ஏ. பாக்கீர் மாக்கார், நெய்னா மரைக்கார், ஏ.எல்.எம். ஹாஷிம் ஆகியோருடன் யு.என்.பி. சார்பு முஸ்லிம் லீக்கின் அரசியலில் தன்னையும் இணைத்துக் கொண்டவர். அவ்வரசியல் பண்ணையில் வளர்ந்தவர். கட்சி வேறுபாடு, கொழும்பு ஸாஹிறாவை அரசாங்கத்திடமிருந்து மீளப்பெறும் போராட்டம் என்பன கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூதுடனான அவரினதும் பாக்கீர் மாக்காரினதும் தொடர்புகளை அகலப்படுத்தின.

என்.டி.எச். அப்துல் கபூர் மகரகம கபூரிய்யா மத்ரஸாவுக்கு 17 ஏக்கர் நிலத்தையும் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரிக்கு 18 ஏக்கர் நிலத்தையும் மொத்தமாக 35 ஏக்கர் நிலத்தை 'வக்ப்' செய்திருந்தார். காணி - காணி அபிவிருத்தி அமைச்சராக காமினி திசாநாயக்க இருந்த காலத்தில், மகரகம பாராளுமன்ற உறுப்பினர் பிரேமசந்திர குணசேகரவின் முயற்சியில், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆசியுடன், மகரகம நகர அபிவிருத்தி என்ற போர்வையில், இக்காணிச் சுவீகரிப்புப் பிரகடனம் 18.03.1980இல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. முஸ்லிம் சமூகத்தை அப்பிரகடனம் வேதனையும் விசனமுமடையச் செய்தது. மகரகம கபூரிய்யாவின் பழைய மாணவனும் அன்றைய அதிபருமான மௌலவி ஏ.ஆர்.எம். றூஹுல் ஹக், உதவி அதிபர் மௌலவி ஏ.எம். முபாரக், மௌலவிகள் அலவி, எம்.ஜே.எம். றியாழ், ஏ.எல்.எம். இப்றாஹிம் ஆகியோர் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவராகவும் ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராகவுமிருந்த எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரை அடிக்கடி அணுகி எடுக்க வேண்டிய

நடவடிக்கைகள் பற்றிக் கலந்து பேசினர். இவர்களில் அனேகர் இம்மத்ரஸாவின் பழைய மாணவர்கள். மறுபுறம், பழீல் ஏ. கபூர், றாபி கபூர், நவாஸ் கபூர், ஏ.எச்.எம். இஸ்மாயில், டாக்டர் சுலைமான் ஆகியோர் அன்றைய சபாநாயகர் பாக்கீர் மாக்காரை அணுகி அரசியல் ரீதியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கவனம் செலுத்தினர். சமூக உணர்வு மீதூரப்பெற்ற பாக்கீர் மாக்கார் மிக உருக்கமான மடலொன்றை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு எழுதினார். அக்காணி சுவீகரிக்கப்பட்டால் தான் வகிக்கும் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்துவிடுவதாக அக்கடித வாசகங்கள் எச்சரித்தன. அவ்வாறான ஒரு கடிதத்தை ஜயவர்த்தனவுக்கு எழுதுவதன் எதிர்கால விளைவுகளை அவரின் சமூக உணர்வு அன்று மறைத்து விட்டிருந்தது. அக்கடிதத்தை யாருக்கு எழுதுகிறார் என்பதை அவர் பொருட்படுத்தவில்லை. அதன் விளைவு அவரின் அரசியலுக்கு உலைவைப்பதாக அமைந்தது. முதலில் சபாநாயகர் பதவியிலிருந்தும், பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்யவேண்டியநிலை அவருக்கேற்பட்டது. இலாகா இல்லாத அமைச்சராகவும் நீண்ட காலத்தை அவர் கழிக்க நேர்ந்தது.

> "ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த சந்தர்ப்பத்தில் காமினி திசாநாயக்க அமைச்சராகவிருந்த போது கபூரிய்யாவின் பெரும் பகுதி அரசாங்கத்தால் சுவீகரிக்கும் நிலை ஏற்பட்டது. அப்போது நானும் (றூஹுல் ஹக்) அலவி மௌலவியுடன் மற்றும் சிலரும் மிகவும் பிரயத்தனம் எடுத்தே அதனை விடுவித்தோம். இச்சந்தர்ப்பத்தில் முக்கியஸ்தர் சிலரது கையொப்பம் பெறும் விடயத்தில் முக்கிய புள்ளிகள் தலைமறைவாகியிருந்த போதும் நாம் விடாமுயற்சியாகப் போராடினோம். ஒரு கட்டத்தில் அப்போதைய பிரதான அரசியல் தலைவர்களில் ஒருவரான மர்ஹும் பாக்கீர் மாக்கார் கூறிய கூற்று இன்றும் ஆணித்தரமாக என்மனதில் பதிந்திருக்கிறது. அரசு சாதகம் காட்டாவிட்டால் நான் எனது பாராளுமன்ற சபாநாயகர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு மீண்டும் கறுப்புக் கோட் அணியும் நிலைதான் ஏற்படும் என்று சூளுரைத்து எமக்குத் தைரியமூட்டினார். இறுதியில் அரசு முயற்சியைக் கைவிட்டு விட்டது." (றூஹுல் ஹக், நவமணி - 12.06.2011:7)

என்று மௌலவி ஏ.ஆர்.எம். றூஹுல் ஹக் இது பற்றித் தெரிவித்து இவ்விடயத்தில் பாக்கீரின் சமூக உணர்வைத் தொட்டுக் காட்டினார். பாக்கீர் மாக்கார் பின்னர் பிரதமர் பிரேமதாஸாவின் கவனத்துக்கு இவ்விடயத்தைக் கொணர்ந்ததன் காரணமாக உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் அன்றையச் செயலாளர் ஆர். பாஸ்கர லிங்கத்தையும் சில முஸ்லிம் தலைவர்களையும் பிரேமதாஸ ஸ்தலத்துக்கு அனுப்பி, அவர்களின் அறிக்கையைப் பெற்று அவர் எடுத்த நடவடிக்கையின்

விளைவாக, அப்போதைய காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்க ஏற்கனவே வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் 06.11.1981இல் வெளியிடப்பட்ட மறு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வாபஸ் பெறப்பட்டது.

வேறு இரு சம்பவங்கள் நிலைபரத்தை இன்னும் மோசமாக்கின. அவ்விரு சம்பவங்களும் இரு நாடுகளின் தேசிய தின வைபவங்களுடன் சம்பந்தப்பட்டவை. ஈராக் தேசிய தின வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகராகவிருந்த பாக்கீர் மாக்காருக்கு ஈராக் பாராளுமன்ற சபாநாயகர் தனிப்பட்ட அழைப்பொன்றை அனுப்பியிருந்தார். அப்பயணத்துக்கான ஜனாதிபதியின் முன் அனுமதியைக் கோரிய பாக்கீருக்கு அதற்கான அங்கீகாரம் வழங்கப்படாது அதே வைபவத்துக்குச் செல்லவிருந்த இலங்கைக்குழுவுக்குத் தலைமைதாங்கிச் செல்லுமாறு அவர் பணிக்கப்பட்டார். அதை பாக்கீர் ஏற்கவில்லை. மற்ற நிகழ்வும் இதே மாதிரியானதே. மாலைதீவு ஜனாதிபதியின் தனிப்பட்ட அழைப்பை ஏற்று அந்நாட்டுக்குச் சென்று அப்போதுதான் திரும்பிய பாக்கீர் மாக்கார் மீண்டும் அந்நாட்டின் தேசிய தின வைபவத்துக்குச் செல்லவிருந்த இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் செல்லுமாறு பணிக்கப்பட்டபோது அதையும் ஏற்க பாக்கீர் மறுத்தார். ஏற்கனவே மகரக மத்ரஸா சுவீகரிப்புச் சம்பந்தமாக ஜனாதிபதிக்கு பாக்கீர் எழுதிய கடிதம் எற்படுத்தியிருந்த மனக்கசப்பை இவ்விரு சம்பவங்களும் மேலும் அதிகரித்தன. இவற்றைவிட இன்னுமொரு முக்கிய விடயமும் இதற்குத் தீனிபோட்டது. இஸ்ரவேல் தூதரகமொன்றை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக 'நலன்பேண் பிரிவு' ஒன்றை முதற்கண் ஏற்படுத்த ஜே.ஆர். அரசு முயன்றபோது முஸ்லிம்கள் அதைப் பலமாக எதிர்த்தனர். பாக்கீர் உள்ளிட்ட ஐ.தே.க. யின் முஸ்லிம் பிரமுகர்களும் அத்தீர்மானத்துக்கு உடன்படவில்லை. இதுபற்றிக் கருத்துரைத்த ஜே.ஆர்., தமிழ்த் தீவிரவாதத்தை அழிப்பதற்கு எந்தப் பிசாசின் உதவியையும் அரசாங்கம் நாடுமென்றும் அதனை விரும்பாத பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தைவிட்டு வெளியேறலாமென்றும் அறிவித்தார். பாக்கீர் பழிவாங்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன பாக்கீரை நேரடியாக அழைத்து, சபாநாயகராக ஒரு பௌத்தர் இருப்பதையே மகாசங்கத்தினர் விரும்புவ தாகவும், ஈ.எல். சேனநாயக்காவுக்கு அப்பதவியை தான் வழங்கவிருப்பதாகவும் கூறி சபாநாயகர் பதவியிலிருந்து அவரை இராஜினாமாச் செய்யுமாறு கேட்டார். நிர்ப்பந்தத்தின் பேரில் பாக்கீர் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்தார். இது நிகழ்ந்தது 1983இல். இலாக்கா இல்லாத அமைச்சு அவருக்கு வழங்கப்பட்டது. ஐந்து வருடங்கள் 1983-1988வரை இலாக்கா

இல்லாத வெறும் அமைச்சராக பாக்கீர் தனது காலத்தைக் கழிக்க நேர்ந்தது. ஏற்கனவே நிகழ்ந்த ஜே.ஆர். - பாக்கீர் சந்திப்பின் போது இன்னுமொரு விடயத்தையும் ஜே.ஆர். பாக்கீரிடம் கூறியிருந்தார். இம்தியாஸ் பாக்கீருக்கு இடம்விட்டு அவரின் பாராளுமன்ற ஆசனத்தையும் அவர் இராஜினாமாச் செய்து விட வேண்டுமென்பதே அது. நிர்ப்பந்தத்தின் பேரில் அதுவும் நிறைவேறியது. அதன் விளைவு பாக்கீர் 09.06.1988இல் தென்மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். 1989 தேர்தலில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வெற்றி பெற்று களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரானார். அதுவும் நல்ல விடயம்தான். ஆயினும், இந்நிகழ்வை இம்தியாஸ் அரசியலுக்கு வந்த வரலாறாக நான் பார்ப்பதில்லை. சமூகத்தைப் பாதிக்கும் ஒரு விடயத்தை எடுத்துச் சொன்னமைக்காக சமூக உணர்வு மீதூரப்பெற்ற பாக்கீர் மாக்கார் பழிவாங்கப்பட்ட வரலாறாகவே பார்க்கிறேன். இலங்கையின் அரசியல் வரலாறும் இவ்வாறே அதைப் பதிவு செய்யும் என நம்புகிறேன். பௌத்தர் ஒருவரே சபாநாயகராக இருக்க வேண்டுமென்று மகாசங்கத்தினர் விரும்பியிருந்தால் எம்.எச். முகம்மத் 09.03.1989இல் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட போது மகாசங்கத்தினர் அதை ஆட்சேபித்திருக்க வேண்டும். அவ்விதம் எதுவும் நடைபெறவில்லை.

தந்தை வழியில் தனயன் இம்தியாஸ் பாக்கீரும் செயற்படத் தொடங்கிய போது தகப்பனுக்கு ஏற்பட்ட அதே பழிவாங்கலுக்கு அவரும் இலக்காக நேர்ந்தது. இஸ்ரேல், பாலஸ்தீனம் பற்றிய இம்தியாஸின் நிலைப்பாடு அவர் சார்ந்திருந்த ஐ.தே.க.யின் நிலைப்பாட்டுக்கு முரணானதாகவிருந்ததால் தலைமைத்துவத்தின் வெறுப்புக்கு அவரும் ஆளாக நேர்ந்தது. இவ்விடயத்தில் இம்தியாஸ் சில வேளைகளில் பாலஸ்தீன - இலங்கை நட்புறவுச் சங்கத் தலைவராகவிருந்த மஹிந்த ராஜபக்ஷவின் கருத்துடன் ஒத்த கருத்துடைய வராகவிருந்தமையும் அவதானத்துக்குரியது. சமூகத்தை முன்னிலைப்படுத்திய இம்தியாஸின் செயற்பாட்டினால் அவரும் ஐ.தே.க. அரசியலில் ஓரம் கட்டப்பட்டார். அரசியலில் நுழைய வேண்டிய வயதில் அரசியலிலிருந்து ஒதுங்கிநிற்கும் நிலை அவருக்கு ஏற்பட்டது. எம்.எச். முகம்மத், ஏ.எஸ். எஸ். ஹமீத், நெய்னா மரைக்கார், பாக்கீர் மாக்கார் போன்ற ஐ.தே.க.யின் முக்கிய தலைவர்களிடை நிலவிய உட்கட்சி முஸ்லிம் தலைமைத்துவப் பேராட்டமும் பாக்கீர் பழிவாங்கப்படுவதற்கு எண்ணெய் ஊற்றியது. முஸ்லிம் லீக் வாலிப முன்னணிக் கிளைகளை நாடளாவிய ரீதியில் பாக்கீர் அமைக்கத் தொடங்கியமை அதைத் தனி அரசியல் இயக்கமாக அவர் ஆக்கிக் கொண்டிருப்பதாக சில முஸ்லிம் தலைவர்களைப் பீதி கொள்ளச் செய்தது. பணம்படைத்த, அரசியல் செல்வாக்குள்ள பேருவலைத்

தனவந்தர்கள் சிலரின் பொறாமைக்கும் தந்தையும் தனயனும் இலக்காக வேண்டியிருந்தது. இவையெல்லாம் பாக்கீரும் இம்தியாஸும் ஓரம் கட்டப்படுவதற்கு வாய்ப்பான சூழலை ஐ.தே.க. தலைமைக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

பணம் படைத்தவர்கள் வாழும் பேருவலை-சீனன்கோட்டைக்கும், கற்றவர்களும் வறியவர்களும் ஆரம்பக் குடியேற்றவாசிகளும் வாழும் பேருவலை - மருதானைக்குமிடை நீண்ட காலமாக மனக்கசப்பு இருந்து வந்தது. பாக்கீர் மாக்கார், ஷாபிமரிக்கார் ஆகியோர் மருதானையைச் சேர்ந்தவர்கள். ஜாபிர் ஹாஜியார், நளீம் ஹாஜியார், பழீல் ஹாஜியார், ஜெமீல் ஹாஜியார் ஆகியோரெல்லாம் பாக்கீருடன் முரண்பாட்டு அரசியல் செய்தனர். 1981இல் நிகழ்ந்த இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் திருமண நிகழ்விலும், 1997இல் நிகழ்ந்த பாக்கீர் மாக்காரின் ஜனாஸா நல்லடக்கத்திலும் நளீம் ஹாஜியார் கலந்து கொள்ளாத அளவுக்கு முரண்பாடு புரையோடிப் போயிருந்தது. இம்தியாஸை எதிர்த்து பழீல் ஹாஜியார் போட்டியிட்டார். 1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் இம்தியாஸை எதிர்த்து ஜெமீல் ஹாஜியாரின் சுயாதீனக்குழு போட்டியிட்டது. பெரிய மரத்தை வெட்டி விடுவதும், சிறிய மரம் நச்சுமரமென்பதால் அதை வேரோடு பிடுங்கி விடுவதும் ஜெமீல் ஹாஜியாரின் தேர்தல் கோஷங்களாகவிருந்தன.

இஸ்லாமியக் கல்வியும் நவீன கல்வியும் இணைந்ததாக நளீம் ஹாஜியார் தாபிக்க விரும்பிய 'ஜாமிஆ நளீமிய்யா' பற்றி மஸ்ஊத் ஆலிம், எ.எம்.எ. அஸீஸ் ஆகியோரின் ஆரம்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்ட நளீம் ஹாஜியார் தனது வெள்ளவத்தை வீட்டில் இது சம்பந்தமான முதலாவது கூட்டத்தைக் கூட்டியிருந்தார். இக்கூட்டத்தில் மஸ்ஊத் ஆலிம், எ.எம்.எ. அஸீஸ், நீதிபதி ஏ.எம். அமீன், மௌலவி ஏ.எல்.எம். இப்றாஹிம், மௌலவி யு.எம். தாஸிம், மௌலவி ஷாஹுல் ஹமீத் பஹ்ஜி, ஏ.ஸி.ஏ. வதூத், எம்.ஏ.எம். சுக்ரி ஆகியோரெல்லாம் பிரசன்னமாகவிருந்தனர். அன்றைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் ஜாமிஆ நளீமிய்யாவின் அங்குரார்ப்பண நிகழ்வில் 09.08.1973இல் கலந்துகொண்டார். எ.எம்.எ. அஸீஸின் முதன்மை ஆலோசனையில் ஆரம்பிக்கப்பட்ட அக்கலாலயத் தலைவராக மௌலவி யு.எம். தாஸிமும் (அல்-அஸ்ஹரி), அவருக்குப் பின் எ.எம்.எ. அஸீஸின் ஸாஹிறா மாணவன் எம்.ஏ.எம். சுக்ரியும் அலங்கரித்தனர். உயர்கல்வியில் முஸ்லிம் மாணவருக்குதவ 'இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்'தை 1981இலும், முஸ்லிம் மாணவரின் தொழில் நுட்பக் கல்விக்குதவ 'இக்ர.'.' தொழில் நுட்பக் கல்லூரி'யை 18.04.1992இலும் நளீம் ஹாஜியார் ஆரம்பித்தார். சேர் றாசிக் பரீத், டாக்டர் எம்.ஸி.

எம். கலீல், டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத், வெளிவிவகார அமைச்சர் ஏ.எஸ்.எஸ். ஹமீத் ஆகியோரெல்லாம் கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் 22.02.1982இல் நிகழ்ந்த இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் முதலாவதாண்டுப் பூர்த்தி விழாவில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வுகள் எதிலுமே பாக்கீர் மாக்காரும் ஷாபிமரிக்காரும் பிரசன்னமாகியிராமை பற்றி அப்போது மிகக் கவனமாக அவதானிக்கப்பட்டது. இது மிக ஆழமாக ஆராய்வோருக்கு மட்டும் புலப்படக்கூடிய மிகச் சிக்கலான முரண்பாட்டு வடிவமாக ஆரம்பித்து பின்னர் தெளிவான முரண்பாடாக வெளிப்பட்டுத் தெரிந்தது. ஷாபிமரிக்காரின் கல்வி முன்னெடுப்புகளுக்கும் இம்முரண்பாடு சவாலாக, சிலவேளைகளில் தொல்லையாக அமைந்தது. பல பிரச்சினைகளுக்கு ஷாபிமரிக்கார் முகம் கொடுத்துக் கொண்டிருந்த 1982களில் ஏற்பட்ட இம்முரண்பாடு ஷாபிக்குச் சிரமம் தந்தது.

ஸாஹிறாக் கல்லூரி மீண்டும் தனியார் பாடசாலையான ஆரம்ப காலங்களில் அதிக உதவிகளை ஷாபிமரிக்காரின் வேண்டுகோளின் பேரில் அள்ளி வழங்கிய நளீம் ஹாஜியார் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் அதைத் தன்னிடம் ஒப்படையுங்கள் என்ற தொனியில் பேசத் தொடங்கிய போது ஷாபியை அது வெகுவாகப் பாதித்தது. எரியும் வீட்டில் எண்ணெய் வார்ப்பதாக அது அமைந்திருந்தது.

> "கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியைக் குடும்பச் சொத்தாக மாற்றவோ தலைமைத்துவத்தைப் பெறவோ நான் அதைக் கேட்கவில்லை. முஸ்லிம் மாணவரின் கல்வி நலனைக் கருத்திற்கொண்டு அதைத் தரமுள்ள ஒரு கல்லூரியாக மாற்றுவதற்கே கேட்டேன்... இன்று இலங்கை முஸ்லிம்களுக்கென சகல வசதிகளும் பொருந்திய சம்பூர்ணமான கல்வி நிலையம் ஒன்றில்லை. அந்தக் குறையைப் போக்கத்தான் ஸாஹிறாக் கல்லூரியைக் கேட்டேன்." (நளீம் எம்.ஐ.எம்., தினகரன் - 23.02.1982:1,7)

என்று 22.02.1982இல் கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் நிகழ்ந்த இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் தலைமை உரையாற்றிய நளீம் ஹாஜியார் தனது கோரிக்கையை நியாயப்படுத்தினார். இந்தப் பிளவை முஸ்லிம் அரசியல் தலைமைகளும் ஐ.தே.க. கட்சித் தலைமையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. ஷாபியின் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரித் தலைமையும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்பாடுகளும் இதனால் பாதிப்படைந்தன. பாக்கீர் மாக்காரும் இம்தியாஸும் அரசியலிலிருந்து ஓரங்கட்டப்பட்டமை எந்தளவுக்கு ஷாபிமரிக்காரின் தலைமையில் இயங்கிய

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்பாடுகளையும் அவரின் கொழும்பு ஸாஹிறாத் தலைமையையும் பாதித்தது என்பது ஆய்வுக்குரியது.

பிரேமதாஸ-ஜாபிர் ஏ. காதர் விரிசலில் ஷாபிமரிக்காரின் வகிபாகம் பிரேமதாஸ-ஷாபிமரிக்கார் விரிசலை ஏற்படுத்தியது. கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியிலும் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைமைப் பதவியிலும் முஸ்லிம் லீக் சார்புடைய ஷாபிமரிக்கார் அமர்ந்திருப்பது தனது கொழும்பு அரசியலுக்குச் சாதகமாக அமையாது என்று பிரேமதாஸவும் கருதினார். அதனாற்றான் ஷாபியின் சமூகத் தலைமையைப் புறம்தள்ளும் வகையில் பிதேமதாஸ செயற்படவும் தொடங்கினார். கொழும்பு முஸ்லிம்களின் கல்வியிலும் முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் கூடிய கரிசனை காட்டினார். முஸ்லிம் லீக்கின் உறுப்பினர்கள் சிலரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு, வீடமைப்புத் திட்டங்களில் பல வீடுகளையும் அவர்களுக்குக் கொடுத்து, தனது அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார். கண்டி எஸ்.எம்.ஏ. ஹஸன் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்வு இதனை ஊர்ஜிதம் செய்கிறது. பிரதமரின் காரியாலயத்திலிருந்து செயலாளர் பாஸ்கரலிங்கத்தின் ஒப்பத்துடன் மார்ச் 1981இல் ஹஸனுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு பிரதமரின் காரியாலயத்துக்குச் சென்ற ஹஸன் பாஸ்கரலிங்கத்தைச் சந்தித்த போது அவர் ஹஸனை பிரேமதாஸவிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். அந்நிகழ்வை கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் பின்வருமாறு விளக்கிச் சொன்னார்:

> "உங்கள் சேவை எமது தொகுதிக்கு அவசியமாக இருக்கிறது. கொழும்பு மத்திய தொகுதியிலுள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலைகளின் நிலை மிகவும் பின்தங்கியுள்ளது. இதைத் திருத்துவதற்கு என்ன செய்யலாம் என்பதற்காக முன்னாள் கல்வி அமைச்சர் பதியுத்தீன் அவர்களைத் தொடர்பு கொண்டு முதலில் பொருத்தமான கல்வி அதிகாரி ஒருவரைக் கூறுமாறு கேட்டோம். அவர் உங்கள் பெயரைக் கூறினார். பாஸ்கரலிங்கமும் இதை விரும்பினார். நீங்கள் உடனடியாக மத்திய தொகுதியைப் பொறுப்பெடுங்கள். நீங்கள் குடும்பத்துடன் கொழும்பில் இருக்கவிரும்பினால் மாளிகாவத்தை வீட்டுத் திட்டத்தில் ஒருவீடும் தரமுடியும் என்று கூறிவிட்டு, மாற்றத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பிரதமர் பாஸ்கரலிங்கத்தைப் பணித்தார். அடுத்தநாள் கொழும்பு மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய எஸ். எச்.எம். யாசீனைச் சந்தித்து நடந்த விடயங்களைக் கூறியபோது அவர் பதியுத்தீன் மஹ்மூதைச் சந்திக்குமாறு கூறினார். வருவதை அறிவித்துவிட்டு பதியுத்தீன் தங்கியிருந்த அப்துல் கபூர் மாவத்தை இல்லத்திற்குச் சென்றேன். அவர் மாடியில் கட்டிலில் தனிமையில் இருந்தார். அரசாங்கம் என்னோடு இருந்த பலரைப் பழிவாங்கி விட்டது. உங்களைக் களுத்துறைக்கு

மாற்றிவிட்டதாக பின்னர் அறிந்தேன். பாஸ்கரலிங்கம் நன்றி மறக்காதவர். என்னை மாதம் ஒரு முறையாவது வந்து பார்க்கத் தவறமாட்டார். அவர் பிரதமரின் செயலாளராக இருப்பதனால் அவர் மூலமாக பலருக்கு நிவாரணம் செய்யக் கூடியதாக இருக்கிறது. பிரதமர் பிரேமதாஸாவும் என்னோடு கலந்து பேசுவார். அதனால்தான் உங்களைப் பற்றி அவர்களிடம் நான் கூறினேன்."

என்று 'எஸ்.எம்.ஏ. ஹஸன் - தற்கால முஸ்லிம் சமூக பண்பாட்டியல் வரலாற்றில் ஓர் அத்தியாயம்' (2004 : 09 - 90) என்ற நூலில் அனஸ் அந்நிகழ்வை விளக்கிச் சொன்னார். ஹஸனுக்கே விளங்கிக் கொள்ள முடியாத பல உண்மைகள் அனஸ் கூறும் ஹஸன் சம்பந்தப்பட்ட இச் செய்தியில் புதைந்து கிடக்கின்றன.

"கொழும்பில் குறிப்பாக மத்திய கொழும்பில் பின்னடைவுக்குள்ளாகியிருந்த தமிழ், முஸ்லிம் பாடசாலைகளை மறுசீரமைப்பதில் பிரதமர் பிரேமதாஸ கவனம் செலுத்தினார். சகல முஸ்லிம், தமிழ் பாடசாலைகளிலும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களை அடிக்கடி கூட்டுமாறும் பிரச்சினைகளைக் கலந்துரை யாடுமாறும் பெற்றார் -ஆசிரியர் சங்கங்களின் மூலமாக பாடசாலைகளில் விழாக்களை ஏற்பாடு செய்யுமாறும் பணிப்புரை வழங்கினார். வாரத்திற்கு ஒரு விழா என்று கல்வி அதிகாரிகள் விழாக்களை ஒழுங்கு செய்யக் கடமைப்பட்டிருந்தனர். ஒவ்வொரு விழாவிலும் பிரேமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இந்த ஏற்பாட்டில் பிரேமதாஸவின் சுச்சரித்த நிலையமும் முக்கிய பங்கேற்றிருந்தது. இவ்விழாக்களில் பிரதமர், கல்வி அதிகாரிகளிடம் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்திப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டார்." (அனஸ் எம்.எஸ்.எம்., 2004:90-91)

என்று எம்.எஸ்.எம். அனஸ் இதற்கு விளக்கம் கொடுத்தார். முஸ்லிம் லீக்கினதும் ஷாபிமரிக்காரினதும் அரசியல் செல்வாக்கைப் பலயீனப் படுத்துவதில் பிரேமதாஸ மிக்க சாணக்கியத்துடன் நடந்து கொண்டதை மேற்செய்திகள் காட்டுகின்றன. எதிரியின் எதிரி நண்பன் என்ற தத்துவத்தையும் கூட பிரேமதாஸ பிரயோகித்து ஸாஹிறாக்கல்லூரிச் சுவீகரிப்பு விடயத்திலும் அரசியலிலும் முஸ்லிம் லீக்குடன் கருத்து முரண்பாடு கொண்டிருந்த பதியுத்தீனின் உதவியைக்கூட இவ்விடயத்தில் நாடியிருந்தார். "ஷாபிமரிக்கார் அதிபராக இருக்கிறாரா அல்லது அரசியல் செய்கிறாரா?" என்று இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடமும் ஒருபோது பிரேமதாஸ கேட்டதாக இம்தியாஸ் என்னிடம் கூறியதும் என் நினைவில் இருக்கிறது.

"முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ காலத்தில் கொழும்பு மாவட்ட முஸ்லிம் பாடசாலைகள் தரமாக இயங்கி வந்தன. அவற்றின் தேவைப்பாடுகளை உடனுக்குடன் பிரதேமதாஸ நிறைவேற்றிக் கொடுத்தார். 1994 வரை திறமையாக இயங்கிவந்த முஸ்லிம் பாடசாலைகள் அவரின் மறைவுக்குப்

பின்னர் கவனிக்கப்படாமல் ஏனோ தானோவென்ற நிலையே உருவானது." (முஜிபுர்ரஹ்மான், தினகரன், 29.03.2017: 2)

என்று கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்குக் கொழும்பு முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டில் ஆர். பிரேமதாஸ அன்று கரிசனை காட்டினார்.

ஷாபிமரிக்கார் ஸாஹிறாக் கல்லூரியைவிட்டு நீங்கிய போது தன்னுடன் மிக்க நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்த டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் முன்னாள் அதிபர் ஆர்.ஐ.ரி. அலஸ் ஸாஹிறாவின் இயக்குநராக வருவதற்கும் பிரேமதாஸவின் மறைகரம் உதவியிருக்கலாம் என்ற சந்தேகமும் இப்போது என்னுள் எழுகிறது. ஆர்.ஐ.ரி. அலஸுக்கு ஸாஹிறாவில் பிரச்சினைகள் ஏற்படத்தொடங்கிய போது உதவி அதிபராகவிருந்த என்னைச் சந்திக்கவருமாறு பிரேமதாஸ பலமுறைகள் செய்தி அனுப்பியமை இச்சந்தேகத்தை வலுப்படுத்துகிறது. ஸாஹிறாவிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆர்.ஐ.ரி. அலஸ் பிரேமதாஸ அவர்களினால் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டமை, அதற்கு வசதியாக கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேறு அமைச்சு வழங்கப்பட்டமை என்பனவெல்லாம் இங்கு கனவத்துக்குரிய விடயங்கள்.

ஷாபிமரிக்கார் தான் சார்ந்திருந்த யு.என்.பி. அரசியலிலேயே புறத்தொதுக்கப்பட்டமை அவரின் சமூகப்பற்றுடன் தொடர்புள்ள விடயமாகப் பார்க்கப்பட வேண்டியது. ஆனால், அதனால் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டமை எம் கரிசனைக்குரியது. ஷாபியின் கொழும்பு மத்தியுடனான அரசியல் சம்பந்தம் ஜே. ஆர். ஜெயவர்த்தன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனான தொடர்புகளையும் சற்றுத் தூரமாக்கிற்று. இந்த விரிசல் பாக்கீர் மாக்கார் - ஷாபிமரிக்கார் சகோதரர்களின் மரணத்தின் பின்னரும் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் அரசியலைக்கூட இன்றுவரை பாதித்து நிற்பதை நாமறிவோம்.

எம்.எச். முகம்மத்-பாக்கீர் உறவில் காணப்பட்ட தளம்பலும் ஷாபிக்குச் சிரமம் தந்தது. ஆயினும், ஷாபி யு.என்.பி. அரசியலில்தான் காலூன்றி நின்றார். முஸ்லிம் லீக்கின் நிலைப்பாட்டிலேயே இருந்தார். முஸ்லிம் லீக் பிரசவித்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, முஸ்லிம் லீக்கின் அரசியலினால், மறுவார்த்தையில், ஷாபியின் அரசியலினால் எம்மட்டுப் பயனடைந்தது அல்லது எம்மட்டுப் பாதிப்படைந்ததென்பதும் இலங்கை முஸ்லிம் கல்வி பற்றிய ஆய்வில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கியமானதொரு விடயமாகும்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சட்டம் 1978 செப்டம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டபோது ஷாபி அதனைப் பெரிதும் வரவேற்றார். அவர் அதிபராகவிருந்த கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் விசேட கூட்டமொன்றை நடத்தி அவ்வரசியல் அமைப்புச் சட்டத்தைப் புகழ்ந்தோதினார்.

> "முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழ்மொழி தேசிய மொழிகளிலொன்றாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பௌத்த சமயத்துக்களிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும் ஏனைய சமயங்களுக்கும் உரிய அந்தஸ்த்து வழங்கப்பட்டிருக்கிறது. முதன் முறையாக விகிதாசாரப் பிரதி நிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதுடன் தொகுதி முறைப்பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பரவலாக்கும் நோக்குடன் மாவட்ட அமைச்சர் முறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையிருந்த வம்சாவழிப்பிரசை, பதிவுப் பிரசை என்ற வேறுபாடுகளை இவ்வரசியலமைப்புச் சட்டம் நீக்கியிருப்பதுடன் எல்லோரும் இந்நாட்டுப் பிரசைகளே என்ற தன்மையில் தோளோடு தோள் சேர்ந்து நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்காக உழைக்க வழிவகுத்திருக்கிறது. தார்மீக சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உறுதிபூண்டுள்ள ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் ஆட்சி முறையில் மக்களே இந்நாட்டு மன்னர்களாக மதிக்கப்படுகின்றமையினால் தான் ஜனாதிபதித் தெரிவு மட்டுமன்றி முக்கியமான பிரச்சினைகளும் கூட மக்களின் தீர்மானத்துக்கு விடப்படவேண்டுமென அரசியல் சட்டம் விதிக்கிறது"
> (ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 11.09.1978)

என்றெல்லாம் அவ்வரசியலமைப்புச் சட்டம் பற்றி ஷாபிமரிக்கார் விளக்கிச் சொன்னார். 07.09.1978இல் நடைபெற்ற அக்கூட்டத்தில் உப-அதிபர் ஆர். எம். அபேவர்த்தன சிங்களத்திலும் நான் தமிழிலும் விளக்கவுரைகள் நிகழ்த்தினோம். ஷாபியின் கல்விமொழிக் கொள்கைக்குப் பொருத்தமான தாகவும் இவ்வரசியலமைப்புச் சட்டம் அமைந்திருந்தது.

ஜே.ஆரின் காலத்தில் மாநாட்டின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஷாபிமரிக்கார் பல சிரமங்களையும் தடைகளையும் எதிர்நோக்கவேண்டி யிருந்ததை ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்குப் பின் ஜனாதிபதியான ஆர். பிரேமதாஸவுக்கு அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயலாளரும் அதன் தலைவர் ஷாபிமரிக்காரும் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கடிதமொன்று புலப்படுத்துகிறது.

> "When the UNP Government assumed office in July 1977 with Hon. Dr. Nissanka Wijeyaratne as Minister of Education, our representations to the Hon. Minister received the most careful consideration and several steps were taken towards the advancement of Muslim education on the lines suggested by us. Besides responding favorably to our written representations, deputations of the

ACMEC, including always several Muslim members of Parliament, were able to meet the Hon. Minister on four occasions – February 27, 1979 (actg. Minister), August 7, 1978, June 12, 1979 and December 20, 1979. These interviews were most fruitful and several important decisions were taken and implemented in the interest of Muslim Education. **The setting up of a separate "Muslim Schools Unit" in the Ministry of Education as from January 1979 with a Grade 1 Director of Education at its head was one of the most important steps taken by the former Hon. Minister of Education.**

Period from March 1980 to date The ACMEC gave the fullest co-operation to the new Minister of Education (Hon. Ranil Wickramasinghe) in organizing Seminars etc. at District Level as well All – Island level in regard to the White Paper Proposals on Education; 1981 and made the Muslim Community aware of the changes that were contemplated in the new proposals.

At the same time almost every year our Executive Council, in consultation with Muslim Members of Parliament continued to make representations to the Hon. Minister on educational problems in general and those affecting the Muslim Community. We have sent several Memoranda to the Hon. Minister from time to time – to mention a few – memos dated Dec. 15, 1981, Dec. 9, 1983, Dec. 3, 1984, Jan. 7, 1985, Oct. 24, 1985, Nov. 29, 1985, Dec. 2, 1986 and Dec. 24, 1987. **Your Excellency will no doubt be surprised to learn that while some of the Memos referred to above were merely acknowledged with the stereotyped statement that they had been referred to the Secretary, Ministry of Education and "a reply will be sent to you by him in due course" – no replies ever came to us from that official nor were any steps taken to consider our representations – the rest of our memos were not even acknowledged.**

Further in almost all the above Memoranda our Executive Council, including Muslim Members of Parliament, requested for interviews with the Hon. Minister to enable us to discuss the educational problems of the Muslims in particular. **We regret to mention that repeated requests for interviews from a responsible and recognized organisation, including elected representatives of the people, like the ACMEC were not granted during the entire period from March 1980 to December 1988 in contrast to the four interviews readily granted to us by previous Hon. Minister of Education between July 1977 and December 1979.**

Consequently we were compelled from time to time to focuss the attention of the Parliament and the country regarding the educational problems of the Muslim community during the Committee stage discussion on votes of the Ministry of Education, through the Muslim Members of Parliament.

We were also compelled to seek the intervention of the former President (His Excellency) J.R. Jayawardena. Eg. ACMEC Memo dated oct. 31, 1981 on the inadequacy of reference to Religion as well as the exclusion of Religion as a subject for the GCE (OL) Examination – (para 20) in the white Paper Proposals on Education (1981). We are glad that this led to the Cabinet Decision of Nov. 11, 1981 making Religion a compulsory subject to be taught as a subject in the School Curriculum and tested at the OL Examination, Again our Memo dated March 15, 1988 requesting that Govt. Muslim Schools should continue to be called 'Govt. Muslim Schools' – due to doubts arising from a reported statement of the Hon. Minister of Education at the Prize Giving of Gampola Zahira College on Feb. 19, 1988.

We have, however, had discussions with the Secretary, Ministry of Education (Mr. E.L. Wijemanne) but decisions taken on many important matters were never implemented."

என்று அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு முன்வைத்த கோரிக்கைகள் கல்வி அமைச்சினால் உதாசீனம் செய்யப்பட்டமாற்றை ஷாபிமரிக்கார் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கவலையுடன் தெரியப்படுத்தினார்.

உயர்கல்வி சம்பந்தமாக மாநாடு முன்வைத்த கோரிக்கைகள் அப்போது உயர்கல்விக்குப் பொறுப்பான அமைச்சராகவிருந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினாலும் உதாசீனம் செய்யப்பட்டமாற்றை உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக ஏ.ஸி.எஸ். ஹமீத் நியமிக்கப்பட்டபோது 04.04.1989இல் ஷாபிமரிக்கார் அவருக்கெழுதிய கடிதத்திலும் தெரிவித்திருந்தார்.

Further to our letter dated Jan. 5, 1989 and March 14, 1989, we wish to draw your kind attention to the last paragraph of our letter of March 14, 1989 requesting you for an appointment for a deputation from ACMEC to see you early. We wish to recall here that since the inauguration of the Ministry of Higher Education in March 1978, we were able to meet the first Minister of Higher Education (Dr. Nissanka Wijeratna) on four occasions – August 7, 1978, February 27, 1979 (Acting Minister Hon. Lionel Jayatillaka), June 12, 1979 and December 20, 1979. Dr. Nissanka Wijeratna ceased to be Minister on Higher Education on 15.2.1980 when President J.R. Jayawardena took over that Ministry. Except for a meeting with the Deputy Minister of Education (Hon. Attanayaka) on January 11, 1985, **we have not had the pleasure of meeting the Hon. Minister of Higher Education from 15.2.1980 until your assumption of duties as Minister of Higher Education in the Interim Cabinet on 20.12.1988.** We are therefore, looking forward to meeting you early as Minister of Higher Education after the lapse of nearly a decade (our last meeting with the Minister of H.E. having been on December 20, 1979).

என்று அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீதுக்கு எழுதிய கடிதத்தில் ஷாபி மரிக்கார் குறிப்பிட்டிருந்தார்.

ஏறக்குறைய 10 வருடங்களாக உயர்கல்விக்குப் பொறுப்பான அமைச்சராகவிருந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவை அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு சந்திக்க முடியாமற் போனமை துரதிஷ்டமானது. முஸ்லிம் சமூகத்தின் உயர்கல்வி இதனால் பல பின்னடைவுகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியது. ஆயினும், யு.என்.பி. அரசாங்கத்தின் கல்வி, கலாசார விவகார அமைச்சர் ஐ.எம். ஆர்.ஏ.ஈரியகொல்ல, கல்வி, உயர் கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன, உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத், கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார, கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி, உயர் கல்வி அமைச்சர் அனுரபண்டாரநாயக்கா, கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரண, கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் ஆகியோர் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்பாடுகளுக்கு உதவியிருக்கின்றனர். ஜனாதிபதிகள் ஆர். பிரேமதாஸவும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் ஆதரவளித்திருக்கின்றனர்.

ஷாபிமரிக்காரின் இம்முறையீடுகள் பற்றிப் பார்க்க வேண்டிய இன்னுமொரு பக்கமுமிருக்கிறது. கல்விச் சீர்திருத்தங்கள் நாட்டின் தேவைக்கேற்ப ஏற்படுவன. இலங்கையில் 1971களில் ஏற்பட்ட ஜே.வி.பி. யினரின் இளைஞர் கிளர்ச்சி, 1970களில் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தங்களுக்குக் காரணமாக அமைந்தது. இக்கிளர்ச்சி பற்றி ஆராய்ந்த டட்லி சியார்ஸின் அறிக்கை, உயர்கல்வி, சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஒஸ்மன் ஜயரட்ன குழுவின் அறிக்கை என்பனவற்றின் அடிப்படையில் 1972களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி முறையில் காணப்பட்ட குறைபாடே இந்த இளைஞர் போராட்டம் ஏற்படக் காரணம் என்று கருதப்பட்டதால் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களும் அதனை மனதிற்கொண்டு அதற்குப் பரிகாரம் காண்பதாக அமைந்திருந்தது. கலை, விஞ்ஞானப் பிரிவுகள் இல்லாமற் செய்யப்பட்டு க.பொ.த. (சா.த.) பரீட்சை வரை ஒரு பொதுப் பாடத்திட்டத்தை மாணவர் அனைவரும் பின்பற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. தொழில்சார் பாடங்கள் முக்கியத்துவப்- படுத்தப்பட்டன. அதுவரை இருந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை என்.ஸீ.ஜீ.ஈ. என்றும் உயர்தரப்பரீட்சை எச்.என்.ஸீ.ஈ. என்றும் மறுநாமங்களைப் பெற்றன.

1972இல் இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டம் அமுலுக்கு வந்தது. பல்கலைக்கழகங்கள் ஒரு நிருவாகத்தின் கீழ்க் கொணரப்பட்டன. முழு இலங்கைக்கும் ஒரு பல்கலைக்கழகம் ஏற்பட்டது. இயங்கிக் கொண்டிருந்த சகல பல்கலைக்கழகங்களும் வளாகங்களாயின. ஒரு உபவேந்தரின் கீழ் இவ்வளாகங்கள் இயங்கின. இளைஞர்களின் உணர்வுகள் வெளிப்படத் தொடங்கிய 1970களிலிருந்து பின்தங்கிய பிரதேச மாணவர்களையும் இணைத்துச் செல்லும் போக்கில் பல்கலைக்கழக அனுமதிக்கொள்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. 1972இலும் 1978இலும் புதிய அரசியல் யாப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. கல்விச் சீர்திருத்தத்துக்காக 1981இல் பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டு அதனடிப்படையில் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மீண்டும் 1983இல் எற்பட்ட சிங்களவர்-தமிழர் இனக்கலவரமும் அதனை ஒட்டி ஏற்பட்ட தமிழ் இளைஞர் போராட்ட இயக்கங்களும், 1989/90இல் ஏற்பட்ட ஜே.வி.பி.யினரின் இளைஞர் எழுச்சியும் கல்வியில் அடிக்கடி தொடர்ச்சியான சீர்திருத்தங்களைத் தேவைப்படுத்தியதால் 1991இல் நிரந்தர தேசிய கல்வி ஆணைக்குழு ஒன்று தாபிதமானது. பல்கலைக்கழக வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கில் பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு, பின்தங்கிய பிரதேசங்களுக்கும் கல்வியை விரிவுபடுத்துதல், தேசிய மொழிகளில் கல்வி என்றவாறு தேசிய நோக்கில் கல்வி புனரமைக்கப்பட்டது. அதனால் இன, சமய அடிப்படையிலான சிந்தனைகள் இச்சீர்திருத்தங்களில் முக்கியத்துவப்படுத்தப்படவில்லை. சமயக்கல்விக்குப் பதில் ஒழுக்கக் கல்வி (Moral Education) பற்றிச் சிந்திக்கப்பட்டது. இந்நோக்கிலும் போக்கிலும் ஜே.ஆர்.-ரணில் யுகத்தில் ஷாபிமரிக்காரின் இனத்துவம்சார் கல்வித் தேவைகள் கவனிப்பாரற்றுப் போயின எனக் கருதவும் இடமிருக்கிறது.

21

நிறைவுரை

கல்விமான் ஷாபிமரிக்கார் பற்றிய இந்நூல் அவரின் கல்வி மேம்பாட்டு முயற்சிகளை நாட்டினதும் முஸ்லிம் சமூகத்தினதும் கவனத்திற்கு எத்திவைக்கிறது. ஷாபிமரிக்காரின் வரலாற்றுப் பின்புலத்தை, குடும்பப் பின்னணியை, அவரின் உதார பண்புகளை, 'ஷாபியைப் புரிந்து கொள்ளல்' என்ற அத்தியாயம் தருகிறது. அளுத்கம ஸாஹிறாவைக் கட்டி எழுப்பி ஜாயாவின் எண்ணத்தை நிறைவேற்றியவர் அவர். அரசாங்கத்திலிருந்து மீளப் பெறப்பட்ட கொழும்பு ஸாஹிறாவின் அதிபராகவிருந்து அதை அதன் பழைய நிலைக்கு மீளக் கட்டி எழுப்பியவரும் அவர்தான்.

முஸ்லிம் கல்வி முன்னோடிகளையும் முஸ்லிம் கல்வி மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தவர்களையும் ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களின் இளமனங்களில் ஆழப்பதித்தவர் ஷாபிமரிக்கார். எம்.ஸி. சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஜ.எல்.எம். அப்துல் அஸீஸ், ஒறாபிபாஷா, கரீம்ஜீ ஜபர்ஜீ, என்.எச்.எம். அப்துல் காதர், ரி.பி. ஜாயா, என்.டி.எச். அப்துல் கபூர், பி.பி. உம்பிச்சி ஆகியோரெல்லாம் ஷாபிமரிக்கார் ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்த உத்தமர்களின் வரிசையில் முக்கியமானவர்கள். அவர்களின் நினைவு தினங்களில் கல்லூரியில் நிகழும் அசெம்பிளியில் அவர்களைப் பற்றி அதிபர் ஷாபிமரிக்கார் விஷேட உரைகள் நிகழ்த்துவதும் அவர்கள் பேரில் துஆப் பிரார்த்தனைகள் செய்வதும் கல்லூரியின் வழமையான நினைவுதின நிகழ்வுகளாகவிருந்தன. ரி.பி. ஜாயா, ஒறாபிபாஷா நினைவுப் பரவல்களை நாடளாவிய ரீதியில் நடத்தி சமூகத்தின் சார்பில் நன்றிக்கடன் இறுத்தவர் அவர். நீதியரசர் எம்.ரி. அக்பரின் நூறாவது பிறந்த தினவிழா தேசிய எற்பாட்டுக் குழுவிலும் (15.06.1980) ஷாபிமரிக்கார் இடம் பெற்றிருந்தார்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுச் செயலணியின் தாபகத் தலைவராகவிருந்து மரண பரியந்தம் அவர் செய்த பணிகளை சமூகமும் நாடும் நன்கறியும். முஸ்லிம் கல்வி, சமயக்கல்வி, அரபு மொழி மேம்பாடு,

பல்கலைக்கழகக் கல்வி சம்பந்தமாக அவரின் பணிகள் விதந்துரைக்கத்தக்கன. யூனானி மருத்துவத் துறையின் இன்றைய உயிர்வாழ்வுக்கும் அவர் பங்களித்திருக்கிறார். அவர் சிபாரிசு செய்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை இன்றும் ஏற்புடையது. கல்வி பற்றி, ஆசிரியர் திருப்தியும் பொறுப்பும் பற்றி, சிறுவர் கரிசனை பற்றி, ஒழுக்கக் கட்டுப்பாடு, பெற்றோர் பொறுப்பு, தொழிற்கல்வி, சுயாதீன தனியார் பாடசாலைகள் பற்றியெல்லாம் அவரின் சிந்தனைகளும் கருத்துக்களும் அவரை ஓர் தலைசிறந்த கல்விமானாகக் காட்டுகின்றன. கல்வி நிருவாகிகள், தேசிய கல்வியியலாளர்களால் அவரின் தேசியக் கல்விப் பங்களிப்பு ஏற்றிப் போற்றப்படுகின்றது. ஷாபி நிலைகொண்டிருந்த முஸ்லிம் லீக் அரசியல், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிகழ்ந்த முஸ்லிம் தலைமைப் போராட்டம், பாக்கீர் மாக்காரின் அரசியல், ஸாஹிறாக் கல்லூரியை மீளப் பெறுவதில் எதிர்கொள்ள நேர்ந்த அரசியல் பேதங்களும், குரோதங்களும், கல்விக்கும் செல்வத்துக்குமிடை பேருவலையில் நடைபெற்ற ஊமைப்போர் என்பனவெல்லாம் ஷாபிமரிக்காரின் கல்வி முயற்சிகளை எம்மட்டுப் பாதித்தன என்பதை உணர்த்துவதற்கும் முயற்சித்திருக்கிறேன்.

ஷாபியின் மொழிக் கொள்கை கவனத்துக்குரியது. அரச கரும மொழியாக சிங்களத்தை அவர் ஆதரித்தார். கல்வி மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோருக்கிருக்க வேண்டுமென்பது அவரின் நிலைப்பாடு. தாய் மொழியைக் கல்வி மொழியாக பெற்றோர் தெரிந்தெடுப்பதை அவர் எதிர்க்கவில்லை. ஆயினும், சிங்கள மொழியில் முஸ்லிம் மாணவர் கற்பதை அவர் வரவேற்றார். முஸ்லிம்களுக்கென சிங்கள மொழிமூலப் பாடசாலைகள் தனியாக இயங்குவதையும் அவர் விரும்பினார். சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு மொழிகளை முஸ்லிம் மாணவர் கற்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். சிங்கள மொழிமூலம் கற்கும் மாணவர்கள் விடயத்தில் கூடிய கரிசனை காட்ட வேண்டிய தேவை அவருக்கிருந்தது. ஆங்கில மொழிமூல வகுப்புகள் படிப்படியாக இல்லாமற் போன போது அவற்றினிடத்துக்கு சிங்கள மொழிமூல வகுப்புகளை கொழும்பு ஸாஹிறாவில் ஆரம்பித்த முன்னவரும் ஷாபிமரிக்கார்தான்.

இலவசக் கல்வித் திட்டத்தின் பயனை அரசாங்கப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மட்டுமன்றி தனியார் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களும் அனுபவிக்க வேண்டுமென்று ஷாபி விரும்பினார். அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பெறும் சம்பளம், ஓய்வூதியம், பயிற்சிகள் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டுமென அவர் அரசாங்கத்தைக் கோரினார். அம்முயற்சியில் தொழிற்சங்கச்

செயற்பாடுகளையும் ஊக்கினார். ஸாஹிறாவை அச்செயற்பாடுகளின் களமாக்கினார். அதன் விளைவாக தனியார் பாடசாலைகள் 1980களில் பல அரச நிவாரணங்களை மீளப் பெறத்தொடங்கின. ஆசிரியர்களின் மன மகிழ்ச்சியும் திருப்தியும் அவர்கள் கற்பித்தற் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு அவசியம் என்பதில் ஷாபிமரிக்கார் கொண்டிருந்த நம்பிக்கை அவரின் செயற்பாடுகளில் தெரிந்தது. ஆசிரியர் சங்கம், ஆசிரியர் நலன்பேண் சங்கம் என்பனவற்றையெல்லாம் அமைத்து ஸாஹிறாக் கல்லூரி ஆசிரியர்களின் நலன் பேணியவர் அவர். ஸாஹிறாவின் ஆசிரியர்களுக்கென 'போணஸ்' திட்டமொன்றையும் அறிமுகப்படுத்தி ஏனைய தனியார் பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக ஆசிரியர்களின் சேவையைக் கௌரவப்படுத்தியவர் அவர். ஷாபிமரிக்கார் காலத்தில் ஸாஹிறாவில் கற்பித்துக் கொண்டிருந்த பல இனங்களையும் சேர்ந்த ஆசிரியர்களிடை நிலவிய ஐக்கியமும் இணக்கப்பாடும் குறித்துச் சொல்லப்பட வேண்டிய முக்கியத்துவமுடையது.

சமயக்கல்வி பாடசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டுமென்பதில் மிக்க உறுதியான நிலைப்பாடுடையவராக இருந்தவர் அவர். ஒழுக்கக்கல்வியை (Moral Education) அவர் வெறுக்கவில்லை. ஆனால், சமயக் கல்விக்குப் பதிலாக ஒழுக்கக்கல்வியை அரசாங்கம் பாடசாலைகளில் கற்பிக்க ஆலோசித்தபோது அதில் மறைந்திருந்த ஆபத்தை உணர்ந்து அதன் அமுலாக்கத்தை எதிர்த்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார்.

பாடசாலைகளில் தொழிற்கல்வி போதிக்கப்படுவதை அவர் வெகுவாக ஆதரித்தார். ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களின் தொழிற் கல்வி மேம்பாட்டுக்கு அவர் செய்தவை அனந்தம்.

பாடசாலையை சமூகத்தின் மாதிரிச் சிறுஉருவமாகக் கொண்டவர் அவர். பாடசாலைகள் சமூகத்தைப் பிரதிபலிப்பதாகவும், சமூகச் செயற்பாடுகளின் மையமாகவும் மட்டுமன்றி, சமுதாயம் பாடசாலைகளினால் நெறிப்படுத்தப்பட வேண்டுமென்பதும் அவரின் கொள்கையாகவிருந்தது. சுற்றிவாழும் சமுதாயத்தின் கலாசார வாசனை கல்லூரியிலும் கமழவேண்டுமென அவர் கருதினார். பௌத்த, இந்து, முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சியாளர்களின், 'கலாசாரப் பின்னணியில் கல்வி' என்ற எண்ணத்துக்கு 20ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பாகத்தில் உயிர்கொடுத்தவர்களில் ஷாபிமரிக்கார் முக்கியமானவர். அரசாங்க பாடசாலைகளைவிட தனியார் பாடசாலைகளினாற்றான் இதனைச் சிறப்பாகப் பேண முடியுமென்பதும் ஷாபிமரிக்காரின் நிலைப்பாடாகவிருந்தது.

சமூகத்தின் கல்வியை மேம்படுத்துவதற்கு சமூகத்தின் சக்திகளை ஒன்றிணைத்துச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்பட்டவர் அவர். அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்பாடுகளில் இதைத் தெளிவாகக் காண முடிந்தது. ஆசிரியர், பெற்றோர், கல்வியலாளர்கள், நிருவாகிகள், அரசியல்வாதிகள், சமயப் பெரியார்களையெல்லாம், அரசியல், பிரதேசவாதங்களைக் கடந்து, ஒன்று சேர்த்து, தன்னுடைய கல்விப் பயணத்தில் இணைத்துச் சென்று சாதனைகள் புரிந்தவர் அவர்.

கல்வியில் தாராள சிந்தை கொண்டவர் ஷாபிமரிக்கார். 'எல்லோருக்கும் கல்வி', 'கல்வியில் சமசந்தர்ப்பம்' என்பன அவரின் கோஷங்களாகவிருந்தன. உள்நாட்டு யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிள்ளைகளின் கல்வியில் கூடிய கரிசனை காட்டிச் செயற்பட்டவர் அவர். இடம்பெயர்ந்த மாணவர்களின் பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்விகளுக்காக அவர் செய்த அபார பணியை நாடும் சமூகமும் நன்கறியும். பெண்கல்வியிலும் அவர் கரிசனை காட்டினார். திறமையுள்ள வறிய, கிராமப்புற மாணவர்களுக்குச் சகாயமளித்து கொழும்பு ஸாஹிறாவில் உயர்கல்வியளித்தவர் அவர். வசதிகுறைந்த ஸாஹிறா மாணவர்களுக்கென சமூகசேவை நிதியமொன்றையும் அமைத்து அவர்களின் கல்விக்கும் உதவிக்கரம் நீட்டினார்.

போகொட பிரேமரத்ன, லக்ஷ்மன் ஜயதிலக போன்ற கல்விமான்களுடன் இணைந்து தேசியக் கல்விக்கும் தனது நிறைவான பங்களிப்பை ஷாபிமரிக்கார் செய்திருக்கிறார். பல அரச கல்விக் குழுக்களிலும், சபைகள், நிறுவனங்களிலும் அவர் பங்குகொண்டு தேசத்துக்குப் பணி செய்திருக்கிறார்.

அவர் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது அங்கு முஸ்லிம் மஜ்லிஸ் ஒன்றை ஏற்படுத்தி அதனூடு செய்த பணிகள் சமூகத்தின் பெருமை காப்பன. ஸாஹிறாக் கல்லூரி மாணவனாக இருந்த போதும் பேருவலையின் ஆரம்பகாலப் பட்டதாரியாக விளங்கிய போதும் இளம் ஷாபியின் இயக்க ரீதியான பணிகள் சமூகத்துக்கு நன்மை பயத்தன; ஊக்கம் கொடுத்தன.

தன் வாழ்காலத்தின் பின்னரைப் பகுதியில் கரம்பிடித்த மனைவி கைறுன்னிஸா சல்தீன் கணவனின் கல்விச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவிருந்த அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவியாகவும், பின்னர், அதன் செயலாளர் நாயகமாகவும் பணி செய்தமை ஷாபியின் ஆத்மாவுக்கு நிச்சயம் மகிழ்ச்சி தரும். ரி.பி. ஜாயா இச்சங்கத்தின்

தலைவராகப் பல ஆண்டுகள் செயற்பட்டவர் என்பதும் கவனத்துக்குரியது. ஷாபியின் ஒரேயொரு மகன் அப்துல் அஹத் அவரின் கல்விப் பணிக்குக் கிடைத்த இறைவரமாகும்.

> "During my life time I have done my work to the best of my ability to promote education among our children. I wish to see an ideal society, an educated society, a disciplined society, a society that would propagate peace and harmony and make this pleasant isle of ours truly a happier place to live in" (Shafie Marikar S.L.M., 2005: 53)

என்பது ஷாபிமரிக்காருடனான அஸ்வரின் நேர்காணலொன்றில் அஸ்வரிடம் ஷாபிமரிக்கார் தெரிவித்தது. தன்னால் முடிந்ததை தன் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கு அவர் செய்திருக்கிறார். அவர் எவ்வாறானதொரு சமூகத்தைக் கான விழைந்தாரோ அவ்வாறானதொரு சமூகத்தைக் கட்டிஎழுப்பும் கடமையும் பொறுப்பும் முஸ்லிம் சமூகத்துக்கிருக்கிறது.

ஷாபிமரிக்கார் ஸாஹிறாவைவிட்டு நீங்கியதும், சட்டம் தேவைப்படுத்திய அதிபர் பதவிக்குரிய தகைமைகளை உதாசீனம் செய்துவிட்டு 'கற்கைகள் மற்றும் இணைப்பாடவிதானங்களுக்கான பணிப்பாளர்' (Director of Studies & Co-curricula activities) என்ற மகுடத்தில் அதிபரின் ஆசனத்தில் ஒருவரை ஆளுநர் சபை அமர்த்தியது. உதவி அதிபராக அதே ஆளுநர் சபை 1984இல் என்னையும் நியமித்தது. பணிப்பாளர்கால அட்டகாசங்களுக்கும், பணிப்பாளர் நீங்கிச் சென்ற போது ஏற்பட்ட காடைத்தனத்தின் அட்டூழியங் களுக்கும் ஸாஹிறா அடிபணிந்து நின்றது. அக்காலத்தில் உதவி அதிபராகவிருந்து நான் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள், நெருக்கு வாரங்களுக்கு ஷாபியின் ஆலோசனைகளே எனக்கு ஆறுதலும் தெம்பும் தந்தன. பல விடயங்களைத் துணிவாக எதிர் கொள்ளும் சக்தியை அவை எனக்குத் தந்தன. அவை தான் இன்றைய முஸ்லிம் ஸாஹிறாவுக்குத் திருப்புமுனையாக அமைந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் திராணியை அன்று எமக்குத் தந்தன.

1972இலிருந்து ஷாபியின் மரண பரியந்தம் அவருடன் நெருக்கமான உறவுகளைப் பேணியவன், பத்துவருடங்கள் அவரின் கீழ் ஆசிரியப் பணிபுரிந்தவன், அவர் வாழ்ந்த ஸாஹிறாக் கல்லூரி வளாகத்தில் வாழ்ந்தவன், அவரின் உணர்வுகளைப் புரிந்து வைத்திருந்தவன், அவரின் மேதைமையிலிருந்து ஊக்கம் பெற்றவன் என்ற வகையில் ஷாபிமரிக்காரின் கல்விச் சிந்தனைகள், பணிகள் பற்றி சில துளிகளை சமூகத்தின் அறிகைக்காகத் தெளித்திருக்கிறேன். ஜாயா காட்டிய வழியில் தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்த உத்தமர் அவர். முஸ்லிம் சமூகம் கனம்

பண்ண வேண்டிய கனவான் அவர். அவரின் கல்விப் பணிகளைப் புறந்தள்ளி எழுதும் இலங்கை முஸ்லிம் கல்வி வரலாறு பூரணத்துவமுடையதாகாது என்பது என்கருத்து.

> "தம் சமூகத்தின் தேவையை அச்சமூகத்திற் பெரும்பாலோர் அடிப்படையாக உணர்ந்து ஒப்புக் கொண்டு அதை நிவர்த்திக்க ஒழுங்கான முறையில் திட்டமிடப்பட்ட முயற்சி 1891ஆம் ஆண்டுக்கு முன்பு எடுக்கப்படவில்லை. பொதுவாகப் பழங்காலத்துத் திண்ணைப் பள்ளிக் கூடங்களும், மகுதிப் பள்ளிக் கூடங்களுமே நடைபெற்று வந்தன. இவ்விடங்களிலே ஆதியந்தமாய்க் கற்பன யாவும் முக்கியமாக 'குர்ஆன்' ஆகவே இருந்தது. கல்வி இலாகாவின் அங்கீகாரம் பெற்றுப் பரீட்சை செய்யப்படும் பள்ளிக்கூட வகுப்புகளிலும் ஒன்றோ இரண்டு முஸ்லிம் பிள்ளைகளின் வரவைக் காணலாம். ஆனால், அவ்விதம் வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை கொஞ்சத்தினும் கொஞ்சம்"

இது கல்வித் திணைக்களத் தலைவரின் 1895ஆம் ஆண்டைய நிருவாக அறிக்கை தெரிவிக்கும் முஸ்லிம்களின் அன்றைய கல்வி நிலை.

> "முஸ்லிம்கள் கெட்டித்தனத்தில் குறைவில்லாதிருந்தும், ஆங்கிலக் கல்வியில், அதுவும் முக்கியமாக மேலைத்தேயக் கல்வியில் கவனம் எடுப்பதில்லை. மிஸ்றிலிருந்து நாடுகடத்தப்பட்டிருந்த அறபிபாஷாவினதும் அவர் சகாக்களினதும் முயற்சிகளாலும் போதனைகளாலும் முஸ்லிம்களுக்கிடையில் ஏற்பட்ட திருத்தம் வெளித் தோற்றத்தளவிலேயே, அதாவது, ஐரோப்பிய துருக்கியர் உடையைப் பொறுத்த மட்டிலேயே காணப்படுவதாயிருக்கிறது. இப்போதாவது உண்மைநிலையை உணர்ந்திட்டார்களோவெனின் அதற்குரிய அடையாளம் காணப்படவில்லை. அவர்களின் மூதாதையர்கள் இருளடைந்த மத்திய காலத்திலே ஆசியா, ஐரோப்பாவின் பெரும்பகுதியில் அறிவு நாகரிகம் என்னும் விளக்குகளை கொழுந்துவிட்டெரியச் செய்தவர்கள். அதற்குத்தக அவர்கள் அறிந்து நடந்து கொள்ள ஆர்வம் காட்டாதவர்களாயிருக்கின்றனர்"

என்பது சேர் பொன். அருணாசலம் 1901ஆம் ஆண்டைய குடிசன மதிப்பீட்டறிக்கையில் பதிவு செய்திருப்பது. இந்நிலையிலிருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் முயன்றோர் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் தமக்கென நிரந்தர இடத்தைப் பெறுகின்றனர். அந்த வகையில் எம்.ஸி. சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், ஜ.எல். எம். அப்துல் அஸீஸ், ஒறாபிபாஷா முதலானோரை முஸ்லிம் கல்வி முன்னோடிகளாகக் காண்கிறோம். எம்.ரி. அக்பர், ரி.பி. ஜாயா, சேர் றாசிக் பரீத், எ.எம்.எ. அஸீஸ், பதியுத்தீன் மஹ்மூத், எம்.எச்.எம். அஷ்ர.்.ப் என்ற நாமங்களும் அவ்வரலாற்றில் பதிவுண்டிருக்கின்றன. சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா, சுவாமி விபுலாநந்தர், டபிள்யூ. தஹநாயக்க, ஈ.பி. டென்ஹாம் போன்றோர் முஸ்லிம்களின் கல்விக்குச் செய்த சேவைகளும் மறக்கப்பட வில்லை. அந்த வகையில் தன்னுயிர் பிரியும்வரை தன்னலம் கருதாது

கல்விப் பணி செய்து தன்னையே முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கு அர்ப்பணித்த கல்விமான் ஷாபிமரிக்காரும் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் தனியிடம் பெறுகிறார். அவர் பணியும் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வியை மேம்படுத்துவதில் கணிசமாக உதவியிருக்கிறது.

ஷாபிமரிக்கார் நாட்டுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் செய்த கல்விப் பணிக்காக அவர் வாழும் போதே கௌரவிக்கப்பட்டார். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் 24.09.2005இல் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தராகவிருந்த ஏ.ஜீ. ஹுசைன் இஸ்மாயில் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு ஏற்பாடு செய்திருந்த பாராட்டு விழாவில் இன, மத, பேதமின்றி பிரமுகர்களும் பொதுமக்களும் பெருமளவில் குழுமியிருந்தனர். தேசியக் கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக, முன்னாள் செனட்டர் எஸ்.இஸட்.எம். மஷ்ஹூர் மௌலானா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீம், இந்தியத் தூதுவர் நிருபமாராவ், லிபிய, மலேசிய, எகிப்து நாடுகளின் இலங்கைத் தூதுவர்கள், முஸ்லிம் லீக் தலைவர் ஏ.எல்.எம். ஹாஷிம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.எம். சுஹைர், பிரதி மேயர் ஆஸாத் சாலி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், எம்.எச். ஆமித், எம்.ஏ. அப்துல் மஜீத் ஆகியோர், கபீர் ஹாஷிம் (பா.உ.), ரீ. மகேஸ்வரன் (பா.உ.), கல்விமான் ஏ.எம். சமீம், தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜெஸீமா இஸ்மாயில், மேல் மாகாண ஆளுநர் எஸ். அலவி மௌலானா ஆகியோரெல்லாம் கலந்து கொண்டிருந்த அப்பெருவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அப்போதைய சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டார விசேட உரை நிகழ்த்தினார். அவ்வுரையில்,

> "முஸ்லிம் கல்விப் பணிக்காக அயராது பாடுபட்டு பெரும் சேவை செய்த சிரேஷ்ட கல்விமான் எஸ்.எல்.எம். ஷாபிமரிக்காரின் சேவைகளை நாம் முழுமையாக அங்கீகரிக்கிறோம். அவரின் நற்சேவைகளை நாம் பாராட்டுகிறோம். மெச்சிப் போற்றுகிறோம்... சிறந்த கல்விமானாக இருக்கும் ஷாபிமரைக்கார் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி பொதுவாக கல்வித் துறைக்கும் பெரும் சேவை புரிகிறார். உத்தமர்களின் வாழ்வியலை நூல்களாக நாம் வெளியிட வேண்டும். இது நல்ல பணியாகும். நான் கல்வி அமைச்சராக இருந்த போது கல்விமான் கலாநிதி ரி.பி. ஜாயாவின் வாழ்க்கை வரலாற்றை நூலாகப் பிரசுரித்து பாடசாலைகளுக்கு விநியோகம் செய்தேன்" (லொக்குபண்டார வி.ஜே.மு., தினகரன் - 25.09.2005)

என்று அவர் குறிப்பிட்டார். இந்நூல் வெளியீடு லொக்குபண்டாரவின் எண்ணத்தை மட்டுமன்றி ஷாபிமரிக்கார் தனது சமூகத்தினதும் நாட்டினதும் கல்விக்காற்றிய பணியை நாடும் உலகும் அறியச் செய்யும் என்னுடைய

நோக்கத்தையும் பூர்த்தி செய்கிறது. முஸ்லிம் சமூகம் இப்போதாவது ஷாபிமரிக்காரின் அர்ப்பணிப்புகளைப் புரிந்து கொள்ளுமாயின், அவர் பட்ட சிரமங்களுக்காக அனுதாபப்படுமாயின், அவரின் செயற்பாடுகளிலிருந்து ஊக்கம் பெறுமாயின், இந்நூலை வெளிக்கொணர வேண்டுமென்ற என்னுடைய நோக்கத்தின் பெரும்பகுதி நிறைவேறிவிட்ட திருப்தி எனக்கேற்படும். ஷாபி பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்கும் அவர் வாழ்ந்த காலத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய கல்விப் பிரச்சினைகளை அவர் எதிர் கொண்ட விதத்தைத் தெரிந்து கொள்வதற்கும் இந்நூல் உதவும். நானே வலிந்து என்மீது சுமத்திக் கொண்ட சமூகக் கடமையொன்றை இந் நூலின் வெளியீடு நிறைவேற்றி வைக்கிறது.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 1942இல் இலங்கைப் பல்கலைக்கழகமான போது அப்பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான முதலாவது குழுவில் இடம்பெற்றுப் பெருமை பெற்ற முஸ்லிம் பட்டதாரியை, அதே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மஜ்லிஸ் ஒன்றை முதன் முதலில் தாபித்து அதன் தாபகத் தலைவராகப் பணிசெய்த புகழுக்குரியவரை, உலக யுத்த காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் கல்வியை மனம் கொண்டு கல்விமான் ரி.பி. ஜாயா பிரதேசங்களில் தாபிக்கத் தொடங்கிய கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் முதலாவது கிளைப் பாடசாலையான அளுத்கம ஸாஹிறாவின் இரண்டாவது சுயாதீன அதிபராகவிருந்து, கல்லூரியை அரசாங்கம் சுவீகரிக்கும்வரை அளப்பரும் பணிசெய்து அக்கல்லூரியை இவ்வுயர் நிலைக்காளாக்கியவரை, எ. எம்.எ. அஸீஸ், பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோரின் சமகாலத்தில் அதிபராகவிருந்தவரை, முஸ்லிம் லீக்கிலிருந்து பிரிந்து சுயாதீனமாக இயங்கத்தொடங்கிய அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டுச் செயற்குழுவின் தாபகத் தலைவரை, ஜாயா இவ்வுலகை நீத்த போது ஏற்படுத்தப்பட்ட ரி.பி. ஜாயா நினைவு நிதியத்தின் தாபகச் செயலாளரை, ஸாஹிறாவின் தோற்றத்துக்குக் காரணபுருஷர்களுள் ஒருவராகவிருந்த ஒறாபிபாஷாவின் நினைவை முஸ்லிம்களின் மனங்களில் நிரந்தரமாக நிலைபெறச் செய்த நன்றியுணர்வு மீதூரப் பெற்றவரை, மீண்டும் தனியார் பாடசாலையான கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபராக, ஆளுநர் சபை கல்லூரியின் நிருவாகத்தைப் பொறுப்பேற்கும்வரை அரும் பணியாற்றியவரை, ஜாயாவின் அபிமான மாணவனை, ஜாயாவின் கல்வித்துறை வாரிசு என்று கூறுவதற்கு சகல தகைமைகளையும் கொண்டிருந்த ஷாபிமரிக்காரை இந்நூல் சமூகத்துக்கு நினைவூட்டும்; அவர் வழியிற் செயற்பட சமூகச் செயற்பாட்டாளர்கள், கல்விமான்களை ஊக்குவிக்கும்.

ஷாபிமரிக்காரின் உள்ளத்தில் உறைந்து கிடந்த கொழும்பு, அளுத்கம ஸாஹிறாக் கல்லூரிகள், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, அகில இலங்கை முஸ்லிம் லீக், ஜாயா ஞாபகார்த்த நிதியம் என்பனவற்றின் சிறப்பான செயற்பாடுகளை, இலங்கை முஸ்லிம் கல்வி மேம்பாட்டு முயற்சிகளை, முஸ்லிம் சமூகம் சிரத்தையுடன் முன்னெடுக்க வேண்டும். அது அவரின் ஆத்மாவுக்கு மகிழ்ச்சி தரும். யூனானி வைத்தியத்துறையின் சிறப்பான வளர்ச்சியும் அவரின் முக்கிய கரிசனையாகவிருந்தது. மாநாட்டு மண்டபம், நூலகம், தகவல்மையம் என்பவற்றுடன் கூடிய அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாட்டுச் செயலகமொன்றை ஏற்படுத்தும் எண்ணமும் 1991களில் அவருக்கேற்பட்டது. ஜனாதிபதியை அணுகி அதற்காகக் காணித்துண்டொன்றைப் பெற்றுக் கொள்ளவும் அவர் எண்ணியிருந்தார். நிரந்தரமான காரியாலயமொன்றை அமைத்துக் கொள்ளும் வரை பொருத்தமான இடமொன்றில் வாடகைக்காவது ஓரிடத்தைப் பெற்று அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாட்டை சிறப்பாக இயங்கச் செய்ய வேண்டும் என்றும் அவர் கருதியிருந்தார். துரதிஷ்டவசமாக இன்றுவரை அவரின் அந்த எண்ணமும் நிறைவேறவில்லை. அதையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் முஸ்லிம் சமூகத்துக்கிருக்கிறது. இந்நூலின் பின் அட்டையில் என்னைப் பற்றிய குறிப்பை எழுதியிருப்பவர் பேராசிரியர் எஸ். சந்திரசேகரன் அவர்கள். அவருக்கு என் நன்றிகள் உரித்து.

ஷாபிமரிக்கார் பற்றி ஒரு நூல் வெளிவரவேண்டுமென்ற என்னுடைய எண்ணத்துக்கு முதன்மை ஊக்கத்தைத் தந்தவர் எனது பல்கலைக்கழக நண்பர், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் செயற்குழுத் தலைவர், கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள். அம்மாநாட்டின் தலைவர் கலாநிதி ஏ.ஜீ. ஹுசைன் இஸ்மாயிலும் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களும் இந்நூல் வெளியீட்டில் பேரூக்கம் காட்டினர். ஹுசைன் இஸ்மாயிலும் அனஸும் ஷாபிமரிக்காரின் தொடக்க கால கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி மாணவர்கள். இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஷாபிமரிக்காரின் உறவினர். திறந்த பல்கலைக்கழகக் கல்வித்துறை ஒய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் ரி.ரி. ராஜேந்திரமும் கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் எஸ். தில்லைநடராஜாவும் நன்றிக்குரியவர்கள். பைசல் பழீல் தந்துதவிய பெறற்கரிய ஆவணங்களும் உற்சாகமும் இந் நூலாக்கத்துக்கு உதவியிருக்கின்றன. என் எழுத்துருவைக் கணினி மயப்படுத்திய திருமதி ஏ.ஜீ. சில்மியாவும் சி. குகனேஸ்வரனும், இவற்றையெல்லாம் மேலோடி இந்நூலை இவ்வமைப்பில் ஒழுங்குபடுத்தியுதவிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப உதவியாளர் க. இராஜ் மோகனும் நன்றிக்குரியவர்கள்.

உசாத்துணை

Reference

அமிர்தலிங்கம் ஏ., தினபதி - 19.09.1980

அமிர்தலிங்கம் ஏ., தினகரன் - 19.09.1980

அப்துல் அஸீஸ் ஐ.எல்.எம். 1907, திரு. இராமநாதனின் இலங்கைச் சோனகர் இன வரலாறு – ஒரு திறனாய்வு, சோனக இஸ்லாமிய கலாசார நிலையம், கொழும்பு

அமீன் முஹம்மத் எம்., தினகரன் - 09.08.1991, அழுத்கம ஸாஹிறாக் கல்லூரியின் வரலாறு பற்றிய ஓர் கண்ணோட்டம்

அனஸ் எம்.எஸ்.எம். 2004, எஸ்.எம்.ஏ. ஹஸன் - தற்கால முஸ்லிம், சமூக பண்பாட்டியல் வரலாற்றில் ஓர் அத்தியாயம், எஸ்.எம்.ஏ. ஹஸன் பாராட்டுவிழா ஏற்பாட்டுக்குழு, கண்டி

அஸீஸ் எ.எம்.எ. 1963, இலங்கையில் இஸ்லாம், கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம்/கண்டி

அஸீஸ் எ.எம்.எ., தினகரன் - 28.06.1958

அஸீஸ் எ.எம்.எ., தினகரன் வாரமஞ்சரி, 29.06.1958

ஆமித் எம்.எச்., தினகரன் - 01.02.1982

இக்பால் ஏ. 1990, பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார், பேசும் பேனா பேரணி, பேருவலை

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் - 1978

இன்ஸான் - 08.12.1967

இஸ்மாயில் எச்.எஸ்., தினகரன் ஞாயிறு வெளியீடு - 20.09.1964

இஸ்மாயில் ஏ.ஜீ.எச்., தினகரன் - 26.07.2001, கல்வியில் ஒளி விளக்காய்ப் பிரகாசிக்கும் பேருவலை மாளிகாஹேன முஸ்லிம் மகாவித்தியாலயம்,

ஹுசைன் இஸ்மாயில் ஏ.ஜீ. 2007, ஷாபிமரிக்காரின் கல்விச் சிந்தனைகள், Souvenir - S.L.M. Shafie Marikar Memorial Function, ACMEC & All Ceylon Union of Muslim League Youth Front, 26.04.2007

உதயம் - 29.05.1981

எங்கள் தலைவர் பதியுத்தீன் 1989, ஏ.டபிள்யு.எம். ஹன்ஸீர், தமிழ் மன்றம், கல்ஹின்னை

கமால்தீன் எஸ்.எம்., தினகரன் வாரமஞ்சரி - 29.10.1989, முஸ்லிம் கல்விப் பணியில் கால்நூற்றாண்டு.

கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள், 1987, எஸ். சந்தானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை

கலீல் எம்.ஸி.எம்., தினகரன் - 31.05.1965, இன்று அல்ஹாஜ் டாக்டர் ஜாயா ஞாபகார்த்த தினம்,

குர்ஷித் அஹ்மத், தினகரன் - 26.10.1977

சந்தானம் எஸ். 1987, கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை

சந்திரசேகரம் ப. 1975, கல்வித் தத்துவம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம்

சித்திலெவ்வை எம்.ஸி., முஸ்லிம் நேசன் - 07.01.1886

சிவத்தம்பி கா. 1977/78, ஸாஹிறாவின் தமிழ்ப் பாரம்பரியம், வளர்பிறை, ஸாஹிறாக் கல்லூரி 85ஆவது ஆண்டு நிறைவு மலர், ஏ.எம். நஹியா, ஸாஹிறாக் கல்லூரி, கொழும்பு

சுக்ரி எம்.ஏ.எம். 1994, அரபி பாஷாவும் இலங்கை முஸ்லிம்களில் அவரது செல்வாக்கும், இஸ்லாமிய சிந்தனை - ஏப்ரல்-ஜூன் 1994, நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், பேருவலை

சுக்ரி கலாநிதி எம்.ஏ.எம். 2010, இலங்கை முஸ்லிம்கள்-தொன்மைக்கான வரலாற்றுப் பாதை, கல்கிஸ்ஸை

செல்வநாயகம் எஸ்.ஜே.வி., தினகரன் ஞாயிறு வெளியீடு - 20.09.1964

தினகரன் - 17.02.1944

தினகரன் - 26.02.1945

தினகரன் - 01.05.1947

தினகரன் - 03.09.1947

தினகரன் - 27.04.1949

தினகரன் - 16.03.1950

தினகரன் ஞாயிறு வெளியீடு - 20.09.1964

தினகரன் - 04.06.1965

தினகரன் - 11.07.1969

தினகரன் - 09.06.1975

தினகரன் - 19.10.1977: 1, 5

தினகரன் - 11.09.1978

தினகரன் - 01.02.1982

தினபதி - 02.12.1967

நம்முன்னோர் 1979, முகம்மது ஸமீர் பின் ஹாஜி இஸ்மாயில் எபெண்டி (தொகுப்பு: எம்.ஸீ.எம். ஸாஹிர்), சோனக இஸ்லாமிய கலாசார நிலையம், கொழும்பு

நவமணி - 12.06.2011

நளீம் எம்.ஐ.எம்., தினகரன் - 23.02.1982

நஹியா ஏ.எம். 1991, அஸீஸும் தமிழும், இக்ர.·. வெளியீட்டகம், நிந்தவூர்

நிஸ்ஸங்க விஜேரத்ன, தினகரன் - 21.10.1977

பதியுத்தீன் மஹ்மூத், தினகரன் ஞாயிறு வெளியீடு – 20.09.1964

பதியுத்தீன் மஹ்மூத், தினபதி, 03.12.1967

பர்பரீன் (1979), எஸ்.எம். கமால்தீன், அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவை, கொழும்பு – 09

பரீட்சைகள் ஆணையாளரின் கூட்ட அறிக்கை - 28.02.1986, அல்-ஆலிம் சான்றிதழ் பரீட்சைப் பாடத்திட்டத்தைத் திருத்தியமைப்பதற்காக நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை, பரீட்சைகள் திணைக்களம், கொழும்பு

பாக்கீர் மாக்கார் எம்.ஏ., தினகரன் - 03.12.1980

பிரேமதாஸ ஆர்., தினகரன் - 19.09.1980

பிரேமதாஸ ஆர்., நல்ல மனிதரை நாடு ஒருபோதும் மறப்பதில்லை, 1983 (ஸாஹிறாக் கல்லூரி கபூர் மண்டபத்தில் ஒறாபி பாஷா பற்றி பிரதமர் ஆர். பிரேமதாஸ ஆற்றிய உரை) தொகுப்பு: ஏ.எம்.எம். மஸாஹிர், சி.எம்.எம். இஸ்மாயில், கொழும்பு – 12

மணவை முஸ்தபா, தினக்குரல் - 16.06.2006, சுயசிந்தனை வளம் பெற தாய்மொழிக்கல்வி அவசியம்

மஹ்றூப் கரீம் எம்.எம்.எம்., நவமணி - 3.10.2004, முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி நிலை சீரழிந்து செல்வதைக் கவனிப்பவர் யார்?

மஹ்ரூப் எம்.எம்.எம்., தினகரன் - 18.09.1980, இலங்கையில் அரபி பாஷா

மஹ்ரூப் மரைக்கார் எம்.எச்.எம்.எம். 1999, கல்வி, புத்தளம் மாவட்ட முஸ்லிம்கள், முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு

முஹிதீன் எச்.எம்.பி. 1974, அறிஞர் அஸீஸ் - சில நினைவுகள், கலசம் பப்ளிக்கேஷன்ஸ், கொழும்பு

முஜிபுர்ரஹ்மான், தினகரன் - 29.03.2017

லொக்குபண்டார வி.ஜே.மு., தினகரன் - 25.09.2005

வங்ஸா அஹ்மத் எம்.கே., த டைம்ஸ் ஒப் சிலோன் - 22.01.1937, சோனகர்

நாசிக் பரீத் சேர், தினகரன் வாரமஞ்சரி - 01.12.1967

நாசிக் பரீத் சேர், இன்ஸான், 08.09.1967

நியாழ் எம்.ஜே.எம். 2005, இலங்கையில் இஸ்லாம், அறபுப் பாடப் போதனைகள் - ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம், Souvenir - ACMEC Ruby Jubilee Celebrations, (1964 - 2004), Zahira College, Colombo

நூஹுல் ஹக், நவமணி, 12.06.2011

ஜலால்தீன் மௌலவி எம்.எஸ்.எம்., 1997, இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாறு, தினகரன் வாரமஞ்சரி - 16.11.1997

ஜயவர்த்தன ஜே.ஆர்., தினகரன் - 10.10.1977

ஜயவர்த்தன ஜே.ஆர்., தினகரன் - 12.10.1977

ஜெமீல் எஸ்.எச்.எம். 1980, எ.எம்.எ. அஸீஸ் அவர்களின் கல்விச் சிந்தனையும் பங்களிப்பும், கல்முனை ஸாஹிறாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், கல்முனை

ஜெமீல் எஸ்.எச்.எம். 1998, கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதின் கல்விப் பணிகள், காலச் சுவடுகள், இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது / கல்முனை

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 14.12.1963, மறைந்த தலைவருக்கு ஒரு மகத்தான மணிமண்டபம்

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 30.05.1964

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம். 1964, தினகரன் ஞாயிறு வெளியீடு - 20.09.1964

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 12.10.1967

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 25.11.1967

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 11.07.1969

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 10.10.1977

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினபதி - 10.10.1977

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 12.10.1977

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., த கிறசன்ட் - ஜூலை 1978

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 11.09.1978, நாட்டுக்குப் பொருத்தமான அரசியலமைப்புச் சட்டம்

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 15.09.1978

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., த கிறசன்ட் - நவம். / டிசம். 1979: 3, 6.

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., தினகரன் - 03.12.1980

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., த கிறசன்ட், ஜன. - மார்ச் 1982, ஸாஹிறாக் கல்லூரி, கொழும்பு

ஷாபிமரிக்கார் எஸ்.எல்.எம்., ACMEC Journal Oct. 1993, Vol.1, No. 1

ஹன்ஸீர் ஏ.டபிள்யு.எம். 1989, எங்கள் தலைவர் பதியுத்தீன், தமிழ் மன்றம், கல்ஹின்னை

ஹஸன் எஸ்.எம்.ஏ. 1997, வைத்தியர் திலகம் அப்துல் அஸீஸ், ஓறாபிபாஷா கலாசார நிலையம், கண்டி

ஹுசைன் இஸ்மாயில் ஏ.ஜீ. 2007, ஷாபிமரிக்காரின் கல்விச் சிந்தனைகள், Souvenir - S.L.M. Shafie Marikar Memorial Function, ACMEC & All Ceylon Union of Muslim League Youth Front, 26.04.2007.

Ahamed Udayar S.H., 1983, Sri Lanka's Moor physicians to the Sinhala King, M.I.C.H. Souvenir 1977 - 1982, Moors' Islamic Cultural Home, Colombo

Aleem Moulana Dr. S.A., Daily News – 28.10.1998, Is Unani a Part of the Ayurveda Act?

Alexander Johnston Sir 1827, Transaction of the Royal Asiatic Society of Great Britain and Ireland

All Ceylon Muslim Educational Conference - 1968, Kensington Gardens, Colombo

Ameen A.M. 1954, The Ceylonese and the State Language, Serandib, 08.11.1954

Ameer A.C.M. 1967, O.B.A. President's Message, Souvenir - Zahira College 75th Anniversary Celebrations (1892 - 1967), Zahira College, Colombo

Asiff Hussain 2011, Sarandib – An ethnological study of the Muslims of Sri Lanka, Neptune Publications

Asiff Hussain, Sunday Observer - 21.07.2002, Unani Medicine - a Greek Medical Tradition of the Muslims

Az- Zahira - 1949, Muslim Education – Resolutions, Zahira College, Colombo

Bakir Markar M.A., Daily News – 25.10.1984

Bakir Markar M.A., Parliamentary Hansard, 22.04.1960

Ceylon Daily News - 14.11.1962

Dudley Senanayake. 1967, Prime Minister's Message, Souvenir - Zahira College 75th Anniversary Celebrations (1892 - 1967), Zahira College, Colombo.

Dudley Senanayake, The Crescent 1968, Address of the Prime Minister, Zahira College, Colombo

Dudley Senanayake, 11.07.1969, Address by Hon. Dudley Senanayake, Souvenir - Ceremonial opening of the new Hostel & Pavilion Building, Zahira College, Colombo,

Devanesan Nesiah, 1998, Ethnic and District Qurtas, Marga Vol.14, No. 4, Marga Institute, Colombo

Furkhan M.T.A., The Zahirian, July 1997, Zahira College, Colombo

General Education Reforms – 1997, The Presidential Task Force on General Education, Sri Lanka

Hameed A.C.S., Daily News - 25.10.1984

Hashim A.L.M., 2005, All Ceylon Muslim League and the formation of All Ceylon Muslim Educational Conference, ACMEC, Ruby Jubilee Celebrations (1964 - 2004) Souvenir, Zahira College, Colombo

Hasim A.L.M. 2007, Souvenir - S.L.M. Shafie Marikar Memorial Function, 26.04.2007, ACMEC & All Ceylon Union of Muslim League Youth Front, Colombo

Imam S.A. 1965, Ceylon - Arab Relations, MICH Souvenir, Moors Islamic Cultural Home, Colombo

Ismail A.H.M., Ceylon Observer - 01.01.1967, ZCC 75th Anniversary Supplement by ZCC Welfare Society

Jayah T.B., Ceylon Muslim Review - Feb. 1919

Jayah T.B., Principal's Report - 1928 / 1929, Zahira College, Colombo

Jayah T.B., Prize giving – 24.09.1936

Kaleel Dr. M.C.M., Daily News - 25.10.1984

Lakshman Jayatilleke, Daily News - 18.08.2011, Shafie Marikar a 'Giant' in the field of Education

Lorna Dewaraja 1994, The Muslims of Sri Lanka - One Thousand years of Ethnic Harmony 900 - 1915, The Lanka Islamic Foundation, Colombo

Lorna Dewaraja Dr. 1994, The Muslims in the Kandyan Kingdom (C.1600-1815), A study in Ethnic Harmony, Golden Jubilee Souvenir - 1944- 1994, Moors' Islamic Cultural Home, Colombo

M.I.C.H. Golden Jubilee Souvenir 1944- 1994, Moors' Islamic Cultural Home, Colombo

Mahroof M.M.M. April, 1984, The Unani system of Medicine in Sri Lanka, The Muslim World League Journal.

Mahroof M.M.M. and Marina Azeez 1986, Unani Medicine, An Ethnological Survey of the Muslims of Sri Lanka, Sir Razik Fareed Foundation, Colombo

Mahroof M.M.M. 1990, A note of appreciation, பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார், ஏ. இக்பால், பேசும் பேனா பேரணி, பேருவலை

Marina Azeez 1986, The Muslims of Sri Lanka - An Ethnological Survey of the Muslims of Sri Lanka, Sir Razik Fareed Foundation, Colombo

Nissanka Wijeratna, Daily News - 25.10.1984

Noordeen M.B., 1983, A system of Islamic Education for Sri Lankan Muslims, Souvenir IV (1977 – 1982), Moors' Islamic Cultural Home, Colombo

Parliamentary Hansard - 22.04.1960

Parliamentary Hansard - 16.09.1965

Parliamentary Hansard - 14.09,1969

Parliamentary Debate - 01.12.1980

Principal's Message, Muslims and the subject of mother tongue, The Zahirian- July-1997, Zahira College, Colombo

Principal's Prize Day Report, 05.08.1968, Zahira College, Colombo

Principal's Prize Day Report, 08.08.1969, Zahira College, Colombo

Principal's Prize Day Report 11.10.1977, Zahira College, Colombo

Razik Fareed Sir 1968, Hassan M.C.A., Sir Razik Fareed Foundation, Colombo

Sanmuganathan S. 1994, The Moors, MICH Golden Jubilee Souvenir - 1944 - 1994, Moors' Islamic Cultural Home, Colombo

Shafie Marikar S.L.M. 1967, Foreward, The Crescent, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M., Ceylon Observer - 01.01.1967, Zahira College, Colombo 75th Anniversary Supplement, ZCC Welfare Society

Shafie Marikar S.L.M., 1968, Prize Day Report - The Crescent, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M., Daily News - 11.07.1969

Shafie Marikar S.L.M. 11.07.1969, Address of Welcome by the Principal, Souvenir -Ceremonial opening of the New Hostel & Pavilion Building, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M., Principal's Prize Day Report 11.10.1977, 85th Anniversary year Prize giving, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M., 1977, 85th Anniversary year Prize Day Report, (Primary Dept.) - 08.11.1977

Shafie Marikar S.L.M., The Crescent - July 1978, Vol. 1 No. 1, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M. August 1978, Religious Education, The Crescent Vol. 1 No. 2, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M., The Crescent - Sept. 1978, Education for Employment, Vol. 1 No. 3, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M., The Crescent - Nov. Dec. 1979, Vol. 1, No. 12-13, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M., The Crescent, December 1978, Discipline, Vol. 1 No. 6, Zahira College, Colombo

Shafie Marikar S.L.M. 2005, Souvenir- Ruby Jubilee Celebrations (1964 – 2004), ACMEC, Zahira College, Colombo

Shuaib I.L.M. 02.12.1977, Principal's Message, Souvenir, Ceremonial Opening of the Assembly Hall, Zahira College, Dharga Town

Sunday Times – 12.11.1961

T.B. Jayah - A National Hero of Sri Lanka 1996, M.S. Jaldeen, Law Publishers Association, Colombo

The Architect of Zahira - 1962, The Farewell Committee to S.L.M. Shafie Marikar, Zahira College, Aluthgama

The Crescent -1941, Zahira College, Colombo

The Crescent - 1967, Zahira College, Colombo

The Crescent - 1968, Zahira College, Colombo

The Crescent - July 1979, Zahira College, Colombo

The Crescent - Nov. Dec. 1979, Zahira College, Colombo

This Man Razik (1963), Nemsiri Mutukumara

Kaleel Dr. M.C.M. Zahira College 85th Anniversary Souvenir -1977, Message from the president of the Z.C. Welfare society, Zahira College, Colombo

Zahira College 85th Anniversary Souvenir -1977, Zahira College, Colombo



நஹியா அவர்கள் என்னுடைய நீண்டகால நண்பர். ஆ. சதாசிவம், க.கைலாசபதி, பொன். பூலோகசிங்கம், கா.குலரத்தினம், ப.சந்திரசேகரம் போன்ற பேராசிரியர்கள் பலரின் அரவணைப்பில் ஊக்கம் பெற்றுச் செயற்படும் கல்விமான். பேராசிரியர் கா.சிவத்தம்பியுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர்.

பணிப்பாளர் நாயகம் - புனர்வாழ்வு, பணிப்பாளர் நாயகம் - மீனவர் வீடமைப்பு மற்றும் மீனவர் நலன், நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர், பொது நிர்வாக அமைச்சின் எல்லை நிர்ணயத் தேசியக்குழு, மாகாண சபைகள் - உள்ளூராட்சி அமைச்சின் எல்லை நிர்ணயத் தேசியக்குழு என்பனவற்றின் உறுப்பினர் எனப் பல உயர் பதவிகளை அலங்கரித்தவர். அரச சேவைகள் ஆணைக்குழு அங்கத்தவராகவும் இருமுறைகள் தொடர்ச்சியாகப் பதவி வகித்தவர். தமிழ் விவகாரத் துணைப் பணிப்பாளராகவிருந்து அவர் ஆற்றிய பணிகளின் மகிமையை தமிழுலகு நன்கறியும்.

கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு, அத்தகைய பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் முஸ்லிம் என்ற பெருமையையும் பெற்றவர். இன சௌஜன்யம் குறித்த அவரின் தாராண்மைச் சிந்தனைக்குக் கிடைத்த உயரிய வெகுமதி இது. அப்பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் உப தலைவராகவும் அவர் செயற்பட்டிருக்கிறார்.

கல்வியியலில் பட்டமேற்படிப்பு டிப்ளோமா (PGDE), தத்துவ முதுமாணி (M.Phil.,) பட்டங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் பெற்ற நஹியா, பொது நிருவாகத் துறையிலும் கற்கைநெறிகளைப் பயின்று தகுதி பெற்றவர். தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) தமிழ்ப்பாட மறுசீரமைப்புக் குழுவில் பணியாற்றியவர். இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு உறுப்பினராகவும் பங்களிப்புச் செய்தவர். எஸ்.எம். கமால்தீன், எம்.எம்.எம். மஹ்ரூப், ஏ.எம். சமீம் ஆகியோரைத் தொடர்ந்து முஸ்லிம் கல்வி உலகில் ஆழத் தடம்பதித்த கல்வியியலாளர். முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி, அது சார்ந்த பிரச்சினைகள் பற்றி ஆழ்ந்த ஞானமிக்கவர். எக்கருத்தையும் தகுந்த ஆதாரங்களுடன் ஆய்வுபூர்வமாக நிலைநாட்டுவதில் வல்வவர். இந்நூலில் இச்சீரிய அம்சத்தை ஒவ்வொரு அத்தியாயத்திலும் பரக்கக் காணலாம். தெள்ளிய தமிழ்நடை அவருக்குரியது. முழு நூலிலும் அதனைக் காணமுடிகின்றது. அவரின் ஆங்கில ஞானமும் நூலுக்குப் பெறுமதி சேர்க்கிறது.

கொழும்பு ஸாஹிறாக்கல்லூரி தனது வரலாற்றில் சந்தித்த மிகவும் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் அக்கல்லூரியின் உதவி அதிபராகவிருந்தவர். அவரின் ஒருங்கிணைப்புத் தலைமைத்துவம் காரணமாகவே அக்கல்லூரி திசைமாறாது சரியான பாதையில் பயணித்தது என்பது வரலாறு. நஹியாவின் தலைமைத்துவ வழிகாட்டல் அச்சந்தர்ப்பத்தில் இல்லாதிருந் திருப்பின் ஸாஹிறாக்கல்லூரி பிழையான திசையில் பயணித்து எங்கோ சென்று தடம் புரண்டிருக்கும்.

பல நூல்களின் ஆசிரியரான நஹியா நூற்றுக்குமேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். அவரின் 'அஸீஸும் தமிழும்', 'முஸ்லிம் நேசர் சுவாமி விபுலாநந்தர்', 'முஸ்லிம் நிழலில் மூதறிஞர்' போன்ற நூல்கள் அருமையான முயற்சிகள்; பரந்த அளவிலான பாராட்டுதல்களைப் பெற்றவை. தற்போது ஷாபிமரிக்காரின் கல்விப் பங்களிப்பை நாடறியச் செய்யும் நோக்கில் இந்நூலை ஆக்கியுள்ளார். முஸ்லிம் கல்வி வரலாற்றை ஆய்வு செய்வோருக்கு இந்நூல் முக்கிய மூலாதாரமாக அமையும் என்பது என் துணிபு.

வித்தியாநிதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

ISBN 978-955-381...

ISLAMIC BOOK HOUSE
950.00
00030407 – 1
Ilankaiyil Muslim Kalvi
Shafimarikkar
22.06.2018